3332
XVI. F. 29
(7422)

# சமயமும் வாழ்க்கையும்



ஜோதி நிலையம்

முதற் பதிப்பு 1961.

பதிப்புரிமை பெற்றது.

விலை ரூ. 4-00

*Copyright 1952 By the President and Fellows of Harward College*

Jeevan Press, Madras-5 (577)

# சமயமும் வாழ்க்கையும்

ஹெர்பெர்ட் வாலர்ஷ்நீடர்

தமிழாக்கம் :

ந. பிச்சமூர்த்தி

ஜோதி நிலையம்

திருவல்லிக்கேணி :: சென்னை-5

# பதிப்புரை

மனிதனின் ஆன்ம பசியைத் தணிக்க வல்லது தெய்வ பக்தி ஒன்று தான். மதங்கள் யாவும் தெய்வ பக்தியின் மூலம் ஈசனை அடையும் மார்க்கத்தையே தான் போதிக்கின்றன.

"சமயமும் வாழ்க்கையும்" என்ற இந்த நூல், மேல்நாட்டு மக்களின் சமய வாழ்க்கையைப் பற்றியும், மதத்தினிடமும் தெய்வத்தினிடமும் அவர்களுக்குள்ள பக்தியையும், அதை நடைமுறை ரீதியில் எவ்வாறு கைக்கொண்டு அனுசரித்து வருகின்றனர் என்பதையும் விவரமாக விளக்குகிறது. படித்துப் பயனடைய வேண்டிய புத்தகம்.

பதிப்பாசிரியர்.

# முன்னுரை

சமயம் பற்றிய சரித்திர வரலாறுகள் ஏராளமாக இருக்கின்றன ; சமூக வளர்ச்சி இயல், மன இயல், மானுட வர்க்க இயல், சமயக் கொள்கைகள் பற்றிய தத்துவ விளக்கங்கள் ஆகியவையும் இருக்கின்றன. இவற்றை எல்லாம் ஆதாரமாகக் கொண்டிருந்த போதிலும், மேலே கூறப்பட்ட சாத்திர வகை எதிலும் இப்புத்தகம் சேராது. முதலாவதாக, சென்று போனதை நினைவூட்டும் முயற்சிதான் இப்புத்தகம். இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில், சமய வழிபாடு எப்படி யிருந்ததென்று நினைவுள்ளவர்கள் இருக்கின்றனர் ; அந்தத் தலைமுறை, எண்ணிக்கை இப்பொழுது குறைந்து வருகிறது. அப்பொழுது நிலவிய சமய வழிபாட்டின் வகையையும், இப்பொழுது நிலவும் வகையையும் இவர்களால் ஒப்புநோக்க முடியும் ; சரித்திர ஆசிரியர்கள் கையாளும் இலக்கியச் சான்றுகள், ஞாபகக் குறிப்புக்களின் ஆதாரம் ஆகிய முறைகளால் அல்ல ; ஆனால் இன்று பழகிப்போன—அன்று புதுமையாயிருந்த-நிகழ்ச்சிகள், கருத்துக்களைக் கொண்டும், அன்று பழக்கப்பட்டதாக இருந்து இன்று புதுமையாகக் காணப்படும் நிகழ்ச்சிகள், கருத்துக்களைக் கொண்டும், இவர்களால் ஒப்புநோக்க இயலும். பழக்கப்பட்டதுதான் இலகுவில் பிடிபடாத விஷயம் ; ஏனென்றால் எல்லோருக்கும் தெரிந்ததைப்பற்றி நாம் வீணாகப் பேசுவதில்லை; ஆனால் பழக்கமானது விநோதமாகப் படும்பொழுது, அச்செய்தியை எடுத்து விளக்கிச் சொல்ல வேண்டியதுதான். சென்ற ஐம்பது ஆண்டுகள் நம்முடைய வழக்கங்களையும் கருத்துக்களையும் ஸ்தாபனங்களையும் அவ்வளவு உருமாற்றி விட்டபடியால், நமக்கு ஏற்பட்ட இந்த மாறுதல்களைப் பற்றிக் கூறி, முடிந்த அளவுக்கு விளக்கம் தருவது பொருத்தமும் அவசியமுமான காரியமாகும். நேர்ந்துள்ள சமயப் புரட்சிகளின் நியாயத்தைப்பற்றி இப்புத்தகம் விரிவாக ஆராய முடியாது. அந்த வேலையைத்தான் அறிவியல்-சாத்திரங்கள் செய்கின்றனவே ! ஆனால் அமெரிக்க சமய முறைகளில் ஒரு தலைமுறையில் ஏற்பட்டுள்ள அடிப்படையான மாறுதலைப்பற்றிப்

பிந்திய தலைமுறையினருக்குத் தெரிவிக்கவேனும் செய்ய லாமே! இந்த நூற்றுண்டின் மையமான காலத்தை ஆரம்ப மென்று கருதாமல், வெற்றி அல்லது தோல்வி என்று கருதும் தலைமுறையினரின் சமயச் சார்புகள் பற்றிய கருத்துக்கும், 1950-ல் ஆரம்பமாகும் தலைமுறையினரின் சமயச் சார்புகள் பற்றிய கருத்துக்கும் நிச்சயமாக வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். சமய உரு மாற்றத்தைப் பார்ப்பதும், அந்த அனு பவத்தைப் பொறுத்துக் கொள்வதும், சமய அனுபவத்திற்கு ஆழ்ந்த சிந்தனையையும் சோகச் சாயல் கொண்ட விவேகத் தையும் கூட்டிவிடுகின்றது; வேறு அறிவாராய்ச்சி எவ்வளவு செய்தாலும் இழந்ததை மீட்க முடியாது.

இப்புத்தகத்தின் முக்கிய விஷயம் சமய அனுபவத்தைப் பற்றிய சிந்தனைக் கண்ணேட்டமாகும் — அமெரிக்க சமய மரபுகளைப் பற்றிய தன்று; சமூக ஸ்தாபனம் என்ற முறை யில் தேவாலயத்தைப் பற்றியதுமன்று; தத்துவ சித்தாந்தப் போக்குகளைப் பற்றியதுமன்று; ஆனல் சமய வாழ்க்கையைப் பற்றியது. அமெரிக்க சமய வாழ்வு துறவின் தன்மையைக் கொண்டதா யிருந்தால், அல்லது சமய அனுபவம் என்பது அந்தரங்கச் சொந்த அனுபவமாக மட்டும் இருந்தால், இப்புத் தகத்தில் தரப்படும் சமய வரலாற்றுக்கும் 'அமெரிக்கக் கலா சாரம்' என்று இப்புத்தகத்தில் குறுப்பிடப்பட்டிருப்பதற்கும் எவ்விதச் சம்பந்தமு மிருக்காது. அமெரிக்க சமயம் கலாசாரத் தின் அமைப்பைக் கொண்டிருக்கிற தென்பது நியாயமற்ற கண்ணேட்டத்தின் விளைவன்று; புத்தகத்தொடரின் நிர்வாக ஆசிரியரின் கொள்கை காரணமாகத் தோன்றியதுமன்று; அமெரிக்க சமயத்தின் அமைப்பே அப்படி. கொள்கைகள், தேவாலய நிர்வாகம், சமய முடிவுகள், மகாத்மாக்கள், வைதிகச் சடங்கு ஆகியவற்றைக் குறிப்பிட்ட கலாசாரத்தி லிருந்தோ, அல்லது பொதுவாகக் கலாசாரம் என்பதி லிருந்தோ பிரித்துப் பார்க்க முடியும்; சமயம் என்பது ஒரு வித வாழ்க்கை என்பதைவிட வாழ்க்கையைச் சமய நோக்குக் கொண்டு பார்க்கலாம்; ஆனல் இம்மாதிரி பிரித்தெடுப்பது அமெரிக்க அனுபவத்தையும் கலாசாரத்தையும் சிதைப்ப தாகும். இங்கு, சமயம் நாகரிக வாழ்வுக்கும் அறிவுத் துறைகளுக்கும் உள்-அம்சமாகவே விளங்குகிறது. எனவே

உண்மையில் சமயம் எப்படி யிருக்கிறதென்று கூறவிரும்பும் வரலாறு, சமயம் மனிதனின் நிரந்தரமான காரியங்களில் ஒன்று என்பதையும், அவனுடைய இதர காரியங்களுடன் அது கொண்டுள்ள உறவையும் காட்டுவதாக அமைய வேண்டும். சமயம்தான் எல்லாம் என்று கருதுவதுபோல் மனிதனை உருவாக்கிக் காட்டுவதால் பயனில்லை; அல்லது மனிதனுடைய ஆட்சிமுறை, பொருள் உற்பத்திமுறை ஆகியவற்றின் ஒரு கட்டத்தில் தோன்றும் உபவிளைவு என்று கொள்வதாலும் பயனில்லை. கலாசாரத்தில் சமயம்தான் ஆதிக்கியம் வாய்ந்த சக்தியாக இருக்க வேண்டுமென்று கூறும் பாதிரிமார் கொள்கையும், கலாசார வரலாற்றின் ஒரு கட்டத்தில் தோன்றி மறையும் தன்மை கொண்டதுதான் சமயம் என்ற மார்க்ஸ், பிராயிட் ஆகியோரின் துணிவும் இங்கு ஏற்கத்தக்கதல்ல. குறிப்பிட்ட தேவாலயம் அல்லது கொள்கை ஆகியவற்றின் தன்மை எப்படிப் பட்டதாக இருந்தபோதிலும் சமயத்தையே தொழிலாகக் கொண்டவர்கள் எவ்வளவு பெருமை பேசிக்கொண்ட போதிலும், எந்தச் சமயமும் அதனுடைய கலாசார நிலைக்குக் கீழ்பட்டதாகவோ மேற்பட்டதாகவோ இருக்காது. மற்ற அம்சங்களைப் போல், சூழ்நிலையின் அம்சங்களில் ஒன்றாக அதுவும் அமைகிறது; அந்தச் சூழ்நிலையில் மற்றவைகளைப்போல் அதுவும் முக்கியத்துவம் கொண்டதுதான். அவற்றைப்போல் நாகரிகம் இதற்கும் தேவைதான். சமயச் சித்தாந்த ரீதியாக நான் பேசுவதானால், மனித வர்க்கத்தின் கடவுளாக இருப்பதுதான் கடவுளின் முக்கிய வேலை என்றும், அது எதேச்சையாகக் கிடைத்த வேலை யாகாதென்றும் வாதாடுவேன். ஆனால் சோதனை ரீதியான ஒரு கருத்தைக் கூறி வெகு சாதாரண விஷயத்தைத் தெரிவிக்கவே விரும்புகிறேன். அதாவது தற்பொழுதுள்ள நிலையில் சமயம் என்பது தன்னிறைவுள்ளதன்று; மனித வர்க்கத்தின் ஸ்தாபனங்கள், அக்கறைகள், லக்ஷியங்கள் ஆகிய சிக்கல்களில் அது உயர்வு பெற்று விளங்குகிறது; அவற்றின் மீதெல்லாம் சமயம் ஆதிக்கியம் செலுத்தினாலும் அல்லது அவற்றை இழிவு படுத்தினாலும், அதனுடைய வாழ்வில் இவை எல்லாம் அத்தியாவசிய அமசங்களாகும். இருபதாவது நூற்றாண்டு அமெரிக்க சமயத்தைப்

பற்றிக் கூறுவதில் சமயவாழ்வுக்கு அத்தியாவசியமான அம்சம் என்ன என்பது பற்றிக் கவனத்தைச் செலுத்தும்படி செய்வதே நமது கடமையாகும். சமயத்தால் ஏற்படும் சில்லறை விளைவுக ளிருக்கின்றன; தேவாலயங்களுக்குச் சமயச் சார்பற்ற லௌகிக வேலைகளு மிருக்கின்றன; கலைகளுக்குச் சமயம் பலவகையில் உதவி செய்கிறது; இவை எல்லாம் அமெரிக்கக் கலாசாரத்தின் முக்கிய அம்சங்களாக இருக்கலாம்; ஆனால் இவை எல்லாம் நாம் எடுத்துக் கொண்டுள்ள விஷயத்திற்கு அவ்வளவு முக்கியமல்ல. ஏனென்றால் சமய வழிபாடுகளால் அமெரிக்க வாழ்வின் இதர துறைகளுக்கு என்ன பயன் என்று மதிப்பிடுவதைவிட, அவற்றால் சமயத்திற்கு நேர்ந்திருக்கும் விளைவு என்ன என்று கூறுவதுதான் நமது முக்கிய வேலை.

ஒரு சமய சித்தாந்தம் இருக்கலாம்; அதைப்பற்றி அதிகம் பேசுவார்கள்; ஆனால் அதற்கு எப்பொழுதும் துரோகமிழைப்பார்கள்; சமயத்தின் ஜீவநாடியான வாழ்வு அல்லது சமய அகவாழ்வு என்றுமிருப்பது, காலமற்றது, மாறுதலற்றது என்பார்கள். சமயத்தின் இந்த உள் நிலையை எவ்வளவுக் கெவ்வளவு நெருங்க முடியுமோ அவ்வளவு நெருங்கி, தலைமுறைக்குத் தலைமுறை அது மாறி வரும் விதத்தைக் காட்டுவதே நமது நோக்கம். சமயப் பிரசாரகர்கள் கூறுவது போல் சமய வாழ்வு அவ்வளவு நிலையானதாயும் தன்னிறைவு கொண்டதாயும் இருந்தால், பிரசாரம் செய்வதில் பொருள் இல்லை; அதைக் கலாசார ரீதியில் புரிந்து கொள்ள முயல்வதிலும் பயனில்லை. ஆனால் உண்மைகள், சமய உண்மைகள், இக்கொள்கையை அவ்வளவு வெளிப்படையாக மறுத்துவரும் நிலையில் அதைப் பற்றித் தர்க்கம் செய்வது வீண் வேலை. சமய மாறுதலின் உண்மைகள் தாமே இனி பேசட்டும்.

# 1

# புரட்சியுகத்தில் சமயம்

## ‘ஸாபத்’ என்ற ஓய்வுநாள் வழிபாட்டில் மாற்றம்

என் சொந்தக் கிராமத்தில், முதல்முதலாக, மோட்டார் கார் தெருவில் நுழைந்தது எனக்குத் தெரியும் ; ஏனென்றால் நான் இந்த நூற்றுண்டைவிடச் சற்று மூத்தவன் ; அமைப்பிலும் பண்பிலும் எங்கள் ஊர் ‘நடுத்தர நகரை’ நெருங்கி இருந்தது. ஊருக்குள் சினிமா முதல் முதலாகப் படை எடுத்தது எனக்கு நினைவிருக்கிறது. அந்த நாளில் நாடகக் கொட்டகையைப்பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயம் கிடையாது; ஏனென்றால் தேவாலய வழிபாட்டைவிட இந்த வீண் காட்சியில் அதிகக் கவர்ச்சி இருந்தது. நடனம், குடி, சூதாட்டம் (காசில்லாத சூதாட்டம்கூடத்தான்) ஆகிய வெட்டி வேலைகளைப் போன்று அவ்வளவு பக்தியற்ற செயல் என்று கருதப்படாவிட்டாலும், உலகியல் இன்பம் மிகுந்ததாக, அதாவது வீண் காரியமாகக் கருதப்பட்டது. பயனுள்ள காரியத்திலும், அறிவைச் சம்பாதிப்பதிலும், ஆக்க வேலையிலும் புத்தி செலுத்தப்படுகிறதா, அல்லது விளையாட்டிலும் கிளர்ச்சியிலும் புத்தி செலுத்தப்படுகிறதா என்பதைப் பொறுத்துத் தான் எங்கள் கிராமத்தார்கள் நல்லதென்றோ தீயதென்றோ முடிவு செய்தார்கள். இவற்றில் கவர்ச்சி மிகுதியாகக் காணப்பட்டதால், இவை குற்றம் புரியத் தூண்டக் கூடி

யவை, வாழ்வென்னும் பெருங் காரியத்திலிருந்து கவனத்தைத் திருப்பக் கூடியவை என்று கருதினர்கள். எங்கள் சமய ஸ்தாபனங்களிலோ, கல்வி ஸ்தாபனங்களிலோ கவர்ச்சி இல்லை ; அவ்விதம் இருக்கவும் அவை விரும்பவில்லை ; அவை பெரிய விஷயங்களாகவே இருந்தன ; பயன் விளைவிக்கக்கூடியதாக இருந்ததால் கல்வி பெரிய விஷய மாகிவிட்டது; சிந்தனையைத் தூண்டியதால் சமயம் பெரிய விஷய மாகிவிட்டது.

சினிமாவும் மோட்டாரும் ஊருக்குள் வந்தபோது மிகுந்த பரபரப்பை உண்டாக்கின. அவைகளை முதலில் யாரும் பொருட்படுத்தவில்லை: ஆனல் அவற்றைக் கண்டிப்பதும் பயனற்ற காரியமாக இருந்தது. அவற்றில் குற்றம் ஏதும் அப்பொழுது தெரியவில்லை ; அவற்ருல் வியாபாரத்திலும், நெறியிலும், கல்வியிலும், சமயக் கொள்கைகளிலும் ஏற்படக்கூடிய பெரும் விளைவுகளைப்பற்றிக் கற்பனை மிகுந்த சிலர் ஊகித்துணர்ந்த போதிலும், தவிர்க்க முடியாதவை அவை என்ற காரணத்திற்காகவே பெரும்பான்மையோர் அவற்றை ஏற்றுக் கொண்டனர்.

சமயப் பற்றும் இனப்பற்றுமுள்ள 'அயோவா' ராஜ்யத்தைச் சேர்ந்த 'அமானு' கிராமவாசிகளைப் போன்ற சில கோஷ்டிகள் தேவாலய வழிபாட்டைவிட சினிமாவில் இளைஞர்கள் அதிகக் கவனத்தைச் செலுத்துவார்கள் என்பதைத் தெளிவாகவும் சீக்கிரமாகவும் உணர்ந்துவிட்டன. எனவே தங்கள் சமுதாயத்தில் சினிமாவை ஏற்க மறுத்து விட்டன. இருபது முப்பது வருஷக் காலம்வரை சினிமாக்கள் இருக்கும் ஊருக்குத் தங்கள் இளைஞர்கள் செல்வதைச் சமயப்பற்று மிகுந்த இவர்கள் கவனித்துக் கொண்டே வந்தனர் ; இவ்விதமாகப் பழைய தலைமுறையினர் கடைசிவரையில் போராடினர். ஆனல் சமயப்பற்றுள்ள அமெரிக்கர்களில் பெரும்பான்மையோர், தங்கள் இயற்கையான நடைமுறை அறிவைக் கொண்டு, சினிமாவையும் மோட்டாரையும் விகற்பமின்றியோ பொறுமையுடனே ஏற்றுக்கொண்டு விட்டனர். சமீப காலத்தில் வேகமாகப் பரவி வந்த ஞாயிறு தினப் பத்திரிகைகள், ஜனரஞ்சகமான கற்பனை இலக்கியம், கிராமபோன், ஜாஸ் இசை, அதன் பக்கவாத்தியங்கள், விமானப் பிரயாணம், ரேடியோ, டெலிவிஷன் ஆகிய விஷயங்களிலும்

இதே மனப்பான்மையைத்தான் மேற்கொண்டனர். சமயப் பற்றுள்ளவர்கள் உதிரியாகவும், மொத்தமாகவும், தங்கள் எதிர்ப்பையும், பயத்தையும்,வெறுப்பையும் தெரிவிக்கத்தான் செய்தார்கள். என்ன நேர்ந்து விட்டதென்று பொதுவாக உணரு முன்பே, இவற்ருல் சமயமும் அறமும் பாதிக்கப் படும் என்ற கவலை தோன்று முன்பே, இருபதாம் நூற்ருண் டின் விஞ்ஞானப் புதுமைகள் பொதுவாக அமெரிக்க மக்களின் போக்கையும், லக்ஷியங்களையும், அக்கறைகளையும் புரட்சிகர மாக மாற்றிவிட்டன.

"சமயத்தின் நிரந்தரமான தன்மையும் மாறும் உருவ மும்" என்பதுபற்றி, இந்நூற்ருண்டின் திருப்பத்தில், விரிந்த மனம் கொண்ட பெரிய பிரசாரகர் ஒருவர் 1905-ல் செய்த பிரபலமாகப் பரவிய சமயப் பிரசங்க மொன்றில் கூறியிருப்ப தாவது :

'1794-ல் என் தந்தையார் பிறந்த போது எந்த மனிதனும் ஆப்ரஹாம் செய்ததைவிட வேகமாகப் பிரயாணம் செய்து விட முடியாது. அதற்குப் பிறகு இவ்வற்புத மாறுதல்கள் தோன்றியிருக்கின்றன. ஆனுல் மணிக்கு நான்கு, ஆறு, பத்து மைல் வேகத்தில் செல்வதை விட்டு, ஐம்பது மைல் வேகத்தில் நான் ஏன் சவாரி செய்ய வேண்டும் ? இது பெரிய சௌகரியம்தான்; ஆனுல் இதனுல் நான் உயர்ந்தவனுகிவிட வில்லை; நான் செய்யப் போகும் காரியங்கள் இதனுல் அன்பும், நியாயமும், ஜீவதயையும் மிகுந்தவையாக ஆகிவிடவில்லை. நம்மால் என்ன செய்ய முடியும் என்பதோ,அல்லது எவ்வளவு வேகமாக, வியக்கத்தக்க ரீதியில் செய்ய முடியு மென்பதோ நம்மை நாகரிகப்படுத்தாது ; நாம் நடத்தும் வாழ்க்கை வகை ஒன்றே நமக்கு நாகரிகமளிக்கும்.'

டாக்டர் சாவேஜின் பழங்கால நாகரிகத்தையும் நிம்மதி யான அறப்போக்கையும் கண்டு நமக்குச் சிரிக்கத் தோன்றி ஞலும், நம்முடைய குணத்தையும் செயல்களையும் அதே மாதிரி வேறுபடுத்தித்தான் நாம் இன்னும் நெறி விமர்சனம் செய்ய முயல்கிறேம் வேகத்திற்கும் நீதிக்கும், அல்லது மலி வாகக் கிடைக்கும் இன்பத்திற்கும் அன்புக்கும் என்ன சம் பந்தம் ? இம்மைப் பயனையே கொண்ட விஞ்ஞானப் புதுமை களை அலக்ஷியம் செய்யும் சமயவாதிகள் இன்றும் இருக்கி

ருர்கள் ; அடிப்படையான மாறுதல் எதுவும் நேரவில்லை என்றே அவர்கள் தொடர்ந்து கருதுகிருர்கள். இவையெல்லாம் ஸ்தூலத் தன்மை கொண்ட புற விஷயங்கள் என்பது உண்மைதான்—வெறும் கருவிகள் ; ஆனுல் இவற்றின் விளைவாக, நம்மைப் புலப்படுத்திக்கொள்ளும் விதத்தையும், நாம் நம்பிச் செய்கிற காரியங்களையும் இக் கருவிகள் மாற்றிவிட்டன என்பதை இப்பொழுது ஒவ்வொருவரும் அறிந்து கொண்டுவிட்டார்கள். இப்புதுமைகள் அளித்துள்ள வாய்ப்புக்களும் போக்குக்களும் நம்முடைய அக்கறைகளின் எல்லையையும் மையத்தையும் புரட்சிகரமாக மாற்றிவிட்டன.

இப் புதுமைகளால் அமெரிக்கக் கலாசாரத்தில் ஏற்பட்டுள்ள பொதுப் புரட்சியைப்பற்றி விவரிக்கத் தேவையில்லை ; ஏனெனில் இது சகஜமாகத் தெரிந்ததுதான். இதற்கு முன்பு வாழ்வு எப்படியிருந்த தென்றும் நினைவுபடுத்த விரும்பவில்லை; ஏனென்ருல் 'எளிய வாழ்க்கையை'ப் பற்றிய நினைப்பு ஒருவித ஏக்கத்தோடு எழுவதால், நான் அதை அளவு கடந்து பாராட்டிவிடக்கூடும். பல பொருள்கள் மீது நமக்குக் கவர்ச்சி உண்டாகிவிட்டதால் நல்லதைப் போற்றும் அன்பை இழந்துவிட்டோம் என்று நண்பர் ஜோசப் ஹருடுனியன் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளலாம். வாங்குகின்ற சக்தி வளர்ந்து, பயன்படுத்தக் கூடிய புதிய நல்ல வாய்ப்புக்களும் ஓயாமல் நம்மை முற்றுகையிடும் பொழுது, நவீனமாக இருக்க உண்மையில் விரும்புகிருயா என்று கேட்பது காலத்திற்கு முரண்பட்ட காரியம் ; ஏனென்ருல் தற்காலத்திய நாகரிகத்தை அலக்ஷியம் செய்பவன் எப்படித் தனது நாகரிகத்தை வளர்க்க முடியும்? ஆனுல் பொருள்களைத் தேடும் முயற்சி நிலையான திருப்தியைத் தேடும் முயற்சியிலிருந்து நம் கவனத்தை ஈர்க்கும் பொழுது, திரும்பி நின்று, சென்ற காலத்தின் எளிமையையும் நேர்மையையும் புகழ்கிருேம். பரிதாபகரமான இந்நிலை பற்றியே அறநெறி அநேகமாக விமர்சனம் செய்கிறது. நாம் இருக்கும் இடத்திலன்றி எங்கோ உண்மையான வாழ்வைக் காணலாம் என்று நினைக்கிருேம் ; நம்முடைய செய்கைகளைவிட நம்முடைய அகம் சரியாக இருக்கிறதென்று எண்ணுகிருேம். ஆனுல் இங்கு நெறி விமர்சனம் செய்வது என் நோக்கமன்று ; நம்முடைய சமய

மும், நிலையான வாழ்வின் மீதுள்ள அன்பும், தற்காலத்திய தாக்குதல்களுக்கு எப்படிப் பணிந்துவிட்டன என்னும் விஷயத்தை மட்டும்தான் கூற விரும்புகிறேன்.

முதலெடுப்பில், இந்நூற்றுண்டில் மிகச் சாமானியமாக நாம் காணும் பௌதிக விஞ்ஞானப் புதுமைகளைப்பற்றித்தான் வற்புறுத்தியிருக்கிறேன்; ஏனென்றுல் அவையே சமயத்தைப் புரட்சிகரமாக மாற்றியிருக்கக் கூடியவை. ஆனுல் இந்த விஞ்ஞானப் புதுமைகள் நம் மனத்தில் தோன்றியுள்ள மாறுதல்கள், கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய உண்மைகள், புதிய சரித்திர வரலாறு, புதிய லக்ஷியங்கள், புதிய சித்தாந்தங்கள் ஆகியவற்றின் விளைவும் அறிகுறியுமன்றி வேறல்ல. நம்முடைய ஆன்மாவின் உள்ளியக்கத்தையும், இதனுல் சமயத்தில் ஏற்பட்டிருக்கும் விளைவுகளையும் பிந்திய அத்தியாயங்களில் கவனிப்போம். இங்குத் தொழில் நுட்ப, பொருளாதாரப் புரட்சிகளுக்குச் சமய ரீதியான விளைவென்ன என்று மட்டும் கவனிப்போம்.

தேவாலயத்திற்குப் போகும் வழக்கம்,'ஸாபத்' என்றஓய்வு நாள் வழிபாட்டு வழக்கம் ஆகிய சமயப்புற விஷயங்களைப் பற்றித் தொடங்குகிறேன். 1700, 1800 ஆம் ஆண்டுகளில் செய்ததைப்போலவே, 1900-ஆம் ஆண்டிலும் சமயப் பற்றுள்ள அமெரிக்கர்கள் வாரத்தில் பல தடவை நடந்தோ வண்டிகளிலோ தேவாலயத்திற்குச் சென்றனர். தேவாலயமே சமுதாயத்தின் ஸ்தூல ரீதியான கேந்திரமாக இருந்தது; கிராமக் கோயில்கள் சமய இயக்கங்களின் சக்தி மிகுந்த மையமாக இருந்தன. சிறிய கிராமங்களில்கூட இரண்டு மூன்று தேவாலயங்கள் அடுத்தடுத்திருந்தன; ஆனுல் இச்சமயப் பிரிவுகளோ,சமயக் குறிக்கோள் வேறுபாடுகளோ தேவாலயத்திற்கோ யூத சபைகளுக்கோ இருந்த சமுதாய கேந்திரம் என்ற தன்மையை அழித்துவிடவில்லை. நகரத்தின் ஒற்றுமைக்கு மையமாக இல்லாவிட்டாலும், அறிகுறியாக விளங்குவது ஊரின் பொது மண்டபம்தான் என்று கருதப்பட்ட நியூ இங்கிலாந்தில்கூட மற்ற பிராடெஸ்டெண்டு, ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களும்,பெரிய நகரங்களில் தோன்றி வந்த யூதர் கோயில்களும் தெய்வீகத் திருக்கோயில்களாக இருந்தது மட்டுமின்றி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கூடும்

இடமாகவும் ஆகியிருந்தன. எனவே அன்னியோன்னியமான பல சமுதாயங்கள் அடங்கிய கிராமமாய் அது திகழ்ந்தது. அடுத்தடுத்த வீட்டில் உள்ளவர்கள் வெவ்வேறு தேவாலயத் திற்குப் போகலாம்; ஆனுல் ஏதோ ஒரு தேவாலயத்துக்குப் போகுமட்டும் பொதுவான பக்தி, நெறி முறைகளையே அவர் கள் கடைப்பிடித்தனர். நாலாயிரம் பேர்கள் அடங்கிய எங் கள் கிராமத்தில் ஏழு தேவாலயங்கள் இருந்தன; சமய வேறுபாடுகள் இருந்தபோதிலும் கிராமவாசிகளிடையே மானசிகமான ஒற்றுமை இருந்தது; எந்தத் தேவாலயத்திற் கும் போகாதவர்களுடன் இந்த ஒற்றுமை இருப்பதில்லை. நகரிலோ, கிராமப் புறத்திலோ, கிராமத்திலோ இம்மாதிரி பல பகுதிகளைச் சேர்ந்த சமுதாயத்தார் அடுத்தடுத்து வசித் தனர்; ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இருந்தது. அவர்கள் ஒரு கூட்டத் திற்கோ, கூட்டு வழிபாட்டுக்கோ சென்ருல், அவர்கள் தாம் உண்மையான பொதுமக்களாக விளங்கினர். 'பொது வழி பாடு' தனி வழிபாட்டைவிட மேலாக இருந்தது; ஏனென் ருல் அடுத்தடுத்திருந்தவர்களை அது ஒன்ருகக் கூட்டி வைத் தது. வாரம் முழுதும் அவர்கள் தங்கள் தங்கள் அலுவல் களில் கவனமாக இருப்பவர்கள். 'ஸாபத்' தினத்தன்று தங்க ளுடைய சொந்தக் காரியங்களைக் கைவிட்டதோடன்றி, வியா பாரிகள் சொல்வதுபோல, பொதுத் தொடர்புகளையும் பயின்று வந்தனர். வாரத்திற்கொரு கூட்டம் அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை; ஞாயிறன்று காலையிலும் மாலை யிலும் வழிபாடிருந்தது; தவிர ஞாயிறு தினப் பள்ளி, இளை ஞர் கூட்டம், வாரத்தில் ஒரு பொது வழிபாடு, ஆலோசனைக் குழுவினர் கூட்டம், இசைக்குழு ஒத்திகை ஆகிய அலுவல்கள் இருந்தன. மக்களின் ஓய்வு நேரத்தில் பெரும் பகுதியைத் தேவாலயம் பயன்படுத்திக் கொண்டது. ஞாயிறு அல்லது 'ஸாபத்' தினத்தன்று வெளியே புறப்படுவதைத் தவிர, அமைதி யான, சிநேகத் தன்மையையும் சாந்த குணத்தையும் வளர்த் தனர். கூச்சல் மிகுந்த விளையாட்டுக்களும் போட்டிகளும் தவிர்க்கப்பட்டன. தேவாலய அலுவல்களுக்கான நேரம் போகப் பாக்கிநேரம் ஓய்வு பெறவும், உலவுவதற்கும், நண்பர்கள் உறவினர்களைப் பார்ப்பதற்கும், படிப்பதற்கும்,

உள்ளடக்கமாக இசையைத் துய்ப்பதற்கும் செலவிடப்பட்டது. இவை எல்லாம் ஒரே விதமாகத்தான் இருந்தன என்று சொல்லிவிட முடியாது. ஆனால் வாரத்திற்கொரு நாளான இத் தினத்தை ஏதோ ஒருவிதத்தில், தேவாலயத் துறையிலோ, குடும்ப உறவிலோ சுழித்தனர்; ஸாபத் தினத்தை அவ்வளவாக ஐரோப்பாவில் கொண்டாடாத கத்தோலிக்கர்கள் கூட இந்தப் பழக்கத்தை இங்குக் கடைப்பிடித்தனர்.

'ஸாபத்' தினத்தில் அனுசரிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்குப் பொதுவான நியமம் ஆன்மப் பேற்றைச் சார்ந்ததாகும். குறிப்பாக உலகத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான செயல்களில் சமயக் கிரியைகள் முக்கியமானவையாக இருந்தபோதிலும் அவை ஒரு பகுதிதான் உலக விஷயங்களில் அரசியலும், விளையாட்டும், வியாபாரமும் அடங்கியவை. ஞாயிறு தினவேலை நடைமுறைக்கு அப்பால் பட்டிருந்தது; வேலை மிகுந்த தினசரி வாழ்வின் கவலைக்கும் அக்கறைக்கும் சம்பந்தமற்றதாக இருந்தது. ஓய்வும் அறிவும்தான் 'ஸாபத்'தின் சாந்திக்கும் அமைதிக்கும் நோக்கமாகக் கொள்ளப்பட்டன; உலகக் காரியங்களில் ஈடுபடும் தீவிரத்துடன் இவற்றிலும் ஈடுபட்டனர், வீணான பொழுதுபோக்கோ விளையாட்டோ கிடையாது.

இம்மாதிரி சமய வழக்கங்களில் ஊறிய சமுதாயத்திடையே மேலே கூறிய விஞ்ஞானப் புதுமைகள் வந்து புகுந்தன; ஆனால் அவை எல்லாம் சம வேகத்துடன் புகுந்தன என்று சொல்ல முடியாது. இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞானப் புதுமைகளால் முற்றிலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட மாறுதல்களை முதலில் கவனிப்போம் நகரமாக மாறுவது என்பதே புரட்சிகரமான விஷயமாக இருந்தபோதிலும், நகரத்திலும் நாட்டிலும் இம்மாதிரியான பகுதிகள் காணக்கிடக்கின்றன. பிரதேசவாரியான முக்கிய வித்தியாசங்கள் இருக்கலாம்; அவற்றைப் பின்னர் கவனிப்போம்; ஆனால் அடிப்படையான மாறுதல் எல்லாப் பிராந்திய மக்களையும் பாதித்திருக்கிறது. ஆகையால் முக்கிய வித்தியாசங்கள் எல்லாம் பிரதேசங்களுக்கு இடையேதான்; அவை வர்க்க ரீதியான வித்தியாசங்களல்ல.

## உள்ளூர் புறச்சமயத்தார் வகைகள்

பெரிய பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் சமய நோக்குக்கு முக்கியமான விஷயங்களாகப் படுகின்றன. மோட்டார் கார், ரேடியோ, மற்றும் இம்மைக்கான அவசியப் பொருள்களை வாங்க இயலாதவர்களுக்கும் இயன்றவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு வசதிகள் இணைந்தே இருக்கின்றன; அவற்றில் ஒன்றைப் பெற எண்ணுகிறவர்கள் எல்லாமே நவீனத் தேவைகள் என்று நம்புகிறார்கள். அத்தியாவசியமான நாகரிக வசதிகளை வாங்க முடியாத ஏழைகளுக்கு மதச் சார்பற்ற தர்மம் தேவைப்பட்டாலும் படாவிட்டாலும், அவர்கள் பிரசார ஸ்தாபனங்கள், மீட்பு ஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கவனத்திற்கு உரியவராகிவிடுகின்றனர்; அவர்களுக்குப் பரிவு காட்டப்படுகிறது; அவர்களைத் தேவாலயத்திற்கு அழைக்கின்றனர்; ஆனால் செல்வச் சீமான்களுக்குச் சமய ரீதியான சமுதாயத்தில் இருக்குமளவு அந்தஸ்து தங்களுக்கில்லை என்பது புலப்பட்டு விடுகிறது. இம்மாதிரியான ஏழைவர்க்கம் சமயத்துறையில் என்றும் இருந்து வந்திருக்கிறது; இது நகரத்தையோ, கிராமப் புறத்தையோ, தற்காலத்தையோ பொருத்த விஷயமன்று; எல்லாவிடங்களிலும் எல்லாக்காலத்திலும் காணும் வகை இது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில், அமெரிக்கரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்ட நிலையில், செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே உள்ள வித்தியாசங்கள் அதிகமாகிவிட்டன. எதுவுமே இல்லாதவர்கள்—விஞ்ஞானப் புதுமைகளின் அடிப்படையான வசதிகளையே அனுபவித்தறியாதவர்கள்—சம்பிரதாயமான சமயத்திற்கோ புரட்சிகரமான அரசியலுக்கோ பயன்பட மாட்டார்கள். பேருக்கு மட்டும் அடிமையாக உள்ள நீக்ரோ சமுதாயங்களைப் போன்ற சிலவற்றைத் தவிர இவர்கள் தங்களுக்கென்று தேவாலயங்களை அமைத்துக் கொள்வதில்லை; வெளிப்படையான சமய அக்கறையும் கொள்வதில்லை. நீக்ரோக்களைவிட இந்த "வெள்ளை நிறக் கயவர்கள்" சமயப் பற்றுக் குறைந்தவர்களே. ஆனாலும் சமயப் பிரசாரகர்கள் இவர்களைப் பற்றித்தான் கவலைப்படு

கிறுர்கள். தாழ்த்தப்பட்டுள்ள இக்கோஷ்டியைப் "பண்பற்ற உள்நாட்டு மக்கள்" என்று குறிப்பிடலாம்; இவர்களுடைய அஞ்ஞானத்தைப் பற்றி விமர்சனம் செய்தால், சமயப்பற்று இல்லாதவர்கள் என்பதைவிட, வசதிகள் குறைந்தவர்கள் என்று கூறுவதுதான் பொருந்தும். முன்னுக்கு வரக்கூடாதவர்கள் என்கிற அவநம்பிக்கையை விட்டுவிட்டாலும், சமயப் பற்று விஷயத்தில் இவர்கள் அந்நிய மக்களைப் போன்றே கருதப்பட்டார்கள். நகர வாழ்க்கையிலும் கிராம வாழ்க்கையிலும் இவர்கள் முக்கியப் பங்கு கொண்டவர்களேயென்றுலும், பக்கத்திலுள்ள நாகரிக மக்களுக்கு இவர்கள் அவ்வளவு முக்கியமாகப் படுவதில்லை. நல்ல வேளையாக இது வரை இவர்கள் சிறிய வர்க்கமாகவே இந்த நூற்றுண்டில் இருந்து வந்திருக்கின்றனர்.

சமூக அந்தஸ்தின் மற்ெறுரு கோடியில் லட்சாதிபதிகள் இருக்கின்றனர், அவர்களும் நியமங்களுக்குட்பட்ட சமயக் கோட்பாடுகளுக்குப் புறம்பானவர்களே; பிறருடைய தர்மத்திற்கு அவர்கள் பாத்திரமாக மாட்டார்கள்; ஆனுல் மற்றவர்கள் எல்லோரும் தான தர்மங்களுக்கு உரியவர்கள் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் சமய ஸ்தாபனங்களைப் போஷிக்கும் 'குட்டி தேவதை'கள் என்று தம்மைக் கருதுபவர்கள் ஆனுல் தாம் போஷிக்கும் ஸ்தாபனத்தைவிடத் தாங்களே பெரியவர்கள் என்ற நினைப்புடையவர்கள்! நாம் மதித்துப் பாராட்டும் நவீனமாகக் கண்டுபிடித்த சாதனங்கள் அவர்களுக்கு மிகச் சாமானிய வசதிகளாகவே படுகின்றன; இந்தப் புதிய வசதிகளால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் பெருமளவில் மாற்றம் பெற்று விடவில்லை; ஏனென்றுல் அவர்களுடைய அக்கறைகள் லௌகிக வாழ்க்கை நலனைச் சார்ந்தவையாக இருந்த போதிலும், சாதாரண வாழ்க்கையை மீறியதாக இருக்கின்றன. நல்ல காரியங்கள் என்ற நினைப்பில் அவர்கள் தேவாலயங்கள், பள்ளிகள், ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றின் மீது தயைகலந்த அக்கறை காட்டுகின்றனர். அவர்கள் எப்பொழுதேனும் தேவாலயத்திற்கு விஜயம் செய்தால், தர்மபுத்தியுடன் மருத்துவ நிலையங்களைப் பார்வையிடுபவர்களைப் போலவோ, அன்றி நோயாளிகளின் கடுமையான நிலைமையைக் கவ

ிக்க வந்தவர்களைப் போலவோ செல்கிறார்கள். தேவாலயங்களைவிட நன்மை பயக்கும் பொது ஸ்தாபனம் புத்தகசாலைதான் என்று மனச்சாட்சி பூர்வமாகக் கருதிய உண்மையன்பர் ஆண்ட்ரூ கார்னகீயைப் போன்றவர்கள் இப்பொழுது அபூர்வம்தான். ஒரு ஸ்தாபனம் நன்மை தீமைகளை வரையறுத்துச் செயல் புரியலாம். ஆனால் நலம் புரிவதைத் தொழிலாகக் கொள்ளாத தர்மவான், எது பயன்படக் கூடியது, எது பயன்படாதது என்பது பற்றி மக்கள் பொதுவாக நினைப்பதையே தானும் ஏற்றுக்கொண்டு விடுவான்; மொத்தத்தில் "பொதுநல நிதி" என்ற யுக்தியைக் கண்டுபிடித்திருப்பதுதான் சமீப காலப் புதுக் கற்பனைகளுள் சிறந்தது என்பது அவனுடைய எண்ணம்; ஏனென்றால் சில சிறிய காரியங்களுக்காக அவன் அலையும்படி நேர்வதிலிருந்து இந்தப் 'பொது நிதி' என்கிற ஏற்பாடு விடுதலை தந்துவிடுகிறது.

போஷகர் என்ற முறையிலல்லாது செல்வந்தர் ஒருவர் மனப்பூர்வமாகச் சமயத் தொண்டில் ஈடுபட்டால், அவர் அதைத் தனித்தே பயில்வார்; தம் சமயத்தவர்கள் அடங்கிய சமுதாய வாழ்வில் கலந்துகொண்டு செய்ய மாட்டார். மெய்ப்பொருள் அறிவுநிலை, சாந்தி மார்க்கம், சமய சித்தாந்தம், பிரும்ம ஞான மார்க்கம் ஆகியவை 'அமெரிக்கப் பிராமணர்கள்' தனித்தோ, பொறுக்கி எடுத்த சிறுகூட்டத்தினருடனோ தியானம் செய்வதற்கான வாய்ப்புக்களை அளித்து வருகின்றன. பணக்காரர்களிடையே இம்மாதிரி தனித்த சமயப் போக்கு காணப்படுவதில் புதுமை இல்லை; இருபதாம் நூற்றாண்டின் சிறப்புக்களைத் தேடும்போது இவற்றை ஒதுக்கிவிட்டே போகலாம்; இருபதாம் நூற்றாண்டின் அமெரிக்கச் சீமான்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அமெரிக்கச் சீமான்களைவிட சமயப் பற்று குறைந்தவர்கள் என்பதற்கான சில சான்றுகள் இருக்கின்றன; ஆனால் இந்தப் போக்குக்கு நேரிடையான காரணம் தற்கால கலாவிஞ்ஞானம்தான் என்று கூறிவிட முடியாது. தனித்த மதக் கோட்பாடுகள்தாம் காரணம் என்று சொல்வது இன்னும் கடினம்; செல்வச் சீமான்களின் சமய நம்பிக்கைகள் பலதரப்பட்டவையாகவும் எவ்வகை என்று நிச்சயமாக எதிர்பார்க்க

முடியாதவையுமாகவும் இருக்கின்றபடியால், அவைகளைச் சோதனை செய்வதில் பயனில்லை. ஆண்ட்ரூ கார்னகியின் "செல்வத்தின் வேதம்" (Gospel of Wealth) என்ற புத்தகம் ஒரு தர்மவானுடைய மனச்சாட்சியைச் சிறப்பாகச் சித்திரித்திருக்கிறது. ஆனால் இதிலடங்கிய கொள்கை ஒரு சீமானின் பொருட்டு வகுத்த சமயக் கொள்கையாகாது; அவருடைய மனச்சாட்சியைத்தான் குறிக்கும்; அவருடைய மதம் அவருக்கென ஏற்பட்ட தொன்று; ஓரளவு சம்பிரதாயத்துக்கு ஒவ்வாதது; நடைமுறைக்கு முற்றிலும் பொருந்தாதது.

## தற்கால நகர தேவாலயங்கள்

சமய ஸ்தாபனங்கள், சமய மார்க்கங்கள், சமயப் பற்றுள்ள வர்க்கத்தார் என்பவற்றுள் நகரத்திலுள்ள பெரிய தேவாலயங்களைப் பற்றி முதலில் கவனிப்போம். இந்தத் தேவாலயத்தைச் சார்ந்த பிரதேச மக்கள் யாவரும் சீரும் சிறப்புமாகவே இருக்கின்றனர்; அவர்கள் அங்கம் வகிக்கும் வகை கலாசார ரீதியில் நவீன மாக்கப்பட்டிருக்கிறது; ஆனால் தம்முடைய குடும்பத்தின் முந்திய வரலாறு தங்கள் வாழ்க்கைக்கும் தங்கள் முன்னோர்கள் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்த்துகிறது; இருபதாம் நூற்றாண்டு சமயத்துறையில் எதை உண்டாக்கிற்று, எதை அழித்ததென்று அறிந்துகொள்வதற்கு இவர்கள் அங்கத்தினர்களாக உள்ள தேவாலயங்களே சிறந்த எடுத்துக் காட்டாகும். இக்கோயில்கள் மிகப் பெரியவை; ஏனென்றால் இவற்றின் அங்கத்தினர்கள் எட்டாக் கையிலிருந்து தம் வழிபாட்டுக்கு மோட்டார் மூலமாக வருகின்றனர். நகரத்தின் வியாபார கேந்திரத்திலுள்ள தேவாலயம் உள்ளூருக்கு மட்டும் பயன்படுவதில்லை; வெளி ஜில்லாக்களிலும் சுற்றுப் புறங்களிலும் வசிப்பவர்கள்கூட இவற்றில் அங்கத்தினராகச் சேரமுடியும். எடுத்துக்காட்டான கிராம தேவாலயத்தில் உள்ளூர்ச் செல்வந்தர்களைத் தவிர எட்டத்தில் இருக்கும் மிராசுதார்களும் அங்கத்தினராக இருப்பர். இம்மாதிரியான கோயில்களைச் சமுதாய ஸ்தாபனங்கள் என்று கூறுவதைவிட "சங்கங்கள்" அல்லது "சமாஜம்" என்று கூறுவது பொருந்தும். மற்றைப்படி அந்நியர்களாக இருக்கவேண்டி

யவர்கள் தேவாலயத்தின் காரணமாக ஒன்ருகச் சேர்கிருர்கள்; கோயில் உள்ளூர் சமுதாயத்திற்குச் சொந்தமென்பதில்லை; மற்றைப்படி கோஷ்டியாகாதவர்கள் எல்லாம் அடங்கிய ஒரு பிரத்தியேக ஸ்தாபனத்தை ஒரு கோயில் உண்டாக்குகிறது. இம் மாதிரியாக அங்கத்தினர்கள் பரவலாக இருப்பதோடு நிலேத்தும் இருப்பதில்லே; எனவே அவர்களுக்குத் தேவாலயத்தில் அவ்வளவு தீவிர அக்கறை இருப்பதில்லே. இந்த நிலேயில் இந்த ஸ்தாபனத்தையும் அங்கத்தினர் எண்ணிக்கையையும் இயற்கையாகவும் நிதித் தேவையை உத்தேசித்தும் விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது; எவ்வளக் கெவ்வளவு தேவாலயம் பெரிதாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளாத உதிரி அங்கத்தினர்கள் அதிகமாகிருர்கள். எனவே, சிறிய உள்ளூர் சபைகள் அல்லது பிரதேச சபைகள் தம் எல்லேகளுக்குள் அடங்கியவர்களிடையேயும் பிற பிரிவினரிடையேயும் தம்மைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டி வருகிறது. பாதிரிகளில் பற்ருக்குறை ஏற்பட்டிருப்பதாகக் கூறுகிருர்களே, அதற்கு இப்போக்குகள் காரணமா, அல்லது அவற்றின் விளேவா என்று சொல்வது கடினம். எப்படியிருந்த போதிலும் சிறிய உள்ளூர்ச் சபைகள் சாதித்த காரியங்களே எல்லாம் எண்ணிக்கையில் குறைவான பெரிய தேவாலயங்கள் நவீன சூழ்நிலேயில் சாதித்து விடுகின்றன.

அதே சமயத்தில் வழிபாட்டின் தரமும் உயர்ந்து விட்டது. இதையே தொழிலாகக் கொண்டு பயிற்சி பெற்றவர்களும் ஊழியர்களும் இப்பொழுது இருக்கிருர்கள்; அவர்களுக்கு அதிகச் சம்பளமும் தரப்படுகிறது. ஒவ்வொரு தேவாலயத்திலும் குரு, உதவியாளர், இசைக் குழுவினர், ஆசிரியர், சமூக ஊழியர் முதலியவர்கள் இருக்கின்றனர். தேவாலயம் ஸ்தாபன அமைப்பைப் பெற்றுவிட்டது; அதனுடைய வரவு செலவு மிகவும் விரிவடைந்து விட்டது. இன்னும் திறமையான வழிபாட்டைக் கோரி அங்கத்தினர்கள் பணம் தருகிருர்கள். சம்பளம் பெறும் ஊழியர்கள் அவர்களேச் சபையின் அலுவல்களில் இன்னும் அதிகப் பங்கெடுத்துக் கொள்ளும்படி எவ்வளவு ஊக்கமூட்டிய போதிலும், அவர்கள் பணம் கொடுப்பதையே தங்கள் பங்காகக் கொண்டு விடுகின்றனர்.

பொது வழிபாட்டுச் சடங்குகளில் கலந்து கொள்வதில் மந்த மாகவே இருக்கின்றனர். நாளா வட்டத்தில் கோயிலுக்குப் போவதற்கும், இசைநிகழ்ச்சிக்கும், நாடகத்திற்குப் போவதற் கும் வித்தியாசமில்லாமல் போய்விடுகின்றது. வழிபாடு என்பது தொழில் முறையில் நடத்தும் கேளிக்கையாகி விடுகிறது; சமுதாயத்தின் மெய்ப்பாடாகவோ மக்களின் கலையாகவோ இருப்பதில்லை. குருமார் மீது அதிகப் பொறுப்பு சுமத்தப்படுகிறது. தொழில் முறையில் பணிபுரிவதிலும் வழி காட்டுவதிலும் அவர்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கப் படுகிறது. இலக்கியம், நாடகம், இசை, கட்டடக்கலை, இதர கலைகள் ஆகியவற்றில் விமர்சன மனப்பான்மை பரவிவிட்ட படியால், நுண்கலைத் துறையிலும் மற்றக் கலைகளுடன் தேவா லயம் போட்டியிட வேண்டியது அவசியமாகி விட்டது. சுவை யற்றுப் பொலிவற்ற முறையில் சுயேச்சையாக வழிபாடு ஆற் றுதல் இப்பொழுது ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. இவ்வித மாக, சமயச் சார்பற்ற நுண்கலைகள் சமயத் தலைவர்கள் நேர்த்தியான கலை அம்சங்களை மேற்கொள்ளும்படி கடுமை யாக வற்புறுத்துகின்றன.

பணக்காரச் சபையினரும் குருமார்களும் காட்டும் வழி மத்தியதரக் கீழ்வகுப்பினர் கொள்கைகளின் தரத்தைப் பாதிக்கிறது. இவர்களுடைய தேவாலயங்களும் மேல் மட்டத் திலிருந்து வகைப்படுத்தப்படும் ஒழுங்குமுறையைப் பின்பற்ற வேண்டியிருக்கின்றன, போட்டிகள் அவைகளையும் நெருக்கு கின்றன. ஏனெனில் சாதாரண மனிதனின் ரசனைத் திறன் விமர்சகனுடையதைப் போன்று இல்லாவிட்டாலும், தற்கா லத்தின் புதுச் சாதனைகளின் காரணமாக, சிறந்தவகைத் தொழில் முறைகளை எதிர்பார்க்கிறது; புதிய விஷயங்களைப் புரிந்து கொள்ளாவிட்டால்கூட, அவற்றின் சிறப்பை ஆதரிக் காவிட்டால் பழம்பசலி என்று கருதிவிடுவார்களே என்று பயப்படுகிறது. அமைப்பில் திறமை பெருகப்பெருக சக்திகளை யும் முதலையும் திரட்டும் முயற்சி பெருகுகிறது. சமய மார்க்கங் களைப் பிரித்து வைக்கும் சுவர்கள் பலவீனமடைகின்றன. இவற்றின் விளைவாகப் படிப்பும் கூர்மதியும் கொண்ட சபை யாரிடையே தோன்றும் போக்குகள் 'நடுத்தர நகரங்களின்' லக்ஷியமாகி விடுகின்றன.

சொற்பமாக உள்ள இப் பெரிய தேவாலயத்திற்கு மக்கள் வரும் வழக்கத்திலும் முக்கிய மாறுதல் ஏற்படுகிறது. வாரத்திற் கொருமுறை தேவாலயத்திற்குச் சென்று, வழிபாட்டில் கலந்துகொள்வது, கடமையைக் கடைப்பிடிக்கும் ஒழுங்குமுறை என்று இப்பொழுது கருதப்படுகிறது. சாதாரண மக்களின் ஓய்வு நேரமும் சக்தியும் அவ்வளவாகத் தேவாலய விஷயங்களில் செலவழிவதில்லை. 1900-ம் ஆண்டைவிட அதிகமாக வியாபாரியும் வினையாளியும் (உழவனுமேகூட) இப்பொழுது பொது வாழ்வில் பின்னிக் கிடக்கின்றனர். தொழிற்சாலைகள் சிநேகத்திற்கு வசதியாக இருக்கின்றன; உற்பத்தி ஸ்தாபன ரீதியாக்கப்பட்டு விட்டது; பொருளாதார விஷயங்கள் பொது விவகாரங்களுக்கு நெருங்கிவிட்டன. சமயச் சார்பற்ற ஓய்வு நேரம் இன்னும் பகிரங்கமான முறையில் செலவழிக்கப்படுகிறது. இவற்றின் விளைவாக 'ஸாபத்' தினத்தை வெளியே கழிக்க வேண்டிய தேவை குறைந்துவிட்டது; ஞாயிறன்று வீட்டில் தங்கவோ, உல்லாசப் பிரயாணம் செய்யவோ, அல்லது மற்ற விதத்தில் தனித்திருக்கவோதான் பிரியப்படுகிறார்கள் சனிக்கிழமை பிற்பகல் ஈடுபாடுகளுக்கும் இரவு ஓய்வுக்கும் பிறகு (குறிப்பாக ஜாஸ், நடனம், சினிமா, நாடகம் ஆகியவற்றிற்குப் பிறகு) ஞாயிறு தினம் உண்மையான ஓய்வாக ஆகிவிடுகிறது. பொது அறிவுப் பணியை விட்டு விட்டு 'ஸாபத் தினத்தை'ச் சோம்பலாகவோ ஓய்வாகவோ கழிக்கும் போக்கு ஏற்பட்டு விடுகிறது. ஞாயிற்றுப் பத்திரிகைகள், ரேடியோ, சினிமாக்கள் ஆகியவை சாதாரண மக்களின் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்தும் அளவுக்கு அறம் பொதிந்த பொழுதுபோக்காக இருக்கின்றன. பொது வழிபாட்டை ரேடியோவும் டெலிவிஷனும் எந்த அளவுக்குப் பாதிக்குமென்று இப்பொழுது சொல்லிவிட முடியாது. ஆனால் ரேடியோ மூலம் திறமையான வழிபாட்டுரைகள் பெருகி வருவது வீட்டில் தனி வழிபாடு வலுத்து வருவதற்கான சான்றாகும். ஆகவே இவ்விஞ்ஞானப் புதுமைகளின் விளைவாக வழக்கமான வழிபாடுகளும் தேவாலய நடவடிக்கைகளும் மாறி வருகின்றன.

சம்பிரதாயமான சமய வழக்கங்களுக்கும் சடங்குகளுக்கும் ஏற்பட்டிருக்கும் வெளி ஆபத்தைவிட, இதே சூழ்நிலை

யில், உள்ளத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துத்தான் முக்கிய மான விஷயம். நல்ல கல்வி பெற்ற பாதிரிமார் மாலைச் சமயப் பிரசங்கம் என்ற பெயரால் பொழுதுபோக்கு, நாடக ஜோடனைகள், தற்காலத்திய கற்பனை இலக்கிய விமர்சனம், பொதுப் பிரச்னைகளைப் பற்றிய ஆராய்ச்சி, பைபிள் வகுப்புக்குப் பதிலாக ஏதோ ஒரு மாதிரியான சமய சம்பந்தமான கல்விப் பயிற்சி, விரிந்த மனப்பான்மை கொண்ட சமயப் பத்திரிகைகள் ஆகிய இவ்வளவு விஷயங்களும் குறிப்பிடத் தக்கவை. நுண்மையான அநேக விதத்தில் சமயம்கூட நவீன வாழ்க்கை முறைகளை ஒப்புக்கொண்டு விட்டது. அதாவது 1900-ம் ஆண்டில் எதை உலகியல் விஷயம் என்று கூறுவார்களோ, அது இப்போது 'விரிந்த கொள்கை' என்ற சமயவாதத்தின் பழக்க வழக்கமாகிவிட்டது. கடவுட் கொள்கை நவீனமாக்கப்பட்டு விட்டதைப்பற்றி நான் பேசவில்லை; கொள்கையிலும் நம்பிக்கையிலும் மாறுதல் ஏற்பட்டு வருவதை ஒதுக்கி விட்டே பேசுகிறேன். மதத்தின் நடைமுறை அர்த்தமும் செல்வாக்கும் புரட்சிகரமாக மாறிப்போகும் அளவுக்குச் சமய நெறியிலும் வினைகளிலும் உலகியல் வாழ்வின் புதுமைகளுக்கும் சக்திகளுக்கும் இடம் கிடைத்து விட்டன. சம்பந்தமில்லாத உலகியல் புதுமைகளைச் சமய ஸ்தாபனங்களும் வழக்கங்களும் அவசியமாக ஏற்றுக் கொண்டு பயன்படுத்த வேண்டிய நிலைகூட வந்துவிட்டது.

## பிடிவாதமான சமய வகைகள்

அதிக நவீனமடையாத சமய வழிபாட்டு முறையைப் பற்றி ஆராயும் பொழுது, நவீன வாழ்க்கையின் புறமாறுதல்களால் அதிகம் பாதிக்கப்படாத சமயப் பற்றுள்ளவர்களையும், அதே மாதிரியான பிரதேசங்களையும் காண்கிறோம். அமெரிக்க நடுத்தர வகுப்பின் கீழ்க்கடையினர் என்று கருதப்படுகிறவர்கள் அப்படி ஒன்றும் பொருளாதாரத்தில் கீழ்ப்பட்டவர்கள் அல்லர். அடிப்படையான உலகியல் வசதிகளை அவர்களும் அனுபவிக்கிறார்கள்; அடிப்படையான கல்வியும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எந்த அளவுக்குச் சுகமாக இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு நிம்மதியாகவும் இருக்கின்

றனர். ஆரம்ப, உயர்தரக் கல்வி அளிக்கலாம்; அல்லது கல்லூரியில் உயர்தரப் பள்ளிக் கல்வியை அளிக்கலாம்; ஆனல் புரட்சிகரமான தொன்றும் இருபதாம் நூற்றுண்டில் நடந்து விட்ட தென்று யாரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். அநேகம் பத்திரிகைகள்,இதழ்கள்,புத்தகங்களைப் படிக்கலாம்; ஆனல் பள்ளிகளில் கிடைக்கும் அறிவைவிட அதிகமாக இவற்றிலிருந்து சம்பாதித்துவிட முடியாது. விஞ்ஞானம் என்ருல் தொழில் நுட்ப அறிவு. தொழில் நுட்ப அறிவென்ருல் மனிதனுக்கான சுகபோகங்களின் வளர்ச்சி. இம்மாதிரி கருத்துக்களை நம்பி வாழும்படி கூறும் மதஸ்தாபனங்களின் அங்கத்தினராக இருக்கலாம்.

இந்த மாதிரியான மக்களுக்கு வாழ்வின் ஆன்மீகத்துறை தங்கள் குடும்பச் சொத்தைப் போன்றதொரு பிதுரார்ஜித கலாசாரம். அவர்களுக்குச் சமயம் என்ருல் தங்கள் முன்ஞேர்களின் நம்பிக்கை; கலாசாரம் என்ருல் சம்பிரதாயத்தைத் தவற விடாதிருத்தல். பாட்டுக் கச்சேரிக்குச் செல்வது போல் அவர்கள் நாசூக்காகத் திருப்தியுடன் செல்வார்கள்; குளிக்கப் போவது போல் பாபத்தை ஒப்புக் கொள்ளவும் ஒழுங்காகச் செல்வார்கள். இவர்களில் தன்னறிவு மிகுந்தவர்கள், பழங்காலப் பொருள்களைப் பக்தி கலந்த அன்புடன் ரசிப்பது போல், மதத்தையும் ரசிக்கின்றனர். ஆனல் தன்னறிவு பெரும்பான்மையோருக்குக் கிடையாது; பரவாழ்வுக்கு நேரிடையான பயிற்சி என்று கருதுவதுபோல் நடைமுறை வாழ்க்கையில் அவர்கள் ஆவலுடன் கலந்து கொள்ளுகிருர்கள். கொள்கைகளில் அவர்கள் பழங்கிடைப் பற்றுள்ளவர்கள் என்று கூற முடியாது; தங்களுக்கான நன்மைகளை எல்லாம் கடவுள் காப்பாற்றித் தருவார் என்று அவர்கள் கருதுகிருர்கள். தீமையைக் கண்டு அவர்களுக்கு அச்சம். தீமை தன்னையே தான் அழித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் தீமைகள் ஒழிவதை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்; நிலையான பொருள்கள் என்ருல், பொருளாதார மந்தத்தையும், யுத்தத்தையும், இதர புயல்களையும் கட்டாயம் தப்பிப் பிழைக்கக் கூடியவை என்று கருதுவார்கள். ஆகையால் அவர்களுடைய நம்பிக்கைகள் எப்படி உறுதியாக இருக்கின்றனவோ, அப்படியே அவர்களுடைய தேவாலயங்களும்

சம்பிரதாயமாகவே இருக்கின்றன. ஆனால் சம்பிரதாயம், ஸ்திரத் தன்மை என்பவற்றின் அந்தஸ்து மாறிப்போய்விட்டதென்பது அவர்களுக்குத் தெரியாது.

ஆலோசனைத் திறனற்று சுயதிருப்தியுடன் வாழும் மக்கள், 1900-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட மாறுதல்களெல்லாம் மேல்வாரியான வெறும் புறக் கோலங்களே என்று கருதுகிறார்கள். அமெரிக்க மக்களில் முக்கியப் பகுதியினர் அவர்களே; அவர்களுடைய சமயக் கொள்கைகளும் வழிபாட்டுவகைகளும் இம் மனப்பான்மையின் விளைவுதான். சமூக வளர்ச்சி இயல் வாதிகள் சொல்லும் கலாசாரத் தேக்கத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு; எந்த அளவுக்கு ஸ்தூல நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அந்த அளவுக்கு அவர்கள் மதிப்பீட்டு உணர்ச்சி மாறவில்லை. நடைமுறை விஷயங்கள் எதிர் காலத்தின் அறிகுறி என்று அவர்கள் கருதுவதில்லை; புது உண்மைகள் அவர்களுக்குப் புதிய கருத்துகளை உண்டாக்குவதில்லை. இந்த நிலையில், சமய சம்பிரதாயங்கள் ஸ்திரத் தன்மை என்பவற்றிற்கு நிலையான கலாசார காலத்திய பொருளைக் கொள்ள இயலாது. சமய வழக்கம் என்னும் மையக் கருத்தையே கவனிக்கும் சமூக வளர்ச்சி இயல் வாதிகள் கலாசாரத்திற்கும் ஜீவர்களுக்கும் ஸ்திரத் தன்மை அளிப்பதே சமயத்தின் வேலை என்று கூறிவிடுகிறார்கள். ஆனால் எல்லா ஸ்தாபனங்களிலும் காணப்படும் கலாசாரத் தேக்கம் தான் சமயத்திலும் காணப்படுகிறதென்று கூறுவதுதான் பொருந்தும்.

சமய நிம்மதி அடையாத மக்களும் பெருவாரியாக இருக்கிறார்கள்; ஆனால் தங்கள் அதிருப்தியை இவர்கள் பழங்கால முறையில் கூறுகின்றனர். இதைத்தான் தீவிர ஆதாரவாதம் என்கின்றனர். நிம்மதியற்ற ஏழை மக்களுடன் இதற்கு நெருங்கிய தொடர்பில்லை; அரசியல் தாராளவாதத்துடனோ, பழமை வாதத்துடனோ மற்றெந்த உலகியல் போக்குடனோ இதைப் பொருத்த முடியாது. மேலே கூறப்பட்ட படிப்பு,அறிவியல் குறைகள் இவர்கள் இடமும் காணப்படுகின்றன; ஆனால் இவர்கள் ஏழைகளுமல்லர், பணக்காரர்களுமல்லர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் 'மிச்சம்' என்றும் இவர்களைக் கருதமுடியாது. தீவிர ஆதாரவாதம் இருபதாம்

நூற்றுண்டில் தோன்றியுள்ள கண்டன இயக்கம்; அருள்வேக மும் தீர்க்கதரிசனமும் கொண்டது; நவீன வாழ்வை அது குறை கூறுகிறது, எதிர் காலத்தைப் பற்றிக் கவலைகொள் கிறது.

பைபிளை ஊன்று கோலாகக் கொண்ட முந்தைய தலைமுறையினர் ஆன்மா, உடல் என்ற இரண்டை ஏற்றுக்கொண்டனர்; இந்த உண்மையை வழக்கமாகக் கையாளும் சூழ்நிலையிலே வளர்ந்தனர்; எனவே உலகில் இருந்து கொண்டே உலகத்துடன் ஒன்றுகாமலிருக்க அனுபவபூர்வமாக அவர்கள் கற்றிருந்தனர். அவர்கள் இரு உலகில் வாழ்ந்தனர்—இகம், பரம்; தேவாலயமும் அரசியல் அமைப்பும் வெவ்வேருக இருப்பது போல் உலகியல் சிந்தனையையும் பர சிந்தனையையும் வெவ்வேருக வைத்துக் கொண்டிருந்தனர். இதில் முரண்பாடெதுவு மில்லை; இரு துறைகள் என்றுதாளுதம். ஆனல் இருபதாம் நூற்றுண்டில், உலகம் ஆன்ம விஷயத்தில் குறுக்கிட ஆரம்பித்த பிறகு, இவ்விரண்டு வரைகளும் குழப்பம் அடைந்துவிட்ட நிலையில், உடல் விவகாரத்திற்கும் ஆன்ம நலத்திற்கும் உள்ள வேறுபாட்டை நிலைநாட்டுவதற்காகத் தீவிர எதிர்ப்பைக் காட்ட வேண்டியிருந்தது. அவை வெவ்வேருனவை என்ற நம்பிக்கையைத் திரும்பப் பெறுவதற்காகச் சமய நெறியை நன்குணர்ந்து தூய்மைப்படுத்த வேண்டியிருந்தது. எனவே இந்தப் பிற்போக்கான சமயக் கொள்கைகள் நவீனமாக்கப்பட்ட சமயம், அதாவது உலகியல் மயமாக்கப்பட்ட சமயத்துடன் முக்கியமாகப் போராட வேண்டியது அவசியமாயிற்று. உடல், ஆன்மா என்ற வேறுபாடு சரியல்ல என்று கருதும் நவீனக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இப்பாகுபாடு உண்மை என்று இவர்கள் நிலைநாட்ட வேண்டியதாயிற்று. பல காரணங்களால் உலகப் போக்கில் அதிருப்தி அடைந்த கோஷ்டிகளை இவ்வாதம் கவர்வது இயற்கை. யுத்த காலத்திற்கு முன்பு இந்த வாதங்களுக்குச் செல்வாக்கு இல்லை. இவர்கள் வாதத்திற்கு இருந்த கவர்ச்சி பணத்தின் ஆதிக்கத்தை இவர்கள் கடுமையாகத் தாக்கிப் பேசினுர்கள் என்பது தான். ஆனுல் நவீன காலத்தின் முக்கிய லஷணங்களாக உலக மகாயுத்தமும் முதலாளித்துவமும் அமைந்துவிட்ட படியாலும், நவீன அறிவு வரவரத் தொழில் நுட்ப விஷயமாகி விட்ட

படியாலும் ஆதாரவாத தேவாலயங்கள் மலிந்து விட்டன. ஆன்ம நலத்தை உலக விவகாரங்களிலிருந்து முற்றும் பிரித்துவிடலாம் என்று கருதிய இடங்களிலும், மக்களிடையிலும், குறிப்பாக இத்தேவாலயங்கள் தோன்றின. இத் தனித்த சமயத்தன்மை பிற்போக்குள்ளதுதான் என்றாலும், அது கண்டனத்தின் குரல் என்பதைப் பற்றிச் சந்தேகமில்லை. சமயத்துறையையும் சமூகத்துறையையும் இம் மாதிரி பிரிப்பதைப் போப்பாண்டவர் பதினோராவது பயஸ், 'சமூக நவீன வாதம்' என்று கிண்டல் செய்தார்; ஏனென்றால் உலகியல் விஷயங்களைப் பாதிரிமார்களின் உதவியின்றி நடத்த முடியும் என்று இதற்குப் பொருள்படுகிறது. இக் கொள்கை பத்தொன்பதாம் நூற்றாண்டில் பரந்த மனப்பான்மைக்கு அறிகுறியாக இருந்ததென்பது உண்மை; ஆனால் இருபதாம் நூற்றாண்டில், கேவலமான சமூக அமைப்பு, சமூகக் கொள்கை ஆகியவற்றினின்றும் தப்புவிக்கும் தந்திரமாகப் பயன் படுத்தப்பட்டது.

ரோமன் கத்தோலிக்க தேவாலயம், ஆங்கிலேய கத்தோலிக்க தேவாலயம் இவைகளின் சம்பிரதாயமான ஆதாரவாதம் வேறு வகையைச் சேர்ந்தது. இந்த ஸ்தாபனங்களில் கொள்கை ஸ்திரமாக இருக்கும்; ஆனால் செயல் நவீனமாக இருக்கும்; இது ஒரு போலிப் பிரிவினை உபாயம். இம் மாதிரியான தேவாலய நிர்வாகம் ஜனநாயக அரசியலிலும், பொருளாதாரப் பிணக்குகளில் மத்தியஸ்தம் செய்வதிலும் பங்கெடுத்துக் கொள்கிறது. அமெரிக்காவைப்பற்றிய வரையிலேனும் அவைகளுக்கு வர்க்க உணர்ச்சி இல்லை; அவை வைதிக முறையிலோ, தொழிலாளர் கட்சிப் போக்கிலோ வாதாடுவதில்லை. நவீன பிராடெஸ்டெண்டு மதத்தினரைப் போல் கத்தோலிக்கர்களும் அமெரிக்க சமூகத்தைச் சமநிலைப்படுத்தும் மத்தியதர வகுப்பாரின் லக்ஷியங்களுக்குக் குரலாக விளங்குகின்றனர். ஆனால் பிராடெஸ்டெண்டுகளைப் போலன்றி ரோமன் கத்தோலிக்கர் தங்கள் பழமையினின்று மாறுவதில்லை. தற்காலத்திய சமூகப் போராட்டங்களில் தேவாலயங்கள் என்ன பங்கெடுத்துக் கொள்கின்றன என்று அறிய இங்கும் ஆசாரங்களையும் கட்டளைகளையும் ஆழ்ந்து பரிசிலனை செய்ய வேண்டும். உதாரணமாக, பாதிரி லியோனார்டு பீனியும், 'மஸா

சூஸெட்ஸ்' ராஜ்யத்தைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ், செயின்ட் பெனிடிக்கு சென்டரைச் சேர்ந்த அவருடைய சக பாதிரிமார் களும் ஆதார வாதகக் கொள்கைப் பிரசாரத்திற்குக் கிளம் பிய பொழுது, மேல் அதிகாரிகள் முட்டுக் கட்டை போட்டு விட்டனர்; பிரசாரம் குருட்டுப் பிடிவாத மாகிவிடக் கூடா தென்று கூறிவிட்டனர். தங்கள் கருத்துக்களை அப்பட்டமாக ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்று நினைப்பதற்கு அதி காரிகளே இங்கு இடம் கொடுத்து விட்டனர்.

## சமயத்தின் புறவளர்ச்சி

இந் நூற்றுண்டின் ஆரம்பத்தில் நம்முடைய முக்கிய சரித்திர ஆசிரியர்களும் சமூக வளர்ச்சி இயல் வாதிகளும் கூறியதுபோல், 1900-ம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்காவில் சமயம் பலவீனப் பட்டுவிடவில்லை. வயது வந்தோரில் பத்து சதவிகிதத்தினரே 1800-ம் ஆண்டில் தேவாலயத்தின் அங்கத் தினராயிருந்தனர்; முப்பது சதவிகிதத்தினருக்கு மேல் தேவாலயங்களுக்கு ஒழுங்காகப் போயிருக்கமாட்டார்கள்; 1900-ம் ஆண்டில் அங்கத்தினர் ஐம்பது சதவிகிதமாக ஏறி விட்டனர்; இப்பொழுது ஐம்பத்தைந்து சதவிகிதமாக இருக்கலாம். இன்னுமொரு இருபத்தைந்து முதல் முப்பது சதவிகிதத்தினர் ஏதோ ஒரு சமய சம்பிரதாயத்தைத் தழுவுவதாகக் கூறிக்கொள்கின்றனர்; அவர்கள் ஏதோ தனிப்பட்ட விதத்தில் சமயப்பற்றுள்ளவர்களே. எந்தச் சமயத்தையுமே சாராதவர்கள் பத்துச் சதமிருக்கலாம். இப் புள்ளி விவரங்கள் அவ்வளவு சரியாக இல்லாமலும் இருக்க லாம்; ஆனால் 1900-ம் ஆண்டில் அமெரிக்காவில் சமயவழிபா டென்பது சமய ஸ்தாபனங்களில் பங்கெடுத்துக் கொள்வ தென்று இல்லாவிடினும், இப்பொழுது ஸ்தாபன ரீதியான அமைப்புக்களில் மிகப் பெரிய அளவில் கலந்துகொள்ளுதல் வழக்கமாய்விட்ட தென்பதற்கு இப்புள்ளி விவரங்கள் சான்று தருகின்றன. பொதுவாக அமெரிக்க சமயவழிபாட்டு வகை கள் எல்லாம் இப்பொழுது முன்பே போல் திரும்பத் தலை யெடுத்து வருகின்றன; சமயத் தலைவர்கள் பிரதிவாதிகளைப் போல் தங்கள் கட்சியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய

நிலேயில் இல்லே. ஆனல் இழந்ததைத் திரும்பப் பெற்று விட்டது போலவோ, பழைய காலத்திற்குத் திரும்பிவிட்ட தாகவோ, இச் சம்பவங்களே மதிப்பது தவருகும். சமயம் முன்னேறியிருக்கிறது ; ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அருமை என்று கருதியவை எல்லாவற்றையும் இப்பொழுது சமயம் ஒதுக்கிவிட்டது ; அது இன்னும் போற்றி வருபவற்றிற்கெல் லாம் புதிய பொருளேக் கற்பித்துவிட்டது. கசப்பான அனுப வங்கள் மூலம் சமய வழிபாட்டு வகை நிதானப்பட்டுவிட்டது; எல்லாம் நன்மைக்கே என்று கூருவிட்டாலும், தென்புடன் இருக்கின்றது. அமெரிக்க வாழ்வு பொதுவாகத் திருத்தி அமைக்கப்பட்டுவரும் நிலேயில், சமயத்திற்குத் தன்னேயும் திருத்தி அமைத்துக்கொள்ளும் அறிவும் ஆற்றலும் இருந்த தால்தான், பெரிய நெருக்கடியிலிருந்து அதனுல் தப்ப முடிந்தது.

இந்தத் திருந்திய அமைப்பு சமயத் தலேவர்களுக்குத் திருப்தியைத் தரவில்லே ; அவர்களே இதைப்பற்றிக் கடுமை யாக விமர்சனம் செய்கிருர்கள். உதாரணமாக : டாக்டர் ஹர்மன் நெல்சன் மோர்ஸ் பின்வருமாறு எழுதுகிருர் :

'ஸ்தாபன ரீதியில், தேவாலயம் வரவர மெதுவாக வளர்ந்து வருகிறது. தேவாலயத்தில் சேராதவர்கள் எண் ணிக்கை ஏறக்குறைய அப்படியேதான் இருக்கிறது. நகரங் களிலும் கிராமப்புறங்களிலும் தேவாலயங்கள் பலவீனப் பட்டுக் கிடக்கின்றன. அவற்றின் அமைப்பிலும் நோக்கிலும் பள்ளிகளேவிட அதிகமாகப் பத்தொன்பதாம் நூற்ருண்டு விவசாயக் கலாசாரச் சாயல் படிந்து கிடக்கிறது. பள்ளிகளே விட அதிகமாக, அவை பயிற்சி இல்லாதவர்களேயும் செல் வாக்கில்லாத தலேமையையும் வைத்துக்கொண்டு வாழ் கின்றன ; கற்றுக்குட்டிகளின் முயற்சியாகவே அவை விளங்குகின்றன. சமூக அபிவிருத்தி ஒவ்வொன்றும் ஒரு நூற்ருண்டுக் காலமாக அவற்றினுடைய பெருமையைக் குலேத்துவிட்டது ; அவற்றினுடைய செல்வாக்கின் ஆட்சி யிலும் சங்கடத்தை உண்டாக்கிவிட்டது. தேவாலயங்களின் தனித்தனியான ஸ்தாபனங்களே அமைப்பதன் மூலமாகவும் சமூக மாறுதலின் விளேவுகளே அவை எதிர்த்துப் போராடிக் கொண்டே வந்திருக்கின்றன.'

டாக்டர் ஆர். ஏ. ஸ்கேர்மர்ஹார்ன் இன்னும் விவர மாகக் கூறுவதாவது :

'தற்காலத்திய கலாசாரப் போக்கிலிருந்து சடங்குகளும், சமயமார்க்கச் சச்சரவுகளும் தேவாலயங்களைத் தனிப்படுத்தி விட்டன. தற்காலத்திய கலை, இசை, இலக்கியம் ஆகியவை பாதிரிமார்களின் பாராட்டுக்கு அப்பாற்பட்டவையாக இருக் கின்றன......துணிவுடன் புதிய கட்டடக் கலையைப் பின் பற்றிய தேவாலய அமைப்பு எங்கே? தற்காலத்திய கவிதை யின் புரட்சியைப் பயன்படுத்தத் துணியும் தேவாலயம் எங்கே? புரோகிதர் தலைவராக விரும்பினால் அந்தக் குழு வினரின் முன்வரிசைக்கு வரவேண்டும். நம்முடைய சமயத்தைப் பற்றியவரையில், நம்முடைய கலாசாரத்தின் சிறப்புக்களெல்லாம் உறங்கிக் கிடக்கின்றன ; இருந்தாலும் சமயச் சார்பற்ற உலகியலைத் தாக்குவது மட்டும் நிற்கவில்லை. பியூரிடன்களோ மற்றவர்களோ தேவாலயங்களால் அடைந்த அளவு ஆன்ம திருப்தியை நம்மால் அடைய முடியவில்லை என்பதுதான் இருபதாம் நூற்றுண்டின் லோகாயத நிலைக்கு ஒரு காரணம். அவர்களுக்கு வேறு போக்கிடமில்லை; ஆனால் நமக்கிருக்கிறது. விஞ்ஞானம், கலை, இலக்கியம், நாடகம் ஆகியவை வாழ்வுக்கு ஆழ்ந்த பொருளுண்டு என்ற அறிவை நமக்கு அளிக்கின்றன—இந்த வேலையை இதற்குமுன்பு சமய நெறிதான் செய்துகொண்டிருந்தது......

'சமயச் சார்பற்ற கொள்கை, இயற்கையான வாழ்வு முறை ஆகிய பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டுமென்றால், அவைகளுக்கிடையேதான் வெற்றி காண முயலவேண்டும் ; அவைகளை விட்டுவிட்டுச் சுற்றுவதில் பயன் இல்லை. இந்தப் போக்கை நம்பிக்கையுடன் மேற்கொண்டால், பழைய பூச் சாண்டி பயங்கரமாகத் தோன்றாது. பேராசிரியர் 'லேமன்' கூறுவதுபோல, ''முந்திய சமய வழிபாட்டு முறையை மாறு தலே இல்லாமல் திரும்பப் பெறுவதென்பது நமது குறிக்கோ ளல்ல ; பெற்றோரும் பரம்பரையும் அற்ற புதிய சமயக் கொள்கை நமது குறிக்கோளல்ல. புதுப் பொருள்கள் சில வற்றைப் பக்திக்குரியனவாகக் காணவேண்டும் ; சில புதிய விஷயங்களின் உன்னதத்தை உணரவேண்டும் ; சில புதிய

உறவுகள் கண்டு கடவுளுடன் தோழமை கொள்ள வேண்டும்—இவையே நம்தேவை."'

இம்மாதிரியான தற்சோதனை பலவீனத்தின் அறிகுறி யல்ல ; ஓங்கி எழும் புதிய தாக்குதலுக்கு ஆரம்பம்.

சமய வளர்ச்சியின் சமீப காலத்திய போக்குகள் பற்றிப் புள்ளி விவரங்களால் சரியாக அறிந்துகொண்டுவிட முடியாது. வளர்ச்சியைச் சதவிகிதங்களால் அளந்தால், சிறிய தேவாலயங்கள், குறிப்பாக ஆதாரவாத தேவாலயங்களின் வளர்ச்சிதான் முக்கியத்துவம் பெறும். அங்கத்தினர்கள் எண்ணிக்கையை ஒப்பு நோக்குவதும் சரியல்ல ; ஏனென்றால் ரோமன் கத்தோலிக்கர்களைப் போன்ற சில கோஷ்டிகள், பிறப்பிலிருந்தே, அல்லது ஞானஸ்நானத்திலிருந்தே, அங்கத்தினர்களைக் கணக்கிட வேண்டும் என்கிறார்கள் ; இதரர்கள் வயது வந்தோரைத்தான் கணக்கெடுக்க வேண்டுமென்கிறார்கள். யூதர் திருச்சபையில் யூதர் ஜனத்தொகையில் எவ்வளவு பேர் ஒழுங்காகப் பங்கு கொள்கிறார்கள் என்றும் கணக்கெடுக்க முடியாது. ஜனப்பெருக்கம் அதிகமாகி வருவதைக் கொண்டு சமய ஸ்தாபனங்கள் தங்கள் ஸ்தானத்தை இழக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். கிடைக்கும் புள்ளி விவரங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுதும், இந்நூற்றாண்டின் இரண்டாவது இருபத்தைந்து வருஷங்களில் வடமேற்கிலும் தென்கிழக்கிலும், அதாவது கிராமப் பிரதேசங்களில், தேவாலயங்கள் குறிப்பாக அதிகப்பட்டிருப்பது தெரிகிறது. நாம் பேசிவரும் விஷயத்திற்கும் இதற்கும் சம்பந்தமிருக்கிறது ; இந்தப் பிரதேசங்களில் சமயத்தின்மீது அக்கறை மிகுந்து விட்டதென்று இதற்குப் பொருளல்ல ; நவீனப் போக்குவரத்து வசதிகள் காரணமாக, எட்டாக் கையில் இருக்கும் விவசாயிகள் எல்லாம் தேவாலயங்களுக்குச் செல்லவும் அவற்றை ஆதரிக்கவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றுதான் பொருள் ; இவ் வசதிகள் தோன்றுமுன் இந்நிலை சாத்தியப்பட்டிருக்காது.

மோட்டார்கள், லாரிகள், பஸ்கள் ஆகியவை கிராமப்புற மக்களின் எல்லைகளை விஸ்தரித்து விட்டன ; கிராமங்கள் விவசாயத்தின் தலைநகரமாகி விட்டன ; பள்ளிகள் நிலைக்க உதவிபுரிந்துவிட்டன. விவசாயிகளுக்கு வெளி

உலகுடன் பல தொடர்புகள் ஏற்பட வழிசெய்து விட்டன ; கோஷ்டிகள் கூட்டமும், ஸ்தாபனங்களும் வளர வழிசெய்து விட்டன ; இந்த வசதிகளும் ரேடியோவும் கிராம வாழ்வின் ஒதுக்கத்தைக் கலைத்துவிட்டன. இந்த வசதிகளால் தேவாலய ஸ்தாபனங்கள்கூடப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஐம்பது அங்கத்தினர்களுக்கும் குறைவாய் அருகருகே இருந்த பல ஆயிர கிராமப்புறத் தேவாலயங்கள் ஒழிந்துவிட்டன. கிராமத் தேவாலயங்களின் மொத்த அங்கத்தினர் எண்ணிக்கையில் விவசாயிகள் நாற்பது சதவிகிதமாக 1940-ல் உயர்ந்து விட்டனர் ; இந்த விகிதம் எப்பொழுதும் எட்டப்பட்டதே இல்லை.

வில்மிங்டன் தேவாலயக் கவுன்சிலின் ஆதரவில், டிலாவேர் ராஜ்யத்தைச் சேர்ந்த வில்மிங்டன் என்ற கிழக்கத்திய நகரத்தை ஆராய்ந்தபொழுது திடுக்கிடத்தக்கதாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. மக்களில் முப்பத்தேழு சதவிகிதத்தினர் ரோமன் கத்தோலிக்கர்கள் ; இருபத்தேழு சதவிகிதத்தினர் பிராடெஸ்டெண்டுகள் ; மூன்று சதவிகிதத்தினர் யூதர்கள்; முப்பத்து மூன்று சதவிகிதத்தினர் எம் மத ஸ்தாபனங்களிலும் சேராதவர்கள். பிராடெஸ்டெண்டுகளில் (முக்கால் பங்கு மெதாடிஸ்டு, பிரஸ்பிடீரியன் அல்லது எபிஸ்கொபேலியர்கள்) எட்டில் மூன்று பங்கினரே ஞாயிறு தோறும் தேவாலயத்திற்குச் செல்கின்றனர். தேவாலய அங்கத்தினர் மொத்த எண்ணிக்கையில் ஐம்பத்தைந்து சதவிகிதத்தினரே ஞாயிற்றுப் பள்ளிகளில் அங்கத்தினராக இருக்கின்றனர். தேவாலயங்களுக்குப் போகிறவர்களின் விகிதத்தைவிட ஞாயிற்றுப் பள்ளிகளுக்குச் செல்பவர்களின் தொகை அதிகமாக இருக்கிறது. மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர் சுற்றுப்புறங்களைச் சேர்ந்தவர்கள். இதர ஆராய்ச்சிகள் மூலம் வளரும் போக்கு பரவலாக இருப்பதும் தெரிகிறது ; நகர தேவாலயங்களைவிட, நகர்ப்புறத் தேவாலயங்களும், கிராமத் தேவாலயங்களும் வேகமாக வளர்கின்றன என்றும் தெரிகிறது.

பொதுப் பிரச்னைகளிலும் பொது சமூக நோக்கிலும் சமயப் பிரிவுகள் கொள்ளும் அபிப்பிராய பேதத்தைப் பொது வாக்கெடுப்பு மூலம் அறிய ஒரு முயற்சி செய்யப்பட்டது.

இதே மாதிரி 1940-45 ஆண்டுகள் சம்பந்தமாக நடத்தப் பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகளுக்கும் தற்பொழுதைய ஆராய்ச்சி முடிவுகளுக்கும் பெருத்த வித்தியாசம் தெரிந்தது; அதனுல் நிதானத்திற்குப் பேர்போன நிபுணர் லிஸ்டன் போப்கூடத் தேவாலயங்களின் சமூக அந்தஸ்தில், குறிப்பாக ரோமன் கத்தோலிக்கப் பிரிவில், சென்ற பத்தாண்டில் அதிக மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லும்படி ஆகி விட்டது.

ஆனுல் சமயத் துறையில் ஏற்பட்டிருக்கும் முக்கிய மாறுதல்கள் மதிப்பிடப்படவில்லை; ஒருகால் அவைகளை மதிப்பிட முடியாதோ என்னவோ! எப்படியிருந்தாலும் சமயத்தின் புனரமைப்புப் பற்றிக் கூறப் புகும் பிந்திய அத்தியாயங்கள் விஞ்ஞான அறிக்கையைப் போன்றிருக்க முடியாது. முடிவுகளைத் துணிந்துதான் கூறும்படி இருக்கும்; ஆதாரங்கள் போதுமானதாக இல்லாமலிருக்கலாம்; சொந்த அபிப்பிராயங்களைக் கொண்டு மதிப்பிட வேண்டியும் வந்துவிடும்.

# 2

# ஸ்தாபனப் புனரமைப்பு

## மத ஸ்தாபனங்கள் பலவகைப்படல்

சமூகப் புரட்சியின் விளைவாகத் தோன்றியுள்ள மாற்றங்கள் சமயத்துறையை எந்தஅளவுக்குப்பாதித்திருக்கின்றன என்பதைச் சமயத்துக்கு வெளியேயிருந்து பார்த்தால் தெரியாது; உட்புகுந்து பார்த்தால்தான் தெரியும். புள்ளிவிவரங்களால் அதைக் காட்டிவிட முடியாது. கூட்டம் மிகுந்த தேவாலயங்கள்தான் நன்ருக நிலைத்திருக்கின்றன ; அங்கத்தினர்களைப்பற்றிய வரையில், ஜனன விகிதத்தைவிட்டுக் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கிறது. சமயஸ்தாபனங்களைச் சேர்ந்தவரின் எண்ணிக்கை பத்தொன்பதாம் நூற்றுண்டில் மாறிய அளவுக்கு இருபதாம் நூற்றுண்டில் மாறவில்லை. கத்தோலிக்கர்கள், பிராடெஸ்டெண்டுகள், யூதர்களின் விகிதாசாரமும் அதிகமாக மாறவில்லை. புற எல்லைகளில் ஏதோ சில போயிருக்கலாம் அல்லது புதிதாக வந்திருக்கலாம். சென்ற ஐம்பதாண்டில் இரண்டு புதிய அமெரிக்க சமய வகைகள் தோன்றியுள்ளன. லஷக்கணக்கான அங்கத்தினர்கள் அவைகளில் சேர்ந்திருக்கிருர்கள் ; ஸ்தாபனங்கள் தேங்கி விட்டன என்று சொல்லும் அளவுக்கு அவை நிலைத்து விட்டன. உதாரணமாக, மோர்மோன்களின் தேவாலயத்தையும் கிறிஸ்துவ தத்துவ விஞ்ஞான தேவாலயத்தையும்

குறிப்பிடலாம். மோர்மோன்கள் இஸ்ரேல் நாட்டினரைப் போல், தங்கள் விருப்பத்திற்கு முரணாக, பிறமதத்தவர்களிடையே வாழும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளானவர்கள்; தேவாலயத்தின் முழு லக்ஷணம் பொருந்தியது அவர்களுடைய தேவாலயம்தான்—ஆன்மீக வாழ்வின் பிரதிபலிப்பாகவும், தனித்த கலாசாரத்தின் பரம்பரைச் செல்வமாகவும் இருப்பதுதான் அந்த லக்ஷணம். கிறிஸ்தவ விஞ்ஞானிகள், ஜெர்மன் சமூக வளர்ச்சி இயல்வாதிகள் கூறுவதுபோல ஒரு தனிப் பிரிவினர். அவர்களுடைய தேவாலயம் அவர்களுக்குக் குறிப்பான சேவை செய்கிறது ; உடல் நலம், நோய் நீக்கல் ஆகிய காரியங்களைக் கவனிக்கிறது ; (வில்லியம் ஜேம்ஸ் கிண்டலாகச் சொன்னதுபோல) சொஸ்தமான மனத்தையேனும் தருகிறது. மற்றப்படி அவர்கள் தனிப்பட்டவர்கள் அல்லர் ; பிரஜா உரிமை விஷயம் பற்றியவரை இதைக் கவனிக்கவே வேண்டியதில்லை. இவ்விரு சமய ஸ்தாபனங்களும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெய்வ ஆதர்சம் பெற்றன ; இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியை மேலும் ஆதர்சம் வராமல் தடுப்பதிலேயே செலவழித்து வந்திருக்கின்றன. சாமானிய வித்தியாசங்கள் இருந்தபோதிலும், இத்தேவாலயங்கள் தேர்ந்த வைதிக லக்ஷணம் பெற்று விட்டன ; அமெரிக்க சமய ஸ்தாபனங்களுக்குள்ளேயே இவைதாம் மிகக் கண்டிப்பான ஒழுக்கத்தைப் பின்பற்றுகின்றவை, வெறும் இயக்கங்கள் என்ற எல்லையைக் கடந்துவிட்டவை.

அமெரிக்க சமூக வாழ்க்கைச் சூழ்நிலையில் "தேவாலயங்களையும்" "சமயசாகைகளையும்" பிரித்து வித்தியாசம் காணப்படுவதால் பயனில்லை. ஏனென்றால் அமெரிக்க தேவாலயங்கள் எல்லாமே ஏறக்குறைய ஏதோவொரு சாகையைச் சார்ந்தவையே. ஐரோப்பிய இன அடிப்படையில் அமைந்த கோஷ்டிகள்கூடத் தங்கள் ஆதி நோக்கத்தை இழந்து வருகின்றன. மோர்மோன்களும், வைதிக யூதர்களும், இன்னும் சில சிறிய சமய சமுதாயங்களும் சமய ரீதியான ஒழுங்கில் அமைந்தவை; ஆனால் அமெரிக்காவில் உள்ள மற்ற மத ஸ்தாபனங்களைத் தேசிய மத ஸ்தாபனங்கள் என்றோ, தனியொரு சாகையைச் சார்ந்தவை என்றோ கருத முடியாது; பலவகைப்பட்ட அங்கத்தினர்கள் அடங்கிய சமாஜம் என்னலாம்.

இவை எல்லாம் அமெரிக்க மக்களின் ஆன்மவாழ்வைப் பிரதி பலிக்கின்றன. ஆனால் குறிப்பான கலாசாரத்திற்கோ, வர்க்கத்திற்கோ, அவைகளில் எதையும் பிரதிநிதி என்று கூற முடியாது. இம் மத சாகைகளின் இயக்கங்களுக்கு இடையே காணும் வித்தியாசம்தான் மிக முக்கியமானது. சமய சங்கம் என்பது முன்னோர் வைத்துச்சென்ற கலாசார செல்வத்தைப் போற்றிக் காக்கும் நிலைபெற்ற ஒரு ஸ்தாபனத்தைக் குறிக்கும்; அதனுடைய நம்பிக்கைகளை ஒழுங்காகப் புல னுக்கிக் காட்டும் நிர்வாக அமைப்பு அதற்குண்டு; அத னுடைய அங்கத்தினர்களின் கடமைகளையும் பொறுப்புக் களையும் பற்றிப் பொதுவாக எல்லோருக்கும் தெரியும். நம்பிக்கைகள் எல்லாம் கோட்பாடாகி விடுவதுபோல், இயக்கங்கள் ஸ்தாபன உருப் பெறுகின்றன. அவற்றைப் பராமரிக்கும் சங்கம் ஒன்று தோன்றிவிட்டால் எப்பொழு தும் ஆபத்துத்தான்; அந்தச் சங்கம் முன்னேறிவிட்டால் அது நசித்துவிடும்.

இந்த வித்தியாசத்தை நினைவுகொண்டு, மேலே சொன்ன இருவகையைப் போல் முந்திய நூற்றாண்டுகளில் தோன்றி இப்பொழுது ஓய்ந்துவரும் சில சமயக் குழுக்களைப் பற்றிக் கவனிப்போம். உதாரணமாக, பத்தொன்பதாம் நூற்றாண் டில் மாண்டோர் ஆவிகளுக்கு மக்கட் தொடர்பு உண்டு என்ற கொள்கையினரின் இயக்கம் வன்மையாக இயங்கியது. இந்த நூற்றாண்டின் முதல் இருபது வருஷங்களில்கூட அக்கொள்கையினரின் இரகசியக் கூட்டங்கள் அரூபமான பூத சேஷ்டை சோதனை, சொர்க்க பூமியை அடைவது பற்றிய பகற்கனவுகள் முதலியவற்றி லிருந்த ஊக்கம் ஓரளவு இருந்து கொண்டிருந்தது. ஆனால் இன்றைய தினம் அந்தக் கொள்கையினருடைய "தேவாலயங்கள்" அவர்களுடைய இயக்கத்தின் அடையாளம் மாத்திர மாகத்தான் இருக்கின்றன; அவை அழிந்து வருவதாகச் சொல்ல முடியாது; ஆனால் ஆன்ம சக்தியை இழந்து விட்டன. புதிய ஜெருசல தேவாலயம் (ஸ்வீடென்பர்க் வகை), யூனிவர்சலிஸ்டுகள், லிபரல் கத்தோலிக்க தேவா லயம், அமானு சங்கம், கிறிஸ்டாடெல்பியா சகோதரத்துவம், ஷேகர்கள், பாஹய், ராஸிகுருஷியர்கள், பிரும்ம ஞானம் ஆகியவை எல்லாம் பொதுவாகப் பலவீன மடைந்து வரு கின்றன.

1906-ம் ஆண்டு ஜன கணித அறிக்கையில் குறிப்பிடப் பட்ட பல சமய ஸ்தாபனங்கள் மறைந்துவிட்டன. பிரும்ம ஞானத்தைப் பற்றிய வரை 1936-ம் ஆண்டு ஜன கணித அதிகாரிகள் விளக்கமொன்று தந்தனர். "இச் சங்கங்களின் கொள்கைகள் காரணமாக இவைகளைச் சமயப் பிரிவுகளில் ஒன்ருகக் குறிப்பிடவேண்டியதில்லை என்று முடிவு கட்டியிருக் கிருேம்" என்றனர். இதற்குக் காரணம் பிரும்ம ஞான சங்கத்தின் நூல்களில் காணப்படும் வாசகங்களாய் இருக் கலாம். "பிரும்ம ஞானம் புதிய மதமோ, விஞ்ஞானமோ, வேதாந்தமோ அல்ல. உலக சமயங்களின் ஆதார உண்மை களுடன் இதற்கு முரண்பாடு கிடையாது. இது சர்வ வியா பகமான கொள்கை." இந்த மாதிரிக் கருத்துக்களைப் பிரும்ம ஞான வாதிகள் எப்பொழுதும் கூறிக்கொண்டு வந்திருக் கின்றனர்; இதிலிருந்து சமயச் சாயல் வேண்டாம் என்று அவர்கள் நினைப்பதாகக் கொள்வது சரியல்ல. பிரும்மஞானச் சர்வகலாசாலைக் கல்வியையே முக்கியமாகக் கருதும் பிரும்ம ஞானவாதிகள் இருக்கிருர்கள். சமயக் கொள்கைகளையும் சடங்குகளையுமே முக்கியமாகக் கருதும் பிரும்மஞானவாதி களும் இருக்கிருர்கள். இருந்தாலும் இருபதுக்கு மேற்பட்ட புதிய ஸ்தாபனங்கள் தோன்றியிருக்கின்றன. இருபதாம் நூற் ருண்டில்கூட பல இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. அவ்வற்றில் பல நீடிக்கவில்லை; ஆனல் அநேகம் ஸ்தாபன ரீதி யான உருவெடுத்துவிட்டன. சமுதாய இயக்கம், ஆதார வாதம், பாலஸ்தீனத்தில் யூதர்கள் குடியேற்றம் அமைத்தலை ஆதரிக்கும் இயக்கம், சமய சமரச சகோதரத்துவ இயக்கம், ஆக்ஸ்போர்டு கோஷ்டி இயக்கம், புதிய சிந்தனை இயக்கம், கிறிஸ்தவ ஐக்கியப் பள்ளி இயக்கம், யூதர்கள் தெய்வமாகப் போற்றும் ஜிஹோவாவுக்குச் சான்று கூறுவோர் சங்கம், பாதர் டிவைனின் சாந்தி இயக்கம், நான்கு வேதச் சர்வ தேசீய சர்ச், கிறிஸ்துவுக்கான இளைஞர் இயக்கம், சர்வ கலா சாலைகளின் ஐக்கிய இயக்கம் ஆகியவை எல்லோருக்கும் பரி சயமானவை. இவையெல்லாம் சமயக் கொள்கையில் வேறு பட்ட தனிக் குழுக்களாகவோ, அவ்வாறில்லாமலோ, இருக் கலாம், ஆனல் தற்காலத்திய சமய இயக்கங்கள் என்ற முறையில் முக்கியத்துவம் வாய்ந்தவையே. சமய எழுச்சி

களாகிய கொந்தளிப்பின் வடிவங்கள் இவை; இந்த முறை யில் இவைகளைப் பற்றிப் பின்வரும் அத்தியாயங்களில் நாம் கவனிக்கவேண்டியது அவசியம்.

பலவிதங்களாக உருக்கொண்ட ஸ்தாபன அமைப்புக் களைப் பற்றி இங்குக் குறிப்பிட வேண்டியிருக்கிறது; இது நீடித்தால் மதஸ்தாபனங்களின் அமைப்பில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும். அமெரிக்க ஜனத்தொகை பற்றிய அறிக் கையில் காணப்படும் சமய ஸ்தாபனங்கள் எல்லாம் சமய மார்க்கங்களே; அவற்றின் நோக்கம் தெய்வ வழிபாடுதான். கோயில்கள், சர்ச்சுகள், ஆண்டவன் இல்லங்கள், மடால யங்கள், யூதர் கோயில்கள் ஆகியவைதாம் அவற்றின் கேந் திரங்கள். ஆனால் நமது நூற்றாண்டில், தேவாலயங்களைப் போலன்றி, பெரிய தொழில்களுக்குரிய காரியாலயங்களைப் போன்ற தோற்றமளிக்கும் கட்டடங்களில் பல சமய ஸ்தா பனங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சிலவற் றைக் காரியாலய முகப்புள்ள தேவாலயங்கள் என்பார்கள். மத சம்பந்தமான தொண்டில் ஈடுபட்ட ஸ்தாபனங்கள் இவை 'கூட்டம் கூடும் நியூ இங்கிலாந்து விடுதிகள்', 'நண் பர்களின் சங்கங்கள்' என்ற பெயர்களுள்ள இவை பிற்காலத் தில் தேவாலயங்களின் சார்பற்ற சமய சங்கங்களான தோழர்கள் ஐக்கியச் சங்கம், சமயப் பிரசாரக் குழு, சமூக சேவா சங்கம், இளைஞர் சங்கம் முதலியவை தோன்றுவதற்கு முன்னோடிகளாக இருந்தன. சென்ற பல ஆண்டுகளாக அமெரிக்க சமய ஸ்தாபனங்கள் இயற்றியுள்ள தொண்டு விசேஷப் பயிற்சியின் விளைவாகவும், முறைப்படுத்தப் பெற் றும், காரிய சாத்தியமாயும் இருந்திருப்பதைப் பார்த்தால், சமயத்தின் ஜீவநாடியாக விளங்கிய தொழுகைக்குப் பதில் 'ஊழியம்' செய்வதும், பலிபீடத்திற்குப் பதிலாகச் செயல் திறமையும் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது. இந்த விளைவுகளைப் பற்றி இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தீர்க்க திருஷ்டியுள்ள சமய நிபுணர் ஒருவர் குறிப்பிட் டுள்ளார்.

இத்தகைய இயக்கங்களெல்லாம் சமயமாகுமா இல் லையா என்பது சில அறிவாளிகளுக்கு ஏற்ற விவாதமேயன்றி வேறில்லை; ஏனென்றால், லௌகிக நடவடிக்கை எங்கே முடி

கிறது, சமயம் எங்கே ஆரம்பமாகிறது என்ருே, அல்லது ‘பூவுலகில் பரமராஜ்யத்தை அமைக்கும் தந்திரமாக’ அரசியல் எப்பொழுது மாறுகிறது என்ருே யாராலும் சொல்ல முடியாது. தேவாலயங்களையும் கோயில்களையும் சார்ந்து எழுந்துள்ள மிக முக்கியமான சமய ஸ்தாபனங்களை மட்டும் இங்கு வகைப்படுத்திஞல் போதுமானது.

1. நகர மக்களிடையே ஸ்தாபன ரீதியாக வேலை செய்யும் தேவாலயத்தில் கல்வி போதனை, விளையாட்டு வசதி, உல்லாசப் பொழுதுபோக்குக்கான அறைகள், சமயலறை, சமூக ஊழியத்தையே தொழிலாக உடையவர்கள் விஷயங்களைப் பரிசிலனை செய்து முடித்தல், மன நோய்களுக்கு ஆறுதலான ஆலோசனைகள் சொல்லுதல், வேலைகளுக்குரிய ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல் ஆகிய எல்லா அம்சங்களும் நிறைந்திருக்கின்றன.

2. காரியாலய முகப்புள்ள தேவாலயங்களும், வேதப் பிரசார முகாம்களும் இவற்றிற்கு நேர் எதிரிடையானவை. இவை சமயப் பிரசாரம், துன்பங்களுக்கு ஆறுதல் அளித்தல், முன்கூட்டித் திட்டமிடாத தர்மகாரியம்ஆகியவற்றிற்கான இடங்களாகும். சில நேரங்களில் தேவாலயங்கள் நிதி உதவி செய்து அவற்றை ஆதரிக்கின்றன. ஆஞல் இப்பொழுதெல்லாம் பெரிய நகரங்களில், காளான்களைப்போல், இவை தாமாகவே தோன்றிவருகின்றன. இவற்றிற்குத் தேவையான முன்னேற்பாடோ, மூலதனமோ, நிலைத்து நிற்கும் திண்மையோ இல்லை.

3. கிறிஸ்தவ சமுதாய கேந்திரங்களைச் சமுதாயமோ, கூட்டுச் சமயஸ்தாபனங்களோ ஆதரிக்கின்றன; இப்பொழுது பத்து லக்ஷம் அங்கத்தினர்கள் கொண்ட மூவாயிரம் சபைகள் இருக்கின்றன; யூதர் சமுதாய கேந்திரத்தை அவர்கள் சமய ஸ்தாபனங்கள் ஆதரிக்கின்றன.

4. கிறிஸ்தவ சமயப் பிரசாரம், சமூக வேலை, இடம் பெயர்ந்தோர் புனரமைப்பு, கல்வி முதலிய காரியங்களைக் கவனிப்பதற்காகத் தேவாலய சங்கங்களும் நிர்வாகக் குழுக்களும் கூட்டாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஆஞல் இந்தச் சங்கங்களின் அலுவல்களைப் பொதுமக்களில் தொழில் முறையில் பயிற்சிபெற்றவர்களே கவனிக்கின்றனர்.

5. தோழமை கொள்வதற்காகவும், விளையாட்டு, சமயக் கல்வி, பிரசார வேலை ஆகிய நோக்கங்களோடும் அமைக்கப்பெற்ற இளைஞர் சங்கங்கள், தேவாலயங்களின் வரம்புகளுக்கு அப்பாலும் சமய வேலைகளை விரிவுபடுத்திவிட்டன. வாலிபக் கிறிஸ்தவர் சங்கம், இளம் பெண்களின் கிறிஸ்தவ சங்கம், கிறிஸ்தவ முயற்சிச் சங்கம், மாணவத் தொண்டர் இயக்கம் ஆகியவை சமய மார்க்கக் கலப்பில்லாமல் அமைக்கப்பெற்றன. ரோமன் கத்தோலிக்க இளைஞர் சங்கங்களும் இதே வேலையைச் செய்கின்றன. கொலம்பஸ் வீரர்கள், கத்தோலிக்க சாரணச் சிறுவர்கள், கத்தோலிக்க மாணவர்கள் பிரசார மிஷன் — இவை ரோமன் கத்தோலிக்க வகையைச் சேர்ந்த சில ஸ்தாபனங்கள். பிராடெஸ்டெண்டு மார்க்க அடிப்படை கொண்ட நியூமன் சங்கம், ஹில்லெல் ஸ்தாபனங்கள் ஆகியவை சமீப காலத்தில் கல்லூரிகளில் செல்வாக்குப்பெற்றிருக்கின்றன; சமய சமரச வேலைகள் பற்றியும் சில சோதனைகள் நடத்தப்படுகின்றன.

6. சமய ஸ்தாபனங்களின் கல்வித் திட்டத்தில் ஆரம்பப் பள்ளிகள், ஞாயிற்றுப் பள்ளிகள் முதல் கல்லூரிகள், சர்வ கலாசாலைகள், சமய போதனை வகுப்புக்கள், பலவிதத் தொழில்களுக்கான பயிற்சிப் பள்ளிகள்வரை எல்லாக் கல்வி நிலையங்களும் அடங்கியுள்ளன.

7. ஆரம்பக் கல்வி, உயர்தரச் சமயக் கல்விக்காகப் பள்ளிகளில் சமய போதனைக்கான திட்டத்தை வகுக்கவும், விவாதிக்கவும் பல சங்கங்களும், பல தர்ம நிதிகளுக்குரிய கட்டளைகளும் இருக்கின்றன.

8. சமய சேவைக்கான அச்சகங்களும், பத்திரிகைகளும் தொழில் முறையில் வகுக்கப்பெற்று வருகின்றன; சாதாரணப் பத்திரிகைகளுடன் அவை போட்டியிடுகின்றன; மதக் கல்வியையும், போதனையையும் அளிப்பதுடன் அவை பொதுச் செய்திகளையும் பொழுதுபோக்கு வசதிகளையும் வழங்குகின்றன சமயப் பிரசுராலயங்கள் தங்கள் வெளியீடுகளின் வகைகளை விரிவுபடுத்தி வருகின்றன; ஆராய்ச்சிகளின் முடிவுகளையும் சம்பிரதாயமான சமய நூல்களையும் பிரசுரித்து வருகின்றன.

9. பெரிய தேவாலயங்களில் கூடிப் பேசும் அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; சமய சமரச ஸ்தாபனங்களில் சில, பணம் கொடுத்துக்கூட, இந்த ஏற்பாட்டைச் செய்து மக்களின் கருத்துக்களைத் திட்டமாக உருவாக்க முயல் கின்றன.

10. லோகாயதத் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காத் துக் கொள்வதற்காகவும், பொது நலத்தை வளர்ப்பதற்காக வும் சர்வசமய, சர்வதேச ஸ்தாபனங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

மேலே குறித்துள்ள இந்த ஸ்தாபனங்களின் பட்டியலி லிருந்தே சமய அபிலாஷைகள் பல திறப்பட்டு எவ்வளவு பின்னிக்கிடக்கின்றன என்பதும், எவ்வளவு தூரம் செல்வ மும் செல்வாக்கும் அடிப்படையாக விளங்குகின்றன என் பதும், தனிமையில் பயிலப்படுவதுதான் சமயம் என்ற கருத்து எவ்வளவு பழமையானதாகப் போய்விட்டது என் பதும் விளங்கும். தனிமையில் பக்தியுடன் சமயத்தைப் போற்றி ஒழுகுவோர் பலர் இருக்கின்றனர்; ஆனால் ஸ்தாபன ரீதியான சமய ஊழியர்கள் ஒன்று சேர்ந்து செய்யும் பிரசாரமும் வேலைகளும் அவர்களுக்கும் ஊக்க மளிக்கத் தவறுவதில்லை. 1920—50க்கு இடையிலுள்ள 30 ஆண்டுக் காலத்தில் அதற்கு முந்திய முப்பது வருஷத்தைவிட இரு மடங்கு கத்தோலிக்க சங்கங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன; பிராடெஸ்டெண்டு, யூத மத ஸ்தாபனங்களும் இதே மாதிரித்தான் பெருகியுள்ளன.

## சமய ஸ்தாபனங்களின் பொது அந்தஸ்து

அரசாங்கத்திற்கும் தேவாலயங்களுக்குமுள்ள உறவு களைப்பற்றிய அடிப்படைக் கொள்கைகள் அமெரிக்காவில் வகுக்கப்பட்டுக் கொண்டிருந்தபொழுது சமயம் என்பது தனியார் விஷயம் என்றே கருதப்பட்டது. 1776-ம் வருஷத் திய வர்ஜீனிய உரிமைப் பிரகடனம், 'கடவுளுக்கு நாம் புரிய வேண்டிய கடமைகளுக்கும்' (சமயம்), 'மக்களிடையே பரஸ்பரம் காட்டவேண்டிய கிறிஸ்தவப் பண்பான தயை, அன்பு, தரும சிந்தனைக்கும்' (அறம்) உள்ள வித்தியாசத்தை

எடுத்துக் காட்டிற்று. ஒவ்வொருவரும் தம் மனச்சாட்சிப் படி கடவுளுக்கு ஆற்ற வேண்டிய தனிக் கடமைகளுக்கும், (கிறிஸ்தவர்களாக இல்லாவிட்டால்கூட) மற்ற மனிதர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய பரஸ்பர முறைகளுக்கும் இருக்கும் அடிப்படைக் கொள்கை வித்தியாசத்தை வற்புறுத்திற்று. 1931-ம் ஆண்டில்கூட பிரதம நீதிபதி ஹியூஸ் இவ்வித்தியாசத்தை ஒரு வழக்கில் மேற்கோளாகக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது: "கடவுளுடன் உறவு கொள்ளல் என்பதுதான் சமயத்தின் சாரமான கொள்கை, மானிட உறவுகளுக்கு மேற்பட்ட கடமைகள் இதனால் ஏற்படுகின்றன." அரசாங்கத்தைவிட உயர்வான தர்மத்தின் பால் ஏற்படும் கடமை என்று அவர் பொருள் கொண்டிருக்கிறார்; கத்தோலிக்கத் தத்துவவாதிகளைப்போல, அரசியல் கடமைகளுக்கு அப்பாற்பட்ட கடமை எதுவும் மனித உறவுகளை அடிப்படையாகக் கொண்டதன்று என்று அவர் கொண்டுவிட்டார். சமயச் சார்பான மனச்சாட்சி அல்லது சாதாரணக் கடமைகளுக்கு மேற்பட்ட புனிதக் கடமை மனிதரின் தனிப்பட்ட விஷயம் என்ற கருத்து படிப்படியாகத் தகர்ந்துவிட்டது; இன்றைய நிலையில் சமயத்திற்கும் சமூகப் பொறுப்பு உண்டென்று சமயத் தலைவர்களும் மற்றத் தலைவர்களும் இப்பொழுது பெருவாரியாக ஒப்புக்கொள்கின்றனர். இந்தச் சமூகப் பொறுப்புத்தான் சமயத்தின் ஜீவநாடி என்று கருதினாலும், அல்லது பொது நெறியை நிலைக்க வைக்கும் சக்தி மதத்திற்கு உண்டு என்று கருதினாலும், கலாசாரம் என்பதில் மதத்திற்கு முக்கியமாக இடமுண்டு என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. தாமஸ் ஜெபர்ஸன் தேவாலயங்களையும் சர்க்காரையும் பிரித்து வைக்கும் தடைச்சுவரைப் பற்றிப் பேசும்பொழுது, "சமயம் என்பது தனி மனிதனுக்கும் அவனுடைய கடவுளுக்கும் இடையே உள்ள உறவு என்பதையும், தன்னுடைய நம்பிக்கைகளுக்கும் வழிபாட்டுக்கும் அவன் வேறு யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்" என்று ஆரம்பிக்கிறார்; "சமூகக் கடமைகளுக்கு முரண்பட்ட இயற்கை உரிமை எதுவும் மனிதனுக்குக் கிடையாதென்றும் திட்டமாகக் கருதுகிறேன்" என்று முடிக்கிறார். இயற்கை

உரிமைகள், இயற்கை நியதி என்று இப்பொழுது கூறிவரு பவர்கள், ஜெபர்ஸனைப் போல், சமூகக் கடமைக்கு இயற்கை உரிமை முரண்பட்டிருக்க முடியாதென்று கருதினுலாவது அவர்கள் வாதத்திற்கு வலுவிருக்கும். தேவாலயம் சர்க்காரின் கட்டுப்பாட்டுக்கு உட்படாமல் இருக்கலாம்; ஆனுல் அதற்குச் சமூகப் பொறுப்பு இல்லாமற் போகாது. ஆகையால் தேவாலயத்திற்கும் சர்க்காருக்கும் இடையேயுள்ள சுவர் எவ்வளவு பலமாயிருந்தாலும், பொறுப்பு வாய்ந்த பிரஜைகளுக்கும் ஜனநாயக அரசாங்கங்களுக்கும் தெளிவான கடமை ஒன்றுண்டு; சமய விஷயத்தில் அலட்சியமாக இருக்கக்கூடாது: ஏதோ தயை காட்டுவது போலும் இருக்கக்கூடாது; சமயங்களுக்கே வைரியாகவும் இருக்கக் கூடாது; சமயம் தனி ஜீவனைச் சேர்ந்த சொந்த விஷயமாக இருந்தபோதிலும், பொதுப் பணி புரியும் இம்மதங்களின் ஜீவ தயையைப் பற்றியும், உன்னதக் கொள்கையைப் பற்றும் விழிப்புடன் கூடிய அக்கறை கொள்ளவேண்டும். “அமெரிக்கர் வாழ்வில் சமயம்” என்ற பெயருடன் சார்லஸ் இ. வில்ஸன் தலைமையில் சமயத் தலைவர்களல்லாத தேசியச் சாதாரண மக்கள் கமிட்டி ஒன்றிருக்கிறது. அதன் நோக்கமாவது: “அமெரிக்க வாழ்வின் அடிப்படை என்ற முறையில் எல்லாச் சமய ஸ்தாபனங்களும் முக்கியம்தானென்றும், அவரவர்கள் மனத்திற்குகந்த தேவாலயத்திற்கோ, யூதர் கோயிலுக்கோ அமெரிக்கர்கள் சென்று ஆதரிக்கவேண்டும் என்றும் வற்புறுத்துவதேயாகும்.” அமெரிக்க வாழ்வின் அடிப்படையைப் பல்வேறு சமய ஸ்தாபனங்கள் எந்த அளவுக்கு அமைத்துத் தந்திருக்கின்றன என்பது பற்றியும் இம்மாதிரி ஸ்தாபனங்கள் ஆராயலாம்.

சர்க்கார் வரிகளைப்பற்றிய வரையில் இலாபம் சம்பாதிக்கும் நோக்கமில்லாதவை என்ற காரணத்திற்காகச் சமய ஸ்தாபனங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது; மற்றைப்படி அவை பொதுநன்மைக்கான தர்ம ஸ்தாபனங்களாகத்தான் கருதப்படுகின்றன. பொதுவாக, சமய ஸ்தாபனத்தில் குறுக்கிடுவதை சமஷ்டி அரசாங்கச் சட்டத்திருத்த ஷரத்து ஒன்று தடை செய்த போதிலும், சமய ஸ்தாபனங்கள் வகைப்பட்டியங்குவதையும், அதன் விளைவுகளையும்

சர்க்கார் கவனிக்காது என்று சொல்லியிருப்பதாகக் கருதக் கூடாது; சமயத்தையும் சர்க்காரையும் ஓரளவு பிரித்துக் காட்டுவதாகவே கொள்ளலாம். தேவாலயங்களுக்கும் அமெரிக்காவுக்கும் சரித்திரி ரீதியாக உள்ள உறவுகளை விளக்குவதில் உள்ள சங்கடங்களை இ. பி. கிரீன் "அமெரிக்காவில் சமயமும் அரசாங்கமும்" என்ற புத்தகத்தில் ஆராய்ந்திருக்கிறார்; இவ்வுறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்ற பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை; தேவாலயத்திற்கும் சர்க்காருக்கும் இடையே உள்ள பிரிவினை பூர்ணமாக இருந்துவிடுவதில்லையென்றும், நடைமுறை உறவுகள், அபிமானங்கள் மாறுவதற்கு ஒப்ப, அதுவும் மாறுகின்றது என்றும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இதே விஷயத்தை "அமெரிக்காவில் தேவாலயமும் அரசாங்கமும்" என்ற தலைப்புடன் மூன்று தொகுதிகள் கொண்ட நூலில் ஆன்சன் பெல்ப்ஸ் ஸ்டோக்ஸ் ஆராய்ந்திருக்கிறார்; கிரீன் கண்ட முடிவுகளின் உண்மையை இத்தொகுதிகளும் மிகவும் விவரமாக வற்புறுத்துகின்றன.

1900-ம் ஆண்டில் இப்பிரச்னையைப்பற்றி அதிக அக்கறை காட்டப்படவில்லை. 1928-ல் ஆல்பிரட் இ. ஸ்மித் ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாகப் பிரசாரம் செய்தபொழுது, இப் பிரச்னை முக்கியத்துவம் பெற்றது; தம் சொந்த சமயக் கொள்கை என்று அவர் கூறியது தாராளப்பான்மை கொண்ட கத்தோலிக்கர்களின் கொள்கையாகக் கருதப்பட்டது. மெக்சிகோவில் தேவாலயங்கள் கொடுமைக்குள்ளான பொழுது, அவற்றின் சார்பாகக் குறுக்கிட வேண்டும் என்று கத்தோலிக்கர்கள் கோரியதற்குப் பதிலாக, தேவாலய விஷயத்தில் சர்க்கார் குறுக்கிடலாகாதென்று அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

சமயத்திற்கும் சர்க்காருக்கும் சம்பந்தமில்லை என்பதை விவரணம் செய்யும் தீர்ப்புகள் சென்ற இருபதாண்டுகளில் பல இருக்கின்றன. எல்லா ஸ்தாபனங்களுக்கும், குறிப்பாக ஆதாய நோக்கில்லாத ஸ்தாபனங்களுக்கு, சர்க்கார் உதவி தேவைப்படுவதால், தேவாலயங்களின் சுதந்திரத்திற்கு ஆபத்து நேரக்கூடும் என்று தேவாலயங்கள் உணர்கின்றன. மக்களிடமிருந்து பணம் திரட்டுவதில் சர்க்கா

ருடன் இனி போட்டி போட முடியாதென்று அநேக தேவால யங்கள் உணர்ந்துவிட்டன. அங்கத்தினரின் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு கிடைத்தாலே போதும் என்று தேவால யங்கள் இப்பொழுது எண்ணத் தலைப்பட்டுவிட்டன; ஆனல் சர்க்கார் இந்த விகிதத்துடன் திருப்தி அடையாது. வர லாற்று முறையிலும் அறமுறையிலும் இது மிகுந்த கவனத் திற்குரிய நிலைமை; ஏனென்றால் தேவாலயங்களின் பணம் சேகரிக்கும் திறமைபற்றி சர்க்கார் ஒரு காலத்தில் அசூயைப் பட்ட துண்டு. பொருளாதார அவசியத்தை உத்தேசித்தும், தேவாலயங்கள் (குறிப்பாகக் கத்தோலிக்க தேவாலயங்கள்) அரசாங்கத்திற்கும் தேவாலயங்களுக்கும் சம்பந்தமில்லை என்ற கொள்கையில் மாறுதல் வேண்டுமென்று கோரு கின்றன.

அமெரிக்க ரோமன் கத்தோலிக்கப் பாதிரிகள் 1948, நவம்பர் 20-ல் தங்களுடைய புதிய கொள்கையை ஒளிவு மறைவின்றி வெளியிட்டனர்; தேவாலயங்களும் சர்க்காரும் கூட்டுறவு கொண்டு வேலை செய்யப் பின்வரும் திட்டத்தைச் சமர்ப்பித்தனர்:

> சரித்திர வரலாற்றையும் சட்டத்தையும் அறிந்தவர் களுக்கு முதல் திருத்த ஷரத்தின் பொருள் அந்த வாச கத்திலிருந்தே தெளிவாகத் தெரியும்: சமய ஸ்தா பனங்கள் பற்றியோ, சமய வேலைகளில் கட்டில்லாமல் ஈடுபடுவது பற்றியோ காங்கிரஸ் சட்டங்கள் இயற்றக் கூடாது......
>
> முதல் திருத்தத்தின்படி இச்சலுகையை ஒரு மதத் திற்குச் சாதகமாகவும் மற்றொரு மதத்திற்குப் பாதக மாகவும் சமஷ்டி சர்க்கார் அமல் செய்யக்கூடாது; அம் மாதிரிச் செய்யும்படியோ, செய்யாமலிருக்கும்படியோ, எந்த ராஜ்யத்தையும் கட்டாயப்படுத்தக்கூடாது. இந்த நடைமுறைக் கொள்கையைத் தேவாலயங்களுக்கும் சர்க் காருக்கும் இடையே எழுப்பப்பட்டுள்ள சுவர் என்று சொன்னல், இதற்கு அமெரிக்க முறையில் குறிப்பான பொருள் கொள்ளவேண்டும். மதத்தை அலட்சியப் படுத்த வேண்டும் என்றும், தேவாலயங்களுக்கும் சர்க் காருக்கும் உள்ள கூட்டுறவை விலக்கவேண்டும் என்றும்

இந்த நடைமுறைக் கொள்கைக்குப் பொருள் கொண்டால், அமெரிக்க சரித்திர வரலாற்றையும், சட்டத்தையும் திரித்துக் கூறுவதாகும்; பிடிவாதமான லௌகிக வாதிகள் இப்படித் திரித்துக் கூறிவருகிறூர்கள்.

ஒரு மதத்திற்கு விரோதமாகவோ, மற்றொரு மதத்திற்குச் சாதகமாகவோ இல்லாத சமய அறப்பயிற்சியை அரசாங்கம் மதச்சார்பற்று இருக்க வேண்டுமென்ற கொள்கையுடைய கட்சியினர் ஆட்சேபித்து, சென்ற இரண்டாண்டுகளில் முன்பின் கண்டறியாத வெற்றியைக் கண்டிருக்கின்றனர். சமீபகாலத்திய இரண்டு வழக்குகளில் அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டார் முதல் திருத்தத்தைப்பற்றி முற்றிலும் புதுமையானதும், எதிர்காலத்தை மிகவும் பாதிப்பதுமான விளக்கம் கூறித் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

பாரபட்சம் என்பது இல்லாத போதுகூட, மதத்திற்கு உதவி ஏற்படக்கூடிய வகையில் சர்க்காரும் சமய ஸ்தாபனமும் ஒத்துழைக்கக் கூடாதென்று இத்தீர்ப்புக்கள் தடை செய்வதாக ஏற்படுகிறது...........

சர்க்காருக்கும் மதஸ்தாபனங்களுக்கும் இடையே தாராள ஒத்துழைப்பு என்ற பழைய அமெரிக்க மரபைத் திரும்பவும் உறுதிப்படுத்த வேண்டும் என்று நாங்கள் மனப்பூர்வமாக விரும்புகிறோம்; நல்ல பிரஜைகளையும் சமயத்தையும் உத்தேசித்தே இதைக் கூறுகிறோம்; எந்தக் கோஷ்டிக்கும் விசேஷச் சலுகைகளோ, எந்தப் பிரஜையின் சமய சுதந்திரத்திற்கும் ஆபத்தோ விளைவிக்காத கூட்டுறவைத்தான் கூறுகிறோம். பிரஜைகளின் சமயமார்க்க வகைகள் காரணமாக ஏற்படும் நுண்ணிய பிரச்னைகளைச் சமாளிக்க அமெரிக்க சர்க்கார் மேற்கொண்டுள்ள இந்த நல்ல கொள்கையை விட்டு அதைத் திருப்ப நாங்கள் விரும்பவில்லை என்று உறுதி கூறுகிறோம்..........

பொது வாழ்வில் கடவுளுக்கு இடமில்லை என்று கூறிக்கொண்டு, உலகியல் ஆதிக்கியத்தை நிலைநாட்ட முயல்பவர்களால் ஏற்படும் ஆபத்தையும், நீதி ஸ்தலங்களின் ஆதரவைக் கொண்டு சமயச்சார்பற்ற அரசாங்

கம் ஏற்படுவதையும் தவிர்க்க, சமய பக்தர்களுடன் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம். ஏனென்ருல் தேசிய வாழ்வின் சமய அஸ்திவாரத்திற்கு உலகியல் ஆதிக்கியத்தால் ஆபத்து வரவிருக்கிறது; சர்வசக்தி வாய்ந்த அரசாங்கம் தோன்றுவதற்கான வழியும் அமைக்கப்பட்டு வருகிறது.

இக் 'கூட்டுறவு'க் கொள்கையை எப்படி அமல் செய்வதென்பதுதான் முக்கிய விஷயம். பலவகைப்பட்ட அமெரிக்க அற அமைப்புக்களுக்கும் ஸ்பெயின் தேசத்துக் கத்தோலிக்க ஒருமைப்பாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுவதும், கத்தோலிக்கக் கொள்கையை ஜனநாயக சர்க்கார் முறைக்கிணங்க வளைப்பதும் இந்தக் குருமார்களின் (பிஷப்புகளின்) நோக்கமாக இருந்திருக்க வேண்டுமென்றும் தோன்றுகிறது. தேசியக் கத்தோலிக்கர்களின் க்ஷேமநல மகாநாட்டில் குழந்தைகள் கல்விபற்றி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் (1950-ல் நிர்வாகக் குழுவினரால் வெளியிடப்பட்டதில்) இக்கூட்டுறவுக் கொள்கையைச் சந்தேகத்திற்கு இடமின்றி விளக்கியிருக்கிருர்கள். இரண்டுவித உலகமும் இரண்டு வகையான பிரஜா உரிமையும் உண்டென்னும் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்; ஆனுல் சமயம் ஒன்றுதான் இணைக்கும் சக்தியாக இருக்கமுடியும்; சமயத்தினுல்தான் குழந்தைகளுக்கு வாழ்வின் முழுப் பொருளேயும் விளக்கமுடியும்; குழந்தை கடவுள் நாட்டம் கொண்டோ, அல்லது தன் சொந்த நாட்டம் கொண்டோ தான் இருக்கமுடியும்; எனவே எல்லாக் கல்வியும், குறிப்பாக ஆண் பெண் என்ற அடிப்படையில் புகட்டும் கல்வியறிவும், சமய அறநெறிச் சூழ்நிலையில் அமையவேண்டும்; அப்பொழுதுதான் தன் வாழ்வின் நோக்கம் கடவுள் சேவை என்பது புரியும் என்று கூறியிருக்கின்றனர். இக்கூட்டுறவுக் கொள்கையின் வரலாற்றைப் பார்த்தால் லௌகிகம் மதசம்பந்தமான நெறிகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதும், ஆன்ம விஷயங்களில், பொதுப் பள்ளிகள் பெற்றோர்களுக்கும் தேவாலயங்களுக்கும் உள்ள இயற்கையான உரிமைகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதும் புலப்படுகின்றன.

கத்தோலிக்கக் கொள்கைகளை விளக்கிச் சமய தத்துவ ஆசிரியரான ஜான் கோர்ட்னே மர்ரே என்ற பாதிரியார் மிகத் தெளிவாக எழுதியுள்ளதில் காணப்படும் முடிவுகள் இவை:

" அரசாங்கத்தின் சுதந்திரத்திற்குப் பூரணமான மரியாதை செலுத்த வேண்டும் என்பதை ('பூரணமான மனித'னின் அத்யாவசிய அம்சமாகிய ஒரு பகுதிக்குச் செலுத்த வேண்டிய மரியாதை என்ற முறையில்) தேவாலயங்கள் வரலாற்றுப் பூர்வமாகவும் அனுபவ பூர்வமாகவும் உணர்ந்திருக்கின்றன; எனவே உலகியல் விஷயங்களில் தம்சக்தியை வெறும் ஆன்மீக ஆதிக்கிய முறையில்தான் காட்டுகின்றன. தவிர, ஆன்மீக ஆதிக்கியமா யிருப்பதால், அது சர்வவியாபகம் பெற்று மக்களின் ஸ்தாபனங்கள் எல்லாவற்றிலும் ஊடுருவி கிறிஸ்தவ மனச்சாட்சிக்கு ஒப்ப நடக்கும்படி தூண்டுகிறது, அரசாங்கத்துடன் தேவாலயங்கள் தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ளாமல் ஒதுங்கியிருக்கின்றன என்றால், சமூகத்தை விட்டுத் தேவாலயங்கள் ஒதுங்கிவிட்டன என்று பொருளன்று; மக்களுடைய இம்மை மறுமை நோக்குக்கு வழிகாட்டும் ஆன்மீகக் கொள்கையாக அது அவர்களிடையே வியாபித்திருக்கிறது என்றுதான் பொருள்."

சட்ட நிபுணர் ஒருவரின் கருத்தையும் இங்குக் கவனிக்கலாம் :

"தேவாலயத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ள பரஸ்பரக் கடமைகள் எப்பொழுதும் போலவேதான் இருக்கின்றன—மனிதசமூக அபிவிருத்திக்கான கூட்டுறவுதான் அக்கடமைகள். அர்ச். பவுல் கூறியிருப்பது போல் தேவாலயங்கள் தம் கடமைகளை ஆற்ற வேண்டும் : 'நான் மனிதரைப் போல் பேசினாலும், தேவரைப் போல் பேசினாலும், எனக்குத் தயாள குணம் இல்லாவிட்டாலும், நான் ஓர் இசைக் கருவி யாகிவிட்டேன், ஒலிக்கும் தாள மாகிவிட்டேன்" என்றார் அவர். தெய்வீக ஸ்தாபனம் என்ற முறையில், தன் சேவையில் நம்பிக்கை கொண்டு, தயை என்னும் தெய்வ நெறியை மக்களுக்கும் உலகத்திற்கும் எடுத்துரைப்பதன் மூலம்தான் சமூகத்திற்குள்ள தன் கடமையையும், அதன்

மூலம் அரசாங்கத்திற்குள்ள தன் கடமையையும் தேவாலயம் ஆற்ற முடியும்.''

அரசாங்கத்திற்கும் தேவாலயத்திற்கும் இருக்கும் பிரிவினையையும், தேவாலயத்திற்கும் சமூகத்திற்கும் இருக்கும் அறநெறிக் கூட்டுறவையும் சமரசப்படுத்தச் செய்யப்படும் இம்மாதிரி முயற்சிகள் பழைய பிரச்னைகளைத்தான் புதுவிதத்தில் எழுப்புகின்றன. சமீபகாலத்திய விசேஷ அம்சம் என்னவென்றால் அவற்றிற்கு ஏற்பட்டிருக்கும் நடைமுறைச் சிக்கல்கள்தான். இவ்வளவு கொள்கை விளக்கங்களுக்கும் தீர்ப்புக்களுக்கும் அடிப்படைக் காரணம் பல கோஷ்டிகளின் கட்சிவாதங்கள்தான். இத்தீர்ப்புக்கள், முடிவுகள் எல்லாம் சேர்ந்து எஞ்சியிருந்த தீவிர நாத்திகர்கள், பகுத்தறிவுவாதிகள், பாதிரிமார் முறையை எதிர்ப்பவர்களின் நிலையைப் பலவீனப்படுத்தி விட்டன. மதத்திற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தமில்லை என்ற கொள்கையை இப்போக்குகள் மீறுவதாக இவர்கள் ஆட்சேபணை சொல்லி வந்தனர். அரசாங்கத்தின் சமய சம்பந்தமான நடுநிலைக் கொள்கையில் இந்த ஆக்கிரமிப்புக்களை அமெரிக்கர்களில் பெரும்பான்மையோர் பொருட்படுத்தாமல் வளர விட்டு விட்டார்கள். ஆனாலும் பொதுப் பள்ளிகளில் புகுத்தப்படும் சமய சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அவ்வப் பொழுது சில்லறைப் புகார்கள் எழுந்து கொண்டுதான் இருந்தன; கிறிஸ்துமஸ் பிரார்த்தனைக் கீதம் தங்களுக்குப் போதனை செய்யப்படுவது பற்றி யூதர்கள் ஆட்சேபித்தனர்; ஜேம்ஸ் மன்னர் தயாரித்த பைபிளை உபயோகிக்கக் கூடாதென்று கத்தோலிக்கர்கள் ஆட்சேபித்தனர்; சட்ட சபையில் பிரார்த்தனை கூடாதென்றும், சர்வகலாசாலைக் கட்டடங்களில் சமயமார்க்க ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேலை கிடையாதென்றும் நாத்திகர்கள் ஆட்சேபித்தனர். ஆனால் இவை எல்லாம் நெடுநாளைய பிரச்னைகள். மேலும் உலக மகா யுத்தங்கள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ புதிய பிரச்னைகளை உண்டாக்கி விட்டன. ஜனாதிபதி வில்ஸனும் ரூஸவெல்டும் யுத்தக்காலத்தில் தங்கள் மேடைப் பேச்சுக்களிலும் தஸ்தவேஜிகளிலும் சமய ரீதியான வேண்டுகோள்களையும் பயன்படுத்தத் தயங்கவில்லை. ''ஆண்டவன்கீழ் வாழும் இந்நாடு''

என்பது போன்ற சொற்றொடர்கள் யுத்தத்திற்குச் சமய ரீதியான உணர்ச்சியை ஏற்றவும், "நாம் கடவுளையே நம்பியுள்ளோம்" என்று தொனிக்கும்படி அரசாங்க ரீதியில் காட்டவும் பயன்படுத்தப்பட்டன. இம்மாதிரியான கருத்துக்களைப் பிரஜைகள் வரவேற்ற போதிலும், தீவிர உலகியல் வாதிகளின் ஆத்திரத்தை அவை கிளப்பி விட்டன; ராணுவத்திற்கு மத போதகர்கள் வருவதைக்கூட அவர்கள் ஆட்சேபித்தனர்.

போப்பாண்டவரின் ஆதீனத்தில் ஜனாதிபதி ரூஸவெல்டின் சொந்தப் பிரதிநிதியாக மைரன் டெயிலர் 1939-ல் நியமனம் பெற்றதை ராணுவத் தேவைஎன்றும், வேவு பார்க்கும் காரியம் என்றும் பொதுமக்கள் ஏற்றுக் கொண்டனர். பின்னர் இவர் ட்ருமனின் சொந்தப் பிரதிநிதியும் ஆனார். ஆனால் பிராடெஸ்டெண்டுகள் இது போப்பாண்டவருடன் ராஜதந்திர உறவு கொள்வதற்கான ஆரம்ப ஏற்பாடு என்று சந்தேகித்து ஆட்சேபித்தனர். இதேமாதிரி 1951-ல் ஜனாதிபதி ட்ருமன், மார்க் கிளார்க்கை நியமிக்க முயன்ற பொழுதும், பிராடெஸ்டெண்டுகளும் மற்றவர்களும் ஆட்சேபங்களை எழுப்பினார்கள்.

இதே மாதிரி ஸ்பெயின் நாட்டு முப்படைத் தலைவர் பிராங்கோவுடன் சகஜமான ராஜதந்திர உறவு கொள்ள ஏற்பாடு நடந்த பொழுது, கத்தோலிக்கர் ஆட்சேபித்தனர்; அதைக் கண்டு பிராடெஸ்டெண்டுகளும், விரிந்த மனப்பான்மை கொண்ட உலகியல் வாதிகளும் ஆத்திரமடைந்தனர். ஆனால் புதிய கல்விக் கொள்கைகளைப்பற்றித்தான் பெரிய சர்ச்சை எழுந்தது. சிறுவர்கள் குற்றம் புரிவது அதிகரிப்பதைக் கண்டும், உயர்தரப் பள்ளிகளில் குழந்தைகள் புரியும் குற்றங்களைக் கண்டும், 1930-க்குப் பின்னும், 1940-க்குப் பின்னும், கவலை ஏற்பட்டது. சமயக் கல்வி இல்லாததுதான் இதற்கெல்லாம் ஒரு முக்கிய காரணம் என்று பிராடெஸ்டெண்டுகளின் தேசியக் கவுன்சிலும், கத்தோலிக்கர்களும், யூதர்களும் கூறத் தொடங்கிவிட்டனர். அதன் பேரில் பொது நெறியைக் காக்க சமயக் கல்வி வேண்டும் என்ற கோரிக்கை விரிவாக எழுந்தது. சமய சம்பந்தமான அறியாமை பரவுவது பெருத்த அபாயம் என்று கருதப்பட்டது;

அதனுல் சமய மார்க்கங்களை வலுப்படுத்தாமல் பொது நெறிக்கு வலுவூட்டும் பக்திமுறைகளைப்பற்றி ஆராய்ந்தனர். சமயம் தேவை என்ற உணர்ச்சி பொதுவாக எழுந்த பொழுது, சமயமார்க்கங்கள் அதைப் பயன்படுத்த முயன் றன. தவிர, அறிவில் மூத்தோர் சிலருக்கு சமஷ்டி சர்க்கார் உபகாரச் சம்பளம் அளித்ததன் மூலம், யுத்த காலத்தில் நிதி பற்ருக்குறையால் தடுமாறிக் கொண்டிருந்த பல சமயக் கல் லூரிகளுக்கு மறைமுகமான லாபம் கிடைத்த விஷயமும் இத னுடன் சேர்ந்து கொண்டது; சமயப் பள்ளிகளுக்குப் பொது நிதியை உபயோகிக்கலாம் என்று பல ராஜ்யங்களும் சட்டங் கள் இயற்றி விட்டன.

இப் பிரச்னைகள் பற்றி இன்றும் (1952) விவாதம் நடந்து கொண்டிருக்கும் நிலையில் பொதுவான் முடிவுகளைக் காண இயலாது. ஆனுல் 1900-ம் ஆண்டுகளுக்குப் பிறகு சமய சுதந் திரம் என்ற பிரச்னையின் அடிப்படைக் கொள்கையே மாறி விட்டதாக எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். நாத்திகர் களும் தீவிர உலகியல் வாதிகளும் மதத்தினின்று விடுதலை வேண்டும் என்று அவ்வளவாக இப்பொழுது கிளர்ச்சி செய் யக் காணேம்; ஸ்தாபன ரீதியான சமயத்திற்கு ஒரு நூற் ருண்டுக்கு முன்போ, அரை நூற்ருண்டுக்கு முன்போ, காட் டப்பட்ட எதிர்ப்பைப் போன்றதொரு எதிர்ப்பை இன்று யாரும் பொருட்படுத்துவதில்லை. ஆனுல் லௌகிக வாதமே அறமற்றதென்றும், அதுவே ஒரு சமயமாகிவிட்டதென்றும் மதஸ்தாபனங்கள் திரித்துக் கூறுவதால், சமயத்தைச் சாராத மக்களின் ஆத்திரத்தைத்தான் கிளறி விடுகிருர்கள். உருவற் றுக் கிடக்கும் நாத்திகத்தைப் பொறுக்க முடியாத மதம் எதில் சேர்ந்தது என்று கேட்கிருர்கள். மற்றப்படி சில கத் தோலிக்கர்கள் நீங்கலாக, மற்ற எல்லோரும் மதத்திற்குச் சுதந்திரம் வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிருர்கள்; கத் தோலிக்கர்கள் மட்டும் 'போலிச் சமயங்களை' ஒழிக்க வேண் டும் என்று வாத அளவில்—செயலில் அல்ல—கூறுகிருர்கள். ஆனுல் சமய சுதந்திரத்தைப்பற்றி எல்லோரும் உண்மையா கவே அக்கறை கொள்கிருர்கள்; அதாவது பலவிதப் போக் குக் கொண்ட 200 மத ஸ்தாபனங்கள் உள்ள அமெரிக்காவில் அவைகளுக்கிடையே பரஸ்பர மரியாதையும் ஒத்துழைப்பும்

நிலவ வேண்டும் என்று நினைக்கிறார்கள். சமயத்திற்கும் அர சாங்கத்திற்கும் உள்ள உறவு பற்றிய பிரச்னையை "மத விஷ யத்தில் தலையிடாதே!" என்ற கொள்கையால் தீர்த்துவிட முடியாது; மதம் தாராளமாகச் செயற்பட்டு, பொது வாழ் வுக்கு ஆக்கமும் பயனும் விளைவிக்கக் கூடிய அறிவுச் சூழ்நிலை யையும் அறச் சூழ்நிலையையும் உண்டாக்குவதன் மூலம்தான் இப்பிரச்னையைத் தீர்க்க முடியும். சுதந்திர உணர்ச்சியை யும் சமயச் சார்பான பக்தியையும் சமரசப்படுத்துவதே பொது மக்களின் அறநெறியின் முக்கியப் பிரச்னையாகி விட் டது. மதமோ, அரசாங்கமோ, தான் எவ்விதத் தர்ம ஒழுங்கு களின் மீது அமைந்துள்ளது என்பதைப் பற்றி அலட்சியமாக இருக்க முடியாது.

## சமயக் கல்வி ஸ்தாபனங்கள்

சமயக் கல்வியை ஊக்குவிப்பதற்காகக் கூறப்பட்ட பல திட்டங்கள், கல்விப் பிரச்னைகளைத் தவிர, சமயத்திற்கும் அர சாங்கத்திற்கும் உள்ள உறவுகளைப் பற்றிய அறப் பிரச்னைகளை யும், சட்டப் பிரச்னைகளையும் எழுப்பின. பள்ளிக்கூடத்திற் குப் போய் வர பஸ்வசதி, இலவசச் சிற்றுண்டி முதலியவை கள் சமஷ்டிச் சட்டப்படி பொதுப் பள்ளிகளுக்குக் கிடைத்து வந்ததால் சமய ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிகளுக்கும் அவ்வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை ஒன்று தோன்றிற்று; இந்த வசதிகள் பொதுச் சுகாதாரம், குழந்தை கள் நலன் என்ற வகையைச் சேருமே அல்லாது, சமயக் கல்வி என்ற வகையில் சேராது என்று அதற்குக் காரணமும் காட் டப்பட்டது. செனட்டில் கொண்டுவரப்பட்ட டாப்ட் மசோ தாவும், 80-வது காங்கிரஸ் கூட்டத்தில் மக்கள் சபையில் கொண்டுவரப்பட்ட மாக்கோவன் மசோதாவும் அரசியல் அமைப்புச் சட்டப் பிரச்னையைத் திட்டமாகவே எழுப்பின. பொதுக் கல்விக்குச் சமஷ்டி நிதியை உபயோகிக்க வேண்டும் என்று கல்வியாளர்கள் வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் சம யங்கள் அமைத்த பள்ளிகளுக்கு இதே உதவி கிடைக்காது என்ற காரணத்திற்காக இக்கோரிக்கையைச் சட்ட சபையின் கத்தோலிக்க அங்கத்தினர்கள் ஆட்சேபித்தார்கள். இது

முட்டுக்கட்டை நிலையை உண்டாக்கி விட்டது. இதைவிட கத்தோலிக்கத் தலைவர்களின் ஒளிவு மறைவற்ற சில கோரிக்கைகள் பிராடெஸ்டெண்டுகள், யூதர்கள், லௌகீக வாதிகள் ஆகியோரிடையே பீதியை உண்டாக்கின. "அமெரிக்கக் கல்வி முறையை விட்டுப் பிரிக்க முடியாத அங்கமாகக் கத்தோலிக்கப் பள்ளிகளை ஆக்குவதற்குத் தேவையான வரிவருமானம் இருக்க வேண்டும்," எனத் தாங்கள் கோருவதில் தவறில்லை என்று கத்தோலிக்கர்கள் கூறினார்கள்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமயச் சார்பான பள்ளிகளைப்பற்றி அமெரிக்கக் கத்தோலிக்கத் தலைவர்களிடையே அபிப்பிராய பேதம் இருந்து வந்தது. 1870-ல், நியூயார்க் செயின்டு ஸ்டீபன் தேவாலயத்தைச் சேர்ந்த மாக்ளீன் பாதிரியார் மதச்சார்புள்ள பள்ளி முறையைத் தாக்கியிருந்தார்; இதனால் பிஷப்புகளுக்குள் கடுமையான விவாதம் மூண்டது. பதின்மூன்றாவது போப்பாண்டவர் ரோமன் கத்தோலிக்க தேவாலய முறையில் அமெரிக்க இயல்பு வளர்வதற்கு இது ஓர் உதாரணம் என்று இதற்கு விமர்சனம் செய்தார். இதற்காக அத்தியக்ஷ குரு சிரேஷ்டர் ஜான் அயர்லாந்தையும், குரு கிப்சனையும் அவர் தம் கடிதத்தின் மூலம் கண்டித்தார். 1892-ல் போப்பாண்டவரின் பிரதிநிதி மான்ஷர் ஸடோல்லிக்கும் அமெரிக்க அத்தியக்ஷ குருக்களுக்கும் இடையே ஒரு சமரசம் ஏற்பட்டது; ஆனால் இதன் மூலம் பொதுப்பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சலுகைகளை ஆறுமாதம் கழித்துப் போப்பாண்டவர் கண்டித்தார். அதன் விளைவாக இருபதாம் நூற்றாண்டில் சமயத்தார் பள்ளிகள் வேகமாக வளர்ந்தன; கத்தோலிக்கக் குழந்தைகளில் ஐம்பது சதவிகிதத்தினர் இப்பொழுது இந்தப் பள்ளிகளுக்குப் போகின்றனர். இதிலிருந்து "அரசாங்கம் நிர்வகிக்கும் பொதுப்பள்ளிகளில் கத்தோலிக்கக் குழந்தைகள் ஆரம்பக் கல்வியையும், கலையின் உயர் பகுதிகளையும், விஞ்ஞானத்தையும் பயில்வதில் ஆட்சேபணை இல்லை" என்று 1892-ல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை நிராகரிக்கப்பட்டு விட்டது என்றுதானே இதற்குப் பொருள்; இதற்குப் பதிலாகச் சமயத்தார் நிறுவிய பள்ளியில் சமயக் கல்விதான் இருக்க வேண்டும் என்பதோடு படிப்பு, எழுத்து, கணக்குக்கூட சமய ஸ்தாபனச் சார்பில்

தான் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கொள்கையும் முளைத்துவிட்டது.

இதற்கிடையில் ஹீப்ரு பள்ளிகள் வேண்டும் என்ற அவசரக் கோரிக்கை யூதர்களிடையே எழுந்தது. இந்த நூற்றுண்டின் ஆரம்பக் காலத்தில், யூதக் கல்வியாளர்கள் யூத மதத்தின் சர்வ வியாபகத் தன்மையை எடுத்துக் காட்டினர்; அமெரிக்க உலகியல் கல்வி முறையுடன் தங்கள் சமயக் கல்வியைப் பொருத்துவதில் கிறிஸ்தவர்களைவிட முற்போக்கான நிலையைக்கூட மேற்கொண்டனர்; இதன் விளைவாக, வைதீக யூதர்களின் பக்திக்குரிய ஹீப்ரு படிப்பு, 'சாக்ரா' என்னும் யூதச் சடங்கு, 'தோரா' நூலை மனனம் செய்தல், ஆகியவையெல்லாம் யூத கலாசாரத்தின் வெறும் வரலாற்று அம்சங்களாகி விட்டன. யூதப் புனரமைப்பு இயக்கத் தலைவர்களும் இப்படியே கூறினர்; அந்த இயக்கம்தான் சமயக் கல்விப் பிரச்னையை விசேஷமான அறிவு நோக்குடன் கையாண்டது. ஆனால் யூத தேசிய வாதமும், பாலஸ்தீனத்தை யூதர் குடியேற்றமாக்க வேண்டு மென்ற கொள்கையும் வளர்ச்சியடைந்தபின், கல்வி முறைகளை இணைக்கும் திட்டத்தில் ஏமாற்றமடைந்த உலகியல்வாதிகள்கூட, ஹீப்ரு படிப்பு, 'தோரா' மனனம் யூதமதத்தின் முக்கிய அம்சங்கள் ஆகியவற்றிற்குப் புத்துயிரூட்ட வேண்டு மென்று சென்ற இருபது வருஷமாக உணரத் தலைப்பட்டு விட்டனர். சமய ரீதியில் இவை அவசியமானாலும், ஆகாவிட்டாலும், கல்வி ரீதியில் அவசியம் என்பதை உணர்ந்து விட்டனர்.

இப்பள்ளிகளால் சமய - அரசாங்க உறவுப் பிரச்னை எழவில்லை; ஏனென்றால் சமயத்திற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தமில்லை என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளத் தயாராக இருந்தனர்; ஆனால் அமெரிக்கக் கலாசாரத்திற்கு இவற்றால் பயனுண்டா என்ற பிரச்னை எழத்தான் செய்தது. இக் கேள்விக்குத் தகுந்த யூதரின் சமாதானத்தை ஜோஸப் ஹெச். லுக்ஸ்டீன் அளித்திருக்கிறார்; அது எல்லாச் சமய ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும். அமெரிக்க யூதர் கல்விச் சங்கத்தின் சார்பில் பேசிய ஹொரேஸ் எம். கால்லெனும் அது சம்பந்தமாக ஓர் எச்சரிக்கை விடுத்தார் : "தங்கள் பரம்பரை அறிவுச் செல்வத்தைப் பற்றிய மதிப்பீடுகள்தாம் தங்களுடைய

சக்திகள் சுதந்திரமாக வளர்வதற்கான சாதனங்கள் என்பதை யூதப் பெற்றோர்களும் குழந்தைகளும் உணரும் அளவுக்குத்தான் வெற்றி கிட்டும் என்று அறிய வேண்டும்'' என்றார்.

பொதுப் பள்ளி நேரத்தில், வாரத்திற்கு ஒரு மணி நேரத்தை, மதஸ்தாபனங்கள் அளிக்கும் சமயக் கல்விக்காக ஒதுக்கியதில் திரும்பவும் இதே பிரச்னை எழுந்து விட்டது. பொதுப் பள்ளிக் கட்டடங்களை இம்மாதிரியான காரியத்திற்காகப் பயன்படுத்தக் கூடாதென்று 1948-ல் நடந்த மாக்கல்லம் வழக்கில் உயர்நீதி மன்றத்தார் தீர்ப்பளித்து விட்டனர். இத்தீர்ப்பினால் திட்டம் பொதுவாக நின்றுவிடவில்லை; நியூயார்க் ராஜாங்க முறையை ஏற்றுக் கொண்டு அந்த நீதிபதிகள் தீர்ப்பளித்துவிட்டனர். இத்திட்டத்தின் சமய ரீதியான பயனைப்பற்றி மட்டுமின்றி, இது மத சுதந்திரமாகுமா, ஆகாதா என்பது பற்றியும் தீவிர அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. சமயப் பற்றில்லாத பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒருமணி நேரம் பாடம் பறிபோகிறதே என்று குறை கூறினார்கள். யூதர்களில் பெரும்பான்மையோர் பள்ளிப்பிள்ளைகளைச் சமய அடிப்படையில் பிரிப்பதை ஆட்சேபித்தனர்; இது சமய மார்க்கங்களுக்கு வலுவூட்டுகிற தென்றும், மதவித்தியாசம் பொதுக் கல்விக்குச் சம்பந்தமற்ற விஷயம் என்றும், இரு காரணங்களுக்காக ஆட்சேபித்தனர். இத்திட்டத்தைக் கத்தோலிக்கர்கள்தான் அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இந்த ஒரு மணி நேரத்தினால் சமயக் கல்விக்குப் பெரிய லாபம் ஒன்றும் ஏற்பட்டுவிட வில்லை என்று பிராடெஸ்டெண்டுகள் ஆட்சேபித்தனர். இத்திட்டம் இன்னும் பரீட்சார்த்தமாகவே இருக்கிறது; சமூகத்திலுள்ள பல பிரிவினரிடையிலும் இதுஒரே மாதிரியாக அமல் நடத்தப்படுவதில்லை. ஆனால் அடிப்படையான விஷயமொன்றை நடைமுறையில் இது எழுப்பி விட்டது. அதாவது : சமய வேறுபாடுகளையும் பூசல்களையும் அதிகப்படுத்தாமல், நாகரிகப் படுத்தும் சக்தி சமயம் என்ற அளவில், பொது மக்களை அதில் அக்கறை கொள்ளச் செய்ய முடியுமா என்பதுதான் கேள்வி. இரண்டு தீமைகள் காரணமாக இப்பிரச்னை சிக்கலாகி விட்டது : சமய அறிவின்மை, கல்வியறிவில்லாத சமயம் என்பவையே அத்தீமைகள்.

மேற்படிப்பு விஷயத்தில் சமயமே வழிகாட்ட வேண்டு மென்ற நினைப்பில்தான் அமெரிக்கப் பிராடெஸ்டெண்டுகள் பத்தொன்பதாம் நூற்றூண்டில் இருந்தனர்; ஆகையினுல் தான் இருபதாம் நூற்றுண்டில் நகரசபைக் கல்லூரிகளும் அரசாங்கச் சர்வகலாசாலைகளும் வளர்வதை அவர்கள் ஊக்கத்துடன் ஏற்றுக் கொள்ளவில்லை. சமயச் சூழ்நிலையில், சம நிலைப்பட்ட கல்வியை அளிப்பது, பொதுக் கல்வியுடன் சேர்த்து மதக் கல்வியையும் அளிப்பது என்ற ஆதி நோக்கங்களை மெய்ப்படச் செய்வது வரவரக் கஷ்டமாகி விட்டது. திட்டமான சமயச் சார்பில் தோன்றிய பல கல்லூரிகள் இப்பொழுது ஒளிவு மறைவற்ற உலகியல் தன்மை கொண்ட கல்லூரிகள் அல்லது கலைக் கல்லூரிகள் ஆகிவிட்டன; தங்கள் தேவாலய ஆதரவாளர்களின் நிதி உதவியையும் அவை எதிர் பார்ப்பதில்லை. சமயக் கல்லூரிகளில்கூட மதச் சூழ்நிலையும் பாடத் திட்டமும் வெகுவாகக் குன்றி வருகின்றன. பள்ளியிலுள்ள தேவாலயத்திற்குக் கட்டாயமாக வரவேண்டும் என்ற விதியை ஆட்சேபிக்கின்றனர். பைபிள் படிப்பும், அதைப் போன்ற இதர சமயப் படிப்பும் 'இஷ்டப் பாடங்க'ளாகி விட்டன; இஷ்டப்படுபவர்களும் அதிகம் இல்லை. மதச் சார்பில் நடைபெறும் பள்ளிகளில் போதிக்கப் பெறும் கல்வியில் சமயமும், அற ஒழுக்கமும் எவ்வளவு கலந்துள்ளதோ அதற்கும், மற்றப் பள்ளிகளின் கல்விக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதை விளக்க முடியா விட்டாலும்உணர முடிகின்றது; இந்த நிலையை வைதிகமான பெற்றோர்கள் சில சமயங்களில் கடுமையாகக் கண்டித்திருக்கின்றனர்; சர்ச் சம்பந்தமான குழாங்களிலும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆதி நோக்கங்களை நீடிக்கச் செய்ய வேண்டுமா, அல்லது திறமையான சமயக் கல்வி அளிப்பதற்குப் புதுமுறைகளைக் காண வேண்டுமா என்ற பிரச்னையைச் சமய ஸ்தாபனங்கள் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

உயர்தரக் கல்வி நிலை மோசமாகி விட்ட தென்று கருதிய பல செல்வாக்குள்ள பிராடெஸ்டெண்டு சமயக் கல்வியாளர்கள், கத்தோலிக்கர்களையும் யூதர்களையும் போல், பிராடெஸ்டெண்டு ஆரம்பப் பள்ளிகளையும் அமைத்துவிட வேண்டுமென்று கடைசியாக வற்புறுத்த ஆரம்பித்து விட்டனர்.

1937-க்குப்பின், ரோமன் கத்தோலிக்கப் பள்ளிகளைவிட லூதர் சர்ச். சீர்திருத்தப்பட்ட சர்ச், திரு அவதார ஏழாம் நாள் சர்ச், மென்னோனைட் சர்ச் ஆகிய ஸ்தாபனங்களிடையே அதிகப் பள்ளிகள் தோன்றியிருப்பதாகச் சர்வதேசசமயக் கல்விக் கவுன்சில் 1949-ல் தெரிவித்திருக்கிறது. ஆனால் பொதுப் பள்ளிதான் எல்லோருக்கும் பயன்படக்கூடிய தென்ற நம்பிக்கையைச் சர்வதேசக் கவுன்சில் வற்புறுத்தியேயுள்ளது; மதப் பற்றுடன் இருப்பதற்கும் மதப்பற்றில்லாமலிருப்பதற்கும் வித்தியாசம் இல்லாதது போன்ற நடுநிலை மனப்பான்மை வளர்வதைத் தடுக்கும் பொருட்டுப் பொதுப் பள்ளிக் குழுக்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தனர். இதற்கெதிராக, உலகியல் கல்வியாளர்கள் மதஸ்தாபனங்களைக் குற்றம் சாட்டினர்; ஞாயிறுப் பள்ளிகளுக்கு இளைஞர்களைத் தங்களால் இழுக்க முடியாமல் போய் விட்டபடியால், பொதுப்பள்ளி நேரத்தை அவர்கள் கோரத் தொடங்கி விட்டார்கள் என்றும், தற்காலத்திய அமெரிக்க வாழ்வுடன் சமயத்தை இணைக்கத் தவறி விட்டார்கள் என்றும் குற்றம் சாட்டினர்.

ஞாயிறுதினப் பள்ளிகள் நவீனப்படுத்தப்பட்ட பிறகும் கூட, சமயக் கல்விக்கான பொதுக் கோரிக்கையைச் சரியாகத் திருப்தி செய்ய இயலவில்லை. இந்தக் கருத்துத்தான் பொதுப் பள்ளி நேரத்தில் ஒரு மணி நேரத்தை ஒதுக்குவதற்குப் பெரும் ஆதரவாக இருந்தது. நூற்றுண்டின் ஆரம்பத்தில் இவை வெறும் பைபிள் பள்ளிகளாகவே இருந்தன. பைபிள் கதைகள், விளக்கங்கள் இவற்றுடன் பாடத் திட்டம் முடிந்து விட்டது; ஞாயிறுதினப் பள்ளியில் பாடும் தேவகீதங்களும் இசையிலும், சமயக் கருத்திலும் 'மட்ட ரகமாகவே' அமைந்திருந்தன. இந்த நூற்றுண்டின் முதல் கால் பகுதியில் சமய மார்க்கக் கல்வியாளர்கள் எடுத்துக் கொண்ட ஒருமித்த பெரு முயற்சிகளின் காரணமாக ஞாயிறுதினப் பள்ளிகள் சமயக் கல்விக்கான பல படிகளாக அமைந்த நல்ல கருவிகளாகி விட்டன. 1903-ல் இதில் முதலில் அக்கறை கொள்ள ஆரம்பித்தவர்கள் "சமயக் கல்விச் சங்க"த்தார்; 1922-ல் அக்கறை காட்டியவர்கள் "சர்வதேசச் சமயக் கல்விக் கவுன்சில்." குறிப்பிட்ட முறையில் அமைந்த பாடப் புத்தகங்களும் தயார்

செய்யப்பட்டன; பாலர் முதல் முதியோர்வரை வயதுக்குத் தக்க நிலையில் சமய, அறப் பிரச்னைகளை விவாதித்தல், சமய ஸ்தாபன வரலாற்றின் முக்கியப் பகுதிகளை அறிதல், சமய ஸ்தாபன ஒழுக்க இயல், சமூகப் பிரச்னை ஆராய்ச்சி ஆகிய விஷயங்களும் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. இசையில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டது; இருந்தாலும் மொத்தத்தில் நுண்கலை கவனிக்கப்படவில்லை. உத்தியோகப் படிப்புக்கான உலகியல் கல்வி முறைகளும் அளவைகளும் இப் பள்ளிகளில், சமயத் துறையிலும் சமயவளர்ச்சிக்கான மன இயலிலும், கையாளப்பட்டன். ஆசிரியர்களுக்குத் தங்கள் தொழில் ரீதியான பயிற்சி அளிக்கவும் விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டன. சில தேவாலயங்களில், குறிப்பாக குருமார்களால் நிர்வகிக்கப்பட்ட தேவாலயங்களில், தேவாலய உறுப்பினர்களுக்கான பயிற்சிக்கு முக்கியத்வம் கொடுக்கப் பட்டது. (கல்வித் திட்டத்தில் பைபிளுக்கு இருந்த ஸ்தானத்தைத் தேவாலயத்திற்கு அளித்து விட்டனர்.) ஆனால் பெரும்பான்மையான தேவாலயத்தார் பிள்ளைகள் இளமைப் பருவம் எய்தும் காலத்திலியேயே சமய ரீதியான பயிற்சி பெற வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர்; பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்தார் குறிப்பிட்ட மனமாற்றத்திற்கும் நெகிழ்ச்சிக்கும் பதிலாகத் திறமையான, அறிவு ரீதியான, மாற்று முறை ஒன்றை உருவாக்க முயன்றனர். மதக் கல்விக்கான இம்முழுத்திட்டம் இன்னும் அமுலிலிருக்கிறது. ஆனால் நூற்றாண்டின் இரண்டாம் கால் பகுதியில் இது ஓரளவு தேய்ந்து விட்டது. எந்த அளவுக்குத் தேய்வு ஏற்பட்டிருக்கிறதென்று நிர்ணயிப்பதும் கடினம்; அதற்கான காரணங்களை நிர்ணயிப்பதும் கடினம்; ஏனெனில், 1947-முதல் குறிப்பாக பிராடெஸ்டெண்டு அல்லாத பள்ளிகளில் முன்னேற்றம் தென்படுகிறது. சமயக் கல்வித் திட்டம் சக்திக்கு மீறிய பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் விளைவாக இருக்கலாம்; அல்லது ஆரம்பக்கால ஊக்கம் குன்றியதின் விளைவாக இருக்கலாம். விளைவுகளைக் காணும் பொழுது, இவ்வளவு விரிவான ஸ்தாபனங்களும் விசேஷத் தொழில் ரீதியான பயிற்சிகளும் நியாயமானதென்று படவில்லை. 1930-ல் ஏற்பட்ட நிதிமந்தத்தால், சிக்கனத்தைக் கையாள வேண்டி

வந்து விட்டது. பின்னுல் ஏற்பட்ட பண வீக்கமும் தருமங்களின் நிதி நிலைமையைப் பாதித்து விட்டது. இவ்விதக் கல்வியால் எதிர்பார்க்கப்பட்ட பயன் ஏற்படவில்லை; சாதாரண மக்களின் தலைமையும் எதிர்பார்க்கப்பட்டபடி ஏற்படவில்லை. முதல் அத்தியாயத்தில் கூறியது போல், தேவாலயங்களுக்கு மக்கள் செல்வது குறைந்த போது, ஞாயிறு தினப்பள்ளிகளுக்குப் பிள்ளைகள் வருவதும் குறைந்து விட்டது. ஆனுல் இந்த வெளிக் காரணங்களுக்கெல்லாம் அடிப்படையாகச் சில சமயப் போக்குகள் இவ்வியக்கத்தில் சிக்கிக் கிடந்தன. படிப்புத் திட்டத்தைச் சீர்திருத்துவதற்காகச் சமய அனுபவத்தைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட பரந்த கருத்து, பைபிளைப்பற்றிய அறியாமையை அகற்றுவதற்குப் பதிலாக, பைபிளைப் பற்றிய தவமுன மனப்போக்கைப் பரப்பி விட்டது; பைபிள் அறிவு அவ்வளவு முக்கியமன்று என்ற எண்ணம் உண்டாகி விட்டது. மதக் கல்வியையும் பொதுக் கல்வியையும் இணைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பைபிள் விமர்சன முறையும், பைபிளின் பிரமாணத்தைப் பற்றிய நிதானவாதமும்தான் ஞாயிறு தினப்பள்ளிகளில் படித்த தலைமுறையினருக்கு அவற்றில் பிடிப்பு ஏற்படாத்ததற்குக் காரணமாகிவிட்டன. எவ்வளவுக் கெவ்வளவு சமயம் வாழ்வுடன் பிணைந்ததோ, அந்த அளவுக்குச் சமயமார்க்கத்திற்கான தனிச் சிறப்பை இழந்து விட்டது; சமயக் கல்வி என்ற பிரச்னை ஞாயிறு தினப்பள்ளிகளிலிருந்து பொதுப்பள்ளிகளுக்கு மாறிவிட்டது. சமயத்தைப் பொதுக் கல்விப் பாடங்களில் நன்ருகப் பயில வேண்டி வந்தது. இவ்விதமாகச் சமயத்தைப் பற்றிய அறிவு சமயப் பயிற்சியை விரட்டும் நிலையை உண்டாக்கி விட்டது; பரந்த தன்மை கொண்ட சமயக் கல்வியின் வளர்ச்சிக்காகச் சமயம் விட்டுக் கொடுத்ததெல்லாம் (ஞாயிறு தினப்பள்ளிக்கு இவையே ஆதாரம்) உலகியல் பான்மை கொண்டு நிலைத்து விட்டன.

ஞாயிறு தினப்பள்ளிகளால் இச்சமயக் கல்வித் தேவையைத் திருப்தி செய்ய முடியாமல் இருந்ததற்கு இதுதான் காரணம் என்று ஒப்புக் கொண்டாலும், பிரச்னைக்குத் தெளிவான தீர்வு தெரியவில்லை. இதற்காக மூன்று பொதுச் சீர்திருத்த யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன :

1. சமயத்தையே பெரிதாக மதிக்கும் தேவாலயங்கள் இப்பொறுப்பைக் குடும்பத்தின் மீது சுமத்துகின்றன. வீட்டைச் சேர்ந்த இயற்கையான பிரச்னைக்குப் பள்ளிகள் எப்படி வழி செய்ய முடியும்? "குடும்பத்தில் வாரம் முழுவதும் கிடைக்கும் சமயக் கல்விக்கு அழுத்தம் கொடுத்து மெருகேற்றும் ஸ்தாபனமாகத்தான் ஞாயிறு தினப்பள்ளி இயக்க முடியும்...நவீனக் குடும்பங்கள் செய்யத் தவறுவதற்கு ஞாயிறு தினப்பள்ளிகள் வலிமை ஊட்ட முடியாது.

கத்தோலிக்கர்கள் இக் குறிப்பான யோசனையைக் கூறுகின்றனர் :

"குழந்தைகள் கடவுள் பக்தியுடன் வளர்வதற்குப் பெற்றோர்கள் ஆரம்பத்திலேயே வழி காண வேண்டும். இது பள்ளி அதிகாரிகள் வளர்க்க வேண்டியதென்று ஒத்திவைக்கக் கூடிய விஷயமன்று. எளிய பிரார்த்தனை வழக்கங்கள் மூலம் இதை வீட்டில் தொடங்க வேண்டும். காலை மாலைப் பிரார்த்தனை, உணவுக்கு முன்பும் பின்பும் கடவுள் வாழ்த்து, வீட்டில் ஜபம், கடிகார மணி அடிக்கும் பொழுதெல்லாம் சிறு பிரார்த்தனை, பயபக்தியுடன் சிலுவைக்குறி செய்தல், சிலுவையில் அறைந்த ஏசுவுக்கும் மற்ற பூசனைக்குரிய பொருள்களுக்கும் மரியாதை—ஆகிய எல்லாப் பழக்கங்களையும் குழந்தையின் சமயப் பயிற்சி ஆக்கிவிட வேண்டும்...ஏசுநாதர் வாழ்வில் காணும் தெய்விகப் போக்குகளைப் பெற்றோர் பயன்படுத்தட்டும் அவரைப் போலிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை, குறிப்பாகக் கீழ்ப்படிதல், பொறுமை, தயை என்ற அவர் பண்புகளைப் பெற வேண்டும் என்ற எண்ணத்தை வளர்க்கட்டும். தன்னலம் கருதாது தானமளிக்கும் ஏசுநாதருடைய தனிப் பண்பை மேற்கொள்ளும்படி செய்யட்டும். நடைமுறையில் இவற்றைப்பல விதத்தில் செய்யலாம்; தியாகம் செய்வதற்கான பல சந்தர்ப்பங்களைக் குழந்தைகளுக்குக் குடும்பத்தில் உண்டாக்கலாம்..." என்னிடம் "அன்பு கொள்வாயானால், என்னுடைய கட்டளைகளின் படி நட." அதுதான் ஏசுநாதரின் உரைகல்; குழந்தைகள் விஷயத்தில் அதை அமலாக்க வேண்டும். கடவுளின் கட்டளைகளும் போதனைகளும் செல்ல வேண்டிய பாதையைத் தவ

ருது காட்டும் கை காட்டிகள் என்ற எண்ணம் வளரும்படி குழந்தைகளை வளர்க்க வேண்டும்.''

இம்மாதிரியான யோசனைகளைக் கண்டு தற்காலத்திய பெற்றோர்கள் சிரிப்பார்கள். கல்வியாளர்கள் வேதனைப்படுவார்கள். அறத்தைப்பற்றியும் மதக் கல்வி சம்பந்தமாயும் யோசனை கூற இயற்கையான அதிகாரிகள் தாங்கள் தான் என்று பாதிரிமார்கள் நினைப்பதாக நிலவும் அபிப்பிராயம் வலுப்படும். குடும்ப வாழ்வைச் சமய அதிகாரிகளின் கட்டளைகளுக்கு உட்படுத்தும் பெற்றோர்களின் மனப்பான்மையே சமயக் கல்வியின் பொறுப்பை உத்தியோக முறையில் பயிற்சி பெற்ற கல்வி நிபுணர்கள் மீது சுமத்தும்படி செய்து விடுகிறது. எப்படியிருந்த போதிலும், தற்காலத்திய சூழ்நிலையில், பழைய தலைமுறையினரின் சமய அனுஷ்டானங்களை சமயத் தலைவர்களின் கட்டளைக்காக இன்று குடும்பங்களில் புகுத்திவிட முடியாது. பாதிரிகள் குறிப்பிடும் தெய்வீகத் தன்மைகள் பயன் விளைவிக்க வேண்டுமானால், வழிபாட்டுக்கான இயற்கையான சூழ்நிலை வீட்டின் கலாசாரமாக உருவாக்கப்பட வேண்டும். குடும்ப அனுஷ்டானங்களை நடைமுறையில் திரும்பக் கொண்டுவர முடியுமோ முடியாதோ, குடும்ப வாழ்வு உலகியல் மயமாகிவிட்ட நிலையில், சமயக் கல்விப் பிரச்னை புரட்சிகரமாக மாறிவிட்டது என்னவோ உண்மை. ஒரு சமய மரபுக்கும் அந்தச் சமூகத்திற்கும் உட்பட்ட கல்வி முறைக்கும் கிறிஸ்தவரல்லாதாரின் கல்வி முறைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இருவகையிலும் சில குருட்டு எண்ணங்களை வீழ்த்த வேண்டியிருக்கும்; ஆனால் அவை எதிரிடையான குருட்டு எண்ணங்கள்; பின் வகையில் சமய அறியாமை, முன் வகையில் எழுத்தறிவற்ற சிறுபிள்ளைத்தனமான சமயம். எப்படியானாலும் உண்மையான நெருக்கடிவரும், அல்லது கல்வி இராது.

2. தேவாலயங்களின் கல்வி வசதிகளையும் திட்டங்களையும் விரிவாக்க வேண்டுமென்று மற்றொரு யோசனை கூறப்படுகிறது. தற்போதைய ஞாயிறு தினப்பள்ளி ஸ்தாபன அமைப்புக்குள்ளேயே கல்விக்கு அதிகநேரம் ஒதுக்கும் முயற்சி ஊக்கமளிப்பதாக இல்லை. ஞாயிறு தினத்தில் குழந்தைகளை ஒரு மணி நேரத்திற்கு மேல் இருத்தி வைப்பது கடினம்; ஞாயிறு

தினப்படிப்பை வார முழுவதற்கும் புகுத்துவது இன்னும் கடினம். தினசரி ஒய்வுநேர வேதாகமப் பள்ளிகளே நடைமுறையில் வெற்றிகரமாக இருக்கின்றன; குழந்தைகளையும் பெற்றோர்களையும் அது கவர்ந்திருக்கிறது. வாரத்திற்கு ஒரு மணி நேரம் சமயப் படிப்பு என்ற யோசனையை ஆதரிக்கும் சமயக் கல்வியாளர்கள், வாரத்திற்கு ஒரு மணி என்பது வாரத்திற்கு ஒரு பிற்பகலாக உயரும் என்று நம்புகிறார்கள்; இவ்விதமாக இடத்திற்குத் தக்கவாறு சமயக் கல்வியின் கேந்திரங்கள் அமைந்து விடும் என்று நம்புகிறார்கள்.

3. ஆரம்பப்பள்ளிகளோ, ஞாயிறு தினப்பள்ளிகளோ, குடும்பமோ இப்பிரச்சனையைத் தீர்க்கமாட்டா. கல்லூரிகளில்தான் இப்பிரச்னையைத் தீர்க்க முயல வேண்டும் என்று மற்றொரு சாரார் கூறுகின்றனர். இந்தக் கட்டத்தில் பிரச்னையைச் சமாளிப்பது என்பது முடியாத காரியம்; அந்தச் சந்தர்ப்பமே அந்த மாதிரியானது என்பது தவிர, ஆதிக்கியம் பெற பல உத்தியோகங்கள் போட்டியிடுகின்றன என்பதும் காரணமாகும். சமயக் கல்வி தடை செய்யப்பட்டுள்ள பொதுக் கல்லூரிகள், சர்வகலாசாலைகள் தவிர, தனியார் கலைக் கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் சமயத்தைப்பற்றிய படிப்புக்கும் சமயபோதனைக்கும் வேறுபாடுகற்பிக்கின்றன; சமயத்தைப்பற்றிய பல துறைப்பாடங்களுக்கு ஏற்பாடு செய்கின்றன, கல்லூரிப் பட்டங்களுக்கான படிப்பாக இவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன; ஆனால் சமய போதனை அப்படி ஏற்கப்படுவதில்லை; எனவே கல்லூரி மைதான ஓரத்தில், பாடத்திட்டத்தின் எல்லைப் பகுதியாகத் தேவாலயத் தரும ஸ்தாபனம், பைபிள் ஆராய்ச்சித்துறை, சமய நிலையங்கள் என்ற வசதிகள் மூலம் பயிலப்படுகின்றன. இந்த நிலையை மம்போர்ட் ஜோன்ஸ் அழகாக எடுத்துரைத்திருக்கிறார்:

" 'சமயம்' என்ற சொல்லைக் குறித்த பொருளின்றித் தெளிவில்லாமலே சாக்கிட்டுக் கொண்டு நடைமுறையின் பல சமரசங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. சமய ஆசார சாஸ்திர போதனைக்காக ஒரு துறை கூடாதென்ற தடை அரசாங்கச் சர்வகலாசாலைக்கு இருந்தாலும், சமயங்களை ஒப்பு நோக்கும் துறையை அமைப்பதால் யாருக்கும் தொந்தரவு கிடையாது. இரண்டோர் இடங்களில் தொல்லை ஏற்பட்ட

போதிலும், இந்த மாதிரி போதனையை ஒழுக்க முறை பற்றிப் போதிக்கும் திறமையுள்ள ஆசிரியரோ, தத்துவத்துறைப் பேராசிரியரோ, சரித்திரத்துறை, மனித இயல் துறைப் பேரா சிரியரோ செய்து விடலாம். சில சமயங்களில் "இலக்கியம் என்ற ரீதியில் பைபிள்", "மனிதவர்க்கத்தின் மகா வேதங் கள்" போன்ற தலைப்புடன் ஆங்கிலத்துறையில் இது மறை முகமாகப் புகுத்தப்படுகிறது. இதே மாதிரி நெறி, சமூக வளர்ச்சி இயல், சமூகப் பிரச்னைகள், இலக்கியம் ஆகிய துறை களிலும் 'நாசூக்காக' சமயம் போதிக்கப்பட்டு வருவதாகக் கருதலாம். இம்மாதிரியான போதனை இருவித நல்ல பயன் களை விளைவிக்கின்றது; திகைத்திருக்கும் கல்லூரி மாணவர் களுக்குத் தெளிவு தருகிறது; சர்வகலாசாலை நாத்திகத்தின் உரமிடப்பட்ட வயலல்ல என்ற நம்பிக்கையைத் தேவாலயங் களுக்கு அளிக்கிறது. சமயங்களை ஒப்பு நோக்கும் துறை சம யத்தைப் பற்றி ஸ்தூலமான பொருள்களைப் போல் போதனை செய்கிறது; ஆனால் சிந்தனையிலும் நெறியிலும் எந்தவிதமான நேரிடையான ஆட்சி செலுத்த வேண்டுமென்று சமய மார்க் கங்கள் விரும்புகின்றனவோ அந்த விளைவை ஏற்படுத்து வதில்லை.

சர்க்கார் செலவில் சமய ஆலோசகர் ஒருவரை நியமிப்ப தென்று மற்றொரு யுக்தி; அன்பும், நடுநிலை மனப்பான்மையும் கொண்ட அவ்வாலோசகர் சர்வகலாசாலைக்கும் சமய மார்க் கங்களுக்கும் தொடர்பு அமைக்கும் அதிகாரியாக விளங்கு வார் என்ற யோசனை......

ஆனால் சர்வகலாசாலை மாணவர்கள் தங்கள் பிரச்னை களைச் சமய ஆலோசகரிடம் தெரிவிப்பார்கள் என்று கூறிவிட முடியாது. முதலாவதாக, ஆலோசகர் எல்லோருக்கும் எல்லா முமாய் இருக்க வேண்டும்; அதாவது கத்தோலிக்கர்கள், பிரா டெஸ்டெண்டுகள், யூதர்கள், மத நம்பிக்கை அற்றவர்கள் முதலியவர்களிடையே நடுநிலைமை வகிக்க வேண்டும். இதுவே முடியாத காரியம். அடுத்தபடியாக அவர் நடுநிலை வகித்தா லும், அம்மாணவரின் தேவாலயத்தை மனத்தில் கொண்டு, பிரச்னையை ஒருமுகப்படுத்தத்தான் முடியும்; இத்தகைய ஆலோசகரைக்கூட விட்டு விலகத்தான் சில சமயம் மாண வன் பார்க்கிறான். முடிவாக, பெரிய விற்பன்னர்கள் இருக்

கும் இடத்தில் சமய ஆலோசகர்களால் பெயரெடுக்க முடிவதில்லே; ஏனென்ருல் மெய்ஞான, விஞ்ஞானச் சர்ச்சைகள் பலமாக இருக்கும்; தவிர இதுவரை இந்தப் பதவி எந்தப் பெரிய மேதையையும் ஈர்க்கவில்லே; கல்லூரி மாணவனுக்கு ஏதேனும் பிரச்சனே எழுந்து முதியவரை நாட நேர்ந்தால், அவன் அனுதாபமுள்ள தன் பேராசிரியர்களேயே அடைந்து மன வேதனேயைத் தெரிவித்துப் பரிகாரம் தேடுகிருன்.

இந்தப் பிரச்னேயைத் தீர்க்கச் சர்வகலாசாலேகள் கையாளும் முக்கிய வழி இந்த இரண்டுதான். பலவகைச் சமய மார்க்கங்களும் நேச முறையில் பிரச்னேயை அணுகத் தொடங்கின. மாணவ மதபோதகன் ஒருவனே அருகிலுள்ள தேவாலயத்திற்கோ, யூதர்கோயிலுக்கோ நியமிப்பதென்பது இந்த முறை......அநேக சர்வகலாசாலே மைதானத்திற்குப் பக்கத்தில், குறிப்பாகத் தெற்கே, பைபிள் துறை ஒன்றைச் சேர்ந்த கட்டடங்களேக் காணலாம். கல்லூரி மாணவர்களேக் கவரும் சமய சித்தாந்தம், பைபிள் அறிவு, சமயம் ஆகிய விஷயங்களேப் போதனே செய்து, சர்வகலாசாலேப் படிப்புத் திட்டத்துடன் அறிவுநிலேயில் போட்டி போடக் கூடிய திறன்படைத்த தம்மதத்தவர் ஒருவருக்கு அச்சமய மார்க்கத்தவர் ஆதரவு தருகிருர்கள் என்று இதற்குப் பொருள். கட்டடம் அம்மதப்பிரிவினருக்குச் சொந்தமானதாக இருக்கலாம், அல்லது வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கலாம். இப் படிப்பெல்லாம் பாடத்திட்டத்திற்குப் புறம்பானவை. எந்தக் கல்லூரியும் பெருமைப்படுத்தாத இத் துறை நீடிப்பதற்குப் போதகாசிரியன் அந்தரங்க சுத்தியும், கல்லூரி மாணவர்களின் ஆன்ம சோதனேயும் தான் காரணம்.........

இதற்கெதிராக, தேவாலயமோ, புனிதக்குருமார்களோ, திருப்திப்படுத்த முடியாத அளவுக்கு அறிவுப் பசியை மாணவர்கள் பெறும்படி சர்வகலாசாலே செய்து விடுகிறது. நிபுணர்களின் உரையைக் கேட்டுப் பழகிய மாணவர்களுக்கு கத்தோலிக்க, பிராடெஸ்டெண்டு யூதமதச் சொற்பொழிவுகள் திருப்தி அளிப்பதில்லே. சிந்தனேயே தொழிலாகக் கொண்டவர்களிடம் பெற்ற பயிற்சிக்குப் பிறகு ஞாயிறு தினப்பள்ளி மேற்பார்வையாளரின் நல்லறம் பற்றிய பேச்சு சாரமற்றதா

கப்படுகிறது. அமெரிக்க உயர்தரப் படிப்பு ஸ்தாபனங்களில் படிக்கும் பட்டப் படிப்பு மாணவர்களின் கவனத்தைக் கவர வேண்டுமானல், தேவாலயங்களே அறிவு நிலையில் விழிப் படைய வேண்டும், சர்வகலாசாலைகள் அல்ல. சில குரு மார்களுக்கும் தேவாலயங்களுக்கும் இவ்வுண்மை தெரிகிறது; ஆனல் பெரும்பான்மையான தேவாலயங்கள் இதை உணர்வதில்லை.

சமய ஸ்தாபனங்களுக்கு அரசியல் வாதிகளும் இப்பிரச்னையைப்பற்றி முழுதும் உணர்ந்தாலும், உணராவிட்டாலும், சமயத்தைப்பற்றிய அறிவுக்கும் சமயம் புகட்டும் அறிவுக்குமுள்ள சம்பிரதாயமான முரணை நீக்க வேண்டுமென்று உத்தியோக முறையில் கல்வியாளரின் பயிற்சி பெற்ற சில சித்தாந்திகள் நினைக்கின்றனர். இம்முரணைப் போக்கும் இலக்கில் தான் சித்தாந்தமும் சித்தாந்தத்தை நோக்கிய போக்கும் சென்று கொண்டிருக்கின்றன. உதாரணமாக ஒரு பேராசிரியர் பின்வருமாறு எழுதுகிருர்; அதைப் பலரும் ஆமோதிப்பர் :

"கல்லூரி மதபோதகர்களில் பலர் குருமார் பயிற்சிப் பள்ளிகளிலும் பட்டப் படிப்புப் பள்ளிகளிலும், சமயக் கொள்கைகளை நோக்கித் திரும்புமுன், படித்தவர்கள். எனவே அவர்கள் போதனைக்கும் தற்காலத்திய கிறிஸ்தவச் சிந்தனை முன்னணியாளர்களின் போதனைக்கும் இடையே கலாசாரத் தேக்கம் ஒன்று தெரிகிறது......தவிர விஞ்ஞான ரீதியான புற நிலை நோக்குடன்தான் சமய போதனை செய்ய வேண்டுமென்றும் இதர கல்வி இலாகாக்கள் எதிர்பார்க்கின்றன. எனவே வேறு விதமாக நடக்க வேண்டுமென்று சொந்தத்தில் அவர்கள் நினைத்த போதிலும், தங்கள் சக ஊழியர்களின் கருத்துக்கிணங்க, வரலாற்று ரீதியில், ஒப்பு நோக்கும் தன்மையில், மதபோதனை செய்யும்படி நேருகின்றது; அதுவும் பலமத ஒப்பு நோக்குதலில் அக்கறையுள்ள திறமை வாய்ந்த புதுச் சமய ஆசிரியர்கள் கல்லூரிகளுக்கு கிடைக்காத நிலையில்.

சமயக் கல்வியையும் விஞ்ஞான ரீதியாகச் சமயத்தைப் பற்றிப் படிப்பதையும் பொருந்தச் செய்வது என்பது ஸ்தாபனப் புத்தமைப்பு முறையைச் சார்ந்த பிரச்னை என்பதை விட அறிவைத் திருத்தி அமைத்துக் கொள்ளும் பிரச்னை என

லாம். சமயத்தைக் கல்வி ஸ்தாபனங்களிலும் சமய ஸ்தா பனங்களிலும் அறிவுக்கு ஒத்தபடி, பக்தியுடன், விமர்சனக் கண்கொண்டு ஏன் பயில முடியாதென்று தெரியவில்லை; மனிதவர்க்கத்தைப் பண்படுத்தும் சக்திகளில் சமயம் ஒன்று என்ற கருத்தை ஏற்றால் சமயத்தால் கல்விக்குப் பயனுண்டு. மனித நாகரிகத்தை வளர்ப்பதில் அதற்குண்டான ஸ்தாப னத்தை சமயம் இழந்து விட்டால், எந்தக் கல்வியும் அதைக் காப்பாற்ற முடியாது. மதம் பொதுச் சேவையாக இருக் கும் வரையில்தான் சமய அறியாமை பொதுத் தீமைகளில் ஒன்றாகும். சமய ஸ்தாபன விரோதிகளின் அறியாமை, நாக ரீகத்திற்குப் பொருத்தமாகத் த்ங்கள் சமயத்தை விளக்கத் தெரியாத வெறியர்களின் கூற்று ஆகிய இருவகையும் சமயத் தின் ஜீவதயைக்கும் கல்விப் பயனுக்கும் ஆபத்து விளைவிக்கின் றன. தேவாலயங்கள் உலகைப்பற்றிக் குறை கூறினால் விமோ சனமளிக்கும் சக்தி தங்களுக்கு இருந்தாலொழிய, தேவால யங்களின் பரதத்துவப் போக்கை யாரும் மதிக்க மாட்டார் கள். அதாவது பள்ளியும் தேவாலயமும் அரசாங்கமும் உண் மையில் கூட்டுறவு கொள்ள வேண்டும்; அதிகாரத்திலோ அற ஆதிக்கியத்திலோ ஏகபோக உரிமை கொண்டாட முய லக் கூடாது.

சமயப்பிரசார ஸ்தாபனங்கள் வெளி நாட்டுச் சமயப் பிர சாரத் துறையில் ஏற்பட்டிருக்கும் ஸ்தாபன முறையான மாறுதவ் பற்றி இங்குப் பேச முடியாது. ஸ்தலப் பிரசார ஸ்தாபனங்களில் ஏற்பட்டிருக்கும் மாறுதலைத் தவிர அமெ ரிக்காவினுள், மதப்பிரசாரப் பான்மையிலும் ஸ்தாபன அமைப்பிலும் ஏற்பட்டிருக்கும் மாறுதல்பற்றித்தான் இங்கே கவனிக்க முடியும். அமெரிக்கக் குடியேற்ற நாடுகளெல்லாம் ஆதியில் சமயப் பிரசாரத்திற்கான பண்ணைகளாகவே இருந் தன; 1908-ம் ஆண்டு வரை அமெரிக்காவையே ரோமன் கத் தோலிக்க ஸ்தாபனம் தன்னுடைய பிரசார மண்டலமாகத் தான் கருதி வந்தது.

உள்நாட்டு மதப் பிரசார ஸ்தாபனத்தையும் வெளி நாட்டு மதப்பிரசார ஸ்தாபனத்தையும் இணைக்க 1921-முதல் எவ்வளவுதான் சமயப் பிரசாரக் கல்வி இயக்கம் முயன்ற போதிலும், இவைகளுக்கிடையே உள்ள போட்டியைத்

தவிர்க்க முடியவில்லை. ஒரு நூற்றுண்டுக்கு மேற்பட்டகால மாக வெளிநாட்டுப் பிரசார மண்டலங்கள் பிராடெஸ் டெண்டு மார்க்கத்தவரின் ஆதரவைப் பெற்று வலுத்து வரு கின்றன. குறிப்பாக இந்தியா, சீனு, ஜப்பான் போன்ற நாடு களில் அமெரிக்கப் பொருளாதார அரசியல் அக்கறைகள் வளர்வதற்கு முன்னமேயே, அமெரிக்கச் சமயப் பிரசார வேலைகளும் முதலீடும் வலுத்து விட்டன. உலகியல் அக்கறை களும் சாம்ராஜ்யப் போக்குகளும் அமெரிக்கப் பிரசார ஸ்தா பனங்களுக்குப் புதிய மண்டலங்களைக் காட்டிய பொழுது, சமய ஸ்தாபனங்கள் அவ்வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. ஆனுல் கிறிஸ்தவ சமயத்திற்குப் புறம் பான சமயங்கள் நிறைந்த இந்தியா, சீனு, இருளடைந்த ஆப் பிரிக்கா ஆகிய நாடுகள், பத்தொன்பதாம் நூற்றுண்டிலும், இருபதாம் நூற்றுண்டிலும், நல்ல பிரசார மண்டலங்களாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்க பிரமாதமான விஷயம். கிறிஸ்துவ மதத்தைசாராதவர்களின் பயங்கர நிலையை நாடக ரசனையுடன் பிரசாரம் செய்வது ஜனரஞ்சகமானதாக இருந்த போதிலும், இன்றும் பிரசாரங்களில் அதே முறைகள் கையாளப்பட்டு வந்த போதிலும், அறிவுக்கு ஏற்ற பிரசார முறைகளுக்கு அதை கொஞ்சம் கொஞ்சமாக அடங்க ஆரம் பித்து விட்டன. 1893-ல் நடைபெற்ற வட அமெரிக்க அந்நிய நாட்டு மதப் பிரசார மகாநாடும், 1910-ல் நடைபெற்ற எடின்பரோ மகாநாடும் 1921-ல் நடைபெற்ற சர்வதேச மத போதனைக் கவுன்சிலும் உலகளாவிய கத்தோலிக்கப் பிரசார ஸ்தாபனத்தைச் சேர்ந்த அமெரிக்கக் கத்தோலிக்கர்களும் பிரசார நடவடிக்கைகளை ஒழுங்காகவும், ஆக்க ரீதியிலும், அறிவுக்கு ஒத்தபடியும் செய்ய வழி கண்டனர்; சாதாரண மக்களுக்கு இப்பிரசாரத்திலுள்ள அக்கறை குறையாமலும் பார்த்துக் கொண்டனர்; ஏனென்றுல் அந்நிய மண்டல வேலை களுக்கான ஆதரவு முடிவில் சாதாரண மக்களிடமிருந்து தானே வந்தது. ஆனுல் சென்ற இருபது ஆண்டுகளில் ஸ்தா பன ரீதியாக்கப்பட்ட பிரசார வேலையும், சமயப் பிரசார அபிமானமும் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகி விட்டன.

முதல் நெருக்கடி 1920-ல் நேர்ந்தது. பிரசார உற்சாக மும் அதன் மீதெழுந்த திட்டமும் 1919-20-ல் சர்வதேவாலய

உலக இயக்கமாக உருப் பெற்றது. முதலாவது உலக யுத் தத்திற்கு நிதி திரட்டி உதவியவர்களும், யுத்தக் கடன்களை வெளியிடும் முறையில் அனுபவம் பெற்றவர்களுமான சமயத் தலைவர்கள் நாட்டின் அற வசதிகளையும், நிதி வாய்ப்புக்களை யும் ஆக்க வேலைகளுக்காகத் திரட்ட 1918-ல் கூடினர். மெதா டிஸ்டுகள் தலைமையில் அநேக சமயமார்க்க உலக இயக்கங்கள் இணைக்கப்பட்டன. சர்வதேவாலய உலக இயக்கத்தின் சார்பில் 1919-ல் பிரசாரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சம யப் பிரசாரம், கல்வி, முதலிய பணிகளைச் செய்து வரும் அமெ ரிக்க ஸ்தாபனங்களும், கானடா ஸ்தாபனங்களும் இணைந்து தங்கள் வேலையைச் செய்வதற்கான ஆள் பலத்தையும் நிதி வசதிகளையும் கூட்டாகப்பெற ஏற்பாடு செய்தன.

சர்வதேவாலய உலக இயக்கத்தின் நோக்கங்களைப்பற்றி வெளியிடப்பெற்ற அறிக்கையில் பெரிய அளவில் நிறைவேற்ற வேண்டிய வேலைகளைப் பற்றியும், ஏராளமான பணச் செலவு ஏற்படக்கூடிய திட்டம் பற்றியும் விவரிக்கப்பட்டிருந்தன. விரிவான பெரிய காரியாலயங்கள் அமைக்கப்பட்டன; பிரா டெஸ்டெண்டு மார்க்க வேலைகள் பெரிய வாணிப ஸ்தாபன ரீதியில் அமைக்கப்பட்டன. இயக்கம் தொடங்கியவுட னேயே, யுத்த காலத்துத் தீவிர நடவடிக்கைகளை எதிர்த்து வந்த சூழ்நிலை எதிர்ப்பாக இருந்ததுடன், போதிய நிதிவசதி யும் இல்லாமற் செய்து விட்டது. திடீரென்று இது தோல்வி அடைந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு; இதனுடைய குழுக்களில் ஒன்று, பிஷப் பிரான்ஸிஸ் ஜே. மாக்கானெல் தலை மையில், 1919-ம் வருஷத்திய உருக்குத் தொழில் வேலை நிறுத் தத்தைப்பற்றி அறிக்கையை வெளியிட்டது; அறிக்கை தொழிலாளருக்குச் சாதகமாக இருந்தது; இயக்கத்திற்கு அதிகப்பணம் கொடுத்திருந்தவர்கள் இந்த மாதிரியான 'உலக' சேவையை எதிர்பார்க்கவில்லை!

இருந்தாலும் இந்தப் பிரசார ஸ்தாபனங்களின் சகஜ மான வேலைத் திட்டம் பரந்த மனப்பான்மை, சமூக சேவை ஆகிய தூண்டுகோள்களால் வளர்ச்சியடைந்தன. பொருளா தார மந்தத்துக்கு முன்னதாகவே கடுமையான பொருளா தாரச் சிக்கல் ஏற்பட்டு விட்டது; பிரசார உற்சாகத்தின் வேகத்திற்கிணங்க நிதி உதவியால் ஈடுகொடுக்க முடியவில்லை.

1928-ல் ஜெருசலத்தில் நடைபெற்ற காங்கிரஸில், கொள்கைகள் பற்றிய பல முடிவுகள் செய்யப்பட்டன. 'மதச்சார்பற்ற வாழ்க்கை' என்னும் பொது எதிரியைக் கருதி, கிறிஸ்தவ சமயத்தின் உண்மையையும் தனித் தன்மையையும் விட்டுக்கொடுக்காமல், இதர சமயங்களின் ஒத்துழைப்பைக் கோரவேண்டுமென்று கிறிஸ்தவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. நேசப் பான்மையை வளர்க்கமுயலும் சர்வமத ஸ்தாபனங்களை நாடவேண்டு மென்றும், யூதர்களை நாடவேண்டாமென்றும் தெரிவிக்கப்பட்டது. பொதுவாக, 'பிரசார' ஸ்தாபனங்களுக்குப் பதிலாக 'நாகரீகப்படுத்தும்' ஸ்தாபனங்களை அமைக்க வேண்டுமென்று கருதப்பட்டது. சமயப் பிரசாரத்துறைக்கு காட்டப்பட்ட இந்தத் தாராளப் பான்மையின் காரணமாகக் கல்வி, வைத்தியம், கிராம சேவை தொழிற்சாலைகளில் ஊழியம் செய்தல் ஆகியவை கீழ்த்திசை நாடுகளில் அபிவிருத்தி அடைந்தன. ஆனால் சமய வைதீகர்கள், கிறிஸ்துவ சமயப் பிரசாரம் இல்லாமற் போய்விடுமே என்று பயந்து, பலத்த ஆட்சேபணையைத் தெரிவித்தனர். 1930-ல் ஜான் ராக்கிபெல்லரின் தூண்டுதலும் உதவியும் காரணமாக லௌகிக அமெரிக்கர்களில் சிலர் 'சாதாரண மக்களின் வெளிநாட்டுச் சமயப் பிரசாரக் குழுவின் ஆராய்ச்சி' என்ற ஒரு திட்டத்தை உருவாக்கினர். அந்நிய நாட்டுப் பிரசாரக் காரியங்களில் எவை ஆதரிக்கத் தகுந்தவை என்று கண்டுபிடிப்பதற்காக நிபுணர்கள் அடங்கிய கமிஷன்கள் பலவற்றை மதப்பிரசார மண்டலங்களுக்கு அனுப்பினர். இக்கமிஷன்கள் தயாரித்த அறிக்கைகளைப் பேராசிரியர் வில்லியம் ஏர்னெஸ்டு ஹாகிங் தலைமையில் ஒரு முழு பரிசீலனை செய்தது: தாராள மனப்பான்மையுள்ளவர்களின் துணிபுதான் சரி என்று ஏற்பட்டது. பிரசார ஸ்தாபனங்களைப் பற்றிய 'புனராலோசனை' என்ற தலைப்புடன் அவர்களின் முடிவுகள் 1932-ல் வெளியிடப் பெற்றன.

இந்தக் கருத்துக்கள் பற்றித் தீவிரமாக விவாதம் நடைபெற்று வந்தது. ஐரோப்பிய 'பார்த்தியர்கள்' அமெரிக்காவின் தீவிரமான செயல் முறையை விரும்பாது, வேறு வகையான புதிய சமயப் பிரசாரத்தை ஆரம்பித்தனர். ஹிந்துக்கள் ஆசிரமங்கள் அமைப்பதையும், தியானம் செய்வ

தையும் போன்ற கீழ்த்திசை நாடுகளின் முறைகளைப் பயன் படுத்திக் கொண்டு கிறிஸ்தவ சமயப் பிரசார முறைகளையும் மாற்றியமைக்க அமெரிக்கத் தலைவர்கள் முயற்சி செய்ததில் நடைமுறையில் பயனளிப்பதாக இருந்தது. ஜான் பென்னெட் எல்லாக் கருத்துக்களையும் சமரசப்படுத்தும் ஒரு யோசனை கூறினர்:

"சமூக சம்பந்தமான போதனைகள் மட்டும் மக்களைக் கிறிஸ்தவக் கொள்கைகளை ஏற்கும்படி செய்துவிட மாட்டா. ஆனுல் சமூக விஷயத்தில் கிறிஸ்தவ சமயத்திற்குச் சம்பந்தமில்லை என்ற கொள்கை மக்களை எட்டத் துரத்திவிடக் கூடும். கிறிஸ்தவ சமயம் இம்மையையும் மறுமையையும் தழுவியிருப்பதாலும் மனித உள்ளத்தின் ஆன்ம வேட்கைகளைச் சாந்திசெய்ய முயலும் பொழுதே சமூக நிலைமையை மாற்றவேண்டுமென்ற ஊக்கத்தை மக்களுக்குத் தருவதாலும், பொருளாதாரத்தில் தனி மனிதனின் விசேஷ சுதந்திரம் என்றும், கம்யூனிசம் என்றும் கூறப்படும். இரண்டு கொள்கைகளின் தவறுகளையும் அம்பலப்படுத்தி உண்மையான தன்மையை நிர்ணயம் செய்து காட்டுவதாலும் சென்ற இருபது வருஷங்களில் பரந்த மனப்பான்மைகொண்ட தேவாலய ஸ்தாபனங்களில் கிறிஸ்தவ மதத்தின் தனித் தன்மை பற்றி ஏற்பட்டிருக்கும் தெளிந்த பிடிமானமே என்னைக் கிறிஸ்துவ மதப்பிரசாரத்தில் நம்பிக்கை வைக்கும்படி தூண்டுகிறது. கிறிஸ்தவ சமயத்தின் தனித் தன்மையையும், அசையா அடிப்படையையும் சரியாக உணராத சித்தாந்தம்தான் ஆதியில் தற்பொழுது நடைபெறும் பிரசார வேலைகளைத் தூண்டிவிட்டன."

தனி மனிதரின் பொருளாதார சுதந்திரம், கம்யூனிஸம் ஆகிய நோய்களின் மூலங்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் முன்பைவிட இப்பொழுது தனிச் சிறப்புடன் கிறிஸ்தவ சமயம் விளங்கும் என்று பேராசிரியர் பென்னெட் நம்புகிருர்.

இரண்டாவது உலக மகாயுத்தம்தான் சமய வேலைகளுக்குப் பெருத்த நெருக்கடியை உண்டாக்கிற்று. கீழை நாடுகளின் சமய, அறநெறிகள் பற்றி இவ்வியக்கங்கள் புதிய நோக்கை ஏற்படுத்தியிராவிட்டால், நெருக்கடி இன்னும்

மோசமாக இருந்திருக்கும். யுத்தம் கீழை நாடுகளைப் பற்றிய சொற்ப அறிவை மக்களுக்கு அளித்தது; கிறிஸ்தவ மதத்தைச் சாராதவர்கள்பற்றி மக்களுக்கிருந்த போலிப் பரிவை இது மாற்றி விட்டது; மதப் பிரசார வேலைக்கான அடிப்படைத் தூண்டுதல்களை இது தீவிரமாக மாற்றிவிடவும் கூடும். கிழக்கும் மேற்கும் குரூரமான யுத்தகளத்தில் நேருக்கு நேராகச் சந்தித்துப் போரிட்டன; அதன் விளைவாகப் பிரசார வேலையின் சமய அம்சங்கள் பின்னுக்குத்தான் தள்ளப் பட்டன; யுத்தத்திற்கு முன்பு காணப்பட்ட உலகியல் முறை யான நிவாரணம், நிலச் சீர்திருத்தம், சுகாதாரம், கல்வி ஆகிய அம்சங்கள் கவனத்தைக் கவர்ந்தன. இவற்றால் பிரசார ஸ்தாபனங்கள் அதிகரிக்குமா, இல்லாமலே போகுமா என்பதை யாரும் சொல்ல முடியாது. ஆனால் பிரசார ஸ்தா பனங்கள் ஒன்றுபட்டு நீடித்து வேலை செய்து வந்தபோதிலும், சமயப் பிரசாரம் என்ற கொள்கையிலேயே தீவிர மாறுதல் இப்பொழுது ஏற்பட்டு விட்டது என்பதை மறப்பதற்கில்லை.

தற்போதைய கத்தோலிக்க சமயப் பிரசாரத்தில் ஏற் பட்டிருக்கும் சீர்திருத்தம் முக்கியமான ஒரு விஷயம்; அமெரிக்கக் கத்தோலிக்கர்கள் இதில் முக்கியமான பங்கு கொள்ளாமல் இருக்க முடியாது. சமீபகாலம்வரை அமெ ரிக்கக் கத்தோலிக்கர்கள் உள்நாட்டு மதப் பிரசாரத்தில் தான் அதிக அக்கறை கொண்டிருந்தனர்; அந்நிய நாட்டுப் பிரசாரங்களை ஆதரிக்கக் கூடிய அக்கறைகளோ வசதிகளோ அவர்களுக்கு இல்லை. ஆனால் 1911-க்கு பிறகு மேரிநால் பாதிரியார்கள் ஸ்தாபனம் அமைக்கப்பட்டது முதல், கத்தோ லிக்கப் பிரசாரமும் பிராடெஸ்டெண்டு பிரசார முறைகளைக் கடைப் பிடித்தது. 1921-ல் 'செயிண்டு கொலம்பன் வெளி நாட்டுப் பிரசார சங்கம்' மதப் பிரசாரப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து; 1943-ல் பிரசாரப் படிப்பு 'அகாடெமி, கத்தோ லிக்கப் பிரசாரப் பயிற்சி ஸ்தாபனங்களுக்கென்று ஒரு திட் டத்தை வகுத்து அமெரிக்கக் கத்தோலிக்கப் பிரசார மண்ட லங்களில் முக்கியமானவை ஜப்பான், சீனா, பிலிப்பைன்ஸ், தென் அமெரிக்கா முதலியவை. கத்தோலிக்க பிராடெஸ் டெண்டு பிரசார போர்டுகளிடையே அதிசயிக்கத்தக்க நட்புறவும் நிலவுகின்றது. தாராளக் கொள்கை தொடக்க

மாவதற்கு முன்பு பிராடெஸ்டெண்டுகள் கருதியது போல், கத்தோலிக்கர்களும் மற்றவர்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றவேண்டியதே முக்கியமான பிரசாரம் என்று கருதியிருந்தனர். கத்தோலிக்க முறைகளின் விசேஷ அம்சம் என்னவென்றால், பிரசாரம், கல்வி இவைகளை அதிக முக்கியமாகக் கருதாமல், அனுதை விடுதிகள், பஞ்ச நிவாரணம் போன்ற தர்ம காரியங்களையே அதிகமாக நம்புகின்றனர், ஆனால் யுத்தத்தால் ஏற்பட்ட நிலைமையின் காரணமாக. மற்ற மதங்களைப்பற்றிக் கவனம் செலுத்திக்கொண்டிராமல், சமயத்தை புறக்கணித்து வாழ்தல், கம்யூனிசம் என்ற பெயரில் தோன்றியுள்ள நாத்திகம் போன்ற சக்திகளை எதிர்ப்பதிலேயே கத்தோலிக்கர்கள் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டனர். பிராடெஸ்டெண்டுகள் இம்முறைகளை ஆதரிக்க மாட்டார்கள்; இருந்தாலும் அவர்கள்கூட தங்கள் பிரசாரத் திட்டங்களைப் புதிய அரசியல் நிலைமைகளுக்கு இணங்கவும், கீழ்த்திசை நாடுகளில் உலகியல் மனப்பான்மை வளர்ந்து வருவதற்கிணங்கவும் தீவிரமாக மாற்ற நேரிட்டிருக்கிறது.

வெளிநாட்டுப் பிரசார ஸ்தாபனங்களைப் பற்றிய புனராலோசனை உள்நாட்டுப் பிரசார ஸ்தாபனங்களைப் பற்றியும் கவனிக்கத் தூண்டியது. இந்தத் துறையிலேகூட இந்த அரை நூற்றுண்டில் முழு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ''உள்நாட்டிலுள்ள அந்நியர்'' களுக்கிடையே, (சிவப்பிந்தியர்கள், குடியேறியவர்கள், தனித்த மலைப்பிரதேசங்கள், கிறிஸ்தவ தேவாலயங்களில்லாத சமுதாயங்கள் ஆகியோரிடையே) பிரசாரம் செய்தல் முக்கியமாகக் கருதப்பட்டது; இப்பொழுது அவை எல்லாம் சமூக வேலை என்ற விரிந்த திட்டத்தில் அடங்கிவிட்டன. சமூக வேலை என்றால் முக்கியமான தருமங்கள், சுகாதார சேவை மட்டுமல்ல என்று பொருள் கொள்ளும்படி கொள்கையை விரித்துக் கொண்டிருக்கிறுர்கள். இதன் விளைவாக நகர தேவாலயம் ஸ்தாபன ரீதியாக நிறுவப்பட்ட தேவாலயமாக இருப்பதுமன்றி (பயிற்சி பெற்ற சமூக ஊழியர்கள் கொண்டதாக இருப்பதுடன்) ஸ்தல மதச் சார்பற்ற பொதுநல வேலைகளிலும், பெரிய தேசீய ஸ்தாபனங்களுடனும் ஒத்துழைக்கின்றது. அரை நூற்றுண்டுக்கு முன்பு சமய ஸ்தாபனங்களின் சாமா

ஷிய வேலைகளாகக் கருதப்பட்ட உழைப்பு, சட்டம், சர்வதேச உறவுகள் முதலியவை பற்றி இப்பொழுது முக்கியமாகக் கவனம் செலுத்தும்படி இந்தத் தேசீய ஸ்தாபனங்களுக்கு நிர்ப்பந்தம் உண்டாகி விட்டது.

பிரசார வேலை ஸ்தாபன ரீதியாக்கப்பட்டு விட்டது என்பதைத் தவிர பிரசார இயக்கத்தின் தன்மையும் மாறி விட்டது என்பதை இந்த அபிவிருத்திகள் காட்டுகின்றன. கிறிஸ்தவப் பிரசாரகர்கள் உலகத்தை ஏசுநாதரிடம் அழைத்துச் சென்றுவிடவில்லை; ஆனால் கிறிஸ்தவ மதத்தை உலகுக்குக் கொண்டுவந்து விட்டனர்; மனிதவர்க்கத்திற்கு அவர்கள் பல வழிகளில், தங்கள் பங்குக்கு அதிகமாகவே, சேவை புரிந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக விளங்கக் கூடிய இன்றைய மதப் பிரசாரகர் எப்பொழுதும்போல் மனித வர்க்கத்தைச் சொர்க்க வாயிலுக்கு இட்டுச் செல்வதில் அக்கறை கொண்டிருக்கிறார்; ஆனால் இந்த அக்கறையை உண்மைத் தொண்டராகச் சேவை செய்வதில் காட்டுகிறார். வைத்தியர், தாதித்தொழில் செய்பவர், விவசாய நிபுணர், தொழிலாளர் தலைவர் ஆகிய எந்தப் பதவியிலேனும் அவர் இருக்கலாம். பூஜ்யர் என்ற நிலையில்கூட, பிரசாரம் செய்வதைவிட சேவை செய்வதிலேயே அவர் அதிகம் ஈடுபடுகிறார்; அதாவது பயனுள்ள வேலை என்று கிறிஸ்தவர்களல்லாதவரும் கூடக் கூறும் விதத்தில் பணியாற்றுகிறார். ஆகவே ஸ்தாபன ரீதியான சமயம், தன் கொள்கைகளைவிட, தன் நடைமுறை வேலையினால் அனுதாபமற்ற உலகில் பெருமையைச் சம்பாதித்துக் கொண்டுவிட்டது; மனிதவர்க்கம் முழுவதற்கும் நடைமுறையில் அன்புகாட்டும் ஸ்தாபனங்கள் சொற்பம்தானே !

அமெரிக்க யூத சமயம் அடைந்துள்ள வளர்ச்சிதான் பிரமிக்கத்தக்கதாகவும், அதே காலத்தில் ரசமாகவும் இருக்கிறது. ஏனென்றால் யூத சமயத்திற்குப் பிரசாரம் என்பதில் எப்பொழுதும் நம்பிக்கை கிடையாது; அதனுடைய சமூக சேவை உலகியல் போக்குடையதாகவும், ஸ்தலத் தேவையைத் திருப்தி செய்யும் தன்மை கொண்டதாகவும் இருந்திருக்கிறது. அத்தகைய சமயத்திற்குச் சிறந்த பிசரார மண்டலம் கிடைத்திருக்கிறது—அதாவது இஸ்ரேல் என்னும்

அவர்களுடைய தந்தையர் நாடு; யூத இனத்தவர் என்னும் தேசியப் பற்றுடன் இஸ்ரேலில் முதலீடு செய்யும் தூண்டுதல் ஏற்பட்டிருக்கிறது. யூதர்களையெல்லாம் இஸ்ரேல்வாதிக ளாக்கத் தீவிர 'ஜியோனிஸ்டுகள்' முயல்வது வீணான காரி யம்; ஏனென்றால் அமெரிக்க யூதர்கள் நிச்சயமாக இருநாட் டினிடமும் தான் விசுவாசம் கொள்ளப் பார்ப்பார்கள்; சித் தாந்த விஷயங்கள் தவிர மற்றவற்றில் நாடு கடத்தப்பட்ட வர்களைப் போல் வாழச் சம்மதிக்க மாட்டார்கள். ஆனால் இன்னும் கொஞ்ச காலம்வரை அமெரிக்க யூதர்களும் இஸ்ரேலியத் தலைவர்களும் பரஸ்பரம் மற்றவர் பிரதேசத் தைப் பிரசார மண்டலமாகக் கருதுவார்கள்.

## பொதுப் போக்குகள்

சமயக் கொள்கையிலும் ஒழுங்கிலும் ஒற்றுமையைக் காண்பதைவிட, வேலையிலும் சேவையிலும் ஒற்றுமை காணும் நாட்டம் கொண்டவர்கள் அமெரிக்கர்கள் என்ற கருத்து அமெரிக்கர்களைப் பற்றிப் பொதுவாக ஐரோப்பிய சமயத் தலைவர்களிடையே நிலவி வருகிறது. பல்வேறு சமயப் பிரிவினர்களின் தனிச் சிறப்புக் கெடாமல் அவர்களின் வேலையை ஒரே ஒழுங்குபாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சி தான் இருபதாம் நூற்றாண்டில் பிராடெஸ்டெண்டுத் தலை வர்களுக்கு உற்சாக மூட்டிய வேலை. தேவாலயங்களில் ஒற் றுமை தேவை என்ற நோக்கில் சமயப்பிரிவுகளுக்கு ஒருமுகப் பட்ட எதிர்ப்பு காட்டப்பட்டது. மதப் பிரிவினர்களின் கோஷ்டிகள் பல உண்மையாக இணைந்தன. ஆனால் இவை யெல்லாம் சேர்ந்து முன்னைவிட அழுத்தமான ஒரு பிரிவாய் தலையெடுத்தது. தனிப்பட்ட தேவாலயங்கள் அங்குமிங்கும் இணைந்தாலும் தங்களுடைய வரலாற்று ரீதியான தனிச்சிறப் பைக் காப்பாற்றியே வந்தன—ஐதிக ரீதியான தன்மையில் முழுமாற்றம் ஏற்பட்ட பிறகும் கூட. அமெரிக்காவில் மிஞ்சியிருப்பது 250 சமய ஸ்தாபனங்கள்; ஆனால் 54 ஸ்தாப னங்களில்தான் 50000 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்; 1000000 அங்கத்தினர்களுக்கு மேற்பட்டவர்களடங்கிய ஸ்தா பனங்கள் 14. ஸ்தாபனங்களின் வரிசை வருமாறு:—'ரோமன் கத்தோலிக்கர்கள்; மெதாடிஸ்டு; தென் பாப்டிஸ்டு; தேசிய

பாப்டிஸ்டு கன்வென்ஷன், அமெரிக்கா; அமெரிக்க தேசீய பாப்டிஸ்டு கன்வென்ஷன்; அமெரிக்க பிரஸ்பிடீரியன் தேவாலயம்; பிராடெஸ்டெண்டு எபிஸ்கோபல்; அமெரிக்க ஐக்ய யூதர் தேவாலயம்; ஏசுவின் சீடர்கள்; வடபாப்டிஸ்டு கன்வென்ஷன்; ஓஹியோ முதலிய ராஜ்யங்களின் கிறிஸ்தவப் பிரசார யூதர் சைனூட்; காங்கிரிகேஷனல் கிறிஸ்தவர்; ஆப்பிரிக்க மெதாடிஸ்டு எபிஸ்கோபல்; சர்ச்ஆவ் ஜீஸஸ் கிரைஸ்டு அல்லாடர்டே செயின்ட்ஸ்.' அமெரிக்காவில் உள்ள யூதரின் எண்ணிக்கை நாலரை லட்சம் யூதவழிபாட்டு வகையைப் பின்பற்றாத யூதர்களும் இந்த எண்ணிக்கையில் சேர்ந்திருக்கலாம்.

கிறிஸ்தவ கோஷ்டிகளையெல்லாம் ஒன்றாக இணைக்கும் முயற்சி கைவிடப்பட்டுவிட்டது. குறிப்பாக, கத்தோலிக்க மார்க்கம், பிராடெஸ்டெண்டு மார்க்கம், யூத மார்க்கம் இவைகளுக்கிடையே உள்ள வித்தியாசங்கள் திட்டமானவை; மனமாற்றம் செய்வதென்ற முயற்சிகளை விட்டுவிட்டு, கூட்டுறவு கொண்டு வேலைசெய்யும் திட்டங்களை மூன்று பிரிவுகளும் மேற்கொண்டுவிட்டன. பரஸ்பரப் பூசலை ஒழிப்பதே இக் கூட்டுறவின் முக்ய நோக்கம்; உலகியல் பான்மை பரவுவதைத் தடுக்கும் முயற்சியில் பொது உடன்பாட்டுக்கான அம்சங்கள் உருவாக ஆரம்பித்திருக்கின்றன.

இம் மூன்று பெரிய சமயப் பிரிவுக்குள் ஸ்தாபன ரீதியான ஒருமை உருவாகியிருப்பது பெரிய லாபம். யூதர்களுக்குள் வைதீகம், மிதவாதம், சீர்திருத்தம் இவைகளுக்கிடையே இருந்த பழைய வித்தியாசங்கள் மங்கி வருகின்றன அதற்கு முக்ய காரணம் நாஜிக் கொடுமையால் யூதர்களுக்கு எழுந்த பொதுப் பிரச்னைகளும், இஸ்ரேல் என்னும் தாய் நாடு அவர்களுக்குக் கிடைத்ததும்தான். இந்த நிலைமை காரணமாக அமெரிக்க யூதர்களிடையே இரு நாட்டு தேசபக்தி வளர்ந்துவிட்டது. யூத இனத்தவரின் பரம்பரையான, வரலாற்று ரீதியான சமயம் என்ற முறையில் இஸ்ரேல் நாட்டு மதத்திற்கு அன்பு காட்டப்படுகிறது; அமெரிக்காவில் பிறந்த யூதர்கள் என்ற காரணத்திற்காக அமெரிக்க யூதத் தலைமைக்கு அன்பு காட்டப்பட்டு வருகிறது. யூதமிதவாதிகள் கோஷ்டிக்கு விட்டுக் கொடுத்து விட்டது போல் இது இருந்தாலும்

அமெரிக்காவிலுள்ள யூத சமூகத்தினர் அவ்வளவு பேரையும் ஐக்யப்படுத்துவதற்கு இது நடைமுறையான அடிப்படையாயிற்று. இருந்தாலும் எல்லா யூதகுருக்களையும் அமெரிக்க யூத சபைக் கவுன்சிலில் சேர்க்க முடியவில்லை. அப்படியிருந்தும், யூத குருக்களும் அவர்களுடைய மூன்று தேசிய ஸ்தாபனங்களும் யூத சாதாரணமக்களின் ஸ்தாபனங்களிலுள்ள வேறுபாடுகளைப் பாராட்டாமல் ஒத்துழைப்பதுதான் முக்கிய விஷயமாகும். (அமெரிக்க யூதர் காங்கிரஸ், அமெரிக்க யூதர் கமிட்டி).

ரோமன் கத்தோலிக்க மதம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் ஒருமைப்பட்ட ஸ்தாபனம்; இருந்தாலும் ஸ்தல ரீதியிலோ சர்வதேச ரீதியிலோ நடைபெற்றுக் கொண்டிருந்த வேலைகளை எல்லாம் அமெரிக்க ரோமன் கத்தோலிக்கர்கள் தேசிய ரீதியில் ஒருமைப்படுத்தி விட்டனர். தேசிய கத்தோலிக்கர்கள் சமூகநல மகாசபை (1919-ல் அமைக்கப்பட்டது) தன்னுடைய பல இலாகாக்கள் மூலம் இந்த வேலையைத் தீவிரமாகச் செய்து வருகிறது. குறிப்பிட்ட நோக்குள்ள இதர ஸ்தாபனங்களும் இருக்கின்றன; உதாரணமாக,கத்தோலிக்க சர்வ இனக் கவுன்சில், சர்வதேச சமாதான கத்தோலிக்கர்கள் சங்கம், கத்தோலிக்க கல்லூரி மாணவர்கள் சம்மேளனம், கத்தோலிக்க கிராமாந்திர மகாசபை, கத்தோலிக்க தொழிற் சங்கங்களின் சமாஜம் முதலியவையாம். கத்தோலிக்க சேவையின் விரிவையும், ஊழியர்கள் தொழில் ரீதியான திறனைப் பெற்றவர்களாகி வருவதையும் இவை ருசுப்படுத்துகின்றன.

கத்தோலிக்க சமய ஐக்யத்திற்குப் புறம்பாக சகஜ ரீதியில் தோழமையை வளர்க்க ரோமன் கத்தோலிக்கர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் ஊக்கமில்லை; சரியான பயன் ஏற்படவில்லை. தோமிஸ்டுகளுக்கும் உலகியல் வாதிகளுக்கும் இடையே அறிவுத் தொடர்புகள் மிகுந்துவிட்டன. ஆனால் ஐரோப்பாவைவிட குறைவாக; மொத்தத்தில் ரோமன் கத்தோலிக்கர்களுக்கு உலகியல் கோஷ்டிகளுடனோ யூதர்களுடனோ கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதில் கஷ்டத்தைக் காணோம்; பிராடெஸ்டெண்டுகளுடனோ கிழகத்திய வைதீக கோஷ்டிகளுடனோ அம் மாதிரி பழக முடியவில்லை.

ஏனென்றால், சக கிறிஸ்தவர்களுள் தோழமை என்னும் பொழுது ஏசுவின் திவ்ய தேக ஸ்தாபனத்தில் அங்கத்தினரா யிருப்பவர்கள் என்பது தொக்கி நிற்கிறது; தேவாலய மதச் சடங்குகளில் வேறுபாடுகளிருந்த போதிலும், ஏசுநாதர் அமைத்த வழிபாட்டின் முக்யாம்சத்தைப் பாதிக்காத வரை யில் அவைகளைச் சேர்ந்தவர்களுடன் கத்தோலிக்கர்கள் தோழமை கொள்வதற்குத் தடையேதுமில்லை. ஆனால் 'முக்யாம்சம்' என்றதும் வழிபாட்டு முறை, சமயப்பிர மாணம் ஆகிய பிரச்னைகள் திரும்ப எழுந்து விடுகின்றன; ஒற்றுமைக்கு இவ்விவாதங்கள் வழிகாட்டுவதில்லை.

பிராடெஸ்டெண்டு சமய ஸ்தாபனங்கள்தான் சிக்கலாக யிருக்கின்றன; தங்கள் வேலையை ஒருமைப் படுத்த அவர்கள் உறுதியாக முயன்று வருகிறார்கள். இந்த நூற்றாண்டுக்கு முன்பு தோன்றிய சமயச் சார்பற்ற பல பிராடெஸ்டெண்டு ஸ்தாபனங்கள் இருக்கின்றன—கிருஸ்துவ இளைஞர் சங்கம் கிருஸ்துவப் பெண்கள் சங்கம், மாணவர் தொண்டரியக்கம், ஞாயிறு தினப் பள்ளிச்சங்கம், கிறிஸ்தவ முயற்சி இயக்கம், கிறிஸ்தவ ஸ்திரீகள் மிதக்குடி யூனியன் முதலியவையாம். மதப்பிரிவுகள் அதிகார பூர்வமாக இணைவதற்கு இவை பெரி தும் வழிகாட்டின. மேலே குறிப்பிடப்பட்ட பிரசார போர்டு களும் மதக் கல்வி கவுன்சில்களும் இணைக்கப்பட்ட வேலைகளை ஊக்குவிப்பதில் தலைமைதாங்கின. ஸ்தல சங்கங்களில் இரண்டு வகை மிகுந்த செல்வாக்குடன் விளங்கின. (1) நகர சமய ஸ்தாபனசம்மேளனங்கள். (2) சமுதாய தேவாலயங் கள் (மார்க்கச் சாயலற்றது அல்லது சர்வமார்க்கத் தன்மை கொண்டது.)

தேசமளாவிய இவ்வொற்றுமை இயக்கம் அமெரிக்காவி லுள்ள ஏசுநாதர் தேவாலயங்களின் சமஷ்டி கவுன்சிலாக 1908-ல் உருவெடுத்தது; நிதானமாக வளர்ந்து விரிவடைந் தது. பிராடெஸ்டெண்டு தேவாலய அங்கத்தினர்களில் 75 சதவிகிதத்தினருக்கு அது பிரதிநிதியாக விருந்தது; 1950-ல் அது தேசீய சமய ஸ்தாபனக் கவுன்சிலாக விரிந்த பொழுது ஏறக்குறைய பிராடெஸ்டெண்டுகள் எல்லோருக்குமே பிரதி நிதியாகிவிட்டது.

முதல் யுத்தகாலமும், முதலாளி—தொழிலாளி போராட்டத்தை சமாளிக்க நேர்ந்த முதல் கட்டங்களும் அமைதியற்று, பெரிய சோதனையாக இருந்தது. ஆனால் 1932-இல், முதல் இருபதாண்டு அனுபவத்தைக் கொண்டு சம்மேளனக் கவுன்சில் தன்னுடைய பொறுப்புகளைத் தெளிவாக்கிக் கொண்டு, திறமையுடன் செயலாற்ற தன் நிர்வாக அமைப்பைச் சீர்திருத்திக் கொண்டது. ஸ்தல சம்மேளனங்களுடன் உள்ள தொடர்பை அறுத்துக் கொண்டது; மதப்பிரிவுகளின் கருத்துக்கும் போக்குக்கும்தான் உத்தியோக ரீதியான பிரதிநிதி என்று கொண்டாடுவதை விட்டுவிட்டு, அங்கத்தினர்களாக உள்ள மார்க்கத்தாரின் சுதந்திரமான செயல்களுக்குக் காப்பளித்தது. அதே சமயத்தில் தன்னுடைய கமிஷன்களுக்கு உறுதியான நிலையையும் தெளிவையும் அளித்தது; தன் நிபுணர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தியது. எல்லாவித ஆராய்ச்சிகள், சமூகவேலை, பிரசார வேலை, ஆகியவற்றை இது செய்தது தவிர, சமய ஸ்தாபனங்களுக்கிடையே மரியாதையாக நடந்து கொள்ளும் நுண்முறையில் பெரிய வெற்றியைக் கண்டது.

1938-ஆம் ஆண்டுக்குள் சமஷ்டி கவுன்சிலின் வருஷாந்திர பட்ஜெட் தொகை 250000 டாலராகி விட்டது; இதில் கால் பங்குதான் அங்கத்தினரின் கட்டணமாக வசூலாகிறது; பாக்கி பலவிதத்தில் குறிப்பிட்ட திட்டங்களுக்காக வசூலாகிறது. அதன் முக்கியமான குழுக்கள் வருமாறு—தேவாலயங்கள், கிறிஸ்தவப் பிரசாரமும் ஆயுள் தொண்டும், சர்வதேச சமாதானமும் நல்லெண்ணமும், சமூகசேவை, இனஉறவுகள், மதுவிலக்கு, கிறிஸ்துவக்கல்வி ஆகிய ஒவ்வொன்றுக்கும் குழுக்கள். குறிப்பாக, எப். எர்னெஸ்டு ஜோன்ஸ் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி இலாகா நன்றாக வேலை செய்தது. உள்ளூர் பிரசாரக் கவுன்சில், அந்நியப்பிரசார கவுன்சில், மதப்பிரசார கல்வி இயக்கம், சமயஸ்தாபன ஸ்திரீகள் தேசியக் கவுன்சில், ஐக்ய ஸ்டீவார்ட்ஷிப் கவுன்சில், மதக் கல்வி சர்வதேசக் கவுன்சில் இவைகளுடன் சமஷ்டி கவுன்சில் 1941-இல் சரியான கட்டுதிட்டமின்றி இணைந்த போது அதன் வேலை அதிகரித்துவிட்டது. இந்த எட்டு மதப் பிரிவு ஸ்தாபனங்கள் பத்து வருஷகாலம் தீவிரமாகக் கூட்டுறவுகொண்டு

தொண்டாற்றியதன் விளைவாக 1950 நவம்பர் 28-இல் ஏசுநாதர் தேவாலயங்களின் தேசியக் கவுன்சில் கிளீவ்லாந்தில் தோன்றிற்று. கவுன்சிலின் வேலை நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது: வாழ்வும் வேலையும், அந்நிய நாட்டுப் பிரசாரம், உள்நாட்டுப் பிரசாரம், கிறிஸ்தவக் கல்வி என்பவையாம்.

பிராடெஸ்டெண்டுகளிடையே வளர்ச்சி அடைந்த சமுதாய போக்கு இயக்கமும், கிறிஸ்தவ உலகத்தைத் திரும்பவும் ஒன்றுகூட்டும் முயற்சி நடைபெற்ற சர்வதேச மகாநாட்டுத் தொடர்களும் அமெரிக்காவின் பலவகைப்பட்ட சமயஸ்தாபனங்களைக் குலைத்து விட்டதாகப் பொருள் கொள்ளக்கூடாது. இங்கொன்றும் அங்கொன்றும் இணைந்து விட்டபோதிலும் பல சமய மார்க்க அமைப்புகள்முன்னைவிட இப்பொழுது வலுவாகத்தான் இருந்தன. மதப்பிரிவுகளைத் தாக்குவதால் நட்புறவுகள் அதிகமாகி யிருக்கலாம்; ஆனால் மதப்பிரிவுகள் கலையவில்லை. ஐக்யம் தேவை என்று கூறும் மதஸ்தாபனம்கூட ஏற்கெனவே பன்மைபட்டுக் கிடக்கும் நிலையில் தானும் ஒன்ருகச் சேருவதுதான் கண்கண்ட பயன். டீன்ஸ்பெர்ரி இந்நிலைமையை விவரிக்கிருர்:

“நம்முடைய அமெரிக்க மதப் பிரிவுகளுக்கு நிம்மதியான அதிகாரக்குரலோ மறுப்புக்கான கடூரக்குரலோ கிடையாது......தன் கருத்தை விட்டுக் கொடுக்காமல் மற்றவன் கருத்தும் சரியாக இருக்கலாம் என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் எண்ணத் தயாராக இருக்க வேண்டும். இதில் உள்ள நடைமுறை சங்கடம் என்னவென்ருல் தங்கள் நம்பிக்கைக்குத் துரோக்மிழைப்பது போலாகிறது என்ற உணர்ச்சி உண்டாகி விடுவதுதான்......சரசமான அலக்ஷியத்தினுல் லாபமில்லை. பொதுவான சமய வாழ்வுக்கான ஒரே தேவாலயப் பிரிவு என்றில்லாமல் பலசமயப் பிரிவை அமெரிக்கர் ஏற்றுக் கொள்வதால் பிரச்னையை ஆராய முழுவாய்ப்பேற்படுகிறது.”

ஆனல் பெரிய சமயஸ்தாபனங்கள் டீன்ஸ்பெர்ரி குறிப்பிடும் அமெரிக்க ‘பல சமயப்பிரிவை’ ஏற்குமா என்பது இனித்தான் தெரிய வேண்டும். பிராடெஸ்டெண்டு சமரசப் போக்கு கத்தோலிக்க மதத்திற்கு ஒரு சவால் என்பதும் இரு-

பகுதிகளுக்கிடையே, தங்கள் பலம் வளர்வதற்கொப்ப, முறுக்கல் வளர்ந்து வருகிற தென்பதும் ரகசியமல்ல. கூட்டாக எல்லா மதஸ்தாபனங்களும் கம்யூனிச நாத்தீகத்தையும், பரந்தமனப்பான்மை கொண்ட உலகியல் வாதத்தையும் தாக்கும்பொழுது தங்கள் வித்யாசங்கள் தலைஎடுக்காமல் இருக்கலாம். ஆனால் அமெரிக்காவில் சமயப் போர்கள் உயிர் பெற்று விடக்கூடும் என்பதும், (அநேகமாக உயிர் பெறுது) ஆதி ஸ்தாபகர்கள் காலத்தைப் போல், சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம்தான் தேவை என்ற கோரிக்கை எழக்கூடும் என்பதும் நிகழக் கூடியவைதான்.

இதற்கிடையில் பொதுவாத பிராடெஸ்டெண்டுகளும் ரோமன் கத்தோலிக்கர்களும் மதபிரிவையோ உடன்பாட்டையோ வளர்க்காமல் மத வித்யாசங்களை ஏற்கும் முகத்தில் இருக்கின்றனர். பிராடெஸ்டெண்டு சமயம் கொள்கை அளவிலும் தன்மையிலும் கத்தோலிக்கர்களுக்கு எதிரி என்ற நிலைக்கு மேற்பட்ட நிலையில் இப்பொழுது இயங்குகிறது. பொதுப் பிரச்னைகளில் ஒன்றுபட்டு செயல்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்திருக்கிறது. இது விஷயத்தில் ரோமன் கத்தோலிக்க சமய நிர்வாக முறையை அதுபின்பற்றியும் அதனுடன் போரிட்டும் வருகிறது. பிராடெஸ்டெண்டு தேவாலயங்கள் இணைய இரண்டு தூண்டுதல்கள் இருக்கின்றன; அமெரிக்க வாழ்வில் மத சம்பிரதாயம் என்ற முறையில் அவர்களுக்கு இருக்கும் பெரும் பான்மையோர் அந்தஸ்து ஒன்று; பொது கண்யம், ஆண் பெண் உறவுநெறி, சர்வதேச உறவுகள், தொழிலாளர் இயக்கங்கள், அரசியல் ஆகிய விஷயங்களில் சிறுபான்மையோர் கை ஓங்க இடங்கொடுக்கக்கூடாதென்பது மற்றொன்று. அவர்கள் நிலை ஸ்திரமாக இருந்தால், பொதுஅணியாய் இயங்க விரும்பமாட்டார்கள்; உலகியல் ரீதியிலும் சமய ரீதியிலும் எதிர்ப்பு வலுக்கும் காரணத்தால் ஒன்றுபட வேண்டிய அவசியம் நடைமுறையில் தெரிகிறது. இவ்விதமாக, மற்ற ஸ்தாபனங்களைப் போல் சமய ஸ்தாபன சம்மேளனமும் பயம், தைரியம், சேவை ஆகிய கலவையாகக் காட்சி அளிக்கிறது. ஆரம்பத்தில் தொண்டென்னும் திட்டம் ஓங்கியிருந்தது; வரவரப் போராட்டம் என்னும் திட்டம் ஓங்கி வருகிறது.

பொதுத் தோழமையில் பங்கு கொள்ள மறுக்கும் மதப் பிரிவுகளிலும் ஆதாரவாத சமய ஸ்தாபனங்களிலும்கூட இணையும் மனப்பான்மை உலவுவதைக் காண்கிறோம். இம் மாதிரியான சர்வமத மார்க்க ஸ்தாபனங்களில் 1941-இல் அமைக்கப்பட்ட அமெரிக்க கிறிஸ்தவமத ஸ்தாபனக் கவுன் சில் ஒன்று; மதஸ்தாபனங்களின் சம்மேளனக் கவுன்சில், சர்வபல்கலைக் கழகத் தோழமை (கல்லூரி மாணவர்கள் ஆதாரவாத ஸ்தாபனம்) ஆகிய ஸ்தாபனங்களின் நவீன, சோஷலிச போக்குக்கு மாற்றாக அமைவதே இதன் நோக்கம்.

## சமயப் பத்திரிகைகள்

சமயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உணர்வதற்கு 1900-ஆம்ஆண்டு காலத்திய மதஇலக்கியத்திற்கும் இன்றைய இலக்கியத்திற்கும் உள்ள வித்யாசமே சிறந்தகருவாகும். மதப் பத்திரிகைகளை வாங்குவோர் எண்ணிக்கை அதிகரித்து விட்டபோதிலும், பொதுப் பத்திரிகைகளின் வளர்ச்சியைக் கருதும் போது அதுகுன்றுவதாகத்தான் நினைக்க வேண்டும். இவ்விஷயத்தை ஆராய்ந்த பேராசிரியர் ஏ. மாக்ளங்லீ, "இவை நூற்றாண்டுக்குமுன் அமெரிக்க வாசகர்களில் முக்கால் பங்கை எட்டின; ஆனால் இப்பொழுது சாதாரண தினசரி பத் திரிகைப் பிரதிகளின் பத்தில் ஒரு பங்கு எண்ணிகைதான் பிர சுரமாகின்றன" என்கிறார். மதஇலக்கியம் எண்ணிக்கை அள வில் பலவீனப்பட்டிருப்பதைத் தவிர உள்ளடக்கத்தில் புரட்சி கரமாக மாறுதலடைந்திருப்பது இன்னும் குறிப்பிடத்தக்க விஷயம். 'திமெதாடிஸ்டு கிறிஸ்டியன் அட்வகேட்டும் (34000 பிரதி செலவாகும் வாராந்தரப் பத்திரிகை) 'கிறிஸ்டியன் ஹெரால்டும், (அதே அளவு விற்பனையாவது) 1900 ஆண்டை விட மூன்று மடங்கு அதிகமாக உலகியல் விஷயங்களைத் தாங்கி வருகின்றன; 'எக்ஸ்டென்ஷன்' என்னும் முக்ய கத்தோலிக்க மாதாந்தரப் பத்திரிகை (434000 பிரதி விற் பனை) பேராசிரியர் லீ கூறுவது போல் உள்ளடக்கத்திலும் தோற்றத்திலும் பொதுப்பத்திரிகையான 'சாடர்டே ஈவனிங் போஸ்டை'ப் பெரிதும் ஒத்திருக்கிறது. 'காமன்வீல்', 'அமெ ரிக்கா', 'தி கிறிஸ்டியன் செஞ்சரி', 'கிறிஸ்டியானிடி அண்டு சொஸைடி' ஆகிய பத்திரிகைகளை அரசியல் சமூகச் செய்தி

களுக்கும் அபிப்பிராயங்களுக்கும் பக்தி வட்டாரங்கள் படித்து வருகிறுர்கள் என்பது குறிப்பிடத்தக்க விஷயம். பத்திரிகைகளுக்கு உன்னத லக்ஷியத்தைக் கற்பித்த 'கிறிஸ் டியன் மானிடரும்' இதே மாதிரி மிகச் சிறந்து விளங்குகிறது சுருங்கச் சொன்னுல் பொதுப் பத்திரிகைகளுடன் தீவிரமாகப் போட்டியிடும் சமயப் பத்திரிகைகளும் பத்திரிகையாளர் களும் இல்லாமலில்லே. உலக விஷயங்களே இப்பத்திரிகைள் மத நோக்குடன் விவாதிக்கலாம்; ஆனுல் ஐம்பது ஆண்டு களுக்கு முன்பு சமயப் பத்திரிகைகளில் பக்தி, பைபிள் விரி வுரை, ஆராய்ச்சி, மனிதனே உயர்த்துதல் ஆகியவைகளுக்குக் கிடைத்த முக்கியத்வம் தற்பொழுதைய பத்திரிகைகளில் கிடைக்கவில்லே; அவ்விதம் கவரவும் அவை முயல்வதில்லே. பழைய அக்கறை சாதாரணவாசகனுக்கு மாறிவிட்டதென்று கூற முடியாது; ஏனென்றுல் பூஜ்யர்களுக்கே அக்கறை மாறி விட்டது.

## சமய உரிமைக்காப்பாளர்கள்

அமெரிக்க மக்களுக்குச் சமய விஷயத்தில் உள்ள உரிமை களேக் காக்க அரசியல் செல்வாக்குள்ள குழுக்கள் இல்லாவிட் டால் ஜனநாயக அரசியலில் அவை பயனற்று விடும் என்பது வெளிப்படை. பொது மேடை என்றுல் பொதுக்கருத்து களேக் கூறுவோர் இருக்க வேண்டும்; அதாவது, இதர சக்தி களுடன் போட்டியிடும் சக்தியைக் கட்சிகள் பெற்றிருக்க வேண்டும். சென்ற முப்பதாண்டு காலமாக சமய ஸ்தாபனங் கள் தேசீய செல்வாக்குள்ள குழுக்களாக வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட நோக்கத்திற்காக வென்று மதஸ்தாபனங்கள் நூற்றுண்டு காலத்திற்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கின்றன. கூட்டங்களேக் கொண்டு வருவதற்காக சமய வாதிகள் செய்த முயற்சிகளுக்கு அடிமை எதிர்ப்பியக் கம், மதுவிலக்கு சங்கங்கள், சமாதான ஸ்தாபனங்கள் உதார ணங்களாகும். ஆனுல் சமீப காலத்தில் இரண்டு பெரிய வேலேகள் கொண்ட நிரந்தர கேந்திரங்கள் உருவாகி யிருக் கின்றன; மதஸ்தாபனங்களின் உரிமைகளேப் பாதுகாத்து வளர்ப்பது ஒரு வேலே; மதஸ்தாபன அங்கத்தினர்களின் லக்ஷியங்களேயும் மனச்சாட்சியையும் பாதிக்கக் கூடிய சட்ட

விஷயங்களில் சமய அங்கீகாரத்தை அளிக்கும் வேலை மற்றொன்று. முதல்வகை ஸ்தாபனங்கள் குறிப்பிட்ட கோஷ்டிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதுடன் தங்கள் வேலையை நிறுத்திக் கொள்கின்றன; மனச்சாட்சி பூர்வமான ஆட்சேபணையாளர் சேவை போர்ட், பிரசுர சம்மந்தமான கிறிஸ்துவ விஞ்ஞானக் கமிட்டி, யூதர்களின் பல கவுன்சில்கள், அந்நிய நாட்டு சமயப் பிரசார கமிட்டிகள், சமயத்தையும் அரசாங்கத்தையும் பிரிக்க வேண்டுமென்று கோரும் பிராடெஸ்டெண்டு முதலிய அமெரிக்கர்கள் இணைப்பு ஸ்தாபனம் ஆகிய உதாரணங்கள். அநேக சமூக பிரச்னைகள் சம்மந்தமாக செய்யப்படும் கூட்டங்களை உருவாக்கும் பொது ஸ்தாபனங்கள் இரண்டாவது வகை ஸ்தாபனத்திற்கு உதாரணம்; இவை எல்லாம் இருபதாவது நூற்றாண்டு சிருஷ்டிகள்.

தேசீய கத்தோலிக்க மக்கள் நல மகாசபை இம்மாதிரி பெரிய குழு வொன்றை முதலில் அமைத்தது; 1920-இல் அது இயங்க ஆரம்பித்தது; 1917—19-இல் முதல் உலக மகா யுத்தத்திற்கு சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்த தேசீய கத்தோலிக்க கவுன்சிலைப்பின்பற்றி வேலை செய்தது; கத்தோலிக்க தர்மங்களின் பழைய தேசீய மகாசபையுடன் கூட்டுறவு கொண்டும் வேலை செய்தது. இந்தத் தேசீய கத்தோலிக்க மக்கள்நல மகாசபையின் சட்ட இலாகா உள்பட எல்லா இலாகாக்களும் அரசியல் ரீதியில் வேலை செய்வதற்காகவே அமைக்கப்பட்டிருக்கின்றன; 250 பேர் அடங்கிய தங்கள் வாஷிங்டன் ஊழியர்கள் உதவியுடன், தேவைப்பட்டபோது மகாசபையின் நிர்வாகிகளான அத்யக்ஷ குருக்கள் சட்ட சபைக்குரிய முறையில் பிரச்னைகளை நெருங்க முடிகிறது.

சமூக ரீதியில் வினையாற்ற கத்தோலிக்கர்கள் ஸ்தாபன ரீதியாகத் தங்களை அமைத்துக்கொண்ட காலத்தில், மெதாடிஸ்டுகள் தங்கள் வாஷிங்டன் மிதக்குடி காரியாலயத்தின் வேலைகளை விரிவுபடுத்தி வந்தனர்; பதினெட்டாவது திருத்தத்திற்கான கிளர்ச்சியை அவர்கள் மேற்கொண்டது அற நெறியை மீறும் எந்த சட்டத்திற்கும் எதிர்ப்பாக உருவடைந்தது. அவர்கள் காரியத்தில் இப்பொழுது இருபத்தி ஐந்து ஊழியர்கள் இருக்கின்றனர்; மெதாடிஸ்டு அந்நிய நாட்டு மதப்பிரசார போர்டின் வாஷிங்டன் காரியாலயத்

துடன் இது ஒத்துழைக்கிறது. காமச்சுவை, தீய இலக்கியம், கெடுக்கும் பொழுதுபோக்கு, லாட்டரிகள் இதர சூதாட்டங்கள் ஆகியவற்றை ஒடுக்குவதிலும், சர்வதேச உறவுகளில் கிறிஸ்தவத் தன்மையைப் புகுத்துவதிலும், பொது நெறியை அபிவிருத்தி செய்வதிலும் இவை இணைந்து தீவிரமாக வேலை செய்கின்றன. மதஸ்தாபன்ங்களின் சம்மேளனக் கவுன்சில் சர்வமதப் பிரிவு பிராடெஸ்டெண்டு முக்ய கேந்திரத்தை 1945-ல் வாஷிங்டனில் அமைத்தது; பார்லிமென்டில் வரும் மசோதாக்கள் பற்றியும், வாஷிங்டனில் தொடர்புகொள்ள வேண்டிய முறை பற்றியும் தேசீய கவுன்சிலுக்கு அது அவ்வப்பொழுது அறிவித்து வருகிறது. பேராசிரியர் எபர்சோல் கூறுகிறார்:

மார்ச் 1944-க்கும் மார்ச் 48-க்கும் இடையில் கவுன்சிலோ நிர்வாகக் கமிட்டியோ 60-க்கு மேற்பட்ட தீர்மானங்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டிருக்கின்றன. வர்த்தக ஒப்பந்தங்கள், சமய அரசாங்க வேறுபாடு, கடலுக்கப்பாலுள்ளவர்களுக்கு அவசர நிவாரணம். செனேடர் பில்போ மீது சாற்றப்பட்ட குற்றங்களை விசாரிக்கவேண்டும் என்பதற்கு ஆதரவு, யுத்தக் கைதிகள், ஜப்பானிய அமெரிக்கர்களுக்கு நஷ்ட ஈடு அளித்தல், வருமானவரி, இடம் பெயர்ந்தோர்கள், கிரீஸ், துருக்கிக்கு உதவி, பூரண வேலை வாய்ப்பு, கல்விக்கு சமஷ்டி சர்க்கார் உதவி, ஸிவில் உரிமைகள், சமய ஸ்தாபனங்களின் புள்ளி விவரம், பிரெட்டன் காடுகளும், உணவு விவசாயமும், ஐக்ய ஸ்தாபனம் முதலிய பல விஷயங்கள் இவ்வறிக்கைகளில் விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க தேசீய மதஸ்தாபன லீகும், கிறிஸ்தவப் பிரசார தேசீய சங்கமும், கிறிஸ்தவ தேவாலயங்களின் அமெரிக்க கவுன்சிலும் (ஆதாரவாதஸ்தாபனம்) பிராடெஸ்டெண்டு கட்சியைப் போட்டி போட்டுக்கொண்டு எடுத்துக் கூறுகின்றன.

சமயஸ்தாபன உரிமைக்குழுக்கள் பொது விஷயங்களில் பார்லிமெண்டு கோஷ்டிகளுடன் ஒத்துழைக்கின்றன. சட்டங்களை உருவாக்குவதில் பார்லிமெண்டு குழுக்கள் கையாளும் அத்தனை முறைகளையும் இவையும் கையாளுகின்றன.

## சுருக்கம்

இந்த நூற்றுண்டின் முதல் பாதியில் சமய வாழ்வும் தொண்டும் எந்த அளவுக்கு ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது அல்லது ஸ்தாபன ரீதியாக்கப்பட்டிருந்தது என்பது இதுவரை விளக்கப்பட்டது. எனவே அவற்றில் காணும் பொது முடிவுகளை இங்கே காணலாம்.

(1) வேறு எதுவாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அமெரிக்காவின் பெரிய வியாபாரங்களில் சமயமும் ஒன்று. தொழில் முறையில் பார்த்தால் அது ஒரு லாபமில்லாத வியாபாரம்தான், பொதுசேவை. ஆனுல் இதில் பெருமளவு தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. பயனுள்ளவை என்று கருதக்கூடிய வேலைகளுக்கு அது உழைக்கிறது; இதில் அநேக உலகியல் ஸ்தாபனங்களுக்குச் சமமான ஸ்தாபனங்களிருக்கின்றன; நுட்பமான பயிற்சி பெற்ற உத்தியோகஸ்தர்கள் இவைகளை நிர்வகிக்கிறுர்கள்; அவர்களில் பெரும் பான்மையோர் சமயச் சார்பு மிகாத சாதாரண மக்கள்; ஏராளமான சொத்துக்களும் இருக்கின்றன; அவற்றை வியாபார தோரணையில் நிர்வகிக்கவும் அது முயல்கிறது.

(2) சமய ஸ்தாபனங்களுக்குள் போட்டி என்பது சென்ற காலக் கதையாகாவிட்டாலும், அவை உலகியல் தீமைகள், சமூகப் பிரச்னைகள் பக்கம் கவனத்தைத் திருப்பியிருக்கின்றன. அதாவது சமய ஸ்தாபனங்கள் தேவாலயங்களாக மட்டும் இயங்கவில்லை; அவை உழைக்கின்றன; உலகியல் ரீதியில் வேலை செய்கின்றன. இந்த வேலையை சமய ஸ்தாபனங்கள் சமயத் தொண்டாகவே கருதுகின்றன. இந்த ஸ்தாபன ரீதியான சமயம் துறவற முறைக்கு எதிரிடை; பக்தியுடன் தங்களைச் சமர்ப்பணம் செய்துகொண்டு வாழ விரும்புகிறவர்களை உலக வேலைகளுக்கு நடுவே வாழும்படி இது கட்டாயப் படுத்துகிறது. இந்தமாதிரி சமயத்தை உலகத்தை விட்டு ஓடும் முறை என்றோ தப்புவிப்பதற்கான சாதனம் என்றோ, சிறுபிள்ளைத் தனமென்றோ, லாகிரி என்றோ கூறுவது சரியல்ல. லக்ஷக்கணக்கான பேர்களுக்கு இது வேலை வைக்கிறது; இந்த மாதிரி வேலைகளில் வீண்வம்பு, பயனற்ற உழைப்பு, குருட்டு நினைப்பு ஆகியவை கலக்காமல் இருக்க

முடியாது; ஆனால் மற்ற வியாபாரங்களில் காணப்படுவதை விட அதிகமான வீண்வேலை இவற்றில் இருப்பதாகக் கூற முடியாது.

(3) சமயம் வியாபகமான ஸ்தாபனம். கல்வி, வைத்யம், அரசியல், வியாபாரம், கலை ஆகியவற்றுடன் அது கலந்து விடுகிறது—அதனுடைய பிடியிலிருந்தும் பேராசையி லிருந்தும் எதுவும் தப்பமுடியாது. வாழ்வின் சில பகுதி களிலிருந்து சமயத்தை விலக்கிவிட வேண்டும் என்பதற்கான முயற்சிகள், அரசாங்கத்தையும் விஞ்ஞானத்தையும் ஒடுக்கு வதற்கான முயற்சிகள்போல் தோல்வி அடைகின்றன. எதையும் சமயப்பற்றுடன் செய்யலாம்; சமய ஸ்தாபனத்தி லிருந்து எதுவும் தப்பமுடியாது. முக்தி தனிப்பட்ட விஷயம் என்று கருதும் நாட்கள் மலையேறிவிட்டன. சமயமும் அரசாங் கமும் வெவ்வேறு என்ற கொள்கை சமயத்தையும் அரசாங் கத்தையும் பிரித்துவிடவில்லை—பள்ளியையும் நாடகசாலை யையும் பிரிப்பது கல்வியையும் கலையையும் பிரிக்கவா செய் கிறது ? சமயம், சர்க்கார், கல்வி, கலை போன்றவற்றைச் சார்ந்த பல ஸ்தாபனங்கள் எந்தக் காரியத்தையும் கருத் தையும் குறிப்பிட்ட அமைப்பிலோ நியமத்திலோ தான் பொருத்திவைத்திருக்கும். இம்மாதிரி வியாபகமான ஸ்தாப னங்கள்தான் கலாசாரத்தின் சில அடிப்படை உதாரணங்க ளாகும்; இவைதான் வாழ்வுக்கு நாகரீகமான உருவைத் தருகின்றன. சமயம் வாழ்வு முழுதையும் பற்றிய தென்றும், இதர ஸ்தாபனங்கள் வாழ்வின் பகுதிகளைப் பற்றியதுதா னென்றும் கூறுவதுண்டு. இக்கருத்து அவ்வளவு சரியல்ல. ஆனால் அரசாங்கத்தைப்போல், சமயமும் இப்பொழுது, முன்பைவிட, வாழ்வு முழுமையையும் பாதிக்கிறது, பாதிக்க முயல்கிறது. சமயத்தையே தொழிலாகக் கொண்டவர்கள் விரும்பும் அளவுக்கு சமயம் நமது நாகரிகத்தின் மைய விஷய மாக அமையவில்லை என்பது உண்மைதான்; ஆனால் எல்லா வர்க்கங்களிலும் அக்கறைகளிலும் அது வியாபித்துவிட்டது.

# 3

# அறமுறைப் புனரமைப்பு

## சமயச்சார்பான மனச்சாட்சி செய்யும் காரியங்கள்

அமெரிக்காவின் சமய ரீதியான மனச்சாட்சியில் ஏற்பட்டுள்ள அடிப்படை மாறுதல்கள்பற்றி பரிசீலனை செய்யும் முன்பு தங்கள் அறமுறை அதிகாரங்களை மதஸ்தாபனங்கள் அமுல் நடத்தும் முறைபற்றி கவனிப்போம். 1900-ம் ஆண்டில் நிலவிய சம்பிரதாய முறைகளுக்குக்கூட குடும்பத்திற்கும் பாதிரிமார்களுக்கும் இடையே இருந்த நெருங்கிய கூட்டுறவு தான் ஆதாரமாக இருந்தது; நல்லது கெட்டதென் பதைக் குழந்தைகளுக்குப் புகட்டும் விஷயம், சமய நியதிகளை உளநெகிழ்ச்சியுடன் ஏற்கும் வகை, கடவுளிடத்தில் பயத்தை உண்டாக்கும் விஷயம், (மனத்தின் இயற்கையான கேவலத் தன்மையை தெய்வ அருள் கடவுளன்பாக மாற்றும் வரை) ஆகியவை பற்றி கவனம் செலுத்தப்பட்டு வந்தது. கடவுளிடத்தும் ஜீவனில் உள்ள தெய்வ நியதியிடத்தும் குழந்தைகளுக்குரிய நம்பிக்கையையும் அன்பையும் வளர்க்கும் இம்முறை மற்றொரு முறையை நம்பித்தான் இருந்தது; வழக்கமான குடும்ப சமய அனுஷ்டானங்களை நம்பி இருந்தது; குரு, போதகர், பூதகுரு முதலியவர்களின் மத அற போதனையையும், சமயச் சபையில் சேர்க்கும் தீக்ஷை முறையையும்

அங்கத்தினரின் சத்யபுத்தியை பாப அறிவிப்பு, மனமாற்றம், கழிவிரக்கம், அருளின் தவறு ஆட்சி ஆகிய கிறிஸ்தவ முறையால் தூண்டும் முயற்சியையும் பொறுத்திருந்தன. மதரீதியான மனச்சாட்சியை இந்த விதத்தில் தான் எல்லா இடத்திலும் காலத்திலும் உருவாக்கியிருக்கிறார்கள்.

இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அமெரிக்க அமைப்பில், ஏதேனும் தனித் தன்மை இருந்தால் அது இளமைப் பருவத்திற்கு சமயக் கல்வியாளர்கள் கொடுத்த முக்கியத்வமாகும். குடும்ப அனுஷ்டானங்கள் ஏற்கெனவே அலக்ஷியப்படுத்தப் பட்டு வந்தன; குழந்தைகளின் சமய போதனை முறை உற்சாகத்தை இழந்து சுருங்கிவிட்டது; ஆனால் முதல்தீக்ஷை அல்லது உறுதிப்பாடு அல்லது யூத தீக்ஷை முதல் முதிர்ந்த வயது வரும் வரை இளைஞர்களைத் தீவிர சமய உணர்ச்சி முறையில் தூண்டித்தான் வந்தார்கள். இளைஞர் ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பது எளிது; எதற்கும் அவர்கள் ஒன்று சேரத் தயாராக இருப்பார்கள்; சேர்ந்துவிட்டால் ஒரு லக்ஷியத்திற்காக அவர்களை எளிதில் பயன்படுத்த முடியும்—குறிப்பாக பக்தி, தியாகம், விசுவாசம், அன்பு ஆகிய தன்மைகளை அவர்களிடம் தூண்டிவிட்டால். குழந்தைப் பருவத்தின் மீது தங்களுக்கு இருந்த ஆதிக்கம் நழுவுவதைக் கண்ட மதஸ்தாபனங்கள் இளைஞர்களைத் தங்கள் கட்டுக்குள் கொண்டுவர முழு முயற்சி செய்தன. எல்லாவிதமான இளைஞர் மதஸ்தாபனங்களும் தோன்றி வளர்ந்தன; (சில ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளன); பொது சங்கங்களைத் தவிர விசேஷ சங்கங்களும் தோன்றின; அந்நிய நாட்டு மதப்பிரசார மாணவர் தொண்டர் படை போன்றவற்றில் சமய அம்சமே வலுத்திருந்தது.

இந்த சம்பிரதாயமான வைதீக நெறி தாராள மனம் படைத்தவர்களிலோ அல்லது நவீன மதஸ்தாபனங்களிலோ மதக்கல்வியாக மாற்றப்பட்டு, இயற்கையான வளர்ச்சியுடன் பிணைக்கப்பட்டபோது, மதமாற்றத்திற்குள்ள முக்கியத்துவம் மாற்றத்திற்குப் பிந்திய கால வாழ்வுக்கு மாறிவிட்டது. இவ்விதமாக இருபதாம் நூற்றாண்டில் மதஸ்தாபனங்களிடையே தனிச் சிறப்புடைய ஒழுக்கம், சமூகம் பற்றிய பிரச்னைகள் ஆகியவற்றை ஆராய வயது முதிர்ந்தோர் அடங்கிய

விசேஷ ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டன; மதரீதியான மனச்சாட்சியுடன் இப்பிரச்னைகளை இவை அணுகிய போதிலும் உலகியல் தர்மஸ்தாபனங்களின் முறைகளிலும் உள்ளடக்கத்திலும் அவற்றுடன் ஒத்துழைத்தன. இதனால் நல்லது கெட்டது என்ற அறிவுப் பயிற்சிக்குப் பதிலாக, குறிப்பிட்ட அறப் பிரச்னையைப் பற்றிய விவாதம் முக்யத்வம் பெற்றது; இதில் அபிப்பிராயத்தைத் தவிர நம்பிக்கையிலும் மாறுபட்டு நிற்பதற்கு இடமிருந்தது. உள்ளடக்கத்தைப் பற்றி ஏற்பட்ட இம்மாற்றம் சமயக் கொள்கைகள் பற்றிய வினு விடைகளுக்கு மாருக விவாதத்திற்கும், பைபிள் விதிக்கும் பத்துக்கட்டளைகளைவிட சொற்போருக்கும், சமயப் பிரசாரத்தைவிட சமூகப் பிரசாரத்திற்கும், புத்துயிர் முயற்சியைவிட மத உரிமைக் குழுவிற்கும் முக்கியத்துவம் அளிப்பதாக ஆயிற்று. கொள்கை ரீதியில், மத ஸ்தாபனங்கள் சம்பிரதாயமாகவும் அதே காலத்தில் நவீனமாகவும் இருக்கலாம்; சம்பிரதாயமான சமய நியமங்களில் குழந்தைகளும் இளைஞர்களும் பயிற்சி பெறலாம்; பிறமதத்திற்கு மாறுவதும் நடைபெறலாம். இருந்தாலும் சமய ஸ்தாபனங்களின் சிறந்த முயற்சிகளும் நோக்கங்களும் உலகியல் கல்வி முறையையும் உலக விவகாரங்களையும் தழுவியதாகவே இருக்கின்றன. ஐம்பதாண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்ட அறப்பிரச்னைகளில் கடவுளின் சித்தத்தைக் கண்டு பிரசாரம் செய்தது போல் இன்று செய்ய முடியாது. அறம் என்பதே இன்று ஆட்டம் கண்டுவிட்டது; பத்துக் கட்டளைகளையும் பொன்னுன வழிகளையும் ஆதாரமாக மதத்திலும் அறத்திலும் காட்ட முடியாது. அறிவுக்கு ஏற்றதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சமய நெறி இப்போது தர்க்கமுறையை அதிகமாகக் கையாள்கிறது. இவ்விதமாக முறையிலும் உள்ளடக்கத்திலும் சமய ரீதியான மனச்சாட்சியில் தீவிர புனரமைப்பு ஏற்பட்டு விட்டது; அதனுல் சமூகநெறிப் பிரச்னைகளுக்கருகே அது வந்துவிட்டது; ஆன்மமுக்தி உலக விவகாரங்களுடன் பின்னிவிட்டது. இந்தப் புனரமைப்பின் முக்கியமான கட்டங்களைக் கவனிப்போம்; முந்திய நூற்ருண்டுகளில் தனி மனிதர்களுடைய தர்மம், நன்கொடை ஆகியவற்றுடன் நெருங்கியிருப்பவற்றை முதலில் எடுத்துக் கொள்வோம்.

## மதப்பற்றுள்ள சமூக ஸ்தாபனங்கள்

ரக்ஷண்யப் படை பத்தொன்பதாம் நூற்றுண்டைச் சேர்ந்த ஸ்தாபனம். இருபதாவது நூற்றுண்டுக்கு இருபது வருஷங்களுக்கு முன்பு இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு இது வந்து சேர்ந்தது. இது முதலில் பவெரி மிஷன்'களுக்கு இணைப்பாக விளங்கிற்று; அனுதைகளின் ஆன்ம நலத்தைப் பேணுவதற்கு முன்னுல் அவர்களின் உடல் நலத்தைப் பேணும் முறைகளைக் கையாண்டது; தெரு முனைகளில் இப் படையைச் சேர்ந்த பிரசாரகர்கள் நடத்திய விநோதமான கூட்டங்கள் சமயத்தைச் சார்ந்த பண்டைய பழக்க வழக்கங் களை மீண்டும் உயிர்ப்பிக்க முனைந்த முறைகளை நினைவூட்டின. இந்தப் படையும் தன்னைக் கிறிஸ்தவப் பிரசார ஸ்தாபனமா கவே கூறிக் கொள்கின்றது.

> 'இதற்கு ஆன்ம நோக்கம்தான் முதன்மையானது. பாமரமக்களிடையே சமயத்தின் ஒளியைப் பரப்புவதற் கென்றே தோன்றிய இந்த ஸ்தாபனம் இசை, சொல், செயல்களால் புத்துயிரளிக்கும் பைபிளின் சக்தியை விளங்கவைக்கின்றது. சமூகத் தொண்டு ஆன்ம ரட்சண் யத்திற்கு துணையாக மட்டும் மேற்கொள்ளப்படு கின்றது.'

ஆனுல் இது பெரிய தர்ம ஸ்தாபனமாகி விட்டது; பல விதத்தில் பயனுள்ளதாகவும் இருக்கிறது: சமூகப் பொது நிதியின் தயவில்லாமலேயே இது மக்களின் ஆதரவை நிரம் பப் பெற்று வருகிறது. யுத்தகாலத்தில் சிப்பாய்களுக்கும் சாதாரண மக்களுக்கும் ஊழியம் செய்யும் பெரிய ஸ்தாபன மாக இருந்து வருகிறது. பழைய சாமான்களை விற்பனை செய் யும் கடைகள் வேலை வாய்ப்பு நிலையம், விவசாயிகள் குடியிருப் புக்குத் தனியிடங்கள், தொழிலாளர்களுக்கும் குழந்தைகளுக் கும் விடுதிகள், குழந்தைப் பராமரிப்புக்குப் பகல் விடுதி, சிறு வர்கள் சங்கம், ஸ்திரீகள் குடும்பச் சங்கம், விடுதலையான கைதிகளுக்குச் சமூகத்தில் பிழைப்புக்கு வழி செய்யும் திட் டம், சேரிச் சீர்திருத்தம் முதலிய பல காரியங்களில் இது ஈடு படுகிறது. பொது அதிகாரிகளும் தனியார் சமூக ஸ்தாபனங் களும் செய்யும் சமூக சேவைக்கு ஆக்க முறைகளில் இவ்வித

மாக இது துணைபுரிகின்றது. எனவே இதனுடைய கிறிஸ்தவப் பிரசார நோக்கத்தைவிட நடைமுறைக் கொள்கை குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. அதாவது :

'கிறிஸ்தவ சமயமே சேவையாகும் என்று கருதப்படுகின்றது. ஒருவன் ஞாயிறு தினச் சமயக் கூட்டங்களுக்குப் போகலாம்; ஆனால் வெளிப்படையாகப் பிறருக்கோ ஸ்தாபனத்திற்கோ உதவி செய்வதன் மூலம் பக்தியைக் காட்டாதவரை நல்ல சமயத் தொண்டன் என்று அவனைக் கருத முடியாது......ஆகவே ரக்ஷண்யப் படையின் சேவையை உணர்ச்சிப் பெருக்கால் கொடுக்கப்படும் பிச்சை என்று கருதாமல் அன்பின் இயக்கமாகவும், ஏசு சமயத்தின் இயக்கமாகவும் கொள்ள வேண்டும்...—மனிதன் நிரந்தரமாகவும், பூரணமாகவும் புத்துயிர் பெற வேண்டும் என்பதே ரக்ஷண்யப் படையின் நோக்கம்'

கொள்கை அளவில் இதன் கருத்து மோட்சத்தைப் பற்றிய சமயப் பிரசாரம் தான். ஆனால் நடைமுறையில் சமூக சேவையைச் செய்து வருகின்றது. 'நல்லெண்ண வளர்ச்சித் தொழில்' என்ற அடிப்படையில்தான் இது இயங்குகின்றது. அநேக அமெரிக்க நகரங்களில், ரக்ஷண்யப் படையின் நடைமுறையைப் பின்பற்றி, தேவாலயங்கள் நல்லெண்ண வளர்ச்சித் தொழிற்கிளைகளை அமைத்திருக்கின்றன; இக்கிளைகள் சில்லரைத் தெரு வியாபாரம், பழைய சாமான்களுக்கான கடை வியாபாரம் ஆகியவற்றையும் உள்நாட்டுப் பிரசாரத்துடன் செய்கின்றன.

கிறிஸ்தவ இளைஞர் சங்கமும், கிறிஸ்தவப் பெண்கள் சங்கமும் இளைஞர்களுக்கான சமயச் சங்கங்களாக மட்டுமில்லாமல், இருபதாம் நூற்றாண்டின் சமுதாய ஸ்தாபனங்களாகிவிட்டன; எல்லா வயதினருக்கும் வர்க்கத்தாருக்கும் சேவை செய்கின்றன. உண்டிச்சாலைகள், தேகப் பயிற்சிக் கூடங்கள், கல்விப் பயிற்சித் திட்டங்கள், பிரசங்கங்கள், இசையரங்குகள், விவாத அரங்குகள், கோடை கால உல்லாச ஸ்தலங்கள், ஆகிய வசதிகளைச் செய்து தருகின்றன. வெளிநாட்டுப் பிரசார மண்டலத்திலும், கல்லூரி மைதானங்களிலும், ராணுவ ஸ்தலங்களிலும் அவைகளுக்கு வலிமை வாய்ந்த ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவை எங்கே சேவை செய்தாலும் குறிப்

பான சமய சேவை செய்யத் தவறுவதில்லை; ஆனால் அவற்றின் உலகியல் சேவைதான் சிறந்து விளங்குகிறது. இதைவிட இன்னும் விசேஷம் என்னவென்றால் இம்மாதிரியான திட்டமாகப் பாகுபாடு செய்வதை அவை கண்டிக்கின்றன. இளைஞர் ஹீப்ரு சங்கம், பெண்கள் ஹீப்ரு சங்கம் ஆகிய யூதருடைய கேந்திரங்களும் இதே மாதிரிதான். கத்தோலிக்க இளைஞர் சங்கங்களும் பல்வேறு வேலைகளும் சேவையும் செய்கின்றன; மதஸ்தாபனங்கள் மீது மறைமுகமாகப் பற்றை வளர்க்கக் கூடிய சேவைகளைச் செய்கின்றன என்றுதான் கூற வேண்டும்.

## தீவிர இயக்கங்கள்

மிதக்குடி இயக்கத்தின் வரலாறுபற்றி எல்லோருக்கும் தெரிந்திருக்கும்; அது ஒரு நாடகத்தைப் போல் விறுவிறுப்பாக நடந்தது. சமயப் பிரிவுகளின் ஆதரவில் தோன்றிய தேசீய மிதக் குடிச்சங்கமும், கிறிஸ்தவ ஸ்திரீகளின் மிதக் குடிச் சங்கமும், சாராயக் கடை ஒழிப்புச் சங்கமும், மதுவிலக்குக் கட்சியும் அரை நூற்றாண்டுக் காலமாகச் சாராயக் கடைகளை ஒழிப்பது பற்றிய கிளர்ச்சியை நடத்தி வந்திருக்கின்றன. நகர கிராமத் தேர்தல்களில் ஸ்தல மதுவிலக்கு அல்லது உள்ளூரார் இஷ்டப்படி விலக்குவதோ குடிப்பதோ என்பதைப் பொறுத்து முக்கியமான வெற்றிகள் கிடைத்தன. தேர்தல்களில் கிடைத்த வெற்றிகளுக்குத் தேவாலயங்களில் நடைபெற்ற இடைவிடாத மிதக் குடிப் பிரசாரமும், சாராயக் கடைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டமும் முக்கியக் காரணங்களாயின. வெகுகாலமாக இருந்து வந்த மிதக்குடி இயக்கம், இருபதாவது நூற்றாண்டில், மதுவிலக்குச் சட்டத்திற்கான முயற்சியாகவும், குடியை அறவே ஒழிக்கும் முயற்சியாகவும் பாவிக்கப்பட்டது. 1907-முதல் 1917-க்குள் மதுவிலக்கு மனப்பான்மையும் மக்கள் வாக்குப் பதிவின் சக்தியும் சேர்ந்து மதுவிலக்கை ஒவ்வொரு ராஜ்யமாகக் கொண்டு வரும் நிலைமைக்கு ஆக்கம் தந்தன. பத்து ஆண்டுகளில் முக்கால் பகுதி ராஜ்யங்களில் மதுவிலக்கு அமலுக்கு வந்தது, மேற்கிலும் தெற்கிலும் அது முதன்மையான வலுப்பெற்று விளங்கிற்று.

இந்த நிலைமையையும் மகாயுத்த நெருக்கடியையும் பயன் படுத்திக் கொண்டு 1917-ல் சமஷ்டி அரசியலமைப்புச் சட்டத் திற்கு 18-வது திருத்தத்தைக் கொண்டு வந்தனர்; 1933-வரை இது ரத்துச் செய்யப்படவில்லை. 1917-ல் மதுவிலக்கு ஏற் பட்ட வெற்றிக்குப் பிறகு, குறிப்பாக அது 1933-ல் தோல்வி யுற்ற பிறகு, மிதக்குடி உள்பட அறநெறிப் பிரச்னைகளை அணுகும் விதத்தில் பெரிய மாறுதல்கள் தோன்றின. முத லாவதாக, மதுவிலக்கு இயக்கத்தை ஆதரித்த மதஸ்தாபனங் களும் சமுதாயங்களும் இப்பொழுது இப்பிரச்னைபற்றி இரண்டு பட்ட அபிப்பிராயம் கொண்டன. இரண்டாவ தாக இம்மாதிரி அறநெறிச் சட்டத்தால் பயனில்லை என் பதும் தெளிவாகத் தெரிந்து விட்டன. மூன்றுவதாக மிதக் குடிப் பிரசாரத்தைத் தனிப்படுத்துவதைவிட அறம் சம்பந்த மான இதர லக்ஷியங்களுடன், குறிப்பாகச் சுதந்திரம், கல்வி, பொறுப்பு, சத்தியத்தில் நாட்டம், சட்டத்திற்கு மரியாதை ஆகியவற்றுடன் இணைத்துத் தீர்க்க வேண்டும் என்பதை உணர்ந்தனர். இதன் விளைவாக மிதக்குடி மட்டுமின்றி நற் குணங்கள் எல்லாவற்றையுமே, நடைமுறையில், காலம் இடம், ஜீவபேதங்களுக்குப் பொருந்திய ரீதியில் பரிசீலனை செய்தனர். மதங்கள் அறநெறி விஷயங்களில் கொண்டி ருந்த முழு லக்ஷியப் போக்கில் இவற்றிற்கு இதற்கு முன்பு இடமில்லை. அறம் என்பது நல்ல சக்திகளுக்கும் தீய சக்தி களுக்கும் இடையே ஏற்படும் போராட்டம் என்ற பழய சமய நம்பிக்கை திருத்தம் பெற்று வருகிறது; குறிப்பிட்ட அற நெறிப் பிரச்னையைக் காரிய சாத்தியமான ரீதியில் அணுக வேண்டுமே அல்லாது 'யுத்தப் போக்கில்' அணுகக் கூடா தென்ற உண்மையைக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்ந்து வருகின்றனர். அற விஷயத்தில் 'போராட்டம்' என்பதை விட்டுக் கொடுக்கப்பல மதவாதிகள் கொள்கை அளவில் ஒப்ப மாட்டார்கள்; நெறி விஷயங்களில் சமரஸத்தை ஏற்கமாட் டார்கள்; ஆனால் நடை முறையில் கண்டனம் செய்யும் போக்கைவிடச் சமாளிக்கும் தந்திர முறைகளுக்கு ஆதரவு தருவார்கள். ஆகவே சாராயக் கடைகளைக் கள் விற்கும் விடுதிகளாக்கிவிடலாம், மதுவிலக்குக்குப் பணியாதவர்களை வரிச்சுமையால் பணியவைத்து விடலாம் என்ற 'குடிகாரர்'

வாதங்களை உலகியல் அறவாதிகளைப் போல் மதவாதிகளும் ஏற்பது எளிதாகிவிட்டது. எனவே சட்டத் திருத்தம் ரத்தானதை அவர்கள் தோல்வியாகக் கருதவில்லை; வேறு விதமான மிதக்குடி இயக்கத்திற்கு ஆரம்பம் என்று கருதினார்கள். மதப் பற்றுள்ள சாதாரண மக்களில் சிலரும், பாதிரிமார்களும் மிதக்குடி என்பதற்கு அரிஸ்டாட்டில் முறையில் அர்த்தம் செய்து கொண்டார்கள்; அதாவது நன்றாக உண்டு, குடிக்க வேண்டும், பழக்கங்களை நாகரிகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதினார்கள்; ஆனால் பலர் குடியுடன் சாராயத்தை ஒழிப்பதுதான் லக்ஷியம் என்பதை விட்டுவிடவில்லை இதற்கிடையில் சில கோஷ்டிகள் ('அல்கஹாலிக்ஸ் அனானிமஸ்') கையாளும் சமயத் தொடர்புள்ள பிரசார முறைகளைப் பற்றிச் சமயத் தலைவர்கள் ஆராய்ந்து வருகின்றனர்; விருந்தால் ஏற்படும் தோழமையைவிட சமயத் தோழமையைக் கவர்ச்சிகரமாக்கக் கூடுமா என்பது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். எப்படியிருந்த போதிலும் தேசிய மதுவிலக்குக் கொள்கையின் தோல்வியால் சமய வாதிகளிடையே ஏற்பட்ட ஆத்திரம், குடிவெறியை எப்படிக் குறைக்கலாம் என்ற ஆராய்ச்சியாக மாறிவிட்டது.

உலக சமாதானத்தை ஸ்தாபிப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளின் கதையும் இதேமாதிரித்தான் இருக்கிறது—ஆனால் இன்னும் அதிகச் சிக்கலாக உள்ளது. சமய ரீதியான இரண்டு யுத்த எதிர்ப்பு முயற்சிகள் நீண்ட காலமாக இருந்து வந்திருக்கின்றன; இந்த நூற்றாண்டிலும் அவை பயன்பட உழைத்திருக்கின்றன: பலாத்காரத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் மனச்சாட்சி வாதம் ஒன்று; சமாதானச் சர்வதேச உறவுகளை வளர்ப்பதற்கென்றே தோன்றிய சர்வ தேவாலய சங்கங்கள் மற்றொன்று. சென்ற இருபதாண்டுவரை, ஆயுதம் தாங்க மறுப்பதையே பொது மதக் கடமையாகக் கொண்ட மத ஸ்தாபனங்களில் மனச்சாட்சி ரீதியான எதிர்ப்பாளர்கள் காணப்பட்டனர். அமெரிக்காவில் இவர்களில் முக்கியமானவர்கள் குவேக்கர்கள், மொரேவியர்கள், மென்னொனைட்டுகள், டங்கர்கள், ஷ்வெங்பெல்டர்கள், ஜிஹோவாவின் சாட்சிக்காரர்கள் ஆகியவர்களாவர். சமரஸத் தோழமை ஸ்தாபனத்தையும் இவர்களுடன்

சேர்க்க வேண்டும்; சர்வ சமய மார்க்க இணைப்பாக அது இருந்த போதிலும், (எதிரியுடன் அஹிம்சாபூர்வமான ஒத்துழையாமை என்ற) பூர்ண அஹிம்சையே அதன் லக்ஷியம், வேதாந்தக் கேந்திரங்களும், மகாத்மா காந்தியின் சொந்தச் செல்வாக்கும் பலாத்காரத்திற்கு மாற்று அஹிம்சைதான், ஆத்ம சக்திதான், என்ற நம்பிக்கையை வளர்த்தன. பிரும்ம ஞானிகள் மட்டும் இந் நம்பிக்கையைக் கொள்ளா திருந்தது விநோதம்தான்.

முதலாவது மகாயுத்தக்காலத்தில் மனச்சாட்சி பூர்வமான எதிர்ப்பாளர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்பட்டது; ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இந்த ஸ்தாபனங்கள் பல ஜெர்மனியர்களைச் சேர்ந்ததாக இருந்ததால் பாதுகாப்புப் பயன்படவில்லை. இந்த மாதிரியான ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்காமல், சொந்த முறையில் மனச்சாட்சி பூர்வமாக ஆட்சேபித்தவர்களுக்கு எவ்விதத் தயவும் காட்டப்படவில்லை; அவர்களை தூற்றினார்கள். யுத்தத்திற்கும், அதற்குப் பிறகும், குறிப்பாகச் சர்வதேச ஆயுத உற்பத்தி மண்டலத்தாரின் ரகசியம் அம்பலமான பிறகு, யுத்த எதிர்ப்பு விரிவடைந்தது. அதன் விளைவாகத் தேவாலயங்களில் பல மனச்சாட்சி பூர்வமான எதிர்ப்பாளர்கள் வள்ர்ந்தனர்; முக்கிய ஸ்தாபனங்கள் யுத்தத்தையே பாபமென்று கண்டித்தன; இதர யுத்த எதிர்ப்பு முறைகளையும் கையாண்டன. அமெரிக்கா இரண்டாவது மகாயுத்தத்தில் புகுந்த பொழுது 'மனச்சாட்சி எதிர்ப்பாளர்கள்' என்பதன் பொருளை விரிவாக்கவும் மேலும் தயாளமாக நடந்து கொள்ளவும் அவசியம் நேர்ந்தது. 1940-ம் வருடத்திய உத்தியோக ஊழியரைத் தேர்ந்தெடுக்கும் சட்டத்தில் 'தேவாலய அங்கத்தினர்' என்னும் தகுதியை விட்டு விட்டனர். மதப் பயிற்சி, நம்பிக்கை ஆகியவற்றின் காரணமாக யுத்தத்தின் எந்த அம்சத்திலும் பங்கு கொள்ள ஆட்சேபிக்கும் மனச்சாட்சி பூர்வமான எதிர்ப்பாளருக்கு மரியாதை காட்டப்பட்டது. சாதாரணமான சர்க்கார் ஊழியர்களின் உறைவிடங்களிலும் பகுதிகளிலும் இருந்த 7,000—யுத்த எதிர்ப்பாளர்களில் மூன்றில் இரண்டு பங்கினரே யுத்த எதிர்ப்புத் தேவாலயங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். யுத்த எதிர்ப்பைப் பொதுக் கொள்கையாக

வைத்துக் கொண்டிராத மெதாடிஸ்டுகளிடையிலும், பிராடெஸ்டெண்டுகளிடையிலும் யுத்த எதிர்ப்புப் பான்மை பரவியதுதான் மத்திய மேற்குப் பிரதேசத்தில் குவேக்கர்கள் செல்வாக்கு இழந்ததற்குக் காரணமாயிற்று. சாதாரண முகாம்களில் எட்டுச் சதவிகிதத்தினர் மெதாடிஸ்டுகள். மூன்று சதவிகிதத்தினர் ஜிஹோவாவின் சாட்சிகள், ஆறுசதவிகிதத்தினர் எந்தத் தேவாலயப் பிரிவையும் சேராதவர்கள், குவேக்கர்களில் சிலர் சாதாரண ஊழியம் மட்டும் செய்ய இசைந்தும், சிலர் ஆயுதம் தாங்கக் கூடத் தயாராக இருந்ததும் குறிப்பிடத் தக்க விஷயங்கள். ஆனால் யுத்தத்தை எந்தக் காலத்திலும் ஆதரிப்பதில்லை என்று சபதம் செய்திருந்த சில செல்வாக்குள்ள போதகர்கள் மட்டும் கடைசி வரையில் உறுதியாகவே இருந்தனர்.

பொதுவாக, அமெரிக்கப் பிராடெஸ்டெண்டுகளுக்கு ஒரு தலை முறை முழுவதும் யுத்தம் பாபகரமான காரியம் என்ற அறப் பிரச்னை முக்கியத்வம் பெற்று விட்டது. கத்தோலிக்கர்களுக்கும் யூதர்களுக்கும் இந்தத் தொல்லையில்லை; ஏனெனில் அவர்களில் யுத்த எதிர்ப்பாளர் சிலரே. கத்தோலிக்கத் தலைவர்கள் ஸ்பானிஷ் அமெரிக்க யுத்தக் காலத்தில் அரசியல் போக்கில் தனித்திருக்க விரும்பிய போதிலும், யுத்த முயற்சிகளை மனப்பூர்வமாக ஆதரித்தனர்; தேசபக்தியுடன் நாட்டுக்கும் கடவுளுக்கும் சேவை செய்ய முனைந்தனர். முதல் யுத்தத்தில் அமெரிக்க யூதர்கள் அமெரிக்கப் பிரஜைகளாகவே போரிட்டனர்; அவர்களுக்கு ஜனநாயகம் சமய ரீதியான மரபு; இரண்டாவது யுத்தத்தில் அமெரிக்கர்கள் என்ற முறையிலும் ஹிட்லர் ஆட்சியை ஒழிப்பதில் விசேஷ அக்கறையும் பொறுப்பும் கொண்டவர்கள் என்ற முறையிலும் பங்கெடுத்துக் கொண்டனர். கிறிஸ்தவ யுத்த எதிர்ப்புப் பான்மையையும் ஜனநாயகப் பிரஜா நெறியையும் சமரசப்படுத்துவதில் பிராடெஸ்டெண்டுகளின் மனச்சாட்சி பெரிய அறநெறிச் சர்ச்சைக்குள்ளாயிற்று. பிரெஸ்பிடீரியன் மார்க்கத்தைச் சேர்ந்த ஜனாதிபதி வில்ஸன், உலகில் ஜனநாயகத்தைக் காக்கும் யுத்தம் என்று கூறி, முதல் யுத்தத்திற்கு மதப் பெருமையை அளித்ததை மெய்யென்று கருதிப் பின்பற்றிய மத போதகர்கள், தங்கள் போராட்டம் தோல்வியடைந்ததைக்

கண்ட பின்னர், ஆத்திரமும் ஏமாற்றமும் அடைந்தனர்; பிராடெஸ்டெண்டு பிரிவினர்களிடையே கௌரவம் பறி போன உணர்ச்சியும், கழிவிரக்கமும், மீண்டும் தெய்வத் தொண்டுக்குத் தம்மைச் செய்து கொள்ளும் உறுதியும் பொங்கிப் பரவின. தேச ஆயுத உற்பத்தி மண்டலத்தின் ரகசியம் 1930-ல் அம்பலமானபோது, யுத்தத்தைப் பற்றிய ஆத்திரம் உச்சநிலை அடைந்தது; அமெரிக்க நடுநிலைமைச் சட்டம் தோன்ற ஏதுவாயிற்று. இனி யுத்தத்தை தெய்வீகமான தென்று கருதமாட்டார்கள்! இருந்தாலும் சிறிது தயக்கத்திற்குப் பிறகு இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பங்கு கொள்ள வேண்டியது தெய்வீகக் கடமை என்பதை பிராடெஸ்டெண்டுகளில் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொண்டனர். ஆங்கிலக் கத்தோலிக்க பிஷப் மானிங் நியுயார்க்கில் 1941-ல் கூறியதை ஏற்கத் தயாராக இருந்தவர்கள் சிலரே. அவர், "அமெரிக்கன் என்ற முறையிலும், கிறிஸ்தவ தேவாலயத்தின் பிஷப் என்ற முறையிலும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டியது தேசீயக் கடமை என்று கூறினார். எபிஸ்கொபேலியப் பிரிவினர்கள்கூட அக்கருத்தைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர்; தெய்வ நிந்தனை என்று பல பிராடெஸ்டெண்டுகள் கருதினர்; ஆனால் அவர் கூறியதை ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் ஏறக்குறையப் பெருமான்மையோர் ஏற்றுக் கொண்டு விட்டனர். 'கிறிஸ்டியன் செஞ்சுரி' பத்திராதிபர் கிளேன் டபிள்யு. மாரிஸனைப் போல் மனப் போராட்டத்தில் சிக்கியவர் சிலரே; பேர்ள் ஹார்பர் சம்பவத்திற்குப் பிறகு அவர் எழுதியதாவது :

"நமது நாடு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. அதன் உயிருக்கே இப்பொழுது ஆபத்து...இப்போது நாம் சண்டையிட வேண்டியது அவசியமாகிவிட்டது. ஆனால் இது தருமத்திற்கு முரணானதே. 'போர் செய்' என்று கடவுள் நமக்குக் கட்டளையிடவில்லை. நம்முடைய சகோதரர்களை வதைக்க வேண்டும், அவர்களால் நாம் கொல்லப்பட வேண்டும் என்ற தண்டனையைக் கடவுள் நம்கையை கொண்டே நிறை வேற்றிக் கொள்கிறார். இத் தண்டனையைத் தான் நாம் நரகம் என்று கூறுகிறோம்." ஆனால் பெரும்பான்மையோர் 'லிவிங் சர்ச்' என்னும் பத்திராதிபரின் பிரார்த்தனையை ஏற்றனர். "கடவுள்

நம் பக்கம் இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்யாமல் அவருக்கு வெற்றி கிடைக்கும் பொருட்டு நாம் அவர் பக்கம் எப்பொழுதும் இருப்போமாக!" இம்மாதிரிப் பிரார்த்தனை கிறிஸ்தவர்களுக்குள் சகஜமானது. ஆனால் உலகியல் அறவாதிகள் இதைக் கண்டு நகைக்கத்தான் செய்வார்கள், பெருமூச்சு விடுவார்கள்.

சமாதானம் நிலவுவதற்காகச் செய்யப்பட்ட திட்டமான முயற்சிகளைப் பற்றிய வரையில், பத்தொன்பதாம் நூற்றாண்டில், மத ஸ்தாபனங்களைவிட, மதச் சார்பற்ற தயாள குணமுள்ளவர்களே அதிகமாக முன்னுக்கு வந்தனர்; இடதுசாரி அபிமானமுள்ள தனிப்பிராடெஸ்டெண்டுகளில் சிலர் இதில் ஒத்துழைத்தனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டில், நியாயமான நிலையான அடிப்படையில் சர்வதேச ஒப்பந்தங்களை உருவாக்கும் திட்டங்களிலும், சமாதான சங்கங்களிலும் மதஸ்தாபனங்கள் அதிக அக்கறை காட்ட ஆரம்பித்தன. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவை லேக் மோஹாங்க் மகா நாடுகள், குவேக்கர் மகாநாடுகள், குருமார் அமெரிக்க சங்கம் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்தனர்; சமாதானத்தையும் தகராறுக்குரிய விஷயங்களை விவாதித்துத் தீர்த்துக் கொள்ளும் முறையையும் வளர்ப்பதே இவைகளின் நோக்கம். சர்வதேச சங்கத்தை இவை உற்சாகமாக வரவேற்றன; 1942-ல் ஒஹியோ ராஜ்யத்திலுள்ள டிலாவேரில் நியாயமான நிலையான சமாதானத்திற்கான அடிப்படை என்பது பற்றி அறிக்கை ஒன்றைத் தயாரித்தன; ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தோன்றுவதற்கு இது ஒரு படியாக அமைந்தது. கத்தோலிக்கர்களும் பிராடெஸ்டெண்டுகளும், யூதர்களுடன் சேர்ந்து கொண்டு, மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்கினர். பொதுவாக, நாட்டின் சமய சக்திகள் யுத்தம், சமாதானம் என்ற பிரச்னைகள் பற்றி நடைமுறை ரீதியான அரசியல் அக்கறை கொள்ளத் தொடங்கிவிட்டன; நடைமுறைத் தந்திரங்களை மத ரீதியில் ஒப்பினாலும் ஒப்பாவிட்டாலும், சமாதானத்திற்கு நடைமுறைத் திட்டத்தைத் தயாரிப்பதில் (யுத்தத்தின் மூலமாகக் கூடத்தான்) உலகியல் ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்கின்றன.

பிராடெஸ்டெண்டுகள் மிதக் குடிப் பிரசாரம், சமாதானம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகையில், கத்தோலிக்கர்கள் 'ஆண்-பெண் உறவு நெறி,' 'பொது வாழ்வில் நாகரிக முறை,' 'குடும்பத்தைக் காத்தல்' ஆகிய விஷயங்களில் கவனம் செலுத்தி வந்தனர். நாகரிகமான பொது வாழ்வைப் பற்றிய பிரசாரம் 1934-ல் 'தேசியப் பொது வாழ்க்கையின் நாகரிக அணி'யாக உருவெடுத்தது; நாடகமேடை சினிமா ஆகியவையே இதன் இலக்குகளாக விளங்குகின்றன. ஸ்தல அரசியல் செல்வாக்காலும், ஹாலிவுட்டின் நிரந்தரத் தணிக்கையாளர்கள் மூலமாகவும் நாடக மேடையிலும் சினிமா படங்களிலும் மோசமான ஆபாசக் காட்சிகள் புகாமல் கத்தோலிக்க மதஸ்தாபனம் தடுத்து வருவதுமல்லாமல், பாதிரிமார்களுக்கு விரோதமான நாடகங்களும், மத உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடியவைகளும் நடிக்கப் பெறுமல் தடுத்து வருகின்றது. நாடகத்திலும் சினிமாவிலும் மட்டுமின்றி இலக்கியத்திலும் பத்திரிகையிலும் கூட நெறியற்ற காரியம் என்று கருதப்படுகிறது. மத நிந்தனை தத்துவ ரீதியான நாத்திகமும் அரசியல் நாத்திகமும் கண்டிக்கப்படுகின்றன; ஏனெனில் மதம் என்ற முறையில் இதற்குப் பொதுப் பாதுகாப்பு வேண்டும்; தீவிர உலகியல் வாதமோ, நெறியற்றதாகவும், சமயத்திற்கு விரோதமாகவும் இருக்கின்றது. இதர சமய கோஷ்டிகள் குறிப்பாகச் சில யூதர்களும், மக்கள் நலத்தின் ஈடுபட்டவர்களும் நாத்திகர்களுக்கு எதிரான கண்டனங்களை மறுத்த போதிலும், பெரும்பான்மையான கிறிஸ்தவர்களும் யூதர்களும் அறநெறிக்குச் சமய ஆதரவு தேவை என்ற கருத்தில் தங்கள் பொது எதிரிக்கு விரோதமாகச் சேர்ந்து கொண்டு கட்சி கட்டத்தான் செய்கிறார்கள். பொது நூல்நிலையங்களிலிருந்தும் பள்ளிகளிலிருந்தும் சில புத்தகங்களை நீக்குவதற்குக் கத்தோலிக்க அதிகாரிகள் இந்தக் காரணங்களைத்தான் நியாயமாகக் காட்டுகிறார்கள்; கொள்கை அளவிலேனும் பொய் மதங்களை ஒழிப்பதும் பொது சேவை என்று கத்தோலிக்கர்கள் கருதுவார்கள்; கத்தோலிக்க மதம் பொது ஆபத்து என்று சில பிராடெஸ்டெண்டுகள் கருதுவது போல, மற்றொரு புறத்தில் யூதர்களுக்கு விரோதமான உலகியல் அல்லது பொது எதிர்ப்பைக் கூட 'சமயக் கொடுமை' என்று

யூதர்கள் கண்டிக்கின்றனர். ஆனால் மொத்தத்தில் சமயப்பற்றில் கடுமையில்லாதவர்கள் பரஸ்பரம் தாக்கிக் கொள்ளும் பொழுது சமயத்தின் காரணமாகச் செய்து கொள்கிறார்களே யன்றி, பொது நாகரிக முறை என்ற காரணத்திற்காக அன்று உதாரணமாக, கிறிஸ்தவ விஞ்ஞானிகள் தேவாலய ஸ்தாபனத்தின் பிரசுர இலாக்காக்கள் தங்கள் கொள்கைகளைத் திரித்துக் கூறுவதைக் கண்டிப்பதற்காக இம்மாதிரியான தாக்குதலில் ஈடுபடுகின்றன; அது எப்பொழுதும் உஷாராக இருப்பதுடன் தனியார் கண்காணிப்பையும் நடத்தி வருகிறது. ஆனால் சமயம் எவ்வளவுக் கெவ்வளவு சக்திவாய்ந்ததாக ஆகிறதோ, அந்த அளவுக்குத் தன்னையும் பொது நலத்தையும் ஒன்றாகவே பாவிக்கிறது. ஆகவே பெரிய சமய ஸ்தாபனங்கள் பெரிய அறநெறிச் சிக்கலில் மாட்டிக் கொள்கின்றன. அவைகள் அநேகம் பொதுப் பணிகளைச் செய்கின்றன; பொது ஆதரவையும் பெறுகின்றன; ஆகவே தங்கள் ஸ்தாபனங்கள் இன்றியமையாதவை என்று கருதி விடுகின்றன. இவை யெல்லாம் சொந்த நலம்தான் என்று யாராலும் நிரூபிக்க முடியாததால், தங்கள் நலமும் பொது வாழ்வின் நாகரிகமும் ஒன்றே என்று இயற்கையாகக் கருதுகின்றன. இயற்கையான இந்தக் குறை பாட்டை இயற்கைக்கு மேற்பட்ட தெய்வ அருளின்றி வெல்ல முடியாது; இதனால் மதத்திற்கும் நாகரிக வாழ்க்கைக்கும் உள்ள உறவு பற்றிய தெளிவான அறிவு தேவைப்படுகிறது. இரண்டும் ஒன்று தான் என்பதையும், வெவ்வேறானவை என்பதையும் முற்காலத்தைப் போல் இப்பொழுது அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது.

இதேமாதிரி ஆண் பெண் உறவு நெறி, கர்ப்பத்தடை, விவாகரத்து ஆகிய விஷயங்களைப்பற்றி எழுந்துள்ள அபிப்பிராய பேதங்கள் உடல், மனம் பற்றிய வைத்தியப் பிரச்னைகளுக்கும் சமயம் பற்றிய அறநெறிப் பிரச்னைகளுக்கும் உள்ள சம்பந்தம் பற்றிப் பல சர்ச்சைகளைக் கிளப்பிவிட்டன. கத்தோலிக்கர் கொள்கை தெளிவாகவும் பிடிவாதமாகவும் இருக்கிறது; உடலின் பசிகள், குறிப்பாகக் காமம், திருமணம், கர்ப்பம் ஆகியவற்றைக் கத்தோலிக்க ஸ்தாபனங்கள் அறநெறிப் பிரச்னைகளாக அதிகார முறையில் ஏற்றுக்கொண்டு விட்டபடியாலும், இவைகளை எல்லாம் பாவ ஒப்புதல்,

பிராயச்சித்தம் முதலிய முறைகளால் கட்டுத்திட்டத்திற் குள்ளாக்க முயல்வதாலும், மனச்சாட்சிப் பிரச்னைகளாக இருப்பவைகளுக்கு அவ்வப்பொழுது அதிகார பூர்வமாக வழிகாட்டுகின்றன. சில வைத்திய முடிவுகளின் அறநெறித் தன்மைபற்றி, குறிப்பாக கஷ்டமான பிரசவங்கள் பற்றி, 1951-ல் போப்பாண்டவர் கூறியவை அமெரிக்காவில் விவா தத்தையும் கண்டனத்தையும் எழுப்பின.

1943-ல் பிரான்ஸிலிருந்து கத்தோலிக்கர்கள் கொண்டு வந்த 'கானா மகாநாட்டு இயக்கம்' புது மணத் தம்பதிகள் திருமணம், பிரஜா உற்பத்தி பற்றி விவாதிக்கக் கூட்டங் களுக்கு ஏற்பாடு செய்தது; அது தம்பதிகளுக்குக் கூறும் யோசனை வருமாறு :

"இயக்கத்தைக் காக்கும் தெய்வமாகிய அன்னை மேரி, கானா திருமணத்தின்போது 'அவர் சொல்வதெதையும் செய்' என்று கூறியதை நினைவில் கொண்டு, ஆணையும் பெண்ணையும் படைத்துப் பெருகி வாழ்க என்று கட்டளையிட்ட சிருஷ்டி கர்த்தரின் கருத்தை இவ்வியக்கம் திருமணமானவர்களுக்குப் பரிசாக அளிக்கிறது." வைதீக யூத மதத்திலும் ஆதாரவாத கிறிஸ்தவ மதத்திலும் அறநெறியின் பிரமாணத்தைப்பற்றி அவ்வளவு தெளிவான கருத்தில்லை. தாராளமனப்பான்மை கொண்ட பிராடெஸ்டெண்டுகளும் யூதர்களும் நெகிழ்ந்து கொடுக்கும் கொள்கையால் ஏற்படும் லாப நஷ்டங்களை அடைந்திருக்கின்றனர். நிதானமாக இருக்கவேண்டுமென்ற நினைப்பில் வைதீகமாக இருந்து விடுகின்றனர்; சாதாரண மக்களுக்குச் சரியான வழி காட்டவேண்டுமென்ற நினைப்பில், பாதிரிமார்களும் இந்த ஆலோசனை நிபுணர்களின் கருத்தை ஜாக்கிரதையாகப் பின்பற்றி விடுகின்றனர். எனவே வைத் தியர்கள் விவேகமானதென்று கருதுவதை இவர்கள் நெறி யானதென்று கூறத் தயாராக இருக்கின்றனர். பிராடெஸ் டெண்டு வட்டாரங்கள், தாராளப்பான்மை கொண்ட வட் டாரங்கள் ஆகியோருடைய அறநெறி முடிபுகளுக்கும் வைத் தியர்களின் முடிபுகளுக்கும் அதிக முரண்பாடு இருப்பதில்லை; அறநெறிச் சங்கத்தாரும், ஜீவதயாவாதிகளும், சீர்திருத்த யூதர்களும் நவீன வைத்தியத் தொழிலுடன் முழுதும் ஒத்திருக்க விசேஷ முயற்சி செய்கின்றனர்.

இவற்றின் விளைவாக வைத்தியத் தொழிலும் குறிப்பாக மனநோய் வைத்தியத் தொழிலும், புரோகித, குருமார் தொழிலும் இணைந்துவிட்டன. பிரச்னைகள் பொதுவானவை என்பதைப் பகிரங்கமாகவோ இரகசியமாகவோ வந்து ஆலோசிப்பதாக ஒப்புக்கொண்டு விட்டனர். வைத்தியர்கள் அறநெறிகளைப் பற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறார்கள்; வியாதியை நிர்ணயிக்கும் முறை எவ்வளவு பழுதாகத் தோன்றினாலும், சில மத கட்டு திட்டங்களால் வைத்திய ரீதியில் ஏற்படும் பயனை ஒப்புக் கொள்கிறார்கள். உலகியல் ரீதியான மனநோய் அறிவைச் சம்பாதித்துக்கொண்டு அதன் துணையால் தமது சேகரத்தாருக்கும், பாவ ஒப்புதல் செய்ய வருபவருக்கும் யோசனை கூறப் பாதிரிமார்கள் துடிதுடிக்கின்றனர். அறநெறிப் பிரச்னைகளை அணுகும் இவ்விரு முறைகளும், கொஞ்சம் கொஞ்சமாக, அரைமனத்துடன், இணைந்து கொண்டுவருகின்றன; பாவம், மோட்சம் என்ற பிரச்னைகளில் பல உடல்நலத்தைப் பற்றிய பிரச்னைகள் என்று உணரவும் தொடங்கி விட்டனர். மனநலம், சமூக நலம் என்பன போன்ற சொல்லாகத்தான் மோட்சம் என்ற சொல்லும் ஆகிவிட்டது; இக்கருத்துக்களிடையே பாதிரிமார்களும் மனநோய் வைத்தியர்களும் முன்பு எண்ணியதை விட அதிக நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. தங்கள் கொள்கை முரண்பாடுகளையும் மறந்து, சமய ரீதியான நுணுக்கவாதமும் விஞ்ஞான ரீதியான மனநோய் வைத்திய முறையும் உலகியல் ரீதியான நெறிமுறையும் மக்களின் உயிரையும் ஆன்மாவையும் காப்பாற்ற முயல்வதே இருபதாம் நூற்றாண்டின் பெரிய அறநெறிப்படைப்பாகும்.

அறப் பிரச்னைகளில் முக்கியமானதாகக் கருதப்பட வேண்டியது மனித இனங்களிடையே இருக்கவேண்டிய உறவுகளாகும்; குறிப்பாக நீக்ரோ மதஸ்தாபனங்களும், தேவாலயங்களில் நீக்ரோக்கள் ஸ்தானமும் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள். 1920-ல் சமஷ்டி கவுன்சில் நீக்ரோக்கள் விஷயத்தில் சட்டப்படிக்கான நியாயம், 'சகோதரத்துவக் கொள்கை அமல்' என்னும் நோக்கோடு திட்டம் வகுத்தது. இன உயர்வுக் கொள்கையைக் கண்டித்து, விசாரணையின்றித் தண்டிக்கும் முறையையும் இனப் பாரபட்சத்தையும் தடுக்கச்

சட்டம் செய்ய வேண்டும் என்பதையும் திட்டமாக்கிக் கொண்டது. வடக்குக் கிளைகளையும் தெற்குக் கிளைகளையும், (குறிப்பாக மெதாடிஸ்டுகளையும் பாப்டிஸ்டுகளையும்) இணைக்க முயன்ற பெரிய சமயப்பிரிவான பிராடெஸ்டெண்டு களுக்கு இனப்பிரச்னை தருமசங்கடமாக இருந்தது; ரோமன் கத்தோலிக்கர்களும் இப்பிரச்னையில் கவலை கொள்ளவில்லை. ஆனால் இப்பிரச்னையைச் சமாளிக்கும் நிலை, ஒரு கட்டத்தில் இல்லாவிட்டால் வேறு ஒரு கட்டத்தில், எல்லாச் சமய ஸ்தா பனங்களுக்கும் ஏற்படத்தான் செய்தது. நியூ யார்க்கில் இருந்த நிலைமையைச் சமாளிக்க நியூயார்க் கத்தோலிக்கர்கள் சர்வ இனக் கவுன்சிலும் கேந்திரமும் அமைக்கப்பட்டன. அவற்றினுடைய பத்திரிகையான 'சர்வ இன ரெவியு' என்ற பத்திரிகை மூலம் இவை விரிந்த செல்வாக்குப் பெற்றன; நிற வரம்பை உடைக்கவென்றே பிராடெஸ்டெண்டுகள் அநேக சர்வ இனத்தோழமைச் சங்கங்களை அமைத்தனர். நீக்ரோக் களைப் பற்றிய சமயப் பிரச்னை, பொதுப் பிரச்னையாகிய இனத்துவேஷம், இனத் தடைகளைவிட சிக்கல் கொண்டது, வேறுபட்ட தன்மை கொண்டது; ஏனெனில், நீக்ரோ தேவாலயங்கள் ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குள் தமக்கே உரித்தான வழிபாடு, ஆன்ம அனுஷ்டான முறைகளை உரு வாக்கிவிட்டன. தங்கள் வழிபாட்டு முறையால் தாங்களே பெருமையும் திருப்தியும் அடைந்தது தவிர உலகத்தின் ஆன்ம வாழ்வுக்கும், அமெரிக்கக் கலாசாரத்திற்கும் அவை ஒரு லாபம் என்றே இப்பொழுது கருதப்பட்டு வருகிறது. எனவே இன ஒதுக்கலைத் தகர்க்க முயலும் அவசர முறைகளால் இந்த உண்மையான சிருஷ்டியைக் குலைத்துவிடக் கூடாது; செயற் கையான இன ஒதுக்கலும் இன இணைப்பும் விலக்கப்பட வேண்டும். இருந்தாலும் நீக்ரோ தேவாலயங்களின் நன் மதிப்புக்களைக் கெடுக்காமல் சமூக இனத் தடைகளை அழிக்க முடியும் என்பது சமீப காலத்திய சோதனைகளாலும் போக்காலும் தெரிந்துவிட்டது. வடக்கிலும் தெற்கிலும் உள்ள தற்காலத்திய இளம் தலைமுறையினர் இந்த நிறப் பாகுபாடுகளை ஒழிக்கக் காட்டும் சிரத்தை முக்கியமான விஷயமாகும். மனப்பான்மையில் ஏற்பட்டுள்ள மாறுதல் புரட்சிகரமாக இருக்கிறது; ஆனால் இதில் சமயத் தூண்டுதல்

எந்த அளவுக்குக் காரணம் என்பதை எளிதில் கூறமுடியாது. இருந்தாலும் மதப்பற்றுள்ள இளைஞர் ஸ்தாபனங்கள் தீவிர வேலை செய்திருப்பதை மறுக்கமுடியாது. கீழை நாட்டு இனத்தவர்களுடன் கொள்ளும் உறவு முறைகளின் சமய ரீதியான பிரச்னை வேறுவிதமானது; கீழை நாட்டுச் சமயங்களுடன் தோழமை கொள்வதில் அதிக அபிவிருத்தி ஏற்படவில்லை. இருந்தபோதிலும் இரண்டாவது உலகமகாயுத்தத்திலும், பின்னரும், இடம் பெயர்ந்த ஜப்பானியர்களைப் பராமரிப்பதில் உள்நாட்டு சமய ஸ்தாபனங்கள் காட்டிய சிரத்தை பாராட்டுக்குரியது.

## சமூகக் கொள்கை

அமெரிக்கச் சமயத்தில் ஏற்பட்டுள்ள நிரந்தர அற ரீதியான புனரமைப்பு எதுவென்றால், சமூகக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள செல்வாக்குத்தான் கத்தோலிக்கர்கள், யூதர்கள், பிராடெஸ்டெண்டுத் தேவாலயங்கள் அவற்றின் முக்கிய கோஷ்டிகள் ஆகியவர்களை எல்லாம் இது கவர்ந்துவிட்டது; இது சமூக நெறி அடிப்படையின்மீது சமயத்தைத் திருத்தி அமைக்கும் முயற்சியின் சிகரம்; இதை இன்றைய சமயப் புரட்சி என்று கூறலாம். மனிதவர்க்கம் சமுதாயமாக மீட்சி அடைவதும், மோட்சமடைவதும், சமூக அமைப்பு புத்துயிர் பெறுவதும் சமயத்தின் முடிவான லக்ஷியம் என்பதுதான் இதன் மையக் கருத்துக்களாகும். இந்தக் கொள்கை, லக்ஷியக் கனவு சோஷலிசத்தைப்போல், பழமையானது; பத்தொன்பதாம் நூற்றுண்டில் அதைப் பல தீவிர வேறுபாடுகளுடன் அமெரிக்காவில் பிரசாரம் செய்திருக்கின்றனர், சமய சித்தாந்த ரீதியில் சமய குரவர் ஹென்ரி ஜேம்ஸின் சித்தாந்தம்தான் மூலாதாரமான அடிப்படையை கொண்டது. கால்விணிசம், பூரியரிசம், ஸ்வீடன்பர்க் மார்க்கம் என்பவற்றின் ஆதாரத்தின்மீது தம் சித்தாந்தத்தை உருவாக்கினுர். ஆதாம் கடவுள் நிலையிலிருந்து இழிந்தபோது ஒவ்வொரு மனிதனும் இழிந்தவனுனன். அதே மாதிரி தெய்வீக மனிதவர்க்கத்தில், எல்லா மக்களும் சமுதாயமாக மோட்சம் பெறுவர் என்று போதனை செய்தார். அமெரிக்கக் கிறிஸ்தவர்களுக்குள் எலிஷா மல்போர்டின் எழுத்தும், வாஷிங்டன்

கிளாடனின் சமயப் பிரசங்கங்களும் செல்வாக்குப் பெற்றன. ஹென்றி ஜியார்ஜும், எட்வர்ட் பெல்லாமியும், பாப்யுலிஸ்டு இயக்கமும் 'சமூக தேசீயத்தில் நடைமுறையான அக்கறையை உண்டாக்கிய பிறகு, பாதிரிமார்கள், சாதாரண மக்கள் உள்ளிட்ட அநேகக் கிறிஸ்தவ சோஷலிஸ்டுகள் (பொருளாதார நிபுணர்கள்கூட) இவ்வியக்கத்திற்குச் சித்தாந்த ரீதியான அடிப்படையை அமைத்தனர்; 1900-ம் ஆண்டுக்குமுன் அமெரிக்கர்களிடையே நடைமுறை வேகத்தை ஊட்டினர். தீவிர சமயவாத சோஷலிஸ்டுகளில் ஹென்றி செரொன்னி ஒருவர். அவர் 1880-ல் 'உழைப்பாளர் தேசீயக் கவுன்சிலை' அமைக்க முயன்றார்.

நூற்றுண்டின் முதல் கால் பகுதியில், தேவாலயங்களிலும் குருமார் பயிற்சிப்பள்ளிகளிலும் சிலர் சமூகக் கொள்கையை விளக்கிப் போதனையும் பிரசாரமும் செய்தனர்; சாதாரண மக்களைவிட பாதிரிகள் இதில் அதிக உற்சாகம் காட்டினர். நூற்றுண்டின் முதல் பத்து வருஷத்தில் சமூக சேவைக்கான மத்தியபோர்டுகளை அமைக்க மத ஸ்தாபனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டபோதிலும், போர்டுகளின் நடவடிக்கைகளும் அபிப்பிராயங்களும் ஸ்தலத் தேவாலயங்களிடமும் பாதிரிமார்களிடமும் செல்வாக்குப்பெறவில்லை. ஐரோப்பியக் கத்தோலிக்கர்களுக்குப் போப்லியோவின் கட்டளை சமூக சேவைக்கான ஆதரவாக இருந்தபோதிலும், 1919-ல் அத்தியக்ஷ குருக்கள் அதைப் பற்றி வற்புறுத்தும் வரையில் அமெரிக்கப் பாதிரிமார்கள் அலக்ஷியமாகவே இருந்தனர்; அப்பொழுதும் பத்து வருஷத்திற்குப்பின்வரை பொது அக்கறை தோன்றவில்லை.

முக்தி என்பது தனிப்பட்டவர்களின் பரலோக விஷயம் என்ற கருத்துத் தனியாரின் தரும சிந்தனையைத் தூண்டுவதாலும், ஆன்ம சுயநலம் என்று சுட்டிக் காட்டுவதாலும் அதைக் குலையச் செய்தனர். தன்னைப் பற்றிக் கவலைப்படுவதைவிட பிறரைப்பற்றிக் கவலைப்படுவதே இருபதாம் நூற்றுண்டின் சிறப்பு. நன்மை செய்வதே கடவுளுக்கு அன்பு காட்டும் வழி என்று சாதாரணமாகக் கருதப்பட்டது. கிறிஸ்தவ இளைஞர் சங்கம், கிறிஸ்தவப் பெண்கள் சங்கம், இதர இளைஞர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் மையக் கருத்தும்

இதுவே ஆகிவிட்டது. தனியார் சுதந்திரம் என்ற வாதத்தின் கோட்டையாகிய பிரின்ஸ்டன் பிரெஸ்பிடிரியர்களிடையே கூட அறச்சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதல் புலப்பட்டது; உதாரணமாக, 1908-ல் உட்ரோ வில்ஸன் சமயக் கல்வி மாணவர்களிடையே பேசியபொழுது கூறியதாவது: "என்னைப் பற்றிய வரையில், தனியார் சுதந்திரம் என்ற வாதத்தின் உண்மையான அடிப்படையை ஏற்காத வரையில், மத ஸ்தாபனங்களும் சமூகமும் சக்தி பெற வழியில்லை என்று நினைக்கிறேன்........ பாதிரிமார்கள் மக்களுக்குப் போதனை செய்ய வேண்டும்; சமூகத்திற்கல்ல, தனி நபருக்கு மோட்சத்தைப் பற்றிப் போதிக்க வேண்டும்; ஏனென்றால் ஒவ்வொருவராகத்தான் நம்மால் நேசிக்க முடியும். அன்பே வாழும் வழி."

ஆனால் 1914-ல் தம்முடைய புதிய 'அரசியல் சுதந்திரத்'திற்கு உதவியாகச் சமுதாய சம்பந்தமான கொள்கை பற்றி ஜாக்கிரதையாகப் பிரஸ்தாபித்தார். கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தில் 'வீரக் கிறிஸ்தவ சமய'த்தைப் பற்றிப் பேசுகையில், அவர் பின் வருமாறு கூறினார்:

"தனிப்பட்டவரின் ஆன்மாவைக் கடைத்தேற வைக்கும் மதம்தான் கிறிஸ்தவ மதம் என்று நினைக்க நான் விரும்பவில்லை..... ஏசுநாதர் பிறரை வாழ்விக்க அவதரித்தார்—தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அன்று; தன் சகோதரனை எப்படி உயர்த்தலாம், மனித வர்க்கத்திற்கு எப்படி ஒளி ஊட்டலாம், தான் வாழும் மண்டலத்தாரின் வினைகளில் நன்னெறியின் ஆட்சியை எப்படி அமைக்கலாம் என்று நினைக்காதவன் உண்மையான கிறிஸ்தவனாகமாட்டான்"

ஆனால் வில்சன் கனவுகூடக் காணாத அளவுக்குச் சமூகக் கொள்கை சென்றுவிட்டது. 1907-ல் பேராசிரியர் வால்டர் ரூஷன்பஸ்க் (அப்பொழுது நியுயார்க், ராசெஸ்டர் பாப்டிஸ்டு குருமார் பயிற்சிப் பள்ளியில் இருந்தவர், அதற்கு முன்பு நியுயார்க் நகர சமூக சேவை செய்தவர்,) "கிறிஸ்தவ மதமும் சமூக நெருக்கடியும்" என்ற புத்தகத்தை வெளியிட்டார். பிராடெஸ்டெண்டுப் பாமர மக்களிடையே சமூகக் கொள்கை ரீதியான அக்கருத்துக்கள் சமயக் கற்பனை

யையும் உணர்ச்சியையும் தூண்டிவிட்டன. சமூகச் சீர் திருத்தங்களை நெருக்கடிகளைப் போலக் கருதி, 'கடவு ளாட்சியை மண்மீது அமைப்போம்' என்று கூறி, சம்பிர தாயமான சமயக் கூற்றுக்களுக்குப் புதிய நடைமுறைப் பொருளளித்தார். இக் கொள்கை சீர்திருத்தத்திற்கான தெய்வீக வேகத்தை உண்டாக்கியது. இருபதாம் நூற் றுண்டில் தேவாலயங்களின் சமூக சேவைக்குச் சம்பிரதாய மான தரும முயற்சிகளுக்கு மேற்பட்ட தீவிரப்போக்கை அளித்த பிராடெஸ்டெண்டு ஊழியர்களில் பின்வருபவர் களைக் குறிப்பிடவேண்டும்: (1) சார்லஸ் ஸ்டெல்ஸிலி; 1903-ல் பிரெஸ்பிடீரியன் போர்டு உள்நாட்டு மிஷன்களில் சமய இலாகாவையும் தொழிலாளர் இலாகாவையும் அமைத்தார்; தம் சமயப் பிரிவில் இருந்த பெரும்பான்மை யோரான வைதிகவாதிகளுடன் முரண்பட்டும் போரிட்டுக் கொண்டே யிருந்தார். (2) ஹாரி எப். வார்ட் மெதாடிஸ்டு களிடையே இதே சேவையைச் செய்தார்; சோஷலிஸ்டுக் கட்சி, பிரஜா உரிமைச் சங்கம் ஆகியவற்றின் அரசியலி லும் செயல் தந்திரத்திலும் சமய ஸ்தாபனத்தை ஈடுபடுத்த முயன்றுர். (3) ஷெயிலர் மாதியூஸ், கிரஹாம் டெயிலர்; சிக் காகோ சர்வகலாசாலை வட்டாரங்களிலும் நடைமுறை சமூக வேலைகளிலும் இவ்வியக்கத்திற்கு வழி காட்டினுர்கள். (4) எப் எர்னெஸ்டு ஜான்சன்; சமய ஸ்தாபன சம்மேளனக் கவுன்சிலின் வேலைக்கு வழி காட்டினுர். 1908-ல் சம்மேளனக் கவுன்சில் வெளியிட்ட பழைய சமூகக் கொள்கையை 1930-ஐத் தொடர்ந்த ஆண்டுகளில் புதுப்பிக்க உதவி செய் தார். (5) ரெயினுல்ட் நியபூர், அவர் சகோதரர் ஹெச். ரிச்சார்ட் நியபூர் என்ற இருவரும் சமூகக் கொள்கைக்கு நடைமுறை ரீதியான சமூக இயல் சாத்திரச் சாயலை அளித் தனர்; 'பூர்ஷ்வா' மனப்பான்மை என்னும் குற்றச்சாட்டி லிருந்து விடுவிக்க முயன்றனர், இவர்களும் இவர்களைப் போன்றவர்களும் சேவை செய்ததன் பயனுகப் பெரிய சமய ஸ்தாபனங்களின் மத்திய நிர்வாக போர்டுகளும் கேந் திரங்களும் மட்டுமின்றிப் பாதிரிமார்களில் பலரும் சமூக அமைப்பைக் கிறிஸ்தவ மயமாக்கும் வேலையில் இறங்கிவிட் டனர்.

தற்காலச் சமூக அமைப்பில் உள்ள முரண்பாடுகளையும் தீமைகளையும், நியாயம், நெறி என்ற அடிப்படையில் தீர்க்கும் முயற்சிகளில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்று 1885-ல் சீர்திருந்திய யூத சமய அறிஞர்கள் பிட்ஸ்பர்க் மேடையில் சிறிதளவு கூறினர். ஆனால் அதற்குப் பிறகு அமெரிக்க யூத சமயக் கிளைகள் மூன்றும் சமூக நியாயம் என்ற கொள்கையைத் தீவிரமாக ஆதரித்து வருகின்றன. அமெரிக்க சமய மேலதிகாரிகள் சமூகப் புனரமைப்பு வேலைத் திட்டம் ஒன்றை வகுத்து அனுப்பியதன்பேரில், கத்தோலிக்கர்களுக்குள்ளே சமூகக்கொள்கைவாதிகளில் முக்கியமானவர்கள் தேசிய கத்தோலிக்க மக்கள் நல மகாசபை, சமூக வினைத் துறையைச் சேர்ந்த ஜான்.ஏ. ரயானும் ஆர். ஏ. மக்கோவனும் தொழிலாளர்களிடையே வெற்றிகரமான செல்வாக்குப் பெற்றுள்ள ஸ்தாபனங்களில் கத்தோலிக்கத் தொழிற்சங்கத்தைக் கூறவேண்டும். (1937) 1920-க்கு மேல் தேசியக் கத்தோலிக்க மக்கள் நல மகாசபை உருவாக்கப்பட்டது; இப்பொழுது நாட்டில் சமய ரீதியான சமூகப் பணி புரியும் ஸ்தாபனங்களில் ஒன்றாக அது விளங்குகின்றது. எட்டு இலாகாக்கள் மூலம் அது பணி புரிகின்றது; இவை, நிர்வாகம் (குடியேறுவோருக்கு உதவி, கோட்பாடு, செய்தி, பிரசுரம் ஆகிய துறைகள் அடங்கியவை); கல்வி, பத்திரிகை, சமூகப் பணி (தொழில் உறவு, குடும்ப வாழ்வு, கிராம வாழ்வு, சமாதானமும் யுத்தத்திற்குப் பிந்திய பிரச்னைகளும், கடன் சுகாதாரமும் அடங்கியவை); சட்டம் (சட்ட சபை வெளி அறையில் இயங்குவது); கத்தோலிக்க வினை முறை ஆராய்ச்சி, இளைஞர்கள் (தேசியக் கத்தோலிக்க இளைஞர் கவுன்சில், நியுமன் கிளப் சம்மேளனம் முதலியன அடங்கியவை.) சாதாரண உலகியல் சங்கங்கள் என்பவையாம். இந்த நிரந்தரத் துறைகளைத் தவிர, தேவைப்படும்போது விசேஷப் பணி புரியவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. உதாரணமாக யுத்த நிவாரணம், அகதிகள் சேவை (1936), தேசியக் கண்யக் குழு (1934), நியு யார்க் கத்தோலிக்க சர்வ இனக் கவுன்சில் (1934). கத்தோலிக்கத் தொழிற் சங்கங்களின் குழு (1937) அமெரிக்கப் பிரஜா உரிமைக் கமிஷன் (1919). தேசியக் கத்தோலிக்க சமுதாய சேவை (1940). கத்தோலிக்கர்கள்

வலிமையாயுள்ள தொழிலாளர் மண்டலத்தில் கத்தோலிக்கத் தொழிலாளர் இயக்கம் 1933-முதல் வேலை செய்து வருகின்றது; "கத்தோலிக்கத் தொழிலாளி" என்ற மாதாந்தரப் பத்திரிகையை நடத்தி வருகிறது; 65,000 பிரதிகள் விற்பனையாகின்றன.

1946-க்குள் பிராடெஸ்டெண்டுகள் யூதர்கள் கத்தோலிக்கர்கள் "பொருளாதார தருமப் பிரகடனத்தை" ஒன்று சேர்ந்து உருவாக்கினர்; 19-ஆம் நூற்றாண்டில் இவர்களில் எவரும் இந்த அளவுக்குப் போனதில்லை. இதற்கிடையில் நியுயார்க்கிலும் இதர நகரங்களிலும், டாக்டர் பெலிக்ஸ் ஆட்லரின் கருத்துக்களின் தூண்டுதலால் நெறி ரீதியான கலாசார சங்கங்கள் தோன்றின; சமூகநெறியை நடைமுறை ரீதியில் வகுப்பதில் ஒன்றுபடக் கூடியவர்களையும், பலவகைப் பட்ட மதப் பற்றுள்ளவர்களையும், பலவகைப்பட்ட மதப் பற்றுள்ளவர்களையும், மதப்பற்றே இல்லாதவர்களையும் அவை இணைத்தன. நடைமுறை ரீதியான புனரமைப்புத் திட்டத்திற்குச் சமய ரீதியான வித்தியாசங்களைப் பாராட்ட வேண்டியதில்லை என்ற தாராளப் பான்மை கொண்ட அமெரிக்க மதத்தினர் போக்கை இச்சங்கங்கள் பிரதிபலித்தன. கிறிஸ்தவ சோஷலிஸ்டுகளைப் போல் சமூக அமைப்புக்களால் உருவாகும் மக்களைக் கொண்டே சமூக அமைப்பை மதிப்பிட வேண்டும் என்றும், பொது அளவைகளால் மதிப்பிடக்கூடாதென்றும் இவை வற்புறுத்தின.

பொருளாதாரப் பிரச்னைகள் பற்றிச் சமய ரீதியான சிந்தனையும் செயலும் மேற்கொண்ட போக்குகளை விவரிப்பது கடினம்; ஏனென்றால் உலகியல் சிந்தனையும் செயலும் எவ்வளவு பல வகைப்பட்டவையாக இருக்கின்றனவோ அவ்வளவு இவையும் பல வகைப்பட்டவையாக இருக்கின் கின்றன. மொத்தத்தில் உலகியல் ரீதியான மனச்சாட்சியைச் சமய ஸ்தாபனங்கள் பிரதிபலித்தன என்று கூறுவதில் தவறில்லை; வழிகாட்டின என்றோ, பின் தொடர்ந்தன என்றோ ஒரே விதமாகச் சொல்ல முடியாது. சமூக நியாய விஷயங்களில் தாங்கள்தான் மக்களின் அறவழிகாட்டிகள் என்று மத ஸ்தாபனங்கள் நினைக்கின்றன; சமய ஸ்தாபன விரோதிகள் மத ஸ்தாபனங்கள் பிற்போக்கானவை என்று

கருதுகின்றனர். இரு கருத்துக்களும் சரியல்ல. சமூகச் சீர் திருத்தத் தலைவர்களில் பாதிரிமார்களும், மதப்பற்றுள்ள சாதாரண மக்களும் எப்பொழுதும் இருந்திருக்கின்றனர். இருந்தாலும் சீர்திருந்தாதவர்களின் பிரதிநிதியாக இருப் பதுதான் சமய ஸ்தாபனங்களின் வேலை. சாதாரணப் பத் திரிகை, நாடக மேடை, சமூக இயல் சாத்திரப் பேராசிரியர் கள், அரசியல் கட்சிப் பிரசாரங்கள் ஆகிய எல்லாவற்றிற் கும் மேலாக தேவாலய மேடையும் சமயப் பத்திரிகைகளும் சாமானிய அமெரிக்க மக்கள் சரி, தவறு என்று தெரிந்து கொள்வதற்கு உருவமும் உணர்ச்சியும் அளிக்கின்றன. சீர்திருத்தங்களை அவை உண்டாக்கின என்று கூற முடியாது. (முதலாவது அத்தியாயத்தைப் பார்க்க) ஆனால் சீர்திருத் தம் அவசியம் என்பதை அவை திறமையாகப் 'பதிவு' செய்து காட்டுகின்றன.

சமூகக் கொள்கையில் ஆரம்பத்தில் காணப்பட்ட அழுத் தம் 'பாபுலிஸ்டு' என்ற மக்கள் முன்னேற்றத்தை வற்புறுத் தும் இயக்கத்தின் பிரதிபலிப்பேயாகும்; அவ்வியக்கம் முதலா ளித்துவம் என்ற கொள்கையும், ஆதாயம் என்ற பேராசை யும் கண்டித்து வந்தது; (முதலாளித்துவம் என்னும் போது தொழிற்சாலைகளைவிட 'பாங்கு' முறையையும் 'பணப்பேயை யும்' தான் அந்த இயக்கம் மனத்தில் கொண்டிருந்தது). மனி தர்களிடையே கூட்டுறவு, மனிதனுக்குத் தர வேண்டிய பெருமை, தோழமை, பரஸ்பர உதவி என்ற உணர்ச்சிகளைப் பொருளாதார அமைப்பைப் பண்படுத்துவதுதான் இந்த இயக்கத்தின் நோக்கம். பெரிய தீமையான பேராசை மீது தான் வெற்றி பெற வேண்டும்; பேராசை இரு தன்மைகள் உடையது—ஸ்தாபனமாகவும் நோக்கமாகவும் இருப்பது. மனிதவர்க்கத்தின் சகோதரத்துவம் ஸ்தாபனமாகவும் வினை களுக்கான நோக்கமாகவும் மெய்ப்பட வேண்டும் என்பது தான் இந்த இயக்கத்தின் அடிப்படை. வர்க்க உணர்ச்சிக்கு இதில் தூண்டுதல் இல்லை; அதற்கு மாறாக, 'வர்க்கம்' 'பாமர மக்கள்' போன்ற கருத்துக்கள் சமயக் கொள்கைக்கு முரண் பட்டவை; வர்க்க உணர்ச்சி என்று பேசுவதில் மக்களுக்குக் கவர்ச்சியில்லை என்பதையும், மார்க்ஸீயம் அந்நியத் தன்மை கொண்டது என்பதையும், அமெரிக்க சோஷலிசம் நினைவில்

கொள்ளத்தான் வேண்டியிருந்தது. கிறிஸ்தவர்களும் யூதர் களும் சமூக நீதி என்பதை வெறும் சட்டமாகப் பாவிப்ப தில்லே: சொந்த உரிமைகள், தேவைகள் என்ற உணர்ச்சியு டன் அணுகுகின்றனர். எனவே (ஏகபோக உரிமைகளை எதிர்ப்பது, தர்மங்களுக்கு விரோதமான சட்டங்களை எதிர்ப் பது நீங்கலாக) அவர்கள் செயல் முறை சர்க்காருக்கு எதிர்ப் பாக அமையாமல், முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே தொழிலாளர் நலத்தில் அக்கறையை உண்டாக் கும் முயற்சியாகவே அமைந்தது. அதே மாதிரி உழைப்பா ளர் சங்கங்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் கூட்டான பேரம், வர்க்கப் போராட்டம் நடத்தக்கூடிய சக்திகள் என்ற முறையில் பெருமைதராமல், நன்மையும் பாதுகாப்பும் விளை விக்கும் ஸ்தாபனங்கள் என்ற முறையில் ஆதரவு தந்தனர். ரிட்ஷில், ட்ரொயெல்ட்ஸ்க் ஆகியோரின் ஜெர்மானிய சமூக வளர்ச்சி இயல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ரூஷன்பஸ்க் கூடக் 'கடவுளின் அரசு' என்பதை மனநோக்கில் ஏற்பட வேண்டிய புரட்சியாகவே கருதினர். 1907-ல் அவர் எழுதியதாவது :

"மக்களின் பேராசையைத் தூண்டி வளர்க்கக் கூடிய சமூக அமைப்பைத் திட்டமிட்டு உருவாக்க விரும்பினுல், நம் முடைய அமைப்பைவிட எந்தச் சிறந்த அமைப்பை உண் டாக்கிவிட முடியும் ? வியாபாரப் போட்டி சுயநலத்தை அற நெறிக் கொள்கையாக்கி விடுகிறது...அமைதியான, அன் புள்ள நண்பர்களும் அண்டை அயலார்களும் கூடக் கடை களிலும் ஸ்டோர்களிலும் நெஞ்சில் ஈரமற்று வேலைவாங்கும் நிபுணர்களாக மாறிவிடுகிருர்கள். போட்டிக் கொள்கைக் கும் சமுதாயக் கொள்கைக்கும் உள்ள அற முறையான வித் தியாசங்களைப் பொது மக்கள் அறியும்படி சமய ஸ்தாபனங் கள் செய்ய வேண்டும்; கிறிஸ்தவப் பண்புள்ளதையே ஆதரிக் கும்படி சமய உற்சாகத்தை உருவாக்க வேண்டும்."

பின்னர் 1912-ல் ரூஷன்பங்க் கூறியதாவது : "மனிதர் களைவிடப் பொருள்களை மேலாகக் கருதுவது அபாயகரமான நடைமுறை லோகாயதம் கடவுளை விட்டுவிட்டுப் பணப் பேயை ஆராதிப்பதைத்தான் ஏசுநாதர் கண்டித்தார்,"

1933-ல் கூட சமய ஸ்தாபன சம்மேளனக் கவுன்சில் இந்தக் கருத்தைத் தெரிவித்தது : தனிமனிதனின் லாபம் என்ற கருத்துக்குப் பதிலாக பரஸ்பர உதவி, நல்லெண்ணம் என்பவை பூர்ணமாக அமையாத வரையில் கிறிஸ்தவரின் மனச்சாட்சி திருப்தி அடைய முடியாது.''

பதிமூன்ருவது போப் ஆண்டவர் லியோ விதித்த கட்டளையிலிருந்து (ரேரம் நோவாரம், 1891) ஆதரவு பெற்ற ரோமன் கத்தோலிக்கர்களும் இதையே கூறினர்; சமூக அமைப்பைச் சீர்திருத்தியாக வேண்டுமென்றனர்; ஆனுல் மனத் தூண்டுதலேவிடக் கட்டுத்திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். நியாயமான தருமமான சமூக அமைப்பில் பிழைப்புக்கான ஊதியமும், நியாய விலேயும் அமைய வேண்டும்; இவற்றைப் பெறுவதற்காகப் போட்டியையும் பொருளாதார ஆதிக்கியத்தையும் நியாயமான கட்டுத்திட்டங்களுக்கு உள்ளாக்கியாக வேண்டும். பிராடெஸ்டெண்டுகளேவிட ரோமன் கத்தோலிக்கர்கள் சமத்துவத்தைக் கொண்டாடினர்; கூட்டுறவு, கூட்டுப் பங்காளி ஏற்பாடு மூலம் சொத்துரிமையை ஜனநாயக முறையில் வினியோகம் செய்ய வேண்டும் என்றனர். ஆனுல் பொதுவாக, எல்லாச் சமய கோஷ்டிகளும் பொருளாதார ஜனநாயகத்தின் அவசியத்தை வற்புறுத்தின. அதாவது கூட்டுறவுப் பொருளாதார அமைப்பை விரும்பின; போராட்டத்திற்கும் தீவிரப் போட்டிக்கும் பதிலாகப் பல்வேறு அக்கறைகளின் இணக்கமும் ஜனநாயக அமைப்புக்கு உட்பட்ட, நிர்பந்தமற்ற கூட்டுறவும் தோன்ற வேண்டுமென்று விரும்பினர். இத்திட்டத்திற்குத் தேசிய மயமாக்குவது என்ருே, அரசாங்க முதலாளித்துவம் என்ருே பொருளில்லே; பத்தொன்பதாம் நூற்ருண்டு சோஷலிஸ்டுகள்தான் இக்கொள்கைகளுக்கு உற்சாகம் காட்டி வந்தனர். உண்மையில், குறிப்பான திட்டம் எதுவும் இந்த இயக்கத்துக்கு இல்லே; இதற்கு அரசியல் நோக்கமும் இல்லே. தொழிலாளர்களேச் சமய ஸ்தாபனங்களுக்குள்ளே கொண்டுவரும் அளவுக்கு இயக்கம் விரிவடைய வேண்டும்; ஆனுல் சமய ஸ்தாபனங்கள் கட்சி ரீதியான சீர்திருத்தத் திட்டங்களுடன் இணேந்துவிடக் கூடாது; இதுவே இயக்கத்தின் நோக்கம். சமய ஸ்தாபனங்கள், குறிப்பாக

பிராடெஸ்டெண்டு ஸ்தாபனங்கள் 'பூர்ஷுவா' மனப்பான்மையுடன் இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு வந்தது; தொழிலாளர் நலத்தில் அவைகளுக்கு அக்கறை இல்லை; மாருக, ஆதிக்கியம் செலுத்தும் வர்க்கத்தின் கருவிகளே இவை என்று கூறப்பட்டு வந்தது. சமய ஸ்தாபனங்களுக்குத் தொழிலாளர் நலத்தில் மிகுந்த அக்கறை உண்டென்று தொழிலாளர் வர்க்கத்திற்கு ருசுப்பிக்க வேண்டு மென்று சமூகக் கொள்கை விரும்பிற்று; சமய ஸ்தாபனங்களுடனும், சமய ஸ்தாபனங்கள் மூலமாகவும் இயங்கும்படி தொழிலாளர்களை அழைத்தது. 1934-ல் காங்கிரிகேஷனலிஸ்டு தலைவர்கள் தங்கள் 'சமூகச் செயல்' கவுன்சிலைக் கூட்டிய பொழுது, தேவாலயங்களை உலக நலனுக்காகத் தியாகம் செய்வதாகக் கூடப் பேசினுர்கள் : "யுத்தமில்லாத, நியாயமான, தோழமை மிகுந்த உலகை உருவாக்க சமய ஸ்தாபனங்கள் எந்த அளவுக்குத் தம்மைத் தியாகம் செய்து கொள்ளுமோ அந்த அளவுக்கு வாழும் என்று நம்புவதால், அமைதியும், பாதுகாப்பும், பெருவாழ்வும் மக்களுக்குச் சித்திக்கக் கூடிய நன்ஞளுக்காக இடையருது உழைக்க எங்களைச் சமர்ப்பணம் செய்து கொண்டு இம்முயற்சி செய்கிறேம்" என்று அது தெரிவித்தது.

காங்கிரிகேஷனலிஸ்டுகளுடன் இதர பிராடெஸ்டெண்டு ஸதாபனங்களும், பிரெஸ்பிடீரியர்களும், எபிஸ்கோபேலியர்களும் பொருளாதார மந்தக்காலத்தில் சம்மேளனக் கவுன்சிலுடன் சேர்ந்து 'தேசியக் கழிவிரக்கம்' தோன்றப்பாடுபட்டனர். புதிய வினியோகத்தை ஏற்றுவிட்டதாக இதனுல் ஏற்படாவிட்டாலும், தங்கள் மனச்சாட்சியில் நிம்மதியில்லை என்பதையும், எதோ ஒருவிதமான திட்டத்தையும் சமூகப் பாதுகாப்பு முறைகளையும் ஏற்கத் தயார் என்பதை இது காட்டி விட்டது. தொழிலாளர் பிரச்னையில் இம்மாதிரிப் பொதுப்படையாகப் பேசுவது பயன்தரவில்லை; அதற்காகச் சமய ஸ்தாபனங்கள் அரசியல் அரங்கில் இறங்கித் தீர வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தக் காரியத்தைச் செய்யத் தயங்கவும் இல்லை, விளைவுகளை ஏற்கத் தயங்கவும் இல்லை; இதனுல் இயக்கத்தின் ஐக்கியம் போய்விட்டது; ஆனுல் பொருளாதாரத் துறையை நெருங்கி விட்டது. ஒவ்வொரு சபையிலும் பொரு-

ளாதாரத் திட்டம், தொழிலாளர் ஸ்தாபனம், ஆகிய நடைமுறைப் பிரச்னைகள் விவாதிக்கப்பட்டன; வகுக்கப்பட்ட லட்சியங்களைக் கொண்டு மதிப்பிடப்பட்டன. உள்ளூர் சமய ஸ்தாபனங்களிலும், நாட்டிலும், கொள்கைகள் அக்கறைகள் விஷயமாகத் தீவிர அபிப்பிராய பேதங்கள் எழுந்தன.

செல்வாக்கு மிகுந்த சாதாரண மக்களைவிட சம்மேளன சமய ஸ்தாபன போர்டுகளும், தேசியச் சட்டசபைக் கோஷ்டிகளும், பாதிரி மார்களும் சோஷலிஸத்தை நெருங்கிய பொழுது, 1937-ல் 'அமெரிக்க சர்ச் லீக்' அமைக்கப்பட்டது. சமயத்துறையில் சமூகக் கொள்கை பரவுவதை இது எதிர்த்தது; சமய ஸ்தாபனங்களை உண்மையில் ஆதரிப்பவர்களும், தனியார் துறையில் மிகுந்த அக்கறை கொண்டவர்களுமான சாதாரண மக்களின் தேசிய அபிப்பிராயங்களைப் பாதிரிமார்களுக்கு இது எடுத்துணர்த்தியது. இலாபம், இலாப நோக்கு ஆகியவை தீமைகளே என்று கருதிய பாதிரிமார்கள் ஆசிரியர்கள், இதர சமூகத் தலைவர்கள் இவர்களுக்கு எதிர்ப் பிரசாரம் செய்ய முயன்றது. அனுபவமில்லாத துறையில் பாதிரிமார்கள் இறங்குகின்றனர் என்று சமய பக்தியுள்ள வியாபாரிகளில் பலர் அதிருப்தியடைய ஆரம்பித்து விட்டனர். அந்தந்தச் சமய ஸ்தாபனத்தின் அதிகார பூர்வமான கொள்கைகள் என்று தங்கள் கருத்துக்களைக் கூறிக் கொள்ளக் கூடாதென்று சம்மேளனக் கவுன்சிலையும் பாதிரிமார்களையும் ஏற்கும்படி செய்து விட்டனர். கழிவிரக்கத்தையும், சீர்திருத்தத்தையும் வற்புறுத்துவதுடன் சமயஸ்தாபனங்கள் திருப்தியடைய வேண்டுமேயன்றி, வியாபார விஷயங்களிலும் அரசியலிலும் புகுவது அவர்கள் வேலை அல்ல என்ற கருத்தையும் வரவேற்றனர்.

இருந்த போதிலும் கமிஷன்களும் சமூக நடவடிக்கை போர்டுகளும் தாங்கள் சிபாரிசு செய்யும் குறிப்பிட்ட கொள்கைக்குப் பொது ஆதரவு கிடைக்காவிட்டாலும். உலகியல் வாழ்வின் பல பிரச்சனைகளைச் சமயத் துறையில் விவாதித்து அவற்றின் அறநெறித் தன்மையையும் இன்மையையும் கவனத்திற்குக் கொண்டு வருகின்றனர். இந்த விதத்தில் தேவாலய மேடையும், ஞாயிற்றுப் பள்ளிகளும், இளைஞர் கிறிஸ்தவ சங்கங்களும், அமெரிக்க மனச் சாட்சியைத் தெளிவாக்கும்

முக்கிய அரங்கங்களாயின. சமூகக் கொள்கைத் தலைவர்கள் இதற்கிடையில் தனியாகக் கூடி, அரசியல் வாதிகளைப் போல் அமைதியான திட்டங்களை வகுக்காமல், தாங்களே செயல் முறையில் ஏற்கக் கூடிய திட்டங்களை அறநெறியாளர்களைப் போல் வகுத்தனர். இதன் விளைவாக 1932-ல் சம்மேளனக் கவுன்சில் தன் கருத்துக்களைத் திருத்தி அமைத்துக் கொண்டது. 'சமய ஸ்தாபனங்களின் சமூக லட்சியங்கள்' அவற்றை விரித்துக் கூறின.

இம்மாதிரிக் கொள்கைகளைத் திருத்தி அமைத்துக் கொண்டது தவிர, அநேக ஆராய்ச்சித் திட்டங்களையும், பரிசீலனைகளையும் தேசீயக் கவுன்சில் மேற்கொண்டது. 'பொருளாதார வாழ்வில் கிறிஸ்தவக் கொள்கைகளை அமல் செய்யும் விதம்' பற்றிய ஆராய்ச்சி இவற்றில் ஒன்று. (இதற்கும் ராக்பெல்லர் ஸ்தாபனத்தின் ஆதரவுண்டு. ஆராய வேண்டிய முக்கியப் பிரச்னை பொதுப் பொருளாதார ஸ்தாபனமும் சக்தியும் வளர்ச்சியடைவதில் அறப் பொறுப்பையும் துணிபுகளையும் எப்படிப் பாதிக்கின்றது என்பதுதான் என்று டைரக்டர் சார்லஸ் பி. டாப்டு கூறினர்.

அமெரிக்கக் கிறிஸ்தவர்களும் யூதர்களும் மனத் தெளிவடைவதில் 1922-முதல் அபிவிருத்தி அடைந்திருப்பதாகத் தேசியக் கத்தோலிக்க நலக் கவுன்சிலும், ஏசுநாதர் தேவாலய சம்மேளனக் கவுன்சிலும் அமெரிக்க 'சினிகாக்' சபையும் கூறிவிட்டன; ஆனால் அதிகார பூர்வமாக அல்ல; சமூகச் சீர்திருத்த விஷயங்களில் பொதுக் கொள்கை உருவாவதில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் அவை கூறின. அதிகார பூர்வமான மத்திய ஸ்தாபனங்கள் மேற்கொண்ட போக்கு சாதாரண மக்கள், சட்ட சபையாளர் மனச்சாட்சியில் ஆதிக்கியம் பெற்று விட்டது என்பதற்குப் போதிய சான்று இருக்கின்றது.

பொதுவான இந்த முறைகளைத் தவிர, மதச் சார்புள்ள பத்திரிகைகளும் அரசியல் கட்சிகளின் சார்பாக இயங்குகிறவர்களும் பொருளாதார அல்லது அரசியல் சீர்திருத்தங்களை வற்புறுத்தி வந்திருக்கின்றனர். கத்தோலிக்கர்கள் பலவிதக் கூட்டுறவுகளை வற்புறுத்தி வந்திருக்கின்றனர்; சமீபத்தில், போப்பாண்டவரின் கூட்டுக் கொள்கையையும், இத்தாலி

போர்ச்சுக்கல் நாடுகளிலுள்ள 'சிண்டிகலிஸ்டு'களின் சோதனை முயற்சிகளையும் பின்பற்றிப் பொருளாதாரக் கவுன் சில அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்திருக்கின்ற னர்; இவை தேசத்தின் முக்கிய அக்கறைகளையும் வேலைகளை யும் இணைக்கும், இயன்ற அளவுக்கு சுதந்திரமும் ஜனநாயக உரிமையும் இவற்றில் இருக்கும், ஒருமைப்படுத்தப் பட்ட மையமான திட்டக் கருவியாகவும் இவை ஒவ்வொன்றும் விளங்கும். 1948-நவம்பர் 20-ல் அமெரிக்க அத்தியக்ஷ குருக்கள் வெளியிட்ட பிரகடனத்தில், "முதலாளியும் தொழி லாளியும் பொது நலத்திற்காக உழைக்கும் நிரந்தரக் கருவி யாக இணைய வேண்டும்" என்பதை ஆதரித்தனர், ஒவ்வொரு தொழிலிலும், "அதிகார பூர்வமான முதலாளி, தொழி லாளர் பிரதிநிதிகளிடையே சுதந்திரமான திட்டமிட்ட கூட் டுறவு இருக்கவேண்டும். பொருளாதார அமைப்பு முழுவ தற்கும் இதே மாதிரி இருக்கவேண்டும். ஆனால் இவ்வளவுக் கும் சர்க்காரின் கட்டுப்பாடு இருத்தலாகாது. கண்காணிப்பு மட்டுமே இருக்கவேண்டும். இம்மாதிரிச் சுதந்திரமாக ஸ்தாபனமாக்கப்பட்ட இணைப்புக்களுக்குப் பல பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன. உத்தியோகக் கோஷ்டிகள், தொழில் கோஷ்டிகள், (சமீப காலத்தில்) தொழில் கவுன்சில்கள் என்று பெயரிடப்பட்டிருக்கின்றன" என்று தெரிவித்தனர். இம்மாதிரியான பரவலான முறை அல்லது 'சிண்டிகலிஸ்டு'ப் பன்மை முறை (பிரிட்டிஷ்'கில்டு' சோஷலிஸ்டு முறைபோல) சர்க்கார் முதலாளித்துவ அமைப்பின் அதிகார வர்க்க ஆர்ப் பாட்டத்தையும், கட்சிச் சர்வாதிகாரத்தையும் தவிர்த்து விடும் நோக்கம் கொண்டவை. சமநிலைப் பட்ட பொருளா தாரத் திட்டம், பொருளாதார சமத்துவம், எல்லோருக்கும் பாதுகாப்பு, தனியார் ஏகபோக உரிமையை நீக்கல், தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகள், போக்குவரத்து, தபால்தந்தி, மின்சாரம் ஆகிய கொள்கைகளை யூத குருமார் ஸ்தாபனங்கள் ஆதரித்தன. பிராடெஸ்டெண்டுகள் சமூக நல ராஜாங்கக் கொள்கையை ஏற்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட எந்தத் திட்டத்தையும் ஏற்கவில்லை. இருந்தாலும், தொழிற்சாலை களில் ஈடுபட்டிருக்கும் ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும்

பாதுகாப்பளிக்கும் சட்டங்களை அவர்கள் ஆதரித்திருக்கின்றனர். கத்தோலிக்கர்கள் இதற்கு உடன்படவில்லை.

## சமூகக் கொள்கையில் புதிய சிந்தனை

அரசியல் அரங்கில் சமய ஸ்தாபனங்கள் இறங்கியதால் ஏற்பட்ட வெற்றி, தரும சங்கடமாகிவிட்டது. ஸ்தாபன ரீதியான சமயத்திற்குப்புரட்சிகரமான ஆபத்து விளையக்கூடும் என்று இயக்கத்தின் சிந்தனையாளர்களும் பொறுப்புள்ள தலைவர்களும் பயப்படத் துவங்கி விட்டனர். சில தலைவர்கள் புரட்சியை வரவேற்றனர் என்ற செய்தி பயத்தை உறுதிப் படுத்திவிட்டது. கிறிஸ்தவ தேவாலயங்களுக்குப் பதிலாகக் கிறிஸ்தவ சமூக அமைப்பு விளங்க முடியுமா? முடியாதென்றால், அம் மாதிரியான ராஜ்யத்தில் தேவாலயங்களுக்கு என்ன விதமான அந்தஸ்து? சமயப் பற்றுள்ள சோஷலிஸத்திற்கும் உலகியல் சோஷலிஸத்திற்கும் வித்தியாசம் இருக்குமா? இம் மாதிரியான சிந்தனைகளுக்குச் சமீப காலத்திய நிகழ்ச்சிகள் எதிர்பாராத விடைகளை அளித்திருக்கின்றன. பொருளாதார மந்தம், சர்வாதிகாரம், உலக யுத்தங்கள் ஆகியவை எல்லாம் அமெரிக்காவில் கூட அரசியல் சீர்திருத்தங்களைச் சிக்கலாக்கிவிட்டன; சீர்திருத்தவாதிகள்கூடக் குழப்பமடைந்து விட்டனர். அதிகாரம் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கண்டு முற்போக்காளர்கள் கூடத் திகைப்படைந்து விட்டனர். பாதிரி மார்களிடம் சாதாரண மக்கள் புகார் செய்யத் தொடங்கிவிட்டனர்: "விவகாரங்களில் அரசியல் சிக்கலை உண்டாக்காதீர்கள்! அறநெறி அதிகாரத்தை எளியதாக்குங்ககள்!" விஷயம் இப்படி இப்படியிருக்கிறதென்று ஆசிரியர்கள் சொல்லவேண்டுமென்று இளைஞர்கள் எதிர்பார்த்தனர். மக்களின் திகைப்பு அதிகாரவாதிகளுக்குப் பெரிய ஆதரவாகிவிட்டது. இப் புதிருக்கு விடை காண வேண்டிய நிலையைச் சமூகச் சமயத் தலைவர்கள் அடைந்து விட்டனர். அதிகாரம் அளித்தால், அதிகாரம் வரம்பை மீருமலிருப்பதற்கு என்ன செய்யலாம் என்பது முக்கிய பிரச்னையாகி விட்டது.

ஆண்டவன் அரசை மண்மீது அமைக்க விரும்பியவர் களுக்கு, அவ்வரசில் விசேஷத் தெய்விக சமூகத்திற்கு— தெய்விக அருளின் காப்பாளராகவும் பிரதிநிதியாகவும் தொண்டாற்றும் சமூகத்திற்கு—பெரிய சமுதாயத்தில் அடங் கும் ஒரு சிறிய சமூகத்திற்கு—இடம் தந்தாக வேண்டும் என் பது கொஞ்சம் கொஞ்சமாக விளங்கலாயிற்று. கடல் மீதெழுந்து வந்த பல்லவிக்கு இப்பொழுது தாமாகச் செவி சாய்க்கும்படி நேர்ந்தது: "தேவாலயம் தேவாலயமாகவே இருக்கட்டும்!"

கத்தோலிக்கர்களுக்கு இதனல் சிக்கல் எதுவும் தோன்ற வில்லே; ஏனென்ருல் எந்த அறப்பிரச்னே பற்றியும் கொள்கை அளவிலும், நடை முறை ரீதியாகவும், அதிகாரத்துடன் பேச அவர்கள் தயாராக இருந்தார்கள். ஆனல் சமூகக் கொள்கையைப் பிரசாரம் செய்த பிராடெஸ்டெண்டுகளுக்கு இந்த நிலேமை கலவரத்தை அளித்தது. இவ்வளவு அமெரிக் கத் தேவாலயங்களும் எப்படித் திவ்விய தேவாலயங்களாக இருக்க முடியும்? சமய ஸ்தபானத்தைப் பற்றிய கொள்கை இப்பொழுது அவர்களுக்குச் சமூகக் கொள்கையின் முக்கிய அம்சமாகி விட்டது; இக் கொள்கை கூட ஜனநாயகத்தையும் சமய ஸ்தாபன அதிகாரத்தையும் எப்படிச் சமரசப் படுத்துவது என்ற நடைமுறைப் பிரச்னே யாகிவிட்டது; தெய்வ அருள் என்பதைத் தீவிரச் சோதனே முறையில் அணுக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அம் மாதிரியான விளக்கத்தைச் சில சமய சித்தாந்திகள் அளித் தனர். ஹெச். ரிச்சார்டு நியூபூர் "தெய்வ அருள் என்பது நம்முடைய சமயக் கருத்துக்களின் வளர்ச்சி அன்று, இடை யருத மாற்றமே யாகும்" என்ருர். இந்தப் பிராடெஸ் டெண்டுக் கொள்கையையோ, அல்லது தெய்வ அருளில் வளர்ச்சி உண்டு என்று கார்டினல் நியூமன் காட்டிய கத் தோலிக்கத் தாராளப் பான்மையையோ, எதை ஏற்ற போதிலும் வளேந்து கொடுக்கக் கூடியதான பூர்ணப் பிரமா ணம் என்ற கொள்கை ஒன்று கிடைத்துவிட்டது; அதன் ஆதரவில் சமய ஸ்தாபனங்கள் தங்கள் தெய்விகக் கடமை களே ஆற்ற முடிந்தது; அதே சமயத்தில், ஜனநாயக சமூகத் தின் அறநெறிச் சோதனேகளிலும் பங்குகொள்ள முடிந்தது.

இவ்விதமாக அதிகாரத்துவத்தை எதிர்க்கும் தேவாலயங்களில்கூடக் கடவுளின் குரலைக் கேட்க முடிந்தது.

தேவாலயத்தைச் சேர்ந்த அமெரிக்கர்களில் பலர் பொது இயக்கத்தையும், ஒருமுகப் படுத்தப்பட்ட சமய அதிகாரத்தையும் ஆதரித்தபோதிலும், தேவாலயம் என்றால் திருச்சபை என்னும் கருத்தை விட்டுவிடவில்லை. அமெரிக்கத் தேவாலயம் என்பது நிச்சயமாக ஓர் உள்ளூர் சமுதாயம்தான்; தானே உருவாகும் மற்ற ஸ்தாபனங்களில் சேருவதுபோல் இதிலும் சேருகிறார்கள். எனவே உலக இயல் ஸ்தாபனங்களுக்கிடையே குறிப்பிட்ட நேச முறை கொண்ட ஸ்தாபனமாக விளங்குகின்றது; கொள்கை ரீதியான தெய்வத் தன்மையைத் தவிர வேறு எதற்கும் அது உரிமை கொண்டாடவில்லை. உலகென்னும் பாழில் கத்தும் தெய்விகக் குரல் என்று தேவாலயத்தைப் பாவிப்பதைவிட, கிறிஸ்தவ சமூகம் அல்லது கலாசாரத்தின் பிரிக்கமுடியாத அம்சம் என்று பாவிக்கச் சமூகக் கொள்கைத் தலைவர்கள் ஆவலாயிருந்தனர். ஆனால் சமய ஸ்தாபனப் பற்று மிகுந்த ஐரோப்பிய சமய சித்தாந்திகள் இதைச் சமயப் பிரிவு மனப்பான்மை என்று கண்டித்தனர். இத் தாக்குதலுக்கு மிகவும் இலக்கான எப். எர்னெஸ்டு ஜான்சன் கூறுகிறார்:

''சங்கங்களில் சேருவதுபோல் தேவாலயத்தில் சேருகிறீர்கள். தேவாலயத்தை அப்படிக் கருதக்கூடாது. அதில் அங்கத்தினராக இருப்பது குடும்பத்தில் அங்கத்தினராயிருப்பது போன்றது. குடும்பத்தைத் தவிக்க விட்டு விட்டு ஓடிவிடலாம்; ஆனால் அதன் பாலுள்ள பற்றை இஷ்டம்போல் கைவிட முடியாது......சமுதாயத் தேவாலயமும், தாமாக இணைந்தோர் தேவாலயமும் வெவ்வேறானவை—பின்னது நம்பிக்கை வைத்தவர்களாகச் சேர்ந்து அமைத்த சமூகம்; அமெரிக்காவில் இரண்டாவது கருத்துத்தான் ஓங்கியிருக்கிறது.''

டாக்டர் ஜான்சன் இப்பிரச்னையைத் திட்டமாக உணர்ந்தார்; சமூகக் கொள்கையைத் திரும்பவும் ஆராய்ந்து சமய ஸ்தாபன அதிகாரம் என்ற பிரச்னைக்கு அமெரிக்க முறையில் முடிவு கட்டினார்;

"தேவாலயம் என்னும் சமுதாயத்தில் வாழ்வின் ஒவ்வோர் அம்சத்தையும் மொத்தமாக மதிப்பிடும் காரியத்தில் பங்கு கொள்கின்றனர்; முடிவான கட்டளை ஒன்றின்படி, தங்கள் வாழ்வைப் பற்றி, ஆன்மிக ரீதியான தீர்ப்பை இங்கே காண்கின்றனர்; தங்களை ஆள்வதற்கான பொது நெறியின் அளவைகளை இங்கு உருவாக்குகின்றனர்; முழு அனுபவத்தையும் இங்கே பொதுவழிபாட்டில் ஒன்றுபடுத்துகின்றனர். இவைதான் தேவாலயத்தின் சிறப்பு. இந்தச் சமுதாயங்கள் எல்லாம் அதிகாரம் என்னும் கொள்கையை ஏற்றுக் கொள்கின்றன; ஏனென்றால் வளம் மிகுந்த மரபுகளின் பகைப்புலத்தில், சொந்த அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் சிஷ்ய சம்பிரதாயத்தில், சமுதாயச் சிந்தனை, சமுதாய வேட்கை, மதிப்பீடுகளின் சோதனை ஆகியவை உதயமாவதால் அவையே உயர்வென்று இக்கொள்கை கூறுகின்றது; தனித்திருந்து தனிமனிதன் சாதிக்கக் கூடியதைவிட சமுதாய வாழ்க்கை சிறந்ததென்று கூறுவதுதான் இக்கொள்கை. தன்னில் தானே உயர்தல் என்று நான் கூறும் சாதனையில் தோழமையால் சமய விசாரத்திற்கும் முயற்சிக்கும் ஏற்படும் ஊக்கமே சமய சமுதாயத்தின் அதிகாரத்தை நிரூபிக்கின்றது. 'என் பெயரால் இருவரோ, மூவரோ கூடும் இடத்தில் நான் இருக்கிறேன்' என்று குறிப்பிடப்பட்ட கிறிஸ்தவ சமுதாயச் சிறப்பு வேறெதுவாகத் தான் இருக்க முடியும்? சமுதாயம் என்ற கருத்து கூட்டல் விஷயமன்று, கூட்டிய மொத்தத் தொகையுமன்று. அது மனித சங்கத் தன்மையில் காணப்படும் தனித்த ஏதோ ஒன்று என்று கொள்ளவேண்டும்."

"உண்மையான தீர்க்க திருஷ்டிக்குப் பிரதிநிதித்துவ சக்தி உண்டு" என்று அவர் கூறுகிறார். சமுதாயமாக வாழும் முறையை இதர ஸ்தாபனங்களைவிட சமயஸ்தாபனம் எந்த அளவுக்கு உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் ஜனநாயக சமூகத்தில், மத ஸ்தாபனம் அதிகாரம் செலுத்தமுடியும். தெய்வத் தோழமையின் சின்னமாக மட்டும் தேவாலயம் இருந்தால் போதாது; சமுதாய அனுபவம் தெய்வ அருளின் சாட்சிக்குப் பொது உதாரணமாக விளங்கவேண்டும்.

தேவாலயத்தின் ஞானதிருஷ்டிக்குப் புதிய விளக்கம் தரப்பட்டதுபோலக் குருமார்கள் கடமைக்கும் புதியவிளக்கம் தரப்பட்டது. குருமார்களின் கடமையை ஜனநாயக முறைப் படுத்தி லூதர் செய்த பிரசாரம் சீடர்கள், மோர்மோன்கள், கிறிஸ்தவ விஞ்ஞானிகள் நீங்கலான பிராடெஸ்டெண்டு களுக்கிடையே குருமார்களின் தேவையைக் குறைத்து விட்டது. ஆனால் சமீப காலத்திய உலக வேதனையின் விளைவாக, நலத்தைப் பகிர்ந்து கொள்ள இதர சமூக ஸ்தாபனங்கள் இருப்பது போல, வேதனையைப் பகிர்ந்து கொள்ளவும் இருக்கும் ஸ்தாபனம்தான் சமய ஸ்தாபனம் என்ற புதிய கருத்து எழுந்தது. தேவாலயம் என்பது சமூகப் பிராயச் சித்த ஸ்தாபனம். இரண்டாவது உலக யுத்தத்துக் கிடையில் டீன்ஸ்பெர்ரி என்பவர் ஆங்கிலேயர்களுக்கிடையே கூறிய தாவது:

"அடுத்த அரை நூற்றுண்டின் சரித்திரத்தில் நமக்கு இரண்டாந்தரமான இடம்தான் அறத் துறையில் கிடைக்கும்; ஏனென்றால் துன்பத்தால் புடம் போடப் பெற்ற உன்னதஸ் தானத்தை இந்தக் காலத்தில் சம்பாதிக்கத் தவறிவிட்டோம். குறிப்பாக நம்முடைய தேவாலயங்களைப்பற்றி இது உண்மை யாக இருக்கலாம் என்று தோன்றுகின்றது. கொடுமையின் தணலில் சிக்கிப் பிழைத்தவர்களுக்குத் தேவாலயங்களுடைய நைந்த சோதனைக்குள்ளாகாத பேச்சால் எவ்விதப் பயனும் இருக்காது."

சமுதாயப் பிராயச்சித்தம், விமோசனமளிக்கும் துன்பம் என்ற கொள்கைகள் யூத சமூகத்தினரைப் பெரிதும் கவர்ந்தன. கத்தோலிக்க வழிபாட்டு முறையும் சின்னங் களும் சிலுவைக்கு முதலிடம் அளித்தன. விரிந்த பான்மை யுள்ள பிராடெஸ்டெண்டுகள் சமய நெறிக்குத் தியாக லட்சியம் அவசியம் என்று திரும்பவும் வற்புறுத்துவதில் அவர்களுடன் சேரத் தயாராக இருந்தனர். பொதுவாகச் சரித்திர வரலாற்றுத் தொடர் உணர்வை வளர்க்க—மகாத் மாக்களுடன் தோழமை, உயிருடன் இருப்பவர்கள் இறந்த வர்களுடன்—குறிப்பாக மகாத் தியாகிகளுடன்—உறவு கொண்டாடுதல் ஆகிய வாய்ப்புக்களை வளர்க்கத்தேவாலயங் களுக்கு இருக்கும் வசதிகளை அமெரிக்கர்கள் உணரத் தலைப்

பட்டனர். கடவுளின் சான்னித்தியம், சாம்ராஜ்ய அதிகாரம், தெய்வீகம் ஆகிய விஷயங்கள் பற்றிய மெய்ப்பொருள் அனுபவப் பாவனையைத் தேவாலயங்கள் சமூகத்தில் உண்டாக்கி வருகின்றன.

இம்மாதிரியாகப் பலவிதத்தில் சமூகக் கொள்கை சமீப காலத்திய சம்பவங்களுக்கு இணங்கத் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றது; பொதுவாக, அதன் சமூகப் புனரமைப்புக்குச் சமயம் என்ன செய்யக்கூடும் என்ற நடைமுறை அறிவு ஏற்பட்டுவிட்டது.

உலகியல் சமூகச் சீர்திருத்தம் என்பதை விட்டுவிட்டுத் தேவாலயங்களின் இடையறாத விமோசன சேவை என்பதை ஏற்றுக்கொண்டதன் மூலம் சமூகக் கொள்கைக்கு 1930-ஐத் தொடர்ந்த வருஷங்களில் முடிவு ஏற்பட்டு விட்டதாகவும், புதிய சமூகக் கொள்கை ஒன்றைப் புதிய வைதீகச் சிந்தாந்திகள் வகுத்துவிட்டதாகவும் பிராடெஸ்டெண்டு சித்தாந்திகள் கூறுவது மரபாகிவிட்டது. அதனால்தான் 'பிந்திய சமூகக் கொள்கை' என்றும், 'சமூகக் கொள்கை முடிவு' என்றும் பலவிதமாகப் படிக்கின்றோம். அம்மாதிரிச் சொற்றொடர்கள் எல்லாம் ஏமாற்றக்கூடியவை; ஏனெனில் கிறிஸ்தவ சமூக அறநெறி தீவிரமாகத் திருத்தி அமைக்கப்பட்டிருப்பது உண்மையானாலும், தேவாலயங்களின் நடைமுறைச் சமூக சேவையில் தொடர்ச்சி இருக்கிறது. சமூகக் கொள்கையைத் 'திருத்திய சிந்தனை' என்ற சொற்றொடரால் குறிப்பிடுவது இன்னும் பொருத்தமாக இருக்கும்; ஏனெனில் சமூகத்தைக் கிறிஸ்தவ மயமாக்கும் நோக்கமும் முயற்சியும் எப்பொழுதையும்போல் ஆழ்ந்து வேரோடுகின்றன; கிறிஸ்தவ அரசியல் எப்பொழுதையும்விட செயல்முறைக்கு அதிகம் ஏற்றதாக இப்பொழுதிருக்கிறது. எனவே, தாராளத் தன்மைக்குக் காட்டப்பட்ட எதிர்ப்பிலிருந்து நடைமுறை வேலைக்கும் எதிர்ப்பு ஏற்பட்டு விட்டதென்று சாதாரண வாசகர் அனுமானித்துவிடக் கூடாது. அதற்கு எதிராக மதஸ்தாபனங்களின் திட்டங்கள் இன்று தீவிரமாக இருக்கின்றன.

இந்த நூற்றாண்டில் அமெரிக்க மதக் கொள்கையில், ஏற்பட்டிருக்கும் அறநெறி புனரமைப்புப் பற்றி அத்தியாய ஆரம்பத்தில் கூறிய முடிவை ஆதரிக்கப் போதுமான விவரங்

களை மேலே தந்திருக்கிறோம். ஆன்மாவைக் கடைத் தேற்றுவது போய், சமூகத்தைக் காப்பாற்றும் கொள்கை வந்துவிட்டது; தெய்வீக அருள், கருணை என்பவற்றை நம்புவது போய், பொருளாதார, அரசியல் ஏற்பாடுகளுக்கு உழைத்துச் சமூகத்திற்கு விமோசனம் காண்பதென்பது வந்து விட்டது; சமய மறுமலர்ச்சி முயற்சிகள் போய், சமூகப் புனரமைப்பு வந்துவிட்டது; அறநெறிகளைப் பற்றிச் சப்பைக் கட்டிப் பேசுவது போய், அவற்றை விமர்சனம் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

## இயற்கைக்கும், சமூகத்திற்கும் அப்பாற்பட்ட போதனைகள்

தாராளப்பான்மை என்று கூறிக்கொண்டு சமயத்தை உலகியல் மயமாக்கியதும், சமூகமயமாக்கியதும் இருவகை மனச்சாட்சிகளின் எதிர்ப்பைத் தூண்டுவதாகத்தான் இருந் தது; உலகத்தைத் திருத்தி அமைப்பதில் நம்பிக்கை இல்லாத வர்கள் ஒருவகை; சமூகக் கொள்கையைப் 'பூர்ஷுவா' உணர்ச்சி வேஷமாகக் கருதியவர்கள் மற்றொருவகை. இவ்விருவித எதிர்ப்புக்கள் சேரும்போது கண்டன இயக்கம் வழக்கம்போல் உருவெடுத்தது; சமூக ரீதியில் பிற்போக்கும், சமய ரீதியில் தெய்விகமும் பொருந்தியவை இவ்வியக்கங்கள். சமூகக் கொள்கைக்கு எதிரிடையாக, பூமியில் கடவுளாட் சியைக் காணும் இலட்சியம் கொண்ட பூரண தரிசன தேவா லயங்கள் தோன்றின. இந்தத் தேவாலயங்களைத் 'தாழ்ந் தோரின் தேவாலயங்கள்' என்று சமூக வளர்ச்சி இயல் சாத்திரவாதிகள் குறிப்பிடுவதுண்டு; அது சரியன்று; சமூக விஞ்ஞான சாத்திரம், கல்லூரி அரசியல் படிப்பு என்ற நோக்கில் இப்புதிய தேவாலயங்களைச் சேர்ந்தவர்கள் படிப் பற்றவர்கள்தாம்; கல்வி முறையில் உரிமையற்றவர்கள்தாம்; ஆனால் அவர்கள் ஏழை, பணக்காரர் என்ற வர்க்கங்களி லிருந்து வருகின்றனர்; அவர்களில் பெரும்பான்மையோர் நடுத்தரக் கீழ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; அமெரிக்கர்களில் பெரும்பான்மையோர் இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தாமே! பணக்கார வியாபாரிகள் இந்த இயக்கங்களையும்,

பத்திரிகைகளையும், பள்ளிகளையும், பிரசாரங்களையும் ஆதரிக்கின்றனர். இவர்கள் மக்களுக்கு அபினூட்டுவதாக மார்க்ஸீயவாதிகள் நியாயமாகக் கூறலாம்—ஆனால் அவர்களும் பொருளாதார முறையை விட்டுவிட்டு சமய நம்பிக்கையோடு இயங்குவதால் அபின்தானே ஊட்டுகிறார்கள்! அவர்கள் வழக்கமாகவே அருக்கீட்டைகள்; உலகம் மோசமானதுதான், தீமைதான், கடவுள் தாமாகப் பார்த்து அழிக்கும்வரை அப்படித்தான் இருக்கும் என்று அமெரிக்கத் தொழிலாளர்களைப்போல் கருதுபவர்கள். மீட்கப்படுவதற்காக உண்டாக்கப்பட்டதன்று உலகம். உலகத்தையும் அதனுடைய மோசடிகளையும் விட்டோடுவதுதான் மனிதனின் சமயக் கடமை. கண்டிப்பதும் தப்பமுயல்வதுமான இப்பான்மை தளர்ச்சி மனப்பான்மை அன்று; கசப்பான நடைமுறை அனுபவத்தால் ஊட்டம் பெற்றது; சாதாரண அறிவைக் கவர்வது. அமெரிக்க ஏழைகள் சமயத்தை நோக்கித் திரும்பினால், புரட்சியில் நம்பிக்கை வைப்பதில்லை; சகோதரர்கள் மீதுள்ள நம்பிக்கையை உதறி யெறிகிறார்கள். 'கடவுளை நம்புகிறோம்' என்பதற்குத் தழும்பேறிய மறுபக்கமும் ஒன்றுண்டு. விமோசனம் கடவுளிடமிருந்துவரும்; மேல் வர்க்கத்திடமிருந்து வராது! சமூகக் கொள்கை சுகவாசிகளைக் கவர்ந்தபோதிலும், தொழிலாளர் வர்க்கத்திடையே முன்னேறவில்லை. அமெரிக்கத் தொழிலாளர்கள் பொருளாதார சாத்திரத்தை நம்புவதில்லை அரசியலை வெறுக்கிறார்கள்.

அறநெறி ஆதாரவாதம் எப்பொழுதையும்விட இன்று கண்டன இயக்கமாக இருக்கிறது. மனிதனுக்கும் சமூகத்திற்கும் அறமே கிடையாது; மானிடவர்க்க சாதனங்களுக்கும் இம்மை இன்பங்களுக்கும் மேற்பட்ட ஒன்றில் நம்பிக்கை கொள்வதுதான் சமயம்—இதுவே அவர்கள் கொள்கை. கல்வி அறிவு பெற்ற கிறிஸ்தவ ஆதாரவாதிகளில் (உள் நாட்டைவிட வெளியே அதிகம்பேர் இருக்கின்றனர்) ஏசுவின் ராஜ்யம் சமூகத்தைக் கிறிஸ்தவ மயமாக்குதல் முதலிய கொள்கைகளை முற்றிலும் ஏளனம் செய்யும் 'கியர்க்கேகார்டு' 'உனாமுனோ' போன்ற விழிப்படைந்தவர்களே மக்களின் அன்புக்குப் பாத்திரமான தீர்க்கதரிசிகள் ஆகின்றனர். கிறிஸ்தவர்களுக்கு உலகம் சகஜமான இடமாகத் தோன்றுவ

தில்லே. ஆதாரவாத யூதர்களும் சமூகத்தைக் கிறிஸ்தவ மயமாக்குதல் என்ற கருத்தைக் கண்டு ஏளனம் செய்தனர். 'உங்கள் ஒதுக்கிடங்களுக்குப் போங்கள்' என்று நம்பிக்கை யிழந்து கூவியவர்கள் பேச்சைக் கேட்டார்களேயன்றி, ஜியோனிஸ்டு விமோசனவாதிகளை நம்பவில்லே. ஆனல் பொதுவாக, தாழ்ந்தோரின் தேவாலயங்கள் நிராசையின் மீது எழுதப்பட்டதல்ல. கடவுள் தாமாக உலகத்தை அழிப்ப தற்குமுன், எதோ ஒருவிதத்தில், ஒருகாலத்தில், நெருக்கடி ஒன்றை உண்டாக்கி, அதிலிருந்து உலக அமைதி பிறக்கும்படி செய்வார்; அதுவே புதிய நல்ல உலகத்திற்கு ஆரம்பமாக இருக்கும் என்ற நம்பிக்கையின் மீதே இத்தேவாலயங்கள் எழுந்தவை. 'புதிய வினியோகம்' என்னும் நம்பிக்கையின் தெய்வப் பதிப்பென்று இதைக் கூறலாம். அமெரிக்கர்கள் மனப்பான்மையில் இது ஆழ்ந்ததோர் அம்சம்.

முதல் யுத்தக்காலத்தில் தோன்றிய தீவிர சமயப் பிரசாரத் தேவாலயங்களும், பிராடெஸ்டெண்டு சமயப் பிரிவுகளும், 'பொருளாதாரத் திட்ட'க் காலமாகிய பத்து வருஷத்தில் வெகு வேகமாக வளர்ச்சி அடைந்தன. நாசரீன் தேவாலய ஸ்தாபனத்திற்கு (இதைப்போல் பன்னிரண்டுக்கு மேற்பட்ட ஸ்தாபனங்கள் இருக்கின்றன) 1906-ல் பத்தொன் பது ராஜ்யங்களில் 100-தேவாலயங்கள் இருந்தன; 6,600-அங்கத்தினர்கள் இருந்தனர். 1926-ல் அதற்கு 47-ராஜ்யங் களில் 1,400-தேவாலயங்கள் இருந்தன; 63,000 அங்கத் தினர்கள் இருந்தனர். 1949-ல் 48-ராஜ்யங்களில் 3,000-தேவா லயங்கள் இருந்தன; 2,20000 அங்கத்தினர்களும் இருந்தனர்.

விமோசன தினத்தைப் பிரசாரம் செய்தவரும், 1914-ல் ஏசுவின் இரண்டாவது அவதாரம் இருக்கும் என்று பத்தொன்பதாவது நூற்றூண்டில் கூறியவருமான சார்லஸ் டி. ரஸ்ஸெலேப் பின்பற்றுவோர் (ஸியான் வாட்ச் டவர் டிராக்கு சொசைட்டி) 'ஸியான் கண்காணிப்பு மண்டபப் பிரசார சங்கம்' என்ற பெயருடைய ஒரு சிறிய பக்திமிகுந்த தனித்த கோஷ்டி. ரஸ்ஸெல் எழுதிய புத்தகங்களேயும் 1879-ல் ஆரம்பிக்கப்பட்ட தங்கள் பத்திரிகை 'கண்காணிப்பு மண்ட ப'த்தின் பிரதிகளேயும் வினியோகித்துக் கொண்டிருந்தவர் கள் இவர்கள். ஆனல் 1900-1910 ஆண்டுகளில் கிறிஸ்தவ

வேதக்கட்டுரைகளின் லக்ஷக்கணக்கான பிரதிகளை இச்சங்கம் வினியோகம் செய்தது. இப்பொழுது மாதம் இருமுறை யாகியிருக்கும் அப்பத்திரிகையின் ஆறு லக்ஷம் பிரதிகள் செல வாகின்றன.

1914-ல் 'சிருஷ்டியின் திரைப்பட நாடகம்' என்ற எட்டு மணி நேரச் சினிமாப்படம் காட்டப்பட்டது. மன்னரையும் மன்னரின் ஆட்சியையும் விளம்பரம் செய்வதாக 1919-ல் எட்டாயிரம் 'போதகர்கள்' (அல்லது 'சாட்சிகள்') கூடிச் சங்கற்பம் செய்துகொண்டனர். 1931-ல் 'ஜிஹோவாவின் சாட்சிகள்' என்ற பெயரைப் பூண்டனர். 1946-ல் எண்பதி னாயிரம் சாட்சிகள் கிளீவ்லாந்தில் கூடி, 'விழிப்படைக' என்னும் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினர். இதற் கிடையில் ரேடியோ ஒலிபரப்புக்கள் புரூக்லினில் அதிகரித்த சமயம் டபிள்யூ. பி. பி. ஆர். ரேடியோ நிலையம் அமைக்கப் பட்டது. இந்த நவீன சாதனத்தின் உதவியால் 'ஜிஹோ வாவின் சாட்சிகள்' கடவுள் ஆட்சியின் வருகையைத் தங்கள் கருத்துக்கிணங்க விளக்கி வருகிறார்கள். சங்கத்தின் தலைவர் தங்கள் கொள்கைகள் பற்றிய சுருக்கத்தைத் தந்திருக்கிறார். உலகியல் விஷயங்களுடனும் சம்பவங்களுடனும் இக் கொள்கைகளுக்குள்ள தொடர்பையும், கடவுளின் அரசென்று தாராளவாதிகள் கூறுவதுடன் இவைகளுக்குள்ள உறவையும் இச் சுருக்கம் நன்றாக விளக்குகின்றது.

பைபிளின் தீர்க்க தரிசனத்தை ஒட்டி, 1800-ஆம் ஆண்டு முதல் 1914-ஆம் ஆண்டுடன் கிறிஸ்தவமதத்தைச் சேராதவர் கள் காலம் முடிவடைந்து விடுமென்று 'ஜிஹோவாவின் சாட்சிகள்' கூறிவந்தனர்; அந்த ஆண்டில் நாடும் நாடும் எதிர்த்துப் போரிட்டன......இரண்டாம் வருகை என்பதும் முடிவென்பதையும், பூமியின் ஸ்தூலரீதியான முடிவன்று என்பதையும், தீமை மிகுந்த உலகில் சைத்தான் செய்யும் இடையறாத ஆட்சிக்கு முடிவு என்பதையும், சொர்க்கத்தின் மன்னராக ஏசுநாதர் பட்டாபிஷேகம் நடைபெறும் காலம் என்பதையும் உணர்ந்திருந்தனர்......இந்த ராஜ்யம் பூமியில் காணக் கூடியதன்று; எந்த அரசாங்கத்திலும், அரசாங்க இணைப்பிலும் இதை என்றுமே காணமுடியாது. 'என் அரசு இவ்வுலகத்தைச் சேர்ந்ததன்று' என்று ஏசுநாதர் கூறியிருக்

கிறார். இருந்தாலும், தெய்வ சாம்ராஜ்யத்தின் தம் ஆட்சி உலகை நோக்கி இறங்கி, பிரபுவின் பிரார்த்தனையை 'தெய்வ லோகத்தைப் போல் மண்ணுலகிலும் தங்கள் விருப்பம் நடை பெறுவதாக' என்பதைச் சாதிக்கும்.

மன்னர் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டு விட்டது என்றும், அருகில் செயல் புரிந்து வருகிறது என்றும், 'ஜிஹோவாவின் சாட்சிகள்' கொண்டுள்ள நம்பிக்கை வெகு முக்கியமானது. காணப்படும் கஷ்டங்களையும் வேதனையையும் கருதினால், இந் நம்பிக்கை விநோதமாகத் தோன்றலாம். இருந்தாலும், பழைய உலகஆட்சிக்கும் மன்னரின் ஆட்சிக்கும் இடைக்காலம் (மாறுங்காலம்) இருக்குமென்று கிறிஸ்தவ வேதங்கள் கூறி யிருக்கின்றன; சைத்தான் உலகின் துயரத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கும் பொழுது 'எதிரிகள் நடுவே ஏசுநாதர் ஆட்சி புரியும் காலம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

'கடவுளின் நோக்கில் மனிதர்களின் ஞானமெல்லாம் முட் டாள்தனம்'; 'ஆனால் மனிதர்களின் ஸ்தாபன மெல்லாம் இடைவிடாமல் கீழ்நோக்கிச் செல்வதுதான் அவற்றின் தலை விதி. இந்த யுகத்தின் வீழ்ச்சியை எதுவும் தடுத்து நிறுத்த முடியாது. இந்த நூற்றாண்டின் நாகரிகம் இலேசான ஒரு வேடம், எளிதில் உரித்து விடலாம்' தலைசிறந்த அறவாதி களில் பலர் சரித்திர வரலாற்றுக் காலத்தில் பலவித இயக் கங்களைத் துவக்கியிருந்த போதிலும், சைத்தான் அவைகளை முறியடித்திருப்பதும், ஆதி நோக்கத்திற்கு எதிராக அவை இயங்க நேர்ந்திருப்பதும் இந்த உண்மையைத்தான் காட்டு கின்றது என்று அவர்கள் வாதாடுகின்றனர். குறிப்பாக மதங்களைப்பற்றி இது உண்மை. 'வயதுவந்தவர் தீக்ஷை', 'ஞாபகார்த்த விருந்து' என்பவை பைபிள் சம்ஸ்காரங்கள் என்று 'சாட்சிகள்' கடைப்பிடித்து வருகின்றனர். மற்ற அனுஷ்டானங்களும் சடங்கும் மூடநம்பிக்கைகள்.

சூதுவாதற்ற கடவுள் நம்பிக்கைக்குப் புத்துயிர் அளிக் கும் இந்த நவீன முயற்சிகளில் 'பாதர் டிவை' யின் சாந்தி இயக்கம் தீவிரமான பொருள் பொதிந்த இயக்கம்; இது தோன்றி 30-வருடங்களே ஆகியிருந்த போதிலும், ஆயிரக் கணக்கான நீக்ரோவர்களையும் வெள்ளையர்களையும் அமைதி யான மத நம்பிக்கை ஒன்றில் தோழமை கொள்ளச் செய்து

விட்டது; பக்தியும், வழக்கத்திற்கு அடிமையாகாமையும் இதன் சிறப்பியல்புகள், அங்கத்தினர்கள் புதியவாழ்வு நடத்து கிறார்கள்; புதிய அமைதியும் பாதுகாப்பும் பெறுகிறார்கள்; புதுப்பெயர்களைச் சூட்டிக்கொள்கிறார்கள் சுவர்க்கத்தில் வசிக் கும் தேவதைகள் போலாகிறார்கள். 'ஞாபகார்த்த விருந்து' உண்மையான விருந்தாகவே இருக்கிறது. தந்தை டிவைன், அன்னை டிவைன் ஆகியோருடன் அவர்கள் நடத்தும் வாழ்வு உண்மையான தெய்வப் பாதுகாப்பைப் பகிர்ந்து கொள்வ தாக இருக்கிறது. 'புதிய தினம்' என்ற அவர்கள் பத்திரிகையி லிருந்து அடியிற் கண்ட பகுதித் தரப்படுகிறது. சம்பிரதாய மான சமய ஸ்தாபனங்களின் சமூகத்திட்டங்களை இப்புரட்சி கரமான சங்கம் அறிவு பூர்வமாக ஆட்சேபிப்பதற்கு உதாரணமாக இது தரப்படுகிறது:

"தந்தை டிவைனை நம்புகிறவர்கள் தாமாக, இனமாக, நஷ்டஈடு கோராது, தங்கள் சேவையை இந்தக் கொள்கைக் காகக் கொடுக்கின்றனர் என்று கருதப்படுகிறது. சமாதான மிஷனின் சக ஊழியர்களும் பிரதிநிதிகளும் நம்முடைய அறிவு பூர்வமான நம்பிக்கைப்படி கடவுளை நம்பத்தயாரா யிருக்கின்றனர் என்று கருதப்படுகிறது. எனவே, சுருங்கக் கூறினால், பொதுத் தர்மத்தால் வாழ மாட்டோம். மேற் கொண்டு உதவியும் கோரமாட்டோம். நாங்கள் இன்ஷியூர் செய்யமாட்டோம்; மனமாற்றத்தின் மூலம் நாங்கள் பெற் றுள்ளதற்கு எங்கள் நெஞ்சம், மனம், முழுவதையும் அளிப்ப தற்காக எடுத்துக் கொண்டிருக்கும் இன்ஷியூரென்ஸையும் விட்டுக் கொடுத்து விடுவோம்; நஷ்டஈடுபெற மாட்டோம்; வேறு பொறுப்போ இன்ஷியூரென்ஸோ ஏற்கமாட்டோம். முதியோர் உதவிநிதி, இன்ஷியூரென்ஸ், யுத்தவீரர் உதவிநிதி முதலிய இதர நஷ்ட ஈடுகளைப் பெறமாட்டோம். இவை எல்லாம் எங்கள் சமய நம்பிக்கைகளையும் நியமங்களையும் மீறுவதாக நாங்கள் அறிவுபூர்வமாக உணர்கிறபடியால், இவ்விதம் செய்கிறோம்."

தாராளப்பான்மை என்னும் சமூகக்கொள்கைக்கு முற்றி லும் எதிராகத் தோன்றியுள்ள இன்னும் பல சமீப காலத் திய இயக்கங்களைக் காட்டலாம்; ஆனாலும் தற்காலத்திய சமூக நிலையால் அவை விளைந்தவை என்பது தெளிவாகவே

தெரிகிறது. பிற்போக்கானவை என்றோ, பழமையின் அடையாளம் என்றோ, தப்பித்துக் கொள்வதற்கு ஏற்ற சாதனம் என்றோ அவைகளைத் தள்ளினால் மட்டும் போதாது. சமய சித்தாந்தம், தத்துவ தரிசனம் என்ற ரீதியில் இவைகளைச் சிரிப்புக்கிடமாக்கும் அம்சங்கள் இருந்த போதிலும், இவையும், மற்றைய ஸ்தாபனங்களைப் போல, தற்காலத்தியஅறப் பிரச்னைகளைப் பிரதிபலிக்கும் புதிய நவீனமான நம்பிக்கைகள் தான்.

## 4

# அறிவு முறையில் புனரமைப்பு

இந்த நூற்ருண்டின் முதல்பத்து வருஷத்திய கருத்துக் களை நம்பும்படி இன்றைய இளைஞர்களைச் செய்வது கடினம்; 1900-ஆம் வருஷ நிம்மதியைவிட 1800-ஆம் ஆண்டு காலத்திய சமயக் குழப்பத்திற்குப் பொருள் விளங்கிற்று. நிம்மதி இரண்டு விதமாக உருவெடுத்தது; ஒன்று தீவிரம், மற்றொன்று வைதீகம்; ஒன்று நவீனம், மற்ருென்று பைபிள் கொள்கை; ஆனல் இரண்டும் சமயநம்பிக்கையின் வெவ்வேறு குரல்கள். அந்தக் காலத்தின் பிரதிநிதியாகப் பேசிய ஜியார்ஜ் ஏ. கார்டன் "தற்காலத்திய வாழ்வு நன்னம்பிக்கை யின்மீது அமைந்திருக்கிறது" என்ருர்; சமய சிந்தனை சக காலத்திய போக்கைப் பிரதிபலிக்க வேண்டும் என்று அவர் தானகவே நினைத்துக் கொண்டார். முன்னேர்களின் இந்த நம்பிக்கை அந்தக் காலத்திய டாலர்களைப் போல இரண்டு பக்கமும் ஒரே பொருளும் கொண்டதாக விருந்தது. ஒரு புறத்தில், தயை மிகுந்த காப்பாளர் என்ற நம்பிக்கை—'கடவுளை நம்புகிருேம்,; மற்ருெரு புறத்தில் தன்னம்பிக்கை, அல்லது முன்னேறுகிருேம் என்ற உறுதி, பரஸ்பர உறவு, சரியான பாதையிலேயே செல்கிருேம், உண்மையின் சாரத்தைப்பற்றி விட்டோம் என்ற நினைப்புகள்.

## பைபிளை ஆன்மதிருப்தியுடன் நம்புதல்

பைபிளை ஆத்மதிருப்தியோடு நம்புவதைப்பற்றி விரிவாகப் பேச வேண்டியதில்லை. எல்லோரும் அதை அறிவார்கள்; இன்றும் அந்த நம்பிக்கை இருக்கிறது. 1900-ஆம் ஆண்டுக்குள் பிராடெஸ்டெண்டுகளும், கத்தோலிக்கர்களும், சீர்திருந்திய யூதர்களும், பைபிளின் பழைய ஏற்பாட்டைப்பற்றிய சரித்திர வரலாற்று ரீதியான விமர்சனத்தை ஏற்றுக் கொண்டார்கள். பைபிளின் எழுத்துக்கூட தேவவாக்காகாது என்ற அளவுக்குப் பாதிரிகளும் படித்தவர்களும் விமர்சனத்தை வரவேற்றனர்; ஏனென்றால், எழுத்துக்கூட தேவவாக்கு என்ற கருத்தால் அதிக பிரச்னைகள் எழுந்தனவே அன்றி பிரச்னைகளுக்கு விடை கிடைக்கவில்லை. கிறிஸ்தவ சமயக் கிரந்தங்களின் பிரமாண சக்தியை பைபிளின் சொற்களைவிட்டுப் பிரித்துப் பார்க்க முடியுமானால், அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. பைபிளை இன்பத்திற்கும் மோட்சத்திற்கும் நம்பகமான வழிகாட்டும் தேவவாக்காகத் தான் சமயப்பற்றுள்ள அமெரிக்கர்கள் கருதினார்கள். அதை விஞ்ஞானப் பாட புத்தகமாகக் கடவுள் எண்ணினார் என்று கருதப் போதுமான காரணமில்லை. விஞ்ஞானமென்பது மனித சக்திக்கு உட்பட்டது, மனிதனின் ஆராய்ச்சி, மனித சிருஷ்டி; ஆனால் டோராவும், சுபவார்த்தையும், வாழும்வழி என்ற முறையிலும் தெய்வநியதி என்ற முறையிலும், கடவுளின் அருள் மொழிகளாகவே இருந்தன. தவறுகளே இல்லாத அறிவு என்ற முறையில் பைபிள் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதில்லை; ஆனால் முடிவு செய்ய வேண்டிய காரியங்களுக்கான, தவறாத வழிகாட்டி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. "தேவவாக்கையும் அதைப் பதிவு செய்து காட்டும் எழுத்தையும் வேறுபடுத்திப் பார்க்கிறோம்" என்று லூயி எப். ஸ்டர்ன்ஸ் கூறினார். பைபிளின் உண்மையையும் (கிறிஸ்தவவிஞ்ஞானம் என்று சிலர் குறிப்பிடுவது) சோதனை பூர்வமான விஞ்ஞானத்தையும் வேறு படுத்திப் பார்ப்பதால், உலகியல் அறிவுக்கும் தெய்வீக ஞானத்திற்கும் பரஸ்பர ஆக்ரமிப்பிலிருந்து பாதுகாப்பு ஏற்படுகிறது; சிந்தனைக்கு சுதந்திரமிருந்தாலும் நடைமுறைக் கட்டுப்பாடுகள் விஷயத்

தில் பிரமாண பூர்வமான யோசனைகளையும் கட்டளைகளையும் அதனுடன் இணைப்பது சாத்தியமாக இருக்கிறது.

பைபிளை இவ்விதம் நிதானமாக விமர்சனம் செய்வதன் மூலம் ஆதாரமான விஷயங்களுக்குப் பாதுகாப்பும், விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும் 19-ஆம் நூற்றுண்டில் தொடங்கிய போராட்டத்திற்கு முடிவும் செய்து விடலாம் என்று கருதப்பட்டது. கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படைகளையே தகர்க்கக் கூடியதாக வெளிநாட்டில் பைபிளின் புதிய ஏற்பாட்டைப்பற்றி எழுந்த விமர்சனங்களை அமெரிக்கர்கள் பொருட்படுத்த ஆரம்பிக்கவில்லை; நிபுணர்களுக்கான அறிவு முறை ஆராய்ச்சி என்று கருதினுர்கள். பைபிளின் பிரமாண அதிகாரம்பற்றிய நிம்மதியான இந்தப் போக்குக்கும் அதற்கு முந்திய காலத்து வைதீக பைபிள் கொள்கைக்கும் வேற்றுமை உண்டு; ஏனெனில் பைபிளை லேசாக ஆதாரம் காட்டும் இம்முறை சமயப் பிரிவுகளின் சச்சரவுகளும், சித்தாந்த வேற்றுமைகளும் அளவுக்கு மிஞ்சுவதை ஒடுக்கப் பயன்படுத்தப்பட்டது. சித்தாந்த வேறுபாடுகள் இருந்த போதிலும் ஒன்றுக்கொன்று நெருங்கிக் கொண்டிருந்த பல கிறிஸ்தவப் பிரிவுகளை பைபிள் பொதுவாக இணைத்தது; கிறிஸ்தவர்களையும் திருந்திய யூதர்களையும் இணைத்தது; யூத-கிறிஸ்தவமரபென்று கூட ஒன்றைப் போற்ற ஆரம்பித்துவிட்டார்கள். "பைபிள் இனி பிரமாணமல்ல; மூலக் கிரந்தம்." இத்தகைய காரணங்களால் பைபிள் தேவாலய மேடைக்கும் சமயக் கல்விக்கும் மையமாக விளங்கிற்று. கல்லூரிகளில் கூட சமயத்தைப்பற்றிய ஆரம்ப பாட திட்டத்தில் பைபிள் படிப்பு (சில சமயம் அது மட்டுமே) இடம் பெற்றது. இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட "பைபிளுக்கு அறிமுகங்களை"ப் பார்த்தால் எவ்வளவு திருப்தியுடன், ஆக்கரீதியில் பைபிள் படிக்கப்பட்டு வந்ததென்பது புலனுகும். வகுப்பறைப் படிப்புக்கும் தேவாலய விளக்க உரைகளுக்கும் அதிக வித்தியாசமிருப்பதில்லை. சரித்திர ரீதியாகவோ விஞ்ஞான ரீதியாகவோ பைபிளில் தவறில்லை என்று சொல்ல முடியாவிட்டாலும், சமயம் என்ற ரீதியில் வெகு முக்கியமானது என்ற கருத்து தவறே இல்லாத பிரமாணம் ஒன்றின் பாதுகாப்பைத் தேடியவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அம்மாதிரியான

பயபக்தியுள்ளவர்களுக்குத் தவருத தேவாலயம் தான் சுலப மான புகலிடமாயிற்று. மாயைகள் விலகுவதால் திடமான மனதிற்குத் தொந்தரவு ஏற்பட்டால் (ஏற்படக் கூடாது) அதற்கேற்ற மருந்து 'லாகிரி'தான். தவறே இல்லாத பிரமா ணங்களை தேடிய பேராசிரியர் வால்டர் எம். ஹார்டன் இந்த நிலமையைப் பற்றித் தெளிவுடன் விமர்சனம் செய்திருக் கிருர் :

"தவறின்மை என்னும் பூங்காவைவிட்டுச் சென்றவன் திரும்ப அங்கு எப்படிச் செல்ல முடியும் என்ருல் சுற்றுவழி செல்ல வேண்டும். என்றுதான் பதில் சொல்ல முடியும். ஏமாற்றமடைந்த பிராடெஸ்டெண்டுகளுக்கு—பைபிள் தவறே செய்யாது என்ற நம்பிக்கையைத் திரும்பப் பெற முடியாதவர்களுக்கு—சத்தியமான தேவாலயத்தின் குரல் இனிப்பாக இருந்தது. ஏமாந்தவர்கள் ஒன்றைப்பற்றி மறந்து விடுகிருர்கள்—அதாவது தங்கள் முன்ஞேரின் நம் பிக்கை; இருந்தாலும், ரகசியமாக சுற்றுவழியாக அதைப் பெற முயல்கின்றனர்.

## நிம்மதியான நவீன வாதம்

இருபதாவது நூற்ருண்டின் ஆரம்பத்தில் நிலவிய நவீன வாதத்திற்கு (அல்லது நிம்மதியான தீவிரவாதத்திற்கு) வேறு விதமான நம்பிக்கை இருந்தது; திருந்திய யூதர்களிடையே இது அதிகமாகப் பரவியிருந்த போதிலும் அமெரிக்க கிறிஸ்த வர்கள் சிலரிடையேதான் பரவியிருந்தது. இதற்கு முக்கிய அமெரிக்க மூலங்கள் நியூ இங்கிலாந்து பரதத்வ சித்தாந்த மும், பூர்ணபாவனுவாதமும்; இவற்றுடன் பரிணும வாதப் பூச் சொன்றும் சேர்க்கப்பட்டது. இது யூத சமயமுமல்ல; கிறிஸ்தவ சமயமுமல்ல; லேசான வேஷமணிந்த உலகியல் சித்தாந்தம். "பரிணுமம்" என்பது "கடவுள் தன் காரியங் களைச் செய்யும் விதம்" என்று ஜான்பிகே கூறிய போது பரி ணுமவாதத்தின் விஷ அம்சத்தை ஒழித்து விட்டார். எனவே சமய சித்தாந்திகள் பரிணுமவாதத்திற்கு சித்தாந்த உருக் கொடுத்து தேவாலய மேடையில் பயன்படுத்த முனைந் தனர்.

நியூ இங்கிலாந்தின் தாராளப் பான்மை கொண்ட சமய சித்தாந்திகளிடையே பத்தொன்பதாம் நூற்ருண்டில் 'புதிய சமய சிந்தாந்தம்' ஒன்று தோன்றிற்று; கால்வின் மார்க்கம், பியூரிடன் மார்க்கம் ஆகியவற்றுடன் ஒட்டத் தொடர் பறுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம். ஆண்டோவர் குருமார் பயிற்சி நிலேயம்தான் அதன் தலைமைக் காரியாலயம்; 'ஆண்டோவர் ரெவியு' தான் அதன் பத்திரிகை. ஆனல் குருமார் பயிற்சி நிலேயங்களிலும் வட கிழக்கு, நடு மேற்கு சர்வகலாசாலேகளிலும் திறமையான விரிவுரையாளர்கள் அதற்கிருந்தனர். மாஸாசுஸெட்ஸ், எபிஸ்கோபல் சித்தாந்தப்பள்ளியைச் சேர்ந்த ஹெகலியவாதி எலிஷா மல்போர்ட் இருந்தார்; பிரடெரிக்மாரிஸின் சீடர்; ஆர்வம்மிகுந்த தேசீயவாதி. ஆண்டோவர் குருமார் பயிற்சி நிலயத்தில் சாமுவேல் ஹாரிஸ் இருந்தார். "சிருஷ்டிகர்த்தாவும்எல்லோர்க்கும் பிரபுவானவரும்" என்ற நூலே 1896ல் இயற்றியவர்; ராசெஸ்டர்சித்தாந்த குருமார் பயிற்சி நிலேயத்தை சேர்ந்த அகஸ்டஸ் ஹெச் ஸ்டிராங், "சிருஷ்டியில் ஏசுவும் அறநெறி ஏசுவாதமும்" என்னும் நூலாசிரியர்; ஜியார்ஜ். ஏ. கார்டன்: கார்டன் எழுதிய நூல் "நம்பிக்கைபற்றிய முடிவான கருத்து" கள், இருபதாம் நூற்ருண்டின் தத்வரீதியான சமய சித்தாந்தத்திற்கு நல்ல எடுத்துக் காட்டாகும். "இயற்கையிலிருந்து கடவுளுக்கு" என்ற தத்துவ தரிசனத்தின் கர்த்தரான ஜான் பிஸ்கேயைப் பின்பற்றியவர்கள் பரிணுமவாத சரகத்தில் இருந்தனர். அவர்களில் முக்யமானவர்கள்; ஆம்ஹர்ஸ்டு கல்லூரித்தலேவர் ஜியார்ஜ்ஹாரிஸ், "அறநெறியான பரிணுமம்" என்னும் நூலின் ஆசிரியர்; நியூ ஹாவனேச் சேர்ந்த நியூமன்ஸ்மித்—சமய சித்தாந்தத்தை உயிரியல் சாத்திர நோக்கோடு அணுக வேண்டும் என்று கூறும் வாதிகளில் தீவிரமானவர்; லேமன் அப்பட் "பரிணுமவாதியின் சமய சித்தாந்தம்" என்னும் நூலின் ஆசிரியர்.

இந்த இருகோஷ்டிகளேவிட நிதானமான கோஷ்டி ஒன்று ஹொரேஸ் புஷ்னெலேப்பின் பற்றியது; அதற்குத் தலேவர் தியோடோர் டி. மங்கர். அவர் எழுதிய நூல் "புதிய சமய சித்தாந்தம் "பத்தொன்பதாம் நூற்ருண்டின் முடிவில் கிறிஸ்தவ சமய சித்தாந்தத்திற்குப் பரிணும ரீதியில் கொடுக்கப்பட்ட

விளக்கத்தை நிதானத்துடன் எடுத்துரைக்கிறது. இப் புதிய கொள்கை எவ்வளவு வைதீகமாகத் தோன்றுகிற தென்பதைக் கவனியுங்கள் :

"புதிய சமய சித்தாந்தம் தேவாலயங்களின் சரித்திர வரலாற்று பூர்வமான நம்பிக்கைகளைவிட்டுப் பிரியவில்லை; வளர்ச்சி என்ற ஒரு அம்சத்தையும் கூட்டிக் கொண்டு அவைகளின் தொடர்ச்சியாகவே விளங்குகிறது. முன்னேறும் ஒவ்வொரு கட்டத்திலும் முந்திய வாழ்வை அழித்துவிட வேண்டும் என்ற நோக்கம் இதற்கில்லை. முன்னேற்றம் மெதுவாக, சிருஷ்டியின் வளர்ச்சி போல், நடக்கிற தென்றும், புரட்சிகரமான தாவல்களால் ஏற்படுவதில்லை என்றும் கருதுகிறது. பிந்திய கால சமய சித்தாந்தங்களைவிட முந்தியவற்றுடனேயே அது நட்புக் கொள்கிறது; அகஸ்டைன் உருவாக்கிய சமய சித்தாந்தத்தைவிட ஆதிகால கிரேக்கர்கள் உருவாக்கியதில் தனக் கொப்பிய கருத்துக்களைக் காண்கிறது.

சென்ற கால தேவாலயங்களின் குறிப்பான கருத்துகளை அது மறுக்கவில்லை. வார்த்தையைப் பொருட்படுத்தாமல் "மும் மூர்த்திகள்" என்ற கருத்தை ஏற்கிறது; ஆனால் மன இயலுக்கு ஒழுங்காக ஒவ்வாத மும்மூர்த்திகளை அல்ல. தெய்வத்தின் ஆட்சியை ஏற்கிறது; ஆனால் அதைத் தன் கொள்கையின் அஸ்திவாரமாகக் கருதவில்லை; தெய்வீக நியாயத்தைத்தான் ஏற்கிறது; அவதாரத்தை ஒப்புக் கொள்கிறது; ஸ்தூல ரீதியில் அல்ல; ஏனென்றால் எல்லா சமயங்களிலும் தான் அவதாரம் ஏற்பட்டிருக்கிறது; ஆனால் ஒரு அவதாரத்தின் மூலம் மனிதனை உருவாக்கி விமோசனம் அளிக்கும் சக்தி ஒன்று உலகில் புகுந்தது என்ற கருத்தில் ஏற்படுகிறது; பிராயச்சித்தத்தை நெறியும் நடைமுறைப் பயனும் உள்ள தெய்வ காரியமாக ஏற்கிறோம்; உலகின் போராட்டங்களை விட்டு ஒதுங்கிய வான மண்டலமர்மம் என்ற முறையில் அல்ல; உலகின் தீமைகளிலிருந்து விமோசனமளிக்கும் உண்மையான, அறிய கூடிய சக்தியாக ஏற்கிறோம்; மனிதனின் முக்கிய இயல்பில் புதையுண்டு கிடக்கும் உயிர்த்தெழலை ஏற்கிறோம்; அறநெறி வளர்ச்சியில் அடங்கி உள்ள தென்னும் முறையில் 'கடவுள் தீர்ப்பை' ஏற்கிறோம்......இந்தக் கொள்கைகளின் முக்கிய அம்சங்களை விளக்குவதாக கூறி அவைகளை ஒன்றுமில்

லாமல் செய்யவோ சிறுமைப்படுத்தவோ இது முயலவில்லை; சமயக் கிரந்தங்களில் அருளப்பட்டு, சரித்திர வரலாற்றிலும் தேவாலயங்களின் வாழ்விலும் உலக வாழ்விலும் வளர்ச்சி அடைந்துள்ள உண்மைகளைக் காட்டுவது தவிர வேறு நோக்கம் இதற்கில்லை."

சமயத்தின் முக்கியாம்சத்தை எடுத்துரைக்கும் இம்முயற்சிகள் எல்லாம் சாதாரண மக்களுக்கு எவ்வளவு குற்றமற்றவையாகப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு சொல்லும் வாதத்தை எழுப்புகிறது. சக சித்தாந்திகள் எவரும் இதில் அழிக்கும் பான்மையைத் தவிர, ஆக்கப் பான்மையைக் காணமாட்டார்கள். "கடவுளிடமிருந்து வருவது அருள் மொழி என்பதைவிட கடவுளைப் பற்றிய அருள் மொழி" என்ற கூற்றைப் படித்தால் 1950-ம் ஆண்டு வாசகன்கூட கலவரமடைவான். மங்கரைப்போல் புதிய சமய சித்தாந்திகள் சமரசமாகப் போக விரும்பினாலும் அல்லது நவீன முறையில் பாவனு வாதத்தையோ பரிணும வாதத்தையோ ஆதாரமாகக் கொள்ள விரும்பினாலும் மங்கரின் அற்புதமான கருத்தை ஏற்றனர் :

"கிறிஸ்தவ சமயத்திற்கு எதேனும் ஜீவ அடிப்படை இருக்குமானால், அது அதன் நியாயமான தன்மைதான். மனத்தில் அது சுளுவாக அமர்ந்திருக்க வேண்டும்; மனத்தின் சகஜமான காரியங்களில் எல்லாம் மனத்தின் துணையாக அது இருக்க வேண்டும்......கவிஞர்களும் நாடகாசிரியர்களும் மக்கள் வாழ்வைக் கையாள்வது போல இதுவும் செய்கிறது; மனிதவர்க்கத்தை நேரடியான ஒளி மூலம் இது பார்க்கிறது; நேராக்கப்பார்க்கிறது; ஆழ்ந்து மனிதவர்க்கத்தின் விரிவு முழுவதையும் பார்க்கிறது."

சமய சித்தாந்தத்தை ஜீவதயை ரீதியில் விளக்குவதால் ஏற்படும் விளைவை மங்கர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். புதிய சமய சித்தாந்தம் ஆன்மீக சாதனைகளை ஞாலவித்தை நிலையிலிருந்து அறநெறி நிலைக்கு உயர்த்துகிறது. நம்பிக்கை என்பது அற உண்மை, கடவுளே நேரிடையாகப் பணிவுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது எளிய அறிவுமார்க்கம் என்று இது கருதுகிறது."

கிறிஸ்தவ தேவாலயங்களிலிருந்து பைபிள் பூச்சுடன் இவை எல்லாம் போதனை செய்யப்பட்டாலும் அவற்றின் அடிப்படை விஞ்ஞானத் துறையிலிருந்து எடுக்கப்பட்டதே யாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி பத்து வருஷங்களில் இக்கொள்கைகள் உண்மையில் புதிய சமய சித்தாந்தமாகவே இருந்து வந்தன; கிறிஸ்தவ மார்க்கத்தின் புதிய விளக்கமாக இருந்து வந்தன. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில், இது சமய சித்தாந்தத்திற்கு எதிரியாகவே ஆகிவிட்டது; கிறிஸ்தவ மதத்தைவிட சர்வ வியாபகமான மதம் தேவை என்ற ஏக்கம் உண்டாகி விட்டது. பைபிளைப் பற்றிய பாஷியமும் கோட்பாடுகளைப்பற்றிய விளக்கங்களும் வலிந்து பொருள் கூறுவதாகவும் அலுப்புத் தருவதாகவும் பொருத்தமில்லாமலும் போய்விட்டன. இக்கொள்கையில் காணப்பட்ட குறிப்பான கிறிஸ்தவ, யூத அம்சங்கள் நஷ்டக்கணக்காகத் தோன்றின; இன்னும் வியாபகமான அறிவு முறையான கடவுள் வழிபாட்டுக்குத் தடங்கலாகத் தோன்றின. சிகாகோ உலக கண்காட்சி காலத்தில், சமயங்களின் மகாமன்றத்தில் கீழை நாட்டு சமயங்களைப் பற்றிய உண்மையான அக்கறையும், மற்ற சமயங்களைப் போல் கிறஸ்தவ சமயமும் ஒன்று என்ற எண்ணமும் தோன்றிற்று. கிறிஸ்தவ சமயம் தான் முடிவான சமயம் என்ற கருத்து கிறிஸ்தவ சமய சித்தாந்திகளுக்கே ஒரு பிரச்னையாகி விட்டது; சமய சித்தாந்தங்களைப் புறக்கணித்து மதத்தைப் பற்றிப் பொதுவாகப் புத்தகங்கள் எழுத ஆரம்பித்தனர். உதாரணமாக, தம் பிரசங்கத் தொடரின் மகுடத்தை லீமன் அப்பட் "பரிணாமவாதியின் சமய சித்தாந்தம்" என்று அமைத்துக் கொண்ட போதிலும், தெய்வ அருள், பாபம், தியாகம், திருப்தி செய்தல், அற்புதங்கள், ஏசுநாதர் ஆகிய விஷயங்களை ஆராய்ந்தாலும், எல்லாவற்றையும் பரிணாமத்திற்குள் அடக்கி விட்டார். (உதாரணமாக, 'பரிணாமத்தில் ஏசுவின் ஸ்தானம்' என்கிறார்) புதிய சமய சித்தாந்தத்தில் இப்பொழுது புதுமையும் காணோம், சித்தாந்தத்தையும் காணோம். அது ஒரு புதிய வைதீகம் அல்லது புதிய பிடிவாதமாகி விட்டது; எல்லா சமய சித்தாந்தங்களையும் கோட்

பாடுகளையும் விதியைகளையும் மீறிய பரிணாமக் கொள்கையில் வேரூன்றிய, சர்வசமயமே அதன் லக்ஷியமாகி விட்டது.

இதுதான் நவீன வாதம். லைமன் அப்பட் ப்ரூக்லின் நகரத்திலுள்ள ஹென்ரி வார்டுபீசருடைய பிளிமத் தேவாலயத்தில் பிரசங்கம் புரிந்து வந்தாலும், எமர்சனைப் போல நாடு முழுதிலும் பிரசங்கங்கள் புரிவதன் மூலமாகவும் "நோக்கு" என்னும் பத்திரிகையைப் பிரசுரிப்பதன் மூலமாகவும், மற்றப்படி நவீன பிரசார முறைகளைக் கையாள்வதன் மூலமாகவும் இந்த சித்தாந்தத்தைப் பரப்பி வந்தார். அவருடைய கருத்துக்களுக்கு முக்ய மூலங்கள் ஆஸ்திக பரிணாம வாதிகளான ஜோஸப் லே கான்டே, ஹென்ரி டிரம்மண்டு என்று ஒளிவு மறைவின்றித் திரும்பத் திரும்பக் கூறி வந்தார். "பரிணாமம் என்பது கடவுள் தன் காரியங்களைச் செய்யும் விதம்" என்ற ஜான் பிச்கேயின் கருத்தை ஒரு கோஷமாகக் கூட ஆக்கிவிட்டார்.

இந்த சித்தாந்தம் சொல்லளவில்தான் கிறிஸ்தவத் தன்மை கொண்டதென்று விளக்கத் தேவை இல்லை. மக்களிடையே அந்தக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த தத்துவக் கருத்துகளின் கிறிஸ்தவ உருவம் அவை. ஆன்மீக உலகுக்கு இயற்கை நியதிகளைப் பொருத்தியதால் "வாழ்க்கைப் போர்" "போராட்டத்தின் மூலம் வளர்ச்சி" "முயற்சி மூலம் வெற்றி காணல்" முதலிய பல பரிணாம வாத நெறிக் கருத்துகளைக் குறிக்க கிறிஸ்தவக் கொள்கைகளையும் குறியீடுகளையும் அது உபயோகித்தது.

இதே மாதிரி கருத்துகளைத்தான் யூத மதத்தின் அடிப்படையென்று திருந்திய யூதர்களிடையேயும் ஐஸாக் எம். நயிஸ், காப்மன் கோலர், எமில் ஜி. ஹிர்ஸ்க் ஆகியோர் பிரசாரம் செய்தனர். திருந்திய மதத்திற்குப் பல ஆண்டுகள் வரை அவர்களுடைய பிரசாரக் கொள்கைகளே அடிப்படையாக இருந்தன.

நிம்மதியான மனப்போக்குள்ள இந்தத் தீவிரவாதிகளை ஊக்கிய உணர்ச்சிகள் ராபி ஐஸாக் ஏ. நயிஸின் புத்தகத்தில் இடம் பெற்றன; ஜான் பிச்கேயின் "பிரபஞ்சதத்துவ தரிசன"த்தைப் பின்பற்றி "பிரபஞ்ச தெய்வம்" என்னும் புத்தகத்தை எழுதியிருக்கிறார். நயிஸ் கூறுகிறார் :

"விஞ்ஞானியே! யாரைத் தேட நீ விரும்புகிறுயோ யாரைத் தேடுவதுதான் உன்னத ஞானமென்று கருது கிறுயோ அந்தக் கடவுள் இதோ இருக்கிறுர்; வியக்திகளைக் கொண்டு அனுமான முறையில் கண்டுபிடிக்கப்பட்டவர் அவர்; ஆனுல் தானுக உணரப்படுபவர். தத்வதரிசிகளே! எதை விளக்குவது மனத்தின் பெரும் பெருமை என்று கருது கிறீர்களோ, அந்தக் கடவுள் இதோ இருக்கிறுர்— (கான்டு முதலிய சிந்தனையாளர்கள் கடவுள் மீது ஜீவ பாவங்களை ஏற்றும் சித்தாந்த முறையைக் கண்டித்திருக்கின்றனர்); பிர பஞ்சக் கடவுளே தத்துவ தரிசனத்தின் முதற்பொருளும் முடி வான பொருளும் ஆகும். எளிமையான மனத்தவர்களே! உங்கள் கடவுள் இதோ இருக்கிறுர்; தேடத் தேவை இல்லை; ஏனெனில் அவர் எங்கும் இருக்கிறுர்; உன்னிடத்தும் சூழ வும் இருக்கிறுர்; ஜடப்பொருளின் ஒவ்வொரு தன்மையிலும், மனத்தின் ஒவ்வொரு அசைவிலும் இருக்கிறுர்; நீ இருக்கு மிடத்தில் அவர் இருக்கிறுர்; நீ பார்க்கும் போதும் சிந்திக்கும் போதும் அவரையே எண்ணுகிறுய். குழந்தைகாள்! உங் கள் கடவுள் இதோ இருக்கிறுர்; மலர்களின் மணத்திலும் வஸந்த கால மலர்களின் அழகிய வண்ணத்திலும், இடியி லும் ரகசியக் குசுகுசுப்பிலும், வானின் நீல மண்டபத்திலும் மண்ணின் பச்சை உடையிலும், உங்கள் குற்றமற்ற சிரிப்பி லும், உங்கள் தாயின் இனிய நெகிழ்ச்சியிலும் இருக்கிறுர். ஞானியே! மூடனே! பெரியோனே! சிறியோனே! உன் கடவுள் இதோ இருக்கிறுர்; அவரை நீ தப்ப முடியாது. அவரும் உன்னைத் தப்ப முடியாது. அவர் உன்னிடம் இருக் கிறுர்; நீ அவரிடம் இருக்கிறுய். வருங்கால மனிதர்களே! எல்லாக் கருத்துகளும் அறிவும் இசைவதில் கடவுள் இருக் கிறுர்; எல்லோருக்கும் கடவுளாய், காலாதீதத்திற்கும் கடவு ளாய், பிரபஞ்சக் கடவுளாய், "நான் இருக்கிறேன், வேறெ துவும் இல்லை" என்று கூறுவதாய்க் 'கடவுள்' இங்கே இருக்கிறுர்.

போப்பாண்டவர் 1907-இல் தம் கட்டளை மூலம் நிறுத் தும் வரையில் அமெரிக்க கத்தோலிக்கர்களும், கத்தோலிக்கத் தேவாலயங்களும், பத்திரிகைகளும் இந்த நவீனக் கொள்கை களைப் பயின்றன. ஆனுல் நவீன சித்தாந்தம் சூழ்நிலையாக்

கிக் காட்டிய நம்பிக்கையும் வளர்ச்சியும் உலக சகோதரத்துவமும் அமெரிக்க கலாசாரத்தின் பொதுத் தொனியாய்இருந்த மட்டும் போப்பாண்டவர் கட்டளை பயனளிக்கவில்லை. மின்ட். ஜே. சாவேஜைப் போல் நம்புகிற அமெரிக்கர்கள் இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் முதல் முதலாகச் சரித்திர வரலாற்றில், மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசாங்கத்தின் கீழ், சுதந்தரம், ஒழுங்கு என்ற பிரச்னைகளைப் பெருமளவில் தீர்த்திருக்கிறோம். இந்த ராஜாங்கம் எந்த நிலமைக்கும் இணங்க வளைந்து கொடுக்கக் கூடியது; முடிவற்று விரியவும் வளரவும் கூடியது. இயற்கையின் சக்திகளை அறிவினாலும் பணிவினாலும் கட்டுப்படுத்தி, நமது பௌதீக, மானசீக, ஆன்ம வாழ்வுக்குப் பணிபுரியும்படிச் செய்ய வரவர அறிந்து வருகிறோம். ஆனால் இப்பொழுது தொடக்கம்தான் ஏற்பட்டிருக்கிறது. மூடி கூறுவதுபோல் "முடிவை நோக்கிச் செல்லும் பழமை தேய்ந்த உலகமல்ல இது; வேறு வழியின்றி முழுக வேண்டிய பழைய உடைசல் அல்ல—முடிந்த வரையில்கப்பல் ஊழியர்களைக் காப்பாற்றி விட்டுக் கப்பலை அதன்விதிக்கு விட்டுவிடுவோம் என்பதற்கு. இரவு கழிந்து விட்டது. கிழக்குவானம் சிவக்கிறது; ஆனால் வரும்நாள் முன்னே கிடக்கிறது—ஞானமும் நலமும் இன்பமும் நிறைந்த மக்கள் வரும்நாள்; மண்மீது கடவுளரசமையும் நன்னாள்."

இவற்றைப் போன்ற தீவிரக் கருத்துக்களைக் கூறியவர் வேறு யாருமில்லாவிட்டாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் பைபிள் ஆஸ்தீகர்கள், பரிணாமவாத ஆஸ்தீகர்கள் என்று காணப்பட்ட வித்தியாசம் இப்பொழுது அவ்வளவு முக்கியமாகத் தெரியவில்லை; நிம்மதியான மனப்போக்கில் அமெரிக்கர்கள் ஒற்றுமை கண்டதுதான் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. இந்த நிலமையைத் தியோடோர் மங்கர் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

சிரத்தையும் அறிவும் உள்ள இன்றைய மக்கள் ஏசு சீடர்களின் வார்சுமுறை பற்றியோ, தீக்ஷைமுறைகள் பற்றியோ முடிவற்ற தண்டனை பற்றியோ சமய கிரந்தங்களின் சொற்கள்கூட தேவவாக்கென்பது பற்றியோ விவாதிப்பதில்லை. இக் கொள்கைகள் சம்மந்தப்பட்ட பழய போர்க் கொடிகள்

இன்னும் ஆடிக் கொண்டிருக்கின்றன; ஆனால் இன்று கொள் கைகளைப் பொறுத்த போர்கள் இல்லை; சிறு சச்சரவுகள் தான் இருக்கின்றன; செய்யவேண்டிய தென்ன என்பதுதான் இன்றைய ஒரே பிரச்னை......

பழைய கோட்பாடுகளிலிருந்து பல சகிக்க முடியாத அம் சங்களை எடுத்துவிட்டு, குலைந்து போன மிச்சத்தை வைத்துக் கொள்வது பலவீனமான யுக்தி; அதனால் தேவாலயமும் சேவையும் சீர்கேடு அடையத்தான் செய்யும். வலுவுள்ள மக் கள் பலவீனத்தை விரும்ப மாட்டார்கள். தேவாலய மேடைகெட்டு வருவது உண்மை. தெளிவுள்ளவர்கள் புதிய சாராயத்தைப் பழைய குப்பியில் ஊற்ற விரும்ப மாட்டார் கள். சாராயமோ குப்பியோ இல்லாத போதகர் துறையில் சேரவிரும்பமாட்டார்கள்.

## நடைமுறை அறிவு தாராள வாதம்

போதனைகளுக்கும் ஸ்தாபன ரீதியான சமயங்களுக்கும் ஏற்பட்டுவரும் ஆபத்தைக் கண்ட அமெரிக்கர்கள் இன்னும் ஆக்க ரீதியான கொள்கையைத் தேடினர். இந்த நூற்றாண் டின் ஆரம்பத்தில் சித்தாந்திகளிடையே தோன்றிய இப்புத் துயிர் இரண்டாவது பத்தாண்டின் நடுவுவரையில் அறிவு சக்தியாகிவிடவில்லை; அந்தச் சமயத்தில் கிறிஸ்தவர்கள் இதைத் தாராள வாதம் என்று கண்டு கொண்டனர்; வைதீ கம் என்று இதை யூதர்கள் கொண்டனர். பொதுவாகக் கூறி னால், 1900—15 ஆண்டுகள் நவீன சித்தாந்தத்திற்கு எந்த அளவு ஆள்பட்டனவோ அந்த அளவு 1915—1930 ஆண்டு களும் தாராள வாதத்திற்கு ஆட்பட்டன.

தாராள வாதத்திற்கு இரண்டு அடிப்படைகள் இருந் தன: சமூகக் கொள்கை, நடைமுறை நிர்ணய அறிவு—தத்வ தரிசனத்தையும் விஞ்ஞானத்தையும் விட்டு விட்டு, நடை முறை நிர்ணய அறிவைப் பொறுக்கியது குறிப்பான அமெ ரிக்க முறை; இது நகாசு படுத்தப்பட்ட ஜெர்மன் சமய சித்தாந்தத்தின் எளிய சுருக்கம். எனவே சித்தாந்தத்திற்கு எதிரான இந்த இயக்கத்தின் சித்தாந்தத்தைப் பற்றிக் கூறு வது பொருத்தமாகும். வில்லியம் ஜேம்ஸ் எழுதிய "சமய

அனுபவ வகைகள்'' என்னும் புத்தகத்தின் தூண்டுதலால் விஞ்ஞான முறைக்கு எதிரான, நடைமுறை நிர்ணயத்திற்குச் சாதகமான போக்கு தத்துவ தரிசனத் துறையில் ஏற்பட்டது. ஆனால் சமய வகை அனுபவத்தையும் நம்பிக்கையையும் ஜேம்ஸ் வைத்யமுறை சோதனைக்குள்ளாக்கியது சித்தாந்தத் திற்குத் தகுந்த அடிப்படையாகாது; வியக்திஜீவனின் அனுப வம், ஆன்ம ஏக்கம் என்று அது பகுத்துக் காட்டிற்று. ஆனால் வழக்கம் போல் அமெரிக்க தாராள வாதிகள் தேடியது ஜெர்மனியில் கிடைத்தது—ஆல்பிரெக்ட் ரிட்ஸ்கெல் உரு வாக்கிய நடைமுறை சித்தாந்தம்.

விஞ்ஞானத்திலோ பக்தி எண்ணங்களிலோ ரிட்ஸ்கெல் சமய உண்மையைத் தேடவில்லை; அதைக் கிறிஸ்தவ உணர் வில் தேடினார்; காலக் கிரமத்தில் தோன்றிப் பெருகி, கட வுளருளை கட்டம் கட்டமாக அனுபவித்த தேவாலயங்கள், சமுதாயம் ஆகியவற்றின் வரலாற்றில் தேடினார். சமுதாயத் தின் சரித்திரரீதியான அனுபவத்திற்கு இம்மாதிரி முதன்மை அளிப்பதால், அதன் சரித்திர வரலாற்றைக் கொண்டே அதன் சித்தாந்தத்தை நிர்ணயிக்க முடிகிறது, (இதற்கு சமூக பரிணமம் என்று நாம் பெயரிடுகிறோம்.) இந்த முறையில் கட வுள் தரிசனம் ஏற்படுகிறது; தெய்வத் தீர்ப்பும் வழங்கப்படு கிறது; ஆனால் கடவுளின் தத்துவம் காணப்படுவதில்லை.(மனித அறிவுக்கு அப்பாற்பட்ட தென்பதால்) கடவுளின் பயனும் பொருளும் சரித்திர வரலாற்று மூலம் காணப்படுகின்றன. நவீனவாதப் பிரமுகர் டாக்டர் கார்டன் "கடவுளின் மனிதத் தன்மை," என்பது "முடிவற்ற மர்மம்" என்று கூறி வந்தார்; மனிதத் தன்மை என்ற சொல்லை தயை, அவதாரம், ஜீவசக்தி ஆகியவைகளுக்குச் சமமாக்கியிருந்தார். ரிட்ஸ் கெலிய வாதி கள் தங்கள் சித்தாந்தத்தைப் பிரபஞ்ச ஆராய்ச்சியிலிருந்தும் தத்துவ தர்சன ஆராய்ச்சியிலிருந்தும் பிரித்துவிட்டபடியால் தெய்வ—ஜீவ உறவுக்கு வரலாற்று ரீதியான விளக்கம்தர முடிந்தது. இவ்விதமாக கிறிஸ்தவ மதத்தை விளக்கவும் முடிந்தது; ஆட்சேபணைகளுக்கு நடைமுறை ரீதியில் (சரித்திர வரலாற்று ரீதியில்) சமாதானம் அளிக்கவும் முடிந்தது; பிர பஞ்சத்தைப்பற்றி சமய வைதீகர்களும் பரிணமவாத சித்தாந்திகளும் அறிந்துவிட்டது போல் போட்ட வேஷத்தை

இவர்கள் போடத் தேவையே இல்லாது போய்விட்டது. இந்த சரித்திர வரலாற்று ரீதியான கிறிஸ்தவசித்தாந்தத்தை விளக்கிய அடால்ப் வான் ஹர்னுக் எழுதிய "கிறிஸ்தவ சமயம் என்பதென்ன ?" என்னும் புத்தகம் ஜனங்களுக்கு உகப்பாக இருந்தது. இக்கருத்துகளை ஏற்றுள்ள இதர அமெரிக்க புத்தகங்கள் இவை: டேவிட் ஸ்விங்கினுடைய "ஆல்பிரெக்ட் ரிட்ஸ்கெலின் சித்தாந்தம்," ஹென்ரி ஸி. கிங்கின் "சித்தாந்தத்தின் புனரமைப்பு", "சித்தாந்தமும் சமூகபிரக்ஞையும்", வில்லியம் ஆடம்ஸ் பிரௌனின் "கிறிஸ்தவ மதத்தின் ரஸம்" ஜியார்ஜ் பி. பாஸ்டரின் "கிறிஸ்துவ சமய மென்னும் முடிவான மார்க்கம்" இதே மாதிரி ஏராளமான புத்தகங்கள் தொடர்ந்தன. கிறிஸ்தவ சமயத்தின் ரஸத்தை இவர்கள் அறிந்த விதத்தை பாஸ்டர் கூறுகிறார்: "அறத்தைப் பற்றிய படிப்பு அறம் ஆகிவிடாது; கலையைப் பற்றிய கருத்து கலையாகிவிடாது. தேசபக்தி பற்றிய கருத்து தேசபக்தி ஆகிவிடாது. அதேபோல சமயத்தைப் பற்றிய கருத்தும் சமயம் ஆகிவிடாது. சமயம் என்பது வாழ்வானால் வாழ்வுக்கு வாழ்வுதான் அளவையாக இருக்க முடியும்; கருத்துகள் அல்ல. சமய வாழ்வை சமயக் கருத்துக்களால் அளப்பது மொத்தத்தைப் பகுதியால் அளப்பது போலாகும். இந்தப் பொது உண்மை கிறிஸ்தவ சமயத்திற்கும் பொருந்தும்."

கிறிஸ்தவ சிந்தனையின் வரலாற்றைக் கிறிஸ்தவ ஸ்தாபனங்களுக் கிடையே வைத்து ஜெர்மனியர்கள் விஸ்தாரமாக ஆராய்ந்ததால் இந்த சித்தாந்த முறையை உருவாக்கினார்கள்; இதன் விளைவாக மையப் பிரமாணமான பைபிளின் ஸ்தானம் வரலாற்று ரீதியான ஏசுவுக்கு—வாழ்ந்துவரும் ஏசுவுக்கு—மாறிவிட்டது. லூயி எப். ஸ்டியான்ஸ் கூறுவது போல, "கடவுள் கொள்கையை ஏசுமயமாக்கப் பார்க்கிறோம்." சரித்திர ரீதியான ஏசுவைத் தேடும் இம் முயற்சி புதிய ஏற்பாட்டுக்குப் புதிய விளக்கம்தர ஏராளமான வாய்ப்புகளை அளித்தது.

ஆனால் தாராள வாதிகளில் பலர் சரித்திர ஆராய்ச்சித் தொல்லையை ஒதுக்கிவிட்டு நீண்டகால சித்தாந்தமாக வந்த கிறிஸ்தவ உணர்வு வகையைப் பிடித்துக்கொண்டனர். அமெரிக்காவில் ஜோனதன் எட்வார்ட்ஸ், அவருடைய சிஷ்ய

வர்க்கத்தார் நாளில், புத்துயிருட்டும் சோதனை மார்க்க மாகத் தோன்றி, ஆண்டோவர் மார்க்கத்தார் "ஏசுவுடன் நேரடியான சந்திப்பு" என்று கூறிவந்த பொழுது மறுபடி தலை காட்டிற்று. வில்லியம் ஜேம்ஸின் சமய வகை அனுபவ சோதனையிலிருந்து எழுந்த தனி மன இயல் சமயக் கொள்கை யாக முடிவில் உருவடைந்தது. எனவே ரிட்ஸ்கெல்லின் கிறிஸ் தவ உணர்வுக் கொள்கையை இன்னும் நடைமுறை ரீதியிலும், நோக்கமுள்ளதாகவும்விளக்குவது அமெரிக்கதாராளவாதிக்கு எளிதாகிவிட்டது. ஹென்ரி ஸி. கிங் இவ்விதம் எழுதினார்:

"இவ்விதமாக ஏசுநாதர் அறமுறையிலும் ஆன்ம முறையி லும் மட்டும் கடவுளுடன் ஒன்றியிருக்க வில்லை; கடவுளின் சித்தத்திற்கிணங்கும் தன்னிகரில்லாத் தன்மையில் மட்டும் தனிச் சிறப்புடன் இருக்கவில்லை; 'சத்' என்பதற்கு நோக்கம் கொண்டதென்று பொருள் கொண்டால், தத்துவ ரீதியில் கடவுளுடன் ஒன்றுகவே இருக்கிறார். புதியதும், பழையதும், தனிமன முறையும், தத்துவ முறையும் இப் போக்கில் இசைவு பெறுகின்றது; ஆனால் ஏசுவின் தெய்வத் தன்மையை அந்த ரங்கமான, நடைமுறை ரீதியில் ஒப்புக்கொள்வதுதான் மக்க ளில் பெரும்பான்மையோருக்கு நிச்சயமான உரைகல்லாகத் தோன்றும்." ஏசுவின் ஆதிக்கத்திற்கு மூலம் ஏசுவின் தெய்வீகத் தன்மையை நம்புவது என்ற கருத்திலிருந்து நடைமுறையில் எந்தப்பிரமாணத்தையும் பொருட்படுத்த வேண்டியதில்லை என்ற கருத்துக்கு மக்கள் தாவுவதில் அதிக கஷ்டமில்லை. 1909-ல் மிசிகன், எபிஸ்கொபேலிய அத்யக்ஷ குரு கூறியிருப்பதைக் கவனியுங்கள்:

தற்காலத்திய மனது முற்றிலும் நடைமுறைத் தன்மை கொண்டதாய் இருக்கிறது. தன்னைப் பற்றிய வரையிலே னும் சரியான கிறிஸ்தவம் என்பதை, அதனுடைய மூலங் களால் அன்றி அதனுடைய பலன்களால் தான் அறிந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது. சமயவாதி களைப் பார்த்து அது சில சமயம் பொறுமையின்றிக் கூறு கிறது: "நீங்கள் கூறும் மூலங்களையும், சேமிப்பு நிலையங் களையும், அவற்றிலிருந்து தொடர்ந்து வரும் அனுபவப் பெருக்கையும் விவாதத்திற்காக ஒப்புக் கொள்கிறோம்; இருந் தாலும் என்ன? இப் பெருக்கின் மூலம், இக் கால்வாய்

களின் மூலம், எங்கனை வந்தடையும் வெள்ளத்தின் தன்மை என்ன என்பது பற்றித்தான் எங்களுக்குக் கவலை. முன்பிருந்தது போல் இப்பொழுதும் வாழ்வளிக்கும் அமுத நீராக இருக்கிறதா? மக்களின் ஆன்ம வேட்கையைத் தணிக்க வல்லதா? மக்களின் மன மாசை இன்றும் துடைக்கவல்லதா? நம்முடைய அறவாழ்வுக்கும் நெறிக்கும் வலிமை ஊட்ட வல்லதா?... இவற்றை சாதிக்கக் கூடுமானுல் சரியான தென்று இன்று அதை ஒப்புக் கொள்கிறேம். முடியா தென்றுல், அதன் மூலம் மரபும் எவ்வளவு உண்மையாக இருந்த போதிலும் அதை நிராகரிக்க வேண்டியதுதான்.''

பலனுக்கு முதலிடம் தரும் இந்த அமெரிக்க கிறிஸ்தவ சமய அனுபவ வகையும், ரிட்ஸ்கெல்லின் கூற்றுன கிறிஸ்தவ தேவாலயங்களின் வரலாற்று அனுபவ சித்தாந்த வகையும் இணைந்து தாராளவாத சித்தாந்தத்திற்கு இணைந்து அடிப்படை ஆயின. நடைமுறை சோதனை நோக்கு வருங்காலத்தை நோக்கும் இயலை அளித்தது; வரலாற்று சோதனை முறை மரபென்னும் சூழ்நிலையை அளித்தது. இவ்விரண்டும் சேர்ந்து விஞ்ஞான முறையும், சமயப் பிரமாணமும் ஆயின. இவ்விதமாக, தாராளவாதப் பிரசாரகர்களும் ஆசிரியர்களும் உஷாரான நடைமுறை நிர்ணயப் பான்மையை உருவாக்கிக் கொண்டனர்.

இத்தாராள வாதத்தைப் பற்றி அவ்வளவு புத்தகங்கள் இருப்பதாலும் எல்லோருக்கும் தெரியுமாதலாலும் அவ்விஷயத்தை விவரிக்கத் தேவை இல்லை. இது ஹாரி எமர்சன் பாஸ்டிக்கின் செல்வாக்கு மிகுந்த பிரசங்கங்களாவும், பக்தி நூல்களாகவும், மலர்ந்தது; அவருடைய பேச்சும் செல்வாக்கும் நமக்கு மறக்காமலிருப்பதால், அவருடைய நடைமுறை வாதத்தைத் திரும்பச் சொல்ல வேண்டியதில்லை. பலவித தேவாலயங்களில் பிரசங்கம் புரிந்திருந்த போதிலும் நியூயார்க் நகரத்து ரிவர்சைட் தேவாலயத் திருப்பணிக்காரர், பிரசாரகரென்று தான் அவரை நன்கு அறிவார்கள்; அந்தத் தேவாலயம் சர்வ சமய மார்க்க தாராளவாதத்தின் தேசிய மூலமாகவும் அடையாளமாகவும் இருந்தது. சித்தாந்தத்தைப் பொருட்படுத்தாமல், தேவாலயம் தங்கள் கலாசாரத்தின் சகஜமான முக்கிய அம்சமென்று கருதிய

பல மத்தியதரவர்க்க பிராடெஸ்டெண்டுகளுக்குத் தம் பேச்சின் அற்புதத் திறத்தாலும் நடைமுறை நிர்ணயப் போக்காலும் பிரதிநிதி ஆகிவிட்டார். நவீன ஆக்கக் கொள்கையை ஜனங்களிடையே மிகுதியாகப் பிரசாரம் செய்த புத்தகம் அவருடைய "பைபிளின் தற்கால உபயோகம்"; மக்களிடம் ஏசுவைக் கொணர்வதுதான் பைபிளின் முக்கிய உபயோகம் என்று அதில் கூறியிருக்கிறார். வாழும் உண்மை என்ற முறையில், கிறிஸ்தவ மார்க்கத்திற்கு ஏசுவே அடிப்படை; பைபிள் விமர்சனத்தின் மாறும் விஞ்ஞேதங்களைவிட ஏசுவின் நிலையான அனுபவத்தைக் காட்டுவதுதான் பைபிளின் பயன் என்று அவர் கூறியிருக்கிறார்.

பாஸ்டிக்கின் கருத்துக்களையே அதற்கு முன்னர் 1903-ல் சார்லஸ் இ. ஜெபர்சன் தம்முடைய சமயப் பிரசங்கத் தொகுப்பு "அடிப்படை விஷயங்"களில் தெரிவித்திருக்கிறார்.

## சமூக சித்தாந்தம்

தாராளவாத சமயப்பிரசங்கிகள் சிலர் கிறிஸ்தவ சமயத்தை சாதாரண அறிவுக்கு நியாயமாகப்படும்படி செய்து கொண்டிருக்கையில், மற்றொரு கோஷ்டியார் சமூகக் கொள்கையை நேரடியாகவே பிரசாரம் செய்து மக்களை வினையாற்றும்படி தூண்டிக் கொண்டிருந்தனர். சமூக கிறிஸ்தவ சமயத்தின் பொருளும் வளர்ச்சியும் முந்திய அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சமூகக் கொள்கைவாதிகள் உருவாக்கிய சித்தாந்தம் எப்படி தாராளவாதத்திற்கு ஆதரவாயிற்று என்னும் விஷயம்தான் பாக்கியாக இருக்கிறது.

சமய ரீதியான தாராளவாதத்திற்கு அமெரிக்காவில் கொள்கை அடிப்படை உருவாக்கப்பட்ட அளவுக்கு சமூகக் கொள்கை உருவாக்கப் படவில்லை. ஆரம்பத்தில் இதனுடைய கொள்கைகள் சித்தாந்தத்திற்கு விரோதமாக இருந்தது மட்டுமின்றி பாதிரிமார்களுக்கு விரோதமாகவும் இருந்தது. உதாரணமாக, ஆரம்ப கால வேண்டுகோள்கள் "கடவுளின் ராஜ்யம் புகவேண்டிய மக்கள் ஸ்தாபனங்கள் பலவற்றுள் தேவாலயம் ஒன்றென்றும், உலகியல் ரீதியான

சமூகத்திலிருந்து ஒதுங்கி நிற்காமல் சமூகத்தின் பாக்கி அம்சங்களைப் போல் தேவாலயங்களும் மாற வேண்டும்'' என்றும் கூறுவதைப் படிக்கிறோம். கிறிஸ்தவ சமூகம் எல்லா ஸ்தாபனங்களையும் அருளின் வரவு கால்களாக்கி விடும்; உலகம் சமுதாயமாகக் காப்பாற்றப்பட்டு விடும். இந்த சித்தாந்தப் போக்கை இரு புஸ்தகங்கள் தெளிவாகக் காட்டின. சிகாகோ நகரத்தைச் சேர்ந்த ஜிரால்ட் பிர்னே ஸ்மித் ''சமூக லக்ஷியவாதமும் மாறும் சித்தாந்தமும்'' என்ற புத்தகத்தையும், வால்டர் ரூஷன் பங்க் ''சமூகக் கொள்கைக்கான சித்தாந்தம்'' என்ற புத்தகத்தையும் பிரசுரம் செய்தனர். சமூகக் கொள்கையில் புதையுண்டு கிடக்கும் சித்தாந்தத்தின் வேறுபட்ட இரு விளக்கமாக இவை இருந்தன. ஆனால் இரண்டும் சேர்ந்து அந்த இயக்கத்திற்கு அறிவு ரீதியான விரிந்த விளக்கம் தந்துவிட்டன; ஆதரவாளர்களுக்கும் எதிரிகளுக்கும் இவை மிகவும் பயன்பட்டன.

ஜி. பி. ஸ்மித்தின் விளக்கத்தில்தான் அமெரிக்க சாயல் அதிகமாக இருந்தது, நவீன கொள்கைக்கும் அது நெருக்கமாக இருந்தது. உலகைப் பற்றி கிறிஸ்தவர்கள் வெகு காலமாகக் கொண்டிருக்கும் சம்பிரதாயமான, பெரிய மனுஷத்தனமான குறுகிய போக்கை விட்டுவிட்டு, உலகியல் ரீதியான நவீன அறச் சக்திகளுடனும் தொழில் நுட்ப வளர்ச்சியுடனும் சேர வேண்டுமென்று அவர் ஒளிவு மறைவின்றி வேண்டினார். இதை ஜனநாயக ரீதியான சித்தாந்தம் என்றார்; இந்த மாதிரி வாதம் வாசகர்களுக்குப் புதுமையா யிருக்குமாதலால் சில பகுதிகளை இங்கே பார்க்கலாம்:

''மக்களின் பிரச்னைகளைச் சோதனை ரீதியில் அணுகலாம் என்று ஏசுநாதர் வழியிலிருந்து நாம் அறிந்து கொண்டது மற்றொரு கொள்கையால் அழிக்கப்பட்டு விட்டது; சூழலைக் கவனிப்பதாலும், தனிப் பொருள்களைக் கொண்டு பொது உண்மையை அனுமானிக்கும் முறையாலும் அறக் கொள்கைகளை நிர்ணயிக்காமல் பிரமாண கிரந்தங்களின் விளக்கங்களால் நிர்ணயிக்க வேண்டும் என்று அக்கொள்கை கூறியது. இந்தப் போக்கு பல நூற்றாண்டுகளாக நீடித்து வந்திருக்கிறது; அநேக தேவாலயங்களின் சமயக் கல்விக்கு

இதுவே அடிப்படையாக இப்பொழுதும் பாவிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் மனித அறிவு வளர்ச்சி அடைந்து புதிய புதிய சோதனைகளில் இறங்கிய காலம் ஒன்று வந்தது. மனித அறிவை விரிவாக்குவதிலும் வாழ்வின் நிலையை அபிவிருத்தி செய்வதிலும் சில சோதனைகள் வெற்றி பெற்றன. கொஞ்சம் கொஞ்சமாக, இப்புதிய இயற்கைக் கொள்கைகள் கொண்டாடிய அற உரிமைகள் உணரப்பட்டன......

பழைய சம்பிரதாயத்தில் பயிற்சி அடைந்த சமய உணர்வுக்கு உலகியல் வசதிகளையும் ஸ்தூலவசதிகளையும் இம்மாதிரி கையாள்வதால் தோன்ற வேண்டிய தெய்வப் பெருமை தோன்றவில்லை. நம்முடைய நிரந்தரமான நலத்திற்காக இருக்கும் அருள்வழியை அற்புத ரகசியமாகப் பாவித்திருக்கிறார்கள்......விஞ்ஞான லக்ஷியத்திற்கு சித்தாந்த ரீதியான விளக்கம் தராவிட்டால் அது தேவாலயத்துடன் வெகுபலமாகப் போட்டியிடும்; ஆனால் விஞ்ஞான முயற்சிகளில் உறங்கும் சமய நுட்பத்தைக் கிறிஸ்தவ சமயம் வெளிப்படுத்தி விட்டால், கிறிஸ்தவ வேட்கையின் ராஜ்யமும் வினைகளும் எல்லையற்ற ஊக்கத்தைப் பிறப்பிக்கும் அளவுக்கு விரிவடைந்துவிடும்."

இதற்குப் பிறகு சமய அனுபவத்தில் தோன்றியுள்ள மாறுதலுக்கேற்ப, சித்தாந்தம் மாறவில்லை என்றும், "நமது சமய அனுபவத்தின் கட்டளைக்கேற்ப தெய்வீகத்தை வரையறுத்துக் கூறும் காலம் வந்துவிட்டதெ"ன்றும் ஸ்மித் கூறுகிறார்.

"இது வேறொரு உலகத்தைச் சேர்ந்த முக்கியப் பொருள் என்று இன்னமும் எண்ணுகிறோம்; விசேஷ முறையில், இவ்வுலகில் அதைக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணுகிறோம். அதை அறிந்து கொள்வதற்காக, தனித்த பொருளாகத் தோன்றுமளவுக்கு, அதை இயற்கையான உலகை விட்டுப் பிரித்து விடவேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் அதே சமயத்தில், நமது கலாசாரத்தின் விஞ்ஞான, அறத் தேவைகள் காரணமாக இதை ஆங்காங்கு வெட்டிவிட வேண்டியிருக்கிறது; தெய்வீகத்தின் சிறப்பான அறிகுறியாகக் கருதப்படும் அற்புதத் தன்மைகளைத் திருத்த வேண்டி

யிருக்கிறது. நெறிமுறையான சித்தாந்த வளர்ச்சியின் அடுத்த கட்டமாக தெய்வீகத்தின் வகைகளை ஜனநாயக ரீதி யான நெறி முறைக்கு ஒப்ப மாற்ற வேண்டும். மன்னரான கடவுளுக்கு நாம் குடிபடைகள், அவரிடமிருந்து விசேஷ லாபத்தையும் பரிசுகளையும் போஷகரிடமிருந்து பெறுவது போல் பெறுகிறோம் என்று கருதாமல் தம் குழந்தைகளுடன் கூட மறைந்திருந்து வேலை செய்யும் ஊழியராகக் கருதப் பழக்கிக் கொள்ள வேண்டும்......ஏனென்றால் முடிவற்ற வச திகள் படைத்த இந்த அற்புத உலகியல் மனிதனின் பிரே மைக்குப் பாத்திரமான எல்லாவற்றிற்கும் இடம் இருக்கிறது. வளர்ச்சியின் பல்வேறு வகைகளில் கடவுளின் உருமாற்றும் அற்புதச் செயலைக் காண்கிறோம்; அவற்றிலிருந்து அழகுக்கும் அறவாழ்வுக்கும் வழிபாட்டுக்கும் வழிதெரிகிறது; பயபக்தி யையும், வணக்கத்தையும் அறவேட்கையையும் எழுப்பும் எதையும் இகழலாகாது."

நவீன உலகத்தையும் அதன் அறமுறைகளையும் உற்சாகத் துடன் வரவேற்கும் இக்கருத்துகளுக்கு வால்டர் ரூஷன்பஸ் கின் சித்தாந்தம் முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. உலகத்தை எடைபோடும் தீர்க்கதரிசியின் போக்கை அவர் மேற்கொள் கிறார்; தெய்வ அரசு வரவிருக்கும் நேரத்தில் கழிவிரக்கம் கொள்ளுங்கள் என்று உலகத்திற்குப் போதனை செய்கிறார்; தெய்வ ஆவேச ஒலியை வலுவுடன் எழுப்புகிறார்; தவிர சமு தாயக் குற்றம், பாபம், விமோசனம் என்று திரும்பவற்புறுத் துகிறார். ஆனாலும் ரூஷன்பஸ்க் கடவுளின் கோபத்தைப் பற்றிப் பேசவில்லை. கடவுள் அன்பு கொண்ட தந்தை; அவர் ஏசுநாதர் வாழ்விலும் ஏசுநாதரின் திவ்விய உடலாகிய தேவாலயத்திலும் சமுதாய உண்மையாக மெய்ப்படுகிறார். கிறிஸ்தவர்கள் உலக மொத்தத்தின் விமோசனத்திற்காகக் கடவுளுடன் கடவுள் நிழலில் வாழும் சமுதாயம். இந்த சரித்திர வரலாற்று ரீதியான விமோசனம்தான் மண்மீதமை யும் கடவுள் ராஜ்யம். மக்கள் தங்கள் சமுதாயப் பொறுப்பு களை ஏற்று சமூக அமைப்பை கிறிஸ்தவ மயமாக்க முயலும் பொழுதெல்லாம் இந்த ராஜ்யம் அமையும்.

ரூஷன்பஸ்க் சித்தாந்தம் கிறிஸ்தவப் பிரசார தாராள வாதத்தாரிடையே ஆதிக்கம் பெறும் என்பது வெளிப்படை

காலம் கடினமாகவும் சிக்கலாகவும் ஆகஆக அவருடைய சித்தாந்தத்தின் தீர்க்கதரிசனக்கவர்ச்சி சாவதானமான சிகாகோ கோஷ்டி ஜியார்ஜ்பர்னே ஸ்மித், ஜியார்ஜ் பி. பாஸ்டர், ஷைலர் மாதியூஸ் ஆகியவர்களுடைய தாராள வாதத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. இருந்தாலும் ஷைலர் மாதியூஸ் தம் சுயசரித்திரத்தில், தற்கால நவீன வாதத்தின் உள் கிடக்கை தம்மை எப்படி சமூகசேவைக்கான சிந்தனையின் பக்கம் திருப்பிற்று என்பதை விளக்கியிருக்கிறார்.

சித்தாந்தம் சமய இயக்கத்தின் ஒரு அம்சம் என்பது வர வரத் தெளிவாகி விட்டது; எனவே சமூக கோஷ்டிகளின் செயல்களிலிருந்து அது தனித்திருப்பதாகக் கருதுவதற்கில்லை. சமுதாயமான வாழ்வின் ஐக்கியத்திற்கு ஆதாரமாகவும் உரைகல்லாகவும் இருக்கும் சித்தாந்தத்திற்கும் வெறும் உண்மைகளுக்கும் அதிக வித்தியாசமிருக்கும். இதை தத்துவ திருஷ்டியுடன் அணுகுவதைவிட சமூக வரலாற்று உண்மை திருஷ்டியுடன் அணுக வேண்டும்......

கிறிஸ்தவர்களும் அல்லாதவர்களும் அடங்கிய அநேக விதகுழுக்களில் கலந்து கொள்வதால் ஏற்படும் அனுபவம் சமய நம்பிக்கைகளை மாற்றத்தான் செய்கிறது. கொள்கைகளின் சரித்திரம் கொள்கைகளை உருவாக்கும் மக்களின் சரித்திரமாகி விடுகிறது. சித்தாந்தி ஒரு தத்துவதரிசி என்பதைவிட சமூக சிற்பி என்று படுகிறது; சமூக மனஇயல் நிபுணர் என்றுகூட சொல்லத் தோன்றுகிறது. சமயப் பற்றுள்ள சமூக இயக்கம் என்ற முறையில் செயல்படும் கிறிஸ்தவ மதத்திற்கு சமய ரீதியான சித்தாந்தம் என்பதைவிட, என்றும் பொய்க்காத கொள்கைகளுடையது என்பதைவிட, விரிந்த பொருள் ஏற்படுகிறது.

1920-ஆம் ஆண்டைச் சேர்ந்த காலத்தில் கிறிஸ்தவ தாராள வாதம் உன்னத நிலையை அடைந்தது. சிலர் நீங்கலாக, சித்தாந்த சமூக சீர்திருத்தங்களை தேவாலய திட்டத்துக்குள்ளேயே ஏற்படுத்த விரும்பிய தலைவர்கள் இணைந்து கூட்டுறவு கொண்டதால், ஸ்தாபன அறநெறி புனரமைப்புக்கு ஊக்கம் உண்டாயிற்று. இந்த தாராள வாதத்திற்கு எதிராக எழுந்த கண்டனங்களைக் கவனிக்கும் முன்பு, யூதர்

சமயத்தில், இதே காலத்தில், ஏற்பட்ட இதே மாதிரியான இயக்கத்தைப் பற்றிக் கூறியாக வேண்டும்.

கிறிஸ்தவத் தலைவர்களைப் போலவே யூதத்தலைவர்களும் திருந்திய யூத மதத்தின் விஞ்ஞான முறையான சித்தாந்தத்தைவிட, சரித்திர வரலாற்று ரீதியை அணைந்த சித்தாந்தத்தின் நன்மைகளை உணர்ந்தனர். திருந்திய யூத சமயத் தலைவர்கள் யூத அம்சம் மிகுந்த சித்தாந்தத்தின் பக்கம் சாய வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். தம் கொள்கைகளைப் புதுப்பித்துக்கூற வேண்டுமென்ற அவா திருந்திய யூத மத வாதிகளுக் கிருந்த போதிலும், யூதக் கருத்துகளையும் மரபுச் செல்வத்தையும் வற்புறுத்திக் கூறினர்; வைதீக யூத சித்தாந்தத்தின் தேசீய கலாசாரப் போக்கையும் மேற் கொண்டனர். சீர்திருந்திய யூத சித்தாந்த நிலையக் கூட்டத்தில் (1950 மார்ச் 19) யூத சித்தாந்தி சாமுவேல் கோஹன் கூறியதாவது: யூத மதம் முன்னர் தன்னைப் பல விதத்தில் விளக்கிக் கொண்டது போல, நிகழ் காலத்தின் கலாசார அறிவு சூழ்நிலைக் கிணங்க, சீர்திருத்தமும் தன்னை சதா புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். யூத சமயத்திற்குத் தனக்கென்ற தன்மையும், தனக்கென்ற நுண்ணறிவு மூலமும், தனக்கென்ற, வலிமையின் மூலமும், இருக்கிறது; முன்னோர்கள் விட்டுச் சென்ற தத்துவச் செல்வத்தைப் பூரணமாக உணர்வதற்காகவும் புத்துருவம் தருவதற்காகவும் நவீன அறிவுச் சாதனங்களின் துணை கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். சித்தாந்தத்தில் ஏற்பட்டுள்ள புதிய அக்கறை, அறிவையும் சுதந்திரத்தையும்இகழும் ஜீவதயைக் கெதிரான,—மனிதப் பண்பை நம்பாத—சக்திகளுடன் சேராத வரையில் வரவேற்கத் தக்கதென்றே யூத சித்தாந்திகளும் சிந்தனை மிகுந்த யூதர்களும் எண்ணினார்கள்."

இப்புதிய போக்கிலிருந்து தோன்றியதுதான் நிதான யூத சமய இயக்கம்; உண்மையான வைதீகர்கள் இதைத்தாராளப் பான்மை கொண்ட தென்கின்றனர்; சீர்திருத்த யூதர்கள் தேசீயப் பான்மை மிகுந்த தென்கின்றனர். இவ்வியக்கம் அமெரிக்காவில் வளர்ச்சி யுற்றிருப்பது பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறோம்; இப்பொழுது யூத சமயத்தில் அது மைய சாரியாக விளங்குகிறது, ஆனால் இந்த இயக்கத்தின் சித்தாந்

தமும் கருத்துகளும் யூத சித்தாந்திகளின் சபையையும் தாண்டி இன்றைய அமெரிக்க யூதர்களின் செல்வாக்கு மிகுந்த சமய சிந்தனையாக உருப்பெற்று விட்டதென்று சொல்லித்தான் ஆகவேண்டும். இது இன்னும் உறைந்த கொள்கையாகவில்லை; எந்த அளவுக்குப் போய் நிற்கும் என்றும் சொல்ல முடியாது. இவ்வியக்கத்தின் இடது சாரியைப் 'புனரமைப்பு இயக்கம்' என்பார்கள். சித்தாந்தத்தில் தீவிர நவீனப் போக்கை மேற் கொண்டிருப்பதாலும், தத்துவ ரீதியாக அவ்வளவு தாராளப் பான்மை கொண்டிருப்பதாலும் வைதீக சமய வாதிகள் இதைக் கண்டித்துவிட்டனர். ஆனால் நிதான யூத சமய வாதிகளிடையே டோரா, தீர்க்கதரிசிகள், தேவவாக்கு, கடவுள் என்பவைபற்றி (நவீன வரலாற்று ரீதியான பைபிள் விமர்சனக் கட்டுக்குள்பட்டு) பலவிதக் கருத்துக்களுக்கு இடம் தரப்பட்டிருக்கிறது. அடிப்படை கொள்கை ரீதியான தென்பதைவிட சரித்திர ரீதியான தென்று கூறலாம்; யூதரின் மரபிலும் கலாசாரத்திலும் இலங்கும் தொடர்ச்சிக்கும் தனிச் சிறப்புக்கும் விசுவாசம் கொள்வதென்றும் இதைக் கூறலாம். எனவே 'ஜியானிசம்' (யூத தேசியக் கொள்கை) இந்த வகையான யூத சமயத்தாருக்கு யூத மக்களின் தொடர்ந்த சரித்திர ரீதியான வாழ்வுக்கு அறிகுறி என்று தோன்றுகிறது; அத்துடன் யூத இலக்கியம், யூத சட்டம், பக்தி ஆகியவை ஒருவனே தேவனென்று கூறும் சர்வ சமயக் கொள்கையின் வேறு உருவமாகக் கருதப்படாமல், உயிருள்ள கலாசாரமாக விளங்கும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது. சுருங்கக் கூறினால், கிறிஸ்தவ தாராள வாதிகளுக்கு ஏசு எப்படியோ அதுபோலவே யூதர்கள் பக்திக்கு மையமாக விளங்கும் தந்தையர்நாடு இஸ்ரேலைத் திரும்ப நிலைக்கச் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறது; பைபிளின் பிரமாண சக்தியை மிகைப்படுத்துவதை இந்த இரு போக்குகளும் மறுக்கின்றன.

## ஆதாரவாதிகளின் தாக்குதல்

தாராள வாதத்திற்கு ஏற்பட்ட அறிவு பூர்வமான எதிர்ப்பு பல திக்குகளிலிருந்து வந்தது; பல முகச் சண்டைகளை மூட்டி விட்டன; போர் இன்னும் நடந்துகொண்டிருக்

கிறது. இதனுடைய முடிவை அறிவு முறைக்குப் புறம்பான சக்திகள் நிர்ணயிக்கும் என்று அநேகமாகக் கருதலாம். தாக்குதலில் நான்கு முக்கிய விதங்களிருந்தன. (1) ஆதார வாதம் (அறிவுபூர்வமாகப் பேசினல் இதையும் வைதீகத்தையும் ஒன்ருகவே கருதலாம்.) (2) புதிய வைதீகம் (இதை அமெரிக்காவிலேனும் புதிய தீவிர வாதம் என்னலாம். (3) ஜீவ அவஸ்தை வாதம் (சித்தாந்த எதார்த்த வாதத்தின் ஒரு உருவம்) (4) ஜீவதயாவாதம் (தாராளப் பான்மை கொண்டது, ஆனுல் சித்தாந்தமல்ல.)

இருபதாம் நூற்ருண்டின் இயக்கம் என்ற முறையில் ஆதார வாதத்தின் சமூக அற விசேஷங்களைப் பற்றி இதர அத்தியாயங்களில் ஆராய்ந்துவிட்டோம். சமய சித்தாந்த வாதம் என்ற முறையில், கொள்கைகளில் மாறுதல் ஏற்படுவதை எதிர்த்துப் பத்தொன்பதாம் நூற்ருண்டில் வைதீக சமயவாதிகள் செய்த முயற்சியின் தொடர்ச்சிதான் ஆதார வாதம். சார்லஸ் ஏ; பிரிக்ஸ் (யூனியன் சித்தாந்த குருமார் பயிற்சி நிலையம் 1891), ஹென்ரி பிரிசெர்வெட் ஸ்மித் (பிரஸ்பிடீரியன் பாதிரிமார் ஸ்தாபனம் 1892), ஏ. ஸி. மாக்கிவ்வர்டு (பிரஸ்பிடீரியன் பாதிரிமார் ஸ்தாபனம் 1900), பார்டன் பி. பௌன் (மெதாடிஸ்டு, பாஸ்டன் 1904) ஏ. எஸ். கிரேப்சி (எபிஸ்கொபேலியன் பிரிவு, ராசெஸ்டர் 1906) ஆகியோர் மீது தவருன சித்தாந்தக் கருத்துக்களைத் தெரிவித்ததற்காக நடைபெற்ற விசாரணைகள் ஆண்டோவர் குருமார் பயிற்சி நிலயத்தில் பல ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற இதே மாதிரி விசாரணைகளை ஒத்திருந்தன; சொல்லப்போனுல், சாக்ரடீஸ் வரையில் தொடர்ந்து செல்லும் அவல ஜாப்தாவை ஒத்திருந்தது. முக்கிய பிராடெஸ்டெண்டு மதப் பிரிவுகளின் பாதிரிமார்களை நவீன காலப் புதுமைகளின் காற்றுப் படாமல் விலக்கி வைக்கும் முயற்சிகள் தோல்வி அடைந்தன. பிரின்ஸ்டன் குருமார் பயிற்சி வழக்குகளில் வைதீக சமய வாதிகளின் நிலை உச்ச கட்டத்தை அடைந்தது. பழைய வகை பைபிள் விளக்கத்திற்கு இவர்கள் ஸ்தாபித்த பிலாடெல்பியாவைச் சேர்ந்த வெஸ்ட் மினிஸ்டர் குருமார் பயிற்சி நிலயம் சர்வ சமயப் பிரிவு தலைமை ஸ்தாபனமாயிற்று. பேராசிரியர் கிரெஷாம் மார்கன் 'புதிய ஏற்பாட்

டி'ல் திறமை மிகுந்த புலவராயிருந்த போதிலும், தம் புலமையை ஆதார வாதத்திற்குப் பயன்படுத்தியது வீணா யிற்று. கொள்கைகளின் உள்கிடக்கையைப் பற்றிப் பொது வான உடன்பாடில்லாவிட்டாலும் சரித்திர விமர்சனக் கொள்கை முறையில் பைபிளைப் படித்து வருவது அதிகரித்து வருகிறது. எல்லாவற்றையும் அறிய வேண்டுமென்ற ஆசை யும் கர்வமும்தான் இவ்வளவு சங்கடங்களுக்கும் காரணம் என்று போப்பாண்டவர் தம்முடைய 1907-ம் ஆண்டு உத் தரவில் கண்டிருந்தார். ஆனால் போப்பாண்டவரையும் ஆதாரவாதிகளையும் தூண்டிய உண்மைக் காரணங்கள் இவைதான்: நவீன வாதத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு கிறிஸ்தவ மதத்தை ஏன் பிரமாணமென்று கருதவேண்டு மென்ற கேள்விக்குச் சரியான பதில் கொடுக்க முடியாதென் பதை உணர்ந்தனர்; எனவே எந்த தேவாலயத்தாலும் சரித் திர ரீதியான மார்க்கத்திற்கும் நவீன வாதத்திற்கும் ஒரே காலத்தில் மனப்பூர்வமாக விசுவாசமாயிருக்க முடியாதென் பதையும் உணர்ந்தனர். "ஆதாரங்கள் எதற்கு ஆதாரம்?" என்று யாரேனும் கேட்டால் அவரவர்கள் போக்கிலுள்ள வேறுபாடுகள் புலப்பட்டு விடுகின்றன. சார்லஸ் இ. ஜெபர்ச னுடைய தாராளத் தன்மை கொண்ட பிரசங்கங்களின் முக்கிய பொருளெல்லாம் ஆதாரவாதிகள் வற்புறுத்திய அதே நம்பிக்கைகள்தான். ஆனால் அவர் விளக்கம் தந்த முறையில் சமய வாழ்வுக்கு நம்பிக்கையை விட 'பொருள் களே' ஆதாரமாக இருந்தன; அதாவது—பைபிள் தேவ வாக்கு என்னும் நம்பிக்கையை விட பைபிள்தான் 'ஆதாரப் பொருள்' என்றாகிவிடுகிறது; குறிப்பிட்ட அற் புதங்களை நம்புவதைவிட அற்புதங்கள் ஆதாரமாகிவிடுகின் றன; பிராயச்சித்தத்தைப்பற்றிய கொள்கையை விட பாபமும் பாப மன்னிப்பும் ஆதாரங்கள் ஆகிவிடு கின்றன. ஆனால் போப்பாண்டவர்களும் அத்யக்ஷ குருக்களும், ஒப்புதல் பெறும் பாதிரிகளும், பிரசங்கிகளும் அதிகாரத்துடன் பேச வேண்டும்; சமய ரீதியான அதிகாரமென்றால், சமய வாழ் வுக்குத் தேவைப்படாவிட்டாலும் கூட, சில நம்பிக்கைகள் ஆதாரமாக இருக்க வேண்டும். அவர்களுடைய கருத்துப்படி அதிகாரமே ஆதாரமானால் தேவாலயமும் ஆதாரமானது

தான். ஆனுல் தாராள வாதிகள் அதிகாரத்தைக் குலைத்து வந்தனர். ஹார்வார்டைச் சேர்ந்த தலைவர் எலியட் கூட 'உலகத்தில் அதிகாரம் மிகுந்து விட்டது' என்று கூறும் கட்டம் வந்தபொழுது கவலைப்படக் காரணம் ஏற்பட்டுவிட்டது.

அதிகாரத்தைப் பற்றிய பயமெழுந்ததற்குக் காரணமிருந்தது; ஆனுல் நவீன வாதத்தை அதிகாரவாதிகள் விஞ்ஞான முறையிலும் அறமுறையிலும் மறுக்க முயன்றது பரிதாபத்திற்குரியதாக இருந்தது. நவீன வாதத்தை வேண்டுமானுல் தடுத்துவிடலாம்; ஆனுல் வைதீக சமயத்தை அறிவு முறையில் அவ்வளவு எளிதாக ஆதரிக்க முடிவதில்லையே! கத்தோலிக்கர்கள் உடனடியாகவும், ஆதாரவாதிகள் கொஞ்சம் கொஞ்சமாகவும் புலமை மிகுந்த முறைகள் தேவை என்பதை உணர்ந்தனர். கத்தோலிக்க மார்க்கத்தை ஆதரிக்கும் இயக்கமாகப் புதியதோர் அம்சம் வளர்ச்சி அடைந்தது முக்கியமான நவீன கால வெற்றி; இதனுல் சமய ஸ்தாபனங்களுக்கு நன்மைதான்; ஏனென்ருல், பாதிரிகள் காட்டும் பிரமாண முறையை விட்டு அறிவின் தீர்ப்பை தோமிச முறை கையாள்கிறது. தோமிசத்தின் வளர்ச்சியைப் பற்றிக் கூறப் புகுந்தால், அமெரிக்காவுக்கு வெளியே செல்ல வேண்டும்; ஏனென்ருல் வெகு சமீப காலம் வரை, அமெரிக்க தோமிசம் ஐரோப்பியர்கள் வெட்டிய தடத்தில் லேசாகத் தான் பின்னே சென்றது. எப்படி இருந்தபோதிலும் அறிவுப் புலமை உருவாக்கியுள்ள ஒழுங்கான வைதீக சித்தாந்தம் ஆதாரவாதிகள் பைபிளை மேற்கோளாகக் காட்டும் முறையினின்று மிகவும் வேறுபட்டிருக்கிறது.

கிறிஸ்தவ சமயப் பிரசாரப் புலமை அமெரிக்க பிராடெஸ்டெண்டுகளுக்கிடையே தோன்றும் அறிகுறிகள் இங்கும் அங்கும் காணப்படுகின்றன. சில பிரசார சித்தாந்திகள் வைதீக மதத்தின் ஆதாரக் கொள்கைகளை பைபிள் பிரமாணமின்றி சோதனைமுறை வாதங்களால் ஸ்தாபிக்க முயல்கின்றனர். உதாரணமாக, ஸ்கோப்ஸ் விசாரணை நடந்த இடத்துக்கருகில்—வில்லியம் ஜென்னிங்ஸ் பிரையானும் ஆதாரவாதிகளும் பரிணும வாதக் கொள்கையைப் போதனை செய்வதைத் தடுக்கும் டென்னெஸ்ஸி சட்டத்தை ஆதரித்த இடத்துக்கருகில்—லூயி வில்லாவில், எட்கார் ஒய். மல்லின்ஸ்

(தென் பாப்டிஸ்டு சித்தாந்த குருமார் பயிற்சி நிலையத் தலைவர்) கிறிஸ்தவ சமய அனுபவத்தை அறிவு முறையில் கிறிஸ்தவ மதக் கொள்கைகளாக மாணவர்கள் மனத்தில் நிலைக்கும்படி செய்துகொண்டிருந்தார். "கிறிஸ்தவ மதம் ஏன் உண்மை?" என்ற அவருடைய புத்தகம் மக்களின் மனத்தைக் கவர்ந்தது. சமயப் பிரசாரத்திற்குத் தத்துவ உருக் கொடுக்கும் அவர் முயற்சியையும், எதிரிகள் தாக்க உபயோகிக்கும் முறைகளையே தற்காப்புக்கு அவர் பயன் படுத்துவதையும் அப்புத்தகம் நன்ருகக் காட்டுகிறது. இருந்த போதிலும் சோதனை முறை ஆதாரங்களின் மீது தம் சமயத்தை நிலைநிறுத்த விரும்பும் வைதீக சமயவாதிகள் சொற்பம் தான்; சோதனை முறை வாத ஆபத்தில் நம் பிக்கையை இழக்க விரும்புகிறவர்கள் சொற்பம்தான்.

## சித்தாந்தத்தின் புனர்ஜன்மம்

நவீன வாதத்தையும் தாராள வாதத்தையும் புதிய வைதீக சமயம் (அல்லது புரட்சிகரமான சமயவாதம்) கண்டித்து அவற்றின் குற்றம் குறைகளை எடுத்துக் காட்டிற்று; போதுமான அளவுக்கு அவை செல்லவில்லை என்பதுதான் முக்கிய குற்றச்சாட்டு. நெருக்கடியில் சிக்கிய உலகத்தின் சமயத் தேவைக்கும் அனுபவத்திற்கும் தாராள வாதத்தால் ஈடு கொடுக்க முடியவில்லை. நெருக்கடிகளால் ஏற்படக் கூடிய அனுபவங்களுக்கே தாராள வாதம் தயாராகவில்லை. முன்னேற்றம், பரிணமம் என்னும் நம்பிக்கையூட்டும் கொள்கைகள் முதல் மகா யுத்தத்தில் தப்பிப் பிழைத்துவிட்டன; ஏனென்ருல் பிரெஸ்பிடீரியன் தலைவர் வுட்ரோ வில்சன் கருதியது போல அநேக தாராள வாதிகள் "யுத்தத்தை ஒழிப்பதற்காகவே யுத்தம்" என்ற கருத்தை கிறிஸ்தவ முறையிலும் நடைமுறை ரீதியிலும் நியாயமானதென்று காட்டலாமென்றும், கடவுளின் அரசு வரும் என்ற தங்கள் நம்பிக்கை எதிர்பாராத விதமாக இதனுல் மெய்ப்படலாம் என்றும் தங்களுக்கே நம்பிக்கை உண்டாகும்படி கூறிக் கொண்டார்கள். ஆனுல் சர்வதேச சங்கம் தோல்வியுற்ற தாலும், அநேக தேவாலய 'உலக இயக்கங்களும்' சீர்திருத்

தங்களும் (குறிப்பாக மதுவிலக்கு) தோல்வி அடைந்த தாலும், பொருளாதார மந்தத்தாலும், லோகாயத சர்க் காரின் அதிகாரப் போக்கு, மிருகத் தன்மை இவற்றுடன் முரண்பாடு ஏற்பட்டதாலும் தாராள சமயவாதிகளின் சமயப் பிரசங்கங்களும், சமூக சீர்திருத்தவாதிகளின் முயற்சி களும் சென்ற காலக் கதைகளாக ஒலித்தன. உலகம் மாறி விட்டது; புதிய கொள்கை தேவைப்பட்டது. ரீன்ஹோல்டு நியபூரின் புத்தகம் "சகாப்த முடிவைப் பற்றிய சிந்தனைகள்" இந்தப் புதிய மனநிலையைப் பிரதிபலித்ததோடன்றி புதிய சகாப்தத்திற்கும் வழி செய்தது. மனிதனுடைய சக்தி களையோ, சரித்திர வரலாற்றின் தர்க்க வலிமையையோ நம்பு வதால் விமோசனம் ஏற்படாதென்று இச் சிந்தனைகள் கூறின. எனவே, உலகம், சரித்திரம் என்ற இருதுறையிலும் தோல்வி அடைந்த மனித வர்க்கத்திற்கு தெய்வ அருள் சித்தாந்தம், மாற்றுன வலிமையைக் கொடுக்க முடியாவிட் டாலும், ஆறுதல் அளிக்கக்கூடும். இதை மத அபின் சர்க் கரைப் பூச்சுப் பூசிய அரசியல் தோல்வி மனப்பான்மை, அறத் தோல்வி மனப்பான்மை என்று மார்க்ஸீயவாதிகள் கூறலாம். சரித்திர ரீதியான கடவுளைத் தேடும் முயற்சியில் தாராளவாதிகளுக்குச் சங்கடங்கள் ஏற்பட்டபோதிலும், தேவாலயங்கள் நிம்மதியாக சமூக அரசியல் கொள்கைகளில் நம்பிக்கை கொள்வதை விட்டு இன்னும் பக்திபூர்வமான கடவுள் நம்பிக்கையைப் பெற வேண்டும் என்பதுதான் இச் சிந்தனைகளின் நோக்கம்.

நெருக்கடி காலத்தில் தோன்றிய தீர்க்க தரிசிகள் தாராள வாத கட்சியிலிருந்தேதான் வந்தனர்; இது முக்கியமான விஷ யம். தாராள வாதம் தன்னையே சீர்திருத்திக் கொண்டிருந் தது (கடவுளுடைய ஆதரவில்தான்). தாக்குதல் வெளியிலி ருந்து வந்தது போல் தோன்றிற்று.

1920, 30-ஆம் ஆண்டுத் தொடர்களில் அமெரிக்காவுக்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதியான வேதனைக் குரல்கள் சாபங்களைப் போல் ஒலித்தன. ஸ்பெங்கிளருக்குப் பிறகு, கார்ல்பார்த், எமில் பிரன்னர், கார்ல் ஜாஸ்பர்ஸ், பால் டில் லிக் வந்தனர். இதற்கிடையில் கியெர்க்கே கார்டின் மொழி பெயர்ப்புகளில் இருந்தும் சீடர்களிடமிருந்தும் மற்றொரு சுரு

தியில் 'ஓலங்கள்' எழுந்தன. புதிய சொற்கள், வரலாற்றைப் பற்றிய அதிசய தத்துவகொள்கை,தேவவாக்கென்ற சொல்லே நாகரிகப்படுத்தி உபயோகித்தல், பரலோகத் தீர்ப்புகளைப் பற்றிய முழக்கங்கள் ஆகிய எல்லாம் சேர்ந்தெழுந்து அமெரிக்கர்களின் நிம்மதியை மட்டுமின்றி அமெரிக்க லக்ஷியவாதத்தின் குரல்களையும் முழுகடித்தன. இவ்விதமாகக் குறுகிய காலத்திற்குள் சூழ்நிலை மாறிவிட்டது. இந்த தர்க்கவாத சித்தாந்தம் அழியும் கலாசாரத்தின் மீது இடி முழக்கமாய் சென்று மறைந்தது. தாராள வாதிகளின் கனவை அழித்த நெருக்கடியின் அறிகுறி அது. அதனுடைய தத்வ தரிசனம் வெளிநாட்டைச் சேர்ந்தது; வெளி நாட்டினுல் தங்களுக்கு வந்து நேர்ந்த கதியை வர்ணிக்க அமெரிக்க தாராள வாதிகளுக்கு இது பயன்பட்டது. இந்தத் தலை முறையினருக்கு நேர்ந்துள்ள கதி இந்தத் தலைமுறையினர் செய்த பாபம், இவர்களின் அறியாமை ஆகியவற்றின் விளைவென்று கூறுவது அமெரிக்கர்களுக்கு முதலில் நியாயமாகப்படவில்லை; ஜாபைப் போல, தங்கள் லக்ஷிய வாதத்தை சரியானதென்று முதலில் ஆதரிக்கத்தான் தோன்றியது; வெளிநாட்டு அசுர சக்திகள் கூடி இந்த அவலநிலைக்குள்ளாக்கி விட்டன என்று குற்றம் சாட்டத் தோன்றியது; ஆனுல் சென்ற இருபதாண்டு காலமாக, கொஞ்சம் கொஞ்சமாக, அமெரிக்கர்களின் தன்னம்பிக்கை குலைந்து விட்டது; சமுதாய பாபம் என்ற கொள்கையை சமயத் தலைவர்கள் விமர்சனக் கண் கொண்டு தீவிர நோக்குடன் பார்க்கத் துவங்கி விட்டனர்; சமூகக் கொள்கை வாதிகள் கொண்ட மனப் போக்கைவிட தீவிரப் போக்கைக் கொண்டனர். எப்படியிருந்த போதிலும் நம்பிக்கை வாதத்திற்கு நல்ல அஸ்திவாரமிருக்கின்றதென்று 1903-ல் கார்டன் எழுதிய போது இக்கருத்து உண்மையாக இருந்திருக்கலாம்; ஆனுல் அந்த நம்பிக்கைக்கான அஸ்திவாரம் இப்பொழுது போய் விட்டது. கிறிஸ்தவ மதத்திற்கும் இந்த நம்பிக்கை வாதத்திற்கும் சம்பந்தமில்லை என்பதும் விசதமாகி விட்டது. 1935-ம் ஆண்டு "ஒப்புதல்" என்ற தலைப்புடன் பிரசங்கம் செய்த ஹாரி எமர்சன்பாஸ்டிக் தாராள வாதத்தின் தயாம் சங்களை எல்லாம் மறுத்துவிட்டு, நவீன வாதத்திற்கப்பாற் பட்ட சித்தாந்தம் ஒன்றைத் தாம் நம்புவதாகக் கூறிவிட்

டார். இதர தாராளவாதத் தலைவர்களும் சமய சித்தாந்தத்தின் பக்கம் சாயத் தயாராகி விட்டனர்.

புதிய தீவிரக் கொள்கையின் கண்டனங்கள்தான் தெளிவாக இருந்தனவே அன்றி கொள்கைகள் அவ்வளவு தெளிவாக இல்லை; அருள் என்பதைவிட பாபம் என்பதைப் பற்றிய கொள்கை முக்கியமாக இருந்தது. ஆனால் சில ஆக்க ரீதியான அம்சங்களும் இருந்தன. அது வீறுகொண்ட பிராடெஸ்டெண்டு மார்க்கமாக, புதிய சீர்திருத்த சித்தாந்தமாக, ஆகி விட்டது. கத்தோலிக்கர்களுக்கும் பிராடெஸ்டெண்டுகளுக்கும் இடையே இருந்த கொள்கை வேறுபாடுகளை தாராளவாதம் குறைத்து விட்டது; அப்படிச் செய்தால் கத்தோலிக்கர்களின் நடைமுறை ஒத்துழைப்பை சமூகப்பிரச்னைகளில் பெறலாம் என்பது அதன் நினைப்பு. சித்தாந்தவாதங்கள் இப்பொழுது புத்துயிர் பெற்றதிலிருந்து மனிதனைப்பற்றி லூதரும் கால்வினும் கூறிய கருத்துகள் வற்புறுத்தப்பட்டன. மனித இயலைப்பற்றி தோமிசம் கூறிய கருத்துக்களான "அறிவு வாதம்," "பூர்ண நிலை" ஆகியவற்றிற்கெதிராக அவநம்பிக்கையும் அறிவு சாதனத்திற்கு எதிரிடையான முறையும் வற்புறுத்தப்பட்டன. சோஷலிஸத்தை விட்டு விட்டதற்காக கத்தோலிக்கர்களை அரசியல் முறையில் தாக்கும் காலமும் கத்தோலிக்க சித்தாந்தத்தை தாக்கும் காலமும் ஒன்றாயிருந்தன. இப்புதிய தீவிரவாதிகள் அநேகமாக சோஷலிஸ்டுகளாகவே இருந்தனர்; ரோம் தன்னுடைய சமூகக் கொள்கையை விளக்கிய பிறகு கிறிஸ்தவ சோஷலிஸத்தின் தலைமையைக் கைப்பற்றி விடலாம் என்று இவர்கள் நம்பினர். அமெரிக்காவில் மார்க்ஸீய வாதத்திற்கு அதிக செல்வாக்கில்லாதபடியால், அமெரிக்கத் தொழிலாளர்களின் அனுதாபத்தைப் பெற்றுவிடலாம் என்று பிராடெஸ்டெண்டு கிறிஸ்தவ சோஷலிஸ்டுகள் நினைத்தனர்; சமூகக் கொள்கைவாதிகளை விட திட்டமான இடது சாரியினராகவே ஆகிவிட்டனர். ஆனால் ராணுவ ஆதிக்கக் கொள்கை வளர்ச்சி அடைந்ததாலும், முன் அத்தியாயத்தில் கூறியபடி சோஷலிஸமும் கொள்கையிலும் நடைமுறையிலும் சிக்கலாகிக் கொண்டிருந்தபடியாலும், இப்புதிய தீவிரவாதிகள் தங்கள் கொள்கையை விளக்கத் தெளிவில்லாத, அதிசயோக்திகளைக்

கையாள நேர்ந்தது. இடது கைக்கு வலது கை எந்தக் கொள் கையைப் பற்றியிருக்கிறது என்று கூடத் தெரியவில்லை. இம் மாதிரி கலப்படமான உலகில் மார்க்கத்தை சமூக ரீதியாக விளக்க முயல்பவர்கள் செய்யக் கூடிய தெல்லாம் விமோச னத்தின் மர்மம் தெரியாதென்று ஒப்புக் கொண்டு, மனித சரித்திர வரலாற்றுக்கும் கடவுள் ஆட்சிக்கும் நடைமுறையில் தொடர்புண்டு என்னும் நம்பிக்கையை நிலைக்கச் செய்வது தான். அல்லது ஒரு தலைவர் கூறியது போல் சொல்ல லாம் :

''கடவுளின் நோக்கங்களில் அன்பு கொள்வதற்கான அடிப்படையை எங்களில் பலர் சரித்திரத்தில் தேடி வருகின் றனர்; நம் காலத்திலேயே பயன் விளைந்துவிடும் என்று எதிர் பார்ப்பதைப் பொறுத்ததல்ல இவ்வன்பு.''

இந்த அரை நூற்றுண்டின் சித்தாந்த சிந்தனை முழுவதி லும் முக்கியமான ஒரு விஷயம் காணப்படுகிறது-விமோசனம் என்னும் கொள்கை, பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசி காலத்திய புது சித்தாந்தம் இக் கொள்கை பற்றித்தான் கடு மையாக விவாதித்தது; இக்கசப்பான விவாதங்கள் காரண மாகத்தான், சித்தாந்தத்தைப் பற்றிய வெறுப்பே எழுந்தது. இந்த வெறுப்புக்கிடையில் ஜோஷியா ராய்ஸ் எழுதிய ''கிறிஸ்தவப் பிரச்னை'' என்ற புத்தகம் இவ்விஷயத்தைப் பற் றிய தத்துவவிசாரணையை எழுப்பிற்று; தேவாலயம் என்னும் கொள்கைக்கு விமோசனம் என்னும் சமூகக் கொள்கை அடிப் படையாகிவிட்டது. ஏசுநாதரின் சிலுவை நம்முடைய பாபங் களையும் சமய வெறியையும், கள்ளச் சலுகைகளையும், ஒழுங்கீ னத்தையும், ராணுவ வெறியையும் ஏற்றத் தாழ்வுகளையும் தாங்கிக் கொண்டிருக்கிற தென்று ரூஷன்பஸ்க் பிரசாரம் செய்து வந்தார். முதிர்ந்த தாராளவாதியான ஷைலர் மாதி யூசின் பிற்காலத்திய புத்தகம்'விமோசனமும் சமூகமுறையும்' என்பது; கிறிஸ்தவ சித்தாந்தத்தின் அடிப்படையான இந்தக் கொள்கையை உயிர்ப்பிப்பது அவசியம் என்று உணர்ந்ததை இப்புத்தகம் காட்டுகிறது.ஒருவர் துன்பத்தை மற்றொருவர் ஏற் பது என்பதை விமோசனம் என்னும் கொள்கையின் முக்கிய அம் சமாக ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டாலும், அதுஅற வாழ்வின் இன்றியமையாத அவல அம்சம் என்று இப்

பொழுது ஒப்புக் கொள்ளப்படுகிறது. நெறி முறையின் மைய ஸ்தானத்தில் சிலுவை திரும்ப வந்தமர்ந்து விட்டபடியால், கிறிஸ்தவ மதத்திற்கும், சித்தாந்தத்திற்கும் திரும்பிவிட வேண்டும் என்ற எண்ணம் தாராளவாத வட்டாரத்திடையே உண்டாய் விட்டது; ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்கள் என்ற குறிப்பான லக்ஷணம் எதுவும் இவர்களிடம் இருந்ததில்லே. பொதுவாக, பிராடெஸ்டெண்டுகளும் கத்தோலிக்கர்களும் யூதர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமூக முறை சித்தாந்தத்தை வகுக்க வேண்டுமென்ற முயற்சி இப்பொழுது மூன்று கட்சிகளேயும் கவரவில்லே. எங்கு சித்தாந்தம் சுறு சுறுப்பாக உருவடைகிறதோ அங்கு மதங்களிடையே உள்ள பிரிவுகள் பலப்படும்; ஏனென்ருல் சித்தாந்த விஷயங்கள் எவ்வளவு பொதுமை கொண்டதாக இருந்த போதிலும் ஒவ்வொன்றும் அலாதியான சொல்லமைப்பு கொண்டதாக இருக்கும்; குறிப்பிட்ட மதப்பிரிவின் அம்சமாகவும் இருக்கும். மனித வர்க்கத்தையே விழுங்கிய சமுதாய அவல நிலேயை சமாளிக்கவோ அல்லது அதற்கு விளக்கம் கூறவோ முனேந்த மதங்கள் எல்லாம் அந்த அளவுக்குப் புத்துயிர் பெற்றன; ஆனல் விளக்கம் கூறும் முறை மட்டும் ஒவ்வொன்றிலும் வேருகத்தான் இருந்தது. சிலுவைக்கும் தியாக சீலத்திற்கும் மறுபடி மதிப்பு தரப்பட்டதன் விளேவென்ன வென்ருல், பிராடெஸ்டெண்டுகளும், கத்தோலிக்கர்களும், யூத சித்தாந்திகளும் ஏக தெய்வ வாதத்துடன் துன்பம் என்ற பிரச்னேயை எப்படிப் பொருத்துவது என்று விளக்கம் தருவதில் தங்கள் வேறுபாடுகளே உறுதிப்படுத்திக் கொண்டதுதான்; ஆனல் அதே சமயத்தில், துன்பத்தால் இணேக்கப்பட்ட ஒரு சமுதாயத்தை அது சிருஷ்டித்து விட்டது; இச் சமுதாயம் சம்பிரதாயமான எல்லா எல்லேகளேயும் மீறுகிறது; இந்த சர்வ வியாபகமான தோழமையில் எல்லா சமய சித்தாந்திகளேயும் பங்கு பெறச் செய்கிறது. இத்துன்பம் காரணமாக கிறிஸ்தவர்கள் ஐக்கியப்பட்டு இணேந்ததற்கு நேர்கோடு போல, ஒவ்வொரு மதத்திலும் புதியதொரு கருத்துத் தோன்றிற்று; அதாவது, எல்லோரும் சோதனேக்குட்பட்டிருக்கிருேம். எனவே, எல்லோரும் பொதுவாக பக்திக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்பதுதான்.

# சித்தாந்த யதார்த்தவாதமும் ஜீவ அவஸ்தை வாதமும்

இந்தத் தீவிர சமூக சித்தாந்தப் போக்குகளைத் தொடர்ந்து சமய சிந்தனையின் தத்துவப் போக்கிலும் மாற்றம் ஏற்பட்டது. தாராளவாதத்தைப் போஷித்து வந்த பூரண பாவனுவாதம் சித்தாந்த யதார்த்த வாதத்திற்கு இடம் கொடுத்தது; பரிணாமவாதம் மனிதனுக்கும் உலகுக்கும் உள்ள உறவைப் பகுத்துப் பார்க்கும் ஜீவ அவஸ்தை வாதத்திற்கு இடம் கொடுத்தது. தற்காலத்திய தத்துவ விசாரணையில் ஏற்பட்டுள்ள இந்த அடிப்படை மாற்றத்தைப் பற்றி சித்தாந்திகளுக்குத் தெரியும் என்றாலும், ஏற்பட்டுள்ள மாற்றத்தை விவரிப்பது எளிதான காரியமல்ல; ஏனென்றால், மாற்றம் அறிவு ரீதியான தென்பதைவிட உணர்ச்சி ரீதியானதென்றும், உலகையும் கடவுளையும் பற்றிய நோக்கில் மாற்றம் என்றும் தான் கூற முடியும்.

வில்லியம் ஜேம்ஸ் தத்துவ தரிசனங்களைத் தாக்க முயன்றது முதல் பூர்ணபாவனு வாதத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பு உருப்படியான உலக நோக்காக உரு எடுக்க ஆரம்பித்தது. நயிட் ஹெட் பிரபஞ்ச இயக்கத்தை விளக்கிக் கூறியது பரிணாமப் புதுமை வாதத்தின் ஒரு பதிப்பே யாகும். சாமுவேல் அலெக்ஸாண்டரைப் போன்ற முந்திய பரிணாம வாதிகள் சிருஷ்டி முறையின் உச்ச கட்டத்துப் புதுமை தான் தெய்வம் என்ற சம்பிரதாயக் கருத்தைப் பின்பற்றியிருந்த போதிலும், ஹிகலிய வாதிகள் அழிவற்ற தத்துவத்தை ஒருவர் அனுபவத்திற்கான 'பொருளாக்கியிருந்த போதிலும் சிருஷ்டி முறைக்குள்ளேயே இயங்கும் நடைமுறை சக்திதான் தெய்வம் என்று ஒயிட் ஹெட் கூறிவிட்டார். இம் மாதிரி கடவுளை காலத்திற்குள் படுத்தியதும், பாவனைகளை ஸ்தூலப் பொருள்களாக்கும் சிருஷ்டி வேலையை அவருக்குத் தொடர்ந்தளித்ததும் சித்தாந்த ரீதியில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தி விட்டது. காலாதீதமான பொருள்களை மண்மீது உருவெடுக்கச் செய்தல், சரித்திர வரலாற்றுக்குள் புகச் செய்தல் என்று மெய்ப்படுத்துதலுக்குப் பொருள் கூறும் முறை அனுபவத்திற்கான பொருள்

என்று கூறும் பாவனுவாத முறைக்கு முற்றிலும் மாறுபட்டது; சுதந்திரமும் அறிவும் முடிவான புறநிலைப் பொருளாக உருவெடுக்க முன்னேறும் முறையில், வியக்தியாக இருப்ப தொவ்வொன்றும் சர்வவியாபக வியக்தியாக கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடும் என்று பாவனுவாதம் கருதுகிறது. ஓயிட் ஹெட்டின் நடைமுறைக் கடவுள் கொள்கை சரித்திர ரீதியான சித்தாந்தத்தை (ரிட்ஸ் கெல்லிடமிருந்து கிடைத்ததை) இயற்கை இயல் தத்துவ தரிசனத்துடன் பொருத்தவும், அவதாரம் என்னும் கொள்கைக்கு பிரபஞ்ச அமைப்பின் பாதுகாப்பை அளிக்கவும் வசதி செய்தது. இந்த யதார்த்த வாத சித்தாந்தத்திற்கு ஜான் டூயி எழுதிய "ஒரு பொது நம்பிக்கை" இன்னும் ஊக்க மூட்டிற்று. யதார்த்தத்திற்கும் பாவனைக்கும் இருக்கும் தொடர்பு பற்றி அப்புத்தகம் சோதனை ரீதியில், நடைமுறையான விளக்கம் அளித்தது.

உலகியல் யதார்த்த வாதத்தின் புதிய தத்துவக் கருத்துகளை நடைமுறை சமய அனுஷ்டானங்களுடனும் நம்பிக்கையுடனும் சமரசப் படுத்தக்கூடிய சித்தாந்த தத்துவத்தை உருவாக்க சித்தாந்திகள் முயன்றனர். இத் துறையில் சிறந்த முயற்சிகளைச் செய்தவர்கள் டக்ளஸ் ஸி. மாகின்டாஷ், வால்டர் ஹார்டன், ஹென்ரி என். வயிமன், சார்லஸ் ஹார்ட் ஷோர்ன். அவர்களுடைய கருத்துக்களை இங்கு போதுமான அளவு விளக்குவது முடியாத காரியம். அவர்களுடைய வித்தியாசங்களை விளக்குவதும் குழப்பமாக முடியும். இந்த யதார்த்த வாத முறைகள் தாராளவாதத்தின் தயாம்சங்களைக் குலைத்து விட்டன. அற நம்பிக்கை குலைந்ததும், கடவுளின் தயை என்ற கருத்தை தத்துவ சித்தாந்திகள் பொருட்படுத்தவில்லை.

சமய யதார்த்த வாதிகள் (டில்லிக் கொடுத்த பெயர்) கடவுளை சுத்தபரம் என்றும் ஸ்திதிப் பொருளில் காணப்படும் ஆதாரமென்றும், யதார்த்த உலகின் விசை என்றும், கனவையும் மாயையும் விட்டு எழுப்ப வல்லதென்றும் சித்தரித்தார்கள். மனிதவர்க்கம், உலகம் ஆகியவற்றிற்கு வேறுபட்டுக் கடவுளிருக்கிறார் என்று விளக்கினார்கள்; கடவுளின் ராஜ்யம் இயற்கையானது மல்ல, சமூ

கத்தன்மை கொண்டதுமல்ல என்றனர். ஏல் நகரத்து ராபர்ட் எல். கால்ஹெறன் கூறுகிறார்: "மனித வர்க்கத்தின் மனத்திற்கும் மேலே வேறெதுவோ, ஒன்றாகவோ பலவாகவோ, இருக்கிறது; கடவுள், தெய்வீகம் என்று அதைப் பொருத்தமாகக் குறிப்பிடலாம். சமய யதார்த்தவாதிகளுக்கு அது மனித சிருஷ்டியாகக் காணப்படவில்லை; பிடிவாதமான சூழ்நிலைச் சக்தியாகக் காணப்படுகிறது; தனக்கென்ற வழிகள் கொண்டதாய், மனிதர்களைக் கட்டுப்படுத்தவும் காக்கவும் கூடிய சக்தி படைத்ததாய், சில சமய மனித வர்க்கத்தின் விருப்பங்களையும் வழிகளையும் முற்றிலும் அழிக்கக் கூடியதாய்க் காணப்படுகிறது."

ஐரோப்பிய தத்துவ தரிசன வட்டாரங்களில் பெருமளவில் வெற்றி கண்ட ஜீவ அவஸ்தை வாதம் சமயத்துவம் என்ற முறையில் அமெரிக்காவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அமெரிக்காவில் யதார்த்தவாதம் செய்ததைப் போலவே ஐரோப்பாவில் ஜீவ அவஸ்தை வாதம் பாவனுவாத தரிசனத்தைக் குலைத்து விட்டிருந்தது. ஹிகலின் டென்மார்க் நாட்டு பிராடெஸ்டெண்டு விமர்சகர் சோரென்கியெர்க்கேகார்டும், அவர் சீடரான ஸ்பெயின் தேசத்து கத்தோலிக்கர் மிகுவெல் உனமுனேவும் சமூகக் கொள்கை வாதத்தின் தீவிர விமர்சகர்கள் என்ற முறையிலும் வேதனைப் பட்டுத் துடிக்கும் மனச் சாட்சியின் அற்புதமான விளக்க உரையாளர் என்ற முறையிலும் 1930-ஆம் ஆண்டுத் தொடரில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். உலகியல் இலக்கியத்திலும், வைத்திய, அறத் துறையிலும் கையாளப்படும் சொந்த விஷயங்களையும் பகுப்பு முறைகளையும் மார்க்க சிந்தனையாளர்களுக்குக் கிடைக்கும்படி செய்தனர். ஆனால் 'மனித நிலை' பற்றி அவர்கள் பகுத்துக் காட்டியது அமெரிக்காவுக்குப் பொருந்தவில்லை; அமெரிக்கர்களுக்கும் எதார்த்தமாகப் படவில்லை; வேறெங்கோ நேர்ந்து வரும் சீர் குலைவின் அறிகுறிகள் என்ற முறையில் அமெரிக்கர்கள் ஆவலுடன் படித்தனர். கொஞ்சம் கொஞ்சமாக, அமெரிக்க பாவனுவர்தம் தன் நம்பிக்கையை இழக்க ஆரம்பித்ததும் மனித நிலையைப் பற்றிய வேதனை பெருமளவில் பிடித்துக்கொண்டது. மனிதர்களின் ஏறுமா

ருன நிலே, தனிமை, தோல்வி, குற்ற உணர்ச்சி ஆகியவை களைத் தெளிவாக எடுத்துக்காட்டும் விமர்சன ரீதியான இலக்கியம் சித்தாந்திகளிடமிருந்தும் தத்துவ தரிசிகளிட மிருந்தும் தோன்றிற்று. தற்காலத்திய அனுபவத்திலும் கலாசாரத்திலும் இவ்வுண்மைகள் தெரிகின்றனவென்றும், வைரியாக அமைந்த உலகின் சூழ்நிலேயில் ஜீவன் சிக்கி வழி தப்பித் தடுமாறுகிருன் என்று கிறிஸ்த்வ யூத சித்தாந்திகள் கூறியது உண்மை என்றும், இவையெல்லாம் அவற்றிற்கு ருசு வென்றும், எப்பொழுதையும் போல் இந்தக் காலத்தில் இவ்வுண்மைகளின் அமல் நடக்கிறதென்றும் அவர்கள் எடுத் துக்காட்டினுர்கள். இவ்விதமாக உனுமுனோ கூறும் "வாழ் வைப் பற்றிய அவலஉணர்ச்சி" வளர்ந்தது; சமய சித்தாந்தி களிடையே பாபம், சாபம், தேர்ந்தெடுத்தல், அருள், முக்தி என்னும் அவலச் சாயலுள்ள விஷயங்களுக்கும் மதிப்பு உயர்ந்தது.

யூத, கத்தோலிக்க, பிராடெஸ்டெண்டு சமய சித்தாந்தி களேச் சில ஆண்டுகள் முன்பு பரஸ்பரம் நெருங்கச் செய்த ஜீவ அவஸ்தைவாதப் பகுப்பு முறைக்கு இப்பொழுது பிரா டெஸ்டெண்டுகளேத் தவிர மற்றவர்கள் ஆதரவு தருவ தாகத் தெரியவில்லே. தம்முடைய 1950-ஆம் ஆண்டு உத் தரவால் போப்பாண்டவர் ஜீவ அவஸ்தை வாதத்தைக் கண்டித்துவிட்ட படியால், பொது போதனேயும் சமய நூல்களும் புதிய தோமிசத்தின் வரம்புகளே மீறிச் செல்ல முடியவில்லே. இருந்தாலும் நவீன சிந்தனேகளே மனத்தில் கொண்டு வைதீக சமயத்தைத் திருத்தி அமைக்கும் முயற்சிகள் தனிப்பட்ட முறையில் கத்தோலிக்கர்கள் இடையே இருந்து கொண்டே தானிருக்கும்; இவை தான் கத்தோலிக்க சிந்தனேயை எக்காலத்திலும் வளர்த்து வந் திருக்கின்றன. மார்டின் பியூபர், கேப்பிரியல் மார்சல், ஜாக்ஸ் மாரிடெயின், பால் டில்லிக், நிகொலாஸ் பர்ட்யேவ் ஆகியோரின் சிந்தனேகள் மற்றவர் மனத்தில் பதிவு பெருமல் இருக்கும்படி தடை செய்ய எந்த போப்பாண்டவர் உத் திரவாலும் முடியாது. குறிப்பாக, அமெரிக்காவில் இவ்வித மான சர்வதேச சர்வ சமயக் கருத்துகள் பயன் விளேவித்துக் கொண்டுதான் இருக்கும்; போப்பாண்டவர்களும் ஆதார

வாதிகளும் கோரும் பிடிவாதமான தூய்மையை இவை தடுத்துக் கொண்டேதானிருக்கும்; வளரும் சித்தாந்தத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் பிடிவாதமான தூய்மை என்பது பொருந்தாது.

தத்துவ ரீதியான சமய சித்தாந்தத்தில் காணப்படும் போக்குகள் ஒருபுறம் ஜீவ அவஸ்தை வாதத்துடனும் மற்றொருபுறம் சரித்திர ரீதியான சமூக சித்தாந்தத்துடனும் நெருக்கமாக உறவாடினால், சிறந்த அமெரிக்க முறையான சமய சித்தாந்தம் தோன்றக் கூடும்; அதுவே இக்காலத்தில் சிறந்த அறிவு பூர்வமான புத்தமைப்பாக இருக்கக்கூடும். ஜீவ அவஸ்தைவாதம் தோன்றக் காரணமாக இருந்த ஐரோப்பியத் துன்ப நிலையில் அமெரிக்கர்களுக்குப் பங்குண்டு என்பது இருபதாண்டு காலமாக உணர்த்தப்பட்டு விட்டது. அவல நிலையைப் பிரதிபலிக்கும் இச் சமயப் போக்கு இசைவு பெருத சில ஜீவன்களின் பிதற்றல் என்று இப்பொழுது யாரும் கருதுவதில்லை. அவலச் சாயலுள்ள இந்த சமய சித்தாந்தங்கள் (கிரேக்க அவல நாடகங்களின் புத்துயிர்ப்பு உள்படத்தான்) நம்முடைய காலத்தையும் நிலையையும் ஓரளவு மிகைப்படுத்திக் காட்டும் யதார்த்த சித்திரங்களாகி விட்டன. விதி என்பது சரித்திர ரீதியாகப் புரியாத அனுபவமல்ல என்பதும், மனிதவர்க்கத்தின் நூற்றுண்டுக் கணக்கான போராட்டங்களில் பொதிந்து கிடக்கும் ஒரு அம்சம் என்பதும், சமய சித்தாந்தம் திருப்தி தர வேண்டுமானுல் புதுமையாக மட்டும் இருந்தால் போதாது, இதர தேசங்கள், மதங்கள் ஆகியவற்றின் வரலாற்றுடன் நம்மை இணைத்தாக வேண்டும் என்பதும் நம்முடைய கொள்கைகளுக்கு இயற்கையான பெருமையும் நிலைத்த அர்த்தத்தையும் அளிக்கின்றன. தீர்க்கதரிசன இலக்கியங்களைப் புரிந்து கொள்ளவும் இது உதவி செய்து விட்டது. தீர்க்க தரிசிகள் நவீன காலத்தவர்களாளுலும் குரல் பைபிளின் தொனி கொண்டதாகவே இருக்கவேண்டும்; அறிவுக் கப்பாற் பட்டதின் ஓயாத புதிய புதிய புலப்பாடுதான் தேவ வாக்கு என்று பிரசாரம் செய்வது, தாராளவாதிகள் கருதியது போல், புரட்டாகத்தான் இருக்க வேண்டும்

என்ற அவசியம் இல்லே; வேதனேப்படும் உலகத்தின் வெகு தெளிவான முனகலாகவும் இருக்கலாம்.

சமய சிந்தனேகளே யதார்த்த ரீதியில் ஐக்கியப் படுத்தும் வேலே மற்ற கிறிஸ்தவர்களேவிட யூத அறிவாளிகளிடையே அதிகமாக முன்னேறி இருக்கிறது. யூதர் சமய வளர்ச்சி சங்கத்தார் தோற்றுவித்துள்ள புனரமைப் பியக்கம் யூத சமயக் கொள்கையின் சரித்திர, தத்துவ, சமூக அம்சங்களே அற்புதமாக தீவிர முறையில் இணேத்திருக்கின்றனர். ஆனுல் அது யூதர் கலாசாரத்தையும் தேசீய வேட்கைகளேயும் பற்றிய குறிப்பான கொள்கையானபடியால், இன்னும் வியாபகமான சமய சித்தாந்த முறைக்கு உதாரணமாக வன்றி வேறு விதத்தில் பயன்படாது; தவிர அழிக்கும் வேலேயைச் செய்யாமல் எந்த அளவுக்குப் புனரமைப்பு செய்யலாம் என்பது பற்றியும் யூத குருமார்களிடையே உடன்பாடு ஏற்படவில்லே.

## புதிய தயாவாதம்

தற்பொழுதைய அறிவு நிலேயைப்பற்றி முழுதும்சொல்வதென்ருல் தாராள வாதத்தைப் பொறுத்த மற்ருெரு விமர்சனப் போக்குபற்றிக் கூறியாக வேண்டும். தாராள வாதம் வீழ்ச்சி உற்றதற்குக் காரணம் அதுபோதுமான அளவு தாராளமாக இருக்கவில்லே என்றும், சதாவிட்டுக் கொடுத்துக் கொண்டிருந்ததென்றும், சில தாராள வாதிகள் நடைமுறை சம்பவங்களின் போக்கைக் கொண்டு முடிவு கட்டிவிட்டனர்; ஆஸ்தீகர்களுக்கும் தேசீயத்திற்கும், தெய்வீக அற்புதங்களுக்கும், சமயாசார அரசியலுக்கும் மதப் பிரிவுகளின் நலங்களுக்கும் விட்டுக் கொடுத்துவிடுகிறது என்று கருதினர். சுதந்திரமான சமயத்தின் எதிரிஎன்று இவர்கள் கருதியவை—அறிவை விலக்கல், வரலாற்று ரீதியான கோட்பாடுகளே ஆதரித்தல், சமயப்பற்றை ஸ்தாபன ரீதியாக்கல், சமயங்களிடையே நேசமின்மை. ஆகியவை. சமய சித்தாந்தம் புத்துயிர் பெற்றதையும், சமய ஸ்தாபனங்களிடையே சகிப்புத் தன்மை இல்லாது போனதையும் கண்டு நம்பிக்கை இழந்த அநேக சமயங்களேச் சார்ந்த நவீன வாதிகள் புதிய தயாவாதம் என்ற கொடியின்கீழ் சேர்ந்தனர். மற்ருெரு பிரிவாகக் கூடாது என்று கருதி பல சமயத்தைச் சேர்ந்த தயாவாதிகளுடன் சகஜ ரீதியில் தோழமை கொண்ட போதிலும், தாமாகவே

வீறுபெற்ற பிரசார ஸ்தாபனமாக ஏற்பாடுகள் செய்து வரு கின்றனர். தயாவாதக் கொள்கைகள் உலவிக் கொண்டிருந்த போதிலும், தயாவாதத்திற் கென்று தனி வைதீகக்கொள்கை ஏற்படவில்லே; இருந்தாலும் மற்ெருரு பிரிவு உருவாகிக் கொண்டிருக்கிறது. 1933-ல் தாராள வாதிகளின் அறிக்கை பிரசுரமாயிற்று; கொள்கைக் கெதிரான கொள்கை என்ற முறையில் அந்தக் கோஷ்டியார் இதை இப்பொழுதும் உப யோகிக்கிருர்கள். அவர்களுடைய ஏழாவது கொள்கை சமயத் தைப்பற்றிக் கூறுவதாவது: "மனித வர்க்கத்திற்கு முக்கிய மான வினைகளும், நோக்கங்களும், அனுபவங்களும் அடங்கி யது சமயம். மனிதத் தன்மை உள்ள தெதுவும் சமயப்பற் றுள்ளவர்களுக்கு அன்னியமாயிராது. அதில் உழைப்பும், கலையும், விஞ்ஞானமும், தத்துவமும், அன்பும், நட்பும், பொழுது போக்கும் அடங்கியிருக்கிறது—எவை எல்லாம் மனித வாழ்வுக்கு அதனதன் அளவுக்கு அறிவு பூர்வமான திருப்தி அளிக்கின்றனவோ அவையும் இதில் அடங்கும். பக்திக்குரியது, உலகியலுக்குரியது என்ற பாகுபாட்டை இனி ஆதரிக்க முடியாது.

சமயத்தின் விவரணம் என்ற முறையில் இதைக் கண்டிக் கக் கூடுமாளுலும் மற்ற கொள்கைகளைப் போல் அல்லாது இது சமயத்தைப் பற்றிய பொதுவான விவரணத்தைத் தர முற்படவில்லே; குறிப்பிட்ட நம்பிக்கையின் பொருளைக்காட் டத்தான் பயன்படுகிறது. பக்திக்குரியது, உலகியலுக்குரி யது என்ற வித்தியாசத்திற்குப் பதிலாக ஜீவதயைக்கும் தயை இன்மைக்கும் உரிய வித்தியாசத்தைத் தங்கள் கொள்கையின் அடிப்படையாக்கி விட்டார்கள்.

தாராளவாதிகளுக்குள் இடது சாரி ஏக தெய்வ வாதிகள் இருக்கின்றனர்; எமர்சனின் தாராளவாதத் தன்மையை அவர்கள் பிரதிபலிக்கிருர்கள்; அவரைப் போலவே கிறிஸ்தவ மத எல்லேக்குள் குறுகியிருக்க அவர்களும் விரும்புவதில்லே. லோகாயதத்தைக் கொள்கையாகக் கொள்ளாத லோகாயத வாதிகள் இருக்கின்றனர்; ஆன்மா, அமரத்வம், உலகிற்கப் பாற்பட்டது, கடவுள், ஆவி என்ற சொற்களை உபயோகிக் கும் சமய சித்தாந்திகளைப்பற்றி அவர்கள் அவநம்பிக்கைப் படுகின்றனர்; உலகியல் உண்மைகளுக்கு இன்னம் சகஜமான

சொற்களைப் பயன்படுத்தலாம் என்று அவர்கள் கருதுகின்ற னர். புதிய, தீவிரசித்தாந்திகள் நாசூக்காகக் கையாளும் கதைகள், தெய்வீக அற்புத அறிகுறிகள் ஆகியவற்றை வெறுக்கும் இயற்கை வாதிகள் இருக்கின்றனர்—ஸ்தாபன ரீதியாக்கப்பட்ட மதத்தால் பயனில்லை என்று கருதுபவர்கள்; அறிவு ரீதியான வாழ்க்கையைப் பற்றி பக்தி ரீதியான கவலை கொண்டிருப்பவர்கள். சர்வமதம் என்ற முறையில் ஜீவ தயாவாதம் தோல்வி அடைந்து விட்டதைக் கண்டு பழைய அறிவியல் வாதிகள், சுதந்திர சிந்தனையாளர்கள், நாத்தீகர் கள் வருந்துகின்றனர்; எனவே பக்தி பூர்வமான ஜீவ தயா வாதிகளாக இருக்க அவர்கள் ஒப்பிவிட்டார்கள். கிறிஸ்தவ தேவாலயங்கள், யூத சமயம், அறநெறி, கலாசாரம் முதலிய வற்றில் தாராள மனம் படைத்த சிலர் இருக்கின்றனர்; தங் கள் ஸ்தாபனத்தின் குறுகிய கொள்கையை அவர்கள் வெறுக் கிறார்கள்; எனவே தங்களுடைய சொந்த, விரிந்த கொள் கைக்குச் சாட்சியமாக ஜீவ தயாவாதத் தோழமையில் சேரு கின்றர். இவை எதிலும் வகைப்படாத வேறு சிலர் இருக் கின்றனர்; அவர்களுக்கு எந்த சமயஸ்தாபனமும் உலகியல் விஷய மண்டலமும் சமாதானம் அளிப்பதில்லை. இருந்தா லும் மனிதன் பரிபூர்ணநிலை அடைந்து சுதந்திரமான சர்வ வியாபகமான சமாஜத்தில் வாழ வேண்டுமென்ற வேட் கையை மெய்ப்படுத்த அவர்கள் விரும்புகின்றனர். பல வகைப்பட்ட இவர்களை எல்லாம் ஜீவ தயாவாத சங்கங்கள் திரட்டி, தோழமை, போதனை, பிரசுரம், தங்கள் பொதுநலங் களை வளர்த்தல் ஆகிய பணிகளில் வெற்றிகரமாக ஈடு படுத்திவிட்டன. எண்ணிக்கை குறைவாக இருந்த போதி லும், தனித்த சமய இயக்கமாக ஜீவ தயாவாதம் திரும்பத் தலை எடுத்திருப்பது குறிப்பிடத்தக்க செய்தி. நவீன ஜீவ தயாவாதம் இன்னும் தனித்த சமயமாக இருந்து வருவதற் கும், சமயத்தின் தேவையை சம்பிரதாயமான சமயக் கருத்து களால் திருப்திப் படுத்த முடியவில்லை என்பதற்கும், வைதீ கக் கொள்கையாளர் நினைப்பதுபோல, தத்துவ தரிசிகள் அவ் வளவு மாறுபட்ட சிந்தனை உடையவர்களல்ல என்பதற்கும் இது ஒரு ருசு. சம்பிரதாயமான சமய சுகங்களை வீட்டி லிருந்து அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, சுதந்திர

மான நாட்டில் சுதந்திரமான புதுப் புது சமயங்களின் சவால் எட்டத்தான் எட்டும். சொஸ்தமான அறிவு வாழ்க்கையையும், சமூக வாழ்க்கையையும் நடத்துபவர்களுக்குச் சுதந்திர சிந்தனையாளர்கள் அனாதைகள் போலும் நாடோடிகள் போலும் தோன்றலாம். ஆனாலும் அவர்களுக்கிடையினின்று தீர்க்கதரிசிகள் தோன்றத்தான் செய்கிறார்கள். ஞானமும் தோழமையும் வளர அவர்கள் பாடுபட்டுத்தான் வருகிறார்கள்; இதை எந்த சமயமும் மறுக்கத் துணியாது; ஏனென்றால் தாங்கள் அவர்களுக்குத் துரோக மிழைப்பதைக் கண்டு எல்லோரும் வெட்கமடைகின்றனர்.

சமய தயாவாத இயக்கத்தைப் போல் உருவடையாத உலகியல் சமயவாதிகள் சிலர் இருக்கின்றனர். அவர்களுக்கு உலகியல் சமயவாதம் என்பது நாத்தீகமுமல்ல, சமய அலக்ஷியமும் அல்ல. சில மதிப்பீடுகளையும் ஸ்தாபனங்களையும் அவர்கள் போற்றுகிறார்கள். அவற்றைக் காக்க—தேவைப்பட்டால் எல்லா சமய ஸ்தாபனங்களை எதிர்த்தும் காக்க—விரும்புகின்றனர். ஜனநாயகம், சுதந்திரம், விஞ்ஞானம் இவற்றின் காவலர்களாகத் தங்களைக் கருதுகின்றனர். தாமஸ் ஜெபர்சனுடைய கொள்கைகளை எடுத்துக் காட்டி, அவரையே தங்கள் அமெரிக்க ஞானத் தலைவராக பாவிக்கின்றனர். அவர்கள் சகஜமாக சமயப் பாதிரி முறைக்கு எதிரிகள்; எல்லா சுதந்திர ஜீவன்களும் விசுவாசம் காட்டக் கூடியதும், ஸ்தாபன ரீதியான சமயம் பிரித்து வைப்பவர்களை எல்லாம் சேர்க்கக் கூடியதுமான பொது சமயத்தை உருவாக்கலாம் என்று நம்புகின்றனர்.

மிஞ்சி நின்ற சமயச் சிறுபிள்ளைத்தனத்தின் குறுகிய போக்கை ஒழிக்க முயன்ற சீர்திருத்தவாதிகளும், தீர்க்கதரிசிகளும் எத்தனை கொடுமைக்கும் தியாகத்திற்கும் ஆளாகியிருக்கின்றனர்! முதிர்ச்சி அடைந்த மனத்தினருக்கு வைதீக சமயத்தின் அலங்காரங்கள் எவ்வளவு சிறுபிள்ளைத்தனமாக இருக்கின்றன! தற்காலத்திய மனிதனின் வலுவான ஆதரவைப் பெற சக்தி இழந்த சமயக் கொள்கைகளையும் உருவங்களையும் சம்பிரதாய வாதிகளும் ஆதார வாதிகளும் எவ்வளவு விடாப்பிடியாகப் பயன்படுத்த முயலுகின்றனர்! முதிர்ந்த

மனத்திற்கான சமயத்தையும், அனுஷ்டானத்தையும் உரு வாக்கக் காலம் கடந்து விடவில்லையா ?

ஹோரேஸ் எம். கல்லென் தம்முடைய "சமயத்தில் புரோகிதத் தன்மையும் உலகியல் தன்மையும்" என்ற புத்த கத்தில் இக் கருத்துகளைத் திறமையாக எடுத்துக் கூறியிருக் கிறார். சமயங்களில் சாராமலுள்ள முப்பது சதவிகிதத்தின ரில் எவ்வளவு பேருக்கு அவர் பிரதிநிதியாகப் பேசுகிறார் என்று சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் உலகியல் வாதமோ அதற்கு சமமான ஒன்றாே தனித்த சமயமாக நிலைத்திருப்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்; சமய சித் தாந்த ரீதியில் ஊமையாயிருந்தாலும் உருப்பெறாவிட்டா லும் அது நாத்திகத் தன்மை கொண்டதல்ல என்பதையும், சமயத் துறையில் தற்குறித் தன்மை உள்ளதல்ல என்பதை யும் ஏற்றுத்தான் ஆக வேண்டும். இலக்கிய சிந்தனையாளர் கள், அரசியல் வட்டாரங்கள், சமூக இயல் விஞ்ஞானிகள், முன்னாள் மார்க்ஸீய வாதிகள் ஆகியோரிடையே இவர்கள் காணப்படுகின்றனர். பாதிரிகள் இல்லாத சமயத்தை சுலப மாக இல்லாவிட்டாலும் இனமாகப் பெறுவது விசேஷம் தானே; ஆனால் இம்மாதிரி சமயம் வெகுநயமான மனச் சாட் சியைத்தான் பிரதிபலிக்கிறதென்று குருமார்கள் கூறுவதற்கு அநேகமாக ஆதாரமே இல்லை. இம் மாதிரி சந்தர்ப்பங்களில் சமயத்திற்கும் நாத்திகத்திற்கும் இடையே எல்லைக்கோடு எங்கே என்பதுதான் பார்வையாளர்களின் முக்கிய சங்கட மாகி விடுகிறது. ஏனென்றால் மேயெர் ஸ்காபிரோ கூறுவது போல் "சமயத்திற்கும் சகப்பிரயாணிகள்" இருக்கின்றனர்.

# 5

## பொது வழிபாடு, சமயக்கலைப் போக்குகள்

சமய சித்தாந்தத்திற்கு இரண்டு கடமைகள் உண்டு; அறிவு வளர்ச்சிக்கிணங்க சமய நம்பிக்கையைப் பேண வேண்டும்; குறிப்பான வழிபாட்டு முறையைப் புரியவைக்க வேண்டும். நூற்றுண்டின் ஆரம்பத்தில் வழிபாட்டு சம்பந்த மான கடமையை விட விஞ்ஞான சம்பந்தமான கடமையைத்தான் சமயசித்தாந்தம் அதிகமாக உணர்ந்தது. கோட் பாட்டுக்கும் அனுஷ்டானத்திற்கும் இடையே பரஸ்பரம் பிரிவேற் பட்டு விட்டது; முந்திய அத்தியாயத்தில் காட்டப்பட்டது போல், கோட்பாடு விஞ்ஞானத்துடனும் தத்துவதரிசனத் துடனும் உறவாடிற்று; அனுஷ்டானம் சமூக சேவையுடன் இணைந்தது. அவைகளின் அனுபவத்திலிருந்து பரஸ்பர தேவையை உணர்ந்துவிட்டன; தற்பொழுது அவை சமரச மடைந்திருப்பது இரண்டுக்கும் வலிமையை அளித்திருக் கிறது.

சமய சிந்தாந்திகளும் சாதாரணமக்களும் வழிபாடுதான் சமயத்தின் உயிர் மூச்சென்பதையும், அது உள்ளருள் பெறு வதற்கான புறச்சாதனமல்ல என்பதையும் உணர்ந்து விட்ட னர்; அதற்குப் பயன் அதுவே என்றும், வாழ்வுக்கு உன்னத மும் அமெரிக்க கலாசாரத்திற்கு வளமும் அளிக்கும் பண்புச் சாதனமென்றும் அதைக் கருதுகின்றனர். சித்த உறுதியுடன்

வழிபாடு செய்தல் என்பது அமெரிக்கர்கள் இருபதாவது நூற்றுண்டில் கண்டதொரு வெற்றி; தற்காலத்திய வேதனையால் ஏற்பட்ட பயன் என்று கருதுகிறேன். பிரெஞ்சுக்காரர் ஒருவர் தெளிந்து கூறினர். "இப்பொழுதோ பின்னரோ பணிந்துதான் ஆகவேண்டுமென்று அனுபவம் கூறுகிறது! கடவுளைப் பணிவதில் தான் அதிக அவமானம் ஏற்படுவதில்லை".

அமெரிக்கர்களும் வழிபாடு செய்யவேண்டியது சமயக் கடமை என்பதைவிட சமயத் தேவை என்பதை உணர்ந்து விட்டனர்; பயபக்தியும் அன்பும் கொண்டு கடவுளை வழிபட அவர்கள் தேவாலயங்களுக்கும் கோயில்களுக்கும் திரும்பிவிட்டனர். இவ்விதமாக நிதானமடைந்து அமெரிக்கர்கள் தங்கள் முன்ஞேர்களை விட அதிகமாகப் பொதுவழிபாட்டைக் கோர ஆரம்பித்தனர்.

## வழிபாட்டில் சம்பிரதாயமான அவநம்பிக்கை

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சமயப்பற்றுள்ளவர்களிடையிலும் கூட வழிபாட்டுக்கு இருந்த இடைஞ்சல்களையும் வெறுப்புகளையும் பற்றிக் குறிப்பிட வேண்டியிருக்கிறது; மக்களின் பெரும்பகுதியில் அவை இன்றும் இருக்கின்றன. வழிபாடென்னும் கலையை அறிவு பூர்வமாக வளர்ப்பதற்கு எதிராக உள்ள தடைகளைப் புரிந்து கொண்டால்தான் சமீப காலத்தில் உருவாக்கப்பட்டு வரும் ஆக்க வேலையை சரியாக மதிப்பிடமுடியும்.

முதலாவதாக, சடங்குகள் அனுஷ்டானங்கள், சம்ஸ்காரங்கள் ஆகியவை பற்றி பியூரிடன் பிரிவினர்கள் கொண்டுள்ள பழைய குருட்டு வெறுப்புஇருக்கிறது; இவை எல்லாம் போப்பாண்டவர் சமாசாரம் என்ற வெறுப்பு. வழிபாட்டின் கொள்கை என்ன என்பதைப் போப்பாண்டவரின் 1947-ஆம் ஆண்டுக் கட்டளை விளக்குகிறது. "கடவுளைப் பெருமைப்படுத்தவும் மனிதனைப் புனிதமாக்கவும் ஏற்பட்டது வழிபாடு என்று பொது நோக்கை விளக்கிவிட்டு அவர் கூறுகிருர். "தனியான பிரார்த்தனையை விட பொதுவான தேவாலயப் பிரார்த்தனை முறை சிறந்ததாக இருந்த போதிலும் தேவாலயப் பிரார்த்தனைச் சடங்குகளின் புனிதமான பயனை

ஏற்பதற்கு தனிப் பிரார்த்தனைதான் மனிதனைப் பண்படுத்து கிறது".

கடவுளைப் பெருமைப்படுத்தத்தான் வழிபாடு என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டனர்; தேவாலய பொதுப் பிரார்த்தனையைவிட சிறந்ததென்ற கருத்தை பியூரிடன்கள் வெறுத்தனர்; சம்ஸ்சார ரீதியான வழிபாடு ஞானிகளை வழி படுவதை விடப் புனிதமானது என்பதை அவர்களால் ஏற்க முடியவில்லை. பியூரிடன்கள் பள்ளிக் கூடங்களைப் போல் தேவாலயங்களையும் வெறிச் சென்றுக்கி விட்டதைத் தவிர (கூடும் இடம் என்றே குறிப்பிட்டார்கள்) பொதுப் பண்டிகை களிலோ விரதங்களிலோ திருமணங்களிலோ அந்திமச் சடங்கு களிலோ பொது முறையில் கலந்துகொள்வதில்லை. எளிமை வைராக்கியம், நேர்மை, ஆகியவற்றையே பயின்றனர்; அவர் களுடைய கலைகள், குறிப்பாகக் கட்டிடக் கலையும் சமயப் பிரசங்கங்களும் இந்த லக்ஷியங்களையே எடுத்துக் காட்டு கின்றன. இவற்றிற்கிணங்க தங்கள் சபைகளைப் போதனை பெறுவதற்கே பயன்படுத்தினர்; தங்கள் போதகர்களை ஆசிரி யர்களாகவே பாவித்தனர். பொது ஆராதனை பெரும்பாலும் பிரசாரமாகவே இருந்தது; கடவுளின் சன்னதிக்கு வருவதாக அவர்கள் கருதுவதில்லை; ஏனென்றால் தினம் அவர்கள் வாழ்வ தெல்லாம் அவர் முன்புதானே; கடவுளின் வாக்குக்கும் நிய மத்திற்கும் விளக்கம் பெறுவதற்காகக் கூடும் இடம் என்று கருதினர்.

இவ்விஷயங்களில் அவர்கள் யூதர்களை ஒத்திருக்கின்றனர் யூதர்கள் கோயில் வழிபாட்டுச் சடங்குகளையும் கிரந்தங்களை ஆராயும் சபையையும் வெவ்வேருகவே பாவிக்கின்றனர். எனவே நடைமுறையில் குருமார்களும், பழைய பலிதானங் களும் வேறு விதமான பக்திக்குப் பணிய வேண்டி இருக் கிறது. கடவுளின் நியதிக்கு அன்பு செலுத்துதல் இம்மாதிரி அறப் பிரசார, நோக்குடன் சபைகளைக் கருதுவது அமெரிக்கா வில் பரவி இருக்கிறது; பியூரிடன்கள் வழிபற்றியோ யூதர் களின் வழிபற்றியோ அறியாதவர்களிடம் கூடப் பரவிஇருக் கிறது. கூடுமிடங்களும் யூதச் சபைகளும் பைபிளில் கூறப் படாத மனித சிருஷ்டியானபடியால் உண்மையான சமயத் திற்குப் புறம்பானவையாகக் கருதப்படுகின்றன. சமய

ஸ்தாபன ஆடம்பரம், பொது வழிபாட்டு ஸம்ஸ்காரம், ஆகி யவை இன்னும் தெளிவான மனித சிருஷ்டிகள் ஆனபடியால் பக்தியின் வக்ரங்களாகத் தோன்றுகின்றன. செயற்கை அணிகளைச் சமய ஸ்தாபனக் கடமைகளாக மாற்றுவது போல, இவர்களுக்குத் தோன்றுகிறது. "உன்னிடமிருந்து கடவுளுக்கு வேண்டியதென்ன?" அது நீங்கலாக பாக்கி எதுவும் மிகைதான். "சடங்கு சமயமாகாதென்பதை வற் புறுத்தியாக வேண்டும். அது சமயத்தின் முக்கியத்துவத்தை உணரும் அடையாளம்; நியமரீதியாக அனுஷ்டிப்பதற்கோர் சாதனம்; ஸ்தாபனமாக்கப்பட்ட சமயத்தின் கருவி—அவ் வளவுதான். தாராள மனம் படைத்த ஏகதெய்வவாதி ஹாரோல்டு ஸ்காட் கூறியுள்ள இக்கருத்துக்கள் அமெரிக்க பிராடெஸ்டெண்டுகள் பெரும்பான்மையோரின் அபிப்பிரா யத்தையே பிரதிபலிக்கின்றன. ஆதாரவாதி ஒருவர் தம் பிரசங்க முடிவில் கத்தியது என் நினைவுக்கு வருகிறது. "சகோதரர்களே! கடவுள் சமயத்தை வெறுக்கிறார்; அவருக்கு வேண்டியது நம்பிக்கை." சமயம் என்பது மத வேஷம், மார்க்கம் என்பது உருவவழிபாடு; இல்லாவிட்டால் முட்டாள்தனம் என்ற கருத்துக்களை பக்தியுள்ள அமெரிக்கர் களும் இல்லாத அமெரிக்கர்களும் கொண்டிருக்கின்றனர்.

வழிபாட்டைப் பிரசாரக் கண்கொண்டு பார்ப்பது பொது ஆராதனைக் கவசியமான அருவத்தன்மையை பாதிக் கிறது. இது ருசியைப் பற்றிய விஷயமல்ல. அமெரிக்க பிரா டெஸ்டெண்டுகளின் அறநெறி அந்தரங்கமானதாகவும் தனித்தன்மை கொண்டதாகவும் இருந்திருக்கிறது; மனித னுக்கும் கடவுளுக்கும் இருக்கும் உறவு அந்தரங்கமான தென்றே விளக்கம் தந்து வந்திருக்கிறார்கள். எனவே அருவத் தன்மை கொண்ட "அருள் வழிகளும்" தியான முறைகளும் மனத்தைக் கவராத முறைகள் என்பதைத் தவிர, நெருங்கிய அந்தரங்க உறவு முறைக்கு இடைஞ்சல் என்றும் கருதினார் கள். கௌரவமான சமூகத்தின் வசதிகளுக்கும் மரியாதை களுக்கும் இடையே வழிபாட்டைப் பொருத்துவது அமெரிக்க வாழ்வின் சமத்துவப் போக்குக்கும் சகஜப் போக்குக்கும் வெறுப்பாக இருக்கிறது; நாணயமற்றதனமாகத் தோன்று கிறது.

சடங்கு ரீதியான பலிதானம் பலி ஆகாது; சடங்கு ரீதியான தவம் உண்மையான பணிவைக் காட்டாமலும் இருக்கலாம்.

இதே காரணங்களுக்காக பிராடெஸ்டெண்டு போதகர்கள் சம்ஸ்காரங்களையும் நியமரீதியான பிரார்த்தனைகளையும் நடத்துவதிலுள்ள "உத்தியோகத் தன்மையை" வெறுத்தனர் "தெய்வத்துடன் பழக வேண்டிய காலத்தில், அநேக நாட்களில், தன் மனதிருந்த கேவலமான நிலையைப்பற்றி பகிரங்கமாகக் கடவுளிடத்திலோ மக்களிடத்திலோ நல்லகுருமார் யாரும் சொல்வதில்லை. ஆனால் இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து ஏமாற்றும் நிலைக்குச் செல்வது வெகு எளிது தான்." ஏமாற்றத்தின்மீது ஏற்படும் வெறுப்பு (போதகர் கோஷ்டியிலிருந்து எமர்சனை விரட்டியதும் இதுவேதான்) குருமார் தொழிலுக்கே பெரிய தடையாக இருக்கிறது; வழிபாட்டு முறையில் உத்தியோக ரீதியான நடிப்பு என்று கருதக்கூடிய எதற்கும் இந்தத் தடை இருந்து வருகிறது.

பிரசார ஸ்தாபனங்களும் பாதிரிமார் பிரசங்கங்களும் அமெரிக்கர்களைக் கவர்வதற்கு இந்த மனப்பான்மை தான் காரணம். பில்லி கிராஹாம் போன்ற பிரசாரகர்கள் ரேடியோ, அச்சுப் புத்தகம், பாதிரிமார் பிரசங்க .மேடைக்கு அப்பாற்பட்ட மேடை ஆகியவற்றின் உதவி கொண்டு, தேவாலயச் சடங்குகளையும் சமயக் கல்வியையும் நம்பாமல் பைபிள் படிப்பை, நம்பிஅந்தரங்கமாகவும் தனித்தனியாகவும் ஏசுநாதரை நம்புங்கள் என்று பிரசாரம் செய்ய முடிகிறது.

இம்மாதிரி வேண்டுகோள் பழங்காலச் சமயச் சொற்களால் செய்யப்படுவதையும், இந்தப் பிரசாரம் வழிபாடென்பதைவிட பொழுது போக்காகப் பாவிக்கப்படுவதையும் குறிப்பிட வேண்டும். பழைய கால கிறிஸ்துவ வேதத்தின் உள்ளடக்கம் மாறிப் போகாவிட்டாலும் இந்தக் காலத்தில் புதிய பொருள் தருகிறது. பழைய காலத்து அபூர்வ பொருளின் மதிப்பையும் பெற்று விட்டது, இம்மாதிரி மனோபாவம் அமெரிக்க மக்களின் உண்மையான குணம். அந்தக் குணம் வழிபாட்டில் தானுகத் தெளிவாய்த் தெரியும்;

சமயம் ஸ்தாபனமாக்கப்படுவதால் சம்பிரதாயமான வழிபாட்டின்மீது தோன்றும் வெறுப்பு சமூக வளர்ச்சி இயல்

வாதிகள் 'மார்க்கத்தார்' என்று குறிப்பிடுகிறார்களே அவர்களிடமும் நிலவுகிறது. மார்க்கப் பொருளைப் பயன்படுத்தும் மார்க்கத்தார் குறைவு. அவர்களுக்குக் கிடைத்திருக்கும் அருள்வழி சகஜ வழிபாட்டு முறை எல்லைகளுக்கு அப்பால் அவர்களை இட்டுச் சென்று விடுகிறது; அவர்கள் தெய்வ நியமனம் பெற்ற உத்தமர்கள், தத்துவ ரகசியங்களைப் பிரகடனம் செய்ய வந்தவர்கள். "ஸ்தாபனமாக்கப்பட்ட சமயம் கடவுளிடமிருந்து வந்ததல்ல என்பது வெளிப்படை" என்று ஜெஹோவாவின் சாட்சிகள் சார்பில் நீதிபதி ருதர் போர்டு கூறுகிறார். "கிறிஸ்தவ சமயத்தின் மாறாத வைரியாகவே ஸ்தாபனமாக்கப்பட்ட சமயம் காணப்படுகிறது.

கிருஸ்தவ மதம் பிறந்தபோது நேர்ந்ததைப் போலவே இந்த தீர்க்கதரிசன இயக்கங்களும், ரகசியத் தத்துவங்களும் ஸ்தாபனமாக்கப்பட்ட சமயங்களை மறுக்கின்றன; சர்வவியாபகமான திருஷ்டியையோ தெய்வ அருளையோ அளிக்கின்றன; இவற்றை ஏற்றால் சம்பிரதாயமான வழிபாடு வழக்கொழிந்து போய்விடும். ஏமாற்றமடைந்து விட்டோம் என்றும், உண்மை வேட்கைக்குத் திருப்தி அளிக்க தேவாலயங்கள் தவறி விடுகின்றன வென்றும் இவ்வியக்கத்தார்கள் எல்லாம் கூறுவது பொது வழிபாட்டிலுள்ள முக்கிய சான்று. கடவுள் வெறி கொண்டவர்களிடம் இயல்பான தமக்கென்ற முரட்டுத் தன்மை இருக்கிறது; அமெரிக்காவில் இந்த எல்லை மறைந்து விடவில்லை. ஸ்தாபன ரீதியாக்கப்பட்ட சமயத்தைப் பயின்று வழிபட உறுதி கொண்டவர்கள் கடவுளை நம்புவதற்கும் சமயத்தை நம்புவதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்கு உணர்கின்றனர்.

வழிபட வேண்டுமென்பது தானாக இயல்பாக உண்டாவதென்று பலர் நம்புகின்றனர்; வழிபாட்டு முறைக் கல்வி அதைக் கெடுத்து விடும் என்றும் நம்புகின்றனர். "காதலியின் அழகைக் கண்டு ஆவேசமும் அறிவும் கொள்ளும் இளைஞன் மனத்தில் தோன்றும் அன்பைப் போல், சமயபக்தன் மனத்தில் வழிபடும் உணர்ச்சி பிறக்கிறது" என்று பேராசிரியர் ஜோஸி எழுதுகிறார்...வழிபட வேண்டும் என்ற ஆவலில்லாதிருப்பது ஒருவர் சமயத்திலுள்ள பெரும் குறையின் அறிகுறி; வழிபாட்டின் பெருமையை வற்புறுத்துவதால் இக் குறையை

ஈடு செய்ய முடியாது,'' இது உண்மையாக இருக்கலாம்: ஆனல் காதலன் மனத்தைப்போல் சமயபக்தன் மனமும் சிந்தனையற்றிருந்து விட்டால் வழிபாடு இயற்கையான காமம் போன்ருகி விடலாம்; காதலிக்கும் இளைஞனின் அதிசயக் கற்பனை போல் ஆராதனையும் ஆகிவிடலாம். ஒரு ஜீவன் சமயச் சூழ்நிலையில் பிறந்தால் வழிபடுதல் என்பது வழக்கமாக ஏற்படுகிறது. (சம்பிரதாயமாக, தானுக அல்ல) எல்லா சம்பிரதாயத்தையும் போல் ஜீவன் அறிவு முதிர்ச்சி பெறும் பொழுது சோதனைக்கு இலக்காகிறது. எனவே இதை 'வழிபாடு' என்ற கருத்தில் மதிப்பிட வேண்டுமே அல் லாது வாழ்வுக்கு வளமளிப்பது, பண்புக்குப் பலமளிப்பது, என்ற நோக்கில் மதிப்பிடக்கூடாது. ஆனல் வழிபாட்டை மன மறிந்து பேணி வளர்ப்பதென்பது நடைமுறைக்கு ஒவ் வாதென்றும், கடவுளின் செயலில் பக்தியின்றிக் குறுக்கிடுவ தாகும் என்றும் பலர் நம்புகின்றனர். கால்ரிட்ஜின் கவிதை யின் கடைசி அடிகள் இவ்வளவு பரவி இருப்பதற்குக் காரணம் அமெரிக்க மனப்பண்பும் வியக்த ஜீவப் போக்கும் தான்.

"பெரிதோ சிறிதோ எவையிடத்தும் அன்பு செய் பவனே உன்னதப்பிரார்த்தனையைச் செய்தவனுகிருன். ஏனெ னில் நம்மிடம் அன்பு பூண்ட அன்பரான கடவுளே யாவை யும் படைத்து அவற்றிடம் அன்பு கொள்கிருர்."

ஆனல் முதல் அடி அந்நிதியமாக ஒலிக்கிறது.

"நல்ல பல நண்பர்களுடன் தேவாலயத்திற்குச் செல்வது எனக்கு இனிமையாக இருக்கிறது; மணவிருந்தை விட இனிமையாக இருக்கிறது."

கடவுளே வழிபாட்டுக் கலைக்குக் கடுமையான வரம்பு களைக் கட்டி வைத்திருக்கிருர் என்று கத்தோலிக்கர்களிடை யும் கிரேக்க வைதீகர்கள் இடையும் நிலவும் நம்பிக்கை வேறு வகையைச் சேர்ந்தது; ஏனென்ருல் தானே அவர் ஒரு மார்க் கத்தைக் குறிப்பிட்டிருக்கிருர்—பொதுப் பிரார்த்தனைக் கென்று தெய்வீக உத்தியோகம் ஒன்றும், ஒரு தொகுப்பு சமஸ்காரங்களும் பலிதானங்களும் எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல, தெய்வீகக் கிரியையான சற்பிரசாதச் சடங்கும், பொதுப் பிரார்த்தனை முறையை தெய்வீக வினை

என்று கருதாத தேவாலயங்கள் கூட சம்பிரதாய முறைக்கு வைத்திருக்கும் மதிப்பின் காரணமாக, பொதுப் பிரார்த்தனை கலைக்கான லக்ஷியங்களை வைதீக அளவிலேயே வைத்துக் கொண்டிருக்கின்றன. நம்பிக்கையுள்ள பக்த பெருமக்களுக்கு வழிபாட்டு முறைகள் சாசுவதமாக அமைக்கப்பட்டு விட்டதாகக் கருத்து; அவை விவாதத்திற்குரியவை அல்ல; எனவே அவற்றை அனுஷ்டிப்பது சமயக் கருத்தின் புலப்பாடு என்பதன்றி சமயக் கடமையாகவே தோன்றுகிறது. தவிர சடங்குகளுக்கு மந்திர சக்தி உண்டென்ற நம்பிக்கையும் பரவலாக இருந்துவருகிறது; அதனால் வழிபாட்டுக்கு உபயோகம் உண்டு என்ற செல்வாக்கும் இருந்து வருகிறது.

வழிபாட்டு முறைகள் மிகவும் பழைமையாகிவிட்டன என்று கலைகளில் தேர்ந்து பண்பட்டவர்கள் நினைக்கத் துவங்கி விட்டனர் என்பது தான் இவ்வளவுக்கும் மேலான தடங்கல். தேவாலயங்கள் இருக்கும் நிலையில் பாதிரி முறைகளுக்கான எதிர்ப்பு துவேஷத்தாலோ குருட்டு எண்ணத்தாலோ ஏற்படுவதென்று சொல்லிவிட முடியாது. புதிய சாராயத்தைப் பழைய குப்பையில் ஊற்றி என்ன பயன்? இங்கொரு நவீனக் கட்டிடம் அமைந்த தேவாலயம், அங்கொரு நவீன ஞான கீர்த்தனம், கொஞ்சம் சமய நாடகம், நடனம், ஏதோவொரு அதி நவீன முறையில் சிலுவை நிலையம்-சிருஷ்டி சக்தி ஓய்ந்து விட்ட கலை உலகில் இவை எல்லாம் வெறும் செயற்கைக் குறுக்கீடுகள். கலை உணர்ச்சியை வெளிப்படுத்துவதில் உலகியல் கலைகளுடன் போட்டியிடும் நோக்கம் சமயக்கலைக்கிருப்பதாகச் சொல்லிக்கொள்ள முடியாது. நூற்றுண்டின் ஆரம்பத்தில், விரிந்த மனமுள்ள சில பாதிரிமார்களைக் கூட இம்மாதிரி அவநம்பிக்கை பிடித்துக் கொண்டது; எனவே தேவாலய ஆராதனையைக் கவர்ச்சிகரமாக்க அவர்கள் முயலவில்லை; சம்பிரதாயமான வழிபாட்டு முறைக்குப் பதிலாக நவீன வழிகளைத் தேடினர்கள்.

## பொதுப்பிரார்த்தனையில் அக்கறை வளர்ச்சி

இவ்வளவு சங்கடங்களையும் மீறி, சமயக் கலைஞர்கள், வழிபாட்டு முறைகளின் உண்மையை உணரும்படி செய்வதிலும், நமது கலாசாரங்களுக்குரிய அமைப்புகளைப் பெறும்

படி சமயச் சடங்குகளைத் திருத்தி அமைப்பதிலும் அற்புத மான் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

வழிபாட்டைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற ஊக்கம் வெளி நாட்டிலிருந்து வந்தது. கத்தோலிக்க சமயத் தில் தோன்றியுள்ள பொதுப் பிரார்த்தனை இயக்கம் ஒரு நூற்றாண்டு காலமாக இருந்து வருகிறது. ஆக்ஸ்போர்டு இயக்கத்திலிருந்தும், டாம் பிராஸ்பர் குவெராங்கர் நூல்களி லிருந்தும் இவ்வூக்கம் பிறந்தது.

ஏசுநாதரின் திவ்ய உடல் என்ற முறையில் தேவாலயங் கள் பொதுவழிபாட்டில் ஈடுபடவேண்டுமென்று ஆக்ஸ் போர்ட் இயக்கம் வற்புறுத்திற்று; குவெராங்கர் சோலெஸ் மெஸின் துணையுடன் பிரான்சைக் கேந்திரமாகக் கொண்டு, கிரிகோரிய இசைக்கும் இதர பழைய பிரார்த்தனை முறை களுக்கும், குறிப்பாக பெனிடிக்டு மடாலயங்களில், புத்துயிர் அளிக்க பின்னது முயன்றது. போப்பாண்டவர் ஆதரவின் பேரில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இவ்வியக்கம் அமெரிக்காவில் வேரூன்றிற்று. அதனுடைய அமெரிக்க தலைமைக் காரியாலயம் மின்னிசோடா ராஜ்யம் காலேஜ் வில்லா செயிண்ட் ஜான் பெனிடிக்டைன் மடாலயத்தில் இருக்கிறது; 1940ல் அமைக்கப்பட்ட பிரார்த்தனைக் கலைகள் சங்கத்தின் நேர்த்தியான பத்திரிகை "பிரார்த்தனைக் கலைகள்" மூலமாகவும், கத்தோலிக்க கலைச்சங்கத்தின் கத் தோலிக்க காலாண்டு கலைப்பத்திரிகை மூலமாகவும் இவ் வியக்கம் பிரசாரமடைந்து வருகிறது. இந்த இயக்கம் இரண்டு நோக்கங்களை உண்டாக்கி இருக்கிறது. இவைகளில் குழப்பம் ஏற்பட்டால் இரண்டும் தோல்வி அடையும். வழி பாட்டை உன்னதமாக்க பிரார்த்தனைக் கலைகளை வளர்க்க வேண்டும் என்பதொன்று; கத்தோலிக்கக் கலைஞர்களுக்கு ஆதரவு தருவதும், கத்தோலிக்க முறையான கலைவிமர்சனத் தும் ரசனையையும் வளர்க்க வேண்டு மென்பது மற்றொன்று. இந்த இரண்டு நோக்கங்களும் சேர்ந்து சமய நாடகங்களுக்கு —ஏசுநாதர் ஜீவிய நாடகம், ஸ்டேஷன் அவ் தி கிராஸ் நகல் காட்சி, அறநெறி நாடகங்கள், பஜனைவளிகள் ஆகியவற்றிற் குப் புத்துயிர் அளிக்கும் முயற்சியாயிற்று.

வழிபாட்டுடன் பொழுது போக்கு அம்சத்தையும் கலப்பது சரித்திர வரலாற்றின் இடைக் காலத்திய வழக்கம்; அவற்றை இக்காலத்திற் கேற்ப நடத்தி வெற்றி காண முடியாதென்பதில்லை. ஆனால் இப்பொழுது அவைகளைப் பார்த்தால்பரிதாபகரமாக இருக்கிறது; பொழுது போக்களித்து உலகியல் கலைகளுடன் வழிபாட்டையும் போட்டியிடச் செய்வது போல் தோன்றுகிறது. ஏசுநாதர் சற்பிரசாதச்!சடங்கின் அமைப்பிலேயே நாடகத்தன்மை இருப்பது உண்மை; ஆனால் பிரார்த்தனை முறைக்குப் பொருந்திய கலை உருவங்களை நாடக அம்சத்திற்கு இணையப் பொருத்தி, இரண்டும் கெடாமல் சிருஷ்டி செய்வதற்கு ஒரு மேதை வேண்டும். பிரார்த்தனை முறைக்கிணங்க நாடகங்கள் சம்பிரதாயமானவையாக இருக்கும் பொழுதும், நாடக இசைப் பண்புக்கிணங்க வழிபாடு ஆபராவின் (இசை நாடகம்) தன்மையைப் பெறும் பொழுதும் கூட சமயரீதியாகவோ கலை ரீதியாகவோ சிறப்பான உணர்ச்சியைத் தரக் காணோம். கிறிஸ்தவ மதத்தின் ஜீவ நாடியை நாடக மாக்கிக் காட்ட பர்ஸிபாலை எழுதிய வாக்னரைவிடப் பெரிய மேதை தேவை. (நீட்ஷேயினுடையதைவிட சூக்குமமான நையாண்டியாக இதை வாக்னர் கருதியிருக்கலாம்.) டி. எஸ். எலியட்டின் "பிரதான தேவாலயத்தில் கொலை" திறமையான சமய நாடகம்தான்—குறிப்பாக தேவாலயத்தில் நடத்தப்படும் பொழுது; ஆனால் ஆசிரியரே இதை ஒரு வழிபாட்டு முறை என்று கருதமாட்டார். நான் பார்த்த சில ஏசுநாதர் ஜீவ நாடகங்களில் மக்கள் கலை என்ற சிறப்பு கொஞ்சம் இருந்தது. ஆனாலும் பரிதாபகரமான காட்சிகளாகத் தோன்றினவே அன்றி ஏசுநாதரின் ஜீவ நாடகமாகத் தோன்றவில்லை. இருந்தாலும் வேடங்கள், நடனங்கள், முழக்கங்கள், அவலச்சுவை நாடகம், இசை முதலியவற்றை வழிபாட்டுக்கோ சமய விழாவுக்கோ ஆன சாதனங்களாக்க முடியாதென்று கூறுவது தவறு. ஆனால் வாழும் கலாசாரத்தின் உண்மையான உருவங்கள் நாளாவட்டத்தில் புனிதத் தன்மை பெறுவதிலிருந்து இச்சடங்கு முறைகள் உருவாகவேண்டும்; நிரந்தரமான கலா மதிப்பைப் பெற்றவைகளானாலும் வழக் கொழிந்த பிராசீன முறைகளைப்

புகுத்துவதால் பயனில்லே, கற்பனே உணர்ச்சி ரீதியான வழி பாட்டைக் கண்டித்து டீன் ஸ்பெர்ரி கூறுகிறுர்.

செயற்கை முறைகளேக் கண்டித்தெழுந்த எதிர்ப்பு அன்றும் இன்றும் நியாயமானதுதான். ஆனல் இந்த சிக்கலேத் தீர்க்க வரலாற்றுஇடைக்கால முறைகளேயும் லத்தீன் சூத்தி ரங்களேயும் திரும்ப நாடுவது கைக்கெட்டிய எளிய யுக்தியா கத் தோன்றிய போதிலும், பயனளிக்கக் கூடியதல்ல. இம் மாதிரி இசையைப் பொறுக்குவதில் நமது இசைரசனேயை உயர்த்த விரும்பும் கல்வி நோக்கு ஏதேனும் இருக்கிறதோ என்ற சந்தேகம் உண்டாகிறது. அபிவிருத்தி கொஞ்சம் கொஞ்சமாகத்தான் ஏற்படவேண்டும்; அது திடீரென்ற மன மாற்றம் அல்ல. நாம் ஏற்கனவே எண்ணுவதையும் உணர் வதையும் எடுத்துக்காட்டவல்ல முறைகளேத் தேடிக் கொண் டிருக்கும் பொழுது நமக்கு அறிவூட்டி அபிவிருத்தி செய்யும் கல்வி நோக்கு நம்முடைய தேட்டத்தை மாற்றி விட்டால், ஏற்படும் விளேவில் வித்தியாசம் ஏற்படத்தான் செய்யும். இசை இன்ப வசதி பெற்றிருக்கும் தேவாலயத்திற்கு நான் போவதால், என் இசை ரசனே அபிவிருத்தி அடையலாம். ஆனல் என் இசை ரசனேயை உயர்த்திக் கொள்வதற்காக வென்று தேவாலயத்திற்கு நான் போவதில்லேயே!''

எந்த அளவுக்கு வேண்டுமானுலும் எல்லாக் கலேகளேயும் சமயம் பயன்படுத்திக் கொள்ளலாம்; ஆனுலும் வழிபாடென் னும் கலேயின் பயன் தனித் தன்மை உடையதுதான். மொத் தத்தில் வரலாற்று இடைக்காலத் தன்மை கொண்டது தான் கத்தோலிக்க சடங்குகள் என்று கருதுவோர்கள் கூட வழி பாட்டு முறையில் இது தான் சிறந்த முறை என்று ஏற்கும் அளவிற்குக் கத்தோலிக்கப் பிரார்த்தனே இயக்கம் வெற்றி அடைந்திருக்கிறது. வழக் கொழிந்த பிராசீன முறைகளில் பற்று கொள்ளும்படி பிரார்த்தனேக் கலே செய்து விடுகிற தென்பது இதிலுள்ள ஆபத்து; போப்பாண்டவர் கட்டளே 'மீடியேடர்டீ'யின் ஒரு நோக்கம் வழக்கொழிந்த வைகளேயும், முற்காலத்தவைகளேயும், (உதாரணமாக, மேஜையை தேவா லய பலி பீடத்திற்குப் பதிலாக உபயோகிப்பது) பிரதேச பாஷையையும், உபயோகிக்கக் கூடாதென்று கண்டிப்பது தான். மற்ருெரு விதத்தில், இம்மாதிரியான விதிகள் சம்பிர

தாயங்களைத்தான் காப்பாற்றும்; பிரார்த்தனைக் கலையைக் குறிப்பிட்ட எல்லைக்குள்தான் வளரவிடும். 'புனிதப்படுத்துதல்' என்னும் கலை, அதன் தன்மை காரணமாக, உலகியல் கலைகளைவிட அதிகக் கட்டுப்பாடுகளுக்குள்பட்டது; ஏற்கெனவே உண்மையில் புனிதமாயிருப்பதற்கு அது மரியாதை காட்டியாக வேண்டும். இதன் காரணமாக மக்கள் கலை, கிரிகோரியன் இசையில் சபையோர் பங்கெடுத்துக் கொள்ளுதல், ஜனரஞ்சகமான விழாக்கள், ஒன்பது தின பக்தி, இதர சம்பிரதாயமான முறைகள் ஆகியவை முக்கியத்துவம் பெற்றன.

இந்த சந்தர்ப்பத்தில், சுவிசேஷப் பிரசார, சீர்திருந்திய தேவாலயங்களில் தோன்றியுள்ள அமெரிக்க பிரார்த்தனை இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். 1870-ம் வருஷவாக்கில் மர்செர்ஸ்பர்க் சித்தாந்த சம்பந்தமாக (மர்செர்ஸ்பர்க் அகாடெமி, பென்சில் வேனியா) இவ்வியக்கம் எழுந்தது; பிளிமத் சகோதரர்களின் பழக்கத்தினால் இவ்வழியை அறிந்து கொண்ட பிலிப் ஸ்காப்பினியிடமிருந்து இந்த இயக்கம் ஆதர்சம் பெற்றது. நெவின்சும், ஸ்காப்பும், மர்செர்ஸ்பர்க் கோஷ்டியைச் சேர்ந்த பிறரும் உருவாக்கிய பொதுப் பிரார்த்தனை முறை முதலில் உள்ளூர் விஷயமாகவே இருந்தது; சென்ற இருபது ஆண்டுக்குள் அது புத்துயிர் பெற்று விட்டது; சுவிசேஷப் பிரசார, திருந்திய தேவாலயங்களில் பிரார்த்தனை முறையையும் உசுப்பிவிட்டது; அவைகளைத் தாண்டியும் விரிவடையக் கூடும்.

குருமார்களால் பாலிக்கப்படுகிற தேவாலயங்களின் ஹைசர்ச் இயக்கமும் பிரார்த்தனை முறை இயக்கம்தான்; வழிபாடென்பதும் சமய சம்ஸ்காரம்தான் என்னும் கருத்தை அமெரிக்காவில் உள்ள பிராடெஸ்டெண்டு தேவாலயங்கள் திரும்பக் கொள்ளும்படி செய்ததிலும் இதற்குப் பங்குண்டு. இவ்வியக்கத்தின் அமெரிக்க வரலாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில், பிஷப் ஹோபார்ட் நாளில் தொடங்குகிறது. ஆனால் ஆக்க ரீதியான மாறுதல்களின் தேவையை பிரார்த்தனைப் புத்தகத்தைத் திருத்தி அமைக்க நியமிக்கப்பட்ட கமிஷன் 1916-ல் வற்புறுத்திய பிறகுதான் பிராட் சர்சுக்காரர்களும், ஹைசர்ச்சுக்காரர்களும் ஒத்துழைக்க ஆரம்பித்தனர். இந்தக் கூட்டுறவு 1928-ம் வருஷத்தில் பிரார்த்தனைப்

புத்தகத்தை உருவாக்கியதல்லாமல் சித்தாந்தத்தில் தாராள கத்தோலிக்கப் போக்கையும் உண்டாக்கிற்று; சரித்திர விமர்சன முறையில் நவீன வழியையும், வழிபாட்டு முறையில் சடங்கையும் ஏற்றுக் கொண்டு விட்டதாக இதற்குப் பொருள். கிறிஸ்தவ மதத்திற்குப் பொருந்தாத பகுதிகளைப் பொது வழிபாட்டிலிருந்து விலக்கும் நோக்கத்தோடு பிரார்த்தனைகளைச் சோதித்து புதிய பிரார்த்தனை நூலை உருவாக்கினர். ஒரு காலத்தில் பிராடெஸ்டெண்டுகள் வெறுத்த தள்ளுபடி ஆகமம் பொறுக்கி எடுக்கும் கட்டத்தில் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டது. திருமுகங்களிலும் சுபவார்த்தைகளிலும் கூட தாராளமாகக் கைவைத்தனர்; பாடத்தைத் திருத்தினர். கத்தோலிக்க தினசரிப் பிரார்த்தனை முறையான விமோசனம் பாப ஒப்புதலுக்குப் பிறகு நுழைக்கப்பட்டது; 'இல்வாழ்வை விட்டகன்ற' ஊழியர்களுக்கான பிரார்த்தனையும் இணைக்கப்பட்டது; அவற்றில் ஞானிகளுடன் கொள்ளும் அந்நியோன்ய உறவுச் சாயல் திட்டமாகப் புலப்பட்டது. அதே சமயத்தில் "தெய்வீக சற்பிரசாதம்" என்ற மகுடத்தை "தெய்வீக அந்நியோன்யம்" என்பதற்குப் பதிலாக வைக்க வேண்டும் என்ற கத்தோலிக்கக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அதே போல "பிராடெஸ்டெண்டு எபிஸ்கோபல் தேவாலயம்" என்ற சொல் தொடரில் "பிராடெஸ்டெண்டு" என்ற வார்த்தையை எடுத்துவிட வேண்டும் என்று செய்யப்பட்ட பல முயற்சிகள் நிராகரிக்கப்பட்டன. ஆனால் தங்களுடைய கத்தோலிக்க ஆர்வத்தில் பொது அருள் வழிகளையும் சம்ஸ்காரங்களையும் ஆதரிப்பதில் சில எபிஸ்கொபேலிய குருமார்கள் ரோமன் கத்தோலிக்கர்களையும் மிஞ்சி விட்டனர். தியோடோர் வெடல் எழுதுகிறார் : "தெய்வம் இனி தனிச் சொத்தல்ல, பொது, தேவாலயமும் தெய்வமும் இது முதல் பிரிக்க முடியாதவை......இத்தகைய கூட்டுச் சமுதாயத்தைத் தவிர தெய்வத்தின் பரிசெதுவுமில்லை."

வழிபாட்டிலும் தேவாலய நிர்வாகத்திலும் உள்ள தேவதூதர் அதிகாரத் தன்மையை குருமார்கள் பைபிள், சித்தாந்தம், சம்பந்தப்பட்ட நவீன தாராளவாதத்துடன் இணைத்தது. பிராடெஸ்டெண்டு பிரிவுகளின் குருமார்களுக்கு நல்ல ஆசாக அமைந்து விட்டது; கிறிஸ்தவ மரபின் புலப்பாடுதான்

பொதுப் பிரார்த்தனை முறை என்ற ரீதியில் அவர்கள் அதை வரவேற்றனர்; சன்னதத்தைப் போன்ற அதிகாரமோ தீர்க்க தரிசனமோ இல்லாத சாதாரணக் கருத்துக்களை தேவாலய மேடையில் கூறுவதற்கான சுதந்திரத்தை பிரார்த்தனை முறை அளித்திருக்கிற தென்ற முறையிலும் வரவேற்றனர். இதன் மூலம் கடவுளின் வாக்கு புறநிலை ரீதியான பெருமையையும் பிரமாண அதிகாரத்தையும் பெறுகிறது; சாதாரண பிரசங் கங்களில் இந்தத் தன்மைகள் தோன்றுவதில்லை. இப்பிரார்த் தனைச் சூழ்நிலையில் சமூகக் கொள்கைகளையும், நுழைக்க முயற்சி நடந்திருக்கிறது; போப்பாண்டவரைவிட தீவிர கத் தோலிக்கத் தன்மை என்றுதான் இதைக் கூறவேண்டும். இவ் விதம் 1939-ல், குருமார் நிர்வாக தேவாலயத்தில், குருமார் கள், மக்கள் அடங்கிய கத்தோலிக்க காமன்வெல்த் சங்கம் அமைக்கப்பட்டது; உலகவியல் பொருளாதார இயக்கங் களுக்குக் கத்தோலிக்கப் பகுப்பு முறையைப் பொருத்திப் பார்ப்பது அதன் நோக்கம்.

இதற்கிடையில் நியமக்காரர்கள் தேவாலயம் தனக்கு கந்த பிரார்த்தனை முறைக்குப் புத்துயிர் அளித்துக் கொண்டி ருந்தது. தேவாலய நிர்வாகத் துறையில் தூதர் வார்சு முறை என்ற கொள்கையை மறுத்து, பகிரங்கமான ஜனநா யக முறையை ஏற்றது. அதே சமயத்தில், வெஸ்லீகளின் பூர் வீக நியம முறைகளை நோக்கிச் செல்லப் பயந்த முயற்சிகள் சில செய்தனர். 1916-ல் கூடிய மகாநாடு சபையார் அந்நி யோன்ய ஆராதனையில் அதிக பங்கெடுத்துக் கொள்ள வேண்டு மென்றும், விதிகளுக்கு இன்னும் கடுமையாக இணங்க முயல வேண்டு மென்றும் வற்புறுத்திற்று. "ஏசுநா தரின் இராச் சாப்பாடு" என்பதைவிட "அந்நியோன்னியம்" என்ற சொல்லை அதிகமாக 1932-ல் அமுலாக்கினர்; 'ஏசுநா தர் மூலம் தெய்வீகத் தன்மையில் பங்கு பெறுதல்' என்று அச் சடங்குக்கு விளக்கம் கூறினர். 1944-ல் தேவாலயங்களுக்கும் குடும்பங்களுக்குமான வழிபாட்டு நூல் பிரார்த்தனை வேதத் துக்கு இணக்கமான முறையில் விரிவு படுத்தப்பட்டது. இதற் கிடையில் பெரிய தேவாலயங்களின் இசையும், உடையும், ஆராதனையும் வர வர சடங்குகளாக வளர்ந்தன.

தற்காலத்தில் ரோமன் கத்தோலிக்க தேவாலயங்கள் வழிபாட்டை சுவிசேஷ அழுத்தத்துடன் வற்புறுத்துவதும், சுவிசேஷப் பிரசார தேவாலயங்கள் பிரார்த்தனை முறையை வற்புறுத்துவதும் விநோதமான முரண்பாடாகத் தோன்று கிறது. ஒன்றைப் பார்த்து மற்றொன்று அறிவு பெற்று வருவ வதாக இருக்கலாம்; அல்லது இருபிரிவினரும் அமெரிக்க மக்க ளின் ருசிக்கு இணங்கி விட்டதாகவும் இருக்கலாம். ஆனால் வைதீகமான சம்பிரதாய தென்பாப்டிஸ்டு சமுதாயத்திற்குள் பிரான்ஸீசிய மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் "திறந்த வெளி தூதர்," "சான்றுச் சங்கம்," "மோடார் தேவாலய பீடம்," "ஏசுநாதரின் கத்தோலிக்கப் பிரசாரகர்கள்," என்ற பெயர்கள் தாங்கிய டிரக்குகளில் திடீரென்று நுழைவதைக் கண்டு சரித்திர ஆசிரியன் சிரிக்கத்தான் செய்வான். அவர் களில் சிலர் மார்க்ஸ் வழியினின்று ஏசுநாதர் மார்க்கத்திற்கு மாறியவர்கள் என்று தங்களைப் பற்றிக் கூறிக் கொள்கிறார் கள். தெருமுனைக் கூட்டம் போடுகிறார்கள்; பிரசார அறிக் கைகளை வினியோகம் செய்கிறார்கள்; உண்மையான செய்திக் குப் பசி கொண்டலையும் ஆன்மாக்களுக்குச் செய்தி சொல்லு கிறார்கள். பைபிள் கால எளிமையை நியமக்காரர்களுக்கு நினைவூட்டத்தக்க நாட்டுப்புறப் பிரசங்கங்களை கத்தோலிக்க தேவாலயத்தில் நான் கேட்டிருக்கிறேன். அதே மாதிரி காதிக் கட்டிட அமைப்பு கொண்ட பாப்டிஸ்டு பிரதான தேவாலயத்தையும் கத்தோலிக்கர் 'குடியேற்ற' பிரசங்க விடு தியையும் அருகருகே காணும் பொழுதும் சரித்திராசிரியன் சிரிக்கத்தான் சிரிப்பான்.

மௌன வழிபாடு பொது அனுஷ்டானத்தின் ஒருவகை யாகச் செல்வாக் கடைந்து வருகிறது. கடவுளுக்கு முன்பு மௌனமாயிருத்தல் என்னும் குவேக்கர் முறை அவர்கள் மண்டலத்தைத் தாண்டி வளர்ந்து வருகிறது. குறிப்பாக, கல்லூரிகளில் கலப்பு ஆராதனைகளும், சம்பிரதாயமான சடங்குகள் இயலாத போது சிறிய மௌனப் பிரார்த்தனையும் உபயோகப்படுத்தப்படுகின்றன. பிரிவுபட்டு நிற்கிறோ மென்றோ உணர்ச்சி இல்லை என்றோ இவற்றிற்குப் பொருள் கொள்ளக் கூடாது; வாக்குக்கும் உருவத்திற்கும், இசைக்கும் எட்டாத நிலையில் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மனத்தின்

நிலை இருக்கிற தென்பதை ஒப்புக் கொள்வதாகக் கருதலாம்; தெய்வீக சல்லாபத்திலும் மற்ற வகையிலும் ஆழ்ந்த அனுப வமும் மௌனமும் இணைந்தே காணப்படுகின்றன. ஆனால் மௌனத்தை நாடுவதில் அபாயமும் இருக்கிறது. டாக்டர் பெலிக்ஸ் ஆட்லர் குறிப்பிடுவது போல: "தங்கள் சிந்தனை விரிவின் காரணமாக உயர்ந்த சிந்தனையாளர்கள் மௌன மாக இருக்கலாம்; ஆனால் கருத்தைப்பற்றிய வரையில் மௌனத்தையே உலகின் விதியாக்கினால் அக்கருத்து சீக்கிரம் அழிந்தே போகும்."

## சமயக் கட்டிடக் கலையிலும் இசையிலும் மாறுதல்கள்

தேவாலயக் கட்டிடக் கலையில் தோன்றியுள்ள மாறுதல் கள் வழிபாட்டுக் கலையின் பயிற்சியைத்தான் பிரதிபலிக்கின் றன. சில மாறுதல்களுக்கு சமயத்துடன் எவ்வித சம்மந்த மும் இல்லை; அவை கட்டிடக் கலைக்குரியவை. சமயக் கட்டி டங்களில் நவீனப் பொருள்களும், கட்டிடக்கலை மோஸ்தர் களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன; ஆனால் பொதுவாக, புனிதமான பழைய வகைகளே சமயக் கலையில் நீடிக்கும் நவீனக் கருத்துக்களையும் நவீனக் கட்டிட மோஸ்தரையும் ஒரே காரணத்திற்காகத்தான் எதிர்க்கின்றனர் — அவநம் பிக்கை கொண்டவை என்பதற்காக. ஆனால் சில சிறந்த நவீன தேவாலயங்கள் சென்ற இருபது ஆண்டுகளில் கட்டப் பட்டிருக்கின்றன. ரெக்ஸ்போர்ட் நியுகோம்பு கூறுகிறார்:

1900-ஆம் ஆண்டு காலிபோர்னியா மாகாணம் பர்க்லீ யில் ஏக தெய்வ வாதிகளுக்காக பர்னார்ட் மேபெக் தனித்த, புதுமையான ஒரு தேவாலயத்தைக் கட்டினார். ஆறேழு வருஷத்திற்குப் பிறகு ஓக்பார்க் ஏக தெய்வக் கோயிலை பிராங்க் லாயிட் ரைட் கட்டினார். இதற்குப் பிறகு ரைட்டும் அவருடைய மாணவர்களான புரூஸ் காப்பும் பாரிபிர்னும் நவீன புது மோஸ்தர் தேவாலயங்களைக் கட்டுவதில் சிறந்த பணி புரிந்திருக்கின்றனர். நவீன மோஸ்தரில் அமைக்கப் பட்ட தேவாலயங்களில் சிறந்தவை: ஓக்லா மாகாணம், டுல் சாவில் காப் கட்டிய போஸ்டன் சாலை நியமக்காரர் தேவா

லயம் (1929); டுல்சா, மன்னர் ஏசுநாதரின் தேவாலயம் (1930), கன்சாஸ் நகரம், செயின்டு பிரான்ஸிஸ் ஸேவியர் (1948), செயின்டு தாமஸ்மூர் (1948) அயோவா நகரம், பிர்ஞல் கட்டப்பட்டவை; இண்டியான மாகாணம் கொலம்பசில் எலியெல் சாரி னென்ஞல் கட்டப்பட்ட ஏசுநாதர் தேவாலயம் (1940); பென்சில் வேனியா மாகாணம் லாட்ரோபேயில் எமிலி பிரே கட்டிய செயின்டு வின்சென்டு பிரதம மடாலயம் 1948.

சமயத்தைச் சீர்திருத்திக் கொண்டதால் ஏற்பட்ட குறிப்பான மாறுதல்கள் கட்டிட மோஸ்தரில் தெரிகின்றன. நூற்ருண்டின் ஆரம்பத்தில் பெரிய தேவாலயங்களில், சபையாரின் தேவைகளுக்கான—கல்வி, விளையாட்டு, சமூகசேவைக்கான—இடங்கள் வேண்டியிருந்தன. அவற்றின் விளைவாக ஒரு சிறந்த போதகர் கூறியதுபோல விஞேதமான கட்டிடங்கள் எழுந்தன. "தேவாலயம் என்ற பெயருடன் உலாவும் அழகிய மோட்டார் பட்டறைகள்; சமூகத்தின் கலாசாரத்திற்கும் உலகியல் தன்மைக்கும் தேவாலயம் சரணடைந்து விட்டதற்கு இவைபிற சான்ருக விளங்குகின்றன." இக் கட்டிடங்களின் முக்கிய அம்சம்—நாடக அரங்கத்தைப் போன்ற சபா மண்டபம்தான். வளைந்த இட வரிசைகளுக்குப் பதிலாக மேடையை நோக்கும் வளைந்தபெஞ்சுகள்; மேடையில் பிரசங்க பீடமும் மூன்று நாற்காலிகளும்; இசைக் கருவியும், இசைக் குழுவினர் இடங்களும், (தொப்பி வரிசை அளவுக்குத் திரையிடப்பட்டது); பிரசங்கபீடத்திற்குப் பின்ஞே கீழோ சிறிய பலிபீடம் அல்லது இராப்போஜனபீடம். சபாமண்டபத்தைச் சுற்றி வழுக்கி விலகும் கதவுகள்; அவையே ஞாயிறு தின வகுப்புக்களுக்கான தடுப்பு; கூட்டம் அதிகமாஞல் கதவுகளை விலக்கிக் கொள்ளலாம். கட்டிடத்தின் அடிப்பாகத்திலோ, மேலோ பின்புறத்திலோ அல்லது மூன்றிலுமோ கிளப் அறைகள், சமையல் அறை, உணவருந்தும் அறை, விளையாட்டிடம், அரங்கம், காரியாலயம் முதலியன. இம் மாதிரி கட்டிடங்கள் இப்பொழுது வழக்கொழிந்து விட்டன. ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கும் இவை தனியே இருக்கும்; கடவுளாராதனைக்கான பகுதி; சேகரத்தார் விடுதி அல்லது அதற்கு ஈடான பகுதி; குருமார் போதகர்கள் ஜாகைப் பகுதி. கட

வுளாராதனைக்கான பகுதி வெளிப்படையாக, கடவுளை நினை ஆட்டக் கூடிய லக்ஷணத்தைப் பெற்றிருப்பதன்றி சபை யாருக்கும் வசதியாகிறது. காதிக் மோஸ்தர் அமைப்பு, குறிப்பாக பிராடெஸ்டெண்டுகளுக்கிடையே, பொதுஆஸாகி விட்டது. சீர்திருந்திய யூத மதத்தாரிடையிலும் அது புகுந்து விட்டது; நியுயார்க் ஐந்தாவது சாலையிலுள்ள எம்மானு வேல் கோயிலையும், பென்சில்வேனியா பிரின் அதீனிலுள்ள ஸ்வீடன்பர்க் சமுதாயத்தையும் பார்க்கவும். சமீபத்தில் இரு பது சிறந்த காதிக் மோஸ்தர் கோயில்களாவது கட்டப்பட்டி ருக்கின்றன. சமீப காலத்திய காதிக் மோஸ்தர் புத்துயிர் இயக்கத்திற்குத் தலைவர் ரால்ப் ஆடம்ஸ் கிராம்—கருத்தும் கட்டிடக் கலையும் அவரிடமிருந்து தோன்றியவை. இங்குமங் கும் ரோமன் கலை அமைப்பு வகையும் பைசான்டைன் அமைப்பு வகையும் காணப்படுகின்றன. நியூயார்க்கிலுள்ள நியமக்காரர் ஏசுநாதர் தேவாலயம் குறிப்பிடத் தக்கது. கிறிஸ்தவ வரலாற்றில் பவித்திர மாக்கப்பட்டிருக்கும் மோஸ் தர்களுக்குக் கட்டிடக் கலை திரும்பியது பிரார்த்தனை முறை இயக்கத்தின் ஒரு அம்சம்தான். பலிபீடம், திறந்தபீட ஸ்தா னம், வண்ணக் கண்ணாடிகள், சிற்பம் ஆகியவற்றை, பிரார்த் தனை முறையை அதிகம் ஏற்காத தாராள வாதிகள்கூட, ஏற்றுக் கொண்டனர்.

இத்துடன் பிரார்த்தனை முறை இசையிலும் புத்துயிர் இயக்கம் தோன்றிற்று. நாலடிச் செய்யுளுக்குப் பதிலாக உண்மையான இசைப் பாட்டுகளும், புனிதமான இசை களுக்குப் பதிலாக உலகியல் சாயலுள்ள ஆபரா இசையும் உபயோகப்படுத்தப்பட்டன. போப்பாண்டவர் பத்தாவது பயஸ் 1903-இல் "மாடு பிரோப்பிரியோ" என்று கட்டளை இட்ட இசை லக்ஷணத்திற்கு—உண்மைக் கலையாகவும், தெய் வீகமானதாகவும், சர்வ வியாபகமானதாகவும் இருக்க வேண் டும்—பிராடெஸ்டெண்டுகள், கத்தோலிக்கர்கள் இசை நெருங்கத் தொடங்கிவிட்டது. தெய்வீக இசை என்ற தன் மைக்கு அடங்கிய இசை அம்சம்தான் இருக்க வேண்டும்; அதைக் கேட்பவர் மனத்தில் நன்மையைத்தவிர வேறெதும் தோன்றலாகாது. சராசரி அமெரிக்க இசைக் குழுவினர் தர மாகப் பாடுகிறார்கள் என்று சொல்ல முடியாது; ஆனால்

சடங்குகளுக்குத் தக்க இசை அமைந்தால், நன்றாகவே இருக்கும் புதிய பிரார்த்தனைகளில் வெற்றுணர்ச்சியான பாடல்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பேராசிரியர் ஆர்ச்சிபால்ட் டி. டேவிசன் மேற்பார்வையில் ஹார்வார்ட் பிரார்த்தனைகளும் ஹார்வார்ட் இசைக் குழுவினரும் தூய, கிரிகரி லக்ஷியத்தைப் போன்ற தொரு லக்ஷியத்தை அமைத்துக்கொண்டு விட்டார்கள். லக்ஷியங்கள் வெகு உன்னதமாகவும் போலி உணர்ச்சிக்கு எதிரிடையாகவும் இருப்பதால் போலி உணர்ச்சியே பெரிதும் கொண்ட மக்களிடையே அதிக செல்வாக்குப் பெறவில்லை. ஆனால் சர்வவியாபகமான, புறநிலை இசைப் போக்குக்கு இவை ஆரம்பமாகின்றன.

இதற்கிடையில் ஸ்தாபன ரீதியான சமயத்தை வெறுக்கும் சமயப் பிரிவுகளும் மார்க்கங்களும் மற்றொரு கோடிக்குச் சென்றுவிட்டன. குறிப்பாக பெரிய நகரங்களில் காளான்கள் போல் ஸ்டோர் முகப்பு தேவாலயங்கள் பெறுகிவிட்டன; இங்கு கிறிஸ்தவ சமயப் பிரசார நிலயமும் கோயிலும் சம்பிரதாயப்படி இயங்குகின்றன. இங்கு தேவப் பிரார்த்தனைகளும் உணர்ச்சிகரமான சமயச் சிந்துகளும் முழங்குகின்றன. முழு கிறிஸ்தவ வேதப் பிரசாரகர்கள் அணிமிகுந்த, உணர்ச்சி மிகுந்த பேருரைகளை நிகழ்த்துகின்றனர்.

இந்த நூற்றாண்டில் நடைபெற்றிருப்பதைச் சுருக்கிக் கூறினால் நிலைமை இதுதான்: கவர்ச்சியின்றி இருந்த வழிபாட்டு முறை உயர்ந்தும் விட்டது, கெட்டும்விட்டது. இக் கலா துருவங்களுக்கு அடிப்படையான வகை பேதம் உண்டா என்று நிர்ணயிப்பது கடினமான காரியம்; இது கலை, கல்வி ஆகியவற்றின் பொது சமூக இயலைப் பற்றிய பிரச்னை.

புறநிலை உண்மையையும் உணர்ச்சியையும் தெளிவாகப் பிரித்துக் காட்ட இயலாது. உதாரணமாக, புதிய பிராடெஸ்டெண்டு பிரார்த்தனைகளில், குழந்தைகளுக்கான பிரிவில், அமெரிக்க சாகித்திய கர்த்தர் ஜான் ஹென்ரிஹாப்கின்ஸ் 1940-இல் இயற்றிய கீதமொன்றிருக்கிறது; குஷியான மெட்டில் அமைந்த அந்தப் பாடலை வலுவுடன் பாடவேண்டுமென்ற குறிப்பும் இருக்கிறது. அது மக்களிடையே மிகவும் பரவியுள்ள பாட்டு; அமெரிக்கர்களின் சரசமான ஜனநாயகத் தன்மை கிறிஸ்தவச் சாயலுடன் பாட்டில் காணப்படுகிறது.

*இது சம்மந்தமாக எனக்கொன்று நினைவுக்கு வருகிறது. ஆரோகணத் திருநாளை அடுத்த ஒரு ஞாயிறன்று காலை பிரார்த்தனை சம்மந்தமாக குருமார் ஒருவர் குழந்தைகளுக்காக நிகழ்த்திய உரையைக் கேட்டேன். சமயப் பஞ்சாங்கப் படி ஆரோகணத் திருநாள் வெகு முக்கிய தினமென்று விளக்கிவிட்டுப் பேச்சை இவ்விதம் முடித்தார். "குழந்தைகளே! ஆரோகணத்திருநாள் போதிப்பதென்ன வென்றால், மேலே இடம் எப்பொழுதும் தயாராக இருக்கிற தென்பது தான்." இந்த மாதிரி நவீனத்தை மனத்தில் கொண்டுதான் போப்பாண்டவர் தம் கண்டனத்தைத் தெரிவித்தார். ஆனால் கன்னிமேரியின் உடல் கடவுள் சந்நிதானத்தில் தன் ஆன்மாவுடன் இருக்க வேண்டியது அவசியமென்று போப்பாண்டவர்கள் விளக்கம் தரும்பொழுது, சொர்க்கத்தில் உள்ள உடல்களைப்பற்றி மர்மமாக விட்டு விடுகின்றனர்!*

## வழிபாட்டைப் பற்றிய கொள்கைகள்

*பிரார்த்தனை முறை இயக்கங்கள் (அபிநயமாக இல்லாதிருக்கும் வரையில்) பொது வழிபாடு, சடங்குகள், ஆகியவற்றிற்கு எதிர்ப்புக் காட்டிய மக்களின் மனப்பாங்கை வெகுவாகத் திருத்திவிட்டன. சடங்குகளில் ஆழ்ந்த பொருளிருந்தால், அறிவில்லாதவர்களுக்கும் அயர்ந்தவர்களுக்கும் மூடுதிரையாகும் தேவை அவற்றிற்கு இராது. அமெரிக்க கலாசாரத்தை விட்டு மற்றொரு குருட்டெண்ணத்தையும் இவை விரட்டி வருகின்றன; கடவுள் வழிபாடென்னும் பொது சேவையைவிட தினசரி வேலை என்றும் தொண்டு கடவுள் வழிபாடாகும் என்ற எண்ணத்தை இவை அகற்றி வருகின்றன. எனது நண்பர் ஒருவர் உழைப்பென்னும் ஆராதனைப்பற்றி பிரசாரம் செய்து வருகிறார். பிரார்த்தனையின் தத்துவத்தை நவீன மன இயல் சாத்திரம், மதிப்பீடுகள் ஆகியவற்றைக் கொண்டு விளக்கி வரும் தாராளவாதி ஜியார்ஜ் ஆல்பர்ட் கோ சொல்வதாவது. ஞாயிற்றுக்கிழமையைப் போல திங்களும் புனிதமான நாள்தான்; ஏனென்றால் நம்முடைய நேரம் முழுவதும் கடவுளுக்குத் தான் சொந்தம். கையாலோ மனத்தாலோ வாழ்வின் கடமைகளை ஆற்றுவது*

பிரார்த்தனையைப் போன்ற அவ்வளவு பக்தி மிகுந்த காரியம் தான்.'' டீனஸ்பெர்ரியும் இதைத்தான் கொஞ்சம் மாற்றிச் சொல்கிறார்.

''வாழ்வின் உழைப்பினின்று வழிபாட்டைப் பிரிக்க முடியாவிட்டாலும், அதை ஜீவதயா உதவிகளினின்று வேறு படுத்திப் பார்க்க முடியும். கடவுளைத் தந்தை என்று நம்புவ தால்தான் மனிதவர்க்க சகோதரத்துவம் என்னும் விளைவு ஏற்படுகிறதென்றும், இந்தக் கருத்தில்லாவிட்டால் அந்த நம்பிக்கைக்கு உயிரில்லை என்றும் வீண் என்றும் கிறிஸ்தவ சமயம் கூறுகிறது. ஆனால் கடவுளைத் தந்தை என்று கொள் வது பாவனைதான்; உண்மையல்ல. ஆகவே அந்தக் கருத் தைப் பயமின்றி தள்ளிக் கூட விடலாம் என்று இதற்குப் பொருள் கொள்வது சரியல்ல. இதற்கு மாறாக, கடவுளைத் தந்தை என்று சதா போற்றி வருவதைப் பொறுத்துத்தான் மனித வர்க்க சகோதரத்துவம் என்னும் மனப்பாங்கு அமையும் என்பது கிறிஸ்துவ சித்தாந்தம் கடவுளை வழிபடு வதை மக்கள் நிறுத்தி விட்டால் தோழமைக்கான முக்கிய தூண்டுதல் போய்விடும்; ஏனென்றால் பரஸ்பர நன்மை, உயர்ந்த பட்சமான மக்களுக்கு உயர்ந்த பட்சமான நன்மை அளிப்பதற்காகச் செய்துகொள்ளப்பட்ட சமூக ஒப்பந்தம் ஆகிய கருத்துக்களால், தந்தை என்று கடவுளைக் கருதுவதால் தானாகப் பிறக்கும் நெகிழ்ச்சி போன்றது உண்டாகாது. பிறந்த இடம் என்று ஜீவன் கருதக்கூடிய இடத்தை அமைத்து, கடவுளே உலகின் தந்தை என்று மக்கள் எப்பொழு தும் கருத தேவாலயம் வசதி செய்வதால், வேறெதும் செய்யா விட்டாலும் கூட, அதுவே சமூகத்தாருக்குச் செய்யக் கூடிய மகத்தான சேவையாகும்; சமூகத்திற்கு அது செய்யும் வேறெந்தத் தொண்டும் இதற்கீடாகாது.''

உழைப்பை அடுத்து வழிபாடு, வழிபாட்டை அடுத்து உழைப்பு என்ற கொள்கையைப் பொதுத் தத்துவமாகவும், வழிபாட்டுக்கான வாதமாகவும் வில்லியம் எர்னெஸ்டு ஹாகிங் பூரணமாக விளக்கியிருக்கிறார். ''மனித அனுபவத் தில் கடவுள் என்பதன் பொருள்'' (1912) என்ற பெயரு டைய புத்தகத்தில் மெய்ப்பொருள் அனுபவத்திற்கு அவர் புதிய விளக்கம் தந்திருக்கிறார். மெய்ப்பொருள் அனுபவத்தை

வழிபாட்டுடன் பிணைத்திருக்கிறார். சாதாரண நடைமுறை வாழ்வில் நாம் விவரங்களை, பகுதிகளைக் கவனிக்க வேண்டியி ருக்கிறது. வழிபாட்டின் போது, பகுதிகள் என்பதில் தொக் கியிருப்பதும், உழைப்பின் போது கவனத்திற்கு வராதது மான முழுமைக்கு மனம் திரும்பி விடுகிறது" என்று அவர் கூறுகிறார்.

"நடை முறையில் ஒரு பகுதியையோ பகுதிகளையோ கவனிக்கும் பொழுது அம் முயற்சிக்குத் தோல்வி தரும் தன்மை ஒன்று அதிலேயே இருப்பதும், பகுதிகளை முற்றும் விட்டு விலகி (மதம் இதைத்தான் கோருகிறது) முழுமையை-பகுதிகளின் மொத்தத்திற்கும் மேற்பட்ட முழுமையை— நினைக்கும்படி செய்வது தெரிகிறது. முழுமையைக் கவனிக் கும் பொழுதும் இதே தோல்வி தரும் தன்மை அதிலும் காணப்படுகிறது; பகுதிகளை நோக்கி மனம் ஓடுகிறது; ஆனால் அப்பொழுது தான் முழுமையைப் பற்றிய வெற்றி கிட்டு கிறது. எனவே நம்முடைய இம்மை வாழ்வு இவ்விரண்டுக்கும் இடையே இயங்கியாக வேண்டும்......

நமக்குள்ளிருக்கும் ஆன்மா இதில் சம்மந்தப்படா விட் டாலும் கூட, நமக்கிருக்கும் எல்லை காரணமாக, நம்முடைய ஜீவனால் இந்நிலையை மீறிச் சுதந்திரமாகச் செல்ல முடிவ தில்லை. ஆசையும் கடமையும், அறிவு பூர்வமாகச் சுதந் திரத்தைப் பயன்படுத்துவதும், சுருக்கமாகக் கூறினால் எல்லா வேலைகளும் தாமாகவே உள் எதிர்ப்பு அல்லது ஆன்மீகத் தடையை உருவாக்கி விடுகின்றன.

கற்பிதமான அகம் தன்னுடைய எண்ணங்களோடும் பொருள்களோடும் எந்த அளவுக்கு ஒன்றுகிவிடுகிறதோ அந்த அளவுக்கு முழுமை என்னும் நோக்கை இழந்து விடுகிறது; பொருள்களுக்கு மதிப்புத் தருவதெல்லாம் இந்த முழுமை தான்; முழுமையின் பயன் இதுவே. என்னுடைய பல நடை முறை முயற்சிகள் நன்றாக இருக்கவேண்டுமானால் என்னு டைய பல நோக்குகளின் மதிப்பு நிலைத்திருக்க வேண்டும்; நோக்கங்களின் மதிப்பு நிலைத்திருந்து என்னைக் கவர வேண்டு மானால், என்னுடைய முழுமை நினைப்பு என் தொழில்கள் எல்லாவற்றிலும் செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்... இந்த முழுமை நினைப்பின் இயற்கையான சக்தியை மீட்டுத்

தரும் எதுவும் வழிபாடுதான்—அல்லது வழிபாட்டின் அம்சம் தான்...மதிப்பீட்டை இயற்கையாக மீட்கும் முயற்சியில் தன்னறிவு பூர்வமான பகுதிதான் வழிபாடு; அந்தப் பகுதி தான் இதர பகுதிகளுக்கான ஸ்தானத்தையும் பொருளையும் நிர்ணயிக்கிறது.

வழிபாடு நீடிக்க முடியாது; அதில் கூட அழிவும் தோல்வி தரும் தன்மையும் இருக்கின்றன. கடவுளின் அருகில் நிரந்தர மாக வாழ எண்ணி முழுமையையே சதா தியானம் செய்யும் பக்தனும், பிடிவாதமுள்ள தொழிலாளி இயந்தரமாவதைப் போல், இயந்திரமாகி விடுகிறான்.''

தினசரி உழைப்பை விட்டு ஞாயிற்றுக்கிழமை ஓய்வையும், வார வேலை அகந்தையை விட்டு ஞாயிறு தினப் பணிவையும், கடவுளின் சித்தத்தைச் செயல்படுத்துவதை விட்டு கடவுளைப் போற்றுவதையும், பிரச்னைகளைத் தீர்க்கும் சிந்தனையை விட்டு அறவழியைத் திறக்கும் தியானத்தையும் நம் மனது நாடுவ தற்கான நியாயத்தை இவ்விளக்கம் காட்டுகிறது. மடாலயங் களும் அறிவு மெய்ப்பொருள் நிலைத் துறவிகளும் பயிலுவது போல வழிபாட்டைத் தனிப்படுத்துவதற்கும் ஸ்தாபன ரீதி யாக்குவதற்கும் உள்ள ஆட்சேபணையை இது விளக்குகிறது; அதிகமாக வழிபடுவதற்கும் வழிபடாது போன்ற பயன்தான்: ஏனென்றால் மனிதனின் வினைகளை அது தூய்மைப்படுத்தத் தவறிவிடும்.

அறவாதிகளும் கல்வியாளர்களும் சமயத்தைக் கொண்டு மனப் பண்பை வளர்க்க இம்மாதிரி வழிபாட்டுப் பகுப்பு முறையை ஏன் கைக்கொள்கிறார்கள் என்ற காரணம் எளிதில் புலப்படும். உலகியல் அறவாதிகள் கூறிய பல வாதங்களுக்கு —ஐக்கியத்திற்குத் தடையாயிருந்தவர் மீது கண்டனம், தெய்வத்தை இழுப்பது உலகியலுக்கு அவமரியாதை என்பது துவைதவாதமா என்பது-ஆகியவற்றிற்கு-ஹாகிங்கின் விளக் கம்சிறந்த விடையாயிற்று; மாற்றம் என்பது சகஜமான மனப் போக்கென்றும், மனிதன் அடிக்கடி முழுமையைப் பணிய வேண்டும் என்றும் அது திறமையாகக் காட்டிற்று.. ஹாகிங் குக்குப் பிறகு சார்லஸ் ஏ. பென்னெட்டும், ஹென்றி என். வயி மனும் ஹியு ஹார்ட் ஷோர்னும் இதர தத்துவவாதிகளும் வழிபாட்டையும் அற்புத அனுபவங்களையும் தர்க்க ரீதியான

அறவாதிகள் சகிப்புத் தன்மையுடன் ஏற்க வழி செய்து விட்டனர். கொஞ்சம் கொஞ்சமாகக் கல்வியாளர்கள் விவேகத்தைச் சிருஷ்டிக்கும் சாதனமாக சடங்குகளுக்கு இடம் கொடுக்க ஆரம்பித்தனர்; விவேகத்தை அனுபவபூர்வமாக உணரச் செய்வதுதான் வழிபாடு என்ற கொள்கைக்கு இணங்க சமயக் கல்வியும் உருவாக்கப்பட்டது.

வழிபாட்டின் நியாயத்தை இம்மாதிரி அறநெறிக் காரணங்கள் காட்டி ஆதரித்தது பயன்பட்டாலும் நெடும்போக்கில் சித்தாந்தத்திற்கே இது கேடு விளைப்பதாக இருந்தது; ஏனெனில் சமய அனுபவத்தை அறக்கல்விக்குக் கட்டுப்படுத்தி விட்டது. கடவுளுக்கு அகநிலே அந்தஸ்தைத்தான் அளித்தது; சமயத்திற்கு சோதனை முறை மதிப்பைத்தான் தந்தது. பிராடெஸ்டெண்டு சமயத்தில் பொதிந்துள்ள வியக்தித் தன்மைக்கும் அக நிலேத்தன்மைக்கும் இது மற்றொரு ருசு என்று கத்தோலிக்கர்கள் நையாண்டி செய்தார்கள். எனவே இன்னும் புறநிலேயான, சமயத்தன்மை மிகுந்த வழிபாட்டு விளக்கம் தேவைப்பட்டது. அநேக புறநிலே பாவனு வாதிகளும் (குறிப்பாக ஹாகிங்கும்) அநேக புறநிலே யாதார்த்த வாதிகளும் (குறிப்பாக வில்லியம்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ஜேம்ஸ் பிஸ்ஸெட் பிராட்டும்) சமயத்திற்கு உதவி செய்தனர். புறநிலேயில், உண்மையாகக் கடவுளின் சந்நிதியில் பக்தனை நிறுத்தப் பயன்படாதவழிபாடெதனுலும் நோக்கம்கைகூடாதென்றுஅவர் விளக்கினர். இந்தக் கொள்கையை ஹார்வார்ட்டைச் சேர்ந்த டீன்ஸ்பெர்ரி தம்முடைய "வழிபாட்டில் மெய்ப்பொருள்என்னும் புத்தகத்தில் விளக்கியிருக்கிருர்; 1925-ல் புத்தகம் தோன்றியது முதல் அமெரிக்காவில் வழிபாட்டை பற்றி எழுந்த விவாதத்தில் எல்லாம் இப்புத்தகத்தின் கருத்துக்கள் ஆட்சி செலுத்தி வந்திருக்கின்றன. வழிபாட்டை இவ்விதம் அணுகுவதில் உள்ள சிறப்பென்னவென்ருல், சங்கேத முறைக்கு அது விளக்கம் தரும் விதம் தான். இந்த விளக்கப்படி சமய சங்கேதங்கள் பொருள்களின் தன்மையைக் காட்டும் கருவிகள் மட்டும் அல்ல; அவையே தெய்வ தரிசனம் தருபவை; விக்ரகம் தெய்வத்தின் பிரதிநிதியல்ல; அதுவே அருள் இறங்கும் வழி; அதுவே தெய்வத்தை மெய்ப்படுத்தும் மார்க்கம். வழிபாட்டின் பெருமை

எல்லாம் நம்மை அறிவு பூர்வமாக ஆண்டவன் முன்பு கொண்டுபோய் நிறுத்துவதில்தான் இருக்கிறது.

பொது வழிபாட்டு முறையை ஏற்கத் தூண்டிய காரணங்கள் பற்றித் தம் சொந்த அனுபவம் ஒன்றைப் பேராசிரியர் பிராட் குறிப்பிட்டிருக்கிறார்: "நம்பிக்கையை வைத்துக் கொண்டிருக்க முடியுமா?" என்ற கேள்வி பற்றியப் புத்தகம் எழுத வேண்டுமென்று முப்பத்தி ஐந்து ஆண்டுக்கு முன்பு நினைத்தேன். கல்லூரி ஆசிரியர் வேலையைத் தொடங்கிய ஆரம்பகாலம். மகுடத்தைப்பற்றித் தீர்மானம் செய்து விட்டு, ஒரு அத்தியாயத்தை எழுதினேன். சமயத்தில் ஆத்மார்த்தம் என்பதுபற்றிய அத்தியாயம் அது. சென்ற ஆண்டு அந்தப் பழைய அத்தியாயத்தைத் தேடிக் கண்டு பிடித்தேன். கிறிஸ்தவ நம்பிக்கைகளைக் கூறுவதில் இன்னும் அதிக ஒளிவு மறைவின்றி இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்திருந்தேன்; தேவாலயங்களும் அவற்றின் தலைவர்களும் உயிருள்ள நம்பிக்கைகளாக இல்லாதனவற்றை எல்லாம் உதறிவிட்டு தங்கள் ஆத்மார்த்தமான நம்பிக்கையை மட்டும் தெரிவித்தால், கிறிஸ்தவ மதம் அசைக்க முடியாத நிலையை அடையும் என்று நம்பினேன். ஆனால் இப்பொழுது அதுதான் சர்வ சஞ்சீவி என்ற நம்பிக்கை இல்லை; சமய சங்கேதங்களின் தன்மையையும் பயனையும் மதிப்பையும் பற்றி இன்னும் ஆழ்ந்த அறிவை இப்பொழுது பெற்றிருக்கிறேன் என்று நினைக்கிறேன்.........அமெரிக்க நிலை பெரிதும் மாறிவிட்டது; ஒரு பகுதி லாபம், ஒரு பகுதி நஷ்டம். ஆத்மார்த்தமும் அறிவும் வளர்ச்சி அடைந்திருக்கின்றன; அலட்சியமும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. கிறிஸ்தவ சமயமோ மற்ற சமயங்களோ பயப்படவேண்டிய பெரிய ஆபத்து அலக்ஷியம் தான்.........

நம்மில் பலர் பழைய சூத்திரங்களை ஒப்பித்துக் கொண்டிருக்கிறோம்; ஆனால் ஜேம்ஸ் கூறுவதுபோல ஆத்மார்த்தமான உள் நெஞ்சம் வேறெங்கோ இருக்கிறது.

எனவே, சமயத்தில் சங்கேதங்களுக்குள்ள ஸ்தானத்தை நிர்ணயிப்பது முக்கியமான, கஷ்டமான வேலை.........அறிவின்றி, சம்பிரதாயமான முறையில் சமய சங்கேதங்களை உபயோகிப்பது நாணயமற்ற காரியம் என்பதன்றி உணர்ச்சியை மரத்துப் போகச் செய்துவிடும். மரியாதை, சம்பிரதாயம்,

பழைமை என்பவற்ருல் மதம் கெடும் அளவுக்கு வேறெதுவும் கெடாது. நடைமுறை சோதனையாக இருக்கவேண்டிய விஷயம் இதைவிட வேறெதுவும் இல்லை; இது ஜீவனின் சொந்த நேரிடையான அனுபவமாக இருக்க வேண்டும்; காலத்திற்கு ஒத்ததாகவும் எதிர் காலத்தில் முன்னேறுவதாகவும் உள்ள ஜீவ சக்தியாக அது இருக்க வேண்டும். சமயம் பயனுள்ளதாகவும் அழகாகவும் இருக்க விரும்புகிறது. ஆனல் உண்மையாகவும் இருக்க விரும்புகிறது. அது சித்தாந்தமல்ல; ஆனல் அதற்கொரு சித்தாந்தம் இருக்க வேண்டும்; முடிவான விஷயங்களைப்பற்றிய திடமான நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த சித்தாந்தத்தை அது கவிதை என்று பாவித்து விடக் கூடாது.''

வழிபாட்டில் சங்கேதங்களுக்கு மதிப்பு செய்தி சொல்லும் திறமையால் வருவதில்லை; பக்தனுடைய உணர்ச்சிகளையும் கற்பனையையும் சொல்லுக்கும் விளக்கத்திற்கும் மீறிய அனுபவ நிலையில் ஏற்றுவதனுல் வருவதேயாகும் என்று பிராட் மேலே விளக்குகிருர். சமய சங்கேதத்தால் அந்நியோன்னியம்தான் விளையும்; செய்தி விளையாது. வழிபாட்டைப் பற்றிப் புறநிலைக் கொள்கை கூறுவதை யேலைச் சேர்ந்த பேராசிரியர் வில்பர் எம். அர்பன் வாக்கின் ஒருபகுதி மூலம் அவர் பின்னும் விளக்குகிருர்:

''சமய சங்கேதத்தின் உன்னத நிலையில்கூட, தன் கவிதை இயலை இழக்காமலிருப்பதற்கு முக்கிய காரணம் சமயச்சொற்கள் உணர்ச்சிமிகுந்த, நாடகரசனை கொண்டவையாக இருக்க வேண்டி இருப்பதுதான்; இல்லாவிடில் அவற்ருல் பயனில்லை ........சமய சங்கேதங்கள் அகண்டத்தையும், தோற்றத்திற்கப்பாற்பட்டதையும் குறிப்பிடுவதற்காகவும் சித்தரிப்பதற்காகவும் இயற்கை உணர்ச்சியைத் திரித்து விடுகிறது. இயற்கைக்கு அதீதமானது என்ற சொல்லின் எல்லாவிதப் பொருள்களிலும் அவை இயற்கைக்கு அதீதமானவைதான். ஹிந்துக்களின் விக்ரகங்கள் இம்மாதிரி திரிபின் அமிதமான ஆனல் சரியான உதாரணம். அகண்டத்தின் தெய்வீகக் கிரியைகளைச் சுட்டிக் காட்டுவதற்காக தெய்வத்திற்கு ஹிந்துக்களை ஏராளமான கையையும் காலையும் கொடுத்து உருவாக்கும் பொழுது பரதத்துவத்தின் இன்றி அமையாத

லக்ஷணமாகிய எல்லையின்மை திரிபடைவதைப் பார்க்கிறோம். இம் மாதிரி திரிபு, கலையைப் போன்ற கற்பனைதான்; ஆனால் கற்பனை என்று கலைஞனுக்கோ பக்தனுக்கோ படுவதில்லை; ஏனென்றால் அதை சங்கேத மென்று ஏற்கிறோமே அன்றி அப்பட்டமான உண்மை என்று கொள்வதில்லை; அவை யதார்த்தமான மதிப்புகளை விடப் பெரிய உண்மைகளைத் தெரிவிப்பதைக் காண்கிறோம்."

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்திற்குப் பிறகு சமய சிந்தனையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை பிராட் தெளிவாகக் கூறியிருக்கிறார். வஞ்சனையற்றிருக்கப் பயின்றால், சமயத் தெளிவு பெற்று விடலாம் என்று முன்பு நினைத்தனர்; ஆனால் கடவுளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியா விட்டாலும், வழிபாட்டை அலக்ஷியம் செய்யும் போக்கின்மீது வெற்றி பெற்று விட்டால், அவருடைய சக்தியையும் பெருமையையும் சந்தேகமற உணரலாம் என்பதைப் பிந்தியகால அனுபவம் காட்டிவிட்டது. வழிபாட்டின் லக்ஷியத்திற்கு ஒப்ப வழிபாட்டை அமைப்பதன் மூலம்தான் இந்த அலக்ஷியத்தை சமாளிக்க முடியும்.

வழிபாட்டை சீர்திருத்த ஊக்கமளித்த மற்றொரு வகையான தத்துவம் "சமயக் கலைக்" காட்சி. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் சித்தாந்தத்திற்கும் விஞ்ஞான ரீதியான சமயத்திற்கும் எழுந்த எதிர்ப்புடன் இக் கட்சியும் வளர்ந்தது. பாஷண்டிகள் விசாரணை நடைபெற்ற காலத்தில், சமயக் கோட்பாடுகளை மனப்பூர்வமாக நிராகரித்து விடவேண்டும் அல்லது வழிபாட்டுக்குக் காலரீதியான விளக்கத்தை ஒப்புக்கொண்டு விடவேண்டும் என்ற நிலை இளம் போதகர்களுக்கு ஏற்பட்டபொழுது இக்கட்சி விவாதத்திற் குரியதாகி விட்டது.

இளந்தலை முறையினர் அல்லது சோதனையாளர்கள், தங்கள் நம்பிக்கை என்று சமயக் கோட்பாடுகளைக் கொள்கை ரீதியாக ஏன் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்பதற்கும், வழிபாட்டின் அம்சங்களாக ஏன் நிராகரிக்க முடியவில்லை என்பதற்கும் ஆன காரணங்களை ஹார்வார்டிஸினிடி பள்ளியைச் சேர்ந்த பேராசிரியர் கிர்சாப்லேக் அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

"சமயக் கோட்பாடுகள், கொள்கைகளைப் பற்றிய உத்தியோகரீதியான அறிக்கைகள் அல்ல; பொதுப் பிரார்த்தனை முறையின் ஒரு பகுதி. இங்கிலீஷ் தேவாலயங்களின் ஆட்சிக்குட்பட்டுப் பிறந்தவர்களுக்கும், சமய சித்தாந்தப் பிரச்னைகள் பற்றி நினைக்கக்கூடிய காலம் வரும் முன்பே என்னைப் போல் அர்ப்பணம் செய்யப்பட்டவர்களுக்கும் பொதுப் பிரார்த்தனை முறை விஷயத்தில் உள்ள சிக்கலெல்லாம் அவற்றை எப்படிக் காப்பது என்பதுதான், எப்படி அழிப்பதென்பதல்ல........"கிறிஸ்தவ சமய வரலாறுகளில் வழக்கொழிந்து மறந்துபோன கொள்கைகள் நிறைய இருக்கின்றன. கோட்பாடுகளை விட்டுவிட்டால், ஒரு உண்மையைப் பதிவு செய்வதாகுமே அன்றி புரட்சியைப் புகுத்துவதாகாது......ஏனென்றால் கோட்பாடுகள் கொள்கைகளின் வெறும் விளக்கமல்ல. தவறுதலான அபிப்பிராயங்களையும், சமய விரோதமான கருத்துகளையும் தடுப்பதற்காக இச் சித்தாந்த விளக்கங்களைப் பயன் படுத்துவது வெட்கக் கேடான காரியம்; ஏனென்றால் அந்தப்பயன் விளையக்காணோம்; அதை விட்டு விடவேண்டியதுதான்......சித்தாந்த ரீதியில் கோட்பாடுகள் எல்லாம் ஆதாரவாதத் தன்மை கொண்டவைதான்; வேறு விதமாக இருக்க முடியாது......பொதுப் பிரார்த்தனை முறையில் இடம் பெறாத கோட்பாடுகள் அழிந்துவிட்டன; ஆனால் தேவாலய ஆராதனையில் இடம் பெற்றிருப்பவை வாழ்கின்றன......இப் பிரார்த்தனை முறையின் சித்தாந்தம் எனக்கோ மற்ற சோதனையாளருக்கோ அந்நியமானதுதான்......ஆனாலும் தேவாலயப் பிரார்த்தனை முறை ஆராதனை, தேவாலயக் கட்டிடத்தைப் போல், எந்த நவீனப் பிரார்த்தனையும் கட்டிடமும் எழுப்ப முடியாத நெகிழ்ச்சியை எழுப்புகிறது......ஸ்தாபன ரீதியான வாதி நியாயமாகக் கூற வேண்டியது இதுதான்: இக் கோட்பாடுகள் எங்களுடைய நம்பிக்கைகள் அல்ல; 'நான்' என்றும் அவற்றில் வரும் ஆசிரியரைத்தான் குறிப்பிடுகிறது; ஆனால் இந்த ஆராதனை முறை எங்கள் பரம்பரைச் செல்வம். அதை விடவும் மாட்டோம்; சேதப் படுத்தவும் மாட்டோம்."......

உன்னத உணர்ச்சிகளை எழுப்பும் சாதனமாகக் கோட்பாடுகளை ஒப்புக் கொள்வது, ஆனால் சிந்தனை முடிபுகளாக

நிராகரிப்பது—சோதனையாளருக்கான திட்டமாக இதை வைத்துக் கொள்ளலாம். சீக்கிரமே ஸ்தாபன ரீதி வாதிகளும் இதை ஏற்றுவிடுவார்கள் என்று நம்புகிறேன்."

ஆதாரவாத ஸ்தாபனக் கருத்துக்கு எதிர்ப்பான இக் கொள்கை பிரார்த்தனை முறையைப்பற்றி மட்டும் பேசுகிறது; ஆனால் ஆதி அமெரிக்க தாராள வாதிகளின் தர்க்க அறிவு கலைகளுக்குச் சமயத்தில் கொடுத்த இடத்தைவிட இவர்கள் அதிகமாகக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள் என்பதை இது காட்டுகிறது. தாராளப் பாங்குடைய குருமார்களின் இப் போக்குக்கு சமூக வளர்ச்சி இயல் விஞ்ஞானிகள் நல்ல ஆதரவளித்தனர்; சடப் பொருள்களுக்குக் கூட தெய்வீகத்தை ஏற்றிய வழக்கத்திலிருந்து பரிணமம் அடைந்ததுதான் சமயம் என்ற :முந்தய முடிவுகளை சமூக வளர்ச்சி இயல் விஞ்ஞானிகள் சமயசங்கேதங்களையும் சமுதாய மனப் பான்மையையும் மக்கள் கலை என்ற பகைப் புலத்தில் வைத்து ஆராய்ந்ததின் மூலம் மாற்றிக் கொண்டிருந்தனர்.

இந்த நோக்கை மிகவும் வற்புறுத்திய பாதிரிமார்களில் குறிப்பிடத் தக்கவர்கள் சிகாகோ தீவிரவாதிகள். ஸ்கீலயர்மாகர் விழாவுக்கு சமயத்திலுள்ள ஸ்தானத்தைப் பற்றிக் கூறியிருப்பதை சித்தாந்திகள் என்ற முறையில் ஏற்றவர்கள் இந்த சிகாகோ கோஷ்டியார். அவர்களுடைய தலைவர்களில் ஒருவரான ஜிரால்டு பிர்னே ஸ்மித் கூறுவதாவது :

சமயத்தை அறிவு பூர்வமாக உணர ஏற்பாடு செய்து விட்டோம். ஆனால் உன்னதமான சமயம் அற்புதமான கலை விளக்கத்தின் மூலம் வாழ்வுக்குப் பொருள் கூறுகிறதென்ற உண்மையை இன்னும் சரியாக உணர்ந்தபாடில்லை. சமயத்தின் உயர்ந்த நிலை கவிதையையும் இசையையும் கண்காட்சியையும் ஆராதனையையும் மக்களின் வாழ்வில் கொணர்கிறது. வளர்ந்து கொண்டிருக்கும் சமயம் தன் விளக்கத்திற்கான இச் சாதனங்களை சிருஷ்டித்துக் கொண்டே இருக்கிறது......முடிவாகப் பகுத்துப் பார்த்தால், சமயம் விஞ்ஞான சாத்திரம் என்பதை விட கலை என்று கூறுவதுதான் பொருந்தும்."

ஸ்மித்தின் தோழர் வான் ஆக்டன் வாட் இரண்டு புத்தகங்கள் எழுதினர். "கலையும் மதமும்", "நவீன வழிபாடு"

என்ற புத்தகங்களில் இக் கருத்தை விவரமாக விளக்கினர். "வாழ்வுக்கு விழா எடுப்பதுதான் சமயம்; வாழ்வுக்கு விடு முறைதான் சடங்கு. வாழ்வின் உண்மைகளையும் மதிப்பீடு களையும் ஒழுங்கு படுத்துவதன் மூலம் சமயம் உலகத்தின் பொருளை விளக்குகிறது." எட்வார்டு ஸ்கிப்னர், ஏமெஸ், ஹென்ரி நெல்சன் வயிமன், பர்னர்டு இமேலாண்டு ஆகிய சமயத் தலைவர்களும் பல மானுடவர்க்க இயல்வாதிகளும் சமூக வளர்ச்சி இயல் வாதிகளும் இதே போக்கை ஆதரித் தனர். சமயம் கலைகளுக்கெல்லாம் தாய் என்பதோடு ஜீவ னுடைய சுய விளக்கத்தின் சிகரம் என்றும் கருதுகிறார்கள். வாட்டும் வேறு சிலரும் கூறுவதுபோல் மற்ற கலைகளையும் சமயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்வதுடன் சமயம் கலைக் கல்வியில் ஒன்றாகிக் கலாசாரத்தின் மையக் கலை யாக வேண்டும் என்றும் சில ஜீவதயா வாதிகள் கூறுகின்ற னர். ஜீவதயா வாதிகளிடமிருந்தும் சிந்தனையாளர்களிட மிருந்தும் இக்கருத்துகள் வருவதில் புதுமை ஒன்றும் இல்லை; ஆனால் மிசிகன் ராஜ்யத்தைச் சேர்ந்த நியமக்கார போதகர் ஒருவர் "வழி பாட்டுக் கலையில் கொபர்னிகசின் விஞ்ஞான ரீதியான புரட்சியை" உருவாக்கி வளர்க்கப் படுவதைக் காணும்பொழுது சமய சிந்தனையில் புரட்சி ஏற்பட்டிருப் பதைக் காண்கிறோம்.

இதுவரை கூறப்பட்ட பலவிதக் கொள்கைகளைப்பற்றி அவை கூறுவதை சுருக்கிப் பார்ப்போம். சரியான வழிபாட் டில் நான்கு அம்சங்களாவது இருக்க வேண்டும். (1) மனித னுடைய பொதுவாழ்வின் அடிப்படைகள் பற்றியும் கலாசார மொன்றின் குறிப்பான மதிப்பீடுகள் பற்றியும் அது ஒழுங் கான சங்கேதமுறையில் தெரிவிக்க வேண்டும். (2) தன்னையே விமர்சனம் செய்து கொள்வதற்கான அளவை சாதனங்களை யும் அறபோதனையையும் அளிக்கவேண்டும்—உதாரணமாக, பாப ஒப்புதல், நன்றிக் கடன், பிரார்த்தனை, தியானம், வாழ்த்து, வேதங்களையும், பிரசங்கங்களையும் பயன் படுத்து தல். (3) அது தனித்த விதமான தோழமையை அல்லது ஞான அந்நியோன்யத்தை உண்டாக்குவதுடன் ஜீவ சகோ தரத்துவத்தையும் உண்டாக்க வேண்டும். (4) பக்த ஜீவன் ஒவ்வொருவரையும் கடவுளின் சந்நிதிக்கு இட்டுச் செல்ல

வேண்டும். வழிபாட்டில் நிச்சயமாக அக அம்சமும் புற அம்சமும் இடம் பெறுகின்றன. இந்த அக அம்சங்கள் தாக்குதலுக்கு உட்படும் காரணம் இலக்கிய விமர்சனமும் அறலக்ஷியவாதமும் 'உணர்ச்சி' என்ற சொல்லை 'அக அம்சத்'துடன் குழப்புவதே ஆகும். அக அம்சமும் புற அம்சமும், தேவையும் சக்தியும், அன்பும் பிரதாபமும், இணையாத இடத்தில் கலையும் இல்லை, வழிபாடும் இல்லை. வழிபாட்டைப்பற்றி டீன் ஸ்பெர்ரி இரண்டு முக்கியவிஷயங்களை வற்புறுத்துகிறார்: வழிபாட்டின் மூலமாகவேதான் கடவுளை விவரணம் செய்கிறோம் என்பதொன்று; மனித அனுபவத்தின் புருஷார்த்தங்களைக் கொண்டாடுவதென்பது மற்றொன்று. முதலாவது அக அம்சத்தையும் இரண்டாவது புற அம்சத்தையும் குறிக்கின்றன. பூஜிப்பதும் கொண்டாடுவதும் ஒன்றாகாது; முரணுமாகாது; இவை பரஸ்பரம் ஆதரவு.

## பொது வழிபாட்டுப் போக்குகள்

வழிபாட்டில் நான்கு விதங்கள் இருக்கின்றன—தனி குடும்ப, சமுதாய, சமயஸ்தாபன முறைகள் என நான்கு. இந்த ஐம்பது ஆண்டுகாலமாக தனி வழி பாட்டுக்கு நேர்ந்திருப்பதைப் பற்றிக் கூறுவது கடினம். தனி வழிபாடு குறைந்துவிட்டதென்றே எல்லோரும் கருதுகின்றனர்; எந்த அளவுக்குக் குறைந்த விட்டதென்றோ அதற்கான காரணங்கள் என்ன வென்றோ கூறுவது இன்னும் கடினம். "ஸ்திரீகள் குடும்ப பத்திரிகை" ஒன்றுக்காக லிங்கன் பார்னெட் ஒரு ஆராய்ச்சி நடத்தினார். 1948-ம் ஆண்டு நவம்பர் இதழில் தம் ஆராய்ச்சி பற்றிய அறிக்கையை 'கடவுளும் அமெரிக்க மக்களும்' என்ற தலைப்பில் அவர் வெளியிட்டார். தமக்குப் பதில் அனுப்பியவர்களில் 95 சத விகிதத்தினர் கடவுளை நம்புவதாகவும், 75 சத விகிதத்தினர் தேவாலய அங்கத்தினர்கள் என்றும், 40 சத விகிதத்தினர் ஒழுங்காகத் தேவாலயத்திற்குப் போவதாகவும், 25 சத விகிதத்தினர் பக்தி மிகுந்த சமய வாழ்க்கை நடத்துவதாகவும் தெரிவித்திருக்கிறார். வழிபடும் வழக்கத்தைச் சொந்த முறையில் விட்டுவிட்டதாகவும் ஒப்புக்கொள்பவர் கூடச் சமய பற்றில்லாதவர்கள் என்று தம்மைக்

கூறிக்கொள்ள விரும்பவில்லை. அமெரிக்காவுக்கு வந்த ஆங்கிலேயர் ஒருவர் அமெரிக்கர்களிடையே "மதப்பற்று அளவு கடந்திருப்பதாகக்" கூறினர். மற்ற ஐரோப்பியர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதும், மற்றவர்களை விடத் தாங்கள் சமயத்தை சொந்த விஷயமாகப் பாவிப்பவர்கள் என்று அமெரிக்கர்கள் சொல்வதைக்கொண்டு பார்க்கும் பொழுதும், இது உண்மையாக இருக்கலாம்; ஆனல் தங்களுக்குச் சமயப் பற்று உண்டு, சமயபக்தி இல்லை என்று அமெரிக்கர்கள் கூறுவதற்கென்ன பொருள் என்று தெரியவில்லை. டீன்ஸ்பெர்ரி கூறுவதுபோல் அவர்கள் 'அறை குறை நாத்தீகராய்' இருக்கின்றனர். நாத்தீகர் என்று சொல்லிக் கொள்பவர்கள் சிலரே; அவர்களும் தீவிர நாத்திகராய் இருப்பதில்லை; ஜாக்ஸ் மாரி டெயின் கூறுவதுபோல "அவர்கள் நாத்தீகத் தொழிலை நடத்துபவர்கள் அல்ல." தத்துவ சித்தாந்திகளிடையே அறிவு பூர்வமாகவும் மற்றவர்களிடையே அரை உணர்வாகவும் கடவுள் என்ற நம்பிக்கை இருக்கலாம்; ஆனல் வழிபடும் தூண்டுதலோ வழக்கமோ இருப்பதில்லை. சிறந்த தத்துவதரிசி ஒருவரை நீங்கள் ஏன் வழிபாடு செய்வதில்லை என்று அவருடைய சர்வகலாசாலை தேவாலய குருமார் கண்டித்த பொழுது அவர் பின்வருமாறு விடை அளித்தாராம்: "நான் ஹை சர்ச்சுக்காரன். கோயிலைத் தாண்டிச் செல்லும் பொழுதெல்லாம் கோயிலையும், நமக்காகப் பிரார்த்தனை செய்யும் கோயில் குருவையும் படைத்திருக்கிறேமே என்று கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்" என்றாராம். வழிபாட்டில் அலக்ஷியமாக இருப்பதற்கு வேறு சிலரை விளக்கம் கேட்டால் 'அதற்காகத்தான் உத்தியோக ரீதியான துறவிகளும் குருமார்களும், பாதிரிமார்களும், யூத குருக்களும் இருக்கின்றனரே! மக்களுக்காகப் பிரார்த்தனை செய்வது அவர்கள் கடமை. வழிபாடு வெறும் கடமையாகாமல் மெய்ப்பாடாகும் சந்தர்ப்பங்கள் தவிர மற்றபடி சமய ஸ்தாபனங்களில் பங்கெடுத்துக் கொள்ளாமல் அவற்றை ஆதரிப்பது மக்கள் கடமை என்று சொல்லக்கூடும். ஆனல் பெரும்பான்மையோர் வேதனைப்படும் வேளைக்கு உதவி செய்யத் தயாராக இருப்பது சமயம் என்று கருதுகிறார்கள்; தினசரி கடைப் பிடிக்க வேண்டியதாகக் கருதுவதில்லை. இருபதாம் நூற்றாண்டுவரை

ஷேக்ஸ்பியர் கூறியது முதல் சமயக் கடமையாகக் கொள் ளப்பட்டிருக்கலாம். "ஏழை நெஞ்சே! கடவுளின் அருள் உனக்கு மிகுந்திருக்கிறது. நீவேதனமின்றிப் பகலேயோ இரவையோ கழியவிடாதே. பிரபு உனக்குச் செய்திருப்பதை எப்பொழுதும் நினைவில் கொள்வாயாக."

ஆனால் இதை இப்பொழுது பழம் பசலி போதனை என் பார்கள். சாதாரண மக்களுக்கு உணவைப் போல் தினசரி வழிபாடு அமையவில்லை; அவர்கள் ஒப்புக்கொண்டாலும் கொள்ளா விட்டாலும் பாதிரிமார்கள் வாதாடுவது போல், சமயம் அவ்வளவு மையஸ்தானத்தை வகிக்கவில்லை என்பதை அவர்களுடைய நடத்தைக் காட்டுகிறது.

உலக விவகாரங்களின் பூட்டை விட்டுக் கழன்று நியதி யாக இளைப்பாறவோ, விளையாடவோ, தியானம் செய்யவோ முடிவதில்லை என்று அநேகர் கூறுகின்றனர்; அதற்கு இணங்க வழிபாட்டைவிட தேவாலய வேலைகளிலேயே ஈடுபட விரும்பு கின்றனர். உழைப்பும் ஓய்வும் என்ற சக்கரம் அநேகருக்குத் தொந்தரவாக இருக்கிறது—குறிப்பாக உடலுக்கு ஓய்வு தேவைப்பட்ட வேளைகளில்; இன்னும் பலருக்கு வேலை நாளில் வழிபாட்டுக்கு நேரமா என்று ஆச்சரியமாக யிருக் கிறது. காலையிலோ, உச்சிப் பொழுதிலோ, இரவிலோ நேர மில்லை. மதப்பற்று மிகுந்தவர்களை, கடைசி காலத்தை சமயத்திற்கே செலவிட உத்தேசித்திருந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் பல சுறு சுறுப்பான வியாபாரிகளை எனக்குத் தெரியும். உண்மை என்ன வென்றால், பக்தர்கள்கூட தேவா லயத்தின்பால் உள்ள கடமை உணர்ச்சியால் வழிபடுகின்ற னரே அன்றி சொந்த அவஸ்தையின் காரணமாக அல்ல; எனவே வழிபாடென்பது கடமை என்பதைவிட சலுகை என்று உணரும்பொழுது சலுகையைத் தியாகம் செய்து விடு கிறார்கள்.

வழிபாடென்று அறியக் கூடிய விதத்தில்தான் சமயம் அமையவேண்டு மென்பதில்லை. தற்கால மனிதனுக்கு ஒத்த முறையில் சொந்த சமய வாழ்வை அமைக்க சமீபத்தில் முயற்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன. அடுத்த அத்தியா யத்தில் 'சொந்த வழிபாடு' என்பதினின்றும் வேறுபட்ட 'சமய அனுபவம் பற்றி'ப் பேச நேரும். பெரிய ஸ்தாபனமாகி

யுள்ள சமயங்கள் விதித்தவைகளைச் சொந்த முறையில் கடைப்பிடிக்க முடியாமல் போனதுதான் புதிய சமய வழி களைத் தேடுவதற்கான முக்கிய காரணம் என்று இங்கு குறிப் பிட்டால் போதுமானது.

யூத குடும்பங்கள் நீங்கலாக உள்ளவற்றில் குடும்பப் பிரார்த்தனை இதே காரணத்தினால்தான் குன்றி விட்டது. யூதர்களுக்கு இப்பொழுதும் குடும்பம்தான் சமய ஆசாரத் திற்கான கேந்திரம். யூதசபைகளில் கிடைக்கும் அனுபவத்தை விட அதிக இன்பத்தை அளிக்கக்கூடிய செடர் விழா இன் னும் கொண்டாடப்பட்டு வருகிறது. குடும்ப வாழ்வைப் புனிதப்படுத்தும் பல சடங்குகள் தினந்தோறும் வீட்டில் நடைபெறுகின்றன. யூதமதத்தில் குடும்ப வழிபாடு வலு வுடன் நீடிப்பதற்கான காரணம் யூதக் குடும்ப வாழ்வின் தனித்த பண்புகளில் இல்லை; தனித்த பண்புகள் இருந்தால் கூட அமெரிக்க யூதக் குடும்பங்களில் அவை மறைந்து வருகின் றன; இதற்கான உண்மைக் காரணம் யூத சமயத்தின் வர லாற்றுத் தன்மையில் இருக்கிறது. மக்கள் சமயத்தில் குடும் பச் சடங்குகளே நிறைந்திருக்கின்றன; ஆனால் கிறிஸ்தவ சமயத்தைப் போன்ற சமயம். (ஏசுநாதர் வாழ்வைப் போன்ற வாழ்வு) குடும்ப வாழ்வுக்கு அப்பாற்பட்டே இருக் கிறது. அது ஒரே சமயத்தில் அந்தரங்க மாகவும், பகிரங்க மாகவும் இருக்கிறது; ஆனால் கிறிஸ்தவ சமயத்தில் யூத சமயத்தைவிடக் குறைவான அளவுதான் கோத்திர மரபு களும் தேசியமும் காணப்படுகின்றன; யூத சமயத்தை விட்டுக் கிறிஸ்தவ சமயம் பிரிந்ததுதானே. யூத சமயம் ஸ்தாபனத் தன்மை கொண்டதாக இருக்கலாம்; ஆனால் அவ்வளவு சமு தாயத் தன்மை கொண்டதாக இல்லை. அந்தச் சமயத்தில் குடும்பம் மைய ஸ்தானத்தை வகிப்பதற்கான பொருளாதார காரணங்கள் அதனுடைய ஆயர் குல மரபு, விவசாய மரபு ஆகிய அமைப்புகளில் இருக்கின்றன; நவீன நகர வாழ்க்கை நிலையிலும் யூதர்களிடையே எழுந்துள்ள தேசிய அரசியல் எழுச்சி நிலையிலும் அவர்களுடைய கொண்டாட்டங்களுக்கும் நினைவு நிகழ்ச்சிகளுக்கும் மையமாயிருப்பது சமுதாயமுமல்ல, தந்தையர் நாடுமல்ல, குடும்பம்தான். யூதரை ஒதுங்கி வாழச் செய்யும் முறைகளையோ, அல்லது மொத்தமாக ஒழிக்

கும் முறைகளையோ கையாண்டாலொழிய (அமெரிக்காவில் இது சாத்தியமல்ல) யூதர்களின் நாட்டம் குடும்பத்தை விட்டு சமுதாயத்திற்கோ யூத சபைக்கோ மாறவே மாறுது. யூத மதத்திற்கு சமாஜ வழிபாடு இன்றியமையாத பகுதிதான்; ஆனுல் கிறிஸ்தவ சமயபக்தி வாழ்வதற்கு சேகரக் கோயிலும் குருமாரும் போதகரும் எவ்வளவு அத்தியாவசியமோ அந்த அளவுக்கு யூத சமய பக்திக்கு சபையும் யூத குருவும் தேவைப் படாது. கிறிஸ்தவ வழிபாடு குடும்ப சமயாசாரமின்றி நடைபெற்றுவிடும்; குடும்பச் சடங்குகளின்றி யூத மதத்தின் பிடிப்பு நிலைக்காது.

சவ அடக்கச் சடங்குகள் பெரிய தொகுதிகளுக்கும் சமுதாயத்திற்கும் சம்பந்தப்பட்டவையாலுலும் முக்கியமாக குடும்பச் சடங்கே ஆகும். அந்திம பிரார்த்தனை நடத்தும் முறையில் சமய ஸ்தாபனங்கள் ஓரளவு முன்னேற்றம் பெற்றிருந்த போதிலும் அந்திமப் பொது மண்டபங்களும் எளிய பிரார்த்தனைகளும் தேவை என்ற கருத்து வளர்ந்து வந்திருக்கிறது. வீட்டின் வெளிக்கட்டுகளோ தேவாலயங்களோ சரிப்பட்டு வராமல், அந்திம பொதுமண்டபங்களிலிருந்தே கல்லறைக்குச் சவங்களைக் கொண்டு வரும் வழக்கம் பாதிக்கு மேல் இருப்பதாக சில அந்திமச் சடங்கு டைரக்டர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அந்திமப் பொது மண்டபங்களில் நடைபெறும் சடங்குகளில் தேவாலய ஸ்தாபனம் பங்கு கொள்கின்றது; ஆனுலும் நேரத்துக்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான சடங்குகள் தான் தேவை என்று கருதப்பட்டு வருகிறது; சமய ஸ்தாபன மரபுகளுக்கு முக்கிய ஸ்தானம் அளிக்கப்படுவதில்லை. டாக்டர் கார்லிஸ்லாமாண்டு அந்திமப் பொது மண்டபங்களை நினைவு கொண்டு ஒரு சடங்கை அமைத்திருக்கிருர். ''ஜீவதயா'வாத அந்திமப் பிரார்த்தனை'' என்ற மகுடத்துடன் அதை வெளியிட்டிருக்கிருர்; அதற்குக் கிராக்கி வளர்கிறதென்றும் அவர் கூறுகிருர்.

அந்திமப் பொது மண்டபங்கள் போல, திருமணப் பொது மண்டபங்களும் தோன்றக் கூடும் என்று பேராசிரியர் எல்டன் ட்ருபிளட் எழுதுகிருர்.

யூதர்களிடையிலும் கிறிஸ்தவர்களிடையிலும் இருபதாவது நூற்றுண்டில் பொதுவான சமய மார்க்கம் வளர்ந்து வந்திருக்கிறது.சமுதாயம் என்று கூறும் பொழுது, சமய சபைக்கு அற ரீதியான பொருளும் ஸ்தல ரீதியான வாசஸ்தலமும் அளிக்கும் உலகியல் சமுதாயத்தைத்தான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடுகிறேன். உலகியல் மக்களுக்கு பயன் பட்டு, உலகில் வாழும் இனங்களின் ஐக்யத் தன்மைக்கு ஆன்ம ரீதியான மெய்ப்பாடாக சமய ஸ்தாபனங்கள் அமையும் பொழுதுதான் தேவாலயங்களாகின்றன. என்று ஜெர்மன் சமூக வளர்ச்சி இயல்வாதிகள் கூறுகின்றனர். சமயம் எவ்வித ஸ்தாபனமாக இருக்க வேண்டு மென்று பழங் கொள்கைகள் விதித்தது போல் இது இருக்கிறது; பழங்கால இஸ்ரேலையும், ரோமையும், பியூரிடன் இங்கிலாந்தையும் இது நினைவூட்டுகிறது. அமெரிக்காவில் வலுத்திருப்பவை உள்ளூர் சமுதாயம் அல்லது நியூ இங்கிலாந்தைப் போன்ற சுற்றுப்புறம், கிராமம், நகர்ப்புற சமுதாயம், நகரின் சுற்றுப்புறங்கள். இம்மாதிரி சமுதாயங்களை ஒன்று படுத்தும் பொழுது தான் சபைகள் வலுவாக இருக்கின்றன. சமயப் பிரிவுகளை மீறிய பிராடெஸ்டெண்டு சமுதாய தேவாலயங்களும், தேவாலய சமஷ்டிகளும்,வளர்ந்து கொண்டிருக்கின்றன.மதப் பிரிவுகளிடையே மரியாதை வளர்ந்து வருவது தான் இன்னும் முக்கிய விஷயமாகும்; சமுதாயத்திற்குள் வீண் போட்டிகளைத் தவிர்ப்பதே அவற்றின் நோக்கம். குறிப்பிட்ட வழிபாட்டு முறையை சபையார் ஏற்றுக் கொண்டு விட்டால், மற்றவை எல்லாம் சில்லரை விஷயங்களாகி விடுகின்றன. ஐரோப்பிய சமுதாயங்களையும், தேசங்களையும் பிரதிபலிப்பதால் தான் பல சமயப் பிரிவுகள் வலுவுடனிருக்கின்றன; அமெரிக்காவில் அவை தம் சக்தியைப் பேணி வளர்க்கின்றன. பலதரப்பட்ட யூதர் சமயத்தார் ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருக்கின்றனர். பிரெஸ்பிடீரியர்களுக்கு ஸ்காட்லாந்து உறவுகளும், எபிஸ்கொபேலியர்களுக்கும் காங்கிரிகேஷனலிஸ்டுகளுக்கும் பிரிட்டிஷ் உறவுகளும் முக்கியமாக இருக்கின்றன. இம்மாதிரியான தேவாலயங்கள் சூழ்ந்துள்ள நிலையில் பாப்டிஸ்டுகளும் மெதாடிஸ்டுகளும் 110 சதவிகிதம் அமெரிக்கர்கள் என்று எண்ணிக் கொள்ள இடம்

ஏற்படுகிறது. ரோமன் கத்தோலிக்க தேவாலயங்கள் கூட ரோமை'விட ஐரிஷ், இதாலிய, போலிஷ், மெக்சிக நாட்டு தேவாலயங்களாய் இருக்கின்றன. அமெரிக்க மக்களின் கலாசாரப் பன்மையை எடுத்துக் காட்டும் இக்கலாசார வித்தியாசங்கள்தான் ஒரு வேளை நம்முடைய தேவாலயப் பன்மைக்கும் சக்திக்கும் காரணமாக இருக்கலாம். ஐரோப்பியப்பகைப் புலன் தன்மைகள் சந்தேகமின்றித் தேய்ந்து வருகின்றன. சரியான அமெரிக்கபண்பு கொண்ட கிறிஸ்தவ வழிபாட்டு முறை உருவாகி வருவதாக நம்மைவிட நன்ருக ஐரோப்பியப் பார்வையாளருக்குத் தெரிகிறது.

அமெரிக்க தேசீய வாழ்வு வரவர சமய விஷயமாகி வருகிறது—குறிப்பாக யுத்தகாலத்தில் முதல் பத்து ஆண்டுகளில் தேசீயம் என்ற கொள்கையை வெறிகொண்டு தத்துவ ரீதியாகப் போற்றிய அளவுக்கு இப்பொழுது யாரும் போற்றுவதில்லை; சமூகக் கொள்கையிலும் இப்பொழுது தேசீயச் சாயல் குறைந்து விட்டது. ஆனுல் மொத்தத்தில், மக்களின் போராட்டங்கள் எல்லாம் அமெரிக்க தேச பக்திக்கும் அரசியலுக்கும் சமய ரீதியான உணர்ச்சியும் பொருளும் தந்து வருகின்றன. பொதுப் பள்ளிகளில் நடைபெறும் அரசியல் சடங்குகளும், தேசீயப் பிரதிக்ஞை தினங்களும், தேசீய விழாக்களும் உலகியல் ரீதியான தேசீய மார்க்கத்தை உருவாக்குகின்றன; ஆனுல் ஐரோப்பா, கிழக்கு நாடுகளின் அரசியல் மார்க்கத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அமெரிக்காவில் அவ்வளவு தேசீய சமயத் தன்மை குறைவுதான். மொத்தத்தில் அமெரிக்க மக்களின் ஆன்ம வாழ்வைப் பேணும் வேலை அவர்களுடைய பல சமய ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; அவ்வளவு திறமையாக அவை தம் கடமைகளை நிறைவேற்றியிருக்கிறபடியால், ரோமன் கத்தோலிக்கர்கள் கூட ராஜாங்க தேவாலயம் வேண்டும் என்ருே, அற ஒற்றுமைக்குஐரோப்பியர் கருதுமளவுக்குஆன்மீக ஒற்றுமை தேவை என்ருே எண்ணுவதில்லை. இவ்விதம் பல தனிப்பட்ட ஆன்மீக மரபுகளையும் சடங்குகளையும் கொண்ட பல வகைச் சமுதாய மடங்கிய தேசீய சமுதாயமாக அமெரிக்கா விளங்குகிறது.

கடைசியாக, வெறும் சமய சங்கங்களாக இருப்பவற்றின் சிறப்பாக அமையும் பொதுவழிபாட்டு வகை ஒன்றிருக்கிறது; அதாவது சமய நம்பிக்கையே இணைக்கும் பாசமாகக் கொண்ட சமுதாயம்; பிறசமயங்களுடனும் உலகியல் சமுதாயங்களுடனும் போட்டியிடும் சமய நம்பிக்கை கொண்டது. அம்மாதிரி சங்கங்கள், அகஸ்டினுடைய 'தெய்வ நகரம் போல், கடவுளுடன் சூக்குமமான ஒற்றுமை அடைந்திருப்பதாகவும், பூமிக்கு எதிராக மேலே சொர்க்கம் இருப்பது போல, உலகியல் சமூகத்திற்கு வைரியாக இருப்பதாகவும் கருதுகின்றனர். அவர்கள் தான் கடவுளின் பொது மக்கள்; இதர சமுதாயங்களை மீட்பதே அச்சங்கங்களின் நோக்கம். இந்த முறையில், சமய ஸ்தாபன வழிபாடு தெய்வ அருளின் மெய்ப்பாடாகுமே அன்றி கலாசாரத்தின் மெய்ப்பாடாகாது. வேறு எந்தப் பொது மக்களுடன் உறவு கொண்டாலும் கொள்ளா விட்டாலும் தேவாலயம் கடவுளின் முன்புள்ள மோன சமுதாயம். உலகுடன் கூடி இராமல், 'விட்டுவா' என்ற கட்டளையை நம்பும் இத்தேவாலயங்கள் கலாசாரச் சூழ்நிலையிலிருந்து தங்கள் வழிபாட்டை ஒதுக்கி விடும் காரணத்தாலேயே தெய்வீக அந்தஸ்தைப் பெற்றுவிடுகின்றன; கண்டனத்திற்கு மேற்பட்டவையாகின்றன. இந்த தலைக்கனம், "நியமனம் பெற்ற பான்மை," இதர சங்கங்களுக்கு அருவருப்பை தந்ததுடன், தேலாயங்களுக்குள்ளேயே "சமூகக் கொள்கை" என்ற கருத்துப் புரட்சி தோன்றக் காரணமாயின.

எனவே வழிபாட்டை சமூக மய்மாக்குவதையும் அறமயமாக்குவதையும் வழிபாட்டுக்கு எதிரான இயக்கமாகப் பல பாதிரிமார்கள் கருதி விட்டனர். எப்படியிருந்த போதிலும் சமய ஸ்தாபன ரீதியான வழிபாடு சமுதாயங்களைப் பிளந்து செல்வதுடன் தன்னையும் ஒருசமுதாயமாக பிரித்துக் கொண்டு விடுகிறது. ஒவ்வொரு மார்க்கமோ அல்லது தேவாலயமோ அகண்ட உண்மையைக் குறிப்பிட்ட மார்க்கத்துடனோ தேவாலயத்துடனோ பிணைத்து மற்றவை மீது வெற்றி காண முயலும் போது ஏக தெய்வ வழிபாட்டின் தன்மை—அன்பென்னும் விஷயம் போகட்டும்—கெடுகிறது. வழிபாடு பிரசாரமாகும் பொழுது ஜீவத் தன்மையை இழந்து விடுகிறது. உல

கில் தீவிர சமயத்திற்கு இடமிருக்கிறது; ஆனால் தெய்வ சந்நிதானத்தில் வீரத்திற்கு வேலையில்லை.

ஸ்தாபன ரீதியான சமயத்திலுள்ள கேடுகளை சமய ஐக்யத்தை வளர்க்கும் முறைகளால் நீக்கப் பாதிரிமார்கள் முயன்று வந்திருக்கின்றனர்; ஆனால் வழிபாடுகளில் பொது ஒற்றுமை காணும் முயற்சி முட்டாள்தனமானது; பயனற்றது. ஒற்றுமை என்பது வழிபாட்டைவிட ஒருமித்துச் செய்ய வேண்டிய விவகாரத்திற்கோ சண்டைக்கோ தேவையான தென்று இதற்குள் விளங்கியிருக்கும். கிறிஸ்தவ ஐக்கியத்தைப் பேண விரும்பும் இயக்கத் தலைவர்கள், கிறிஸ்தவர்கள் எல்லாம் சேர்ந்து கடவுள் பிரார்த்தனையில் ஒன்றுபட்டால் சூக்குமமான ஐக்கியத்திற்கு ஸ்தூலமான சங்கேதத்தை உண்டாக்கலாம் என்று நம்புகிறார்கள். இது வெற்றாசை; கிறிஸ்தவ பக்திக்குத்' தேவையானதைவிட அதிகப்பட்ட அரசியல் அவா. எப்படியும் சர்வதேசக் கூட்டுறவைப் போல் கிறிஸ்தவ ஒற்றுமையும் அவ்வப்பொழுது குறிப்பிட்ட காரியங்களில் சாத்தியமாகிறது மனித சகோதரத்துவம் என்ற பொதுக் கொள்கையைப் போல், கடவுள் முன்பு சமயஸ்தாபன ரீதியில் காட்டப்படுவதைவிட, மக்களிடையே செயல்படும் பொழுது பயனளிக்கிறது.

நடைமுறை அனுபவத்தை நம்பி, வழிபாட்டின் தன்மையை உயர்த்தும் முயற்சியில் நாட்டம் கொண்டால்' எல்லா சமய சக்திகளையும் ஒரேவார்ப்படமாக்கும் முயற்சிகளை விடுத்து பல சமயங்கள் தழைக்க அமெரிக்கா அளிக்கும் வாய்ப்புகளை நினைவில் இருத்திக் கொண்டு; செயல்பட வேண்டும்; அப்பொழுது பலவகைப்பட்ட வழிபாட்டு முறைகள் கொண்ட அமெரிக்க கலாசாரம் கடவுளின் பெருமையை விளக்குவதில் சிறந்த பங்கு கொள்ள முடியும். சொர்க்கத்தில் பல இசைக்குழுவினர் இருப்பது போல் உலகிலும் இருப்பது நல்லது; ஏனென்றால் ஒரே உலகத்தில் பலவித வாழ்த்துக்களைக் கேட்டு வெவ்வேறுபட்ட அனுபவங்களைக் கடவுளும் மக்களும் பெறுவார்களல்லவா ?

மன்னர் மன்னன் தம் சிருஷ்டியிலும், அந்த சிருஷ்டி நீடிப்பதிலும் ஏன் மகிழ்கிறார் என்று காரணம் காட்டத் தேவையா என்ன ?......தம்முடைய சிருஷ்டிகளும் தாமாக சிருஷ்டிப்ப

ஷைதக் காண அவர் மகிழ்கிறார். அதனால்தான் 'உற்பத்தி' என்ற பைபிள் பகுதி இவ்விதம் கூறுகிறது: "மனிதனைத் தம்முடைய பிரதியாகவே அவர் படைத்தார்." மனிதனின் பெருமைக்கெல்லாம் உரிய உரிமை இதில் இருக்கிறது; உலகத்தை இடையறாது திரும்ப சிருஷ்டி செய்ய உதவி புரியும் அளவுக்கு மனிதனின் விளைவுகளைப் பாராட்ட வேண்டும்.

6

# வில்லியம் ஜேம்ஸுக்குப் பிந்திய சமய அனுபவ வகைகள்

## ஜேம்ஸின் சமய அனுபவ வகுப்பு

வில்லியம் ஜேம்ஸ் 1090-ம் ஆண்டில் தம்முடைய கிப்போர்டு பேருரைகளை இரு தொடராக ஸ்காட்லாந்தில் நிகழ்த்த விரும்பியபொழுது, முதல் தொடரில் 'மனிதன் சமயப் பசியைப்பற்றியும், இரண்டாவது தொடரில் 'தத்துவ தரிசனத்தின் மூலம் அதைத் திருப்திப் படுத்துவது' பற்றியும் பேச உத்தேசித்திருந்தார். இரண்டாம் பகுதியை அவர் எழுதவே இல்லை. முதல் தொடரிலிருந்து தோன்றிய கருத்துக்களை " பன்மைப்பட்ட உலகம் " என்னும் புத்தகமாக 1912-ல் அவர் ஆக்கிய பொழுது, சமயப் பசியை எப்படித் தத்துவ தரிசனம் திருப்தி செய்கிறது என்பதற்குப் பதிலாக சமய அனுபவ நிகழ்ச்சிகளைக் கொண்டு தத்துவ ஞானத்தை எப்படித் திருத்த வேண்டும் என்பதன் விளக்கமாக அமைந்து விட்டது. ஜேம்ஸ் மனத்தில் ஏற்பட்ட இம்மாற்றம் அவருடைய அறிவு வளர்ச்சியில் மட்டும் முக்கியமான விஷயம் என்பதன்றி பொதுச் சமய சிந்தனையிலும், சமயத்தைப் பற்றிய சிந்தனையிலும் ஏற்பட்டுக் கொண்டிருந்த உருமாற்றத்திலும் முக்கிய விஷயமாக இருந்தது. கிப்போர்டு, பேருரைகளுக்கும்

ஜேம்சுக்கும் பகைப் புலமாக 'இயற்கை சமயம்' என்று கூறக் கூடிய மரபொன்றிருந்தது. மனிதனுக்கு இயற்கையாகவே சமயத்தன்மை உண்டு. அத்தன்மை பிறவிக்குணம் என்று விளக்கிக் காட்டும் தத்வ தரிசனம், சம்பிரதாயமான நம்பிக் கைகளையும் தெய்வ அருளான சமயங்களின் ஆசாரங்களையும் விட, அதிக திருப்தி அளிக்கக் கூடியது—இவைதான் அந்த மரபின் நம்பிக்கை; ஜேம்சின் இயற்கை சமயத்தைப் பற்றிய பேருரைகளுக்கும் இவைதான் விஷயம். ஸ்காட்லாந் திலும், அமெரிக்காவிலும் ஜேம்சைச் சூழ்ந்திருந்த பூர்ணத் தத்துவ பாவனு வாதங்கள் சமயத்தைப் பற்றிய தரிசனங்கள் மட்டுமன்று; அவை சமய வேதாந்தம், ஸ்தாபன ரீதியான சமயங்களுக்கும் சித்தாந்தங்களுக்கும்மாற்று. ஜேம்சின் பல நண்பர்கள்தாமஸ் டேவிட்சன், டிக்கின்சன் எஸ்.மில்லர், வில் லியம்டோரே ஹாரிஸ் ஜோசியா ராய்ஸ், கல்லூரித் தலைவர் ஜான் கெயிர்ட், ஜேம்ஸ் மார்டினு, ஜேம்சின் தந்தையார் ஆகிய எல்லோருமே இந்த ரீதியான சமயமத வேதாந்தி களே. தத்துவ தரிசனத்தில் அவர்கள் சமய ரீதியான திருப்தி யைப் பெற்றார்கள்; ஜீவன்கள் என்ற முறையில் கடவுளுடன் அவர்கள் கொண்ட உறவுக்கு சமய ஸ்தாபன அருள்வழியை விட பாவனுவாதக் கொள்கையே புருஷ காரியமாக அமைந் தது. இந்தப் போக்கை ஜேம்ஸ் ஏற்கவில்லை; பாதிரிமார்கள் முறைக்கு அவர் எதிரியாக விருந்தாலும் சமயப் பசியைத் தத்துவ தரிசனம் ஆற்ருது என்று அவர் திட்டமாக நம்பினுர். இந்த அடிப்படைக் கருத்துக்கு அவர் கொடுத்த பல உருவங் களில் சிலவற்றை இங்கு பார்ப்போம்; ஏனென்ருல் தர்க்க வாதத்தை விட்டு அவர் விலகிச் சென்ருர் என்று காட்டுவ தோடு பூர்ண பாவனு வாதத்திற்கும், பூர்ண லோகாயத' வாதத்திற்கும் அமெரிக்காவில் தோன்றிய பொது வெறுப் பின் ஆரம்பத்தையும் அவை காட்டுகின்றன. "தெய்வீக அற்புத வாதத்தில் மூடமான வகை ஒன்றும் நுண்ணிய வகை ஒன்றும் உண்டு! இன்றைய தத்துவ தரிசிகளில் பலர். நுண்ணிய வகையைச் சேர்ந்தவர்கள். நுண்ணிய வகை சர்வ வியாபகமான கொள்கையாகும். 'மூடமான வகை என்பதைவிட 'தனித் தனி' வகை என்ற சொல் தொடர் பொருந்தும். ......பாமர வகையான கிறிஸ்தவ

மதத்தையோ புலமை பூர்வமான ஆதீகத்தையோ என்னுல் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், லக்ஷியத்துடன் அந்நியோன்ய உறவு கொண்டாடும் பொழுது புதிய சக்தி உலகுக்கு வருகிறதென்றும், உலகிலி ருந்து வேறு சில அகல்கின்றனவென்றும் நான் நம்புகிறேன் ; அதனுல் என்னை மூடவகை அல்லது தனித்தனி வகையில் என்னைச் சேர்க்க வேண்டும். சர்வ வியாபக அற்புத வாதம் இயற்கை வாதத்திற்கு எளிதில் பணிந்து விடுகிறதென்று எனக்குத் தோன்றுகிறது. லக்ஷிய உலகை இவ்விதம் சர்வ வியாபக ரீதியில் அணுகுவதால், நடைமுறைச் சமயத்தின் உயிர் கரைந்து போவதாகத் தோன்றுகிறது. இயற்கை யாகவும், தர்க்க ரீதியாகவும் உண்மைகளைப் பாதிக்காத தத்துவங்கள் இருக்க முடியும் என்று என்னுல் நம்ப முடிய வில்லை, எல்லா உண்மைகளும் குறிப்பிட்ட உண்மைகள் தான். இருந்தாலும் நுண்ணிய வகை வாதிகள் பரம் பொருள் மொத்த அனுபவத்துடன்தான் உறவு கொள்ளும் சில்லறை நிகழ்ச்சிகளுடன் உறவாட இறங்கி வராது என்று கூறுகிருர்கள்.''

சமய அனுபவத்தைப்பற்றி ஜேம்ஸ் கூறும் இந்தப் பகுதி கள் சமய அனுபவத்தின் சொந்த, அந்தரங்க அனுபவம் என்ற தன்மைக்கு அவர் கொடுக்கும் அழுத்தத்தைக் காட்டு கின்றன. சமயத்திற்கு ஆதரவாக சித்தாந்திகள் கூறும் சர்வ வியாபகமான, தர்க்க ரீதியான தத்துவ உணர்வைவிட சமயத்திற்கு அடிப்படையான இருவகை உணர்விருப்பதை அவர் ருசுப்படுத்த முயன்றிருக்கிருர்; அவையாவன—சமய பாவம், சமய ஞானேதயம் சமய அனுபவத்தின் உணர்ச்சி நிலை, மெய்ப்பொருள் அறிவு நிலை.

ஞானேயத்தைப்பற்றி அவர் கூறுவதில் சில அமெரிக்கப் பண்புகளை வற்புறுத்திக் கூறுகிருர். இயற்கைச் சூழ்நிலையில் பிறக்கும் மெய்ப்பொருள் அனுபவம்பற்றி அவர் விரிவாகக் கூறியிருக்கிருர். இந்த அவஸ்தையைப் பற்றிக் கூறும் பொழுது தாம் சேகரித்த சம்பவங்கள் எல்லாம் இயற்கைச் சூழ்நிலையில் ஏற்பட்டிருப்பதையும் குறிப்பிடுகிருர். உலகி யல் தன்மை கொண்ட மெய் நிலைகளையும், பிரகிருதிலீன உணர்வு நிலைகளையும் பற்றி விரிக்க ஆரம்பித்து அவற்றிற்குச்

சமய ரீதியான அற்புத அனுபவத்துடன் இருக்கும் தொடர்ச்சியைக் காட்டுவதுதான் தம் நோக்கம் என்று விளக்குகிறார். ஆனால் தம்முடைய அனுதாபத்தை எல்லாம் உலகியல் உணர்வு நிலையாளர்கள் மீதும் பிரகிருதி லீனத்தின் மீதும் பொழிந்து விடுவதால், சம்பிரதாயமான மெய்ப்பொருள் சமய உணர்வு நிலையாளரைப் பற்றிக் கூறவரும்பொழுது அவர்எழுத்தின் வேகம் குறைந்து விடுகிறது. அமெரிக்க மெய் ஞானிகளுள் பெஞ்சாமின் பால்பிளட்டின் 'ஸ்மரணையை அழிக்கும்' மெய்யறிவு வர்ணனையைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார் ; ரால்ப் வால்டோ டிரைனின் "அகண்டத்துடனலயம்" என்ற புத்தகத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். வால்ட் விட்மன் கூறியிருப்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்: " நாயைப் பிணைக்கும் வேடன் கை சங்கிலிபோல, பொருள் தொகுப்பு முழுவதையும் கண்ணுக்குப் படாமல் ஊடுருவிப் பிடிக்கும் இழையை, தெய்வத்துப்பை, ஆன்மக் கண்ணால் கண்டு." மெய்ப் பொருள் ஞானோதயம் என்பது மன உணர்ச்சி நிலை அல்ல என்ற அவருடைய கருத்து பெஞ்சாமின் பால்பிளட் அவருடைய ஆம்ஹாஸ்டு தோழர் க்ஸெனஸ் கிளார்க் ஆகியோர் எழுத்தில் வற்புறுத்தப்பட்டிருப்பதை அவர் காண்கிறார். உணர்ச்சிக்கு அறியும் சக்தியில்லை ; ஆனால் மெய்ப் பொருள் அறிவு நிலையான அனுபவம் பெற்றவருக்கு அதுவே பிரமாணமாகி விடுகிறது ; உண்மையை அறிவு பூர்வமான முறையில்லாமல் உணரும் தனி நிலை. பிளட், கிளார்க் ஆகியோரின் எழுத்தினின்று சில பகுதிகளை மேற்கோள் காட்டுகிறார். முன்பைவிட இப்பொழுது அவை வியக்கத்தக்கனவாயிருக்கின்றன ஏனெனில் ஜீவ அவஸ்தை வாதத்தின் அடிப்படைகள் எல்லாம் அவற்றில் காணப்படுகின்றன.

தெய்வீக ஞானோதய நிலை உணர்ச்சி நிலை அல்ல ; அது ரஸமற்றது. அது சென்று போனதின் உபதேசம்......... ஸ்மரணையை அழிக்கும் இந்த ஞானோதயம் தவிர்க்க முடியாத தொடர்ச்சியின் சுழலாக, மெய்ப்பொருள் வெளிபடும் பகிரங்க ரகசிய மர்மத்தை மனிதனுக்கு உபதேசம் செய்கிறது. தவிர்க்க முடியாதது என்பதுதான் சரியான சொல். அதற்குக் காரணம் அதற்குள்ளேயே இருக்கிறது—நேர்ந்து தீரவேண்டியது. அன்பாலோ வெறுப்பாலோ, மகிழ்ச்சி

யாலோ துயரத்தாலோ, நன்மையாலோ, தீமையாலோ அது இயங்கவில்லை. ஆதியோ அந்தமோ நோக்கமோ அதற்கில்லை.

பொருள்களின் பன்மையைப் பற்றியோ, வகைகளைப் பற்றியோ அது விவரம் கூறுது ; வரலாற்றையும் தெய்வீகத் தன்மையானவைகளையும் பாராட்டும் பொழுது வாழ்வின் தன்மையையும் காரணத்தையும் காட்டும் சொந்த அந்தரங்க அனுபவத்தைப் பாராட்டில் நிரப்புகிறது. அப்பொழுது பழைய நினைப்பை எழுப்புகிறது—எப்பொழுதோ நடந்தது போன்ற, நடக்கக்கூடியது போன்ற, நினைப்பு.

மனஇயல் சோதனையாளரான ஜேம்ஸ் அனுதாபத்துடன் இவற்றை எல்லாம் கவனித்துக் கொள்கிருர் ; ஆனுல் அவருக்கு முக்கியமான விஷயம் இவற்றின் பயன் என்ன என்பதுதான். பெஞ்சாமின்பாலைப் பற்றி அவர் விசேஷக் அக்கறை காட்டுகிருர் : ஏனென்ருல் தனி மனிதனின் முக்திக்கு தெய்வீக ஞானம்தான் மார்க்கம் என்பதை இது காட்டுகிறது ; தவிர சமய ஸ்தாபன ரீதியான தொந்தரவுகளுக்கும் ஜிஹோவாவின் சாபங்களுக்கும் ஆள்பட்டு நைந்தவர்களுக்கும் அந்தரங்க ஞானேதயமே சாந்தி அளிக்கிறது என்ற ஜேம்சின் கருத்துக்கு ஆதரவாகவும் இவர் அமைகிருர். பிளட் ஒப்புக் கொள்வதாவது : " அடிப்படைப் பாதுகாப்பைப் பற்றிய பாடம் இது ; கடவுளரசு அகத்துள் அமைந்திருக்கிறது. நாட்கள் எல்லாம் தீர்ப்புக்கூறும் பெருநாட்கள்தான் நித்தியமாக இருப்பதற்கு வாழ்வின் திருப்பம் என்று இருக்க முடியாது; முழுமையைப் பற்றிய திட்டமும் இருக்க முடியாது......எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டதைப் போல் உலகம் இனி அந்நியமான பயங்கரப் பொருளல்ல. நேற்றுவரை ஜீஹோவாவின் சாபங்கள் அதிர்ந்த, வெப்பமான, மேக மாசு படிந்த கொத்தளங்களை விட்டு, என் ஆன்மக் கடற்பறவை இரவில் சிறகு விரித்தெழுந்து அஞ்சாத நோக்குடன் தூரத்தை அளந்து பார்க்கிறது. வாழ்வின் பொருளை அறிவேன்; அறிவேனென்றும் அறிவேன்? ஒரே காலத்தில் ஆன்மாவுக்கு நம்பிக்கையையும் வியப்பையும் தரும் சிருஷ்டியின் சரியான கேந்திரத்தை அறிவேன்."

பிரகிருதி லீனம், பலவிதமான இயற்கை உணர்வு நிலை கள். ஆகியவற்றைச் சோதனை செய்ததிலிருந்து இதேமாதிரி ஜீவனின் வாழ்வுக்கும், கதிக்கும், தர்க்கம், உணர்ச்சி ஆகிய மாயா விளக்கங்களின் தயவின்றி, தெய்வ ஞானோ தயத்தால் விளக்கம் தர முடியுமா என்று ஜேம்ஸ் சோதனை செய்யப் புகுந்தார். மெய்ப் பொருள் அறிவுநிலை புறப் பொருள் அல்லது உண்மையுடன் ஏற்படும் உறவானதால் அது உடலில் தோன்றும் மாறுதலாகவோ கவனிக்கப்படும் எண்ணமாகவோ ஆகிறது; அது தர்க்க ரீதியானதுமல்ல, உணர்ச்சியுமல்ல.

சமய அனுபவத்தின் உணர்ச்சி வகைகள்பற்றி ஜேம்ஸ் "ஆரோக்கிய மன வகை", "நோயுற்ற ஆன்ம வகை" என்று இரு தலைப்பின் கீழ் ஆராய்கிறார். ஆரோக்கிய மன வகை யினர் பிறவியிலேயே மகிழ்ச்சி உடையவர்கள்; எமர்சன், தியோடோர் பார்க்கர், எட்வர்ட் எவெரெட்ஹேல், வால்ட் விட்மன், புதிய சிந்தனை வாதிகள், கிறிஸ்தவ விஞ்ஞான வாதிகள் ஆகியோர் இவ்வகையினர் என்கிறார். அவர் மேலும் கூறுகிறார் :

சென்ற ஐம்பதாண்டு காலமாக, தாராளத் தன்மை கிறிஸ்தவ மதத்தில் வளர்ச்சி என்பது தேவாலயத்தில் ஆட்சி புரிந்து வந்த பழமை நரகநெருப்பு சித்தாந்தத்துடன் இணைந்து நின்ற நோய்த் தன்மை மீது ஆரோக்கியமான வகைபெற்ற வெற்றியே ஆகும்......சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக வேகம் பெற்று இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்குள் ஐரோப்பா விலும் அமெரிக்காவிலும் விரைவாகப் பரவியுள்ள பரிணாம வாதத்தில் புதிய இயற்கை சமயத்திற்கான அஸ்திவாரம் காணப்படுகிறது. தற்காலத்திய தலைமுறையினர் பெரும் பான்மையோர் மனத்தில் கிறிஸ்தவ மதத்திற் கிருந்த இடத்தை அது பிடித்துக் கொண்டு விட்டது. பரிணாமம் என்ற சர்வ வியாபகமான கொள்கை சீர்திருத்தத்திற் கும் வளர்ச்சிக்கும் இடம் கொடுப்பதால் ஆரோக்கிய வகையான சமய பக்தர்களுக்கு அது வெகு பொருத்தமான கொள்கையாகப் படுகிறது. அவர்கள் பயன் படுத்துவதற் கென்றே சிருஷ்டிக்கப்பட்டது போல் தோன்றுகிறது."

இந்தப் பகுதியில் ஜேம்ஸின் முரண்பட்ட இரட்டைத் தன்மை வெளிப்படுகிறது. அவரே தாராளவாதத் தன்மை வளர்ச்சி அடைந்ததின் விளைவுதான். தாராள வாதம் புதிய புறச் சமயச் சாயலும் நம்பிக்கையும் உடைய ஒரு சமயத்தை உண்டாக்கி விட்டது; ஆனால் அவரே தன்னுடைய பிதிரார் ஜிதத்தைக் கண்டிக்கிறார். அவசரமான சமூகப் பிரச்னைகள் இருப்பதாகத்தாம் நினைக்கவில்லை என்றும், கடவுள் நியூ இங்கிலாந்தின் பால் அன்பு காட்டியிருக்கிறார் என்றும் ஷெயிலர் மாதியூசைப் போல் அவர் கூறியிருக்கலாம். அதே சமயத்தில், இந்த ஆரோக்கிய மனத் தன்மையின் வெறுமையை ஷெயிலர் மாதியூசைப் போல் அவரும் உணர்ந்து விட்டார்; ஒரு விதமான சிறுபிள்ளைத் தனமென்றே கருதினார். அவருடைய நையாண்டிப் பகுதியில் இது ஒன்று.

நமக்கெல்லாம் சிநேகிதன் இருப்பான்; சிநேகிதனைவிட சிநேகிதி இருப்பாள்; குமரியாய் இருப்பாள்; நிர்மலமான வானநீலம் கொண்ட ஆன்மா. அவளுக்கு உறவெல்லாம் மலர்களும் பறவைகளும்தான். அவளுக்குத் தொடர்பெல்லாம் கறுத்த மனோ விகாரத்துடனல்ல; அற்புதமான கபடமின்மையுடன்தான். கடவுளைப் பற்றியோ மனிதனைப் பற்றியோ அவளுக்குக் கசப்பேதுமில்லை. சமய மகிழ்ச்சி ஆரம்பத்திலிருந்து நிரம்பி இருப்பதால், பூர்வீகச் சுமையிலிருந்து விடுதலை வேண்டுமென்ற அவசியம் அவளுக்கில்லை... பிராடெஸ்டெண்டு தேவாலயங்களைவிட ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களே இம்மாதிரியானவர்கள் வளர்ச்சிக்குகந்த பூமி. ஏனென்றால் பிராடெஸ்டெண்டு சமயத்தவரின் உணர்ச்சி மோஸ்தரெல்லாம் அவமே நினைந்துவருந்தும் சாயலுடையவை. ஆனால் பிராடெஸ்டெண்டு சமயத்தில்கூட இவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்; பிராடெஸ்டெண்டு மதத்தின் கிளையாக அபிவிருத்தி அடைந்துள்ள ஏகதெய்வ வாதிகளிடையும் இம்மாதிரி மனப்பான்மை கொண்டவர்கள் முக்கியமான ஆக்க ரீதியான பணி செய்கிறார்கள்.''

இவ்விதத்தில் பாமர சமயத்தினின்று தம்மை ஜேம்ஸ் ஒதுக்கிக் கொள்கிறார் என்பது தெளிவு; வேதனையும் நோயுற்ற மனமும் கொண்ட இரு பிறப்பெடுத்தோருக்கே அவர் மரியாதை காட்டுகிறார் என்பது தெளிவு. இளம் வய

தில் சோர்வை எதிர்த்து ஜேம்ஸ் நடத்திய போராட்டத்தை அறிந்தவர்களுக்கு இம்மாதிரியான சமய அனுபவங்கள்பற்றி இவருக்கு எப்படித் தெரிந்ததென்ற வியப்பு ஏற்படாது. ஆனல் ஜேம்ஸ் தம் சொந்த அனுபவத்தைவிட்டு விட்டு மன இயல் வாதிகளிடையிலும் சமயத் தலைவர்களிடையிலும் மன மாற்றம் பற்றி எழுந்துள்ள அககறையையே பிரதிபலிக்கிறார். ஏமாற்றம் ஏற்பட்டிருப்பதையும் அவர் பிரதிபலிக்கிறார்.

தத்துவக் கொள்கை என்ற முறையில் ஆரோக்கிய மனப்பான்மை வகை திருப்தி தருவதென்று கொள்ள முடியாது; ஏனென்றால் தீமை என்பது வாழ்வின் உண்மையான அம்சத்தில் ஒன்று; இந்தத் தீமைக்கு விளக்கம்தர அவர்கள் திட்டமாக மறுக்கிறார்கள். ஒருக்கால் வாழ்வின் பொருளைக் காட்ட இதுவே சிறந்த திறவுகோலாயிருக்கலாம்; உண்மையின் ஆழ்ந்த நிலைகளைக் காணும்படி நம் கண்ணைத் திறக்கும் ஒரே வழியாகவும் இருக்கலாம். சாதாரண வாழ்க்கை சில சமயங்களில் பைத்தியக்காரத் தன்மையின் சோர்வுக்கும் வேதனைக்கும் போட்டியாகவே அமைந்துவிடுவதுண்டு; அச் சமயங்களில் அத்தீவிர வேதனை வெற்றியும் பெற்று விடுவதுண்டு. துயரத்திற்கும், துன்பத்திற்கும், சாவுக்கும் போதுமான கவனம் செலுத்தத் தவறும் ஆரோக்கிய மன வகை, இவைகளையும் சேர்த்துக் கொண்டு வாழ்வுக்குத் தீர்வுகாண முயலும் தரிசனங்களை விடக் குறைபாடு உடையதுதான். எனவே, துயரத்தின் அம்சங்களே மிகுந்த சமயம்தான் பூர்ணமான சமயமாகும். இவற்றுள் நாம் நன்கு அறிந்தது பௌத்த மதமும் கிறிஸ்தவ மதமுமே ஆகும். அவை எல்லாம் குறிப்பாக விடுதலை அளிக்கும் சமயங்கள்.''

ஆரோக்கிய மன வகைக்கும் நோயுற்ற மன வகைக்கும் அடிப்படையான வித்தியாசமிருந்த போதிலும் 'சமய அனுபவ வகைகள்' என்ற அவருடைய புத்தகத்தில் குறிப்பான ஒரு பகுதி இருக்கிறது. ஞானிகள் லக்ஷணம் பற்றி ஆராயப் புகும்போது இரு வகையிலும் ஞானிகள் இருக்க முடியும் என்று முடிவு கட்டியிருக்கிறார்; இம் முடிவு மேலே கண்ட முடிவைவிட இன்னும் முக்கியமானது. தம்முடைய முடிவு

களுக்கு எழுதியுள்ள அடிக்குறிப் பொன்றில் முக்கியமான விஷயமொன்றை அவர் ஒப்புக்கொள்கிறார் :

"ஆரோக்கிய மன வகைக்கும் நோயுற்ற மன வகைக்கும், இயற்கையாய் ஒரு பிறப்பெடுத்தவருக்கும் ஞானத்தால் மறுபிறப்பெடுத்தவருக்கும் உள்ள முரண்பாடு......அநேகர் நினைப்பது போல் அவ்வளவு தீவிரமானதல்ல. வாழ்வைப் பற்றி ஒரு பிறப்பாளர் நேராக அறிந்திருப்பது வெறும் அறம் என்றும், சமயமல்ல வென்றும், மறு பிறப்பாளர்கள் கேலி செய்கிறார்கள். வைதீக மனப்பான்மையுள்ள போதகர் ஒருவர் டாக்டர் சானிங் என்பவரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "அவருடைய குணத்தின் அதிசயமான நேர்மையால் சமய வாழ்வின் சிறந்த பகுதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கிறார்" என்றாராம். வாழ்வைப் பற்றி மறுப்பிறப்பாளரின் நோக்கு விரிவாகவும் பூர்ணமாகவும் இருக்கிறது; ஏனெனில் தீமை என்னும் பிரச்னைக்கு முடிவு காணும் முயற்சி அதில் அடங்கியிருக்கிறது; போராட்டத்தாலோ பயபக்தியாலோ இவர்கள் பெறும் வாழ்வில் ஆரோக்கிய மன வகையும் நோயுற்ற மன வகையும் கலந்து இரண்டையும் மீறிய இணக்கம் பெற்று விட்டன. தீமையை இவர்கள் தட்டிக் கழிக்கவில்லை; அவர்களுடைய உன்னதமான சமய மகிழ்ச்சியில் அது உருமாற்றம் அடைந்துவிடுகிறது...ஆனால் இந்த இருவகையானவர்களும் கடவுளுடன் உறவு கொள்வதால் அடையும் அனுபவம் இருவருக்கும் நடைமுறையில் ஒரே விதமான பயனை விளைவிக்கிறது; இந்த அனுபவத்தை அவரவர்கள் குணத்துக்குத் தக்கபடி அடைய விட்டுவிடுவதுதான் நல்லது......இந்த அனுபவம் பெறும் பொழுது ஏற்படும் நெருக்கடியின் கடுமையை அதிகம், கொஞ்சம் என்று வேண்டுமானால் சொல்லலாம். எவ்வளவு காலம் ஒருவன் தீமையை எண்ணியே புழுங்க வேண்டும் அல்லது குறுக்கு வழி கண்டு எப்பொழுது அதை ஒழிக்க வேண்டும் ஆகிய விஷயங்களும் இதே மாதிரி கூட குறைவு விஷயம்தான். எனவே அநேக சந்தர்ப்பங்களில் இவர் ஒரு பிறப்பாளர், இவர் மறுப்பாளர் என்று வகைப்படுத்துவதே நியாயமற்றதாகலாம்."

சோதனை முறை மன இயல் சாஸ்திரியும் சோதனைமுறை தத்துவ தரிசியுமான ஜேம்ஸின் சமய ஆராய்ச்சியின் முடிவு

ஞானத் தன்மையின் பயனைப் பற்றியதாய் அமைந்தது பொருத்தம்தான். சமய வாழ்வின் பல அம்சங்களையும் சேர்த்தே 'ஞானத் தன்மை' என்ற சொல்லுக்கு விரிந்த பொருள் கொள்கிறார்; சமயத்தால் விளையும் குணமும் துர்க் குணமும் நாகரீக வாழ்வுக்கு எப்படிப் பயன்படுகிறதென் பதை அறஇயல் வாதி போல் அவர் மதிப்பிடுகிறார். ஞானி களின் தன்மையில் சகஜ மெது அதீதமெது என்று கண்டு பிடிக்க ஜேம்ஸ் செய்யும் முயற்சியிலிருந்து இந்த நூற்றாண் டின் ஆரம்பத்தில் அமெரிக்காவை ஆண்டுவந்த சமய லக்ஷி யங்கள் தெரிகின்றன.

சமய அனுபவமென்பது அந்தரங்கமானது, எதிர்பார்க்க முடியாதது, முறைப்படுத்தப்படாதது என்று ஜேம்ஸ் முத லில் கூறுகிறார். எனவே எந்தவிதமான வைதீக சமயமும் சுமைதான். ஏறக்குறைய ஞானிகள் எல்லோரும் "ஒண்டி யான" வர்கள்தான்.

"நாம் ஆராயும் சமய அனுபவம் அந்தரங்கமாய் நெஞ் சுக்குள்ளே வாழ்ந்து முடிவது. இம்மாதிரி நேரிடையான அனுபவம் பிறக்கும் பொழுது பார்ப்பவர்களுக்கு இது சமய விரோதமான புதுமையாகவே பட்டிருக்கிறது. இது உலகில் வரும்பொழுது ஒளிவு மறைவின்றி 'ஒண்டி'யாக வருகிறது; இந்த அருள் பெற்றவரைக் கொஞ்ச காலமேனும் சகஜ வாழ்வை விட்டு ஒட்டி விடுகிறது......சமயம் வைதீக முறை யாகி விட்டால், அதன் உள்ளியக்கம் ஓய்ந்து விடுகிறது; ஊற்று வற்றி விடுகிறது. பக்தர்கள் பிறர் அனுபவத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றனர்; தங்கள் பங் குக்கு தீர்க்க தரிசிகளைக் கல்லால் அடிக்கின்றனர்......

சமயத்தின் மீது சாட்டப்படுகிற குற்றச் சாட்டெல்லாம் உண்மையில் சமயத்தின் மீது சாட்டப்படக் கூடியதல்ல; சம யத்தின் மோசமான நடைமுறைக் கூட்டாளியான பொது ஸ்தாபன ஆதிக்க ஆசையின் மீது சாட்டப்பட வேண்டும். சமயப் பிடிவாதங்கள் மீது சாட்டப்படும் குற்றத்தை எல் லாம் சமயத்தின் மோசமான அறிவுக் கூட்டாளியான கொள்கை வெறியின் ஆதிக்க ஆசை மீது சுமத்தவேண்டும்—வேறெதுவும் புகமுடியாதபடி தத்துவக் கட்டுக் கோப்பைச் சட்டமாக்கி விடவேண்டும் என்ற வெறி. இவ்விரண்டு வித

ஆதிக்கமும் சேர்ந்துதான் சமய ஸ்தாபன ஆதிக்கமாகிறது; இம்மாதிரியான இருவித ஆதிக்கப் பாங்கை தூய உள்ளியக்க மெய்ப்பாடுகளுடன் தயவு செய்து குழப்பவேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்; இங்கு தூய உள்ளியக்க வாழ்வைப் பற்றி மட்டுமே ஆராய்கிறோம்.''

ஸ்தாபன ரீதியான சமயத்தைப் பற்றிய இக்கண்டத்தை ஜேம்ஸின் தந்தையாரே செய்திருக்கக்கூடும்; சமய அனுபவத்தை அரசியலிலிருந்து பிரிக்கவேண்டும், ஞானிகள் வாழ்வின் அறநெறியைக் கொண்டுதான்-கொள்கைகளைக் கொண்டல்ல—அவர்களை மதிப்பிட வேண்டுமென்ற நோக்கம்தான் ஜேம்ஸின் இக்கண்டனங்களுக்குக் காரணமாகும். ஒரு ஞானி தம்முடைய பக்தியை அளவுக்கு மீறிச் செயல்படுத்தி விட்டால், அது அவருடைய சமய அனுபவத்தின் குற்றம்; குற்றங்களைப் புரியும் இயக்கத்தையோ தேவாலயத்தையோ அவர் தோற்றுவிப்பாரானால், குற்றங்களுக்குப் பொறுப்பு சமயமல்ல. சமய அனுபவத்தின் பயன்பற்றி ஜேம்ஸ் கண்ட முடிபுகளை இவ்வாறு சுருக்கிக் கூறலாம்:

(1) கடவுளிடம் பக்தி காட்டுவதென்பதொன்றுண்டு; அளவுக்கு மீறினால் அது சமய வெறியை உண்டாக்கும். சமய வெறி என்று அவர் தரும் தீமைகளின் பட்டியலில் ''தரத்தைப் பொறுத்து ஞானிகளை மதித்தல்'' என்பதும் சேர்ந்திருக்கிறது.

(2) பக்தியுடன் நெருங்கிய தொடர்புடையது தூய்மை; இது மெய்ப்பொருள் அனுபவ நிலையாகி விடலாம் என்ற ஆபத்தும் இருக்கிறது.

இதைப் பற்றி ஜேம்ஸ் கூறுகிறார்.

சமூக நியாயம் என்பது பற்றிக் கத்தோலிக்க மதம் பதினாறுவது நூற்றாண்டில் எவ்வித கவலையும் படவில்லை; உலகத்தை நாசமாகப் போக விட்டு விட்டுத் தன் ஜீவனுடைய முக்திக்கு வழி தேடுவது கேவலமான திட்டமாகத் தோன்றவில்லை. சரியோ தவறோ பொது விஷயங்களில் உதவி செய்யும் பான்மை மனப் பண்பின் அத்தியாவசியமான அம்சம் என்று இன்று கருதப்படுகிறது; பொது சேவையும் தனிப்பட்டவர்களுக்கு உதவியும் தெய்வ சேவையாகவே கருதப்படுகிறது.

(3) தயை என்பது ஞானியின் மற்ருெரு பண்பு, மிகைப் பட்டால் விவேகமற்ற நிலேயை உண்டாக்கி விடுகிறது-தகுதி யற்றவைகளேக் காக்கவும், பிச்சைக்காரர்களேயும் புல்லுருவி களேயும் பேணி வளர்க்கவும் நேர்கிறது. எதிர்ப்பையே காட் டாதிருத்தல் தயையின் மிகையா என்பது பற்றி ஜேம்ஸ் கூறத் தயங்குகிருர்: ஆனுல் சிறந்த கருத்தொன்றைக் கூறு கிருர்.

நிலேமை உயர வேண்டுமானுல் முதலடி எடுத்து வைக்க யாரேனும் தயாராக இருக்கவேண்டும்; அதனுல் ஏற்படும் ஆபத்தையும் ஏற்கத் தயாராக யிருக்கவேண்டும். தயையை யும், எதிர்ப்பைக் காட்டாதிருத்தலேயும் ஞானிகளேப் போல் செய்து பார்க்காதவர்கள் இம்முறைகளால் வெற்றி கிட்டுமா கிட்டாதா என்று சொல்லமுடியாது. அவை வெற்றி பெறும் பொழுது. பலாத்காரமோ உலகரீதியான புத்திசாலித் தனமோ பெறும் வெற்றிகளே விட சக்திவாய்ந்தவையாக இருக்கின்றன......உலகியல் அறிவை பயமின்றி விட்டு விட்டு மேலே செல்லலாம் என்று அவர்கள் நடைமுறையில் ருசுப் படுத்துவதுதான் ஞானிகள் உலகுக்களிக்கும் பரிசு".

(4) தெய்வத்துடன் கொள்ளும் அந்நியோன்ய பாவம் என்று பிரார்த்தனேக்கு விரிந்த பொருள் கொண்டால் பிரார்த்தனே தான் சமயத்தின் ஆன்மாவும் ஜீவரசமுமாகும்; ஆனுல் ஜீவனின் முக்தி பற்றியதாக இல்லாத போதும், உடல் நலத்திற்கு வெறியுடன் வழிகாட்ட வரும் போதும் அது வெறும் கோரிக்கையாய் விடும். மனிதனுடைய அடிமனச் சக்தியின் ஒரு பயன்தான் சமய ஆவேசம் என்று ஜேம்ஸ் கருதுகிருர்.

(5) பாபத்தின் ஒப்புதலே சில வார்த்தைகளுடன் விட்டு விடுகிருர். இந்த முறையை இதே இழிந்த நிலேயில் போக விட்டுவிட வேண்டுமா அல்லது இன்னும் பகிரங்கமாக்க வேண்டுமா என்பது பற்றி ஜேம்ஸ் எதுவும் சொல்லவில்லே. அவர் கூறுகிருர்.

"பாப ஒப்புதல் செய்தவனுக்குப் பொய்மைகள் ஒழிந்து விட்டன; உண்மை நிலே ஆரம்பித்து விட்டது; தன் கேவ லத்தை அவன் வெளிப்படுத்தி விட்டான். அவை ஒழியா விட்டாலும்கூட அதற்குப் பிறகு நற்குணம் போன்ற பூச்சை-

அவற்றின் பேரில் அவன் பூசப் போவதில்லை—மெய்யான நிலையிலாவது வாழ்கிறான். ஆங்கிலோ—சாக்சன் சமுதாயத்தில் இவ்வழக்கம் ஒழிந்ததற்குக் காரணம் விளங்கவில்லை. ரோமன் கத்தோலிக்க சமய முறைக்குத் தோன்றிய எதிர்ப்பின்விளைவு என்ற சரித்திர ரீதியான விளக்கம் சரி; ஏனென்றால், அம் முறையுடன் விரதமும், விமோசனமும் முதலிய ஏற்காத அனுஷ்டானங்களும் பிணைந்திருந்தன. ஆனால் மற்றொரு புறத்தில், பார்வியைப்பற்றிய வரையில், ஒப்புதலால் கிடைக்கும் திருப்தியை அவ்வளவு எளிதாக இழந்துவிட அவன் பாபச் சுமை இடங்கொடுக்காதென்று தோன்றுகிறது. பலர் விஷயத்தில் ரகசியங்கள் இன்னும் அதிகமாக அம்பலமாக வேண்டும்; உடையாதிருக்கும் கட்டி உடைந்து சீழ் வெளிப்பட்டு நிவாரணம் ஏற்பட வேண்டும். பாப ஒப்புதலைக் கேட்பவர் தகுதியற்றவரானாலும் பெரிதில்லை என்று தோன்றுகிறது. பகிரங்கமாகப் பாப ஒப்புதலைச் செய்வதற்குப் பதிலாக குருமாரிடம் மட்டும் தெரிவித்தால் போதுமென்ற முறையை ரோமன் கத்தோலிக்க சமயம் உலகியல் பயன்களுக்காக வகுத்திருக்கிறது. ஆங்கிலம் பேசும் பிராடெஸ்டெண்டுகளாகிய நாம் தன்னம்பிக்கையையும் இணக்கமின்மையையும் கொண்ட மனப்பாங்குடைவர்களாதலால், கடவுளிடத்தில் நம்முடைய ரகசியங்களைத் தெரிவித்தால் போதுமென்று கருதுகிறோம்.

துறவைப் பற்றித்தான் ஜேம்ஸ் ஆழ்ந்து ஆராய்ந்திருக்கிறார். தத்துவதரிசிகள் எல்லாம் துறவைக் கண்டித்துவரும் நேரத்தில், துறவு முறையை நவீனப்படுத்தக் கூடுமானால் ஆதரிக்கத் தக்கதென்று அவர் குறிப்பாகத் தெரிவிக்கிறார். யுத்தத்தால் நைந்திருக்கும் உலகுக்குத் தேவையான நியமம் ஏழ்மையே என்று ஜேம்ஸ் கூறுகிறார்; யுத்தத்திற்குச் சமமான அந்தஸ்துள்ள அறத்துறை அம்சம ஏழ்மையே என்ற அவர் கொள்கையின் சமய விளக்கமாக இதை இன்றும் படிக்கலாம்.

சமயத்தின் நடைமுறைப் பயனைக் கொண்டு அல்லது விளைவிக்கக் கூடிய பயனைக் கொண்டு மதிப்பிடும் அற இயல் வாதி ஜேம்ஸ் என்பதைக் காட்டும் சில சிறந்த பகுதிகளைப் பார்த்தோம்; இன்னும் நிரம்ப இருக்கின்றன. ஆனால் சமய அனுபவத்தின் கலை அம்சத்தை அவர் மறுக்கும் பொழுது

தான் அவர் அற இயல்வாதி என்பது சிறப்பாக ருசுவாகிறது. சமய அனுபவத்தில் காணும் கலை அம்சத்தை 'இரவல் துறை' என்றே அவர் எப்பொழுதும் குறிப்பிடுகிறார். அவர் பொதுப் பிரார்த்தனை முறையையும், குறிப்பாக கார்டினல் நியூமனை யும் ஓரளவுக்கு நையாண்டி செய்கிறார். ஆனால் சமய அனுபவ மென்ற வகையில்; கலைவளம், அரசியல் முதலிய பிறவகைகள் கலவாதிருக்க வேண்டும் என்பதற்காகவும் அந்த நையாண்டி செய்திருக்கிறார் என்று நினைக்க வேண்டும். சமய அனுபவத் தின் உள்ளியக்கப் பகுதியைச் சேர்ந்தது சொந்த அறநெறி என்பது அவர் கருத்து; ஆனால் கலையின் அந்தரங்க அம்சங் கள்கூட வேறு வகைப்பட்டதென்பது அவர் கருத்து. இவை ஆழ்ந்த சிந்தனைக்குரியன.

"தெய்வ குணங்களின் பட்டியலைக் கவர்ச்சி மிகுந்த நடையில் நியூமன் தருவதிலிருந்து அவை எவ்வளவு கலை அம்சச் சிறப்புடையன என்பதை அறிகிறோம். வெறும் பக்தி யுடன் இந்த உன்னதமான, மர்மமான அடைமொழிகளைக் கூட்டிக் கொள்வதால் வளம் உண்டாகிறது—இசைக் கருவி யும் பழைய பித்தளைப் பொருள்களும், சலவைக் கற்களும், காரைச் சுவர் சித்திரங்களும் தேவாலயத்தை வளப்படுத்து வதுபோல பக்திக்கு அடைமொழிகள் சூழ்நிலையையும் அனுசு வரங்களையும் தருகின்றன, அவை வாழ்த்துக் கீதங்கள் போலும், பிரதாபத்திற்கு வணக்கம் போலும் இருக்கின்றன; புரியாமலிருக்கும் காரணத்தாலேயே இன்னும் அற்புதமாகத் தோன்றுகின்றன.

கிறிஸ்தவ மதத்தைச் சேராதவர்கள் தங்கள் விக்ரகங்கள் மீதும், மின்னும் நகை, நட்டு மீதும் கண்ணும் கருத்துமாய் இருப்பது போல நியூமனைப் போன்ற மனமுடையவர்கள் இந்த அடைமொழிகளைப் பற்றிக் கவலை கொள்கின்றனர்...... ஏறி இறங்கும் முரண்பட்ட இயக்கங்களால் குலையாத நிலைப் பும், சிறு விஷயங்களுக்குக் கூடப் பெருமையும் அமைந்த (ஏனென்றால் உன்னதமான பல ஸ்தாபனங்கள் அவற்றை அந்த அந்தஸ்தில் வைக்கின்றன) இப்பெரும் குழப்பத்து டன் ப்ராடெஸ்டெண்டு மதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவு ரசமின்றிப் பின்னது தோன்றுகிறது! புதரில் கூடக் கடவுளை மனிதன் சந்திக்கலாம் என்று பீற்றிக் கொள்

ளும் தனி ஞானிகளின் சமய வாழ்வு எவ்வளவு பொட்டல் போல் தோன்றுகிறது !......ராஜாதி ராஜன் என்ற கற்பனையை ஓட்டாண்டியாக்கி விடுகிறதே !''

ஆன்மீக ஆழத்தில் கத்தோலிக்க மதத்தைவிட பிராடெஸ்டெண்டு மதம் எவ்வளவு உயர்வாக இருந்த போதிலும், இக்கலை அம்ச உணர்ச்சிகளின் வலிமை காரணமாகப் பாதிரிமார் முறையான சமயத்தினின்று பலரைத் திருப்பிவிடலாம் என்ற நினைப்பு இன்று வெற்றி பெறுது. கத்தோலிக்க மதத்தில் கற்பனைக்குகந்த புல்வெளியும் நிழலும் இருக்கின்றன; பலவித கண்ணறைகளும் தேனும் இருக்கின்றன; மனித குணத்தைப் பல வழிகளில் ஈர்ப்பதில் கடுமையைப் புகுத்துவதில்லை. இவ்வளவும் பெற்றுள்ள கத்தோலிக்கக் கண்களுக்கு பிராடெஸ்டெண்டு மதம் பிச்சைக்காரர் விடுதி போலத்தான் தோன்றும். எதிர்மறையான இந்தப் பான்மையைக் கத்தோலிக்கர்கள் புரிந்து கொள்ள முடியாது; ஒன்றை ஒன்று புரிந்து கொள்வது சாத்யமில்லை; இவற்றின் உணர்ச்சி விசைகள் வேறுபட்டவை.''

இப்பகுதி ஜேம்ஸின் பிராடெஸ்டெண்டுபான்மையைக் காட்டுவதாகச் சொல்வார்கள்; ஆனல் உண்மையில் இது கலைஞன் நோக்கிலிருந்து எழுதப்பட்டிருக்கிறது. ஜேம்ஸ் ஒரு கலைஞன்; கத்தோலிக்க ஆடம்பரத்தையும் கால்வினிஸ்டு மதத்தினர் சமயக்கலை மீது கொண்டிருந்த அருவருப்பையும் தம் கலைச் சுவையால் வெறுத்தார். அவர் கலைப்பாங்குள்ள நவீனவாதி; வேஷங்களை வெறுக்குமளவுக்குப் பழைமையை வெறுப்பவர். அவருடைய பிராடெஸ்டெண்டு மதச் சூழ்நிலையையும், அறநெறிச் சூழ்நிலையையும்விட சம்பிரதாயமான கலைகள் மீதிருந்த வெறுப்பே கத்தோலிக்க மதத்தை நையாண்டி செய்ய அவரைத் தூண்டியிருக்கக் கூடும். அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்; தம்முடைய கலை அனுபவத்தையும் சமய அனுபவத்தையும் ஜேம்ஸ் முடிந்த அளவுக்கு வெவ்வேருகவே வைத்துக் கொண்டிருந்தார்.

## சமய அனுபவத்தைப் பற்றிய பிற விளக்கங்கள்

ஜேம்ஸின் ''சமய அனுபவ வகைகள்'' என்ற புத்தகத்திற்குப் பிறகு அவருடைய நண்பர் ஜியார்ஜ் சன்டயானுவின்

செல்வாக்கு மிகுந்த புத்தகம் பிரசுரமாயிற்று. ஜேம்ஸின் புத்தகத்திற்கு இது மிகுதியாகக் கடமைப்பட்டிருந்த போதிலும் 'சமயத்தில் அறிவு' என்ற இப்புத்தகம் சக்தி வாய்ந்த மாற்ருக இருந்தது; ஏனென்ருல் வேறு விதமான சமய அம்சங்களை அது பிரதிபலித்தது—கலை அம்சம், ஸ்தாபன முறை, ஜேம்ஸின் மூன்று வகையான உணர்வு நிலைகளுக்குப் பதிலாக (உணர்வு, அறிவு, மெய்ஞானம்) சமய வளர்ச்சியில் மூன்று கட்டத்தைப் பிரித்துக் காட்டுகிறது; அறிவுக்கு முற்பட்டது (மூட நம்பிக்கை); அறிவுக்குகந்தது (தத்துவரீதியான நம்பிக்கை); அறிவுக்கப்பால்பட்டது (கற்பனு சிருஷ்டிகள்). சமயத்தின் இருதுறைகளிலும் இவ்வளர்ச்சி காணப்படும். பக்தி : அறிவுக்குப் பொருந்திய பக்திவகை நம்முடைய ஜீவனின் அடிப்படைகளுக்கு விசுவாசம் காட்டுவதாகும்; அறிவுக்குப் பொருந்திய ஆன்மீக வகை கட்டின்றி லக்ஷியங்களைத் தேடுவதாகும். அறிவுக்கு முற்பட்ட நிலையில் பக்தி என்பது பிரமாணத்தை ஆதாரமாகக் கொள்வதும், மரபுகளைப் பின்பற்றுவதுமாகும்; அறிவுக்கு அப்பாற் பட்ட நிலையில், பக்தி என்பது அத்தியாவசியமான மெய்ப்பொருளைப் புகழ்வதாகும். அறிவுக்கு முற்பட்ட நிலையில் ஆன்மீகம் சமயவெறியாகும் (லக்ஷியம் மறந்து போன பிறகு இருமடங்கு வேகம்); அறிவுக்கப்பாற்பட்ட நிலையில் கலையின் மூலமாகவும், சித்தாந்தத்தின் மூலமாகவும் தெய்வீக உருவங்கள், சக்திகள், லக்ஷியங்கள் ஆகியவற்றை வளர்ப்பதாகும். சிறுபிள்ளைத்தனமான சமயத்திலிருந்து அறிவுநிலைசமயத்திற்கும், அதிலிருந்து கற்பனை மிகுந்த சமயங்களுக்கும் ஏறுவதில் நாகரீகமான, ஸ்தாபன ரீதியான மெய்ப்பாடுகளும், கூட்டு முறையான சமய அக்கறைகளும் சம்மந்தப்படுகின்றன.

புத்தகத்தின் அமைப்பு கத்தோலிக்க நவீனத் தன்மையின் நியாயத்தை எடுத்துக் கூறுகிறது; ஆனுல் அமெரிக்க சமயக் கல்வியில் இப்புத்தகத்தால், ஏற்பட்டுள்ள நிரந்தர விளைவுகளைப் பார்த்தால், கிரேக்க லத்தீன் நூல்கள் பக்கம் சாயச் செய்யும் பிரசார நூலாக அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது. குறிப்பாகச் சன்டயானுவின் கவிதைகளையும், "கவிதையும் சமயமும்" என்ற கட்டுரைகளையும் இவற்றுடன் சேர்த்துப் படிக்கும் பொழுது பிளேடோவின் சித்தாந்

தம், அரிஸ்டாடிலின் சித்தாந்தம், நவீன இயற்கைவாதம் அடங்கிய இக்கவிதைக் கலவை இலக்கிய வட்டாரத்தில் புதிய ஜீவதயாவாதத்தின் பைபிள் ஆகிவிட்டது—பாதி கிறிஸ்தவ இயல், பாதி கிரேக்க இயல். கட்டற்ற இளம் சிந்தனையாளர்களை ஸ்தாபனரீதியாக்கப்பட்ட சமயத்துடன் அது சமரஸப்படுத்தி விட்டது; பிடிவாதமான கொள்கையுடையவர்களுக்கு மூட நம்பிக்கையிலிருந்து விடுதலை அளித்து விட்டது. இதற்கெல்லாம் மேலாக ஜேம்ஸ் செய்த காரியத்தையே இதுவும் செய்ய முயன்றது—சமயத்திற்குப் பதிலாக அறிவை அமர்த்த, இந்தக் கொள்கைப்படி, மனிதனின் ஆன்மாவை உடலைவிட்டுப் பிரித்துப் பார்க்காமலும், அறிவையும் சமயத்தையும் முட்ட விடாமலும் அறிவு வாழ்வைப் பின்பற்ற முடியும். ஜேம்ஸைப் போலவே இங்கும் அறிவுக்கு இடைநிலை அந்தஸ்துதான், ஜீவ அனுபவத்திற்கு விளக்கம் கூறும் நிலைதான் அளிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் கற்பனை உலகத்திற்கும் அல்லது எல்லையும் கட்டுமற்ற ஆன்ம உலகத்திற்கும் அறிவு முறையான அனுபவம் வழிகாட்டக் கூடும் என்ற கருத்தை ஜேம்ஸைவிட சன்டயானாதான் உருவாக்கியிருக்கிறார்.

ஜேம்சும் ஆஸ்தீகர்களும் எழுப்பிய கண்டனங்களை சமாளிக்கும் முறையில் பாவனாவாதத்தைத் திருத்தி அமைக்க முற்பட்டார் ஜோஸியா ராய்ஸ். "கிறிஸ்தவ சமயம் என்னும் பிரச்னை" என்ற சிறந்த புத்தகத்தில் இக் காரியத்தைச் செய்தார். சமய அனுபவத்தை தயையுடனும் சமூக நோக்குடனும் இப்புத்தகம்தான் விளங்குகிறது. ஜேம்ஸ் காலத்திற்குப் பிறகு தத்துவத்தையும் சித்தாந்தத்தையும் சமரசப்படுத்தும் முயற்சி இப்புத்தகத்துடன் ஆரம்பித்ததென்னலாம். சிருஷ்டிக்கிரம ஆராய்ச்சியில் இறங்காமல், தேவாலயத்தை போல்முக்திதரக்கூடிய சமுதாயத்தைப்பற்றி எல்லோருக்கும் பொருந்தக் கூடிய கொள்கையை வகுக்க அவர் முயன்றார். இந்த தத்துவப் படி பக்திமான்கள் எல்லோரும் (பரஸ்பரம் புரிந்து கொள்ளுதல், ஒருவர் பாபத்திற்கு மற்றொருவர் பிராயச்சித்தம் செய்தல்) அன்பார்ந்த அகண்ட சமுதாயம் ஆவர்; அச் சமுதாயத்தின் ஆன்மா கடவுள். ஒவ்வொருவரும் தங்கள் அனுபவங்களைப் பரஸ்பரம் விளக்கிக்

கொள்ள வேண்டும்; சோதனை செய்து திரும்ப விளக்கவும் வேண்டும்; ஆண்டவனுக்குக் குட்பட்டு ஒரேவித அறிவு, துன்பம், மகிழ்ச்சி, வெற்றி ஆகியவற்றைக் காணும் வகையில் இம்மாதிரி முயல வேண்டும். சமய வாழ்வை இவ்வாறு கருது வது தேவாலயத்தை மிகவும் உயர்த்துவதாகும்; தவிர மற்ற ஆஸ்திகர்களைவிடத் தீவிரமாக சமூக சித்தாந்தத்தை இது வளர்ப்பதாகும். இருந்த போதிலும் இந்த நூற்றுண்டின் பிரச்னையாகிய கிறிஸ்தவ சமயத்தை நோக்கி ராய்ஸ் மக் களின் கவனத்தைத் திருப்பினுர்; அமெரிக்க தத்துவதரிசனத் தையும் தாராளவாத சித்தாந்தத்தையும் பீடித்த தீவிர வியக்தி மனப்பான்மையைத் தோற்கடித்தார். கடவுளை பூர்ண அநுபவம் அல்லது பிரபஞ்ச உண்மை என்றோ, சுத்த மெய்ப்பொருள் என்றோ விளக்கம் தராமல், நன்மை தீமை என்ற சொந்த, சமூக, சரித்திர ரீதியான அனுபவத்தைக் கொண்டு விளக்க முயன்ற பாவனுவாதிகளின் போக்குக்கு ராய்ஸ் ஒரு வேகத்தைத் தந்தார்.

ஜேம்ஸ், ராய்ஸ் ஆகியோர் கொள்கையால் ஆட்கொள் ளப்பட்ட வில்லியம் எர்னெஸ்டுஹாகிங், ஜியார்ஜ் பிளிம்டன் ஆடம்ஸ் எட்கார் எஸ். பிரைட்மன், ஜான் இ. பூடின், டிவிட் ஹெச். பார்க்கர், ஜூலியஸ் ஸீல்யே பிக்லர் ஆகியோர் பாவனுவாதத்தின் இப்போக்கை இன்னும் தெளிவுபடுத்தி னர்; இந்தப் போக்கைத் தாராளவாத சித்தாந்திகளும் மேற் கொண்டு விட்டனர்; அவர்களில் ஒருவர் சொல்வது போல் கடவுள் ஒரு நபராக இல்லாவிட்டால் கூட அவரை அந்தரங் கமாய்ப் பிரார்த்தனை செய்ய முடியும். வியக்தித் தன்மையின் மதிப்பைப் பொதுமையாக்கிக் கொள்வதுதான் கடவுள் என்று கார்ட்டன் டபிளியு ஆல்போர்ட் தெளிவாகக் கூறு வது இதே விளக்க முறையை அனுசரித்ததாகும் :

''என்னுடைய ஸ்தூலவியக்தியை விட்டுப் பொதுமை யாக உள்ள 'நான்' என்னும் தன்மையைப் பிரித்துக் கொண்டு,வியக்தியின் முழுமையை நிலைக்கவைக்க உதவிபுரிய க்கூடிய தெதையும் நான் எங்கும் போற்றுகிறேன்...கடவுளே இவ்வியக்தித்தன்மையின் உன்னதமான உருவம்; நான் என் னும் தன்மையின் இதர மதிப்பீடுகளுக்கெல்லாம் விளக்கம் தந்து, காப்பாற்றித் தரும் தன்மையுள்ள, அத்யாவசியமான,

முடிவான, மதிப்பீடு......அதனுல்தான் பயம், நோய், இழவு, குற்றம், நஷ்டம், நிலையின்மை ஆகிய சந்தர்ப்பங்களில், நஷ்டமானவற்றை எல்லாம், திரும்பவும் சமயத்தின் மூலம் பெற முயல்கிருர்கள்.''

பாவனு வாதத்திற்குள் ஏற்பட்ட இப் போக்குகளைவிட பொது அனுபவத்தைப் புறநிலைமுறையில் அணுக வேண்டும் என்றெழுந்த போக்கு ஜேம்ஸின் கருத்துக்கு ஆபத்தானவை, புரட்சிகரமானவை, உணர்வின் வகைகளைத் தற்சோதனைக் கான 'நிலைகள்' என்று வர்ணிப்பதை சோதனை முறை தத்துவ தரிசிகளும் மனஇயல் வாதிகளும் கூட நிராகரித்து விட்டனர். ஜேம்ஸின் 'மன இயல் கொள்கைகள்' என்ற புத்தகத்தில் பாதியாவது பிரச்னைகளை உயிரியல் அல்லது டார்வின் முறைப்படி ஆராய்கிறது; தற்சோதனைக்கு எதிரான இயக் கத்திற்கு அது வழிகோலிவிட்டது: எனவே 1900-ஆம்ஆண்டில் நடைபெற்ற 'சமய உணர்வு' ஆராய்ச்சிகளுக்குப் பதிலாக சமய ஒழுக்கம், வினைகள் பற்றிய ஆராய்ச்சிகள் எழுந்து விட்டன. இது மனிதவர்க்க இயல், சமூக வளர்ச்சி இயல் சாத்திர ஆராய்ச்சிகளுக்கு இடம் கொடுத்து விட்டது; எனவே இன்று சோதனை விஞ்ஞான சாத்திரமான சமயம் மனிதவர்க்க இயல், சமூக வளர்ச்சி இயல், மன நோய் இயல் சாத்திரங்களின் கலவையாய் விட்டது. தத்துவதரிசிகளுக் குள் ஜான் டூயியும், சித்தாந்திகளுக்குள் ரீன்ஹோல்டு நியபூரும் சமயத்தைப்பற்றி ஆராய்பவர்களின் கவனத்தை அந்தரங்க, தனித்த அனுபவ அம்சங்களிலிருந்து மனிதனின் வரலாற்று சரித்திரத்திற்கும், கலாசாரத்திற்கும், மனித ஸ்தாபனங்களுக்கும் வழக்கங்களுக்கும், அவற்றில் பொதிந்துள்ள உரிமைகளுக்கும் திருப்பிவிட்டனர். இப்புரட்சிகரமான மாறுதலால் தன்னைப் பற்றிய அறிவையோ சொந்த மதிப்பீடுகளையோ விட்டு விட்டதாகப் பொருளில்லை. இதற்கு மாருக, சென்ற ஐம்பது ஆண்டில், தன்னைப் பற்றிய அறிவு பெருகி இருப்பதற்குக் காரணம் இப்பொழுது நபர்களைத் தனிப் படுத்தி ஆராய்வதில்லை என்பதுதான்; அவரவர் வாழும் நிலையிலே, ஒருவருக்கொருவர் கொண்டுள்ள சரித்திர சமூக உறவு முறையும் பிதுரார்ஜித வளமும் சூழ்ந்த நிலையிலே அவர்களை ஆராய்கிரோம். ஸ்தாபன ரீதியான மதத்தை இப்

பொழுது யாரும் 'இரவல்,' பழையது என்று கருதுவதில்லை; ஏனென்றால் பொது வாழ்வில், எல்லாவற்றிலும் நேரடியான அனுபவமில்லாமல் இருப்பது போல சமயத்திலும் இருக்கலாம்.

ஆனால் இப்புதிய சமூக சமயத்தால் சித்தாந்தத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்தான் முக்கியமான விஷயம். ஏனென்றால் முந்திய அத்தியாயமொன்றில் கூறியதுபோல கடவுள்—ஜீவ உறவை, ஜேம்ஸ் கருதியது போல், தனித்திருக்கும் ஜீவனும், அதற்கு வேறுபட்டு பிரபஞ்சத்திற்கிடையே உள்ள கடவுளும் என்ற முறையில் இப்பொழுது யாரும் கருதுவதில்லை; ஒரு கலாசார ரீதியான, சரித்திர ரீதியான நிகழ்ச்சி அல்லது நெருக்கடி என்றும், இம்மாதிரி சந்தர்ப்பங்களில், சமய முடிவுகள் செய்வதற்காகவும், தங்கள் நம்பிக்கையைத் தெளிவாக்கிக் கொள்வதற்காகவும், ஒருவருக்கொருவரையும் கடவுளையும், தவிர்க்க முடியாமல் சந்திக்கிறார்கள் என்று கருதப்படுகிறது. சமயம் என்பது சொந்த விஷயம்தான்; ஆனால் மக்கள் சமூக சிருஷ்டிகள்தானே; கடவுள்கூட சரித்திர வரலாற்றிலும் குறிப்பிட்ட இயக்கத்துக்கு அப்பாலும் இருக்கிறார். கடவுள் பிரபஞ்சத்தின் உண்மை அல்லது அண்டத்தின் மன்னர் என்பதை எந்த சித்தாந்தியும் மறுக்கவில்லை; ஆனால் நடைமுறை சமய காரியங்களைப் பற்றிய வரையில் சமயத்தை இயற்கையான விஷயமென்று எப்படிக் கூற முடியாதோ அதே மாதிரி கடவுளையும் இயற்கையான விஷயம் என்று கூற முடியாது. சித்தாந்திகளும் தத்துவ தரிசிகளும் இவ்வித சரித்திர ரீதியான மனப் பாங்கைப் பெற்றிருப்பது இந்த நூற்றாண்டில் அமெரிக்க கலாசாரம் அடைந்துள்ள மாற்றத்தின் ஒரு பகுதிதான்; ஆனால் சமயத்தைப் பற்றிய வரையில் இம் மாறுதல் குறிப்பானது.

வியக்தித் தன்மை, அனுபவம் இவற்றைப் பற்றிய அறிவில் ஏற்பட்டுள்ள புதிய அபிவிருத்திகளின் நடைமுறைப் பயன் என்னவென்றால், பாபம், முக்தி என்ற ஒரே முறையில் முன்பு அணுகிய விஷயங்களை எல்லாம் இப்பொழுது உடல் நலம், நோக்கம் என்ற முறையில் அணுகுகிறோம். சமயவகையினர்களை 'ஆரோக்கிய வகை', 'மனநோய் வகை' என்று ஜேம்ஸ் பிரித்தபோது அவரையே அறியாமல் தீர்க்கதரிசி

ஆகி விட்டார். ஏனென்றால் நவீன சமய முறையும் நவீன மனநோய் சிகிச்சை முறையும் நோய்வாய்ப் பட்ட ஆன்மா வுக்குத் திடமான மனத்தை அளிக்கத்தான் முயல்கின்றன;. அதாவது, மன இயல் பகுப்பு முறையும் மனநோய் நிர் ணய முறையும் மன நோய்வாய்ப்பட்டவர்கள் தங்கள் நிலை யைப் பற்றிப் பகுப்பு ரீதியிலும் வைத்திய ரீதியிலும் புரிந்து கொள்ள வழி செய்கின்றன. இவ்விதமாக மக்களின் பாபத் தைப் பற்றிக் கடவுளின் சொற்களைக் கொண்டு, சம்பிரதாய மான முறையில் தண்டனை பெறுவதுடன் அதற்குத் துணை யாக விவரமான நோய் நிர்ணயத்தையும் மருந்தையும் பெற முடியும். குற்றங்களையும் நோய்களையும், அறநெறியையும் சமயத்தையும், பாகுபடுத்திக் காட்டிய எல்லைக் கோடுகள் இன்று மங்கிவிட்டன. சில வித்தியாசங்கள் இல்லாமல் போகாது; உடல்—மனம்—ஆன்மா என்ற தொகுப்பு வியக்தி அல்லது தான் என்ற கருத்தில் ஐக்கியப்பட்டுவிடுவதால்; ஆரோக்கியம் நேர்மை நெறி—முக்தித் தொகுப்பு சிக்கலான பிரச்னை ஆனாலும் ஐக்கியப்பட்டு விடுகின்றன. மெய்ப் பொருள் அறிவு நிலைகளைப்பற்றி அறிந்ததைக் கொண்டு சாதாரண சமய அனுபவத்தைக் கொண்டு சாதாரண சமய அனுபவத்தைக் கவனிக்கும் பொழுது பிரார்த்தனையில் நடப்பதென்ன, மெய்ப் பொருள் அறிவு நிலையில் காண்ப தென்ன, எங்கிருந்து தெய்வ வாக்கும் காட்சியும் வரு கின்றன என்பவற்றைப்பற்றி ஜேம்ஸைவிட நாம் நன்றாக அறிகிறோம். இம் மாதிரி அறிவு இன்னும் ஆரம்ப நிலையில் தான் இருக்கிறது; ஆனால் சென்ற ஐம்பதாண்டின் வளர்ச்சி அற்புதமானது. 'சமய ஆரோக்கிய மன வகை' என்ற சம்பிர தாயமான கருத்தை முதல் முதலாக ஆட்சேபித்தவர் "உள் ளுலகின் ஆராய்ச்சி" என்ற புத்தகத்தை எழுதிய ஆன்டன் டி. பாய்சன்; அது முதல் எரிக் பிராம் முதலியவர்களின் புத் தகங்கள் சமய அனுஷ்டானங்களுக்கும் மனநலத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டென்ற கருத்தைப் பரப்பி விட்டன. இந்த நோயாளிக்கு 'பிரகிருதிலீனம்' என்ற நோய் என்று டாக்டர் ஆர். பக் 1900-ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்தது போல் இன்று மன நோய் வைத்தியர் யாரும் செய்யமாட் டார்; ஆனாலும் ஜேம்ஸ் இந்த நோய் நிர்ணயத்தை உண்மை

என்று ஒப்புக் கொள்ளும்படி நேர்ந்தது. 'நோய் வாய்ப் பட்ட ஆன்மாக்கள்', 'பிளவுபட்ட ஜீவர்கள்' என்று ஜேம்ஸ் தம் புத்தகத்தில் குறிப்பிட்டவர்களை எல்லாம் இப்பொழுது இன்ன நோயுடையவர்கள் என்று குறிப்பாகச் சொல்லிவிட முடியும். மற்றொரு புறத்தில், இம்மாதிரியான நோயாளி களுக்கு சம்பிரதாயமான சமய முறை சிகிச்சையும் செய்யப் படுகிறது. அநேகமாக மன நோய் வைத்தியர்கள் பாதிரி மார்களின் யுக்திகளையே கடன் வாங்கிக் கொள்கின்றனர். காரணம் எளிது; சமீபகாலம் வரை தேவாலயங்கள் மட்டும் தான் வியக்திகளின் நோய்களைப்பற்றி கவனித்து வந்தன. சொல்வதைக் கேட்டுக் கொள்வது, யோசனை கூறுவது தனக் குப் போதனை செய்பவரிடம் நம்பிக்கை வைக்கும்படி செய் வது ஆகியவையாவும் பாதிரிகளிடமிருந்து கடன் வாங்கப் பட்டயுக்திகளே. மனநோய் வைத்திய முறைகளுக்கும் பாதிரி மார்கள் முறைக்கும் உள்ள உறவு வளர்ந்து வருகிறது. சமயத்தையும் அதனுடைய விமோசன சாதனங்களையும் குழந்தைத் தனமான பொய்யென்று மனநோய் பகுப்பாளர் கள் தள்ள முடியாது; குருமார்களும் 'நினைவுத் தடிப்பு களை'ப் பிசாசென்று ஓட்ட முடியாது. 1923 முதல் ஒழுங்காக வைத்திய முறையிலும் பாதிரிகளுக்கு அறிவுப் பயிற்சிதரப் பட்டு வருகிறது; மன நோய் ஆஸ்பத்திரிகளிலும் சித்தாந் தம் படிக்கும் மாணவர்களுக்கு வைத்திய முறை கருத்தரங் கும் சமய போதகர்களுக்கு மன நோய் அறிவும் படிப்பும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சமய ரீதியான மன இயல் சாத்திரம், வைத்திய பரிசோதனைப் பயிற்சி ஆகிய விஷயங்கள் பற்றிய பல பத்திரிகைகள் இருக்கின்றன; சமயத் தைப் பற்றியும் விவாதிக்கும் பல புத்தகங்களும் இருக்கின் றன. குறிப்பாக ஸீவார்டு ஹில்டனின் 'சமயமும் உடல் நல மும்' என்ற புத்தகத்தையும், டேவிட் இ. ராபர்ட்சின் "மன வழி வைத்தியமும் மனிதனைப் பற்றிய கிறிஸ்தவ நோக்கும்" என்ற புத்தகத்தையும், ஹொரேஸ். எல். பிரியெஸ் மேல் பார் வையில் நடைபெற்ற "சமயம், உடல் நலம் பற்றிய கட்டு ரைத் தொகுப்பையும்" (கொலம்பியா சர்வகலாசாலைக் கருத்தரங்குப் பிரசுரம்) பார்க்கலாம்.

இக் கூட்டுறவிலிருந்து தெரிவ தென்னவென்றால், இரு துறைக்கும் பொதுவான பிரச்னைகளை சமாளிக்க இருதுறை யினருக்கும் போதுமான பயிற்சி இல்லை என்பதான். அறவழி போதனை செய்யும் புதிய கலை, புதிய தொழில் உருவாகிக் கொண்டிருக்கிறது; மன நோய், உடல் நலம் என்பது பற்றிய வைத்திய அறிவு அறநெறித் தேவைகளையும் லக்ஷியங்களையும் பற்றிய தெளிந்த முடிவு, சமூகப் புனரமைப்பில் நடைமுறை ரீதியான அக்கறை—இவ்வளவையும் பற்றிய தொழில் நுட்ப அறிவு இக் கலைக்கு, இத்தொழிலுக்குத் தேவைப்படும். ஜேம்ஸ் காலத்திய மன வைத்திய முறைகள் முன்னோடியாக வேலை செய்திருந்த போதிலும், அவை பழசாகிவிட்டன. அவைகளுக்கிருந்த தனிமதிப்பு இப்பொழுது குன்றிவிட்டது; ஏனென்றால் முக்தி என்று மார்க்க ரீதியில் அவர்கள் கூறிய சிகிச்சை இப்பொழுது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது.

நியூ இங்கிலாந்து பாவனு வாதத்தின் சிருஷ்டியாகப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பின் பகுதியில் தோன்றி பரபரப்பை உண்டாக்கிய 'கிறிஸ்தவ விஞ்ஞானம்' இன்று நிலைபெற்ற உறுதியான ஒரு பிரிவே ஆகிவிட்டது ; அதன் கொள்கைகளைச் சற்றும் தளர்த்தாமல் அது இருந்து வரு கிறது. தொழில் ரீதியான பாதிரிமார்களோ, குருமார்களோ இல்லாத சாதாரண மக்கள் தேவாலயத்தின் அமெரிக்கப் பிரதியாக அது சிறந்து விளங்குகிறது. இந்த இயக்கத்தின் ஜீவநாடியாக விளங்கியமுழுநேர வைத்தியர்கள் (இப்பொழுது பத்தாயிரம் பேர் இருக்கின்றனர்) தேவாலய வேலைக்குட் பட்ட துறையினர் ஆகிவிட்டனர். விஞ்ஞானி ஏசு தேவா லயத்தின் முக்கிய வேலை சமய வழிபாடு—பொது வழிபாடு, புதன்கிழமை விசுவாச சாட்சிக் கூட்டங்கள், ஞாயிறு தினப் பள்ளிகள். வைத்தியர்கள் புரியும் உதவிகூட ஆன்மீக போதனைக்கும் ஆறுதலுக்கும் (இவைதான் அவர்கள் சாதா ரணக் கடமை) நெருங்கி இருக்கிறதே அன்றி வெறும் வைத்தி யமாகஇருப்பதில்லை.கிறிஸ்தவ விஞ்ஞானத்தாதிமுறை என்ற தனித் தொழில்கூட ஏற்பட்டு விட்டது குறிப்பிடத் தக்கது. கிறிஸ்தவ விஞ்ஞானப் புத்தகங்களிலும் நடைமுறையிலும் குறிப்பான நோய்களை வைத்திய சாஸ்திரப் பெயர்கள்

கொண்டே குறிப்பிடுகிறார்கள்—ஸ்தூல ரீதியான நோய் என்று அவைகளைக் கருதாவிட்டாலும்கூட ஆன்மீகத் தத்துவ தரிசனத்திலிருந்து பெறப்பட்ட கலப்பில்லாத சித்தாந்தத்தை அவர்கள் கோட்பாடுகளாகக் கொண்டிருந்த போதிலும் அவர்களுடைய ஆசாரங்கள் இதர தேவாலயங்களைப் போன்றே இருக்கின்றன.

சூக்ஷ்ம உயிர் வாதத்தின் போக்கும் இதே மாதிரிதான் இருந்திருக்கிறது. பத்தொன்பதாவது நூற்றாண்டில் அது பலமாய் வளர்ந்தது ; அதற்குக் காரணம் அந்த சாதகர்களின் அற்புதமான செயல்கள் ; தவிர அது சமயமல்லவென்றும், விஞ்ஞான ரீதியான வளர்ச்சி என்றும், கூறிக் கொண்டது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் சாதகர்களின் அற்புதங்கள் குறைந்து விட்டன. ஆனால் இப்பிரிவைச் சேர்ந்த தேவாலயங்கள் பெருகி விட்டன.

இதே மாதிரி 'புதிய சித்தனை', 'ஆரோக்கிய மார்க்கனி'லும் ''ஒருமை இயக்கம்''தான் சமய ஸ்தாபன ரீதிக்கு நெருங்கி வந்தது. எம்மெட் பாக்ஸைப் போன்ற சில உயர்ந்த பிரசாரகர்களுக்கு நிரந்தரமான சபை ஏற்பட்டு விட்டது ; ஆனாலும் மொத்தத்தில் 'புதிய சிந்தனை' உலகியல் கருத்துக்களுக்கும் மன நோய் சாத்திரத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதே காரணங்களால் பாதிரிமார்களால் நடத்தப்படும் தேவாலயங்களில் எம்மானுவேல் இயக்கம் கொஞ்ச காலம்தான் வளர்ந்தது.

பொதுவாக சமய வைத்தியம் சமயப் பிரிவுகளைக் கடந்ததாகவும், வைத்திய ரீதியாகவும் இருக்கிறது ; அதனுடைய சித்தாந்தம் முக்திக் கொள்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும் இருக்கிறது. முக்தி ஆன்மாக்களைப்பற்றிய விஷயம் என்று சித்தாந்தம் வற்புறுத்திக் கூறிய போதிலும், முக்தியைப் பற்றிய கவலை இம்மை வாழ்வில்தான் ஏற்படுகிறது ; அதனால் விளையும் நம்பிக்கை, பயம், ஏக்கம் ஆகியவைப்பற்றி இங்கேயே இப்பொழுதே கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. தவிர மற்றொரு உலகத்துடன் இதை ஒப்பிட்டு விட்டு, இந்த உலகத்தைத் தள்ளி விடுவதற்கில்லை ; அந்த உலகத்தைப் பற்றிய அறிவு இந்த உலகத்தில் மனிதனுடைய நலத்திற்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும் ;

இல்லாவிட்டால் சமயம் அறிவுள்ளவர்களுக்கு நெறியற்ற வெறியாகவும் கேலியாகவும் தோன்றும்.

இந்த நூற்றுண்டில் நமக்குப் பழக்கமாய்விட்ட சமூக நெருக்கடிகள், கவலைகள், அவநம்பிக்கை ஆகியவை எல்லாம் சமய அனுபவத்தைப் பற்றிய கருத்தில் விரிவையும் மாற்றத்தையும் உண்டாக்கி விட்டன. முதலாவதாகப் பழைய விஷயம் என்று நமது முன்னோர்கள் கருதிய நம்பிக்கை இன்மை, கவலை, சித்திரவதை, கொடுமை, கொள்கைக்காகத் தியாகம் ஆகியவை தினசரி அனுபவங்களாகத் திரும்பி வந்து விட்டன ; இந்த நிலைதான் எந்தக் காலத்திலும் பணிவை உண்டாக்கி யிருக்கிறது. இந்த அளவு கொடுமை நிலவும் பொழுது மனிதன் கடவுளுடன் நேருக்கு நேராக நிற்கிறான் ; அவன் கடவுளைத் தேட வேண்டியதில்லை ; ஆனால் கடவுளை நோக்கி விரட்டப்படுகிறான். இதற்குப் பொருள் சன்டயானு கூறுவதுபோல, ஆன்மீகத்தைவிட பக்தி முக்கியமாகி விடுகிறது என்பதுதான் ; ஜீவாதாரமான பற்றுகள் கடுமையான சோதனைக்குள்ளாகும்பொழுது இன்பம் முதலிய இலக்ஷியங்களைத் தேடுவது பின்னடைந்து விடுகிறது. தீமையை எதிர்ப்பது (அகத்தீமை, புறத்தீமை) அதை ஒழிப்பதைவிட நமக்கு வெகு முக்கியமாகிறது. அமெரிக்கர்கள் இம்மாதிரியான சரித்திர நிகழ்ச்சிகளுக்கு ஆன்மீக ரீதியில் தயாராக இல்லை ; இருபதாவது நூற்றுண்டு முன்னேற்றத்திற்கென்றே தோன்றிய காலம் என்று நினைத்து வந்துவிட்டார்கள். ஹென்ரி ஜியார்ஜி கருத்துகளைக் கவனித்த கோஷ்டியினரைத் தவிர மற்றவர்களுக்கு இயந்திரப் புதுமைகளுடன் துயரமும் வளர்ச்சி அடைவதற்கான காரணங்கள் விளங்கவே இல்லை. அமெரிக்க சோஷலிசவாதிகள்—தீவிர மார்க்ஸீய வாதிகளே அவர்களில் இல்லை ; வெறும் வெள்ளைக் காலர் கனவான்கள் ; தொழில் நுட்ப வளர்ச்சியும் சர்வ வியாபகமான கூட்டுறவும் மனிதவர்க்க முன்னேற்றத்தை விளைவித்து விடும் என்று நம்பி வந்தவர்கள் . அவர்களுக்குத் தேசீய சோஷலிசக் கொள்கை சுவர்க்கத்தின் ஆட்சி போலப் பட்டது. சமூக முரண்பாடுகள், குழப்ப நிலை ஆகிய உண்மைகளை உணராமல், 1920-ம் வருஷ வாக்கில் குருட்டுக் கனவுகள் கண்டு கொண்டிருந்த அமெரிக்கர்கள் (முதலாளிகளும்

முதலில்லாதவர்களும்) 1930-ம் வருஷ வாக்கில் அடைந்த ஏமாற்றம் பரிதாபகரமாக இருந்தது. நிலைமை தீர்க்கதரிசனத்திற்குகந்ததாக இருந்தது ; எல்லாவித தீர்க்கதரிசிகளும் தோன்றினர்கள்; வழக்கம்போல் அவர்களை வரவேற்கத் திறந்த காதுகளும் கல்லடியும் காத்துக் கொண்டிருந்தன.

சமூகமே நோய்வாய்ப்பட்ட நிலையில் மோசமாகத்தான் இருந்தது ; உண்மையில் நிரந்தர நரகம்தான் கதி என்ற நிலையில்தானிருந்தது. சமூக நம்பிக்கை இன்மையும் பிளவுபட்ட மனமும் சமூகத்தில் இவ்வளவு வியாபிக்கும் என்று வில்லியம் ஜேம்சோ அவர்கள் காலத்தவர்களோ எண்ணியிருக்கமாட்டார்கள். ஜேம்ஸ் மனஇயல் சோதனைச் சாலையில் விநோதமானவை என்று புகுந்த 'மனவகை'களெல்லாம் இப்பொழுது நமக்குச் சகஜமாகி விட்டன , சித்தாந்த ரீதியான சமூக இயல் வாதிகள் 'ஜீவனின் நிலை' என்று சகஜமான உதாரணமாக இவற்றைக் கையாள்கிறார்கள் ; ஆனால் ஜேம்ஸ் அவற்றை சமய மெய்ப்பாட்டின் தீவிர எடுத்துக் காட்டாகக் கையாண்டார். சுருக்கமாகக் கூறினால், உணர்வின் தாறுமாறுகள் என்று முன்பு சோதிக்கப்பட்டவை எல்லாம் இப்பொழுது சோதனைக்கான புறநிலை விஷயங்களாகி விட்டன. மெய்ப்பொருள் அறிவு நிலை, பாபநிலை ஆகியவைகளை மனச்சாயையின்றி ஜீவ அவஸ்தை வாதம் விளக்குகிறது; மனிதனின் நிலைமைபற்றி இவ்வாதம் கூறுவது ஜேம்ஸைப்போல், அவ்வளவு தற்சோதனைத் தன்மை கொண்டதாகவோ உணர்ச்சிகரமானதாகவோ இல்லை ; சமூகத்தின் அகத்தன்மையிலும், அதிசயத்தன்மையிலும் ஈடுபாடுடையதாக இருக்கிறது. கடவுள், சாந்நித்யம், பிரார்த்தனையில் கடவுளுடன் அந்தரங்க உறவு கொள்ளுதல் என்பவற்றைப்பற்றி ஜேம்ஸ் மன இயல் ரீதியில் விளக்கம் அளித்தார் ; ஆனால் ஜீவ அவஸ்தை வாதி சித்தாந்திகள் இவற்றை மற்றொரு அதீத உலகுடன் புறநிலையில் ஏற்படும் சந்திப்பென்று குறிப்பிடுகின்றனர். குறிப்பிடப்படும் அனுபவங்கள் என்னவோ சொந்தமானவைதான் ; ஆனால் அழுத்தம், உணர்வு நிலை என்பதிலிருந்து சமூக நிலைக்கு மாறி விட்டது. சமயப் பசியின் மாற்றம் என்று ஜேம்ஸ் எதைக் கருதினரோ அது இப்பொழுது கலா

சார மாற்றமாகி விட்டது. இவ்விதமாகப் புறநிலை, சமூக நிலை, யதார்த்தப் பகுப்பு என்ற முறைகளை நோக்கி தத்துவ தரிசனம் திரும்பியது போல, சமய அனுபவ நிலைப் பகுப்பும் திரும்பியது.

ஆனால் ஜீவ அவஸ்தை வாதிகளின் பகுப்பு முறை ஜேம்ஸின் மனஇயல் முறைக்கு முற்றிலும் மாறுபட்டது. இடைக்காலத்தில் ஏற்பட்ட அவலச் சம்பவங்களை எல்லாம் இது பிரதிபலிக்கிறது. உண்மையான விஞ்ஞானியைப் போல தன் சமய நோயாளிகளையும் அவர்களுடைய ஆசைகளையும் பற்றி ஜேம்சால் நடுநிலைமையுடன் மதிப்பிட முடிந்தது; ஆனால் உலகியல் அக்கறைகளின் அலைமோதலுக்கிடையில் சமயத்தைப்பற்றி ஜீவ அவஸ்தை வாதிகள் அதிகமாகக் கவலைப்படுகிறார்கள். அந்த நாட்களில் சமயம் விஞ்ஞானத்துடன் சமரசம் செய்துகொண்டு தன்னுடைய நியாயத்தை எடுத்துரைக்க முயன்றது; ஆனால் இன்றோ தன்னைக் கேவலமாகவும் அலக்ஷியமாகவும் கருதும் கலாசார சக்திகளுடன் தன் வாழ்வுக்காகப் போராடுகிறது.

இந்த நூற்றாண்டின் முதல் கால் பகுதியில், 'விஞ்ஞான யுகத்தில் சமயம் என்பது பற்றிப் பல புத்தகங்கள் எழுதப் பட்டன; விஞ்ஞானம் என்றால் பிரகிருதி விஞ்ஞானம் என்று தான் பொருள் கொள்ளப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசையின்றி இருத்தலே நியாயமான சமயமாகத் தோன் றிற்று. ஜேம்ஸ் சன்டயானா ஆகியோர் கருத்துக்களில் ஈடு பாடுடைய வால்டர் லிப்மன், 'பற்றிருப்பதே உயர்ந்த சமயம்' என்று பாராட்டி எழுதினார். கட்சி மனப்பான்மையின்றி, விசேஷ வாதம் செய்யாமல், கடவுளிடத்தில் ஸ்பினோசா அறிவு பூர்வமான பற்றுக் கொண்டிருந்தது போல் கொண்டு, ஞானத்தில் அமைதி காண்பதே பக்தியாகவும் ஆன்மீகமாக வும் தோன்றிற்று. சமயத்தின் நிலை எவ்வளவு மாறிவிட்டது! "சமயம் என்பது ஒப்படைத்தல், துணிவு, நம்பிக்கை சொந்தப் பொறுப்பு. பக்தியுடனிருப்பதென்றால், சரித்திர ரீதியான முடிவு செய்தல் என்று பொருள்." எவ்வளவுக்கெவ்வளவு நம் அறிவு முக்கியத்துவம் பெறுகிறதோ அந்த அளவுக்கு மற் றவரின் சந்திப்பும் நம்மைப் போலறிந்த நண்பர்களின் தோழ மையும் முக்கியத்துவம் பெறுகிறது...நம் மனத்தின் தனித்த

தர்க்கங்களால் நாம் தீர்மானம் செய்துவிட முடியாது; நம் ஆன்மா பிற ஆன்மாக்களுடன் ஜீவ சம்பாஷணை நடத்தினுலொழிய 'மற்றவர்கள் கடமை எதுவானுலும் என் கடமை இதுதான்' என்று தீர்மானம் செய்ய இயலாது......நமக்குள்ள அவஸ்தையில் நாம்தான் தனிப்பட்ட முடிவுகளைச் செய்தாக வேண்டும். ஆனுல் தனித்திருக்கும் ஏசுநாதர் முன்னிலையில் தனி ஆன்மா என்ற முறையில் நாம் மனம் போன போக்கில் முடிவு செய்வதில்லை. முடிவு செய்வது உண்மை என்றும் அதற்குச் சுதந்திரமான தனித்தன்மை உண்டென்றும் ஜீவ அவஸ்தை வாதம் நமக்கு அறிவித்திருக்கும் பொழுது அந்த விஞடியின் முக்கியத்துவத்தைப் பற்றியும் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறது. ஆராய்ச்சியும் தியானமும் உள்ள சிந்தனை வேண்டுமானுல் இறந்த காலத்திலோ எதிர்காலத்திலோ, காலாதீதத்திலோ சஞ்சரிக்கலாம்...ஆனுல் சிந்தனையாளர் சஞ்சாரத்திலிருந்து திரும்பி வந்தாக வேண்டும், ஏனென்ருல் அவன் மனிதன் தானே!...முடிவு செய்யும் நேரம் சென்ற காலமுமல்ல; எதிர் காலமும் அல்ல. ஆனுல் அந்த ஒரு விஞடி தான்...அந்த நெருக்கடியான நிமிஷத்தைப் பொருளுள்ளதாக்குவது தனித்த ஜீவனுக்கு முடிவு செய்யும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதல்ல; யாரோ ஒருவர் கூட இருக்கிருர்—ஞாபகத்தில் இருப்பவர்—எதிர்பார்க்கப் படுபவர்—என்பதுதான்...நிகழும் விஞடியில் நம்முடைய முடிவுகள் செய்யப்பட வேண்டும்—ஆனுல் காலாதீதத்தில் இருக்கும் தலைவனின் சரித்திர ரீதியான செய்கைகளாலும் நினைப்பாலும் புனிதமாக்கப்பட்ட சரித்திர புருஷர்களின் முன்னிலையில் முடிவுகள் செய்யப்படுகின்றன."

வால்டர் லிப்மனின் உன்னத சமயத்தை ரிச்சார்டு நியபூரின் சமூக அவஸ்தை வாதத்துடன் பொருத்துவதில் கஷ்டமில்லை; ஏனெனில் வரலாற்று முக்கியத்வம் கொண்ட முடிவு செய்யும் விஞடியில் தன்னலமற்று, மனப்பூர்வமாகக் கடவுளிடத்தில் நம்மை ஒப்படைத்து விடலாம். ஆனுல் நடைமுறையில் இவ்விருபோக்குகளும் முரண்பட்டவை; வெவ்வேறு சமய அனுபவவகையைச் சேர்ந்தவை. முன்னது ஒரு சகாப்தத்தின் முடிவில் தோன்றும் சிந்தனை; பின்னது நெருக்கடியான நேரத்

தில் விளையாற்றுவதற்கான அழைப்பு. முன்னது விலகி நிற்ப தாகும்: பின்னது சிக்கலில் இணைவதாகும்.

## சமீப காலத்திய அனுபவ வகைகள்

சமய அனுபவத்தைப் பற்றிய கொள்கையை விட்டு விட்டு, சமீப காலத்தில் அமெரிக்க வாழ்வில் தோன்றியுள்ள சமயங்களைப் பார்த்தால், திகைப்பு மூட்டக் கூடிய அவ்வளவு வகைகள் தென்படுகின்றன; இதற்கு முந்திய அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்ட பல சமய ஸ்தாபனங்கள் இவ்வளவு வகைகளையும் பிரதிபலிப்பதாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் அநேக ஸ்தாபனங்களில், பலவித அனுபவ வகைகள் செழித்து வளர்ந்து வருகின்றன; பலவித தனித்த அனுபவ வகைகள் சேர்ந்து உருவாகியுள்ள ஸ்தாபனங்கள் இந்த உண்மையைத் தங்கள் அதிகார பூர்வமான கொள்கையால் மறைத்து விடுகின்றன; அதிலும் கொள்கைகளின் நியாயம் எடுத்துக் கூறப்படுகிறதே அன்றி விவரம் தரப்படுவதில்லை. வில்லியம் ஜேம்ஸைப் போல், மிகத் தீவிர வகைகளை நினைவில் கொண்டு புதிய மாதிரிகளைச் சேர்க்கலாம். ஆனால் சம்பிரதாயத்திற்கு முரண்பட்ட வகைகளைச் சேர்ந்தவை. எல்லாம் 'இரவல்'தான். நீண்ட கால வரலாறு உடையவைதான். மார்க்கஸ் பாக் புதிய சமய விதங்கள் பற்றித் தகவல் சேகரித்திருக்கிறார்; தம்முடைய நண்பர்களில் இவற்றின் பிரதிநிதிகளையும் கண்டிருக்கிறார்; ஆறு விதங்கள் பற்றி அவர் குறிப்பிட்டிருக்கிறார்; டிராபிஸ்டு துறவிகள் (லோகாயத அமெரிக்கர்களின் கவனத்தை இவர்கள் கவர்ந்திருக்கின்றனர்); பெனிடென்டிஸ் (சரீரத்தைத் துன்பத்திற்குள்ளாக்குவது அவர்களுடைய ஆசாரம்; தென்மேற்கில் அதிகமாக இருக்கின்றனர்;) வேதாந்திகள் (இந்திய பிரும்ம ஞானத்தையும் இலக்கியத்தையும் விளக்குபவர்கள்; இவர்களுக்குப் பதிலாக இந்தியாவில் கிறிஸ்தவ மிஷன்கள் வேலை செய்கின்றன); ஸ்வீடன்பர்க் மார்க்கத்தவர்கள் (அவர்களுக்கென்று வேதவாக்குக் கிரந்தம் இருக்கிறது; அவர்கள் ஏற்கனவே 'புதிய ஜெருசலத்தில் நுழைந்து விட்டவர்கள்); ஹட்டரைட்டுகள் (சமூக சேவையே அவர்கள் சமயம்); மோர்மோன்கள் (அவர்களுடைய விசேஷ வேத வாக்குகளும் சமுதாய வாழ்வும் சமீப

காலத்தில் ஸ்வீடன் பர்க் மார்க்கத்தவர்களுடன் போட்டி போடுவது போல் இருக்கின்றன). இந்த வகைகளெல்லாம் ஒரு நூற்றுண்டுக்கு முற்பட்டவை; ஒன்றைத் தவிர பாக்கி எல்லாம் அமெரிக்க வாழ்வுக்கு அந்நியமானவை.

சார்லஸ் எஸ். பிரேடனின் "இவர்களும் நம்புகிருர்கள்" என்ற புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் 13 நவீன மார்க்கங்களிலும் சில்லரை சமய இயக்கங்களிலும் புதியவையாக உள்ளவை இவைதான். பாதர் டிவைனின் சாந்திப் பிரசார இயக்கம்; சைகியாணு—சமயம் என்று இதைக் கருதுவதானுல் தபால் முறை சமய அனுபவம் என்று இதைக் கூறலாம்; நான் இருக்கிறேன் இயக்கம்; தாராள வாத கத்தோலிக்க தேவாலயம், இவையிரண்டும் கலிபோர்னியாவுக்கு அப்பால் பரவியுள்ள பிரும்ம ஞான இயக்கத்தின் ஜனக் கவர்ச்சி மிகுந்த புதிய பதிப்புகள்); ஜிஹோவாவின் சாட்சிகள்; ஆக்ஸ் போர்ட் கோஷ்டி இயக்கம், இதைப் பற்றிப் பின்னர் பார்ப்போம்.

காட்சி கவர்ச்சி கொண்டதாகவும், விநோதமாகவும், முன்பின் பார்த்துப் பழக்கமில்லாததுமாக விருக்கும் இவைகளை எல்லாம் விட்டு விட்டு சமீப காலத்தில் தோன்றியுள்ள சிலவகை சமய அனுபவங்களைப் பற்றி மட்டும் கூறுகிறேன். நான் இதுவரை விமர்சித்து வந்த சமய அனுபவத்தைப் பற்றிய முக்கிய கருத்து மாற்றங்களுக்கு இவை சம்மந்தப் பட்டவை. ஒரு புறத்திலுள்ள சோதனை விஞ்ஞானத்திற்கும் மற்றொரு புறத்திலுள்ள பைபிளுக்கும் துணையாகப் பிரமாண தேவவாக்கு, தீர்க்க திருஷ்டி, தன்னறிவு ஆகியவற்றைப் பெற நடக்கும் முயற்சிகளை முதலாவதாகக் குறிப்பிட வேண்டும்; இங்கு எதை எதிர்பார்க்கிருேமோ அந்த மாதிரி நடைமுறையில் வழிகாட்டும் பிரமாணமாக சோதனை விஞ்ஞானமும் பைபிளும் இப்பொழுதெல்லாம் பயன் படவில்லை.

சமய அறிவு இயற்கையான அறிவினின்றும் வேறு பட்டது, அதிகப் பிரமாண சக்தி கொண்டது, தர்க்க ரீதியான ருசு குறைந்தது என்ற நம்பிக்கை இப்பொழுது வலுத்து வருகிறது. கடவுள் குறிப்பான, விவரமான கட்டளைகளை இன்னமும் இடமுடியும் என்ற ஆதாரவாதிகளின் முரட்டுக் கொள்கையை ஏற்கும் தனி நபர்களும் கோஷ்டிகளும்

இல்லாமல் போகவில்லை. மோர்மோன் இலக்கியத்திலிருந்து ஒரு உதாரணம் கிடைக்கிறது. பிரிக்ஹாம் யங் ஒரு பேச்சில் கூறுகிறார்:

"பழங் காலத்தில் மனித வர்க்கத்துக்குக் கிடைத்த வேதங்களின் பெரும்பகுதி தினசரிக் கடமைகளைக் கூறுகின்றன; அந்த வழியை நாம் கடைப்பிடிக்கிறோம். பைபிளும் மோர் மோன்கள் வேத கிரந்தமும் நமக்கு உதாரணங்கள்; கொள்கைகளைக் கூறும் பகுதியும், ஒப்பந்தங்களை கூறும் பகுதியும் இந்த தேவாலயத்திற்கு நேரடியான பிரமாணமாகின்றன; அவைதான் நமக்கு வழிகாட்டி; அவற்றை ஒழிக்க விரும்பவில்லை; அவை வழக்கற்றுப் போய்விடவேண்டுமென்றும் பிறகு அவற்றை ஒதுக்க வேண்டுமென்பதும் நம் விருப்பமல்ல. ஏசுநாதரின் தேவவாக்குப்படி தினசரி நடக்க விரும்புகிறோம்; அவர் சக்தி நம்முடன் இருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். இதைச் செய்ய முடியுமானால் நாம் இருளில் செல்ல வேண்டியதில்லை; வாழ்வின் ஒளியில் செல்வோம்."

இம்மாதிரியான வழிகாட்டியில் நம்பிக்கையை நிலையாக வைப்பது மோர் மோன்களுக்குக் கூடக் கடினமான காரியம். தேவவாக்குக்கு நவீன வாதிகள் பொருள் கூறும் விதத்தைக் கண்டு ஜேம்ஸ் இ. டால் மேஜ் வைதீகக் கொள்கையைத் திரும்பவும் வற்புறுத்தினர்:

"நியமனமாகியுள்ள வழியில், எதிர்காலத்தில், கடவுள் எப்படித் தோன்றுவார் என்று பழங்கால தேவவாக்கு கூறுகிறதோ அதே மாதிரி நவீன தேவவாக்கும் கூறுகிறது. கிரந்த விதிகள் இன்னும் முடிவு பெறவில்லை; பலவரிகள், பல போதனைகள் சேர்க்கப்பட இருக்கின்றன. இதுவரை பதிவாகி உள்ளவற்றை விட மிகமிக முக்கியமானதும், பரிபூர்ணமுள்ளதுமான தேவவாக்கு இனித்தான் தேவாலயங்களுக்கும் உலகுக்கும் வழங்கப்பட விருக்கின்றது."

ஏதோ ஒரு விதத்தில், தியானத்தாலோ, ரகசிய வழிகளாலோ, தற் சோதனையாலோ, அனுபவத்தாலோ மனிதர்கள் உயர் நிலை அறிவு பெற முயல்கிறார்கள்; உயர் நிலை அறிவு விஞ்ஞான சாத்திரத்தைப் போன்றோ, மற்ற சாத்திரத்தைப் போன்றோ அனுமானம் அல்ல. அது நேரடியான, அந்தரங்கமான சக்தியையும் ஞான ஒளியையும் தரும் தன்மை

உடையது. ஆங்கில சமய நூலாசிரியர் ஜிரால்ட் ஹார்ட் கூறுவதை உண்மையில் பின்பற்றுபவர்களும், கிளிப்பிள்ளை யைப்போல் திருப்பிச் சொல்பவர்களும் ஆகிய அமெரிக்கர் கள் சிலர் அவருடன் சேர்ந்து சொல்வதாவது :

"நாள்தோறும் புத்திளமை பெற்று, பணிவையும், நம்பிக் கையையும், வியப்புணர்ச்சியையும் புதுப்பித்துக்கொண்டு, போலி திருப்தி, அலக்ஷியம், விட்டுக் கொடுத்தல் என்ற உருவில் ஊர்ந்து வரும் சவப் போர்வையை எடுத்தெறி கிறேன்."

இது விஞ்ஞானத்தை எதிர்ப்பதல்ல; அறிவுக்கு தோழமை, துணை; நடப்புகளையோ, மதிப்பீடுகளையோ அறிந்து கொள்ள வேண்டிய அவசியமின்றி அடுத்தாற்போல் செய்ய வேண்டிய தென்ன என்று தெரிந்து கொள்ள வேண்டிய தேவை; புறநிலை உண்மை அல்ல, தனக்கான உறுதி; புலமை அல்ல, நம்பிக்கை. வேறு சிலர் இருக்கிறார் கள்; குறிப்பாக இயற்கை விஞ்ஞானி பேராசிரியர் ஹென்றி என். வயிமன் தலைமை தாங்கும் கோஷ்டி; அந்தரங்க சமய வாழ்வென்ற அவர்களுடைய முறைகள் சமீப காலத்திய விஞ்ஞானத் தத்துவதரிசனங்களை ஆதரவாகக் கொண்டவை; கட்டுக் கதைகளையும், தவறான வழி காட்டும் சங்கேதங்களை யும் அவர்கள் விலக்க முயல்கின்றனர். அவர்கள் கூட 'தர முள்ள அர்த்தம்' என்பதை வற்புறுத்துகின்றனர்; அம்மாதிரி அர்த்தங்களைப் பேணுவதால் கடவுளின் சிருஷ்டி சக்தி கொண்ட சம்பவங்களைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ள லாம் என்று கருதுகின்றனர்.

அதனால் மனித வாழ்க்கை மன ஆதரவால் பிணைக்கப் படும்; விரிந்த அளவில் ஐக்கியத்தை உருவாக்கும் முயற்சியில் ஒருவருக்கொருவர் தென்பூட்டி உயர்த்தும் என்று கருதிப் பயன்படுத்த முயல்கின்றனர். இவ்விதமாக மதச் சார்பற்ற அறிவுக்கும் சமய நம்பிக்கைக்கும் தர ரீதியில் வித்தியாச மிருக்கிறது; சோதனை முறையைத் தாண்டி மனித நலன் என்பதன் மூலங்களை சமய நம்பிக்கை எந்த அளவுக்குக் காட் டத் தவறி விடுகிறதோ, அந்த அளவுக்குச் சமயச் சார்பற்ற அறிவும் தவறி விடுகிறது. ஆனால் இந்த அந்தரங்கமான உயர் நிலை திருஷ்டியைப் பெற விரும்புகிறவர்களில் பெரும்

பான்மையோர் சமய சம்பிரதாய இலக்கியங்களையும் மொழி களையும் சக்தி அளிக்கக் கூடிய மூலங்களாகக் கருதுகின்றனர். அவர்கள் கட்டுக் கதையையும் அறிவு மெய்ப் பொருள் நிலை யையும் பயன் படுத்தினால் அது அவற்றிலிருக்கும் அறிவுச் செல்வத்திற்காகவல்ல; ஆனால் அவற்றின் தரமான அர்த்தத் தைக் கண்டுபிடிக்க; அதையும் சிந்தனையைவிட ஜீவனின் வாழ்க்கையில்தான் காட்ட முடியும்.

இம் மாதிரி விமோசன மளிக்கும் அறிவுக்கு உதாரண மாக, பிரும்ம ஞான ஆதாரத்தின் மீதெழுந்த ஒரு போதனை பிரசங்கத்தைக் குறிப்பிடுகிறேன். காலிபோர்னியா ராஜ் யம், ஹால்ஸியோனிலுள்ள மக்களின் கோயில் என்ற சங்கத் தைச் சேர்ந்தவர்களின் சமீப காலத்திய எழுத்துக்களிலிருந்து இக் கலவைப் பிரசங்கத்தைத் தருகிறேன். இக் கோயில் 1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது; ஆனால் சமீபத்தில்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. தார்ஸ் டீன் வெப்ளன் என் பவரின் வாழ்க்கையுடன் சம்மந்தப்பட்ட தென்ற முறையில் சில வாசகர்கள் இதைப்பற்றி அறிந்திருப்பார்கள்; ஆனால் பக்தி மிகுந்த ஒரு சமுதாயத்திற்கு நோய்களைக் குணப்படுத் தும் ஆன்ம சக்தியும் அறிவும் படைத்த கேந்திரமாக இது விளங்குகிறது. இந்த அறிவுக்குப் பிரமாண சக்தி நான்கு மூலங்களிலிருந்து கிடைக்கிறது: (1) அண்ட மூலம், (2) சரித் திர ரீதியான வாழ்வு, (3) விஞ்ஞான ரீதியான தெளிவு, (4) கோஷ்டி சிருஷ்டியில் பங்கெடுத்துக் கொண்டதான உணர்ச்சி.

இப் பிரசங்கத்தில் கண்டுள்ள கொள்கை பல சமயப் பிரி வினர்களிடத்தும், எப்பிரிவையும் சாராதவர்களிடத்தும் பல வித மாறுதல்களோடு காணப்படுகிறது. ஆனால் நோயுற்ற ஆன்மாவுக்குத் திடமான மனத்தை உண்டாக்க இந்த காலத் தில் எடுத்துக் கொள்ளப்படும் பெரும் முயற்சிக்கு எடுத்துக் காட்டாகவே இக் கொள்கை இருக்கிறது. இருந்தாலும் இது வெறும் மன சிகிச்சை அல்ல; இது தெய்வீக விஞ்ஞானம்; ஆன்ம சக்தியின் மூலங்களைப் பயன்படுத்தும் முயற்சி. இம்மாதிரியான சமய அனுபவத்தின் அடிப்படைக் கருத் தைப் பேராசிரியர் சாட் வால்ஷ் "பார்ப்பதை நிறுத்திக் காதில் வாங்கிக் கொள்" என்ற புத்தகத்தில் ஜனரஞ்சக

மாகக் கூறியிருக்கிறார். ஜோஷுவா லியப்மானின் "மனச் சாந்தி" என்ற புத்தகத்தில் காணப்படும் மற்றொரு கோஷ்த் துடன் இதற்கு சம்மந்தமுண்டு; ஆனால் குறி மனச் சாந்தி மட்டுமல்ல; மனதை நியமத்திற்குள்ளாக்குவதால் பிறக்கும் அமைதியான சக்தியே குறி. டாக்டர் நார்மன் வின்சென்டு பீல் தயாரித்த வசீகரமான மகுடமுள்ள புத்தகங்கள் இவை —"உண்மை இன்பக் கலை," "நம்பிக்கையுடன் வாழவழி காட்டி," "உன் வியக்தியின் குறைகளை நீயே நீக்கிக் கொள்ள லாம்," "உன் பிரார்த்தனைக்குப் பயனுண்டு," "உன் துன்ப உணர்ச்சிகளுக்கு இன்ப முடிவு," "பயமின்றி இருத்த லென்னும் அற்புத உணர்வு." மதச் சாயலற்ற இம்மகுடங் களைக் கண்டு வாசகர் ஏமாந்து விடக்கூடாது; ஏனென்றால் நமக்கு நாமே உதவி செய்துகொள்ள முடியாதென்பதை, இதில் எந்தப் புத்தகமும் தெளிவாகக் கூறும்; நாம் ஏசு நாதரையும் பிரார்த்தனையையும் பைபிளையும் டாக்டர் பீலின் பிரசுரங்களையும் நாட வேண்டுமென்று அவை கூறும். விருப்பமில்லா விட்டால் பொது வழிபாடு இல்லாமலே கூட நீங்கள் காலந்தள்ள முடியும்!

சமய ரீதியான சிகிச்சையும், போதனையும், வழிபாடு, பாப ஒப்புதல் போல் பொதுவாக இருக்கின்றனவா அல்லது வைத்தியத்தைப்போல் அந்தந்த நபருக்குத் தகுந்தவாறு சமய சிகிச்சையைத் தயாரிக்கின்றனவா என்று சொல்வது கடினம். பழைய சிகிச்சை கோஷ்டிகளின் அனுபவம் தெளி வான முடிவு தரவில்லை. கிறிஸ்தவ விஞ்ஞானத்தின் ஆரம்ப காலத்தில் சமய வைத்தியர்கள் சக்தியுள்ள கேந்திரமாக இருப்பார்கள் என்று தோன்றிற்று. ஓரிரு தலைமுறை வரை, போஸ்டனிலுள்ள பிரதம தேவாலயம், இம் முறைகளை ஏற்க மறுக்கும் வைத்தியர்களாலும் புதிய சிந்தனை இயக்கத்தாலும் ஏற்படக்கூடிய ஆபத்தைப் பற்றிக் கவலைப் பட்டது. ஆனால் தற்பொழுதைய நிலையில், வழிபாடும் சமய முறையான கிறிஸ் தவ விஞ்ஞானமும் சிகிச்சையைவிட அதிக முக்கியத்துவம் பெற்று விட்டன. 1930-ஆம் ஆண்டு புதிய சிந்தனை இயக்கத் தலைவி ஒருவர் என்னிடம் கூறிய அற்புதமான கருத்து நினை வுக்கு வருகிறது. பொருளாதார மந்தம் வரும் வரை, சமய முறை வைத்தியர்களால் தங்களிடம் வருபவர்களுக்கு உதவி

செய்ய முடிந்தது என்று அவர் கூறினர். தங்கள் சேவைக்கு ஏதோ பணத்தைப் பெற்றுக்கொண்டு திருப்தி அடைந்தனர். வைத்தியத் தொழிலும் ஆசிரியத் தொழிலும் அவர்களுக்கு மாதிரியாக அமைந்தன. ஆனுல் பொருளாதார மந்தம் ஏற் பட்ட பிறகு இவ் வியக்கத்தை விட்டு கிறிஸ்தவ விஞ்ஞானத் தையோ அல்லது வேறு தேவாலயத்தையோ நாட ஆரம் பித்து விட்டனர்; ஏனென்ருல் எதிலேனும் சேர்ந்திருக்க வேண்டுமென்பது அவர்கள் விருப்பம் என்று அம் மாது என் னிடம் கூறினர். பயம் மிகுந்த நிலேயில், தனிப்பட நிற்பதை விட எதிலேனும் சேர்ந்திருப்பதால் தைரியம் வருகிறது; வில்லியம் ஜேம்ஸ் காலத்தைவிட இப்பொழுது ஸ்தாபன ரீதியான சமய ஆசாரங்களின் சக்தியை உணரும் நிலேயில் இருக்கிருேம். இதற்கு மாருக, குருமார்களும், புரோகிதர் களும் அவஸ்தைப் படுகின்றனர்; பொது ஸ்தாபனங்களிட மிருந்து உதவி பெற முடியாதவர்கள் மன நோய் வைத்தியர் அளிக்கும் தனித் தனியான சிகிச்சையைப் போன்ற தொன்றை நாடி இவர்களிடம் வருகின்றனர்.

இது சம்பந்தமாக குறிப்பிடத்தக்க அபிவிருத்தி புரோகி தமார் மன நோய் சிகிச்சையிலோ பாப ஒப்புதல் முறை புத்துயிர் பெற்றிருப்பதிலோ இல்லே; குழுக்கள் இயக்கம் செல்வாக்குப் பெற்று வருவதுதான் குறிப்பிடத் தக்கது; அந் தரங்க தோழமை கொண்ட சிறு கோஷ்டிகள் தங்கள் தங்கள் நன்மை தீமைகளேப் பரிமாறிக் கொண்டு ஆதரவு பெறும் இயக்கங்களே வலுப்பெற்று வருகின்றன. ஜேம்ஸ் கூறுவது போல், பழஞ்சிறகுகள் உதிரும் சமயமாகிய வயதடையும் பரு வம், இளமை ஆகிய காலத்தில்தான் இக் கோஷ்டிகள் அதிக மாக உருவாகும்; ஆனுல் எல்லா வயதினரிடையும், வர்க்கத் தவரிடையும், தேசத்தவரிடையும் இக் கோஷ்டிகள் பரவிவிட் டன. "ஆக்ஸ்போர்டு கோஷ்டி இயக்கம்" அல்லது முதல் நூற் ருண்டுத் தோழமைச் சங்கம் (பின்னர் தார்மீக மறுமலர்ச்சி இயக்கம் என்ற பெயர் பெற்றது) இவற்றில் முக்கியமானது. கவர்ச்சி மிகுந்த நிதி வெற்றிகளுக்கும் நாகரீக வீட்டு விருந்து களுக்கும் இது பேர் எடுத்துவிட்ட போதிலும் இதுகூட அற வழிப் புனரமைப்பு இயல் கொண்டதுதான்; ஏனென்ருல் பாதிரிமார்களின் வைதீகத்துடன் நவீன மன நோய் சிகிச்சை

முறைகளையும் கலந்து அது முயற்சி செய்கிறது. அதன் ஸ்தாபகர் பிராங்க்புச்மான் பிலாடெல்பியா சேரி சீரமைப்பு வேலைகளை விட்டு ஆக்ஸ்போர்ட் கேம்பிரிட்ஜ் மாணவர்களைச் சந்திக்கும்படி நேர்ந்ததுதான், குவேக்கர்களின் சாந்தி சமயமும் ஆங்கில நவநாகரிகமும் கூடியதற்கு முழுக் காரணம் என்று நினைக்கக் கூடாது. இரண்டு யுத்தங்களுக்கும் நடுவில், சாராயக்களியாட்டத்தில், வாழ்வைக் கழிக்க முயன்ற தலைமுறையினருக்கு ஆக்ஸ்போர்டு கோஷ்டி இயக்கத்தின் அமைதியான தோழமை விமோசனமும் ஆறுதலும் அளித்தது. சமயப் படிப்பில்லாதவர்கள், ஆனால் மற்றபடி நல்ல படிப்பும் அளவுக்கு மிஞ்சிய ஊக்கமும் உள்ளவர்கள், மாறி மாறி மௌனத்திலும், பரஸ்பர பாப ஒப்புதலிலும் ஆறுதல் பெற சிறு கோஷ்டிகளாக இதில் கூடுகின்றனர்.

பாதிரிமார்கள், பகுப்பாளர், தயவின்றித் தங்களையே மனநோய் பகுப்பு செய்து கொள்வதற்கும் மற்றவரைச் செய்வதற்கும் தனிமை, அந்தரங்கம், பகிரங்க பாப ஒப்புதல் ஆகிய இக் கலவை நல்ல வாய்ப்பளிக்கிறது; ஆன்மீக அவதூத இன்பமும் தெய்வ அருளும் உபதேசமும் பெற்ற திருப்தியும் ஏற்படுகிறது. பரம் பொருளின் அருளுக்கும் உபதேசத்திற்கும் காத்திருத்தல் என்ற குவேகர் கொள்கையும், கடவுளைச் சரணடைதல் என்ற பாதிரிமார் கொள்கையும் சேர்ந்தது தான் இந்தக் கொள்கை; கோஷ்டிப் பகுப்பு முறைதான் இதில் ஆசாரம்; குற்ற உணர்ச்சிகள், கோப தாபங்கள், முதலிய இன்பத்திற்குத் தடையான உணர்ச்சிகளை உருமாற்றுதல்தான் செயல். இம்மாதிரியான தோழமை அற்புதமான மனமாற்றங்களை உண்டாக்கிற்று, தேவாலய சபையைச் சேர்ந்தவர்களுக்குள்ளும் வெளியிலும் குடும்பத்தார் என்ற உறவை உண்டாக்கிற்று; சம்பிரதாயமான சமய வழிபாடுகள் அளிக்கத் தவறிய உபதேசமும் ஐக்கியமும் இதில் கிடைத்தன. இம்மாதிரியான பக்தர்கள் தோழமை புதிதல்ல; ஆனால் அவை நவீனத் தன்மையுடன் இருப்பதுதான் புதுமை இருபாலாரும் சேர்ந்த சிறு கோஷ்டிகள் ஏதேனும் ஒரு வீட்டில் கூடி வெகு நேரம் தங்கள் சந்தேகங்களைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். தங்கள் சங்கடங்களை ஒளிவு மறைவின்றி ஒப்புக் கொள்வார்கள். பரஸ்பரத் தோழமையை நம்புவார்

கள்; உதவியை எதிர்பார்ப்பார்கள். இந்த அந்தரங்க மண்டலத்தில் சிலரே அனுமதிக்கப் படுவர். பாதிரிமார்கள் முதியவர்கள் இங்கு இல்லை; இருந்தாலும் அவர்கள் அவ்வளவு முக்கியமல்ல.

இம் மாதிரி கோஷ்டிக் கூட்டத்தை 'மௌன வழி' என்பார்கள்; பாதிரிமார்கள் இதை சாதாரணமாக ஏற்பதில்லை. ஆனல் இன்று இம்மாதிரி இயக்கங்களில் மக்கள் தலைமை தோன்றப் பாதிரிமார்கள் ஊக்க மூட்டுகின்றனர். கல்லூரி மாணவர்களிடையே இத் தோழமைச் சங்கங்கள் வளர்க்கப் படுகின்றன; அங்கு சமயக் கண்ணறையாக விளங்குகின்றன—கம்யூனிஸ்டு கண்ணறைகளுக்கும் தந்திரங்களுக்கும் எதிர்ப்பாகவே சில சமயம் இயங்குகின்றன. கிறிஸ்தவக் கண்ணறை வளர்ப்பைப் பற்றிய புத்தகங்கள் கூட இருக்கின்றன. ஆதாரவாத சர்வ கல்லூரித் தோழமைக் குழு இவ்விதம்தான் வேலை செய்கிறது. 1929-இல் பாப்டிஸ்டு மாணவர்கள் ஏசுநாதரின் சிறு பான்மையோர் இயக்கத்தை ஆரம்பித்தனர். ஏசுவுக்கான இயக்கம் தோன்றுமளவுக்குக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதாரவாத ஸ்தாபனங்கள் பலமாக ஸ்தாபமிட்டு வந்த போதிலும்; இவற்றை எல்லாம் ஆதாரவாதத் தன்மை கொண்டவை என்று கருதக் கூடாது. இளைஞர்களிடையே ஒப்படைத்தல், அகப்புற ஒருமை, தியாகம், விசுவாசம், தோழமை என்று பேசுவதால் விளையும் பரபரப்புக்கும் லக்ஷிய வாத நிலைக்கும் இல்லினுஸ் வீடன் கல்லூரி மாணவர்கள் கும்பல் கும்பலாக ஒப்புதல் செய்ய முன் வந்தது ஒரு உதாரணம். இந்தக் குழுக்கள் கூட்டத்தில் கொஞ்ச நேரம் பிரார்த்தனையிலும், கிரந்தங்களைப் படிப்பதிலும், செல வழிவது உண்மைதான்; ஆனல் இவற்றின் முக்கிய அம்சம் அந்தரங்க பக்தியுடன் தோழமையின் பாசமும் சேர்வதாகும். கிறிஸ்தவர்கள் இவற்றை எல்லாம் "முதல் நூற்றுண்டுத் தோழமை" என்று கருதுவார்கள். தோழமையின் பாகங்களை அதிகமாகப் பெருமைப் படுத்துவதால், விளையும் ஆபத்துக்களைப் பற்றிக் கல்வி நிபுணர்கள் கவலைப்பட்டு வந்திருக்கிறுர்கள். சமயக் குழுக்களும் தோழமை சங்கங்களும் ஒதுக்கமான பிரிவுகளாகிவிடும் ஆபத்து இருக்கத்தான் செய்கிறது; ஆனல் அந்தப் பயம் இப்பொழுது அவ்வளவாக இல்லை;

உண்மையில் சர்வ வியாபகமாய், ஜீவ தயை உள்ளதாய் அமைதியுள்ள கொள்கைக்கு இளைஞர்கள் தங்களைத் தியாகம் செய்து கொள்வதுதான் பரிதாபமாக இருக்கிறது. பிராடெஸ்டெண்டு மாணவர்களின் பக்தியைப் பயனுள்ள வழிகளில் திருப்பும் ஸ்தாபனங்கள்தான் தேசியக் கல்லூரிகள், கிறிஸ்தவ கவுன்சில் (19ˎ4), ஐக்கிய மாணவர்கள் கிறிஸ்தவ கவுன்சில் (1944), தேவாலய மாணவர் வேலை தேசியகமிஷன்(19ˎ8) இத்தோழமைச் சங்கங்களின் சமூகக் கவர்ச்சி சர்வவியாபகமாய்ப் பரவுகிறது; மதச் சார்பற்ற அநேக உருவெடுக்கிறது, சமய நிலைக்கும் சமயச் சார்பற்ற நிலைக்கும் உள்ள எல்லையில் நிற்கும் தோழமைக் குழுக்களில் ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸைக் குறிப்பிடவேண்டும்.

குழு இயக்கங்களுக்கு நெருங்கியவை சமய ஆஸ்ரமங்கள்; அவை எண்ணிக்கையிலும் புகழிலும் பெருகி வருகின்றன. இவைகளுக்குப் பாதிரிமார்கள் தலைமையும் நோக்கமும் உண்டு. கத்தோலிக்கத் துறவு வகையின் மூன்றாவது வகுப்பின் அம்சங்களுடன் பாதிரிமார் முகாம் கூட்டங்கள், இளைஞர் கிறிஸ்துவ சங்கம், பெண்கள் கிறிஸ்தவ சங்கம் ஆகியவற்றின் அம்சங்களும் கலவையாகின்றன. பெரும் பான்மையாக இவை கோடை விடுமுறை முகாம்களிலோ, அல்லது புகலிடங்களிலோ, ஒதுக்கமான வீடுகளிலோ முகாம்களிலோ அமைக்கப்படுகின்றன. சில முகாம்கள் சனி ஞாயிறுடன் முடிந்துவிடும்; சில ஒரு வாரத்துக்கு மேலாகவும் நீடிக்கும். கத்தோலிக்கர்களுக்குள் சாதாரண மக்கள் குறுகிய காலத்திற்குப் புகலிடம் தேடுவது வழக்கமான காரியம்தான்; ஆனால் இப்பொழுது அமெரிக்காவில் அதுஅதிகமாகி விட்டது புத்துயிருட்டும் இயக்கங்களில் தேய்வு ஏற்பட்ட பிறகு தாராளவாத கோடைப் பள்ளிகள் மட்டத்துக்கு இறங்கி விட்ட சில பாதிரிமார் முகாம்கள் ஆஸ்ரம ரீதியில் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. அநேக ஸ்தாபனங்கள் வெளி நாட்டிலிருந்து வந்தவை. மூன்றாவது வகுப்பு பிரான்ஸிஸ்கன்களின் தீவிரக் கிளையாக, அமெரிக்க பொருளாதார மந்தத்திற்குப் பிறகு, கத்தோலிக்க ஊழியர் இயக்கம் தோன்றிற்று. தோழமையையே கொள்கையாகப் பயிலும் குவேகர்கள் பென்ஸில்வேனியா ராஜ்யத்தில் பெண்டில் ஹில்லில் முதி

யோர் சமயக் கல்வி கேந்திரமொன்றை அமைத்திருக்கின்றனர். அநேக வேலை முகாம்களையும் ஆரம்பித்திருக்கின்றனர்; சமயச் சேவை முகாம்கள் முறை குவேகர்களுக்கு அப்பாலும் பரவிவிட்டது. அவர்கள் தலைவரில் ஒருவர் அலெக்சாண்டர் மில்லர் கூறுவதாவது: "மக்களுடன் சேர்ந்து உழைப்பது தான் அவர்களைப் புரிந்து கொள்வதற்கும் அவர்களுடன் ஒன்று பட்டிருப்பதற்கும் சிறந்த வழி என்ற ஆதி கொள்கையைத் தொழிற்சாலை மாணவர் முகாம்கள் வைத்துக் கொண்டிருக்கின்றன. சேவைக்குப் பணம் கிடையாது; தங்கள் செலவைத் தொண்டர்கள் செய்து கொள்ள வேண்டும்—இது தான் ஆதி கொள்கை; இந்த ஆதி கொள்கை அடிப்படையில் மாணவர்கள் மற்ற தொழிலாளிகளைப் போல் தொழிலில் அமர்த்தப் படுகிறார்கள்; ஆனால் இவர்கள் கூலியும் பெறுவார்கள் என்பதில்தான் வித்தியாசம்...மாணவர்கள் பொது வழிபாடு, பொதுப் படிப்பு, பொதுவான வீட்டு வேலைகள் என்ற சூழ்நிலையில் வாழ்கிறார்கள்; பின்னர் இங்கிருந்து வேலை தேடிச் சென்று தொழிற்சாலையிலோ மில்லிலோ வேலை செய்கிறார்கள். அடுத்த வருஷக் கல்லூரிப் படிப்புக்காக உழைத்தோ குமாஸ்தா வேலைபார்த்தோ எப்படியும் பணம் சம்பாதிக்க வேண்டியவர்கள்தான் இந்த மாணவர்கள்...... வாழ்வை ஒப்படைத்துள்ள கிறிஸ்தவக் குழுவில் அவர்களும் பங்கு கொள்கிறார்கள்......

இந்த மாதிரியான சூழ்நிலையில் தினசரி வழிபாட்டை நடத்தும் வழக்கம் சொல்லிலும் வழிபாட்டுச் சடங்கிலும் புதிய பொருளைக் காணவழி செய்வதுடன் (புதிய தேவைகளுக்கு இவை பயன்படும்) மதச் சார்பற்ற தொழில் துறை வாழ்வைப் புதிய கோணத்திலிருந்து பார்க்கவும் உதவி செய்கிறது; அவற்றின் தெய்வீக, ஜீவ, சமூகப் பொருளை உணர உதவியாகிறது......இம்முகாம் ஒவ்வொன்றின் முக்கிய அம்சமான ஒழுங்கான படிப்புக்கு—சமயம், தொழில், சமூகத்தைப் பற்றிய படிப்புக்கு—நடைமுறை வாழ்க்கையுடன் பழக்க மேற்படுவதால், சக்தி உண்டாகிறது......கடவுளுடனும் இந்தச் சூழ்நிலையுடனும் மூன்றுவித உறவு கொள்வதிலிருந்து இக்குழு சமுதாயத்தின் ஒற்றுமையைக் காண்கிறது. முகாத்தின் தினசரி வாழ்வை நடத்தும் பணியில் ஒருவரின் உதவியை

மற்ெறுருவர் நாடவேண்டியிருப்பதன் மூலமும் இந்த ஒற்று மையை ஊர்ஜிதம் செய்து கொள்கிறது.

பென்சில்வேனியா ராஜ்யத்தைச் சேர்ந்த கிர்க்ரிட்ஜில் இளம் பாதிரிகளுக்கும் சாதாரண குடும்பத்தார்களுக்கும் 1944-ல் அமெரிக்க பிரெஸ்பிரிடீயர்கள் பல ஆஸ்ரமங்களே அமைத்தனர்; ஸ்காட்லாந்து நாட்டு அயோனு சமுதாயத்தி லிருந்து இத் தூண்டுதலை இவர்கள் பெற்றனர். இவை சம யப் பிரிவினர்கள் எல்லோரையும் வசீகரிக்கும் ஆசிரமங்களாக ஓங்கிவிட்டன. சமீபத்தில் வளர்ச்சி அடைந்துள்ள துறவியல் ஸ்தாபனங்களான கெளலி பாதிரிகள், தி ஆர்டர் அப் தி ஹோலி கிராஸ், செயின்டு மார்க்கரெட் சகோதரிகள், முத லியவைகளுடன் சம்பந்தப்பட்ட பாதிரிமார் ஆஸ்ரமங் களும் இருக்கின்றன. தென் கலிபோர்னியாவில் ஆல்டஸ் ஹக்ஸ்லீ, ஜிரால்ட் ஹேர்ட் முதலிய இலக்கியப் பிரமுகர்கள் தலைமையில் டிராபிகோ ஆன்மீக கேந்திரம் அமைக்கப்பட்டி ருக்கிறது; கீழ்நாட்டு அறிவு மெய்ப் பொருள் வழியின் ஒரு வித சாயலை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

பலவகைப்பட்ட இவ்வாஸ்ரமங்கள் பருவகாலங்களுக்கு மட்டுமோ, குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகோ அமைக்கப்படுகின்றன; புத்தமதத்தார் தங்கள் மடாலயங் களுக்குச் சென்று தங்கும் வசதி போன்றது இவை; இவை வெவ்வேறு நோக்குக் கொண்டவை; எனவே இவற்றைப் பற்றிப் பொதுப்படையாக முடிவு கட்ட இயலாது. குறுகிய நோக்குக் கொண்டு பார்த்தால், சமயப் பூச்சுள்ள வன போஜன முகாம் என்று சொல்லிவிடலாம்; ஜேம்ஸ் குறிப் பிட்ட 'அறநெறி ஓய்வு நாளைப்' போன்ற தப்புவிக்கும் தந்திர மாகவும் பாவிக்கலாம். இவற்றிற் கெல்லாம் மாறாக, தீவிர வினைகளாற்றவும் சமூக சேவை செய்யவும் தூண்டும், சக்தி கேந்திரங்களாகவும் பாவிக்கலாம். புதிய சிறு சமய சமுதா யங்கள் அங்கு உருப்பெற்றுக் கொண்டு மிருக்கலாம்; எப்படி யிருந்த போதிலும், இயற்கையின் சூழ்நிலையில், மெய்ப் பொருள் அறிவுநிலை என்று ஜேம்ஸ் எதைக் குறிப்பிட் டாரோ அது, ஓய்வு, பொழுது போக்கு, எல்லை உணர்ச்சி, உணர்ச்சி ரீதியான சமர்ப்பணம் ஆகிய அம்சங்களில் வேரோ

டிய அமெரிக்க முறை என்பதை இவை எல்லாம் ருசுச் செய்வது போல் தோன்றுகிறது.

கிர்க்ரிட்ஜ் பிராடெஸ்டெண்டுகளுக்கான ஆசிரமங்கள் வெளியிட்டுள்ள பின்வரும் கருத்துகள் அநேக ஆசிரமங்களின் நோக்கத்தை விளக்குவதாகக் கொள்ளலாம். ஆசிரம ஒழிவைக் கூறும் கருத்துகளாக அவை அமைந்திருக்கின்றன; ஆனால் இந்த விதமான சமய அனுபவத்தால் கிடைக்கும் பல விதத் திருப்திகளையோ, இவற்றில் புகுந்துள்ள பல நோக்கங்களையோ இவை தெரிவிக்கவில்லை.

"கடவுளுடன் கலந்த வாழ்வில் தங்கள் போக்கையும் தொழிலையும் திரும்ப நிர்ணயித்துக் கொள்ள உதவுவதே கிர்க்ரிட்ஜின் முதல் வேலை. தொந்தரவுப்படும் புரோகிதர், திகைப்படைந்த உபகுரு, மனநோய் நிபுணரை யோசனை கேட்கும் ஆசிரியர், புண்களுள்ள வர்த்தகன், இது எதற்கென்று புரியாது தவிக்கும் ஊக்கம் மிகுந்த சமூகத் தொண்டன், பிரார்த்தனையில் பிடிமானமில்லாத மனைவி, நம்பிக்கையில் ஆட்டங்கண்ட குருமார் பயிற்சிப் பள்ளி மாணவன், நோக்கமும் பொருளும் என்ன என்று தட்டுத்தடுமாறும் கல்லூரி மாணவன்,—இவர்கள் வினைகளில் கடவுளின் எண்ணம் நிறைவேறாததால் தான் இவ்வளவு சங்கடங்களும் தோன்றுவதாகக் கிரிக்ரிட்ஜுக்கு நிச்சயமாகப்படுகிறது. பழங்கால தீர்க்க தரிசிகளும், தற்கால தீர்க்கதரிசிகளும் செய்வதுபோல, அறிவுள்ள மக்கள் தினசரி வாழ்க்கைச் சுழலிலிருந்து—அலறும் டெலிபோன் மணி, கர்ஜனை புரியும் பத்திரிகைத் தலைப்புகள், தலையைச் சுற்றவைக்கும் டெலிவிஷன் ஆகியவற்றிலிருந்து—தீர்மானமாக வாபஸ் பெற்றாலொழியத் தங்கள் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாது; ஏன் பிறந்தோம் என்பதையும் சரியாக உணர்ந்து கொள்ள முடியாது. விவேகத்தைச் சம்பாதிப்பதும், தங்களுக் கிடப்பட்டுள்ள கட்டளையைத் தங்கள் தங்கள் வாழ்வில் புரிந்து கொள்வதும் தான் கிறிஸ்தவர்களின் முக்கிய முதல் வேலை......

பல கிறிஸ்தவ சம்பிரதாயங்களிலிருந்து கிரிக்ரிட்ஜ் குறிப்பான ஆசிரம முறையை உருவாக்கியிருக்கிறது. அவற்றினுடைய நித்திய ஒழுக்க இயல் இதில் அடங்கியிருக்கிறது. ஒவ்வொரு குழுவும் (இருபது பேருக்கு மேற்படாதது) காலை

ஆறுமணிக்கு எழுந்திருக்கிறது; ஒரு அங்கத்தினர் அடுப் பண்டை காலை வாழ்த்தை ஓதிக் கொண்டிருக்கையில் மற்ற அங்கத்தினர்கள்:மௌனமாகக் காலை உணவருந்துகிறார்கள்; பிறகு மூன்று நான்கு மணிநேரம் கூட்டு உடலுழைப்பு; சுண் ணாம்புக் கலவை, தோட்டவேலை, மரம் வெட்டுதல், தையல், கொத்தன் வேலை; நண்பகல் உணவுக்கு முன்பு ஒன்றரைமணி நேரம் விவாதம். பிறகு மாலை ஐந்து மணி வரை ஓய்வு. படிப்புடன் இராச்சாப்பாடு. தொடர்ந்து மேட்டில் அந்தி கீதம் அல்லது ஒன்பது மணிக்குக் கடைசிப் பிரார்த்தனை வரை விவாதம். பிறகு மறு நாள் காலை வரை இரவின் மோனம். இந்த முறையில் சில்லறை மாறுதல் இருந்த போதிலும், கோஷ்டி மோனம், உடலுழைப்பு, பரஸ்பரம் பேச்சு, விவாதம் ஆகிய அம்சங்களில் மாறுதல் இராது. தின சரி விவாதத்திற்குச் சாதாரணமாக பைபிள் ஆதாரமாகக் கொள்ளப்படும். அதிகாலையில் எளிய முறையில் கூட்டாக சமஸ்கார வழிபாடு செய்வதும் ஆஸ்ரம முறையில் ஒரு பகுதி யாக இருக்கும்.

இந்த மாதிரி ஆசிரமக் குழுக்களுக்கு எதிரிடையான வினை முறைக் குழுக்கள் இருக்கின்றன; பேர் தான் எதிரி டையே ஒழிய முறையில் அதிக வித்தியாசமில்லை. வினை முறைக் குழுக்களின் கொள்கைகள் தாக்கும் தன்மையுடன் அமைந்தவை; சமய ஸ்தாபனங்களை சமய இயக்கமாக மாற்ற வேண்டும் என்பதே அவற்றின் நோக்கம். தேசிய மிஷன் போர்டுகளின் பிரெஸ்பிடீரிய சமயப் பிரசார இலாகா, 1946-ல் புத்துயிர் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது; தேவால யங்களில் பற்றுள்ள இளைஞர்களைத் திரட்டுவதே அதன் நோக்கம். புத்துயிர் குழுக்கள் அளிக்கும் உறுதி மொழி யாவது :—

"பிரபோ ! நானுக என் மனத்தை உமக்கு உண்மையில் அளிக்கிறேன்."

தேவாலய விஸ்தரிப்பு வேலை என்ற முறையில் இது வெற்றிகரமான முயற்சி; புத்துயிர் ஊட்டும் நோக்க மும் கை கூடுகிறது; தேவாலய வேலைகளில் புதிய சமயக் கிளர்ச்சியை அல்லது இயக்கத்தைத் தோற்றுவிக்கிறது. இதர

சமய ஸ்தாபனங்களும் இதே மாதிரி முயற்சிகளில் ஈடுபட்டி ருக்கின்றன.

தாக்கும் சக்தி கொண்டதாக சமயத்தை அமைக்கக் கத் தோலிக்கர்களும், பிராடெஸ்டெண்டுகளும், யூதர்களும், தனித்தும் கூட்டாகவும், விரும்புகிறார்கள். அவர்களுக்கெல் லாம் இரண்டு ஆதார சமய அனுபவங்கள் இருப்பதாகவும், தற்காலத்திய சமூகக் குழப்பத்திற் கிடையில், இவற்றைத் திட்டமான சக்தியாகச் செய்து விட முடியும் என்றும் அவர் கள் நினைக்கிறார்கள். இந்த இரண்டு அனுபவங்களும் சமய பக்தி ஒன்றினுடைய அம்சங்களாக இருக்கலாம். அருளனுப வம் என்று இப்பொழுது கூறப்படுவது பழைய மரபுகளின் அடிப்படையில் ஜேம்ஸ் ஏற்றுக் கொண்ட "ஞானோதயம்" அல்ல; இது எதிர்பாராத, அசைக்க முடியாத தீர்ப்பு. ஜீவன் கடவுளைச் சந்திக்கும் பொழுது (ஏசுவுடன் தோழமை என்று கூறப்படும் விசேஷ கிறிஸ்தவ அனுபவ நிலைக்கு இது வேறு பட்ட நிலை) திடீரென்று அவன் தடுக்கப்படுகிறான். வேறு ஏதோ புரியாத அப்பாற்பட்ட தொன்று அவனைத் தடுத்தாட் கொண்டு ஜீவனுடைய எல்லைகளைக் கட்டுகிறது; அவனு டைய நோக்கங்களையே பாழடித்து விடுகிறது; அவனுடைய நடத்தையைக் கண்டிக்கிறது. இம்மாதிரி கடவுளைக் கண்ட வன் தன் ஜீவனின் கப்பத்தான் தானல்ல என்பதை உணர் கிறான். மற்ற பிராணிகளைப் போல் தானும் ஒருவன்; லேசாக அறிந்த லக்ஷியத்தை நோக்கிக் குருட்டுத்தனமாகத் தட்டித் தடவிச் செல்லும் பிராணி என்பதை உணர்கிறான். கடவுளின் முன்னிலையில் நிற்பவன் நிலையையும், மானிட போதனையின் பயனின்மையையும் அற்புதமாகக் காட்டுவது ஜாபின் கதை என்று கூறுவார்கள். கார்ல் பார்த்தைப் போல் கடவுளின் சிறு குரலை இவ்விதத்தில் நம்பாத பல போதகர்கள் கடவுளின் பெயரால் கர்ஜிக்கத் தயாராக இருக்கின்றனர். ஜீவனும் கடவுளுடன் சந்திக்கும் நிலை பற் றிய பல கூடுதல் குலைவுகளை ஒதுக்கி விட்டாலும், இந்த அனுபவம் சாதாரண மக்களிடமும் காணப்படுகிறது. கதை களில் வரும் தெய்வ சந்திப்புக்கு இவற்றின் மூலம் பொருள் விளங்குகிறது. மனிதவர்க்கத்தின் தன்னம்பிக்கையும் தனக் குத்தானே உதவி என்ற நிலையும் சிதற வடிக்கப்பட்டிருக்கும்

இந்த நெருக்கடியான வேளையில் இதன் முக்யத்துவம் விளங்கு கிறது. ஜேம்ஸ் வகைப்படுத்தியுள்ளபடி இந்த அருளனுபவங் களை வர்ணிப்பது கடினம். இவை வெறும் உணர்ச்சியல்ல; வெறும் ஞானேதயம் அல்ல; வெறும் தர்க்க ரீதியான தீர்ப்பு மல்ல. வாழ் வென்னும் வேதனையுமல்ல. கடவுளுடன் உடனே ஒன்றுவதுமல்ல; கடவுளின் சித்தத்தை அறிவது மல்ல; ஜான்ஹேய்ன்ஸ் ஹோம்ஸ் கூறியது போல் அறிவென் னும் கருவி மட்டும் போதா தென்பதை இது ருசுப்படுத்து கிறது. சமய சித்தாந்திகள் கூறுவது போல, கடவுள் பிரசன் னம்தான் ஆகிறுர்; புதிய தகவல் எதுவும் அதனுல் கிடைத்து விடுவதில்லை.

"அப்படி என்ருல் கடவுளுடன் நெருங்கிய உறவுகொள்ள முடியுமா? முடியும். ஆனுல் திட்டவட்டமான விடை கிடைக் காது. பைபிளைப் புரட்டுக்கிறேம்; ஆனுல் அதன் பொருளைக் கண்டுபிடிக்க வேண்டும். ஏசுநாதரை நாடுகிறேம்; அவர் செய்கை உருவகக் கதை போல் அமைகிறது; அதைப் புரிந்து கொள்ளவேண்டும். அல்லது குறிப்பிட்ட நிலமைக் கென்றில்லாத பொதுக் கொள்கையைக் கூறுகிறுர். எனவே யோசிக்க வேண்டும். பிரச்னையுடன் போராடி சிந்தனை செய்து கோழி போல் அடை காக்கவேண்டும். படிக்க வேண் டும், ஆராய வேண்டும், சிந்திக்க வேண்டும், வளர வேண்டும். தெய்வ தரிசிகளுடனும், தீர்க்க தரிசிகளுடனும், கவிகளுட னும் உறவாடும் அளவுக்குத்தான் பேருண்மையின் மர்மத் தைக் கண்டுபிடிக்க முடியும்; அப்பொழுதுதான் கடவுள் மாளிகையின் அந்தரங்கப் பகுதியில் நுழைய முடியும். போராடி, தேடி, அடைகாக்கும் ஜீவனுக்குத்தான் விடை கிடைக்கும்; அவன் ஒளியைக் காண்பான்; உண்மை அவனி டம் திரும்பத் தழைக்கிறது; மற்ற மக்கள் மீது ஆட்சி செலுத்துகிறது. கடவுளை லேசாக சம்பாதித்துவிட முடி யாது. அலாவுதீன் அற்புத விளக்கு அவரிடம் செல்லுபடி ஆகாது; இயந்திரம் போன்ற இயக்கத்தாலோ யுக்தியாலோ அவரை ஆஜராகும்படி கட்டளையிட முடியாது. அவர் கவிஞ னுக்கு வரும் ஆவேசம் போன்றவர்; இசை வல்லான் நெஞ் சில் எழும் இசை போன்றவர்; தாயின் கண்ணில் நிலவும்

அன்பு போன்றவர்; கால்வரிச் சிலுவையில் அறையப்பட்ட பெருமானின் வலிமை போன்றவர்.''

இவற்றைப் பார்த்தால் சமய வகை ஏமாற்றுகவோ, குழப்பமாகவோ தோன்றலாம்; ஆனால் உண்மையில் சகஜ மான அனுபவத்தை எடுத்துக் கூற முயலும் யோக்கியமான முயற்சி என்பதைப்பற்றி சந்தேகமில்லை. இம் மாதிரியான அருளனுபவம் ஆவேசத்திற்கு முற்றிலும் வேறு பட்டது. இது எண்ணங்களைக் குலைத்து நிலை குலைய வைக்கும் அதிர்ச்சி அனுபவம்.

இக்காலத்தில் இரண்டாவதாகப் பொது அனுபவமாக உள்ளது ஒப்படைத்தல். மக்கள் பல விதமாகத் தங்களை ஒப் படைத்துக் கொள்கிறார்கள்; ஆனால் கடவுளிடம் ஒப்படைத் துக் கொள்வதென்பது கிடையாது. அது மனிதனிடம் வரு கிறது. அதை மீறு விட்டால் ஏற்றுக் கொள்கிறான்; ஆனால் மனமறிந்து செய்த காரியம்போல் தோன்றாது. வலிய ஏற்ற அடிமைத் தளை என்பதையும் உணர்வான். கடவுளுடன் ஏதோ பேரம் பேசி வெளிப்படையான ஷரத்துகள் அடங் கிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டதை போல, ஐம் பது ஆண்டுகளுக்கு முன்பு ''ஞானோதயத்தை'' விவரித்தது தவறென்று இன்று கூர்மையாகக் கவனிப்பவர்கள் கண்டு கொண்டு விட்டார்கள்—நம்முடைய சமூக நடவடிக்கை களுக்கெல்லாம் ஆதியாக ஏதோ சமூக ஒப்பந்தம் இருந்த தென்று கூறப்பட்டு வந்தது தவறென்று இப்பொழுது தெரிந்துவிட்டது போல. கடவுளைச் சந்திப்பதும், ஒப்பந்தம் செய்துகொள்வதும் எல்லையற்ற பரம் பொருளுடன் ஏற்படும் உறவாகும்; அனுபவம் உண்மையாக இருந்த போதிலும் அதை விளக்குவது கடினம்; எனவே ஜேம்ஸின் போக்கில் சென்று தற்கால மனிதர்களின் சமய உணர்வை விவரணம் செய்ய முயல்வது பயனற்ற காரியம். எனவே சோதனை முறையை ஏற்கும் சமயப் பார்வையாளர் மனிதனின் சமய வாழ்வை விளக்க முயலத்தான் முடியும். ஆனால் சமயம், வாழ்வு என்ற சொற்கள் சம்மந்தமாக சோதனை முறையாள ருக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களைக் கவனித்தால், சமய அனு பவ விஞ்ஞான சாத்திரம் என்று வகுக்க இயலாதென்றே படு கிறது.

ஆனால் இன்றைய சமயத் தலைவர்களின் பிரச்னை அது வல்ல; சமய வாழ்வைத் தூண்டுவதே அவர்கள் நோக்கம். அவர்களுடைய சமூகச் செயல் முறைத் திட்டங்கள் இரவல் சமயமுமல்ல, அசல் கட்சி அரசியலும் அல்ல; (சில சமயம் அப்படியும் இருக்கலாம்) அவை சமய அனுபவத்திற்கு நடைமுறை இயக்கத்தைக் கொடுக்கும் திட்டம்; பல சக்தி களுக்கிடையே சமயத்தையும் ஒரு சக்தியாக இயக்கிவிடும் திட்டம். இந்த சக்தியை பிரும்ம ஞான முறை குறிப்பிடுவது போல் மர்மமான சக்தியாக மதிப்பிடுவதும், இல்லாவிட்டால் மற்ற சக்திகளைப்போல் பயனைக் கொண்டு மதிப்பிடுவதும் சில்லரை விஷயங்கள். கிறிஸ்தவச் செயல் கவுன்சில்கள், கத்தோலிக்க இளைஞர் இயக்கம், ஜயோனிஸ்டு சங்கங்கள். புனரமைப்பு இயக்கங்கள், சமரசத் தோழமைக் குழுக்கள் முதலிய சமயஸ்தாபனங்கள் எதுவானாலும், வெளிப்படை யாகப் புலப்படக்கூடிய, தனித்த, சமூக நெறியையே நோக்க மாகக் கொண்டுள்ளன. எனவே சமய சக்தியை இவ்வியக்கங் கள் சமய சார்பற்ற திட்டங்களுக்குப் பயன் படுத்துகின்றன என்று குற்றஞ்சாட்டும் ஆதாரவாதிகளும் மற்றவர்களும் இவ் வகைச் சமய அனுபவத்தின் முக்ய அம்சத்தைக் காணத்தவறி விடுகிறார்கள். இம்மாதிரியான தற்காலத்திய அருளனுபவ மும், ஒப்படைத்தலும் சமய அகநிலை அனுபவங்கள்; அவையே வினை ஆற்றவும் தூண்டக் கூடியவை. சமய அறிவு என்றெல்லாம் மன இயல் சாத்திரம் பேசுவது இவ்வியக்கங் களையோ இவற்றின் செயல்களையோ புரிய வைத்துவிடாது. வேறுவிதமாகக் கூறினால், அந்நியோன்யம் என்பதைத் தோழ மைக் குழுவின் செயல்களிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது; ஏனென்றால் அதை வேறு விதமாக விளக்க முடியாது; அது உணர்ச்சி அல்ல; மெய்ப்பொருள் அறிவு நிலையல்ல; சித் தாந்தமுமல்ல. தாக்கும் தன்மையைக் கலாசாரத்தின் ஒரு வகையாக மேற்கொண்டுள்ள இம்மாதிரி சமயங்களை அவற் றின் பயனைக் கொண்டுதான், ஜேம்ஸ் கூறியதுபோல், முடி வாக மதிப்பிட முடியும். ஞானிகளின் தன்மையை ஜேம்ஸ் விளக்கியதுபோல, பக்தி, தூய்மை, தயை, துறவு, பாப ஒப்பு தல், பிரார்த்தனை என்று இதையும் விளக்கிப் பார்க்கலாம்; ஆனால் அந்தச் சொல்லை விட இவை தெளிவான பொருளுள்

வவை என்று கருத முடியாது; அமெரிக்க கலாசாரத்தில் தோன்றிய மாறுதல்களுக்கேற்ப இச் சொற்களின் பொருள் களும் எப்படி மாறுதல் அடைந்திருக்கின்றன வென்று இப் புத்தகத்தில் இதற்கு முன்பு விரிவாக காட்டப் பட்டிருக் கிறது.

மெய்ப் பொருள் அறிவு நிலையைப்பற்றிய வரையில், என்ன நேர்ந்திருக்கிற தென்று கூற முடியாது. ஏனென்றல் அந்தச் சொல்லை அவ்வளவு தாறுமாருன முறையில் கை யாண்டு விட்டார்கள்; ஜேம்சும் சரியாகக் கையாளவில்லை; இப்பொழுது கையாள்பவர்கள் அதைவிட மோசம். மெய்ப் பொருள் அறிவு நிலையைப்பற்றி ஹாகிங் லைமன் மாகின்டாஷ் போன்ற தத்துவ சித்தாந்திகள் ஆராய்ந்திருக்கின்றனர். ஆனல் அமெரிக்காவில் நடைமுறை ரீதியான அறிவு மெய்ப் பொருள் நிலை, சமய நெறிக்கும் சமய வினைக்கும் உள்படுத் தப்பட்டு விட்டதாகத் தோன்றுகிறது. நேரறிவு, கடவுளு டன் ஒன்றுதல் ஆகியவைபற்றி இப்பொழுது அக்கறை குறைந்து விட்டதென்று இதற்குப் பொருள்.

இதை ஆதரிக்க முயன்ற பேராசிரியர் லைமன் கூட இதற்குப் பர்க்சன் முறையான நடைமுறைச் சாயலைக் கொடுத்து தியான வகையை விட்டு அறவேட்கையாக மாற்றி விட்டார். எங்கோ அது உண்மையான அனுபவமாக இருக்கலாம்; ஆனல் சமீபகாலத்தில் வெளிவந்துள்ள இலக்கி யத்தில் அதைப்பற்றிச் சொல்லும் திறனைக் காணேம். இவ் வகையில் மூன்று விதத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும் :— ரூபஸ் எம். ஜோன்ஸின் சமய உரைகளும் மற்ற எழுத்தும்; குவேகர்களின் சாந்த சமயத்துடன் பழங்கால மெய்ப் பொருள் அறிவு நிலை இழையைக் கலந்திருக்கிருர்; டிராப் பிஸ்டு துறவி தாமஸ்மர்டனின் சிந்தனைகள் : அவருடைய "உண்மை நிலைக் கேறும் வழி" என்ற புத்தகம் சரித்திர வர லாற்றின் இடைக்கால ஏகாந்திகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றுவதற்கான ஆரம்ப பாடம்; "மனிதன் தனித்திருக்க வில்லை" என்ற பெயர் கொண்ட அப்ரஹாம் ஜே. ஹெஸ் கலின் புத்தகம் வியக்தியின் தன்மை, சர்வ வியாபகத் தன்மை, மெய்ப்பொருள் அறிவுத் துறையில் காணும் தெய்வ ஏக்கம் ஆகியவை அடங்கிய சாஸிடிஸ்டு யூதவாக்காக அமைந்

திருக்கிறது. டாக்டர் ஹெஸ்கெல் கூறும் ஒரு சம்பவம் சமீப கால மெய்ப் பொருள் அறிவு நிலேயின் போக்கைக் காட்டுகிறது. அறிவு மிகுந்த ஆனல் புதிதாக ஏழையான யூதர் ஒருவரை சபையார் பொது வழிபாட்டைத் தொடங் கும்படி கோரினர். ஆனல் அவருக்குப் பயமாக விருந்தது; தம்முடைய யூத குருவிடம் சென்று தம் சங்கடத்தைத் தெரி வித்த பொழுது "பயத்தை விடாதே. பிரார்த்தனை செய்" என்று பதில் கூறினராம்.

பக்தியுள்ளவர்கள், ஞானிகள் ஆகியோரின் இந்த சம்பி ரதாயமான தன்மை—பயத்தைப் பற்றி பயப்படாதிருத்தல்—(சமயச் சார்பற்ற தன்நம்பிக்கை உள்ள ஸ்தாபனங்கள் இந்த நிலேயை அடைந்து விட்டன)—இருபதாவது நூற்றாண் டின் அமெரிக்க கலாசாரத்திற்கு சமயத்தின் கொடை ஆக லாம்; கடவுளுக்குப் பயந்து பிரார்த்தனை செய்வதற்கு வலி மையையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கலாம்.

## சமய அனுபவமும் சமய வாழ்வும்

வில்லியம் ஜேம்ஸ் காலத்திற்குப் பிறகு தோன்றிய சமய அனுபவ வகையைப் பற்றி இது வரை ஆராய்ந்ததில் அவை பலவகைப்பட்டவை என்பது அழுத்தமாகக் காட்டப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் சூழ்நிலேயில் "இயற்கையான மாறுபாடுகள்" தோன்றியதைப் போல இப்பொழுதும் எதிர் பாராத வழிகளிலும் இடங்களிலும் மாறுபாடுகள் காணப்படு கின்றன. வில்லியம் ஜேம்ஸ் காலத்திற்கு சமய அனுபவம் அவ்வளவு அந்தரங்கமானதாகவோ தனித் தன்மை கொண்ட தாகவோ இல்லா விட்டாலும், அப்பொழுதைவிட இப் பொழுது நேரிடையான அனுபவமாக இருக்கிற தென்று கூறதாம். இங்கே உலகின் பெரிய சமய வளர்ப்புப் பண்ணே இருக்கிறது; இங்கு தோன்றும் புதிய சமய இனங்களின் பிரிவு களேத் தொகுப்பதும் விவரணம் செய்வதும் கடினமான காரியம்.

இதற்கு மாருக, ஜனத் தொகையில் பாதியை ஆட் கொண்டுள்ள பெரும் சமயப் பிரிவுகள், ஜோசியங்களே எல் லாம் பொய்ப்பித்து, திடமாக நிலேத்து நிற்கின்றன; அறிவின் வலிமையையும் அறத்தின் வலிமையையும் சோதித்த புயல்

களுக்கும் தப்பி நிலைத்து விட்டன. இந்த நூற்றுண்டின் புரட்சிகளெல்லாம் நமது சமய ஸ்தாபனங்களிலும் சமய நம்பிக்கைகளிலும் அடையாளத்தைவிட்டுச் சென்றிருக்கின்றன; ஆனுல் மொத்தத்தில் இப் புரட்சிகரமான சீரமைப்புகள் புதிப்பிப்பதற்கான விளைவுகளை உண்டாக்கியிருக்கின்றனவே யன்றி தலை கீழாக கவிழ்த்து விட வில்லை. இச் சீரமைப்புகள் அக்னிப்பிரவேச தூய்மை பெற்றவையா என்பதை இப்புத்தகம் காட்டாது இப்புத்தகம் வரலாறுதான்; தீர்ப்பல்ல; அறிக்கைதான்; பிரசங்கமல்ல.

இருந்த போதிலும் சென்ற மூன்று அத்தியாயங்களைக் கவனத்துடன் வாசித்தவர்கள் சமயத்தின் மூன்று அம்சங்களான சித்தாந்தம், வழிபாடு, அனுபவம் ஐம்பது வருஷத்திற்கு முன்பு இருந்ததைப் போல் இப்பொழுது அவ்வளவு தனித்திருப்பதாகத் தோன்றவில்லை என்பதை உணர்ந்திருப்பார்கள். வில்லியம் ஜேம்ஸ், ரூபஸ்ஜோன்ஸ், தியோடோர் மங்கர் காலத்தில் தனித் தனியாகவும் ஒன்றை ஒன்று கண்டிப்பதாகவும் இருந்த மூன்று சமய வழிகளும் (மன இயல் பகுப்புத் தன்மை கொண்டது, மெய்ப் பொருள் அறிவு நிலைத்தன்மை கொண்டது, சித்தாந்தத் தன்மை கொண்டது)இன்று பொதுவாக சமரசமடைய முயல்கின்றன. சமயத்தை மொத்தமாகப் பார்ப்பதில் இப்பொழுது கஷ்டமில்லை; ஏனென்றல் கொள்கையும் கோட்பாடுகளும் அவ்வளவு தரமாக இணைக்கப்பட்டிருக்கின்றன. இனி சமய உணர்வை சமய நம்பிக்கையிலிருந்து பிரித்தெடுக்க தேவையில்லை; இரண்டையும் சமய ஸ்தாபனத்திலிருந்து பிரித்தெடுக்கத் தேவை இல்லை. சமயப் பற்றுடன் இருப்பது என்ன என்று இன்று தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பொதுச் சமய வாழ்வின் அமைப்பில், அறிவு, மார்க்கம், சொந்த சாயல் ஆகியவை ஒன்றுக் கொன்று விளக்கம் தருவதைப் புறநிலையிலும் அக நிலையிலும் காண முடிகிறது. அமெரிக்க சமய வாழ்வின் அம்சங்கள் பரஸ்பரம் ஒன்றை ஒன்று நெருங்க முயல்வதென்பது சமயத்தை அக நிலையில் ஆராய முற்பட்ட வில்லியம் ஜேம்ஸின் துணிந்த முயற்சிக்குப் பெரும் பாராட்டாகும்.

# குறிப்புக்கள்

**ரோமன் கத்தோலிக்கர்கள் :** கிறிஸ்தவ சமயத்தின் முக்கிய பெரும் பிரிவினர். போப்பாண்டவர் தலைமைப் பீடத்தையும் ரோம் நகரத்து ரோமன் கத்தோலிக்க தேவாலய சித்தாந்தத்தையும் சார்ந்தவர்கள்.

**பிராடெஸ்டென்டுஸ் :** ரோமன் கத்தோலிக்க சமய முறைகளை ஏற்காத சீர்திருத்தப் பிரிவினர்.

**பிரெஸ்பிடீரியர்கள் :** கால்வின் சமய சித்தாந்தத்தை ஏற்கும் தேவாலயங்களைச் சேர்ந்தவர்கள்; அத் தேவாலயங் கள் குருமார்களாலேயே நிர்வகிக்கப்படுபவை.

**பியூரிடன்கள் :** பிராடெஸ்டென்டு வகுப்பாரின் ஒரு பிரிவினர். பிரிட்டிஷ் அரசி எலிசபெத் காலத்தில் ஏற்பட்ட தேவாலயச் சீர்திருத்தம் போதாதென்று கருதி கடும் நெறி யையும் தூய்மையையும் வற்புறுத்துபவர்கள்.

**மெதாடிஸ்டு :** வெஸ்லி, விட்பீல்டு ஆகியவர்களின் ஆதர்சத்தில் எழுந்த கிறிஸ்தவ சமய சித்தாந்தத்தைச் சேர்ந்தவர்கள். பிராடெஸ்டென்டு வகை.

**எபிஸ்கொபேலியர்கள் :** குருமார்களால் நிர்வகிக்கப் படும் தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள்.

**யூதர்கள் :** ஜிஹோவாவைக் கடவுளாகக் கொண்டாடும் ஜூடேயிஸ சமயத்தைச் சார்ந்த ஹீப்ரு இனத்தவர்கள்.

**மோர் மோன்கள் :** தெய்வக் கட்டளை பெற்றதாக ஜோஸப் ஸ்மித் அமெரிக்காவில் 1830-இல் ஆரம்பித்த கிறிஸ் தவ தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள். பல தார மணத்தை ஆதரித்தவர்கள். (The Church of Jesus Christ of the Latter Day Saints.)

**கிறிஸ்தவ விஞ்ஞானம் :** நோய்கள் மனக் குற்றத்தால் ஏற்படுவதன்றி வேறல்ல. நோயாளியின் கிறிஸ்தவ பக்தி யைக் கொண்டே, வைத்தியமின்றி, நோயைக் குணப்படுத்தி விட முடியும் என்று அமெரிக்காவில் மிஸஸ் எட்டி பிரசாரம்

செய்த கொள்கை. அக் கொள்கையைக் கடைப் பிடிக்கும் கிறிஸ்தவ தேவாலயங்கள் அமெரிக்காவில் இருக்கின்றன.

யூனிவர்சலிஸ்டு : மோட்சம் மனிதவர்க்கம் முழுவதற்கும் உண்டு என்ற கொள்கை உடைய கிறிஸ்தவர்.

அமானு சங்கம் : 1714-இல் ஜெர்மனியில் தோன்றிய சமய சமுதாய சங்கம். சமயக் கொடுமைகளுக்கு அவர்கள் உள்ளாக்கப் பட்டதால், 1855-இல் அமெரிக்க அயோவா ராஜ்யத்தைச் சேர்ந்த அமானுவில் அவர்கள் குடியேறினர்.

கிருஸ்டா டெல்பியா சகோதரத்துவம் : 1850-ஆம் ஆண்டில், அமெரிக்காவில், ஜான் தாமஸ் ஸ்தாபித்த கிறிஸ்தவ சமயப் பிரிவு. மும்மூர்த்திகள் என்ற கிறிஸ்தவக் கொள்கையை அவர்கள் மறுக்கின்றனர்.

ஷேகர்கள் : ஏசுவின் மறு அவதாரத்தை எதிர்பார்க்கும் கொள்கை உடைய கிறிஸ்தவர்கள். வழிபாடு செய்யும் பொழுது அவர்கள் உடலில் நடுக்கம் காணும்.

பாஹய் : மிர்சாஹுசெயின் ஆலி தலைமையில் 1863-இல் அமைந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள். மனித வர்க்கத்தின் ஆன்மீக ஒருமைப் பாட்டையும் உலக சமாதானத்தையும் கோட்பாடுகளாகக் கொண்டது அச் சங்கம்.

ராஸிகுருஷியர்கள் : ராஸன் குருஸ் என்ற கிறிஸ்தவர் 1484-இல் ஸ்தாபித்த சித்த மார்க்க சங்கத்தவர். தெய்வீக அறிவையும், அற்புத சித்திகளையும் இவ்வழியால் பெறமுடியும் என்று கருதுபவர்கள்.

பிரும்ம ஞானசங்கம் : சர்வ மதங்களும் உண்மை என்றும், தெய்வீகத் தத்துவங்களைக் கொண்டு இயற்கையின் உண்மைகளைக் கண்டு கொள்ளலாம் என்ற கொள்கைகளை உடைய ஞான சங்கம்.

ஜயோனிசம் : யூதர்கள் அடங்கிய தேசத்தை பாலஸ்தீனத்தில் அமைத்துவிட வேண்டும் என்ற கொள்கையுடன் ஏற்பட்ட இயக்கம்.

ஆக்ஸ்போர்டு கோஷ்டி இயக்கம் : ஆங்கிலேய கிறிஸ்தவ தேவாலயங்களில் கத்தோலிக்க சம்பிரதாயங்களைத் திரும்ப புகுத்த வேண்டுமென்ற கொள்கை கொண்ட இயக்கம்.

புதிய சிந்தனை : கிறிஸ்தவ சமயம், கிறிஸ்தவ விஞ்ஞானம் ஆகிய முறைகளுக்குச் சம்பந்தப்படாமல் நோய்களை

மனத்தால், எண்ணங்களால், குணப்படுத்திவிடலாம் என்ற கொள்கை. எண்ணங்களே சக்தி, நோய்களுக்கும் தோல்வி களுக்கும் மனமே காரணம் என்பவை இதில் ஆதாரக் கொள்கைகள்.

லூதர் : ஜெர்மன் சீர்திருத்த கிறிஸ்தவ சமய சித்தாந்தி ரோமன் கத்தோலிக்க கொள்கைகளை மறுத்தவர்.

ஸெவென்த் டே அட்வென்டிஸ்டு : சனிக்கிழமை "ஸாபத் தின்" ஓய்வு நாளாகவும் வழிபாட்டுக்கான நாளாகவும் கருதுபவர்கள்.

மென்னொனைட் : மென்னோ சைமன்ஸ் (1492—1559) பிரீஸ்லாந்தில் ஸ்தாபித்த கிறிஸ்தவ வகையினர். குழந்தை களுக்குப் புனித நீராட்டு, ராணுவ ஊழியம், சீரியல் ஊழியம் ஆகியவை கூடாதென்பவர்கள்.

தோமிஸ்டுகள்: 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தோமஸ் அக்வினஸ் என்ற ஞானியார் கொள்கைகளைப் பின்பற்றுப வர்கள்.

ரக்ஷணீயப் படை : பொது மக்களிடையே கிறிஸ்தவ சம யத்தைத் தீவிரமாகப் பரப்பும் நோக்குடன் ரெவெரெண்டு ஜெனரல் பூத் ஏற்படுத்திய ராணுவச் சாயல்கொண்ட கிறிஸ் தவ சமய இயக்கம்.

குவேகர்கள் : ஜியார்ஜ் பாக்ஸ் ஸ்தாபித்த "நண்பர்கள் சங்கத்"தின் அங்கத்தினர்கள். அகிம்சை, எளிமை, சமய குருமார்கள் இல்லா மௌன வழிபாடு முதலியன இவர்கள் கோட்பாடுகள்.

டங்கர்கள் : ஜெர்மன்—அமெரிக்க பாப்டிஸ்டு பிரிவைச் சேர்ந்தவர்கள். வயது வந்தோருக்கு மட்டும் புனித நீராட் டுச் சடங்கை மும்முறை செய்பவர்கள்.

மொரேவியர்கள் : பிராடெஸ்டென்டு பிரிவைச் சேர்ந் தவர்கள். மொரேவியாவிலிருந்து சாக்சனியில் குடியேறிய வர்கள். பொஹீமிய நாட்டு சமய சீர்திருத்தவாதி ஜான் ஹஸ் என்பவர் 14-ஆம் நூற்றாண்டில் தோற்றுவித்த சகோ தர சங்கத்தைச் சார்ந்தவர்கள்.

கால்வினிசம் : ஜான் கால்வின் அவர்களின் சமய சித் தாந்தம். விடாப்பிடியாக முயல்பவர்களுக்கே அருளிறங்கி மோட்சம் அருளும் என்பது இதில் முக்கிய கொள்கை.

புயூரியரிசம் : திரும்பவும் கிறிஸ்து அவதார மெடுப்பார் என்ற கொள்கை.

ஸ்வீடன்பர்க் மார்க்கம் : சமய சித்தாந்தியும் விஞ்ஞானியுமான ஸ்வீடிஷ் நாட்டு எமானுவேல் ஸ்வீடன்பர்க் கூறிய சித்தாந்த முறை. இம் மார்க்கத்தைச் சேர்ந்ததுதான் Church of the New Jerusalem.

பாபியுலிஸ்டு இயக்கம் : அமெரிக்காவில் 1890-இல் தோன்றிய இயக்கம். ரயில்களைத் தேசிய மயமாக்க வேண்டும், தனிச் சொத்துரிமையைக் கட்டுப்படுத்த வேண்டும் முதலிய கொள்கைகள் உடைய இயக்கம்.

பூர்ஷ்வா : மத்தியதர வகுப்பினர்.

சிண்டிகலிஸ்டு : ஆலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தி சாதனங்களையும் வினியோகிக்கும் சாதனங்களையும் தற்பொழுதைய சொந்தக்காரர்களிடமிருந்து, தொழிலாளர் நலத்தைக் கருதி, தொழிலாளர் சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற கொள்கை உடையவர்கள்.

ஹெகல் : பிரபல ஜெர்மன் தத்துவதரிசி (பாவனுவாதி)

கான்டு : மற்றொரு பிரபல ஜெர்மன் தத்துவதரிசி (பாவனுவாதி)

மும்மூர்த்திகள் : கடவுள் என்னும் ஒன்றில் தந்தை, தனயன், தெய்வீக சக்தி ஆகிய மூன்று அம்சங்கள் இருப்பதாகக் கூறும் கிறிஸ்தவ சமய கொள்கை.

ஒயிட்ஹெட் : பிரிட்டிஷ் கணித நிபுணர். யதார்த்தவாத தத்துவதரிசி.

நீட்ஷே : வலிமையே வாழ்வு. அதி மானவ சிருஷ்டியே உயிரியக்கத்தின் நோக்கம் என்று கூறிய ஜெர்மன் தத்துவதரிசி.

பிராட் சர்ச் : பிரிட்டிஷ் தேவாலய வகை. விரிந்த மனப்பான்மை கொண்டது. வைதீக மதத்தில் விரிவை ஏற்பது.

ஹைசர்ச் : குருமார்களுக்கு உன்னத ஸ்தானத்தை அளிக்கும் தேவாலய வகை.

வாக்னர் : ஜெர்மன் இசை மேதை.

டி. எஸ். எலியெட் : ஆங்கிலக் கவிஞர், விமர்சகர்.

காதிக்: பிறைவடிவாக அமைத்துக் கட்டிடம் கட்டும் 12—15-ஆம் நூற்றுண்டு மேற்கு ஐரோப்பியக் கட்டிடக் கலை.

ஆரோஹணத் திருநாள்: சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாதர் உயிர்த்தெழுந்து நாற்பது தினங்களுக்குப் பின்னர் சொர்க்கமேறிய தினம்.

பாஷண்டிகள்: சகஜமாக ஏற்றுக் கொள்ளப்படும் அபிப்பிராயங்களுக்கு மாறுபடக் கூறுபவர்கள். குறிப்பாக சமய விஷயங்களில் அவற்றின் வழி நிற்பவர்கள்.

புருஷகாரி: வெற்றி பெற உதவும் முக்கிய மனித சாதனம்.

அற்புதவாதம்: அறிவுக்கும் மீறிய அற்புத நிகழ்ச்சிகள் உண்டு என்று கூறும் சமயவாதம்.

டிராபிஸ்டு துறவிகள்: ஸிஸ்டர்சியன் வகையைச் சேர்ந்த கிறிஸ்தவத் துறவிகள்.

பெனிடென்டிஸ்: ஈஸ்டர் பண்டிகைக்கு முன் வாரத்தில், தங்கள் உடலைப் பெருமளவுக்கு ஏசுநாதரை நினைத்துக் கொண்டு வருத்திக்கொள்ளும் கிறிஸ்தவப் பிரிவினர்.

ஹடரைட்டுகள்: ஜாகப் ஹடர் 1533-ல் ஸ்தாபித்த கிறிஸ்தவ சமய சங்கப் பிரிவைச் சேர்ந்தவர்கள். சமுதாய சமய சங்கமாக ஹடர் அதை ஸ்தாபித்தார். 1536-ல் அவர் கொளுத்தப்பட்டார். அதன் பின்னர் ஹங்கேரி, ரஷியா, அமெரிக்காவுக்கு அந்தச் சங்கத்தவர் குடியேறி விட்டனர்.

சாஸிடிஸ்டு: டால்மட் கிரந்த முறையான யூத மத வாழ்வில் இடம் பெறுத ஆதியூதப் பிரிவினருக்கும் அதில் இடமளிக்க வேண்டுமென்று கூறும் இயக்கம். யூத குருமார்கள் (Rabbis) சாஸ்திர கர்வத்தைப் பொறுக்காதவர்கள்.

ஆதாரவாதம்: பைபிளின் சொற்கள்கூட தவறுத பிரமாணசக்தி உடையவை என்ற கொள்கை உடைய தீவிர சமய சித்தாந்தம்.

திருமுகங்கள்: பைபிளின் ஒரு பகுதி. தந்தை, மகன், தெய்வ ஆவி ஆகிய மூன்றும் அமைந்ததே கடவுள் என்ற கிறிஸ்தவக் கொள்கை.

ஸ்டேஷன் அப் தி கிராஸ்: ஏசுநாதருடைய வாழ்வின் சோகமயமான சம்பவங்கள் பதினான்கு சித்திரங்கள். அல்லது

சிலை உருவத்தில் வைக்கப்பட்டிருக்கும் திறந்த வெளிக் கோயில்; அல்லது இவையுள்ள தேவாலயம்.

ஜெருசெலம் : பாலஸ்தீனத்தில் உள்ள முக்ய நகரம். யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் உன்னதமான க்ஷேத்திரம்.

ஜிஹோவாவின் சாட்சிகள் : 1872-ல் பென்சில்வேனியாவில் (அமெரிக்கா) சார்லஸ் டேஸ் ரஸ்ஸல் ஸ்தாபித்த சமய சங்கம். ஸ்தாபன ரீதியான சமயம் என்பது சாத்தானின் காரியம் என்பது அவர்கள் கொள்கைகளில் ஒன்று. பைபிள்தான் அவர்களுக்கு ஆதாரம். ஜிஹோவாவின் ஆட்சியையே அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். கொடி வணக்கம், ராணுவ ஊழியம் இவைகளுக்கு அவர்கள் ஒப்புவதில்லை.

புதிய பொருளாதார திட்டம் : முதல் மகா யுத்தத்தின் விளைவாக அமெரிக்காவில் 1929-ல் நேர்ந்த பங்கு மார்க்கெட்டு விபத்திற்குப் பின் தோன்றிய பிரச்னைகளை சமாளிப்பதற்காக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் மேற்கொண்ட புதிய பொருளாதார திட்டம்.

# தமிழாக்கம்

அத்யக்ஷ குரு, பிஷப் - Bishap
வியக்தி சர்வ வியாபாகம் - Concrete Universal
பிரகிருதிலீனம் - Cosmic Conciousness
சுவிசேஷகன் - Evangelist
ஜீவ அவஸ்தை வாதம் - Existentialism
பூஜ்யர், பாதிரி - Father
ஜீவதயாவாதம், தயாவாதம் - Humanism
பாவனுவாதம் - Idealism
வியக்தி - Individual
தாராளப் பான்மை வாதம் - Liberalism
நியமக்காரர் - Methodist
போதகர் - Minister
நவீனவாதம் - Modernism
மெய்ப் பொருள் அறிவு நிலை - Mysticism
புரோகிதர் - Paster
மதகுரு - Priest
ஞானி - Saint
சமூக வளர்ச்சி இயல் - Sociology
பரதத்வ சித்தாந்தம் - Transcendentalism
பரிணும வாதம் - Evolution
ஏக தெய்வவாதி - Monotheists
சமஸ்காரங்கள் - Sacraments
சற்பிரசாதச் சடங்கு - Eucharist
புதிய பொருளாதார திட்டம் - New Deal.

மகாமகோபாத்யாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
பெயர் சமயமும் வாழ்க்கையும்
தொடர் எண் 3337
தொகுப்பெண் XVI. F. 29.